JL
L., 5m 211, N10VF
N10.1
152396

# வைத்திய போதினி.

சித்திரப் படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

புத். I. } 1910-௵ மே௴ 1௨. { நெ. 1.

## நமது பத்திரிகை.

நேயர்காள்!

இங்கிலீஷ் வைத்தியத்தைப்பற்றிய பல விபரங்களடங்கிய பத்திரிகைகள் எத்தனையோ ஆங்கில பாஷையில் நடைபெற்று வருகின்றதாயினும், இதுபோன்ற பத்திரிகை ஒன்றேனும் நந் தமிழ் நாட்டார்க்கு உபயோகமாகும் வண்ணம், தமிழ் பாஷையில் இல்லாக்குறையை நிவர்த்தி செய்ய **வைத்திய போதினி** எனப்பேர் புனைந்த இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட முன்வந்தோம்.

இப்பத்திரிகையானது 1910-௵ பிப்ரவரி அல்லது மார்ச்சு மாதம் முதல் வெளிவருமென்று பிரசுரிக்கப்பட்டிருந்தபோதிலும், நாம் சில மாதங்களாக அடுத்தடுத்து வெளியூருக்குப் போகும்படி நேரிட்டபடியாலும், 1910-ம் வருஷத்திய இந்துதேசத்து புதிய அச்சுச் சட்டப்படி டிக்ளரேஷன் எழுதிவைக்கப்படாமல், ஏப்ரல்௴ 16 தேதி வரையில் தங்கியிருந்தபடியால், குறிப்பிட்ட காலத்தில் வெளிப்ப

டுத்தக்கூடவில்லை. ஆகையால் மேமீ 1வயிலிருந்து வெ
ப்படுத்தப்பட்டது. இனி சரிவர பிரதிமாதமும் நமது
திரிகை குறிப்பிட்ட காலங்களில் வெளிவருமென்பது எம
துணிபு.

இந்தப் பத்திரிகை நமது சொந்த லாபத்திற்காக அல்லா மல் பொதுஜன உபகாரார்த்தமாகவே நடத்தப்படுகிறது. இதை சர்வ சாதாரணமாக ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கு ம்படியாய் இதன் வருஷ சந்தா, தபாற்கூலி உள்பட, ரூபாய் ஒன்றாக வைக்கப்பட்டிருக்கிறது. குறைந்தது 2000 சந் தாதாரர்கள் இருந்தால்தான் எமது சொந்தப் பொருள் நஷ் டமின்றி இப்பத்திரிகையை நடத்தமுடியும். தங்களுக்கு வருஷத்திற்கு ஒரு ரூபாய் செலவழிப்பது பெரிதல்ல. ஆனால், அதனால் உண்டாகும் பொது நன்மையோ மிகவும் அதிகம். இந்தக் காரணத்தைமட்டுமாவது உத்தேசித்து தா ங்கள் இப்பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் ஆகவேண்டுமெ ன்று கோருகிறோம்.

இப்பத்திரிகை சமூகம் தேடிவரும் கனவான்கள் தயவு புரிந்து பெற்றுக்கொண்டு, அடுத்த இஷ்யூவை வி. பி. மூல மாய் பெற்றுக்கொள்ள முன் வரவேண்டுமென்பது நமது கோரிக்கை.

அப்படிக்கன்றியில் மறுக்கவே தயாராயிருக்கப்பட்ட கனவான்கள் தயவு புரிந்து உடனே அது விபரங்கண்டு தெ ரிவிக்க கோரப்படுகிறார்கள்.

பத்திராதிபர்.

162396



REGISTERED 28 NOV 1910 MADRAS.

# விஷய விவரணம்.

சர்வ வல்லமையுள்ள கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இம் மானிட சரீரமானது, எப்படி கட்டப்பட்டிருக்கிற தென்ப தையும், அதை எங்ஙனம் நடத்துவதென்பதையும், ஒவ்வொ ருவருக்கும் விகிதமாய் தெரிய வேண்டுவதவசியமானதால், மனிததேகத்திலுள்ள அஸ்தி, அஸ்திபந்தனம், மாமிசம், நாடி, நாளம், நிணநரம்பு, மூளை, முள்ளந்தண்டு, நரம்புமண்டலம், நாசி, நேத்திரம், செவி, நாக்கு, சருமம், கண்டம், தமரகம், புப்புசம், இருதயம், தொண்டை, அன்னவாகி, அன்னாசயம், சிறுகுடல், பெருங்குடல், யகுர்தகண்டம், பித்தாசயம், க்ளோ யம், பீலிகம், குண்டிக்காய், ஜலாசயம், இந்திரிய கமலம், கோசம், பீஜம், கருப்பாசயம், நாதாசயம், குய்யம், ஸ்தனம் முதலிய உறுப்புகள் எங்தெந்த ஸ்தானங்களில் எவ்வெவ்வித மாய் எவ்வளவு நிறைபறிமாணங்களோடு சிறுஷ்டிக்கப்பட்டி ருக்கிற தென்பதையும், தேக காங்கை, இரத்தம், இரத்தச் சுழல், பஞ்சேந்திரிய உணர்ச்சி, வியர்வை, சுவாசம், தொனி, மூக்குநீர், கண்ணீர், உமிழ்நீர், பித்தநீர், க்ளோயநீர், மலம், மூத் திரம், சுக்கிலம், ஸ்ரோணிதம், நாதம், பால், ஆகார ஜீரண முதலியவைகள் எங்தெந்த ஸ்தானங்களிலிருந்து எவ்வெவ்வித மாயுண்டாகின்றன வென்றும் இவ்வியாசத்தில் சங்கிரக மாகக்கூறத் தொடங்குவோம்.

## எலும்புகள்.

ஆங்கிலத்தில், [Bones—போன்ஸ்].

நமது சரீரத்தை ஒரு வீட்டுக்குச் சமானமாகச் சொல்ல லாம். வீட்டை எப்படித் தூண்களும், உத்திரங்களும் தாங்கி க்கொண்டிருக்கின்றனவோ, அப்படியே நமது சரீரமாகிய வீட்டை அநேக எலும்புகள் தாங்கிக் கொண்டிருக்கிறது. நமது கையை உடலுடன் சேர்ப்பவை இரண்டு எலும்புகள். தோள்பட்டைஎலும்பு (Colar Bone—காலர் போன்) என்னும் மற்றொரு எலும்பு. இவ்விதம் இணைக்கப்பட்ட கை மூன்று பிரிவுகளுள்ளது. அவை (1) தோள்பட்டை முதல் முழங்கை வரையிலுள்ள புஜம், இது ஒரே எலும்பு. (2) முழங்கை முதல் கணுக்கை வரையிலுள்ள முன்னங்கை. இதில் இரண்டு எலு ம்புகளிருக்கின்றன. (3) விரல்களுள்பட்ட உள்ளங்கை அல்

லது கணுவுக்கு முன்னிருக்கும் பாகம். உள்ளங் கையில் ஐந்து எலும்புகளும், ஒவ்வொரு விரலிலும் மூன்று எலும்புகளும் இருக்கின்றன. ஆனால் கட்டைவிரலில் மாத்திரம் இரண்டு எலும்புகள் தானிருக்கின்றன. மணிக்கட்டில் எட்டு எலும்புகள் இருக்கின்றன. அதாவது—மணிக்கட்டு அல்லது கைகுளசு ஆங்கிலத்தில் (Corpus—கார்பஸ்), மணிக்கட்டில் 8 எலும்புகளுண்டு; அவைகள் வரிசைக்கு 4-ஆக இரண்டு வரிசைகளாகயிருக்கும். முதல் வரிசையின் பேர்களாவன:—(Schaphoid — ஸ்கேபாயிட்), (Semilunar — ஸெமிலூனர்), (Cuneiform—கியூனிபாரம்), (Pisiform—பிஸிபாரம்) என்றும், இரண்டாவது வரிசையில் (Trapezium—ட்ரெபீஜியம்), (Trapezoides—ட்ரெபிஜாய்டியஸ்), (Os Magnum—ஆஸ்மாக்னம்), (Unciforme—அன்ஸிபாரம்) ஆக மொத்தம் ஒரு கையில் முப்பத்திரண்டு எலும்புகள் இருக்கின்றன.

## இடுப்பெலும்பு.

### ஆங்கிலத்தில் [Os Inominatum—ஆஸ் இன்னுமிநேடம்].

ஆஸ் இன்னுமிநேடம் என்று சொல்லப்படும் ஒழுங்கில்லாத இரண்டு இடுப்பெலும்புகளும் இரண்டு கால்களையும் உடலுடன் சேர்க்கின்றன. காலில் ஆறு பிரிவுகளுள்ளது. அவை (1) தொடை, (2) முழங்கால், (3) கால், (4) கணுக்கால், (5) பாதம், (6) விரல்கள். (a) தொடை. இது சரீரத்திலுள்ள எலும்புகளிலெல்லாம் பெரியது. (b) முழங்கால் முதல் கணுக்கால் வரையில் செல்வது. இதில் இரண்டு எலும்புகள் இருக்கின்றன. (c) பாதம். இதில் ஐந்து எலும்புகள் இருக்கின்றன. தொடையை கீழ்காலுடன் சேர்க்கும் முழங்கால் சிப்பியிருக்கின்றது. கீழ்க்காலை பாதத்துடன் சேர்க்கும் கணுக்காலில் ஏழு எலும்புகள் இருக்கின்றன. கால்கட்டை விரல் தவிர மற்ற விரல்களில் மூன்று எலும்புகள் இருக்கின்றன. கட்டை விரலிலிருப்பவை இரண்டு கையிலுள்ள எலும்புகளுடன் அதற்குச் சரியான கால் எலும்புகளை ஒத்திட்டால், காலிலுள்ளவை எல்லாம் பெரியதாயும் உருதியாயுமிருக்கின்றன. இவ்வித அற்புத அமைப்பின் காரணம் யாதெனில், முழு அங்கத்தையும் தாங்கி நடப்பதற்கு கால்கள் உறுதியாயும், கனமுள்ளவையாயும், பொருள்களை எடுப்பதற்கும் உபயோகிப்பதற்கும் கைகள் இலேசாயும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு காலிலும் மொத்த எலும்புகள் முப்பத்தியொன்று.—(தொடரும்).



## தாம்ர பாத்திரங்கள்.

### ஆங்கிலத்தில் [Copper Vessels—காப்பர் வெஸ்ஸல்ஸ்].

வெகு நாளாக நாம் பொய்யாசாரங்கள் என்று நினைத்திருந்த விஷயங்கள் இக்காலங்களில் நல் வாழ்விற்கே இன்றியமையாதவைகள் என்று ஒன்றொன்றாய் நிரூபிக்கப்படுகின்றன. நமது முன்னோர்கள் தெய்வாராதனை முதலான சற்கருமங்கள் செய்யும்போது, அவசியம் தாம்ரபாத்திரங்களையே உபயோகிக்கவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். இத்தென்னிந்தியாவில் இப்போதுங்கூட ஜனங்கள் காவேரிக்கு ஸ்நானஞ்செய்யப் போகும்போது செப்புச் செம்புகளை கொண்டு போகிறார்கள். சிலர் தாம்ர பாத்திரங்களில் அன்றி வேறு பாத்திரங்களில் ஜல பானஞ் செய்வதில்லை. இப்படியிருக்க, "நாமோ சிறிது ஆங்கிலம் கற்றுவிட்ட மமதையினால் செருக்குண்டு," இவையென்ன பொய்யா சாரங்கள் என்கின்றோம். சுத்தம் செய்தபிறகு சிறிது காலத்திற்கெல்லாம் காற்றிலாடிய காரணத்தால் நிறம் மங்கிக் கறையுண்டாகிறதென்று நினைத்து அதை நாம் வெறுக்கிறோம்.

ஆயினும் கவனிக்க. 1904-ம் வருஷத்திய "ரிவியு ஆவ் ரிவியூஸ்" என்ற ஆங்கில பத்திரிகையின் டிசம்பர்௴ சஞ்சிகை தாம்ரம் ஜலத்தை சுத்தப்படுத்துகிறதென்று தெரிவிக்கிறது. இது தற்காலத்து சாஸ்திரஞ்ஞர்கள் புதிதாகக் கண்டுபிடித்த விஷயங்களிலொன்று. "விஷமுள்ள நுண்ணுயிர் (Microbes)களைத் தாம்ரம் கொல்லுகின்றது. அஸ்தி ஜ்வரம், விஷபேதி முதலான பலநோய்களுக்குத் தாம்ரம் முதற்றரமான மாற்றாக விருக்கிறது."

குடிக்கும் நீர் நிறைந்துள்ள ஊருணிகளைச் சுத்தமாகவைத்துக்கொள்ளுவதில், ஏராளமான பணஞ் செலவிடுவதோடு நாம் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுள்ளது. அது யாதெனில், பத்து லக்ஷம் காலன் ஜலத்தைப் பரிசுத்தப்படுத்த ஒரு ரூபா எட்டணா விலையுள்ள துரிசு (Sulphate of Copper) போதுமென்று சாஸ்திரஞ்ஞர்கள் கூறுகிறார்கள் என்பதே.

பின்வருவதும் "ரிவியு ஆவ் ரிவியூஸ்" என்ற பத்திரிகையிலிருந்தே எடுத்தெழுதப்பட்டது:—"கண்ணிற்குப் புலப்படாத நுண்ணிய உயிர்கள் அற்பமான தாம்ர வாடைக்கும் பயந்து சுருங்குகின்றன என்று பலதடவைகளில் ருசுப்பி

க்கப்பட்டிருக்கின்றது. ஆதலின் டாக்டர். மூர் (Dr. Moore) நமது நகரங்களில் ஜனங்கள் குடிக்கும் நீரில் நிறைந்துள்ள அஸ்தி ஜ்வரம், விஷபேதி முதலான நோய்களை வளர்க்கும் நுண்ணிய பரமாணுச் சிற்றுயிர்களை நசிப்பிக்க இவ்விதமான தாம்ரத்தையே பிரயோகித்தல் நலமென்றார். இரசாயனச் சோதனைக்கு உபயோகிக்கும் கண்ணாடிக் குழல்களில் நீரை எடுத்தும் பெரிய தடாகங்களிலுள்ள நீரிலும் பலவிதமான சோதனைகள் செய்தார்கள். அஸ்தி ஜ்வரம், விஷபேதி முதலான நோய்களுக்குத் தாயாகும் பரமாணுச் சிற்றுயிர்கள் கோடானு கோடியாய் குடிகொண்ட ஜலத்தை நாலு ஐந்து மணிகளில் சுத்தம்செய்துவிடலாம். எப்படியென்றால், அந்த ஜலத்தை முதுவேனிற் காலத்தில் குளத்து நீர் எவ்வளவு வெதுவெதுப்பாய் இருக்கிறதோ, அவ்வளவு சூடேரச்செய்து, லக்ஷம் பங்கு ஜலத்துக்கு ஒரு பங்கு தாம்ரமாகச் சேர்த்த திராவகத்தை அந்த அசுத்த ஜலத்திற் கலந்தால் பரமாணுச் சிற்றுயிர்கள் மறித்துப்போகின்றன. "இந்தியானா போலீஸ்" என்ற நகரத்தில் கடைசியாக வாந்திபேதி பரவிய காலத்தில், அந்நக ரதிகாரிகள் அந்நகர வீதிகளையும், வீடுகளையும் துருசு கலந்த நீரால் மெழுகி அந்நோயைத் துடைத்தனர். தங்க நாணயங்களிலும், வெள்ளி நாணயங்களிலும் நோய் பரமாணுச் சிற்றுயிர்கள் மல்குகின்றன. தாம்ர நாணயங்களைக் கண்டமாத்திரத்தில் விஷபேதி பரமாணுச் சிற்றுயிர்கள் விலகுகின்றன. நாற்ற மெடுக்கின்ற குப்பைகள் சூழ்ந்திருக்கும் இடங்களில் வசிக்கும் சீனர்கள் விஷபேதியால் மாள்வதில்லை! ஏனென்றால், அவர்கள் தாங்கள் குடிக்கும் நீரைத் தாம்ரத் தொட்டிகளிலேயே வைத்திருக்கின்றனர்."

நமது குக்கிராமத்து ஜனங்கள் தமது பிள்ளைகள் இடுப்பில் அரைஞ்ஞாணிற் கோத்து ஒரு முக்கால்துட்டு நாணயத்தையாகிலும், நாய்க் காசையாகிலும், இரக்ஷாபந்தனமாகத் தொங்கவிட்டு வைப்பது வழக்கம். இது அறியாமையோ, அறிந்தமையோ கண்டுகொள்க.

திருநெல்வேலி ஜில்லாவில் ஓடுகின்ற தாம்ரவர்ணி நதியின் ஜலத்தைக் குடிக்கும் ஜனங்கள் விஷபேதிக்குள்ளாவதில்லைபோலும்! இதனைக் கேட்டறிக.

இன்னும் விஷபேதி கண்டிருப்பவர்களுக்கு லக்ஷத்துக்கு ஒரு பங்குசேர்ந்த துரிசு ஜலத்தைக் குடிப்பதற்கும், கால் கழுவதற்கும் உபயோகித்தபோது, 100-க்கு 90-பேர்கள் சௌ



க்கியமடைந்தார்களென்று 1906-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 3 தேதி "அமெரிக்கன் மெடிக்கல் அஸோஸியேஷன் என்ற பத்திரிகை"யில் துருக்கி தேசத்தில் (Vanturkey Asia) வான்டர்க்கி ஏஷியா என்னும் ஊரிலிருக்கும், கிளாரன்ஸ், டீ. அஷா, M. D. என்பவரால் சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும் மூலிகையின் சக்தியால் செம்பிலிருக்கும் களிம்பைப்போக்கி பஸ்பம் செய்து உண்பதினால், குஷ்டம், குன்மம், மூர்ச்சை, சுவாசம், அதிபித்தம் முதலிய நோய் நீங்கி, ஆயுள் ஓங்குமென உலகத்தோர் உரைப்பதை நாம் கேட்டு வருகின்றோம்.

நம் நாட்டின் தேவாலயங்களிலுள்ள உலாவுத்தேவர்களாகிய, உத்ஸவ மூர்த்திகளையும், பெரும்பாலும் செம்பினாலேயே செய்யப்படுகிறதும் என்னோ தெரியவில்லை!

தற்காலத்து நாகரீகமே சிறந்ததென்று கடைப்பிடித்திருக்கும் எம்போலிய சிற்றறிவினர்கட்கு நான் கூறும் வாய்மொழி ஒன்றுள்ளது. எது பொய்யாசாரம்? எது மெய்யாசாரம்? நாம் இப்போது நமக்குள்ள முற்றுறாத சிற்றறிவைக் கொண்டு காண்பது அறிதாயிருக்கின்றது. நாம் பொய்யாராய்ச்சிகளால் மெய்யா சாரங்களென்றே துணியப்படுகின்றன. ஆதலின் நாம் ஆராயாமல் ஒன்றையும் பொய்யா சாரமென்று புகல்வது கூடாது.

## காந்தப் பார்வை.

### [Magnetic Gaze—மாக்னேடிக் காஸ்].

காந்தக்கவர்ச்சி (Magnetism) என்னும் அற்புத நரம்பு சக்தி மனித சரீரமெங்கும் வியாபித்திருக்கின்றது. இது பாயும் சக்தி (Positive), தாங்கும் சக்தி (Negative) என இருவகைப்படும். சில மனிதரின் சரீரத்தில் பாயும் சக்தி அதிகமாகவும், வேறுசிலரில் தாங்கும் சக்தி அதிகமாகவும் வியாபித்திருக்கும். உதாரணமாக, சில மனிதரை நாம் கண்டவுடனே அவர்கள் பார்வைக்கு எதிர் விழி விழிக்கச் சக்தியற்றவர்களாய் நமது கண்களைக் கீழே பார்த்துக்கொண்டு அடங்கி மரியாதையுடன் நிற்கிறோம். நமது மனமும் அவர்கள் பேரில் இடையறாது சென்று பற்றிக்கொள்ளுகிறது. புருஷ பாவையர்களுள்ளிருக்கும் அந்நியோன்யத்திற்கும் காரணமிதுவே.

நாம் செய்வதின்னதென்றறியாமலே மற்றவர்கள் உனக்கு வசியமாகும் சக்தி விசேஷமாய் உன் திருஷ்டியிலேயே அமைந்திருக்கிறது. இன்னொரு மனிதன் அல்லது ஸ்திரீயின் முகத்தில் நேராய் நிமிர்ந்து பார்க்கும் சக்தியை யடையாதவன் மாந்திரீகத்தொழிலில் (Hypnotism) சித்தியடைய மாட்டான். குறு விழி விழிக்காதே. ஆனால், மற்றவர்களின், கண்களுக்குள் நேராய் பார்த்துப்பேசப்பழகு. உன் மனதிலுள்ள திடசித்தம் உன் கண்கள் மூலமாகவே வெளியாகவேண்டும். உன் மனதில் எதைத் தீர்மானித்திருக்கிறாயோ அது உன் பார்வையால் விளங்கும். பராக்குப் பார்க்கும் கண்களையும், காரியமில்லாது கண்டமட்டும் விழித்துக்கொண்டிருக்கும் நேத்திரங்களையுமுடைய எவனும் இவ்வுலகில் அரும்பெரும் காரியங்கள் செய்வதரிது. ஆதலால் அமர்ந்து ஆழ்ந்து மற்றவர்கள் நெஞ்சை ஊடுருவிச் செல்லத்தக்கதும், மற்றவர்களின் திருஷ்டிக்கு அஞ்சாமல் எதிர்த்து நோக்கக்கூடியதுமான, பார்வையையடைய அடிக்கடி அப்பியாசிக்கவேண்டும். முதல் முதல் நீ பழகவேண்டியதேதெனில், கண்களைப் படையாமல் வெகு நேரமாக ஒரு மனிதனை அல்லது வஸ்துவை நேராய் நிமிர்ந்து பார்க்கச்செய்வதே. நேராய் நிமிர்ந்து பார்க்கப் பழகும் வழிகள் அனந்தம் உள்ளன.

ஓர் இடத்தில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு உன் கண்ணிமைகளைத்தட்டாமல் தூரத்திலுள்ள ஓர் வஸ்துவை உன்னால் கூடிய அளவு பத்து அல்லது பதினைந்து நிமிஷம் வரை பார்த்துக்கொண்டிருக்கப் பழகு. சீறிச் சினந்து பார்க்கவேண்டாம். சாதாரணப்பார்வையே போதும். அதி காலை புத்தி தீக்ஷணியமும், மன ஆறுதலுமுள்ள சமயமாதலால்; அதுவே இவ்வித அப்பியாசத்திற்குத் தகுந்த சமயம். ஆரம்பத்தில் கண்கள் கரித்து தண்ணீர் ஓடும். வரவரக் கண்விழிகள் உறுதியாகி விடுமாதலால், யாதொரு சங்கடமுமில்லாமல் எந்த வஸ்துவையும் எவ்வளவு நேரமும் பார்க்கப்பழகிக்கொள்வாய். எந்த சமயம் உன் கண்கள் கரித்து தண்ணீர் ஓட ஆரம்பிக்ககின்றனவோ, அப்பொழுது நிறுத்தி விட்டு மற்ற வேலைகளை பார். உன் கண்கள் நோவெடுத்தால் அல்லது கண்ணீர் சொரிந்துகொண்டிருந்தால், உடனே குளிர்ந்த ஜலத்தால் கழுவ சுகமாகும். சாயுங்காலத்திலும் அப்படியே தீபத்தை நோக்கிப்பார்த்துப் பழகலாம். இவ்வித அப்பியாசம் செய்து வரும்பொழுது பின்வரும் மந்திரத்தை உச்சரிக்கவேண்டும். " என் கண்கள் காந்தக் கண்கள். அவைகள் வரவர



உறுதியாகின்றன. என் இமைகளை மூட்டாமல் எவ்வளவு நேரமும் எந்த வஸ்துவையும் பார்க்கும் சக்தி எனக்குண்டு. மற்றவர்களின் இருதயங்களை ஊடுருவச்சென்று பிளக்கும் என்பார்வையின் காந்தியை சகிக்க எவராலும் முடியாது. என்கண்கள் காந்தக்கண்கள் என் திருஷ்டி மிக்கவலிது."

இந்த மந்திரத்தை அடிக்கடி உச்சரித்துவர கண்களில் காந்தக்கவர்ச்சி அதிகரிக்கும். காந்தப் பார்வையை அப்பியாசித்துவரின் அதனாலடையும் பயனை அனுபோகத்தில் கண்டுகொள்வாய்.—(தொடரும்.)

ரஞ்சிதபோதினி.

## ஐம்புலன்கள், பஞ்சேந்திரியங்கள் அல்லது ஞானேந்திரியங்கள்.

### ஆங்கிலத்தில் [The Senses—தீஸென்ஸஸ்.]

புலன் என்பது பொறிகளின் வழியாய் மனதிலுண்டாகும் உணர்ச்சியாம். புலன் ஐந்து. அவையாவன— பரிசம், இரசம், கந்தம், உருவம், சத்தம் என்பவைகளாம்.

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய இவைகளுக்கு பஞ்சேந்திரியங்கள் என்று பேர். இவைகளில் பரிசம் அல்லது ஊறு என்பது நாம் தொடும் அல்லது நம்மேலேபடும் பொருள்கள் இன்னதெனப் பகுத்தறியப்பண்ணும் புலனும். ஆங்கிலத்தில் (The Sense of Touch—தி ஸென்ஸ் ஆவ் டச்) நம் உள்தோலில் அளவு சங்கையின்றி வலைபோல் பின்னப்பட்டிருக்கும் ஸ்பரிச நரம்புகளே இப்புலனுக்கு ஆதாரமாகும். அந்த நரம்புகள் மூளையில் ஆரம்பமாகி முள்ளந்தண்டுக்கொடிநெடுக அதன் பிற்பாதியிலிருந்து கிளம்புகின்றன. உணர்ச்சி எந்த விடத்தில் அதிகமாக இருக்கின்றதோ அவ்விடத்திலே மற்ற இடங்களைப்பார்க்க அதிகத்தொகையான நரம்புக்கூந்தல்கள் ஓடி இருக்கின்றன. உதாரணமாக, விரல்களின் நுனிகளிலும், உதடுகளிலும், நரம்புக்கூந்தல்கள் அதிகமாகவும், உணர்ச்சி கூர்மையாகவும் இருக்கின்றன. இரசம் அல்லது சுவை என்பது பதார்த்தங்களின் அறுசுவையை அறியப்பண்ணும்புலனும். நாக்கே அதற்குபிரதான உறுப்பாம். ஆங்கிலத்தில் (The Sense of Taste—தி ஸென்ஸ் ஆவ் டேஸ்ட்) நாக்கிற்கு பதார்த்தங்களைப்பகுத்தறிந்து சுவை தெரிகிற விதமெப்படியெனில், பதார்த்தங்களை வாயிலிட்டால் நாக்கின்மேலிருக்கிற நாக்கடு வென்னும் சிறு முள்ளுகள்

மலர்ந்து அவைகளில் வியாபித்திருக்கிற இரசினை நரம்புக் கூந்தல் வழியாய் மூளைக்கோட, மனது தெரிந்துக்கொள்ளுகின்றது. வாயிலிடுகிற பதார்த்தம் சீக்கிரத்தில் கரைந்தால், ருசி அதிசீக்கிரத்தில் தெரியும். மெதுவுற்றால் தாமசப்படும். கந்தம் அதாவது வாசனையுணர்தல், பதார்த்தங்களுடைய வாசனை யணுக்களை ஆக்ராணிக்கும்போது, சளியூருஞ் சவ்வின் மேல் பரவியிருக்கிற ஆக்கிராணேந்திரிய நரம்புக் கூந்தல்களின் மேல் உறுத்தும். அந்த உணர்ச்சியை ஆக்கிராண நரம்புகள் மூளைக்குக்கொண்டு போகும். மூளை புத்திக்குத்தெரிவிக்கும். அப்போது பதார்த்தங்களுடைய கந்தம் உணரப்படுகிறது. கந்தம் அதாவது வாசனையை யறிவதற்கு ஆங்கிலத்தில் (The Sense of Smell—தி ஸென்ஸ் ஆப் ஸ்மெல்). நாஸித்துவாரத்தின் மேற்புறமாய் வாசனை நரம்புகள் இருப்பதால் பதார்த்தங்களை முகரும்போது மூச்சை மேலுக்கிழுத்தால் வாசனை செவ்வையாய்த்தெரியும். நாசிக்கு வாசனையைத்தெரிவிக்கிற குணமன்றியில், தொனியையும் மனதுக்கேற்றபடி இணையச்செய்கின்ற சக்தியுண்டு. சளி யூறுஞ் சவ்வானது வியாதிகொள்ள அதிலிருந்து அதிக ஜலம் சுரந்து வடிவதற்கு ஜலதோஷம் என்று பேர். சிரசுக்குள் நீர்கோத்து ஜலதோஷம் காண்கிறதென்று சொல்வது வழக்கம். வாசனையறியும் சக்தி பழக்கத்தினால் அதிகப்படுகிறது. சில தேசத்து ஜனங்களுக்கு ஜாதியையும், மனுஷரையும் முகர்ந்து தெரிந்துகொள்ளுகிற ஞானம் உண்டென்பதாக காலஞ்சென்ற, "சர்ஜன் M. ஜகந்நாதம் நாயுடு அவர்களால் இயற்றப்பட்டுள்ள, இங்கிலீஷ் மெடிக்கல் ஸைன்ஸ்" என்னும் புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது. நாய்க்கு வாசனை அறியும் சக்தியதிகமுண்டு. மூக்குத்தூள் போடுவதினால் சுகமில்லை, அதனால் சளியூரும் ஜவ்வு தடித்து நரம்புகளுடைய உணர்ச்சி மந்தப்படும். வாசனை செவ்வையாகத்தெரியாது அடிக்கடி மூக்கடைப்புக்கண்டு சுவாசம் வாயால் பரியும். நாஸியானது வாய்க்குமேல் இருக்கவேண்டிய பிரயோஜனம் யாதெனில், பதார்த்தங்களை வாயிலிடுவதற்கு முன்னதாய் அவைகளுடைய வாசனையைத்தெரிந்து கொள்ளும் பொருட்டு சர்வவல்லமையுள்ள கடவுள் அவ்விடத்தில் சிருஷ்டித்திருக்கிறார். நாசிக்குள்ளிருக்கும் ரோமங்கள் (Vibrissoe—வைப்பிரிஸி) தூசு, கிருமிமுதலியவைகள் உள்ளே பிரவேசிக்காமல் தடுக்கின்றதற்காகவே உண்டாக்கப்பட்டிருக்கிறது.—(தொடரும்.)



## நித்திரை.

ஆங்கிலத்தில் [Sleep—ஸ்லீப்.]

நித்திரையானது ஒவ்வொரு ஜீவ வர்க்கத்திற்கும் இன்றியமையாதனவாய் இருக்கிறது.



புலி, சிங்கம், யானை முதலிய வன விலங்குகள் மாத்திரமே, புதர், குகை முதலிய இடங்களில் பகலில் ஒளித்துறைந்து இரவில் இரைதேடப் புறப்படுகின்றன.



பகல் குருடான கூகை முதலிய பக்ஷிகளும், பாழும் பொந்துகளில் பதுங்கி யிருந்து இரை கொள்ள இரவில் வெளிப்படுகின்றன. மாலையானால் பக்ஷிகளெல்லாம் கூடு புக்கடைகின்றன. வன விலங்குகள் ஓரிடம் அடைந்து உறங்குகின்றன. சில விருக்ஷங்களும் இலையோடு இலை குவிந்து உறங்குவன போல்கின்றன. விருக்ஷங்களில் ஓர் மரம் தூங்குமூஞ்சி மரமென்றே பெயர் பெறுகின்றது. கள்வர்,காவலாளர்முதலிய



சிற்சிலர் தவிர மன்பதைகளும் இரவில் உண்டபின் உறங்கி விடுகின்றனர். குக்ஷி பாதையின் பொருட்டுப் பகலில் உழைப்பதும், அவ்வுழைப்பின் அயர்ச்சியால் இரவில் உறங்குவதும், பொதுவில் ஜீவ வர்க்கங்களின் பிரகுர்தியாக இராநின்றது. யாதொரு அவசர நிமித்தமாக இரா முழுவதும் விழித்திருந்தவர்கள் மறு நாளில் தாங்கள் வழக்கமாகச் செய்யும் தொழிலைச் செய்ய இயலாமல் இடர் படுவது இயல்பு. சில தேசங்களில் சில குற்றங்களுக்காகக் கண்ணிரப்பையைச் சேதித்து விடுகிற தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அவ்வித தண்டனை பெற்றவர் உறக்கம் பிடியாமல் சில நாளில் மரண மடைகின்றனர். இடை இடையில் ஆற விடாமல் என்னேரமும் இயக்கப்படும் இயந்திரங்கள் விரைவில் பழுதடைந்து பயனற்றனவாகின்றன. ஆகவே இளைப்பாறி அயர்ந்து நித்திரை செய்வது, ஜீவ வர்க்கம் அனைத்திற்கும் அவசியம் என்பது தெரியப்படும். பகலில் தொழில் செய்து உழைக்கும் போது தாதுக்கள் தேய்தலாய்க் கழிகடையாகின்றன. அவை இரவில் நாம் அயர்ந்து நித்திரை செய்கையில் இரத்த

ஓட்டத்தினால் மறுபடியும் சரிவர நிரம்பி மறுநாள் தேகஉழைப்பிற்கு ஏற்றனவாகின்றன. உற்று நோக்கின் உறக்கமே, உழைத்து பழுதுற்ற உடலைச்சீர் செய்யும் சிற்பி: அன்றாடம் மறித்தலான தாதுக்களை உயிர்ப்பிக்கும் சஞ்சீவி: உழைப்பால் வந்த அயர்ச்சியைப் போக்கும் உத்தம பரிகாரி: வாடியமேனியை மாற்றேற்றி மினுக்கிக் காட்டும் பரிசன வேதி: இரவைப் பகலாக்கும் மாணாக்கர்க்குப் பகலை இரவாக்கிக் கொடுக்கும் மாந்திரிகன்.

உறக்கத்துக்குரிய காலம் இரவே. "உறங்குவதிராவொழியப் பகலுறக்கஞ் செய்யோம்" என்றார் தேரையர். பகலிலுறங்குவது நோய்க்கிடம் "பகல் வளரார் நோயின்மை வேண்டுபவர்." இரவிலும் அர்த்தஜாமம் உறக்கத்துக்கு மிகவும் இன்றியமையாதது. "யேமம்புகினுஞ் சாமத்துறங்கு" நன்னிரவுக்குப் பின்னால் இரண்டு நாழிகை உறங்குவதினும் நள்ளிரவுக்கு முன்னால் ஒரு நாழிகை உறங்குவது உத்தமம் என்பது ஆங்கிலேயருக்கும் அனுபவம்.

படுக்கைக்கு சீக்கிரமாகவேபோய் சீக்கிரமாகவே துயில் நீங்கி எழுதல், ஒருமனிதனுக்கு ஆரோக்கியத்தையும், புத்தியையும் கொடுக்கிறது. "Early to bed and Early to rise, makes a man healthy, wealthy and wise" என்று ஆங்கிலத்திலும் ஒரு பழமொழியுண்டு. சீக்கிரம் துயில் நீங்கல் ஒன்றே நமக்கு இவ்வித பேறுகளை அளிக்குமாயின் அதை ஏன் நாமெல்லோரும் கைக்கொள்ளக்கூடாது? இதை பாலர் முதல் விருத்தர் வரை அனுசரிப்பது எல்லாவிதத்திலும் நன்மேயேயாயினும், அவசியம் பாலர்கள் அனுஷ்டிக்கவேண்டிய முதற்கடமைகளில் ஒன்றாகும். முதலாவது சரீரபலம், எவ்வாறு உண்டாகுமென்று சிலர் கேட்கக்கூடும். அதற்கு காலை 10-மணிக்கு எழுந்திருக்கும் ஒருவனது முகக்களைக்கும், 5-மணிக்கு எழுந்திருக்கும் ஒருவனது முகக்களைக்கும் ஒப்பிட்டால் சந்தேகமில்லாமல் வெளியாகும். முன்னவனுக்கு இரத்த ஓட்டம் சரியாயில்லாமலும், நல்ல காற்று சுவாசிக்க இடமில்லாமலும், அவஸ்தைப்பட் நேரிடுகிறதல்லவா?

(தொடரும்.)



## புகையிலையும் அதனால் உண்டாகும் தீங்குகளும்.

ஆங்கிலத்தில் (**Tobacco Leaves**—டொபாக்கோ லீவ்ஸ்.)

நமது இந்தியாவில் புகையிலை நெடுங்காலமாயுள்ளதல்ல. முதல் முதல் 1496-ம் வருஷத்தில் "லாண்டு மிங்கோ" என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டு 1560-ம் வருஷத்தில் பிரான்சு தேசத்திலும், 1830-ம் வருஷத்தில் இங்கிலாந்து தேசத்திலும் பரவச்செய்யப்பட்டது. ஆதியில் அமெரிக்கர்களால் ஐரோப்பியர்களுக்கு புகைச் சுருட்டுக் குடிக்கும் வழக்கம் கற்பிக்கப்பட்டதாம். காப்பி, டீ, கோக்கோ, ரணவா, ஒயின் முதலிய பானங்கள் எங்ஙனம் இந்துக்களுக்கு கற்பிக்கப்பட்டதோ, அது போலவே இவ்வப்பியாசத்தையும் ஏற்படுத்திவிட்டார்கள். ஆகவே, இப்போது அநேக சிறு பையன்கள் பொடிப்பட்டையை இடுப்பில் சொருகிக்கொண்டும், வாயில் சுருட்டு பிடித்துக் கொண்டும், தெருத்தெருவாய் அலைகின்றதை நாம் தினந்தோறும் பார்த்து வருகின்றோம். ஸ்திரீ ஜாதிகள்கூட புகைச்சுருட்டுக் குடித்தல், பொடி போடுதல், ஆகிய வழக்கத்தை அனுசரித்து வருகின்றார்கள். பிராமணர்கள் முதலாய் புகையிலையை உபயோகிக்கத் தலைப்பட்டுவிட்டார்கள். பர்மாவில் பால் கொடுத்துக்கொண்டிருக்கும் தாய் தன் குழந்தைக்குத் தன் வாயிலிருந்து சுருட்டையெடுத்து வாயில் வைக்க குழந்தை அதை இழுத்துக்கொண்டு சந்தோஷித்துக் கொள்ளுமாம். ஆகவே எத்தேசத்திலும் எச்சாதியாராலும், தற்காலம் இப்புகையிலை உபயோகிக்கப்பட்டு வருவதாக தெளிவாய்த் தெரிகின்றமையால், இத்தருணத்தில் புகையிலையினால் உண்டாகும் கெடுதிகளைப்பற்றி ஜனங்களுக்கு எடுத்துக் காட்டி அதினின்று அவர்களைத் தப்புவிக்க வேண்டியது நம்மைப்பொருத்த கடனாயிருக்கிறது.

புகையிலையானது ஊமத்தன் (Datura Stramoniumor Thorn Apple), பெல்லடோனா (Atropa Belladona or Deadly Night-Shade) முதலிய கொடிய விஷச்செடிகளின் இனத்தைச் சார்ந்ததெனத் தாவர சாஸ்திரிகள் ஒருங்கே சொல்லியிருக்கின்றார்கள். புகையிலையில் நிகோடைன் அல்லது நைக்கோடியானா (Nicotine or Nicotiana) என்ற ஓர் கடுநஞ்சுச்சத்திருப்பதால் அதை நைக்கோடியானா டபேகம், (Nicotiana Tabacum) எனக்கூறுவார்கள். புகையிலையானது முதல் முதல் 1559-ம் வருஷத்தில் மிஸ்டர் ஜே. நிகோட் (Mr. J.

Nicot) என்பவரால்பிரான்சு (France)தேசத்திற்குக்கொண்டு வரப்பட்ட காரணத்தால் அதற்கு இப்பெயர் வாய்ந்ததெனக் கூறுவார்கள். சாதாரண புகையிலையில் குறைந்த பக்ஷம் நூற்றில் 2-பங்கு வீதமாவது நிக்கோடைன் (Nicotine) என்ற விஷசத்துண்டு. **வர்ஜீனியா** நாட்டுப் புகையிலை போன்ற சில நல்ல புகையிலைகளில் நூற்றில் 6-பங்குக்குமேல் இவ்விஷச்ச்சத்திருப்பதுண்டு. ஐரோப்பா தேசத்துப் புகையிலைகள் சிலவற்றில் நூற்றில் பத்து வீதமும், இவ்விஷச் சத்திருப்பதாகக்கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் புகையிலைச்சுருட்டின் புகையில் கார்பாலிக் ஆஸிட் (Carbolic Acid,) ஸல்பரட்டட் ஹைட்ரஜன் (Sulphuretted Hydrogen,) ப்ரஸ்ஸிக் ஆஸிட் (Prussic Acid) பைரிடன் (Pyridine) பிக்கோலின் (Piccoline) ஆகிய அற்பமும் கொடியதுமாகிய பலவிஷங்கள் அடங்கியிருப்பதாக ரசாயன சாஸ்திரிகள் கூறுகின்றார்கள். மூட்டுப்பூச்சிகளும், கொசுக்களும் இப்புகை மிகுந்திருக்கும் இடங்களில் விசேஷமாய் வசிப்பதில்லையென்றும், ராட்டில்ஸ்னேக் (Rattle Snake) என்ற ஒருவித சர்ப்பமானது, புகையிலைத் தோட்டங்களைக் கண்டால் பயந்து அப்புறம் ஓடிவிடுமென்றும், ஜே. எச். ராஸ்ஸி (J. H. Rausse) என்ற ஓர் ஜெர்மானிய வைத்தியர்கூறுகின்றார். நிக்கோடைன் விஷசத்து என்ற தன்மையானது சாதாரணமாய் வெகு கொடிய விஷமெனக் கருதப்பட்ட, ப்ரஸ்ஸிக் ஆஸிட் (Prussic Acid) இரண்டாவதாக இருக்கின்றதென அறியப்பட்டிருக்கிறது. ஒரு துளி (Drop) நிக்கோடைன் சத்தானது ஒரு மூஞ்சூரை $3\frac{1}{2}$ நிமிஷங்களிற் கொன்று விடுகின்றது. மேலும், ஒரு *கிறேன் (Grain) நிக்கோடைன்சத்தில் 32-ல் ஒரு பாகத்தை மனிதன் உட்கொண்டால் அது அபாயகரமான வியாதிச் சின்னங்களை உண்டாக்குகிறது. ஒரு கிறேனில் 16-ல் ஒரு பாகத்தை உட்கொண்டால் பிறகு மூன்று நாள்களுக்கு அது தேகத்துக்கு விஷங்களை விளைவிக்கின்றது. ஒரு சுருட்டில் (Cigar) இரண்டு மனிதர்களைக் கொல்லப்போதுமான விஷச்சத்திருப்பதாக டாக்டர் ஆலின்ஸன் (Dr. Allinson) என்ற ஒரு ஆங்கிலேய வைத்திய பண்டிதர் கூறுகின்றனர்.

இங்ஙனமாக மேற்சொல்லிவந்த புகையிலையை அவுஷதங்களாகச் செய்து, இசிவு ரோகங்களுக்கு உள்ளுக்கும், எரிச்சலும், வேதனையும் தணிக்க, கட்டி, வீக்கம் இவைகளுக்கு மேலுக்கும் போடலாம். சுவாசகாசம், இருமல், வேதனை, நித்திராபங்கம் இவைகளுக்குச் சுருட்டுப் பிடிக்கச் செய்வதுமுண்டு. இதை வென்னீர் கஷாயமிட்டு (புகைஇலை, 20 கிறேன்; வென்னீர் 8-ஔன்ஸ் கூட்டி 15-நிமிஷம் கிரமித்து வடிகட்டி Eneama of Tobacco) இறுகிக்கொண்ட குடலிறக்கம், நீரடைப்பு இவைகளுக்கு ஆசனத்தில் பிரயோகிக்கலாம். ஆனால் அதிக ஜாக்கிரதை வேண்டும்.

* ஒரு கிறேன் என்பது சற்றேறக்குறைய ஒரு நெல்லெடை.



தவிர, நமது வீட்டுகளில் புகையிலைக்காம்பை குழந்தைகளுக்கு ஆசனத்தில் வைத்து மலம் இறங்கும்படிச் செய்கிற வழக்கம் மிகவும் கொடியது.

> "கண்புகையும் நெஞ்சுலரும் கைகாலயர்ந்து விடும்
> சொல்லரிய மேனி வெளுத்து விடும்—மெல்ல மெல்ல
> ஈரல் கருகிவிடும் இந்திரிய நஷ்டமாம்
> பாரப் புகையிலையின் பண்பு"

## வர்த்தமானங்கள்.

**தாடியும், தலைமயிரும் :—** எழுபது வருஷத்துக்கொருமுறை ஒரு நடுத்தர மனுஷனுக்கு தாடி 25 அடி நீளமும், தலைமயிர் 50 அடிநீளமும், நகம் 23 அடி நீளமும் வளருமென்று ஒருவர் விநோதவிதமாகக் கணக்கிட்டிருக்கிறார்.

---

**இந்தியாவில் குருடர்கள் :—** இந்தியா முழுவதிலும் கணக்கெடுத்துப்பார்க்க மொத்தத்தில் 33 கோடி ஜனங்கள் இருப்பதாக குறிப்பிடப் படுகின்றது. அவர்களில் ஐம்பது லட்சம் வரையில் பிறவியிலேயோ அல்லது வயது காலத்திலேயோ குருடர்களாக விருக்கிறார்களாம். இனிச் செவிடர்களுக்கும், ஊமையர்களுக்குந் தான் கணக்கெடுக்க வேண்டும் போலும்!

---

**மைசூர் கவர்ன்மெண்டும், ஆயுர்வேதமும் :—** மைசூர் கவர்ன்மெண்டார் ஆயுர்வேதமுறைப்படி சில வைத்தியர்களைப்பழக்கி வருகிறார்கள் என்பதைக்கேட்க சந்தோஷப்படுகிறோம். மைசூர் பட்டணத்தில் ஆயுர் வேத வைத்திய சாலைக்கு முனிசிபாலிட்டியிலிருந்து நன்கொடை கொடுத்து வருகிறார்கள்! இந்த மாதிரி பிரிட்டிஷ இலாகாவில் ஏற்பட்டால் மிக்க நலமாயிருக்கும். ஏனைச்சுதேச ராஜாங்கங்களிலாவது சுலபமாய் ஏற்படலாம்.

**பசுமாடும் அதன் பாதுகாப்பும்:—** சாதாரணமாய் பசுமாடுகளை நம்மவர்கள் வீட்டு வெளித் தாழ்வாரத்திற் கட்டுவார்கள். மாடு இருக்கும் இடம் மூத்திர நாற்ற மடிக்கும். இவ்விடங்களில் பால் கறந்தால் பால் நாற்றத்தைக் கிரகிக்கிறது. அப்பால் குழந்தைக்கு நல்லதன்று. மாடு குளிரிலும், மழையிலும் அடிபட்டால் அதன் பால் பாதியிலொரு பாகம் குறைவதுமல்லாமல் தைலப் பசையும் குறைகிறது.

---

நமது பத்திரிகையை ஆதரிக்கும்படி திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ ல ஸ்ரீ அம்பலவாண தேசிக பண்டார சன்னதியவர்களிடம் கோறிக்கொண்டோம். அவர்கள் வெகு வள்ளலென்றும், ஸத்குணசம்பன்னரென்றும் ஏற்கனவே கேழ்விப்பட்டிருந்தோம். அதன்பேரில் நாம் போய் கோறிக்கொள்ளும்படி நேரிட்டது. அவர்கள் அதற்கிணங்கி பத்திரிகை வெளியானவுடன் ஆதரிப்பதாக அபிப்பிராயங்கொடுத்தார்கள். நினைத்த காரியங்களை அதிக விரைவில் முடிக்க வல்ல பண்டார ஸன்னதியவர்கள் இப்பத்திரிகை ஸ்திரமாய் நடக்க வேண்டுவதற்கு தக்கபடி தங்கள் பெருமைக்கும், கௌரவத்திற்கு மேற்ப ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

---

**கோல் ஹாப்பூர் மகாராஜாவும், விஷஜ்வரமும் :—** பம்பாய் மாகணத்தைச் சேர்ந்த கோல்ஹாப்பூர் மகாராஜா தம்முடைய சமஸ்தானத்துக் குடிகள் ராஜ குடும்பத்தாரின் செய்கையைப் பார்த்துப் படித்துக் கொள்ளட்டுமென்று தாம் பிளேக் நோய்க்கு அம்மை குத்திக்கொண்டது மன்றி, ராஜ குடும்பத்தைச்சேர்ந்தவர்களுக்கெல்லாம் அம்மை குத்தி விடும்படி செய்தாராம். சிறைச்சாலைகளில் கைதிகளாயிருப்பவர்கள் பிளேக் நோய்க்காக அம்மை குத்திக்கொள்வதாய் இருந்தால் அவர்களுடைய சிறைச்சாலைவாசத்தின் ஒருபகுதி குறைக்கப்படுமென்று தெரிவித்தாராம். ஆனால் சிறைச்சாலைகளிலிருந்த கைதிகள் அந்த நிபந்தனையை ஏற்றுக்கொள்ளவில்லையாம்.

---

**ஒரு புல் நூல்:—**புல், பூண்டு, மரஞ் செடிகளினியல்பைப் பற்றிய சாஸ்திரமாகிய புல் நூல் (Botany) விஷயமாய் இதுவரையும் வெளிவராத ஒரு பெரிய புஸ்தகம் ஒன்று தென்னமெரிக்கா பிரேஸிலியன் கவர்ன்மெண்டாரால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இது 130 பாகங்களடங்கிய 40 புத்தகங்களாகச்



செய்யப் பட்டிருக்கிறது. இதில் மொத்தம் 20,733 பக்கங்களிருக்கின்றன. இதில் சுமார் 40,000 புற் பூண்டுகளைப் பற்றிய விஷயங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இந்நூலானது 1819 ஆம் வருஷத்தில், தொடங்கப்பட்டு, இப்பொழுது சமீபத்தில் தான் முடிவு பெற்றது. அதாவது சென்ற 91 வருஷகாலமாய் எழுதிக்கொண்டிருந்தார்கள். இதை இயற்றிய கிரந்தகருத்தாக்கள் 65 பேர்கள். இதை முதல்முதல் எழுதத் தொடங்கியவர் மார்ட்டியஸ் என்ற ஒருவராம்.

## வைத்தியக் குறிப்புகள்.

**தேள் கொட்டுக்கு :—**வெள்ளைப் பூண்டை தனிமையாய் மைப்போல் அரைத்து கடி வாயில் கொடுக்கு முதலியவையிருந்தால் அவைகளை எடுத்து விட்டு பத்து நிமிஷம் தேய்க்கச் சுகமாகும்.

---

**மோர் :—**கல்கத்தாவிலுள்ள ஐரோப்பியர்கள் மோரைச் சாப்பிட்டு வருகிறார்கள். மோருக்கு இரத்தக் குழாயை சுத்தி செய்யும் சக்தி இருக்கிறதாம். குடல் சம்பந்தமான விஷ ஜ்வரத்துக்குக் காரணமான கிருமிகளை மோர் கொன்று விடக்கூடியதாம்.

---

**தாகம் :—**தாகமாயிருக்கும் பொழுது தண்ணீரருந்த வேண்டும். மிகவும் சூடான பானத்தை யொரு பொழுதும் குடிக்கக்கூடாது. சூடாயிருக்கும் பதார்த்தமானது இரைப்பையைக் கெடுத்துவிடும். சூடு பற்களுக்கும் கெடுதியையுண்டு பண்ணும். சாப்பிடுமுன் தண்ணீர் அருந்தக்கூடாது.

---

**விக்கலுக்கு மருந்து :—**சீரகம், திப்பிலி, கிராம்பு வகைக்கு ஒரு ரூபாய் எடை எடுத்து ஆழாக்குத் தண்ணீரில் வேக வைத்து கஷாயம் செய்து வடிக்கட்டி, அதில் மயிலிறகு சுட்ட சாம்பலை திரிகடி பிரமாணம் கலந்து கொண்டு ஒரு மணி நேரத்திற் கொருதரம் அரை அவுன்ஸ் அளவு கொடுக்க விக்கல் நிற்கும்.

**பால் குடிக்கும் விதம்:**—பாலை அவசர அவசரமாயாவது, வாய் நிறம்பவாவது குடிக்கக் கூடாது. அப்படிக் குடித்தால் அது முழுமையும் இரைப்பையில் போய் தோய்ந்து சாமான்யத்தில் ஜீரணமாகிறதில்லை. பால்குடிக்க 3 நிமிஷம் செலவழித்து சிப்பி சாப்பிட்டால் இரைப்பையில் மெதுவாய்ச் சேர்ந்து ஜீரணமாகி உடம்புக்கு சௌக்கியத்தைத் தரும்.

---

**ஆயுள் ஓங்கும் வழி:**—அமெரிக்க போஸ்றன் பட்டணத்தில் டாக்டர் **பேர்** என்பவர் 1000 வருஷம் உயிரோடிருப்பதற்கு ஓர் புதிய முறைகள் கண்டேன் என்று வெளிப்படுத்தியிருக்கிறார். அதற்கு அத்தேசத்தவரில் 25000 பேர் இப்போது அந்த முறையை அனுட்டித்து வருகிறார்களாம். வெண் வஸ்திரந் தரித்துக்கொள்ளல், தாபரவுணவு புசித்தல், காற்றுள்ள விடத்திலுறங்கல், அதிக நேர முண்ணல், அன்றாடம் அரைமணி நேரம் தனிமையாயிருத்தல் முதலானவைகளே அவர் கூறும் முறைகள். வித்து வகைகள், மாமிசம், பால், எண்ணெய் என்பவைகள் உணவிற் சிறிதும் சேர்க்கப்படாதாம்.

---

**தண்ணீரும் மயக்க வஸ்துவாம்.**—ஒரு அமெரிக்கன் டாக்டர் தண்ணீரை அதிகமாய்க் குடித்தாலும், அதில் அதிகமாய்க் குளித்தாலும் மயக்க முண்டாகுமென்கிறார். "அநேகர் தண்ணீரை ஏராளமாய்க் குடித்துத் தீங்கு செய்து கொள்ளுகிறார்கள். இதனால், கள்ளைப்போல் மயக்கமும் ஆபத்தும் உண்டாக்கும். காபி, தே, சிகரட், குடிப்பதும் லாகிரியை உண்டாக்கும். கண்ணும் மற்றப் புலன்களும் இந்த வழக்கங்களால் கெட்டுப் போகும். பத்திரிகைகளில் விளம்பரமாகி விற்கும் பேடன்ட் மருந்துகளில் முக்காற் பங்கு கீழ்த்தரமான விஸ்கிலேயே யடங்கி யிருக்கிறது" என்கிறார்.

---

**பல்லி வற்றல்:**—சீனாவிலுள்ள பிக்கோ என்னும் இடத்தில் 87- ஆயிரம் 318 ஜோடி காயவைத்த பல்லிகள் ஏற்றுமதியா யிருக்கிறதாம். இவைகள் 'முக்கியமாய் நானிங்கம் என்னுமிடத்தில் சேகரிக்கப்பட்டனவாம். அவ்விடத்தில் மேற்படி பல்லிகள் பூமியின்கீழ் நான்கு அங்குலத்துக்கீழ் வாசம் பண்ணுகின்றன. அவைகள் வெளியில் புறப்



படுகிறது இராக்காலமானதால் அந்நேரத்தில்தான் பிடிக்கப்படுகின்றனவாம். காய்ந்த பல்லிகளைச் சூப்பு வைத்து இருமல் வியாதிக்கு மருந்தாக உபயோகிக்கிறார்களாம். இதுவும் ஓர் வித்தையே!!!

---

**காப்பிக் கொட்டையை உபயோகிப்ப தெப்படி:**—வயதிலும் அனுபவத்திலும் மிகச் சிறந்த ஓர் டாக்டர் ஒருவர் சுதேசிகள் காப்பிக் கொட்டையை உபயோகிப்பதைப் பற்றி அடியில் வருமாறு அபிப்பிராயம் தெரிவிக்கிறார். காப்பிக் கொட்டையைப் பொடி செய்து கஷாயமிறக்கி, அதில் பால் சேர்த்து உட்கொள்வதினால் அதை எவ்வளவு நன்றாய் வடிகட்டினாலும், காப்பிக் கொட்டையின் நுண்ணிய தூள்கள் அக்கஷாயத்துடன் கலந்து அடிவயிற்றில் தங்கிவிடும். இப்படிப் பலநாள் சேர்ந்து கொண்டே வருமாயின் அநேக விதமான ரோகங்கள் உற்பத்தியாகின்றன. ஆகையால் காப்பிக் கொட்டையை பொடியாக்காமல் உடைத்துக் கஷாயமிறக்கி பால் கலந்து பருகுவது பலவிதத்திலும் உத்தமம்.

---

**காப்பி, தேயிலை, கோகோ, ரணவா முதலிய பானங்கள்:**—நாகரீக மதிகரிக்க அதிகரிக்க மனிதர்கள் தண்ணீரில் மாத்திரம் திருப்தியடைகிறதில்லை. நம்மவர்களில் சிலர்களுக்குக் காலையில் காப்பித்தண்ணீரும், மாலையில் தேத்தண்ணீரும், அவசியமாக வேண்டியிருக்கிறது. இவ்வித கெட்ட அப்பியாசத்திற்கு நம்மைரோப்பிய நேயர்களே முக்கிய காரணம். காப்பி (Coffee) சாப்பிடுவதனால் ஒரு விதத்தெம்பு சரீரத்திற்குண்டாகிறது. தூக்கம், களைப்பு முதலியவைகளை நிவர்த்திக்கும். காப்பிக் கொட்டைக்குப் பதிலாய் சிலர் கொத்தமல்லி விரை, நன்னாரி வேர், ஆவாரம்பு முதலியவைகளை உபயோகிக்கிறார்கள். இது சரீரத்திற்கு ஆரோக்கியமாய் இருக்கும், வைத்திய போதினியைப் படிக்கும் நம் நேயர்களுக்கு காப்பிக் கொட்டையைவிட, கோதுமை, கேழ்வரகு முதலியவைகள் மிகவும் நலமென்று சிபார்சு செய்கிறோம். தேயிலை, கோக்கோ இவ்விரண்டும் தேகத்திற்கு புஷ்டியைத் தரும். ஆனால் இவைகளை அதிகமாய்க் குடித்தால் சரீரத்திற்கு மிகவும் கெடுதியை யுண்டு பண்ணும்.

**அமெரிக்கர்களும் ஆவின்பாலும்:**—பசுவைக் கறக்கும்போது மடியிலிருந்தும், வயற்றிலிருந்தும், அழுக்கொட்டுகிறது. இது பாலில் விழுந்தவுடன் கரைய ஆரம்பிக்கின்றது. அப்போது பாலுடன் கலந்து விடுகிறது. ஆகையால் பசுமாட்டைக் கறப்பதற்குமுன், மடி, வயிறு, தொடை முதலிய பாகங்களை வெதுவெதுப்பான வெந்நீரால் சோப்புடன் கழுவி அழுக்கை அமெரிக்கர் எடுப்பார்கள். பின்னும் அழுக்கு இல்லாமல் இருக்கவேண்டுமென்று பாத்திரங்களை மூடியால் அடைத்து ஒருபுறத்தில் புனலை அமைத்து அதனடியில் வலைக் கம்பியைத்தைத்து உபயோகிப்பார்கள். இவ்வலைமேல் முறட்டுத்துண்டுத் துணிப்போட்டு அதன்மேல் மற்றொரு சிறிய புனலைப் பெரியபுனலில் வைத்துக் கறக்க எல்லா அழுக்கும் துணியிலேயே நின்றுவிடும். இவ்வளவு ஜாக்கிறதை ஏன் எடுத்துக்கொள்ளுகிறார்களென்றால், பசுவின் பாலில் சேரும் அழுக்கினால் பலவித வயற்றுக்கடுப்பு, பேதி முதலியன குழந்தைகளுக்குக்கண்டு கேடு உண்டாகின்றன. பாலைப் பற்றிய எல்லா விபரமும் அறிய விரும்புவோர் நம்மால் இயற்றப்பட்டுள்ள "சுதேச வைத்திய ரத்தினம்" என்னும் புத்தகத்தில் பார்த்துக்கொளளவும்.

---

சென்னை இராஜதானியிலுள்ள சிவில் மெடிகல் அவிஸ்டெண்டுகள் என்னும் வைத்திய இலாகாச் சிப்பந்திகளை சீனியர் வகுப்பு அவிஸ்டெண்டுகள் என்றும், ஜூனியர் வகுப்பு அஸிஸ்டெண்டுகள் என்றும் பிரித்து, அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த இந்தியாக் கவர்ன்மெண்டாரின் அனுமதி கிடைத்து விட்டது. சீனியர் வகுப்பு முதல் அந்தஸ்தைச் சேர்ந்தவர்கள் மாதம் 80 ரூபாய் சம்பளம் பெருவார்கள். சீனியர் வகுப்பு இரண்டாவது அந்தஸ்தைச் சேர்ந்தவர்கள் மாதம் 70 ரூபாய் சம்பளம் பெருவார்கள். ஜூனியர்கள் வகுப்பிலே 15 வருஷ சர்விசுக்கு மேற்பட்டவர்களான முதல் கிரேட் சிப்பந்திகளுக்கு மாதம் 60 ரூபாய் சம்பளமும், 11முதல் 15 வருஷ சர்விஸுடையவர்களாயிருக்கிற இரண்டாவது கிரேட் சிப்பந்திகளுக்கு மாதம் 50 ரூபாயும், 6 முதல் 10 வருஷ சர்விஸுபாயுள்ளவர்களாயிருக்கிற மூன்றாவது கிரேட் சிப்பந்திகளுக்கு மாதம் 40 ரூபாயும், ஒருவருஷம் முதல் 5 வருஷ சர்விஸுள்ளவர்களாயிருக்கிற நான்காவது கிரேட் சிப்பந்திகளுக்கு, மாதம் 30 ரூபாயும் கொடுக்கப்படும். இந்த திருத்த ஏற்பாட்டால் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2,405 அதிகச்செலவாகுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த உயர்ந்த சம்பள விகிதங்கள் சென்னை ராஜதானியைச்சேர்ந்த சிவில் மெடிகல் அவிஸ்டெண்டுகளுக்கு நாளதுவருஷம் ஏப்ரல் மாதம் முதல் கொண்டே கொடுக்கப்பட்டு வருகிறது.



---

**வீசை வைத்துக் கொள்வதால் வரும் கெடுதிகள்:**—வைத்திய சாஸ்திரம், சுகாதாரம் முதலிய விஷயங்களைப் பற்றிப் பேசுவதில் பிரக்யாதிபெற்றுள்ள, "லான்ஸெட்" என்ற பத்திரிகையில் ஒரு வைத்திய நிபுணர் வீசை வைத்துக் கொள்வதால் தேக சௌக்கியத்திற்கு அபாயமுண்டாகிறதென்றும், ஒருவன் மற்ற விதங்களில் சுத்தமாக இருப்பினும், அலங்காரமெனக் கருதப்படும் இவ்வீசையையும் எடுத்து விட்டால் நிர்ப்பயமாக இருக்கலாம் என்றும் எழுதுகிறார். இவ்வாறு இவர் எழுதுவதில் அநேக லண்டன் டாக்டர்களும் கலக்கிறார்களென்று அறிவிக்கப்படுகிறது. முப்பது வருஷங்களுக்கு முன் வைத்தியர்கள் வீசைவைப்பதால் நாம் சுவாசிக்கும் காற்று வடிக்கட்டப்பட்டு உள்ளே செல்லுகின்றதென்றும், அதனால் வீசை இருப்பது நலமென்றும் அபிப்பிராயப்பட்டு வந்தனர். இப்போதோ நம்மைச் சுற்றிலுமுள்ள ஆகாயத்திலும், நமது சுவாசத்திலும் பலவகைச் சிறு புழுக்கள் (Tubercle Bucillur) இருப்பதாகவும், அவைகள் அநேக நோய்களுக்குக் காரண பூதமாக இருக்கின்றனவென்றும், நாம் உள்ளிழுக்கும் காற்றிலும் நாம் வெளியில்விடும் சுவாசத்திலும் உள்ள இவ்வணுக்கள் வீசையின் அடிப்பக்கங்களில் படிந்து, வேர்வை, எச்சல் முதலியவைகளின் ஈரத்தால் நாளடைவில் அழுக, நாம் திரும்ப சுவாசத்தை உள்ளே இழுக்குங்கால் தேகத்துட் கலந்து நம்மைப்பல நோய்களுக்காளாக்குகின்றனவென்றும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இவ்வீசையால் வரும் கெடுதல்களைப்பற்றி ஜர்மன் டாக்டர்கள் நன்றாய் அறிந்து தம்மிடம் சிகிச்சைக்கு வரும் பிணியாளிகளை வீசையைச் சிரைத்து விடும்படி புத்தி கூறி வருவதாகத் தெரிய வருகிறது. நம்மவர்களுள் வீசையை வளர்த்து வரும் கனவான்கள் இவ்விஷயத்தைக் கவனிப்பது உத்தமம். நம் நாட்டு வைத்தீக சிரேஷ்டர்களும் பண்டை நாள் தொட்டு வீசையைச்சிரைத்து வருவதும் இதுவே காரணம் போலும்!

## விசித்திர விஷயங்கள்.

மனிதனுடைய சுவாச கோளங்களில் சுமார் 18 கோடி துவாரங்களிருக்கின்றன. சரீரத்தின் தோலில் 70 லக்ஷம் துவாரங்க ளிருக்கின்றன.

புருஷனுடைய மூளை சுமார் ஒரு வீசை பளுவிருக்கும். ஸ்திரீயினுடையது புருஷனுடைய மூளையைக் காட்டிலும் 3,4 பலம் குறைவான பளுவாயிருக்கும்.

அமெரிக்கா தேசத்திலுள்ள நியுயார்க் பட்டணத்தில் 1880-ம் வருஷத்தில் டானிர் என்னும் ஒரு டாக்டர் 40 நாள் வரையில் வெறும் தண்ணீர் மட்டும் குடித்துச் சீவித்திருந்தாராம்!

எலிகளைப் பிடிக்க பாம்புகளை வளர்ப்பது:—இத்தேசங்களில் வீடுகளிலுள்ள எலிகளைப் பிடிக்க பூனைகளை வளர்ப்பது போல மொரோக்கோ தேசத்தில் பாம்புகளை வளர்த்து எலிகளைப் பிடிக்கப் பழக்குகிறார்களாம்.

சீன தேசத்தில் ஒருவன் தன் உணவுக்காக ஓர் தவளையை அறுக்கும் பொழுது அதன் வயற்றுள் 500 ரூபாய் மதிப்புள்ள ஒரு முத்து இருந்ததாம்! இஃது ஒரு கலிகாலப் புதுமையே.!

குதிரையானது ஆகாரமில்லாமல் தண்ணீரை மாத்திரம் குடித்து 25 நாள் ஜீவித்திருக்கும். தண்ணீர் கூட குடியாமல் 17 நாள் ஜீவித்திருக்கும். ஜலம் உண்ணாமலே ஆகாரத்தை மட்டும் தின்று 5 நாளுக்கு அதிகமாக ஜீவித்திராது.

மனுஷ்ய சரீரத்தில் 246 எலும்புகள் இருக்கின்றன. இந்த எலும்புகள் மாத்திரம் மாமிசமில்லாமல் 4, 5 வீசை பளுவிருக்கும். சரீரத்தில் 10 வீசை ரத்தமிருக்கிறது. ஆனால் இந்த அளவு தேக கூறுக்குத் தக்கபடி வித்தியாசப்படும்.



**தேங்காயிலிருந்து வெண்ணை:**—லண்டனுக்கு நம் நாட்டிலிருந்து கொப்பரைத் தேங்காய் விசேஷமாய்க் கப்பலேற்றப்படுகிறது. அங்கே ஒரு கம்பெனியார் இதிலிருந்து ஒரு வெண்ணை எடுக்கிறார்களாம். இது மாடு, ஆடு முதலிய வெண்ணைகளைக் காட்டிலும் சாப்பிடுவதற்கு நன்றாய் இருக்கின்றதாம்.

**முயல்:**—முயலினுடைய குடும்பத்தின் விருத்தி அதிக அற்புதமானது. முயல் ஆறுமாசமாகும் பருவத்தில் ஈன ஆரம்பிக்கும். ஈத்துக்கு நான்கு முதல் 12 வரைக்கும் குட்டிகள் போடுவதோடுகூட அது வருஷத்திற்கு ஏழு தடவை ஈனும். கிரமமாக ஜீவித்திருந்து சந்ததி சகிதமாய்க் கிரமப்படி ஈத்து ஈனும்பக்ஷத்தில், ஒரு ஜதை முயல் மூலமாய் 4 வருஷகாலத்தில் 12 லக்ஷம் முயல்கள் உண்டாகும்.

## விடு கதைவினா.

(1) மேனி முற்றுங்கண் மேயவன்; வாசவன்
தானுமல்லன்; தனைச்சுமப்பன் நரன்;
தானும் ஜீவனலன்; தனிற்சிக்கிய
வான ஜீவனைமாய்ப்ப நீதென்ன சொல்?

(2) நடவா எருமை நாற்சேர்ப் பாலைக்
கடிதே ஈயும் காலை மாலை;
பிடிமேய்ச்சலிலை; போரவலோடு
குடி கன்றுமிலை; குலவாயனுளன்.

## வேடிக்கைக் கதைகள்.

ஆஜான பாகுவான் அச்சுதராமய்யர் கொஞ்சம் அசௌக்கியமாகித் தன் பசி எங்கு போயிற்றோ வென்று விசாரப் படத் தொடங்கினார். அப்போது அருகிலிருந்த சிவராமய்யர்—எங்கே போனாலும் சரியே? ஆனால் ஏழை வீட்டிற்கு மட்டும் போகாமல் இருக்கவேண்டுமென்று பதில் சொன்னார்.

மூன்று புத்திமான்கள் ஒரு கிணற்றண்டை போய் நீரெடுத்துண்ண யாதொரு உபாயமும் காணாமல் இப்படிச் செய்தார்கள். ஒருவன் கிணற்றின்மேல் போட்டிருக்கும் குறுக்குச் சட்டத்தைத்தன் காலால் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு தலைகீழாகத் தொங்கினான். இவனுடைய கைகளில் தன் கால்களை மாட்டிக் கொண்டு மற்றொருவனும், இவனது கைகளில் தன் கால்களை மாட்டிக் கொண்டு மூன்றாமவனும் தொங்கினார்கள். இப்படிச் செய்தும் ஜலம் எட்ட வில்லை. ஆதலால் மூன்றாவதவன் "அடே என் வாய்க்கும் நீர்க்கும் இன்னும் இரண்டுபாகம் தூரமிருக்கிறது என்று சொன்னான். "அப்படியானால் கெட்டியாய்ப் பிடித்துக்கொள் நான்வருகிறேன்" என்று சொல்லி எல்லோருக்கும் மேலிருப்பவன் தன் கால்களை எடுத்து விட்டான். இந்த உபாயத்தினால் எல்லோருக்கும் ஜலம் கிட்டிய தென்பதற்குக் கொஞ்சமேனும் சந்தேகமில்லை.

சாகும் தருணத்திலிருந்த ஒரு வைதீக பிராமணனை பந்துக்கள் எல்லோரும் சேர்ந்து "சாஸ்திரிகளே! தாங்கள் பெரியவாள். இந்த வியாதி உங்களை வெகு நாளாக பாதித்துக் கொண்டிருக்கிறது. சுக துக்கங்கள் அனைத்தையும் அனுபவித்த தங்களுக்கு ஒன்றும் குறைவில்லை. தாங்கள் ஆபத்ஸந்நியாஸம் வாங்கிக் கொண்டால் நன்றாய் இருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம்" என்று சொல்ல, அந்த ரோகி—"ஆஹா! அதற் கென்ன வாங்கிக் கொள்ளுகிறேன். பத்திய மென்ன" என்று கேட்டார்.

☞ அடுத்த மாசத்திய சஞ்சிகையிலிருந்து சித்திரங்களுடன் வெளிப்படுத்தப்படும்—(ப-ர்.)

REGISTERED 28 NOV 1910 MADRAS.

உ

# வைத்திய போதினி.

சித்திரப் படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

புத். 1. 1910-ஆம் ஜூன்மீ 1௳. நெ. 2.

## பத்திராதிபர் குறிப்பு.

நமது பிரிய சந்தா நேயர்களே!

இந்தியாவில் பிரசுரமாகும் இத்தகைய பத்திரிகைகளைப்பார்த்தவர்களுக்கு இதின் சந்தாத்தொகையாகிய ரூபாய் ஒன்று கொச்சொற்பமென்பது கரதலாமலகம்போல் விளங்கும். பத்திரிகையை நடத்துவதின் கஷ்டமும், நஷ்டமும் யாவருமறிந்த. நமது "வைத்தியபோதினியின்" அபிவிர்த்தியெல்லாம் "சிறுதுளி பெருவெள்ளம்" என்பதுபோல் நமது நேயர்களுடைய முயற்சியிலும், உதவியிலும் அடங்கியிருக்கிறதேயன்றி ஒரு சொந்த அறபமுயற்சியால முடிகிறகாரியமல்ல வென்று நமது நேயர்கள அறியவேண்டியது. நமது பத்திரிகையை மற்றவர்களுக்குக்காண்பித்து புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து விடுவோர்க்கு பாரதமாதா அருள் புரிவாளாக!

நமது சந்தாநேயர்கள் ஒவ்வொருவரும் தத்தம் சக்திக்கியன்றவாறு, சந்தாதாரர்களைச்சேர்த்து விடுவார்களாயின் மேகம் பூமிக்குச்செய்யும் உதவிபோலாகும். நம்மால் இயற்றப்பட்டுள்ள "சுதேசவைத்திய ரத்தினம்" என்னும் புத்தகவிஷயமாக திருநெல்வேலி ஜில்லாவில் உழைத்துவரும் ரெவுனியுசெட்டில் மெண்டைச் சேர்ந்த மிஸ்டர் A. நாராயண ஐயங்கார் அவர்களுக்குமிக்கநன்றிசெலுத்தக்கடமைப்பட்டிருக்கிறோம்.

ஐயங்கார் அவர்கள் நமது புத்தக விஷயமாய் எடுத்துக்கொண்டிருக்கும் சிரமத்தைப்போலவே நமது பத்திரிகை விஷயத்திலும் சிரமமெடுத்து முன்னுக்குக்கொண்டுவருவார்களென்பது எமது துணிபு.

தென் ஆப்பிரிகா ஜோகன்ஸ்பர்க்கிலிருக்கும் நமது பத்திரிகா நேயராகிய மிஸ்டர். C. ராமசாமி படையாச்சி அவர்கள் தம்முடைய மித்திரர்களுக்கும் இப்பத்திரிகையை காண்பித்து ஆர்டர் அனுப்பும்படி செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

---

## சிரசு அல்லது கபாலம்.

### ஆங்கிலத்தில் (Skull—ஸ்கல்).

(மே மாதத்திய சஞ்சிகையின் 4-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

சிரசு அல்லது கபாலம், முகம் என இரண்டு பிரிவுகள் உள்ளது. இவற்றில் கபாலத்தில் எட்டு எலும்புகளும் முகத்திற் பதினான்கு எலும்புகளும் இருககின்றது. கபால எலும்புகளாவன:— (1) Occipital Bone, ஆக்ஸிபிடல் போன் இதுவே பிடரி எலும்பு; (2) Parietal Bone, பெரைடல் போன் இதுவே பித்திகை எலும்பு; (3) Frontal Bone, பிரன்டல் போன் இதுவே நெற்றி எலுமபு; (4) Temporal Bone, டெம்பிரல் போன் இதுவே காதெலும்பு; (5) Spehenoid Bone, ஸ்பினாயிட் போன் இதுவே வவ்வாலெலும்பு; (6) Ethmoid Bone, எத்மாயிட் போன் இந்த எலும்பு செல்லரித்ததுபோல நேத்திரக்குழிகளிரண்டுக்கும் மத்தியஸ்தானத்தில், மூச்சின் மேற்புறத்தில் அமைந்திருக்கிறது. (7 & 8) Turbinated Bones, டர்பிநேடெட் போன்ஸ், என்னும் எலும்புகள் இரண்டு ஆக மொத்தம் காபால எலும்புகள் எட்டு.

முகத்தெலும்புகளாவன:— (1 & 2) Nasal Bones, நேஸல் போன்ஸ் இதுவே மூக்கெலும்புகள் இதில் 2 எலும்புகளும்; (3 & 4) Superior Maxillary Bones, சுபீரியர் மாக்ஸிலெரி போன்ஸ் இதுவே மேல்தாடை எலும்புகள் இதில் 2 எலும்புகளும்; (5 & 6) Lachrymal Bones, லாச்சிரமல் போன்ஸ் இவ்விரண்டெலும்புகளும் கண் குழிக்கு அகத்தில் முன்பாக இருக்கின்றன; (7 & 8) Malar Bones, மெலார் போன்ஸ் இதுவே கன்னத்தெலும்புகள் இதில் 2 எலும்புகளும்; (9 & 10) Palate Bones, பாலெட் போன்ஸ் இதுவே அண்ணத்தெலும்புகள் இதில் இரண்டு எலும்புகளும், (11 & 12) இன்பிரியர்டர்பினேடெட் போன்ஸ், இதுவும் இரண்டு எலும்புகளாகவே இருக்கின்றன; (13) Vomer, ஓமர் இதுவே நாசியின் மத்தியில் சன்னமாய், தட்டையாய் சதுரமாய் நாஸித்துவாரங்கள் இரண்டிற்கும் மத்தியில் இருக்கும் ஓர் எலும்பு; (14) Lower Jaw Bone, லோயர் ஜா போன் இதுவே கீழ்தாடை எலும்பு ஆக மொத்தம் முக எலும்புகள் பதினான்கு.



## பற்கள்.

### ஆங்கிலத்தில் (Teeths—டீத்ஸ்.)

இவற்றைத்தவிர முப்பத்திரண்டு பற்களிருக்கின்றன, முதல்முதல் முளைக்கிற பற்களுக்கு பால் பற்கள் என்றும் ஆங்கிலத்தில் Milk teeth, மில்க் டீத் என்றும், அவைகள் விழுந்து இரண்டாந்தரம் முளைக்கிறவைகளுக்கு ஸ்திரபற்கள் Permanent teeth; பெர்மெனென்ட் டீத் என்றும் சொல்லப்படும். குழந்தைகளுக்கு 20 பற்களுண்டு அவைகளாவன:— முன் பற்கள் 8, கோரைப்பற்கள் 4, கடைவாய்ப்பற்கள் 8 ஆக இருபதாம். ஸ்திரப்பற்கள் 32 அவைகளாவன:—முன் பற்கள் 8, கோரைப்பற்கள் 4, கடவாய்ச்சிறியபற்கள் 8, கடவாய்ப்பெரியபற்கள் 12 ஆக முப்பத்திரண்டாம். பல்லில முக்கியமாய் இரண்டுவித பதார்த்தங்களுண்டு. பற்சிகரத்தை மேலாகச்சுற்றிக்கொண்டு வெள்ளையாயும் உறுதியாயுமிருக்கிற பதார்த்தத்துக்கு ஆங்கிலத்தில் (Enamel— இனமெல) என்று சொல்லப்படும். பல்லின் சிகரத்துக்குள் ஓர் பள்ளமுண்டு, அதில் சவ்வு (Pulp—பல்ப்) பாவியிருக்கும். அந்தச்சவ்வானது வேரின் துவாரத்திலிறங்கி வேரின் வெளிப்புறமாய் இருக்கிற சவ்வுடன் கலந்துவிடும்.

குழந்தைகளுக்குப்பல் முளைக்கிற காலக்கிரமமாவது.— 7-ம் மாதம், மத்திய முன்பற்கள் 2 முளைக்கும். 2 Middle incisors. 9-ம் மாதம், பக்கத்து முன் பற்கள் 2 முளைக்கும் 2 Lateral incisors. 12-ம் மாதம், கடைவாய்ச்சிறியமுன் பற்கள் முளைக்கும், First Molars. 18-ம் மாதம், கோரைப் பற்கள் முளைக்கும், Canine—24-ம் மாதம் கடைவாய்ச்சிறிய பின் பற்கள் முளைக்கும், 2-last Molars. ஆனால் மேற்சொன்ன காலக்கிறமப்படி குழந்தைகளுக்குப்பற்கள் ஒரே விதானமாய் முளைக்கிறதில்லை; சிலருக்குச்சீக்கிரத்திலும், சிலருக்குத்தாமசப்பட்டும் முளைக்கும். ஸ்திரப்பற்கள் முளைக்கும் காலக்கிரமமாவன:— 6½ வயதில், கடைவாய்ப்பெரிய முதற் பற்கள் முளைக்கும் இதை (First Molars, பஸ்ட் மொலேர்ஸ்)

என்று சொல்லப்படும். 7-ம் வயதில், மத்திய முன்பற்கள் 2 முளைக்கும். இதை (Middle incisors, மிடில் இன்ஸைஸர்ஸ்) என்று சொல்லப்படும், 8-ம் வயதில், பக்கத்து முன்பற்கள் 2 முளைக்கும் இதை (2 Lateral incisors) என்று சொல்லப்படும். 9-ம் வயதில் கடைவாய்ச்சிறிய முதற்பற்கள் முளைக்கும், இதை (First Bicuspids, பஸ்ட் பைகஸ்பிடஸ்) என்று சொல்லப்படும். 10-ம் வயதில், கடைவாய்ச்சிறிய இரண்டாவது பற்கள் முளைக்கும். இதை (Second Bicuspides, ஸெகன்ட் பைகஸ்பிடஸ்) என்று சொல்லப்படும். 11 முதல் 12-ம் வயதில் கோரைப்பற்கள் முளைக்கும். இதை (Canine, கெனைன்) என்று சொல்லப்படும். 12 முதல் 13-ம் வயதில் கடைவாயில் பெரிய இரண்டாவது பற்கள் முளைக்கும் இதை (Second Molars, ஸெகன்ட் மொலேர்ஸ்) என்று சொல்லப்படும். 17முதல் 21-ம் வயதில், கடைவாயில் கடைப்பற்கள் அதாவது ஞானப்பற்கள் (Last Molars, லாஸ்ட் மொலேர்ஸ்) அல்லது (Wisdom Teeth, விஜ்டம் டீத்) என்னும் பற்கள் முளைக்கும்.

## நாக்கெலும்பு.

### ஆங்கிலத்தில் (**Hyoid Bone**—ஹையாட்போன்.)

சிவந்த சிறிய மாமிசத்துண்டாகிய நாக்கு, நாம்பேசுவதற்கும், ருசியை அறிவதற்கும், புசிப்பதற்கும் உபயோகப்படுகிறது. நாக்கில் நரம்புகள் கணக்கிடமுடியாதவிதமாய் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும் அது எவ்வளவு விரைவாய் புரண்டு கொடுக்கிறது. நாக்கினடியில் ஓரெலும்புண்டு. அதற்கு நாக்கெலும்பென்று பேர், அதன் மத்தியில் தட்டையாய் இருக்கிறபாகத்திற்கு உடல் என்றும், பிதுக்கங்களுக்கு கொம்புகள் என்றும் பேர். நாக்கெலும்புக்கும் குரல்வளைக்கும் மத்தியில் ஓர் சவ்வுண்டு அதற்கு (Thyro-hyoidean membrane, தைரோ ஹையாய்டியன் மெம்பிரேன்) என்று பேர் நாக்கின் கீழ்பாகத்தில் சிறிய முனைகள் போன்ற சில பாகங்கள் இருக்கிறது. அவைகளிலிருந்து நரம்புகள் மூளைக்கு ஓடி ஷட்ரசங்களைப்பகுத்தறியும்படியான உணர்வை உண்டாக்குகின்றன. ஆகாரத்தைப்பரிக்ஷித்துப்பார்ப்பதற்குக்கண், மூக்கு. வாய் என்னும் மூன்று விசாரணைக்காரர் இருக்கிறார்கள். அவைகளில் கண்ணானது பொருளின்மேல் பார்வையையும், மூக்கானது போஜனபதார்த்தங்களின் பரிமளத்தையும், வாயானது பதார்த்தங்களின் உருசி பாகத்தையும் அறிந்துவரும். நாம் ஆகாரத்தை மெல்லும்போது அந்தந்தப்பற்களுக்குத்தகுந்த பதார்த்தங்களை நாக்கானது அததின் கீழ் தள்ளிக்கொடுத்து உதவிசெய்து, மிறுது பதார்த்தங்களை அன்னத்தின்மேல் வைத்து நசுக்கி வாயிலூறுகின்ற உமிழ் நீரோடு (Saliva) செவ்வையாய்க்கலக்கும்படி செய்கின்றது. புசிப்புக்கு நாக்கின் உதவி இல்லாவிடின் நாம் பசியடங்க புசிப்பதற்குமுன்னமேல் தாடைகள் மிகவும் நோவெடுக்கும். போஜனங்களை விழுங்குவதும் அசாத்தியமாய்விடும். மென்றபிறகு வாயிலுள்ள உணவையெல்லாம் நாக்குத்தான் ஒன்றாய்ச்சேர்த்துத்தொண்டைக்குள் தள்ளுகின்றது. நாக்குக்கு ருசியறியும் உணர்ச்சி இருக்கின்றமையால் வயிற்றுக்காகாததும், விஷத்தன்மையுள்ளனவும், புராதனமுமான உணவுகளை உண்ணவொட்டாமல் தடுக்கின்றது. ஆரோக்கியமான உணவு இன்னதென்று நாம் கண்டறிந்து புசிக்கும்படிக்கும், வாசனை அறியும் சக்தியையொத்த ருசி அறியும் சக்தியும் நமக்குக்கொடுக்கப்பட்டிருக்கின்றது. நாக்குக்கு மற்றொரு சக்தி உண்டு. அதாவது பேசும் தன்மையேயாம், சைகைகளினாலும், முகக்குறிப்புகளினாலும் நாம் நம்முடைய எண்ணங்களை மற்றவர்களுக்கு ஏறத்தாழ அறிவிக்கக்கூடும். நாய்தான் சந்தோஷமாயிருப்பதைக் காட்டுவதற்கு வாலை



ஆட்டும். பிராணிகள் சப்தம் போட்டுக்கத்தும். பக்ஷிகள் பாடும், ஆனால் மனிதன் ஒருவனே வாய் விட்டுப்பேசும் வரத்தைப் பெற்றவன். நாம் பேசும் தொனியானது கண்டத்தில் பிறக்கின்றது. கண்டத்தில் தொனியுண்டாகிற விதமாவது, சுவாசப்பையிலிருக்கிற வாயுவானது ஊர்த்த முகமாய் வெளிப்படுகிறபோது, தொனித்தந்திகள் அதிர்ந்து, தொனி பிறக்கின்றது. அந்தத்தொனியாகிய வாயு, வாய்க்குள்வந்து, நாக்கு, பற்கள், உதடுகள், நாசி இவைகளுடைய சகாயத்தால், விகர்ப்பப்பட்டு எழுத்து, அசை, சொல் முதலியவைகளை உண்டாக்குகின்றது. குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் கண்டம் சிறுத்திருப்பதால் அவர்களுடைய தொனி அதிகரித்திருக்கும், சங்கீதத்திலும் ஸ்திரீ கண்டத்தை விசேஷமாய்ச் சொல்வதும் இதன் கருத்தேயன்றி வேறல்ல. ஆதலால் இவ்வளவு உபயோகமுள்ள இவ்வருமையான நாக்குக்கு நேரிடும் ஊமை, திக்குவாய், குளறிப்பேசுதல், இன்னும் கை கால் அசைவற்றுப்போகிற

ஓர் ஜாதி வாதரோகம் (Paralysis, பொராலிஸிஸ்) பாரிசவாதம் அதாவது அர்த்தாங்கவாதம் (Hemiplegia, ஹெமிப்ளீஜியா) அர்த்திதவாத ரோகம் அதாவது அர்த்தமுகவாதம (Paralysis of the face) முதலிய நோய்களில் நாக்கின் நரம்புகள் உள்ளுக்கு இழுத்துக்கொள்ளுவதினால நாக்குக்கு சப்திக்கும் சக்தியற்றுப்போகிறது.

(தொடரும்).

---

## காந்தப்பார்வை.

(மேமாத சஞ்சிகையின் 9-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவ்வித அப்பியாசம் செய்து வருகையில் எவரையும் நேரில் நோக்கி அவர்கள் கண்களுக்குள் பார்த்துப் பேசுவாயானால் அவர்களுடைய அல்லது உன்னுடைய அந்தரங்க ஆத்மாவில் ஓர் வித அசைவு தோன்றும். பாயும் சக்தி உன்னிலும், தாங்கும் சக்தி அவர்களிலும் அதிகரித்திருக்குமானால் அவர்கள் மனதில் ஓர் வித அசைவு தோன்ற, உன் பார்வையைத் தாங்கமுடியாதவர்களாய் தமது பார்வையை அப்புறப்படுத்திக் கீழாக அல்லது பக்கத்தில் வேறே வஸ்துவைப் பார்ப்பார்கள். அவர்களிடத்தில் பாயும் சக்தி அதிகமாயிருக்குமாயின் உன்னால் தாங்கமுடியாது. இந்த அற்புத சக்தியின் வல்லமையை அடிக்கடி பரிக்ஷித்துப்பார். இதன்பின், காந்ததிருஷ்டியின் தன்மையை அதிகரிக்கச் செய்ய ஏதாவது ஒரு விஷயத்தை மனதில் தீர்மானித்துக்கொண்டு பார்க்கப்பழகு, நீ எந்த விஷயத்தை உன் கண்கள் மூலமாக வெளியாக்க எண்ணுகிறாயோ, அதைப்பற்றி சிறிது நேரம் தியானித்து அந்த எண்ணத்திற்குத்தகுந்த குறி உன் முகத்தில் தோன்றுமட்டும் உன் கண்கள் அமைதியாய்ப்பார்த்துக் கொண்டிருக்கட்டும். அவ்விதம் செய்யின் சிறிதுநேரத்திற்குள் உன் எண்ணத்தை உன் கண்களே வெளிப்படுத்தும். இவ்விதம் பழகி வருவாயாயின், சீக்கிரத்தில் அன்பு, அனுதாபம், வல்லமை, தைரியம் முதலிய சகல சற்குணங்களையும் உன் பார்வையின் மூலமாகவே வெளியாக்கி மற்றவர்களை சீர்திருத்தவும், உன்னிஷ்டத்திற்கிணங்கி நடக்கச் செய்யவும் தக்க சக்தியைப்பெறுவாய்.

கடைசியாக நீ எவரிடம் பேசினாலும் அவர்கள் கண்களுக்குள் நேராய் நிமிர்ந்து பார்த்துப்பேசப்பழகு. எப்பொழுதும் உன் எண்ணங்களையெல்லாம் உன் கண்கள் மூலமாகவே யோசி, உன் அந்தரங்க ஆலோசனைகளெல்லாம் வெளியே செல்லும் வழி உன் கண்களே என்று நினை. இப்படி செய்து வருவாயாயின், உன் திருஷ்டியின் மகிமையை அளவிட எவராலும் முடியாது. நீ எவர்களை நோக்கிப்பார்த்தாலும் உன் பார்வையானது, இருபுறமும் கருக்குள்ள பட்டயம் போல அவர்கள் இருதயத்தை ஊடுருவச்செல்ல, அவர்கள் பெலன் குன்றி உனக்குள் அடங்குவார்கள் கண்களே ஆத்மாவின் வாசல் என்பதை மனதில் வைத்து மற்றவர்களின் இருதயத்திலுள்ள விஷயங்களையும் அவர்கள் கண்கள் மூலமாயறிந்து கொள்வாயாக. (ரஞ்சிதபோதனி.)



---

## ஐம்புலன்கள், பஞ்சேந்திரியங்கள், அல்லது ஞானேந்திரியங்கள்.

(மேமாத சஞ்சிகையின் 10 வது பக்கத்தொடர்ச்சி)

உருவம், அல்லது ரூபம் பார்வை தெரிதல், நாம் பார்க்கிறவஸ்துக்களின் பிரமையானது, கண்ணின் சுக்கிலமண்டலத்தை (Cornea, கார்னிய) உருவி கிருஷ்ண மண்டலத்துவாரம் வழியாய் (Pupil, பியுபில்) பிரவேசித்து கண்மணியையும் (Lens, லென்ஸ்) உருவி ரூப உற்பத்தி சவ்வுமேல் விழும் ஆங்கிலத்தில் (The Sense of Sight, தி ஸென்ஸ் ஆவ் ஸைட்) அந்த உணர்ச்சியானது பார்வைநரம்புவழியாய் மூளைக்குப்போக மனது தெரிந்துகொள்ளுகிறது. கிருஷ்ண மண்டலத்தில் ஜோதிக்கத்தக்கபடி சலனமுண்டாகும். அதிக வெளிச்சத்தில் துவாரம் சுருங்கும், குறைந்திருந்தால்விரியும் இத்தன்மையால் பார்வைக்குத்தேவையான வெளிச்சம் விழிக்குள் பிரவேசிக்கும். அதிகமாகிய வெளிச்சக்கிரணங்களை கறுத்தபசையானது கிரகித்துக்கொள்ளும். வெள்ளைக்குஷ்டரோகிக்கு (Albinoes, ஆல்பினோஸ்) கண்களில் இந்தக் கறுத்த மைப்பசை குறைந்திருப்பதால் அவர்கள் வெளிச்சத்தை செவ்வையாய்ப் பார்க்கமாட்டார்கள். பார்வைசிதறும், கண் கூசும், பூனை முதலிய ஜெந்துக்களுக்கு, பகலைப்பார்க்கிலும் இரவில் செவ்வையாய்க் கண் தெரியும். ஏனெனில் இவைகளின் விழிகளிலிருக்கிற கருத்தமைப்பசையானது கொஞ்சம்வெளுத்திருப்பதால் பகல் வெளிச்சம் கண்களைக்கூச்சும். தளர்ந்த வயதில் வெள்ளெழுத்து உண்டாவதற்குக்காரணம் என்னவெனில் விழிக்குள்ளிருக்கிற நீர்கள் குறைந்து போவதால் ரூப உற்பத்திச்

சவ்வின்மேல் உறுத்தவேண்டிய விம்பமானது சவ்வைத்தாண்டிப்பின்னுக்குப்போகும். ஆகையால் எழுத்துக்களைத்தூர வைத்துப்பார்த்தால் தெரியும். இதற்கு தூரப்பார்வையென்று பேர், கண்ணின் முன்புறம் அதிகமாய் முன்னுக்குவளைந்திருந்தால், விம்பமானது மேற்சொன்ன சவ்வுவரையில் அதற்கு முன்னாகவே நின்றுவிடும். ஆகையால் எழுத்துக்களைக்கிட்டவைத்துப்பார்க்கவேண்டியதாகும். இதற்கு குறுகிய பார்வையென்று பேர். கண்ணுக்குக்காண்கிற இவ்வித விகற்பங்கள், மூக்குக்கண்ணாடியால் நீக்கப்படும். தூரப்பார்வைக்கு, இருபுறமும் மேடாயிருக்கிற கண்ணாடியையும் (Double convex glass, டபில்கான்வெக்ஸ் கிளாஸ்) குறுகிய பார்வைக்கு இருபுறமும் பள்ளமாயிருக்கிற கண்ணாடியையும் (Double Concave Glass, டபில் கான்கேவ் கிளாஸ்) உபயோகித்துக்கொள்ளவேண்டியது. சத்தம் அல்லது ஓசையாவது மன ஆறுதலுக்கும், சந்தோஷத்துக்கும் அறிவுத்தோற்றத்துக்கும் உதவியாயிருப்பதாம். ஆங்கிலத்தில் (The sense of hearing, தி ஸென்ஸ் ஆப் ஹியரிங்) அவ்வோசைகளைக்கேட்கும் கருவி காது உருப்பாயிருக்கின்றது. அது வெளிக்காது, நடுக்காது, உட்காது என மூன்று வகுப்பாயிருக்கின்றது. இவற்றில் வெளிக்காது தலைக்குப்புறம்பே சில புருவங்களையுடையதாய் சற்று வளைவு உளளதாய் துவாரமுள்ளதாய், தோலினால் மூடப்பட்டதாயிருக்கிறது. அத்துவாரத்துக்குள்ளே இருக்கும் குரும்பியும் மயிர்களும் பூச்சி, புழு அதற்குட்செல்லாமற்றடுக்கும். காதின் வெளித்துவாரத்தின் உள்ளூறுதியில், வெளிக்காதுக்கும் இடையில் அரைதிட்டமளவுக்கு உருவெளியான ஒரு சவ்வு இருக்கிறது. மகா நுண்ணிய நாலு எலும்புகள் ஒரே கோவையாய் நடுக்காதில் கிடக்கின்றன. அக்கோவையின் ஒரு தலைப்பு தம்பட்டத்திலும், மற்றொரு தலைப்பு வெளிக்காதிலும் தொடுத்திருக்கின்றன. உட்காது எலும்பினாலாகிய மூன்று அறைகளுள்ளதாயும், சிக்கும் முக்கும் சுத்தும் சுழற்றலுமுள்ள குடைவாயுமிருக்கிறது. ஷை காதின் பகுதி மூன்றில் கேள்விக்கு வேண்டியது உட்காது பகுதிமட்டுந்தான். கேள்வி யுண்டாகிறவிதமெப்படியெனில்—அசைவுண்டவாய்வுக்கு சப்தம் என்று பேர், அந்தச்சப்தமானது காதுக்குள் சென்று, காது உட்சவ்வின்மேல்பட அது அசையும், அந்த அதிர்ச்சியானது எலும்புக்கோவையின் மார்க்கமாகச் சென்று, உட்காதின் ஜலத்தின்மேல் மிதந்துகொண்டிருக்கிற கேழ்வி நரம்புகளின் இழைகளுக்குக்குறுத்தும். கேள்வி நரம்பானது மூளையிலிருந்து கிளம்பி, உட்காதுக்கு



உள்ளூறையாயிருக்கும் சவ்வுக்குள்ளிருக்கும் நீரிலே மிதந்துகொண்டிருக்கும். இந்தச்சவ்வே காதுத்தம்பட்டமாம். மேற்சொன்னபடி வந்த ஒலியின் அதிர்ச்சி கேள்வி நரம்பின் கூந்தலிலேபட்டு அந்த நரம்பின் வழியாய் மூளைக்குச்செல்ல மனது தெரிந்துகொள்ளுகிறது. பழக்கத்தினாலே பொருள்களிலிருந்து உண்டாகும் சத்தங்களை இன்ன இன்னதென்றும், அது இவ்வளவு தூரத்திலிருந்து வருகிறதென்றும் நிதானிக்கலாம். காதின் சவ்வு தடித்தல், வெடித்தல், காது நரம்புத் தடைபடுதல், அது சூம்புதல், மூளை வியாதிப்படுதல் முதலிய காரணங்களால் காது மந்தம், செவுட்டுமை, பிரவிச்செவுடு ஆகின்றன. காதில் குரும்பி அதிகமாயிருந்தாலும், பூச்சி, புழு சென்றிருந்தாலும், நல்லெண்ணையைச்சற்று வெதுப்பி காதில்விட்டு, பருத்திப்பஞ்சினாலடைத்து வைத்திருந்து அப்பால் சோப்புத் தண்ணீரால் சுத்தப்படுத்த காது சுத்தமாகும்.

---

## வைத்திய குறிப்புகள்.

**அதிக போஜனம்.**—அதிக போஜனமும், புத்திக்கு வேலையின்மையும் மனிதன் ஆயுளை கம்மிசெய்யுமெனவும், இவ்விதம் அதிக போஜனம் செய்பவர்கள் யோஜனை செய்யவேண்டிய பிரமியங்களில்லாதிருந்தாலும், 60-வயதிற்கதிகமாக ஜீவிப்பது அரிதெனவும், தர்க்கம், சயன்ஸ், சட்டம் இதுகளில் உழைப்பவர்கள் வெகு காலம் இருப்பார்களெனவும் "லான்ஸெட்" என்னும் மெடிகல் சஞ்சிகை கூறுகின்றது.

**பால் சாப்பிடுவது.**—கறக்கும்போது பால் சூடாறுதமுன் சாப்பிடச் சீக்கிரம் ஜீரணமாகிறது. சுண்டக் காய்ச்சின பாலைச் சாப்பிட 100-க்கு 8-பாகம் ஜீரணமாகாமற் போகிறது. பால் திரவமாயிருப்பதால் அதில் உள்ள சத்து முழுவதும் ஜீரணமாகும் ஸ்திதியில் இருக்கவேண்டும். அதிகமாய் ஒரே தரமாய் பாலைச் சாப்பிடுவதற்குப் பதில் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சாப்பிட ஜீரணம் அதிகமாகிறதென்று தெரிகிறது.

**அஷ்டநாக முதலாயுள்ள சகலவிஷத்துக்கும் மூலிகைப்பிரயோகம்.**—குப்பைமேனி, அவுரி, ஆவாரை, கொல்லங்கோவை, கீழ்காய்நெல்லி இவ்வைந்து வகை இலைகளையும் இடித்துச் சாறுபிழிந்து உள்ளுக்கும்கொடுத்து உடம்பிலும் துவாலைபோடத்தீரும்.

வேறு.

பேய்ச்சுரை, பேய்ப்புடல், பேய் பீர்க்கு, பேய்க்குமட்டி, சிறுபேய்க்குமட்டி இவைசமூலம் நிழலிலுலர்த்திச் சூரணம்செய்து ஒருவிராகனிடை வெந்நீரிற்கொடுக்க சகல விஷமும்தீரும்.

வேறு.

தைவேளையிலை, வேலிப்பருத்தியிலை, வெற்றிலை, கரியுப்பு, சுக்கு, மிளகு, வசம்பு, வெள்ளுள்ளி இவைகளை ஓர் நிறையாக சிறு நீர் விட்டுத்தட்டி நாசியில் நசியமிட அடங்கின உயிர் திரும்பும்.

---

## வியாதிகட்கு மூலிகைப்பிரயோகம்.

வெப்பாலைச்சமூலத்தை இடித்து சூரணம் செய்துவேளையொன்றுக்கு விராகனிடை வீதம் பசும்பாலிற்கொள்ள, குஷ்டம, சில்விஷம் கரப்பன், வண்டுகடி முதலிய வியாதிகள் தீரும்.

அருகஞ்சமூலத்தை சூரணம் செய்து பசும்பாலிற்கொள்ள சகல விஷமும்தீரும். தேகபலமுண்டாகும். நரைதிரை மாறும், நரம்புகள் இறுகும், மூலச்சூடு, வெட்டை, நீர்க்கடுப்பு நீங்கும்.

அமுக்குறாக் கிழங்கைப் பாலிற்கொள்ள விந்துகட்டும், மேனி காந்தியாக்கும். தேகத்திலுள்ள துர்நீர், கபம், சூலை, கரப்பன், பாண்டு, வெப்பு, வெட்டை, வீக்கம், கட்டி, பித்தக்கிறுகிறுப்பு முதலின நீங்கும்.

---

## பிளேக்கும் மண்ணெண்ணெயும்.

பிளேக் என்னும் கொள்ளை நோய்க்கு மண்ணெண்ணெ மிகவும் சரியான மருந்து என்று அநேக டாக்டர்கள் ஒன்றுபோல அபிப்பிராயம் கொடுக்கிறார்கள். காப்டன் சிளேக்ஸிஸ்டன் என்னும் ஒரு டாக்டர் மண்ணெண்ணெயினால் பிளேக் வியாதியைத்தடுக்க முடியுமென்றும், இதை முனிசிபல் அதிகாரிகளும், ஆஸ்பத்திரிகாரர்களும் கவனிக்கவேண்டுமென்றும் சொல்கின்றார். இது எங்கும் இலகுவாய் கிடைக்கக்கூடிய வஸ்துவாகையால் எளிய ஜனங்களும் இதை உபயோகிக்கலாமென்று கூறுகின்றார். வெகுநாளைக்குமுன் ஐரோப்பாகண்டமுழுதும் கொடிய பிளேக்நோய் வந்து ஜனங்களை வாரிக்கொண்டுபோனபொழுது நூற்றுக்கு 50பேர்வரை இறந்துபோனார்களாம். ஆனால் ஐரோப்பிய ருஷியாவில் மண்ணெண்ணெ விளையும் இடமாகிய பாக்கு என்னும் நாட்டில்மட்டும் பிளேக் வரவில்லையாம். பர்மாவில் சிலகாலத்திற்குமுன் பிளேக் பரவியபொழுதும் பர்மா மண்ணெண்ணெ விளையும் இடமாகிய எனயங் என்னுமிடத்தில் பிளேக் வரவில்லையென்றும் நம்பப்படுகின்றது. வீடுகளில் துர்நாற்றமும், அசுத்தமும் உள்ளபாகங்களில் மண்ணெண்ணெயைக்கொட்டி, அதன் வாசனைபரவும்படி விட்டுவிட்டாலே பிளேக் பூச்சிகள் இறந்துவிடுமாம்.



REGISTERED 28 NOV 1910 MADRAS

---

தடலளவு.—மானிடர்கள் ஒவ்வொருவரும் அவரவர் கரத்தால் எண்சாணுயரமுடையாரென்பது பலரறிந்த உண்மை. அவ்வாறே உடலின் பருமனும் அவரவர் காத்தால் நாற்சாணேயாம். உடல் உயரத்தால் வந்த உயர்ச்சாண் எட்டை, அதன் பருமச்சாண் நான்கினால் பெருக்கினால் வருவது 32 ஆகவே 32-முழ நீட்டுடையதே குடலளவாம். ஆதலால் முப்பத்திரண்டு பிடி ஆகாரமே ஒருவன் உட்கொள்ளத்தக்கதென்றும், இதில் அதிகமாகாமலும் குறையாமலும் ஒருவன் போஜனம் செய்தவரின் அவனைப்பிணி அணுகாதென்று ஓர் ஐரோப்பிய டாக்டர் அபிப்பிராயப்படுகிறார்.

---

**சிரிப்பைப்பற்றி லண்டன் பத்திரிகையின் அபிப்பிராயம்.**—லண்டனில் பிரசுரிக்கப்பட்டுவரும் பத்திரிகையொன்று மனுஷர்கள் பெலனாகச் சிரிப்பது நன்மையை விளைவிக்குமென்றுணர்ந்தால் சிரிப்பையே அதிகமாக பாராட்டுவார்கள் என்று சொல்லுகின்றது. இதுவே சில வைத்தியர்களுடைய கருத்தாகவுமிருக்கிறது. ஒரு மனிதன் பெலனாகச் சிரிப்பதனால் பசியுண்டாகும். புசிக்கின்ற ஆகாரம் ஜீரணமாகி நல்ல ரத்தம் உண்டாகும். இருதயமும், நுரையீரலும் பலப்படுவதற்கு சிரிப்பே அவசியம் வேண்டுமென்கிற கருத்தினால் அவ்விதம் அப்பியாசம் கொள்ளப்படுகிறது. நன்றாய் ஆராய்ந்து பார்க்குமிடத்தில் சிரிப்பானது அன்னாசயம் முதலியவற்றை அதிரச்செய்து பசியுண்டாக்குகிறதல்லவா! இது யாவருக்கும் தெரிந்த விஷயந்தானே.

---

**கீரை சாப்பிடுதல்.**—சில கீரைகள் சாப்பிடுவதால் மதுரமுடையனவாயிருப்பதுமன்றி, சில வியாதிகளையும் சொஸ்தப்படுத்தக் காரணமாயிருக்கிறது. கீரைகளை அதிகமாகச் சாப்பிடுவதால் வயிற்றில் கிருமிகள் அதிகமாய் உண்டாகும். ஆகையால் கீரை சமைப்பதில் உப்பு கொஞ்சம் அதிகமாய்ச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

---

## வர்த்தமானங்கள்.

சென்னை மாகாண சிவில் ஹாஸ்பிடல் அஸிஸ்டண்டுகள்.—இப்போது சிவில் மெடிகல் அஸிஸ்டண்டுகள் என்று பேர் கொடுக்கப்பட்டிருக்கிற சிவில் ஹாஸ்பிடல் அஸிஸ்டண்டுகள் இனிமேல் சப் அஸிஸ்டண்ட் சர்ஜன்களென அழைக்கப்படுவார்களென்று சென்னை கவர்ன்மெண்டார் ஓர் உத்திரவு பிரப்பித்திருக்கிறார்கள்.

---

புளியம்பழம்.—நம் தேசத்தில் உண்டாகும் புளியம்பழத்தை அன்னிய தேசங்களுக்கு அனுப்பப்பட்டு தார்தாரிக் ஆஸிட் (Tartaric Acid) என்னும் ஒருவித உப்பு செய்து நம் தேசத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. இந்த உப்பு அநேக விதமான அவுஷதமுறையில் உபயோகிக்கப்பட்டு வருகிறது. ஒரு படி புளிரசத்திலிருந்து 4 அவுன்ஸ் உப்பு எடுக்கலாம்.

---

ஆளைச்சுமந்து பறக்கும் பக்ஷி.—ஜப்பான்தேசத்து உள்நாட்டிலிருந்து ஜப்பானியன் ஒருவன் ஒருபட்சியின் மேலேறிச் சவாரி செய்துகொண்டு ஆகாய வழியாய்ச் சைபெரியாவுக்குச் சென்றானாம். ஷை பட்சி நூதனமானதாகவும் ஒரு மனிதனைச் சுமந்து பறக்கக்கூடியதாகவும் ரூபத்தில் பருந்தைப்போலவும் தீக்குருவியிலும் பெரிய ரூபமுடையதாகவு மிருக்கிறதாம்.

---

ஆயுர்வேத வைத்தியம்:—கொச்சின் ராஜவம்சத்தைச் சேர்ந்த ராஜகுமாரர்களில் ஒருவர் 30,000 ரூபாய் செலவழித்து திருச்சூரில் ஓர் ஆயுர்வேத சாலையை ஸ்தாபிக்கப்போவதாகத் தெரியவருகிறது. இவ்விஷயம் உண்மையாயிருக்கும் பட்சத்தில் ஏழை எளியவர்களுக்கு இந்த ஸ்தாபனம் மிகவும் பயன்படுமென்பதில் சந்தேகமில்லை. மேற்கூறிய சாலையின் அபிவிருத்தியை மனப்பூர்வமாய் விரும்புகிறோம்.

---

குன்னூர் தென்னிந்தியா நாய்க்கடி விஷ வைத்தியசாலை.—இவ்வைத்தியசாலையில்பயித்தியம் பிடித்தவர்களுக்கும், பாம்பு முதலிய விஷ ஜெந்துக்களால் தீண்டப்பட்டவர்களுக்கும், குணப்படுத்தும் ஔஷதப்பரிசோதனையில் மிகவும் ஊக்கமாய் பிரதி தினமும் முயன்று வருகிறார்கள். இத்தென்னிந்தியா நகரவாசிகளுக்கு இஃது ஓர் பெரிய நன்கொடையாகும்.

---



கலைமான் வயிற்றுக்குள் புத்தசிலை.—சீனதேசத்தின் மையோஹங் பகுதியிலுள்ள நையாநபிங்கி என்னும் கிராமத்தருகே பிடிக்கப்பட்ட ஒரு கலைமான் வயிற்றுள் ஒன்றரை அடி நீளமுள்ள ஒரு புத்தசிலை யகப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. இதை ஜனங்கள் யாரோ ஒரு தபோதனருக்கு இந்த மான் செய்த இடைஞ்சலால் அதன் வயிற்றுக்குள் இந்தக் கற்சிலையை யிருக்கும்படி தபோதனர் சபித்துவிட்டாரென்று சொல்லிக் கொள்ளுகிறார்களாம்.

---

### டாக்டர்களுக்கும் விளங்காத் தூக்கநடை.

(பிரிட்டிஷ் மெடிக்கல் ஜர்னல்.)

பர்மிங்காம் ஜெனரலாஸ்பிட்டல் டாக்டர் ரஸல், M. A. யிடம் தூக்கநடையிலுள்ள (21 வயதான) ஒரு பெண் அனுப்பப்பட்டாள். தாய் தந்தையர் இறந்துபோனாலும் அவள் டைப்பிஸ்டும், டீச்சருமாயிருப்பதோடு சங்கீதத்திலும் பழகினவள். குழந்தைப் பருவமாயிருந்தபோது அவள் தந்தை சுட்டுக்கொண்டு மாண்டதை மறவாமல் தன் தூக்கநடையிலும் “அவரை அப்படி செய்யவிடாதேயுங்கள்” என்பாளாம்! அவள் காலையிலெழுந்து தூக்கநடை கொள்ளும்போது தூங்குவதாய்க் காணப்படாவிடினும் எதிரிலிருப்பதொன்றுங் காணவில்லையாம்! இந்நடையிலேயே அவள் ஜெர்மனிபாஷையிலேலெட்டர்களும், கார்டுகளும் எழுதுவதும், புஸ்தகம் படிப்பதும், ஆர்மோனியம் வாசிப்பதுமாயிருக்கிறாளாம்--இவ்வளவும் இருட்டிலேயே—வெளிச்சந் தோன்றினும், இருட்டிய அறைக்கே போய்விடுகிறாளாம்! சில மணிநேரம் இவ்வாறிருந்துவிட்டு அவள் படுக்கைக்குப்போய்த் தலையை முட்டிக்கொள்வாள் அல்லது தட்டிக்கொள்வாள்! சிலவேளை அவள் படுக்கையிலுட்கார்ந்து நூற்பின்னல் வேலையும் செய்வாள்! ஒரு நாளிரவில் அவள் ஒரு லெட்டரை யெழுதிக் கவரில் ஒரு சவரனுடன்போட்டு வைத்திருக்க, அதை மறு நாள் அவளுக்குக் காட்டியபோது அதை யெழுதின ஞாபகமே தனக்கில்லையென்றாலும் அட்ரெஸ் முற்றிலும் சரியென்றாளாம்! இதைக்கேட்ட டாக்டர் மேற்படி லெட்டரை மறுபடியும் இருட்டிலெழுதக் கேட்டபடி அவளெழுதியது வரிமேல்வரியாய்ப் போய்விட்டதாம்! ஒருசமயம் தூக்கநடையிலவள் ஒரு சிறு வியாசம் எழுதியது நேர்த்தியாயிருந்ததாம்!

---

## வேடிக்கைக் கதைகள்.

முன்பின் அறியாத அன்னய்யரிடம் போய் கடன்கார காமாக்ஷி அய்யர் ஐம்பது ரூபாய் கைமாற்றுகக் கேட்டார். உன்னை நான் அறியேனே என்னிடம் வந்து நீ கைமாற்றுக் கேட்பது வெகு விந்தையாயிருக்கிறது! என்று அன்னய்யர் பதில் சொல்ல, அதனால்தான் உம்மிடம் வந்தேன். அறிந்தவர்கள் எவரும் ஒருகாசுகூட கொடுக்கமாட்டார்கள் என்று காமாக்ஷி அய்யர் நிஜம் கக்கினர்!

---

பலமலோபியாகிய பசுபதி அய்யன் பத்து விராகனுக்கு ஒரு நிலை கண்ணாடி வாங்கிப் பிரதினமும் அதற்கு எதிரில் போஜனம்செய்ய, ஒருவருக்கிருவர் புசிப்பதைக்கண்டு தன் உதார குணத்திற்குத்தானே சந்தோஷித்துக் கொண்டிருந்தானாம்.

---

தன் மனைவி எலிக்குஞ்சை விழுங்கினள் என்று எவ்வளவோ பரிதாபப்பட்டுக்கொண்டு வைத்தியரிடம் போய் மருந்து கொடுக்கும்படி மாதவய்யர் முறையிட! ஓடிப்போய் ஓர் பூனைக்குட்டியை விழுங்கச்சொல் என்று ஒரு வைத்தியர் அவருக்கு உபாயம் சொன்னார்!

---

மேமாதத்திய வைத்திய போதினி சஞ்சிகையின் 23 வது பக்கத்திற் பிரசுரமான விடுகதை வினாவுக்கு விடை.—

விடுகதைவினா No. 2 கள்ளி.

தயைசெய்து இதை வாசிக்கும் கனவான்கள் இதன் கருத்தை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். குசேலோபாக்யானத்தில்,

1. மதலையைப் பெருநாள் துன்பம்,
வளர்த்திடுநாளும் துன்பம்,
விதலை நோய் அடையில் துன்பம்,
வியன்பருவத்தில் துன்பம், [துன்பம்,
கதமுறக்காலர் வந்து கைப்பற்றில் கணக்கில்
ஹிதமுறல், என்னுள், சேயால்
எற்றைக்கும் துன்பமானல்

என்று சொல்லியிருக்கிறது. இப்படி குழந்தையால் துன்பமே இருந்தால் மனுஷ்யர்கள் சுகமடைவது என்னுள்.

2. எங்கள் வீட்டில் ஒரு எருமை இருக்கின்றது,
இது கத்தாது, கனைக்காது, காடு ஏறி மேயாது
இருந்த இடத்தில் இருகலப்பால் கறக்கும்.

வாசித்தவர்கள் இதை விளக்கக் கோருகிறேன்.

V. A. Kesavan.



### Lymphatic Vessels lactels and Atroracic Duct.

அங்க அமைப்பிலுள்ள நிணநரம்புகள், ரசதாரை இவைகளைக் காண்பிக்கிற படம்.



**பர்மா நாட்டில் பைத்தியக்காரர்கள்.**—போன வருஷம் பர்மா நாட்டிலிருந்த பைத்தியக்காரர்களின் தொகையை 10-வருஷத்துக்கு முன்னே அந்நாட்டிலிருந்த பைத்தியக்காரர்களின் தொகையோடொப்பிட்டுப் பார்த்ததில் 100-க்கு 70-விதம் பைத்தியக்காரர்களின் தொகை அதிகப்பட்டுப் போயிருப்பதாய்த் தெரிந்ததாம். அத்தொகை விருத்தியடைந்திருப்பது ஜனத்தொகை விருத்தியையும் நாகரீகம் அதிகமாகவாக ஜனங்களின் மூளைக்கு அதிக வேலை ஏற்பட்டுப் போனதையும் அனுசரித்திருந்தது என்று சொல்லப்படுகிறது. அம்மாதிரிக் காரணம் சரியாய்த்தானிருக்கவேண்டுமென்று ஊகிக்கும்படியாகவே யிருக்கிறதாம். ஏனெனில் கீழ் பர்மா நாட்டின் (Lower Burma) ஜனத்தொகையையும், மேல் பர்மா நாட்டு (Upper Burma) ஜனத்தொகையையும் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, கீழ் பர்மாவிலுள்ள பைத்தியக்காரர்களின் விகிதமே மேல் பர்மாவிலுள்ள பைத்தியக்காரர்களின் விகிதத்தைக் காட்டிலும் அதிகமாயிருக்கின்றதாம்.

## வைத்திய போதினியின் அபிவிர்த்தி கருதிய நன்கொடையாளர்கள்.

திருவாவடுதுரை ஆதீனம் மஹாசன்னிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ, அம்பலவாண தேசிக பண்டார சன்னதி அவர்கள் ரூபாய் 50 கொடுப்பதாக வாக்களித்து அட்வான்ஸாக ரூ. 15 கொடுத்திருக்கிறார்கள். பாக்கி தொகையையும் விரைவில் கொடுத்தாதரிப்பதாக அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள்.

M.R.Ry., V. T. இராமலிங்க முதலியார் அவர்கள் ரூ. 50.

,, K. அமுர்தலிங்கம் பிள்ளை அவர்கள் ரூ. 30.

அடியில்கண்ட சந்தாத்துகைகளை வந்தனத்தோடு பெற்றுக்கொண்டோம்.

| பெயர். | ரூ.அ. | பெயர். | ரூ.அ |
|---|---|---|---|
| Mr. M. சுப்பையர் | 1 0 | ,, M. ராமஸ்வாமி பிள்ளை | 1 0 |
| ,, K. சுப்பையாபிள்ளை | 1 0 | ,, B. R. கிருஷ்ணஸாமி நாயக்கர் | 1 0 |
| ,, P. S. முத்துசாமி முதலியார் | 1 0 | ,, நாயிறு பிள்ளை | 1 0 |
| ,, G. Christian | 1 0 | ,, K. ராமகிருஷ்ண செட்டியார் | 1 0 |
| ,, இராகவ பிள்ளை | 1 0 | ,, P. W. Vyaya திருவேங்கட பிள்ளை | 1 0 |
| ,, K. R. அய்யா ஐயங்கார் | 1 0 | ,, A. கோபால முதலியார் | 1 0 |
| ,, ராமசாமி பிள்ளை | 1 0 | ,, P. சாம்பமூர்த்தி ஐய்யர் | 1 0 |
| ,, G. சங்கரம் பிள்ளை | 1 0 | ,, A. நாராயண ஐயங்கார் | 1 0 |
| ,, C. செங்கல்வராயபிள்ளை | 1 0 | ,, D. S. Iyengar,(Simla) | 1 0 |
| ,, A. திருவேங்கட பிள்ளை | 1 0 | ,, M. வெங்கடநரஸிம்மம் | 1 0 |
| ,, சுந்தரபாண்டிய ஓதுவார் | 1 0 | ,, N. வரதாச்சாரியார் | 1 0 |
| ,, லெக்ஷ்மண ஐயர் | 1 0 | ,, ராஜகோபால ஐயர் (வில்லியநல்லூர்) | 1 0 |
| ,, J. N. ராமகிருஷ்ணய்யர் | 1 0 | ,, T. திருமேனிசெட்டியார் | 1 0 |
| ,, S. முத்துஸாமி வன்னியனார் | 1 0 | ,, மு. ஆறுமுகம் பிள்ளை | 1 0 |
| ,, V. ராகவ ஐய்யங்கார் | 1 0 | ,, C. ராமசாமி படையாச்சி (ஜோகன்ஸ்பர்க்) | 2 4 |
| ,, C. ஏகாம்பர முதலியார் | 1 0 | ,, P. கந்தையா, (Kapar) | 0 14 |
| ,, R. K. ரெங்க ஐயங்கார் | 1 0 | ,, A.R. ராஜகோலய்யங்கார் | 1 0 |
| ,, D. ஆறுமுகம் பிள்ளை | 1 0 | ,, Manager, Durai Rajah & Co. | 1 0 |
| ,, K. ராமய்யர் | 1 0 | ,, A. S. மரியதாஸ்பிள்ளை | 1 0 |
| ,, A. ராஜகோபால ஐயர் | 1 0 | ,, சிவிப்பண்டிதர் | 1 0 |
| ,, L. S. கிருஷ்ணசாமிஐயர் | 1 0 | ,, A. L. M. L Markar | 1 0 |
| ,, M. V. ராமஸ்வாமி ஐய்யங்கார் | 1 0 | ,, T.A. Lazarus ferindo | 1 0 |
| ,, நாராயணஸாமி பிள்ளை | 1 0 | ,, M. சாமிநாயகம் | 1 0 |
| ,, T. R. Salvady Iyer | 1 0 | | |
| ,, வெ. சொக்கலிங்க முதலியார் | 1 0 | | |

MADRAS 1910

# வைத்திய போதினி.

சித்திரப் படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

புத். 1. } 1910-ஞு ஜூலை மீ 1௳. { [illegible] 3

## பத்திராதிபர் குறிப்பு.

நமது பிரிய பத்திரிகாபிமானிகளே!

நமது பத்திரிகையை நமக்கிருக்கும் பலவித அலுவலுடன் பிரதிமாதமும் வெளியாக்கி, நமது பத்திரிகாபிமானிகளுடைய நல்லெண்ணத்திற்கிசைந்து அப்போதைக்கப்போது யுக்தமாகத் தோன்றும் விஷயங்களையும், ஜனானுகூல வியாசங்களையும் சித்திரப்படங்களோடு வரைந்து வெளியிட எண்ணியிருக்கிறோம். "அருளில்லார்க் கவ்வுலகமில்லை, பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை" என்பதையொப்ப இப்பூவுலகில் பொருளின்றி எக்காரியமும் நடவாதென்பது திண்ணம். இப்பத்திரிகையானது எமது சொந்த பிரயோஜனத்திற்கன்றி பொது நல அபிவிருத்தியைக்கருதியே ஆரம்பிக்கப்பட்டதென்பதை இதன் சொற்ப சந்தாவைக்கொண்டே தெரிந்துகொள்வீர்களாக! இங்ஙனம் ஜனோபகாரமே பெரிதெனக்கொண்டு இப்பெரும் காரியத்தில் பிரவேசித்திருக்கும் எம்மை ஆரிய சகோதரர்கள் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தமிழறிந்த இருபாலருக்கும் இப்பத்திரிகை நிரம்ப அவஸ்யமாகையால் இப்பத்திரிகைக்கு ஒவ்வொருவரும் சந்தாதாரர்களாய்ச் சேருவதுடன் தங்கள் தங்கள் மித்திரர்களுக்கும் இப்பத்திரிகையைக் காட்டி, அவர்களையும் சந்தாதாரர்களாய்ச் சேரும்படி செய்ய வேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நமது பத்திரிகையை மதிப்பிற்சிறந்த பல கனவான்களின் பார்வைக்கு கடந்த இரண்டு மாதகாலமாக அனுப்பிவந்தும், பத்திரிகையின் சொற்ப சந்தாவைக் கொடுத்தாதரிக்க இதுவரையும் முன்வராததும் ஏன்றோ தெரியவில்லை! இனியேனும் காலதாமதமின்றி இப்பத்திரிகை க்ஷேமம் தேடவரும் கனவான்கள் தங்கள் சந்தாவை விரைவில் அனுப்பிவைக்க வேண்டிக்கொள்ளப்படுகிறதுமன்றி, பத்திரிகையை வி. பி. யில் அனுப்பினால் பெற்றுக்கொள்ளவுங் கோரப்படுகிறார்கள். டர்பான், ஜோகனஸ்பர்க், பினங்கு, சிங்கப்பூர், சிலாங்கூர் முதலிய அன்னிய நாட்டிற்கு வி. பி. சிஸ்டம் கிடையாதானதால் அந்நாட்டிலுள்ள பத்திரிகா நேயர்கள் ஒவ்வொருவரும் 2 ஷில்லிங் 8 பென்சுக்கு போஸ்டல் ஆர்டர் அனுப்பி ஆதரிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். பத்திரிகை வேண்டாதவர்கள் உடனே எழுதித்தெரிவிக்கவேண்டியது. காப்பார், சிலாங்கூர், சிங்கப்பூர் முதலிய மலேய நாடுகளுக்கு மிஸ்டர் P. கந்தையா அவர்களை நமது பத்திரிகைக்கு ஏஜண்டாக ஏற்படுத்தியிருக்கிறோம்.

நமது வைத்திய போதினிக்கு புதிதாக சந்தாநேயர்களாய்ச்சேரும் ஒவ்வொருவரும் முதலாவது சஞ்சிகை முதல் எல்லாச் சஞ்சிகைகளும் வேண்டுமென்று கேட்கின்றனராதலின் வெகுசொற்ப சஞ்சிகைகளே நமது கைவசமிருக்கின்றன. ஆதலால் காப்பிக்கு முந்திக்கொண்டால் பஞ்சமில்லை!

(ஜூன்மாத சஞ்சிகையின் 30-ம் பக்கத்தொடர்ச்சி.)

கண் குழிகள். (ஆங்கிலத்தில், Orbits—ஆர்பிட்ஸ்.)

கண் குழிகள், 7-எலும்புகள் சேர்ந்து உண்டாகின்றன, கண்குழியில், விழி, அதற்குண்டான சதைகள், ரத்த நரம்புகள், ஸ்பரிச நரம்புகள், கண்ணீர்க்கோளங்கள், கொழுப்புகள் ஆகிய இவைகளடங்கியிருக்கும்.



சுத்தமான வெள்ளி! சொகுசான வேலை!!
எவ்விதமான வெள்ளிப்பாத்திரங்களும் எங்களிடம் விற்பனைக்கு தயாராய் இருக்கிறது. கைவசமில்லாததை ஆர்டர் கொடுத்தால் குறித்த காலத்தில் கொடுக்கப்படும். விபரமறிய விரும்புவோர் எழுதி தெரிந்துக்கொள்ளவும்.
V. B. வெங்கடேசம் செட்டியார்,
*Cloth & Silver Merchant, Kumbakonam.*



மூக்கு. (ஆங்கிலத்தில் Nasal Fossae—நேஸல் பாஸி.)

நாசித்துவாரத்தில் ஏற்படுத்தப்பட்ட எலும்புகள் 8. நாசி மத்தியமாயிருக்கிறதற்கு தட்டு (Septum, செப்டம்) என்று பேர். நாசித்துவாரத்திற்கும், கண்குழிக்கும் சம்பந்தமாய்த் துவாரமுண்டு.

முள்ளந்தண்டு.

(ஆங்கிலத்தில், Vertebral Column—வர்டிபிரல் காலம்.)

சிரசையும், கைகால்களையும், சொல்லியபிறகு பாக்கியாயிருக்கும் மார்பு, வயிறு உள்பட்ட நடுமுண்டத்திற்கு உடல் என்று பெயர்; இந்த உடலின் பின்பாகத்திலுள்ள முதுகெலும்பு முழு சரீரத்தையும் தாங்கக்கூடிய ஓர் தூணாகிறது. சிரசுக்கடியிலிருந்து, கீழ்க்கிறங்குகிற அண்டெலும்புகளின் கோர்வைக்கு முள்ளந்தண்டு என்று பேர். இது ஒரே எலும்பல்ல, முப்பத்திரண்டு தனித்தனி முள்ளெலும்புகள் (Vertebra, வர்டிபிர) ஒன்றோடொன்று சங்கிலித்தொடர்போல் சேர்ந்து உண்டாவதால் இதைத்தண்டு என்பார்கள். முள்ளெலும்பு மத்தியமாய்க் குருத்தெலும்புண்டு. இதை (Intervertebral Substance, இன்டர்வர்டிபிரல் ஸப்ஸ்டான்ஸ்) என்று சொல்லப்படும். இவைகள் முள்ளெலும்புகளை ஒன்றோடொன்று பொருந்தும்படிச்சேர்த்து, நாலு பக்கங்களிலும் சுலபமாய் அசையும்படிச்செய்கின்றன. ஒவ்வொரு முள்ளெலும்பில் ஒரு பெரிய துவாரமுண்டு; அந்தத்துவாரங்கள் சேர்ந்து, முள்ளந்தண்டில் நெடிய துவாரமொன்றேற்படும். அதில் மூளைக்கொடி (Spinal Marrow, ஸ்பைனல் மாரோ) பிரவேசித்திருக்கும். மேற்சொன்ன முப்பத்து மூன்று முள்ளெலும்புகளும் மூன்று பாகமாகப்பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது கழுத்து, முதுகு, இடுப்பு ஆகிய இவைகளேயாம். கழுத்து முள்ளெலும்புகள் 7 (Cervical, ஸர்வைகல் 7)

சந்திரிகா.
புதவாரந்தோறும் பிரசுரிக்கப்படும் ஓர் நவீன வாரந்திர தமிழ்ப் பத்திரிகை. சந்தா விகிதம், வருஷம் 1-க்கு தபாற் கூலியுள்பட ரூ. 3—6 மாதத்திற்கு ரூ. 2. மூன்று மாதத்திற்கு ரூ. 1-4-0. தனிப்பிரதி அணா 1.
மானேஜர், "சந்திரிகா," கும்பகோணம்.

முதுகு முள்ளெலும்புகள் 12. (Dorsal, டார்ஸல் 12., இடுப்பு முள்ளெலும்புகள் 5 (Lumbar, லம்பார் 5) இவைகளில் முற்சொன்ன ஏழும், சிரசைத்தாங்கிக்கொண்டிருக்கிறபடியால் இதை (Atlas) அட்லாஸ்) என்றும், அதன் கீழிருக்கிற எலும்புகளுக்கு (Axis, ஆக்ஸிஸ்) என்று பேர். முதுகு முள்ளெலும்புகளாகிய 12-ம் மார்போடு சம்பந்தப்படும். (Ribs, ரிப்ஸ்) என்னும் விலா எலும்புகள், சுவாசாசயம், இரைப்பை, ஈரல் முதலான நுட்பமான பாகங்களைப் பாதுகாப்பதற்கு இப்பழுவெலும்புகள் இன்றியமையாதனவாய் இருக்கின்றது. விலாவில் ஒவ்வொரு பக்கத்திலும் அப்படிப்பட்ட பழுவெலும்புகள் பன்னிரண்டுண்டு. அவைகளில் 7 மார்க்கண்ட எலும்புடன் சேர்ந்திருக்கும். (True Ribs, ட்ரு ரிப்ஸ்) 3 ஒன்றின்மேலொன்று படிந்திருக்கும் (False Ribs, ப்பால்ஸ்ரிப்ஸ்.) அடியிலிருக்கிற மற்ற இரண்டின் முனைகளும் அந்தரமாயிருக்கும். இவ்விதமாய் விலா எலும்புகள் அமைந்திருப்பதினால் சுவாசம் விடும்போது அதிக தாராளமாயிருக்கும். இவற்றிற்கடுத்த 5 அள்ளை எலும்புகள் இருக்கின்றன. இதன் கீழுள்ள 5 எலும்புகளுக்கு திரிகஸ்தான எலும்பு (Sacrum, சேக்ரம்) இதனைக்குண்டி எலும்பு என்றும் சொல்லுவதுண்டு. அதின் கீழுள்ள மீதி நான்குக்கு, குயில்மூக்கெலும்பு அல்லது புச்ச எலும்பு (Coc-cix, காக் ஸிக்ஸ்) திரிகஸ்தான எலும்புக்கடியில், இவ்வெலும்பானது குயில் மூக்கைப்போல் வளைந்திருப்பதினால், இதை குயில் மூக்கெலும்பென்று சொல்லப்படும். மேற்சொன்ன திரிகஸ்தான எலும்பும், குயில் மூக்கெலும்பும், குழந்தையில் முறையே -4 துண்டுகளாயிருக்கும். ஸ்திரீகளுக்கு திரிகஸ்தான எலு

எலும்புக்கூடு.




a. முதுகுவர்க்க எலும்புகள்.
b. மார்பெலும்பு.
1, 2, 7, 8, 9, 10 விலா வெலும்புகள்.
11, 12 (False Ribs) ப்பால்ஸ் ரிப்ஸ் அதாவது நீச்செலும்புகள்.



ம்பு அதிகமாய்ப் பிதுங்கியிருந்தாலும், குயில் மூக்கெலும்பானது ஆட்டமில்லாமல் உறுதிபட்டிருந்தாலும் பிரஸவ காலத்தில் சிசுவின் தலை கீழுக்கிறங்க இடமில்லாமல் தலை சிக்கிக்கொண்டு, தாயாருக்கு அதிக வேதனையையுண்டாக்கும். மருத்துவத்தொழில் செய்வோர் இதை கவனித்தல் நிரம்ப அவஸ்யம். மேற்சொன்ன கடைசி எலும்பாகிய (Coc-cix, காக் ஸிக்ஸ்) என்னும் எலும்பையே மனிதனது *வாலுக்கு ஒப்பிடலாம்.

சரீரத்திலுள்ள எலும்பை மற்றொரு எலும்போடு சேர்த்துக் கட்டுவதற்குப் பலமான சவ்வுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு எலும்புக்கும் துவாரங்கள் உண்டு. அத்துவாரங்களில் இரத்த நாடிகள் புகுந்து செல்லும். எந்த எலும்பினதும் வெளிப்பகுதி வைரம். நீண்ட எலும்புகளுக்குள்ளே மூளை என்னும் மிருதுவான பதார்த்தம் நிரம்பி இருக்கும். சரீரத்தை அடுத்த மற்றப் பாகங்களுக்கு இரத்தம் அத்தனை அவஸ்யமில்லாவிட்டாலும், எலும்புகளுக்கு இரத்த போஷணை அதிகமாய் வேண்டியது. இரத்த நரம்புகள் ஓடுவதற்கு கண்ணிற்குத் தெரியாத சிறிய துவாரங்கள் அநேக எலும்புகளில் உண்டு. இன்னும எலும்பில் முக்கியமான இரண்டுவித பதார்த்தங்களுண்டு. (Phosphate of lime, பாஸ்பேட் ஆவ் லைம்) என்னும் சுண்ணாம்பும், (Gelatine, ஜிலடீன்) என்னும பசையும் ஆம். பெருத்த கட்டிடங்களையும், நீண்ட நாள் இருக்கவேண்டியதுமான தேவாலயங்களையும், எங்ஙனம் சுண்ணாம்பினால் கட்டப்பட்டிருக்கிறதோ அதுபோலவே, நம் சரீரத்திலுள்ள ஹஸ்தி பந்தனங்களிலும் சுண்ணாம்பு ஐக்கப்பட்டிருக்கின்றது. சுண்ணாம்பால் எலும்புக்கு உறுதியும், பலமும் உண்டாகின்றன. வச்சிரத்தைப்போலொத்த பசையால் நயப்புண்டாகின்றது. கருப்பிண்டத்தில் எலும்புகள் இளசாயிருக்கும். அப்போது அதை முருந்து அல்லது குருத்தெலும்பு என்று சொல்லப்படும். பிறகு வயது விர்த்தியில் சுண்ணாம்பு படிப்படியாய் அதிகரித்து அந்த முருந்துக்கு வைரமேறி எலும்பாகிவிடும். எலும்புகளைத்திராவகத்தில் போட்டு வைத்தால் அதிலிருக்கிற சுண்ணாம்பு நீங்கிப் பசை மாத்திரம் நிற்கும். அதை மனதுக்கேற்றபடி இலேசாய் வளைக்கலாம். பால்லியத்தில் எலும்புகள் குறுத்தாயிருப்ப

* குரங்கை (வால்-நரன்) வானரனென்றும், மனிதனை வாலில்லாத நரனென்றும் ஓர் தத்துவ சாஸ்திரி சொல்லியிருக்கிறபடி, மனிதனுக்கு வாலெலும்பு இருந்தும் வாலில்லாமலிருக்கிறது.

தினால் வளைந்து கொடுக்கும் முடியமாட்டாது, ஒருவேளை முறிந்தபோதிலும் கூடிவிடும். வயது சென்றவர்களின் எலும்பு எளிதில் ஒடியும், ஒடிந்த எலும்பு சீக்கிரம் கூடாது. நாய்களுக்கும், மாமிச பக்ஷிணியாகிய மனிதர்களுக்கும், காட்டு மிருகங்களுக்கும் எலும்பின்பேரில் அதிக பிரியம். ஏனென்றால் எலும்புக்குள் இருக்கும் மூளையில், சர்க்கரை, உப்பு முதலிய இனிப்பாகிய வஸ்துக்கள் அதிகம் இருக்கிறது. இரத்த நாம்புகள் ஓடுவதற்கு கண்ணிற்குத் தெரியாத சிறிய துவாரங்கள் அநேக எலும்புகளில் உண்டு. எலும்புகள் உலர்ந்துபோனால் நமது சரீரத்தின் பலமும் க்ஷீணித்துப்போம். மனித தேகத்தில் சுமார் 246 எலும்புகளிருக்கின்றன அவை யாவன:—சிரசில் 8, காதுக்குள் 6, முகத்தில் 14, பற்கள் 32, முள்ளந்தண்டில் 26, நாக்கில் 1, மார்பில் 1, விலாவில் 24, கைகளில் 64, கால்களில் 62, கைகால் பெருவிரல் குளசுகளில் இருக்கிற சிறிய எலும்புகள் 8, இவ்வகையான எலும்புக்கூடானது, நமது சரீரத்துள் இருக்கும் அதிநுட்பமான உருப்புகளுக்கு யாதொரு தீங்கும் நேராதபடிக்கு அவைகளைப் பத்திரமாய்க்காத்து இரக்ஷிக்கின்றது. இப்பேர்ப்பட்ட முக்கிய தூண்களை நாம் கவனிக்காமல் அநேக குற்றங்களுக்குள்ளாகின்றோம். நீரிழிவு, மதுமேகம் முதலிய நோயுற்றோர்களுக்கு எலும்பில் பெரிய துவாரங்கள் ஏற்பட்டு மூளைக்குள்ளிருந்து தித்திப்பு நீர் வருகிறது. இந்நீர்களை நிறுத்தி துவாரங்களை அடைத்து புஷ்டியான ஆகாரங்களைக்கொடுத்து போஷித்துவரவேண்டியது. அநேகருக்கு நீரைப்பற்றிய வியாதி வெளிப்படையாகத் தெரியாமலிருக்கும். எலும்புகளின் பலஹீனத்தினால் அறிந்துகொள்ளவேண்டும். இன்னும் எலும்புகளுக்குக் காணும் முக்கிய ரோகங்களாவன:—ஹஸ்திசோபரோகம், (Hypertrophy of the bone) ஹஸ்தி உக்கிரதாபரோகம் (Acute inflammation of the bone) ஹஸ்தி சாத்மீகதாப ரோகம் (Chronic inflammation of bone) எலும்பு படல் படலாய் உதிர்ந்துபோகும் ஒருவித ரோகம் (Exfoliation, எக்ஸ்போலியேஷன்) ஹஸ்திவிரணம் (Caries, கேரீஸ்) ஹஸ்தி நமன ரோகம், அதாவது எலும்புகள் மிருதுவாகி ஒடியாமல் வளைகிற ஓர் ஜாதி ரோகம். இந்த நோயை ஆங்கிலத்தில் (Rickets, ரிக்கட்ஸ்) என்று சொல்லப்படும். நமது சரீரத்திலிருக்கும் மேற்சொன்ன 246 எலும்புகளும் சற்றேறக்குறைய 4, 5 வீசை பளு இருக்கும்.

---



## பிரதம கருப்பத்தில் தாயடையும் மாறுபாடு.

மிஸ்டர் ஹெர்பர்ட்ஸ் ஸ்பென்ஸர் அவர்கள், ஐரோப்பா அமெரிக்காவிலுள்ள பல சாஸ்திர நிபுணர்களோடு கலந்து மேற்படி விஷயத்தைப்பற்றி யோஜித்துப் பலருடைய அனுபவ மூலமாக அறிந்த உண்மைகள் பலவற்றை எடுத்துரைக்கின்றார். அவைகளின் ஆதாரத்தாலுண்டாகும் முடிவை இங்கு சங்கிரகமாகக் கூறத்தொடங்குவோம்.

அதாவது முதல் கருப்பம் தரிக்குங்காலத்தில், காந்தம் இரும்பை இழுத்துக்கொள்வதுபோல், தாயானவள் சிசுவின் தகப்பனிடத்திலிருந்து சில தேகக்குறிகள் அவள் தேக சாரத்தில் வகிக்கிறதென்றும், இப்படி தாயினால் தகப்பனிடமிருந்து வகிக்கப்பட்ட விசேஷக் குறிகள் எதுவும் அவள் தேக சாரத்தில் நிலையூன்றி நின்று அந்தக் கருப்பத்திலுண்டாகும் சிசுவுக்கு மட்டுமன்றி, அதற்குப் பின்னால் வேறு புருஷனால் உற்பவிக்கும் சிசுவிற்கும் அக்குறிகள் ஒருவாறு உண்டாகக் கொடுக்கப்படுகின்றனவென்றும் குறிக்கிறார். ஒரு வெள்ளைக்கார ஸ்திரி ஒரு கருப்பு மனிதனோடு கலந்து முதலில் ஒரு குழந்தையைப் பெற்றுவிட்டு, அப்புறம் வெள்ளைக்காரனொருவனையே மணம்புரிய அவனுக்கு எத்தனை குழந்தைகள் பெற்றாலும் முதலில் அவள் கூடிக்கலந்த கறுப்பு மனிதனுடைய இரத்தக்கலப்பு பின்னால் அவளுக்கு வெள்ளை மனுஷனால் பிறக்கும் குழந்தைகள் ஒவ்வொன்றிலும் சேர்ந்திருக்கக் காணப்படுவது அமெரிக்காவில் அனுபவசித்தமாம். குதிரைகள்



மாடுகள், நாய்கள் இவைகள் வளர்ப்பதிலும் பெண் மிருகம் எவ்வளவு உயர்ந்த ஜாதியானதாகவிருந்தாலும், முதலில் அது தாழ்ந்த ஜாதி ஆணோடு கலந்து ஒரு குட்டி ஈன்றுவிட்டால் அப்புறம் எவ்வளவு உயர்ந்த ஜாதி



ஆணைக்கொண்டு வந்து விட்டாலும், அந்தப் பெண்மிருகம் போடும்குட்டி உயர்ந்த ஜாதியானதாகவின்றி, முதலில் கலந்த தாழ்ந்தஜாதி ஆணின் மாதிரியானது அக்குட்டிகளைவிட்டு முற்றும் நீங்குவதில்லை. இது குதிரை, நாய் முதலியவைகளில் உயர்ந்தஜாதி மிருகங்கள் வளர்க்கும் எல்லார்க்குந் தெரிந்த விஷயம். இதற்கு ஆதாரமாக இன்னும் எத்தனையோ அத்தாக்ஷிகள்கூறி முதல் கருப்பத்தில் தாயானவள், தகப்பனின் தேகக் குறிகளில் விசேஷமானவற்றைத்தன் தேகசாரத்தில்வகித்துப்

கொள்ளுகிறாளென்பதும்: இப்படி வசித்துக்கொண்ட விசேஷக்குறியினால் அவள் தேகக்கட்டு மாறுபடுகிறதென்பதும், அந்த மாறுபாடுகளில் விசேஷமானவை அவளுக்குப்பிறக்கும் முதற் குழந்தைக்கு மட்டுமின்றி அவள் வயிற்றில் (எந்த புருஷனாலும்) உற்பவிக்கும் மற்றக் குழந்தைகளையும் ஒட்டிக் கொள்ளுமென்பதும் ஸந்தேகமின்றி நிரூபிக்கப்பட்ட விஷயமாகக் கொள்ளப்படவேண்டுமென்று அழுத்தமாய் வற்புறுத்திக் கூறுகிறார். இதற்கு உதாரணமாக இரண்டாவது விவாகம் செய்துகொள்ளும் ஸ்திரீகளுக்கு அவள் இரண்டாவது புருஷனால் பிறக்கும் குழந்தைகள் அவளுடைய முதல்புருஷனின் முகச்சாயல்கள் உள்ளவைகளாக இருப்பதை நாம் சாதாரணத்தில் பார்க்கிறோமென்றும், இன்னும் பலவாறான அத்தாக்ஷிகள் கூறியும் பேசுகிறார்.

## கருத்தரிக்கும் விபரம்.

ஸ்திரீகளுக்கு மாதாந்திர ருது காலத்தில் சினைப்பையிலிருக்கிற நாதக்குமிழ்களிலொன்று பெருத்து முற்றி வெடிக்கும். அந்தத்தருணத்தில் சினைப்பாதையின் குஞ்ச முனையானது சினைப்பையைக்கவ்விக்கொள்ளும், அப்போது வெடித்த நாதக்குமிழிலிருந்து வெளிப்படுகிற நாதமானது சினைப்பாதையிலிறங்கி அந்த வழியாகச்சென்று கருக்குழியில் விழும். புணர்ச்சி காலங்களில் ஒன்று மேற்கூறிய நாதத்தோடு சேர்ந்தால் கருத்தரிக்கும் அதற்குக் கருப்பற்றுதல, கருக்கூடுதல், கருக்கொள்ளுதல் அல்லது கருத்தங்கச்செய்தல் என்று பெயர். இரண்டு மூன்று விந்துக்கிருமிகள நாதத்தோடு தனித்தனி சேர்ந்து கருப்பற்றினால் இரண்டு மூன்று பிண்டம் வளரும்; * (இதுவே இரட்டைக்குழந்தை, மூன்று, நான்கு, ஐந்து, அல்லது ஆறு குழந்தைகள் பிறப்பதற்குக் காரணம்.) நாதமானது கருப்பையிலில்லாமல் சினைப்பாதை மத்தியிலிருந்தபோதிலும் சினைப்பாதையானது விந்துக்கிருமியை இழுத்து நாதத்தோடு பற்றச்செய்யும். அங்கு அது நாதத்தோடு பற்றி சிலநாள் சென்று கருக்குழியில் வந்திறங்கின பிறகு கரு வளர்த்தியோடு கருப்பையும் வர்த்திக்கும். அதின்

* தஞ்சை ஜில்லாவிலுள்ள இளங்காடு என்னும் கிராமத்தில் சற்றேறக்குறைய 10 வருஷங்களுக்கு முன் ஓர் ஸ்திரீக்கு ஏக தினத்தில் முன்னும் பின்னுமாக 7-8 மணி நேரத்துக்குள் 6 குழந்தைகள் பிறந்ததை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். (ப-ர்.)



ரத்த நரம்புகளும், ஸ்பரிச நரம்புகளும் பருக்கும். முதலில் கருப்பையின் மேற்புறமும் பிறகு மத்திய பாகமும் கடைசியில் கழுத்தும் ஸ்தூலிக்கும். சுக்கிலமானது கருப்பைக்குட் சென்றால்தான் கருத்தரிக்கும் என்னும் சந்தேகம் வேண்டுவதில்லை. அது அல்குலின் மத்திய பாகத்தில் விழுந்தபோதிலும் கருத்தரிக்கக்கூடுமென அனுபவயுக்தமாய்த் தெரியவந்திருக்கின்றது. அல்குலின் ஓரத்தில் சுக்கிலம் விழுந்த க்ஷணம் (கிருமிகள் நேரே முன்னோக்கிச்செல்ல தடையில்லாதபக்ஷத்தில்) விந்துக்கிருமிகள் முன்னோக்கி நகர்ந்துபோய் கருப்பையிற் சேருகின்றனவென்று சில டாக்டர்களும், விந்துக்கிருமிகளுக்கு அவ்வளவு போக சக்தியில்லை, ஆனால் அல்குலின் ஓரத்தில் சுக்கிலம் விழுந்தக்ஷணம் விசை நரம்புகளினால் இழுக்கப்பட்டுக் கருப்பையிற் சேருகின்றதெனச்சில டாக்டர்களும் கூறுகின்றார்கள். எப்படியிருந்தபோதிலும் அல்குலின் ஓரத்தில் விழுந்த விந்துவினால் கருத்தரிக்கக்கூடுமென்பதிற் சந்தேகமில்லையென அனுபவயுக்தமாய்க் காணப்பட்டிருக்கின்றது.

டாக்டர் காக்பரன் துரையவர்கள் கூறுகின்றார்—"ஒருவனுக்கு ஆசனத்திற்கும் பீஜங்களுக்கு மிடையில் சுக்கிலநாளங்களில் துவாரங்கள் விழுந்திருந்ததினால், அத்துவாரங்கள் வழியாய் எடுக்கப்பட்ட புதிதான வித்துவை ஒரு ஸ்திரீயின் கருப்பையில் பீய்ச்சாங் குழலினால் செலுத்த, அதனால் கருத்தரித்து பின் ஒன்பது மாதஞ்சென்று யாதொரு குறைவுமில்லாமல் ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றாள்" என்பதே.

பீக் துரையவர்கள் தான் கண்டதாகச் சொல்லுகிறதாவது:—"கி. பி. 1814-ம் வருஷத்தில் ஓர் ஐரோப்பிய துரையின் பாரியை முதலில் ஓர் சிவப்பு நிறமான ஆண்பிள்ளையைப் பெற்று சில நாட்களுக்குப்பின் கறுப்பு நிறமான மற்றொரு குழந்தையையும் பெற்றாள். இதன் உண்மையை விசாரித்தபோது, அவள் புருஷன் அவளோடு சேர்ந்த சிறிது நாட்களுக்குப்பின் அவள் மற்றொரு காபிரியோடு கூடினதாக அறியப்பட்டது. இன்னும் ஒரு ஸ்திரீக்கு ஒவ்வொன்றும் வெவ்வேறு வருணமாகிய மூன்று குழந்தைகள் ஏக காலத்தில் பிறந்தன." என்பதே. இதைக் குறித்து டாக்டர் பீடன் துரை கூறுகின்றார்—"ஒரு ஸ்திரீக்கு ஒரு பிள்ளை பிறந்து மூன்று மாதத்திற்குப்பின் அவள் மற்றொரு பிள்ளையையும் பெற்றாள், அவ்விரண்டு பிள்ளைகளும் சுகமாய் வாழ்ந்தன." என்கிறார். இதனால் கருப்பையானது ஒருதடவை விந்து

வைக் கிரகித்து கருவை யுண்டாக்கி சிறிதுநாட் சென்றபிறகு மற்றொரு கருவையும் உற்பத்திசெய்ய விடமுண்டு என புலப்படுகிறது.

இன்னும் ஓர் டாக்டர் கூறுகின்றதாவது :—" துர்ப்பலமாயிருக்கின்றவர்களுக்கும், அவசரப் புணர்ச்சி உண்டாயிருந்தவர்களுக்கும், வீட்டுவிலக்கமாகும் 1, 2 நாளைக்குமுன்னுண்டாகிய யோகத்தினாலும், ஆசைபோக முதலியவைகள் ஒன்றுகாதுண்டான போகத்தினாலும், அருவருப்போடு உண்டானயோகத்தினாலும் கருப்பந்தரிக்கவிடமுண்டு" என்கிறார்.

---

## மனிதர்க்குறிய உணவு.

மனிதர்க்குரிய உணவு இன்னதுதானென்று ஐயந்திரிபறவறிந்துகொண்டு அதன்படியே நடத்தலானது, மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். மனிதர்க்கு இதனினும் மேற்பட்ட விசாரம் வேறொன்றுமில்லையன்றோ? மனிதனுடைய தேகக் கூறுபாட்டை நன்றாயறிந்து அதற்கேற்றபடி அன்னபானாதிகளையுட்கொள்ளுதலே விவேகிகளுக்கழகாகும். தேகம் நன்றாய் இருந்தால்மட்டுமே புத்தியும் தெளிவாயிருக்கும். மனிதர்க்குரிய உணவு இன்னதெனத் தெள்ளத்தெளியவறிந்து விதிப்பது வைத்தியர் கடனாகும். வயித்தியர்களோ ஒருவர் போனவழி ஒருவர் போகாமல் தங்கள் தங்கள் வழக்கத்தையே பெரிதெனக்கொண்டு மனம்போன போக்கின்படியெல்லாம் ஆகாரங்களை விதிக்கிறார்கள். ஒருவன் எட்டிக்கொட்டையைத் தின்று வழக்கப்பட்டு அது நல்லுணவென்று எல்லோர்க்கும் உபதேசித்தால், அதை நாமும் சரிதானென்று ஒப்புக்கொள்ளுதல் பொருந்துமோ! ஆகாரத்தில் ஸாத்துவிகம், ராஜஸம், தாமஸம் என மூவகையுண்டென்று தொன்றுதொட்டு வழங்கிவருகிறது. இம்மூன்றனுள் ஸாத்துவிக ஆகாரமே சிறப்புடையது.

இவ்வுலகத்தில் கந்தமூலங்களை மட்டும் உண்பவர்களுமுண்டு, மூலவர்க்கம் மாம்ஸம் இவ்விரண்டினையு முண்பவர்களுமுண்டு. இவ்விரண்டினுள் எது நன்று, எது தீதென்று உள்ளபடி உண்மையை யறிந்துகொண்டு அதன்படி நடப்பதே அறிவின்பயனாகும். சிலர் கொல்லா விருதம் பூண்டு கந்தமூலபதார்த்தங்களை மட்டுமே உணவாகக் கொண்டிருக்கிறார்கள். இவ்வுலகத்தில் மூலவர்க்கத்தையும், மாம்ஸத்தையுஞ் சேர்த்து உண்பவர்களே அதிகமாவர். இவ்விருவகையாருள்



REGISTERED 28 NOV 1910 MADRAS

யார் செய்வது நன்று, யார் செய்வது தீதென்று சற்றே உய்த்துணர்ந்து பார்ப்போம். கந்தமூலத்தைமட்டுமே உண்பவர்கள் நோயின்றிப் பூரணாயுள்பெற்றுப் பலங்குன்றாதிருக்கிறார்களென்பார்கள். மாம்ஸத்தையும் கந்தமூலத்தையுங் கலந்துண்பவர்கள் நமது பற்களில் சில மாம்ஸத்தைத் துண்டிப்பதற்கும், சில கிழிப்பதற்கு மேற்றபடி அமைக்கப்பட்டிருப்பதனாலும், கடைவாய்ப்பற்கள் தானியத்தைக் கடித்துடைப்பதற்கும், மாவாக அரைப்பதற்கு மேற்றபடி அமைக்கப்பட்டிருப்பதனாலும், மனிதற்கு இவையிரண்டுமே நல்லுணவென்றும், இவ்விரண்டினையு முண்பவர்களுக்குத்தான் அதிக பலமுண்டென்றும், ஆயுள் நீடித்திருக்குமென்றும், அப்படிக்கின்றி, மனிதர்க்குரிய கந்தமூலங்களை மட்டுமே உணவாகக் கொள்ளுகிறபக்ஷத்தில் கரியமிலவாயு அதிகமாக வேண்டுமாதலால், அவர்கள் வயிற்றில் இடமில்லாமல் நோயுண்டாகும்படி கந்தமூலத்தை மிகுதியாக உண்ணவேண்டியிருக்குமென்றுஞ் சொல்லுகிறார்கள். கந்தமூலத்தை மட்டுமே யுண்பவர்கள் எடுத்துக்காட்டுகின்ற நியாயங்களைப் பார்க்கையில் இவ்விருபாலருள் யார் சொல்லுவது நியாயமென்று ஐயுறும்படியுமாகிறது. ஆதலினால், இவ்விரண்டினையும் நன்கு ஆராய்ந்து அமைவுடையதை மட்டும் பற்றுவதே நியாயமாகும்.

(தொடரும்.)

---

## மேல்நாட்டு வைத்தியமும், ஆயுர்வேத வைத்தியமும்.

அநேக ஆயிர வருஷ காலமாக அநுஷ்டானத்திலிருந்துவரும் ஆயுர்வேத வைத்திய முறையை ஜனங்களிற் பெரும்பான்மையோர் அநுஷ்டித்துவரத் தற்காலம் மேல்நாட்டு வைத்திய முறையைக்கற்ற சில இந்தியர் அந்த முறைப்படி வைத்தியஞ் செய்து ஜனங்களுடைய நம்பிக்கையைப் பெற்றுவருகிறார்கள். இந்த இரண்டு முறைகளுக்கும் எவ்விதச்சம்பந்தமுமில்லாமல், பூர்வ காலத்து வைத்தியம் வரவரப் பலங் குறைந்தும், மேல்நாட்டு வைத்தியம் பலப்பட்டும் வருகின்றன. (இதைப்பற்றி நம்மால் இயற்றப்பட்டுள்ள "சுதேச வைத்தியரத்தினம்" என்னும் புத்தகத்தில் விபரமாகச் சொல்லியிருக்கிறோம்.) மேல்நாட்டு வைத்தியங் கற்றவர்கள் மிகவும் சொற்பபேரே ஆனதாலும், அந்த வைத்தியம் மிகச்செலவு பிடிப்பதாயிருப்பதாலும், பட்டணங்களில் வசிக்கும் சில பெரியமனிதர்களே அதை யநுஷ்டித்து வருகி

றார்கள். ஆங்கிலங்கற்ற தற்காலத்துப் பெரியமனிதர்களுக்கும், ஐரோப்பிய நாகரீகத்தைப் பெரிதாய் மதித்திருக்கும் மற்றச் செல்வவான்களுக்கும் மேல்நாட்டு வைத்திய முறையிலேயே அதிகநம்பிக்கையென்று சொல்லலாம். ஆயினும் நாட்டுப்புறங்களிலும் கிராமாந்தரங்களிலும் பெரும்பான்மை பட்டணங்களிலுங்கூட ஜனங்கள் மேல்நாட்டு வைத்தியத்தில் நம்பிக்கையில்லாமலும், அதன் சிலவுக்குப்பொருளில்லாமலும், சில விடங்களில் மேல்நாட்டு வைத்தியரே கிடைக்காமலும், நமது பூர்வீக வைத்திய முறையையே யனுஷ்டித்து வருகிறார்கள். அநேக விடங்களில் ஆஸ்பத்திரிகள் இருந்துங்கூட ஆயிரத்தில் ஒருவர்கூட ஆஸ்பத்திரியில் வைத்தியஞ்செய்துகொள்வதில்லை, ஆஸ்பத்திரிக்குப் போய் வைத்தியஞ் செய்துகொள்வது இளப்பமென்று நினைக்கிறவர் பலர். அங்கு கொடுக்கப்படும் மருந்துகளில் நம்பிக்கையில்லாதவர்கள்பலர். ஆஸ்பத்திரியில் சிகிச்சைசெய்து கொள்வோர் வரவர அதிகமாய் வந்தாலும், இன்னும் அநேக வருஷகாலம் பெரும்பான்மையான ஜனங்கள் தங்கள் வீட்டிலேயே சிகிச்சை செய்துகொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இப்படியிருக்க, மேல்நாட்டு வைத்தியங்கற்ற சில இந்தியர் புதிதாய் ஒரு பிரேரணைசெய்கிறார்கள். என்னவென்றால் மேல்நாட்டு வைத்தியங் கற்றவர்களைத்தவிர மற்றப்பழைய மாதிரி வைத்தியர்கள் வைத்தியஞ் செய்வதைத் தடுத்துவிடவேண்டுமென்று பிரேரணைசெய்கிறார்கள். வைத்தியஞ் செய்வோர் அனைவரும் லைசென்ஸ் பெற்று வைத்தியஞ் செய்யவேண்டுமென்றும், இந்த லைசென்ஸ் மேல்நாட்டு வைத்தியங் கற்றவர்களுக்கே கொடுக்கப்படவேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். அதற்கு என்னநியாயங்கள் சொல்லப்படுகின்றனவென்றால், ஆயுர்வேத வைத்திய முறையானது எத்தனையோ ஆயிரம் வருஷத்துப் பழைய முறை யென்றும் இந்த முறை தற்காலத்துச் சாஸ்திர ஆராய்ச்சிகள் இல்லாமல் அனுஷ்டிக்கப்படுகின்றது என்றும், அந்த ஆராய்ச்சிகளின் பலனை யறியாதவர்கள் வைத்தியஞ் செய்வதால் உயிருக்கு மோசமேயொழிய நன்மையில்லை யென்றும் சொல்லுகிறார்கள். இப்போது சிலகாலமாக நம் தேசத்துப் பழைய ஆயுர்வேத வைத்தியமுறையைச் சோதித்து, அவசியமானபடி திருத்தி, நிலைநிறுத்தவேண்டுமென்ற விருப்பமுமுண்டாயிருக்கின்றது. பழைய மாதிரியாய் வைத்தியஞ் செய்யும் வைத்தியர்கள் பெரும்பாலும் மூடர்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்களுடைய மூடத்தனத்தால் கணக்கற்ற உயிர்ச்சேதங்களுண்டா



வது உண்மை. ஆனால், இவர்களுடைய மூடத்தனத்தைக் கருதி, ஆயுர்வேத வைத்தியமுறையை நிந்தித்தல் சரியல்ல. நல்ல மருந்துகளும், நல்ல சிகிச்சைகளும் இந்த முறையிற் காணப்படுகின்றன. மேல்நாட்டு வைத்தியம் எவ்வளவு உயர்ந்ததாயிருந்தாலும், கீழ் நாட்டாராகிய நமக்கு நம்முடைய விசேஷ நிலைமைகளை யுத்தேசித்து நமது பழைய வைத்தியத்தில் அனேக நன்மைகளிருக்கின்றனவென்று நம்பக்கூடும். ஆகையால், ஆயுர்வேத வைத்திய முறையை ஒரே வீச்சில் வீசித் துடைத்து விடுவது சரியல்ல. தற்கால சாஸ்திர ஆராய்ச்சியின் பலன்களை அறிந்தவர்கள் அதைச் சோதித்துத்திருத்தி அனுஷ்டிக்கக்கூடிய தாக்கவேண்டுமென்று நம்மவரில் பலர் நினைக்கிறார்கள். இப்படி நினைத்துத் தேசத்துப் பற்பல விடங்களில் ஆயுர்வேத வைத்திய முறைப்படி ஆஸ்பத்திரிகளும் போதகர் சாலைகளும் ஸ்தாபித்து வருகிறார்கள்.

இந்த நிலைமையில் மேற்கண்டபடி செய்யப்படும் பிரேரணைக்குக் கவர்ன்மெண்டாரிணங்கி, பழைய வைத்தியர்களையும் ஹக்கிம்களையும் வைத்தியஞ் செய்யாமற் தடுத்துவிடுவது விவேகமல்லவென்றே நினைக்கிறோம். எல்லாவிடங்களிலும், சிறு பட்டணங்களிலும் கிராமங்களிலுங்கூட, இப்படித் தடுத்துவிடவேண்டுமென்றுபிரேரிக்கப்படுவதாய் நாம் நம்பவில்லை. பெரிய பட்டணங்களில் மட்டுமே ஆரம்பத்தில் இப்படித் தடுக்கவேண்டுமென்பது இந்தப் பிரேரணை யென்று நம்புகிறோம். ஆரம்பத்தில் சென்னையில் இந்தப் பிரேரணை நிறைவேற்றப்படுமானால் என்ன விளையுமோ யோசிப்போம். லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு வைத்தியனே யில்லாமற்போய்விடும். வைத்தியத்தால் வியாதி குணப்படுவதும் குணப்படாததும் ஒரு பக்கமிருக்க, வைத்தியஞ் செய்துகொள்வதால் வியாதியஸ்தர்களுக் குண்டாகும் தைரியத்தையும் மனத்தேர்ச்சியையும் அலக்ஷியஞ் செய்யக்கூடாது. மேல்நாட்டு முறைப்படி சிகிச்சை செய்யப்பட்டாலும், வியாதி குணப்படுவதும் வியாதியஸ்தர் பிழைப்பதும் நிச்சயமில்லை அப்படியே பழைய முறைப்படிச் செய்யப்படும் வைத்தியத்தாலும் இந்த இரண்டும் நிச்சயமில்லை. ஆயினும் வைத்தியமேயில்லாமல் வியாதியை யனுபவிக்கத் தைரியம் எவனுக்குமுண்டாகாது. மேல்நாட்டு வைத்தியத்தில் நம்பிக்கையில்லாதவர்களுக்கும், அந்த வைத்தியத்தின் செலவுக்குப் பணமில்லாதவர்களுக்கும், மேல்நாட்டு வைத்தியர் கிடைக்காத விடத்தில் வசிப்போர்க்கும் என்ன கதி நேரிடும்? மேலும், இந்தப் பிரேரணை தேசாபிமானமற்ற பிரேரணையென்ற தோஷத்திற் குட்பட்டதா

யிருக்கின்றது. பல்லாயிர வருஷங்களாய் நம் பெரியோர் சிரமப்பட்டு எழுதிவைத்திருக்கும் சாஸ்திரத்தை இருந்த விடந் தெரியாமல் செய்வது தேசாபிமானமல்ல. இந்த விஷயத்தில் தர்பங்கா மகாராஜா சொல்வது தேசாபிமானம். என்னவென்றால், மேல்நாட்டு வைத்தியர்களில் சிரேஷ்டர் சிலரும், ஹிந்து வைத்தியர்கள், மகமதிய ஹக்கிம்களிற் சிலரும் சேர்ந்து ஒரு பெரிய ஸொஸைட்டி (ஆயுர்வேத சங்கம்) ஸ்தாபித்து, நமது பழைய வைத்தியத்தை தற்கால ஞானப்படித் திருத்தி அது அழியாமலிருக்கும்படிச் செய்யவேண்டும்.—சு. மி.

---

## ஸ்திரீ நூல்—பெண்கள் பக்கம்.

இப்பூவுலகின்கண் ஸ்திரீகள் யென்று ஜனித்திருப்பவர்கள் தினந்தோரும் காலையில் தங்கள் தங்கள் படுக்கையிலிருந்து, துயில் நீங்கி எழும்பும்போதும் பிற்பாடும் செய்யவேண்டிய கடன்கள் யாதென்றால் :—

பெண்பிள்ளைகள் தினந்தோரும் நித்திரையிலிருந்து எழுந்திருக்கும்போதே, தங்கள் தங்களுடைய கணவனுடைய ஆயுள் விருத்தியை மனதில் எண்ணி தெய்வத்தை ஸ்தோத்திரம் செய்யவேண்டும். மேலும் எழுந்தவுடன் தங்கள் இஷ்ட தெய்வத்தை பிரார்த்தித்து, தங்களுடைய காலைக் கடனை முடித்து கால், கரம், முதலியவைகளை சுத்தி செய்துகொண்டு, இல்வாழ்க்கைக்குறிய வேறு வேலைகளைத் தொடங்குமுன் சமனைத்த நிலத்தை பலகாலும், எறும்பு முதலிய பலவித பிராணிகளுக்கும் கொஞ்சமேனும் இம்சையில்லாது, விளக்கி, தூசு, குப்பை, முதலான அசுத்தங்களை நிவர்த்திசெய்து பின்னர் அழுக்கில்லாத ஓர் பாத்திரத்தில் நல்ல சுத்த புதிய ஜலத்தைக்கொண்டுவந்து, பசுவினது சாணத்தினது உதவியால் முற்றத்தில் சாணந்தெளித்து, பின்னர் கைகளில் ஒட்டாமல் சுத்திசெய்து மெல்லிய வஸ்திரங்கொண்டு மொழுகி கோலந் தீட்டியபிறகு தன் கொழுநனை எழுப்ப முயலவேண்டும். ஒருபொழுதும் சூரியன் உதித்த பின்னரும், தன் எஜமானனாகிய மணவாளர் புறம்பே போனபின்பும் முற்றத்தில் சாணம் தெளித்தல் முதலியவைகள் கூடாது. கூடாதவைகளைத் தவிர்த்துவிட்டு காலையில் எழுந்து சகல வேலைகளையும் சூரியன் உதயமாகுமுன் செய்யக்கூடிய பெண்களுக்கு நாளுக்கு நாள் அறிவு, செல்வம், புகழ், நோயின்மை, சுகமுதலியவைகள் பெருகிக்கொண்டேவரும். (தொடரும்.) V. A. Kesavan.



## விசித்திர விஷயங்கள்.

கோடை காலத்தில் ஈயானது நான்கு தடவை முட்டையிடும். ஒவ்வொரு தடவைக்கும் 80 முட்டைகள். ஒரு ஈயினின்றும் ஒரு வருஷத்துக்கோடையில் 20 லக்ஷம் ஈக்கள் பிறக்குமாம்.

---

ஈஜிப்டு தேசத்திலே "பிரமிட்" என்னும் பழமையான கட்டடங்கள் சுமார் 545 அடி உயரமிருக்கும், அவைகளின் அடிஸ்தலம் சுமார் 11 ஏகரா நிலத்தை வியாபித்துக்கொண்டிருக்கிறது.

---

பிரான்சு தேசத்திலுள்ள பாரிஸ் பட்டணத்தில் ஒரு நாடகசாலை இருக்கிறது. அதிலும் பெரிது பிரபஞ்சத்திலில்லை. அது மூன்று ஏகரா விஸ்தீரணமிருக்கும், அதைக் கட்டுவதற்கு 30 கோடி ரூபாய் சிலவழிந்திருக்கிறதாம்.

---

**சிவப்பு ஏரி.**—சுவிட்ஸர் லாந்தில் மொறாட் என்கிற ஒரு ஏரியுண்டு. அதின் நீரானது பத்து வருஷத்திற்கொருமுறை சிவப்பு நிறமாக மாறிவிடுகிறது. இது அதற்குள் உற்பத்தியாகும் ஒருவித செடியினாலெனக் கூறப்படுகிறது.

---

**பனிக்கட்டி மலை.**—பனிக்கட்டி மலைகளிலெல்லாம் கிரீன்லாண்டிலுள்ள பனிக்கட்டி மலை மகா பிரமாண்டமானது. இது ஆறு-லக்ஷம் சதுரமைலுள்ளதாய் சராசரி ஒன்றரை மைல் கனமுள்ளதாக விருக்கிறதாய்க் கணக்கிடப்படுகிறது.

---

**வாசனையால் அறிதல்.**—நரியானது காற்று தன் வாட்டமாயிருந்தால் மனிதன் அரைமைலிலிருக்கும்போதே வாசனையால் தெரிந்துகொள்ளும், எலியானது பால்கட்டி 50-அடி தூரத்திலிருப்பதை முகர்ந்து தெரிந்துகொள்ளும், மானானது எவ்வளவு அயர்ந்த தூக்கத்திலிருப்பினும் மனிதன் 200-அடி தூரத்திலிருப்பதை உஸ்வாஸத்தால் அறிந்துகொள்ளும்.

---

**காகித கட்டடம்.**—பிரான்சு தேசத்தின் தலைநகராகிய பாரீஸ் பட்டணத்தில் முழுதும் காகிதத்தினாலேயே கட்டப்பட்ட ஒரு ஆலயமிருக்கிறது. சுடு சுண்ணாம்பும், பாலும், முட்டையின் வெள்ளை கருவும் சேர்த்து காகிதத்தின்மீது

பூசப்பட்டிருப்பதால் சாந்தும் கல்லும் சேர்ந்த கட்டடம் போலவே பலமாகவிருக்கிறதாம். இது ஆயிரம்பேர் கொள்ளத்தக்க பெரும் கட்டடமென்றே தெரிகிறது.

---

## வர்த்தமானங்கள்.

**வரியே கிடையாத பட்டணம்.**—சுவீடன் தேசத்தில் ஆர்ஸன் என்றொரு பட்டணத்தில் வரியென்பதே கிடையாது. வர்த்தக விஷயமாய் துரைத்தனத்தாருக்கு போதுமான வருமானமிருப்பதால் குடிகளுடம் வரி விதிக்காமலே துரைத்தனம் நடத்தி வருகின்றன.

---

**பதினோரு வயது முதல் பட்டினியாம்:**—தொங்கலென்னும் ஊரில் ஒரு ஸ்திரீ பன்னிரண்டுவருஷமாய் அன்னம் தண்ணீர் ஒன்றேனும் அருந்தாமல் சும்மா இருக்கிறாளாம். அவளுக்கிப்பொழுது 23 வயதாகிறது. 11 வயது முதலிப்படியிருக்கிறாளாம். ஆனால் தேகம் மெலிவில்லாமல் நன்றாகவேயிருக்கிறதாம்.

---

**சென்னைமாகாணத்தில் பிளேக்.**—இச்சென்னை மாகாணத்தில் கோயம்புத்தூரிலும், மதுரையிலும் பிளேக் நோய் சிறிது நடமாடி வருவது நேயர்களுக்குத்தெரியும். ஜூன் மாதம் 7-ந் தேதி யன்றைக்கும் 8-ந்தேதி யன்றைக்கும் அனுப்பப்பட்டிருக்கும் பிளேக் ஜாப்தாவின்படி கோயம்புத்தூரில் அந்தத் தேதிகளில் அந்நோய் ஒருவருக்கும் காணவில்லையென்றும், ஒரு மரணம் மட்டும் நேரிட்டதென்றும், மதுரையில் ஒருவருக்கு அந்நோய் கண்டதென்றும் ஆனால் யாரும் சாகவில்லையென்றும் தெரிகிறது.

---

**அறுபதுபேர் கூடினார்களாம்.**—எம்மாஹேயர் என்ற ஸ்திரீக்கு இருபத்தேழு பிள்ளைகளிருக்கின்றனவாம். கிம்ஸ்டன், ஜமேக்கா என்னும் ஊர்களிலுள்ள மூன்று சகோதரிகளில் ஒருத்திக்குப் பத்தொன்பது பிள்ளைகளும், ஒருத்திக்கு 20 பிள்ளைகளும், மற்றொருத்திக்கு 21 பிள்ளைகளும் இருக்கின்றனவாம். ஒரு கலியாண வீட்டில் இந்த மூன்று சகோதரிகளும் அவரவர் புருஷன்களும் பிள்ளைகளுமாக 60 பேர் வந்து கூடினார்களாம். திருநெல்வேலிப்பாளையங்கோட்டையில் ஒரு கிறிஸ்தவப்பெண்பிள்ளை 22 பிள்ளைகள் வரையில் பெற்றவளாயிருக்கிறாள்.



நமது "வைத்திய போதினியின்" அபிவிருத்தியைக்கருதிய திருவாவடுதுறை ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ மஹா சன்னிதானம் அவர்கள் ரூ 50 கொடுப்பதாக வாக்களித்து அட்வான்ஸாக ரூ 15 கொடுத்திருப்பதாக, சென்றமாதசஞ்சிகையில் சொல்லியிருக்கிறோம். நினைத்த காரியங்களை அதிவிரைவில் முடிக்கவல்ல சன்னிதானம் அவர்கள் பாக்கி தொகையையும் கொடுத்து பத்திரிகையை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

**வைத்தியம் படிக்கும் பிள்ளைகள்:**—அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் வைத்தியத்தொழில் படிக்கும் பிள்ளைகள் வரவரகுறைந்து வருகிறார்களென்று பிரிட்டிஷ் மெடிக்கல் ஜெர்னல் பத்திரிகை கூறுகிறது. அந்நாடுகளில் 1902, 1903 வருஷத்தில் வைத்தியத்தொழிலுக்குப் படித்த பிள்ளைகளின் தொகை 24, 930 ஆக விருந்ததென்றும் 1907-1908ல் 21,011 ஆக விருந்ததென்றும், 1908-1909ம் வருஷத்தில் 20,551 ஆக விருந்ததென்றும் கணக்கிடப்படுகிறது. இப்படி வைத்தியத்தொழிலுக்குப்படிக்கும் பிள்ளைகள் குறைந்து வருவதற்கு நோய்கள் வராமற் காக்கக்கூடிய மருந்துகள் அதிகப்பட்டுக்கொண்டு வருவது ஒரு காரணமாய்ச் சொல்லப்படுகிறது.

---

**பழஞ்செருப்புகளிலிருந்து சீப்பு செய்யப்படுகிறது.**—நாம் உபயோகமற்றவையென்று எறிந்துவிடுகிற செருபபையெல்லாம் தலைவாரிக்கொள்ளும் சீப்புகளாகச் செய்யக்கூடும். பழஞ்செருப்புகளைத் துண்டுதுண்டாக நறுக்கி Chloride of Sulphur குளோரைட் ஆப் சல்பர், என்னும் கந்தகதிராவகத்தில்போட்டு வைத்தால் அவைகள் கடினமாகிவிடும். அப்புறம் அவற்றை எடுத்து தூளாக்கி அதோடு பிசின்போன்ற ஓர் வஸ்துவைக் கலந்து இறுகச்செய்யும் இயந்திரங்களில் செலுத்த அவைகள் பற்பலவிதமான சீப்புகள், கத்திப்பிடிகள், பொத்தான்கள்முதலியவை செய்யத்தக்க உறுதியான வஸ்துக்களாகிவிடுகின்றன.

---

## வைத்திய குறிப்புகள்.

சீனாவுக்கு வடக்கே ஒரு புதிய நோய் தோன்றியிருக்கிறது. இதனால் ஜனங்கள் மடிகிறார்கள். நோயுண்டானதற்கு அடையாளங்களாவன.—ஜ்வரம், நடுக்கம், வியர்வை, துர்நாற்றம், நாக்கு, வாய், சரீரங்கள் கருப்படைந்து பற்களும் கருநிறமாவது, பிறகு உயிர் போவது. எந்த வைத்தியர்களும் இதற்கு மருந்து கண்டுபிடிக்கவில்லை. 600 வருஷங்களுக்கு முன் இவ்வித நோய் உத்தர எஷ்யா, உருஷ்யா தேசங்களில் தோன்றி அநேக லக்ஷம்பிரஜைகளை நாசமாக்கிற்றும்.

**நோகாலியில் பிளேக்:**—வங்காள மாகாணத்தைச் சேர்ந்த நோகாலி ஜில்லாவில் பிளேக்நோய் வெகு விரைவாகப் பரவி வருவதாய்த் தெரியவருகிறது. பிளேக் நோய் இந்த ஜில்லாவில் பிரவேசித்துச் சொற்பத் தினங்களுக்குள் 24 பேருக்குப் பிளேக் நோய்கண்டு 13 பேர் இறந்துபோய் விட்டார்கள். ஒரு அஸிஸ்டெண்டு சர்ஜியனும், வேறு மூன்று வைத்திய உத்தியோகஸ்தர்களு மிதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஸிவில் சர்ஜியனும் டிஸ்டிரிக்டு மாஜிஸ்டிரேட்டும், இந்த வியாதியை வரவொட்டாமல் தடுக்க மிகுந்த முயற்சி செய்து வருவதாயும், தேசபாஷைகளில் பிளேக் வருவதற்குக் காரணத்தையும் அதைத் தடுக்கும் முறையையும் அச்சிட்டு அப்பத்திரிகைகளை எங்கும் பரவச்செய்து வருகிறார்கள் என்றும் தெரிய வருகிறது.

---

**கந்தக ஊற்று:**—ஜப்பானைப்போ லவ்வளவு எண்ணிறந்த உஷ்ண ஊற்றுகளையுடைய தேசம் உலகத்தில் வேறெங்குமில்லை. பல கந்தக ஊற்றுகளில் கொதிக்கின்ற தண்ணீர் ஊருகின்றது. சமீபத்தில வெடித்தமர்ந்துபோன எரிமலைகளின் அடிவாரங்களில் கந்தக ஊற்றுகள் விசேஷமாய் காணப்படுகின்றன. அவை கந்தகமுள்ள ஆவியை மேலே எழுப்பிக்கொண்டு, சதா தள தளவென்று கொதிக்கின்றன. தேசத்திற் கிடைக்கக்கூடிய கந்தகத்தில் பெரும்பான்மை இவ்வூற்றுகளிலிருந்தே எடுக்கப்படுகின்றன. சொறி, சிரங்கு, மேகம், குஷ்டம் முதலிய ரோகத்தினால் அவஸ்தைப்படுகின்ற ஜனங்கள் கந்தக ஊற்றுகளிற் சென்று நீராடுகிறார்கள்.

---

**பினாத்தல்:**—ஜுரமாய் இருக்கும்போது சிலருக்கு மறந்துபோன விஷயங்கள் ஞாபகத்துக்கு வந்து அவர்கள் அவைகளைப்பற்றிப்பேசுவார்கள். இவை எல்லோருக்கும் அனுபவம், விஷயம் தெரியாதவர்கள் ஏதோ ஜுரத்தில் பினத்துகிறான் என்று சொல்லி அலட்சியமாய் இருந்துவிடுவார்கள். இதற்குக் காரணம், ஜுரத்தில் மூளையின் நரம்புகள் வெகு சுறுசுறுப்புடன் இயங்கும். அப்படி அதிகமான இயக்கம் ஏற்படுவதால் மறந்துபோன பழய விஷயங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. சாதாரணகாலத்தில் மூளை அவ்வளவு வேலை செய்கிறதில்லையாதலால் ஞாபக சக்தி குறைந்துவிடுகிறது.



**வியாதிகளுக்கு மூலிகைப் பிரயோகம்.**

சோற்றுக் கற்றாழைச் சோறும், பசும்பாலும் கலந்து உண்ண இந்திரியம் கட்டும், சொறி, குஷ்டம், சோகை, காமாலை தீரும், மூலச்சூடு தணியும், கண் குளிரும்.

வல்லாரைச் சமூலத்தைப் பாலிற்கொள்ள மருந்தீடு, க்ஷயம், காசம், இருமல், ஈளை, கைகால்களில் உண்டாகும் ஊறல் தீரும். நெடுநாட்கொள்ள நரைதிரை மாறும்.

செங்கழுநீர்க்கிழங்கைப் பாலிற்கொள்ள உடல் குளிரும், விந்தூறும், நாள்படச் சாப்பிட்டால் தேகத்தில் நோய் உண்டாகாது.

---

Tea & Cocoa.—தேயிலை, கோகோ இவ்விரண்டும் தேகத்திற்கு புஷ்டியைத் தரும். ஆனால் இவைகளை அதிகமாய்க் குடித்தால் சரீரத்துக்கு மிகவும கெடுதலை யுண்டுபண்ணும்.

---

Bleeding from the nose. மூக்கிலிருந்து இரத்தம் வருதல்.—படிக்காரத்தைச் சுட்டு பொடிபண்ணி புகையிலைப்பொடி போடுவதுபோல் உபயோகித்தால் இரத்தம் நின்றுவிடும்.

---

Headach. தலைவலி.—நெடுநாளாக ஒற்றைத் தலைவலியினால் வருந்துபவர்கள் கருஞ்செம்பை புஷ்பத்தினை நல்லெண்ணெயிற் சேர்த்துக்காய்ச்சி, சூரியோதயத்திற்கு முன்பு வென்னீரில் ஸ்நானம் செய்துவரவும்

---

## ஹாஸ்யத்துணுக்குகள்.

உபாத்தியாயர் ஒருபையனைப்பார்த்து—"இமயமலை எங்கே இருக்கிறது சொல்" என்றார். பையன் படபடவென்று சிரித்து, தங்களுக்கு இவ்வளவு வயதாகியும், பி.ஏ., எல்.டி., முதலிய பரீக்ஷைகளெல்லாந் தேர்ச்சியடைந்தும் இமயமலை இருக்கிற இடமின்னதென்று தெரியாமல் என்னைக் கேட்கிறீர்களே என்று நினைக்கும்போது என்னையறியாமலே சிரிப்பு வந்துவிட்டது என்றான்.

---

ஒருநாள் இராத்திரி ஒருவன் ஒரு வீதிவழியாக "நெருப்பு நெருப்பு என்று கூவிக்கொண்டே போனான்" உடனே எல்லோரும், எங்கே? எங்கே? என்று கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார்கள். அந்த துஷ்டன் அவர்களைப் பார்த்து "சுருட்டைப் பற்றவைக்க கொஞ்சம நெருப்பு வேண்டும் யாராவது தயைசெய்து கொஞ்சம் நெருப்பு கொடுப்பீர்களா? என்றான்.

# கர்மயோகி.

## ஓர் மாதாந்தப் பத்திரிகை.

### ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி, பத்திராதிபர்.

ஆரியதர்மம், பாரதநாட்டுக் கலைகள், தொழில்கள், காவியங்கள், சாஸ்திரங்கள், ராஜாங்க விஷயங்கள் முதலானவற்றை யெல்லாம்பற்றி விவரிக்கும். யாவரும் வாசித்து எளிதிலுணரத்தக்க விதத்தில் சாதாரணமான இனிய, தெளிய தமிழ் நடையில் எழுதப்படுவது. இதைவிட அருமையானதும் குறைந்த சந்தா வுள்ளதுமான பத்திரிகை தமிழ் நாட்டில் வேறே கிடையாது. மாதிரிப் பத்திரிகை வேண்டுவோர் காலணாக் கார்டு எழுதினால் உடனே அனுப்பப்படும். சித்திரங்கள் பதிப்பிக்கப்படும்.

### சந்தா விவரம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய விடங்களுக்கு 1-வருஷம். ரூ. 2-0-0. 6-மாதம் ரூ. 1-4-0. பெனாங், ஸிங்கப்பூர் முதலான விடங்களுக்கு. ரூ, 3. தனிப்பிரதி, ரூ. 0-4-0.

'கர்மயோகி' பத்திரிகைகருத் தமிழ் நாட்டிலும், வெளித்தேசங்களிலுள்ள தமிழ்க் குடியேற்றங்களிலும் ஏஜெண்டுகள் வேண்டும். ஏஜெண்டுகளுக்குத் தக்க சம்பளங்களுங் கமிஷன்களும் கொடுக்கப்படும்

'கர்மயோகி' பத்திரிகையில் விளம்பரங்கள் பிரசுரிக்கும் வியாபாரிகளுக்கு மிகுந்த லாபமுண்டு. தமிழர்களுக்குள்ளே, தமது வியாபாரத்தைப் பரவச் செய்யவேண்டுமென்ற எண்ணமுடையவர்களுக்கு இதைப்போன்ற கருவி வேறு கிடைப்பதரிது.

'கர்மயோகி' பத்திரிகையைப்பற்றிப் பண்டிதர்களும், ஸாமான்ய ஜனங்களும், ஆண், பெண், முதியோர், இளைஞர் ஆகிய எல்லோரும் நல்ல அபிப்பிராயங் கொடுக்கிறார்கள்.

தாம் இதுவரை சந்தாதாரில்லாவிட்டால் உடனே ஒரு போஸ்டு கார்டு எழுதி பெயரை பதிந்துகொள்க.

மானேஜர்,
'கர்மயோகி' காரியஸ்தலம்,
புதுச்சேரி.

REGISTRAR OF BOOKS
REGISTERED
28 NOV 1910
MADRAS.

உ

# வைத்திய போதினி.

சித்திரப் படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

புத். 1. | 1910-ஞு ஆகஸ்டு மீ 1உ | நெ. 4.

## தோல் ஆங்கிலத்தில் (SKIN) ஸ்கின் என்று சொல்லப்படும்.

மனித சரீரத்தின் உத்திரங்களும் தூண்களுமான எலும்பைப் பற்றி இதுவரையில் சங்கிரகமாக சொல்லிவந்தோம் இப்போது அதன் போர்வையாகிய தோலின் சுபாவத்தையும், பிரயோஜனத்தையும்பற்றி விசாரிப்போம். நமது கண்ணுக்குப்புலப்படும் சரீரத்தின் மேல் பாகத்திலிருப்பதற்குத் தோல் என்று பெயர். இது சரீரத்துக்குள்ளிருக்கும் எலும்பு, தசைநார், நரம்பு, இரத்தாசயம், குடல், நுரையீரல் முதலியவைகளைப் பாதுகாக்கும் ஓர்விதப் பைபோன்ற கவசமாயிருப்பதோடு மழை, பனி, வெயில் முதலியவற்றால் சரீரத்துக்குள்ளிருக்கும் மிக நுட்பமான வஸ்துக்களுக்கு யாதொரு கெடுதியும் உண்டாகா வண்ணம் தடுக்கும் கருவியாகவும் உபயோகப்படுகிறது. இந்தத் தோல் இருவகைப்பட்டது. மேற்தோலுக்குப் பீத்தோல் (Cuticle,) கியுடிகில், என்றும், அதற்கடியிலிருப்பதற்கு உட்தோல் (Cutis,) கியுடிஸ் என்றும் சொல்லப்படும். மேல் தோலில் இரத்தக்குழாய்கள் நரம்புகள் முதலியவையில்லை. உள் தோலில் மிக நுண்ணிய இரத்தக்குழாய்களும், நரம்புகளும் அளவு சங்கியையில்லாமல் அடர்ந்திருக்கின்றன. மேல் தோல், உள் தோல் இவ்விரண்டிற்கும் மத்தியில் ஒருவித பதார்த்தமுண்டு அதற்கு (Retemucosum,) ரிடிமியுகோஸம் என்று பேர். இது சரீரத்

திற்கு நிறத்தைக் கொடுக்கின்றது. உஷ்ணப் பிரதேசிகளுக்கு இந்தப் பசை கறுத்தும், சீதளப்பிரதேசிகளுக்கு அதாவது ஐரோப்பா கண்டத்தவர்களுக்கு வெளுத்தும், அமெரிக்கா தேசத்தார்களுக்கு தாம்பிர நிறமாயுமிருக்கும். சீதோஷ்ண தேசங்களுக்குத் தக்கவாறு தேசவாசிகள் தேகம் கறுத்தும், வெளுத்துமிருக்கும். உட்தோல் மேல் தோலைவிட அதிக ஆழமும் கனமுமுள்ளது. மேல் தோலிலுள்ள ரோமங்களை நீக்க க்ஷவரகன் கத்தியால் வழிக்கும் போதும், கைகளால் சொரிந்துகொள்ளும்போதும், யாதொரு உபத்திரவமும் உண்டாகாமல் மேற்சொன்ன கத்தி முதலியவை உட்தோலில் படும்போது பொறுக்கமுடியாத வலியும் எரிவந்தமும் உண்டாவதற்குக் காரணம் அத்தோலிலிருக்கும் ஸ்பரிச நரம்புகளும், இரத்தக் குழாய்களுமேயாம். உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரையிலும் நமது தேகத்துக்கு மேற்போர்வையாக இருக்கின்ற சருமம் முழுவதும் சற்றேறக்குறைய 70-லக்ஷம் நீர்க்கால்கள் நிரம்பி இருக்கின்றன. இந்த நீர்க்கால்களின் மூலமாகத்தான் தேகத்தின் அசுத்தங்கள் வெளிப்படுகின்றன. தேகம் அதிக உஷ்ணங்கொண்டிருந்தால் வியர்வைநீர் அதிகஅளவாக வெளிப்பட்டுச்சருமத்தின்மீதுத் துளித்துளியாகக் காணப்படும். இன்னும் சருமமானது தண்ணீர் முதலிய திரவ பதார்த்தங்களை உள்ளுக்குள் உறிஞ்சிக்கொள்ளும் சக்தியுள்ளதாயும் இருக்கின்றது. தாக விடாயால் வருந்துவோர் நல்ல தண்ணீர் கிடைக்காதபோது உப்புத்தண்ணீரில் ஸ்நானம் செய்வதால் தாக சாந்தியடைகிறார்கள். பசிப் பிணியால் பாதிக்கப்படுகிறவர்களும், நல்ல தண்ணீரில் ஸ்நானம் செய்தவுடன் களை நீங்கிக் களிப்பெய்துகிறார்கள். இன்னும் மருந்து சாப்பிட அசக்தர்களாயிருக்கும் வியாதியஸ்தர்களுக்கும் அருந்துவதற்கு அருவருப்பான அவுஷதங்களையும் தோலின் மேல் தேய்ப்பதை உங்களில் அநேகர் கண்டும் கேட்டுமிருக்கலாம். தைலங்களைத் தோலின்மேல் தேய்ப்பதினால், ஜன்னி, மேகம், மேகப்புடை, தினவு, வாய்வு முதலிய ரோகங்கள் நீங்குகின்றன. சருமத்தில் வேர்க்குருபோல்காண்பதற்கு பாபில்லி (*Papillae*) என்றுபேர். இவைகளில் ஸ்பரிச நரம்புகளும், ரக்த நரம்புகளும் ஊசி முனை நாட்ட இடமில்லாத அவ்வளவு நெருக்கமாய் வியாபித்திருக்கும். அகத்தோலுக்கடியில் கொழுப்புண்டு. அதில்தான் ஸ்வேதகோளங்கள் (Sudoriparous,) ஸுடோரிபெரஸ், புதைந்திருக்கும். சருமத்தின்கீழ் நிணக்கோளங்களுமுண்டு (Sebiparous glands) ஸெபிபெரஸ் கிளாண்ட்ஸ், அவைகள் ரோமக்கால்களில் ஒட்டிக்கொண்டிருக்கும். அவைகளில் ஜனிக்கிற எண்ணெய்ப்பசையானது ரோமக்கால் வழியாய் வெளிப்படும். இதுவே தோலிற்கு மிருதுவைக் கொடுக்கும். புறத்தோல் எந்த வஸ்துவினால் உறுப்படுகின்றதோ, அவ்வகைச் சத்தினாற்றான் நம்முடைய நகங்களும் (Nails,) நெயில்ஸ், உண்டாகின்றன. நகத்துக்கும் மேல் தோலுக்கும் வித்தியாசமில்லை. ஆனால் நகமானது கொஞ்சம் வைரத்தையுடையது. மயிருக்குச் சிறிய வேர்கள் உள்தோலிலிருக்கும். அந்த மயிர் வேர்களுக்குப் போஷணை அவைகளைச் சுற்றிலும் ஓடும் இரத்தக் குழாய்களின் வழியாய்க்கிடைக்கின்றது இதுவே மேற்சொன்ன நிணக்கோளங்களாகும். தோலில் இரக்தத்தைக்கொண்டுபோகும் நரம்புகள் கணக்கில்லாமலிருப்பதினால் இதைப் பாதுகாக்கும் விஷயத்தை நாம் அதிகமாய்க் கவனிக்க வேண்டும். அநேகருக்குத் தோலில், வெள்ளை, சிகப்பு, கருப்பு நிறமுள்ள மேகங்களும், தோலில் சுரணையற்றும், வெடித்தும், புண்ணாகியும், கன்னம், கை, கால் தோல்கள் அறுபது எழுபது வயது ஆகுமுன் சுருங்கிப்போயுமிருக்கின்றன. இவைகள் எல்லாம் தோலில் இரக்தம் குறைந்தும், கெட்டுமிருப்பதால் உண்டாகும் உபாதிகளேயாம், தோலைப் பேணும் முறையாவது சுத்த ஜலத்தில் நீராடுவதும், சுத்தமான உடை உடுப்பதும், அளவாக வெளிச்சத்திலும், காற்றிலும் நடப்பதும் வேர்வை பிறக்கும்படி சரீர அப்பியாசம் செய்வதுமாம். பிரதி தினமும் நீராடுவது உடம்பிலுள்ள துவாரங்களின் வழியாய்க் கழியும் கழிவுகள் வெளிப்படும்படி அத்துவாரங்களைச் சுத்தஞ்செய்யும். குளிர்காலத்தில் ஆட்டு ரோமத்தாற் செய்த கம்பளி உடுப்பு உடுத்துக்கொள்வது தோலிலுள்ள சூடு வெளிப்படாமலும், குளிர்காற்று மேலே படாமலும், தடுத்துக்கொள்ளும். "கூழானாலுங் குளித்துக்குடி—கந்தையானாலுங் கசக்கிஉடு" என்னும் பழமொழி சுகாதாரம் இன்னதென்பதை எவர்க்கும் உணர்த்துகின்றது.



---

ஜூலை மாத சஞ்சிகையின் 51-வது பக்கத்தொடர்ச்சி.

## மனிதர்க்குரியவுணவு.

---

அங்காதிபாத சாஸ்திரமுறையின்படி பார்ப்பின், ஜந்துக்கள் மாம்ஸபக்ஷிணிகளென்றும், புல் பூண்டுண்பவையென்றும், பழங்களையுண்பவையென்றும், எல்லாவற்றையுமுண்பவையென்றும், நான்கு வகைப்படும். ஜந்துக்களின் பற்கள், முன்வாய்ப்பற்களென்றும், சிங்கபற்களென்றும், மூன்றுவகையினவாம். மாம்ஸபக்ஷிணிகளாகிய சிங்கம் முதலியவற்றின் முன்வாய்ப்பற்கள் அதிக பெரியனவாயிருப்பதுமில்லை. ஆனால் அவற்றின் நாய்ப்பற்களென்கிற சிங்கப்பற்கள் மற்ற ஜந்துக்க

ளின் பற்களிலும் அதிகமாக நீண்டு துரடுகள் போல் வளர்ந்திருப்பதால் அவற்றைக்கொண்டு அவை தங்கள் ஆகாரத்தைப் பிடித்திழுத்துக்கொன்று தின்னும். மாம்ஸம் தின்கிற மிருகங்களின் கடைவாய்ப்பற்கள் சற்றே கூர்மையிருக்கின்றதனால் அவை மாம்ஸத்தை கடித்து நன்றாய்ப் பொடித்துண்ணுவதற்கெளிதாகும். அவற்றின் மேல்வாய் பற்களும் ஒரே வரிசையாய் நடுவே இடைவெளியின்றிருக்கும்.

இது இப்படியிருக்கையில், யானை, குதிரை, பசு முதலிய மரம், பட்டை, புல், பூண்டு, செடி, கொடி முதலியவற்றை உண்ணுகின்ற மிருகங்களின் முன்வாய் பற்களோ, வெளியில் கத்தி முனையைப்போல் கடித்துத்துணிக்கும்படி அழகாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் சிங்கபற்கள் புலி முதலிய சண்டையிடும் துஷ்டமிருகங்களுக்கிருப்பது போல மிகப்பெரியனவாய் வளர்ந்திராமல் சிறியனவாயிருக்கும். அன்றியும் புலாலுண்ணும் மிருகங்களின் கடைவாய்ப்பற்கள் நுனியில் பரந்திருக்கும். குரங்கு, அணில் முதலிய கனியுண்ணும் மிருகங்களின் பற்கள் திரைதிரையாயும், மூடினால் நடுவே இடைவெளி இல்லாமலும் அழகாயுமிருக்கும். புலாலையுண்ணும் மிருகங்களுக்கிருப்பது போல இவற்றிற்கு வக்கிர தந்தங்களில்லை. பன்றி, கரடி முதலிய கண்டதையெல்லாமுண்ணு மிருகங்களின் முன்வாய்பற்கள் குரங்கு முதலிய கனியுண்ணுமிருகங்களின் பற்களைப்போலவும், சிங்கபற்கள் மாம்ஸமுண்ணும் மிருகங்களின் பற்களைப்போலவும் கடைவாய்ப்பற்கள் கூர்மையாகப் பரந்துமிருக்கும்.

இவ்வாறு வேறுவேறான பற்களுள் மனிதர்களின் பல் எந்தவகையானதென்று பார்த்தால் அவர்களுக்கு இன்னவகையான உணவுதான் வேண்டுமென்பதை எளிதிலறியலாம். மனிதரின் பற்களும், குரங்கு, அணில் முதலிய கனியுண்ணும் ஜந்துக்களின் பற்களும் ஒரேவிதமென்றாலும் குரங்கின் பல் சற்றே நீண்டிருக்கும். மனிதரின் பற்கள் ஆடு, மாடு, சிங்கம், கரடி, பன்றி, இவற்றின் பற்களுக்கு முற்றும் வேறாக ஒருவாறு பழத்தையுண்ணும் ஜந்துக்களின் பற்களையொத்திருக்கும். ஆதலினால், மனிதரைப் பழத்தையுண்ணுபவரென்று சொல்லலாம்.

ஜந்துக்கள் உண்ணுமுணவு தங்கியிருக்குமிடமாகிய குடலின் அளவைக்கொண்டு அவற்றிற்கு இன்னவிதமான உணவு தான் வேண்டுமென்றுங்காணலாம். ஊனை உண்ணும் பிராணிகளின் குடல் அவற்றின் தேகத்துக்கு மூன்று முதல் ஐந்து மடங்கு நீளமாகவிருக்கும். புல் பூண்டுசெடிகளையுண்ணுகின்ற ஜந்துக்களின் குடல் அவற்றின் தேகத்தின்



REGISTERED 28 NOV 1910 MADRAS

நீளத்துக்கு இருபது முதல் இருபத்தைந்து மடங்கு அதிகமாயிருக்கும். பழத்தையுண்ணும் ஜந்துக்களுக்கு இந்தக்குடலிருப்பதுமன்றி, இதனோடொட்டினாற்போல மணிக்குடலொன்று, இரண்டாவது குடலொன்றுமுண்டு அவற்றின் குடல் தேகத்தின் நீளத்திலும் பத்துப்பன்னிரண்டு மடங்கதிகமாயிருக்கும். மனிதருக்கும் அப்படியேதானிருக்கிறது இதனாலும் மனிதர்க்குரிய உணவு பழமென்று காணலாம். இவ்வாறு பூமியிலுள்ள பிராணிகளில், பறவையின் வேறுபாடுகளையும், அவற்றின் அளவையும் நன்றாய்ப்பரிசோதித்தறிந்த தத்துவ ஸாஸ்திரிகளெல்லோருமே ஒரு துணிவாய் மனிதர்க்கேற்ற உணவு மூலவர்க்கந்தானென்றும் அவர்களுக்கு மற்ற ஜந்துக்களின் மாம்ஸம் ஒருபொழுதுமே உணவாகாதென்றும் உறுதியாய்ச்சொல்லுகிறார்கள் ஆதலால் பூமியிலுண்டாகிற பற்பலவகையான தானியங்கள், பழவகைகள், வேர்வகைகள், கிழங்குகள் மற்றுமுள்ள மூலவர்க்கங்களுமே மனித தேகத்திற்கு அநுகூலமான உணவென்று சொல்லலாம்.

பிராணி தர்மகுணசாஸ்திரத்தின்படியும் பார்ப்போம் இயல்பாகவே பிராணிகள் தங்களுக்கேற்ற உணவுப்பொருளைக் கண்ணாலே கண்டமாத்திரத்தில் அவற்றிற்கோர் சந்தோஷமும், அவற்றின் மணம் உள்ளே செல்லுகையில் ஆனந்தமும், அவரவர் உண்ணும்போது கொண்டாட்டமுமாயிருப்பதைக் காணலாம். அதிலும் புலி, ஓநாய் முதலிய துஷ்டமிருகங்கள் தங்களுக்குணவாகும் ஜந்துக்களைக்கண்டால் அவற்றைக்கொன்றுதின்ன தாவிப்பாய்வதோடும். யானை, மாடு, குதிரை, மான்முதலிய பிராணிகள் மற்ற ஜந்துக்களைக்கண்டால் அவற்றிற்கு தீங்கொன்றுமே விளைவிக்கிறதில்லை. இவற்றின் நல்லுணவாகிய புல் பூண்டு முதலியவற்றோடு சிறிது ரத்தம் பட்டிருந்தாலும், அவற்றை அவை மோர்ந்துபார்ப்பதுமில்லை, குரங்கு, அணில் முதலிய கனியுண்ணும் ஜந்துக்களுக்குப் பழங்களைக்கண்டால் மட்டுமே ஆசை, அவ்வாறே குதிரை, ஆடு, மாடுகளுக்கு நல்ல புல்லையுந்தண்ணீரையுங்கண்டால் ஆசை.

மனிதர்க்கு ஜந்துக்களைக் கொல்லுவதற்கு மனமேயிராது; வேட்டையாடி வாடிக்கைப்பட்டவர்களும், கசாப்புக்காரர்களும் மட்டுமே செயற்கைவாஸனையினால் உயிர் வதைசெய்வதற்கு அஞ்சுவதில்லையேயன்றி மற்றப்படி யாருமே கொல்லத்துணியார். ஜந்துக்களை கதறக்கதற அவற்றின்மேல் காலெல்லாம் ரத்தமாய்ப் பூமியின்மேல் விழுந்து கிடப்பதைக் குழந்தைகளேயன்றிப் பெரியவர்களும் காணப்பொறாரன்றோ! புலாலுண்பவர்களிற் பெரும்பான்மையோர்க்கு முதலில் ஜந்துக்களைக்

கொல்லுவது தெரியாமையால் அதில் ஆசை. ஊனையுண்பவர்களுக்கு அதனோடு வேறு சம்பார வர்க்கம் சேர்த்தால் மட்டுமே அது நன்றாய் இருக்கும். காய் கனிகளை உண்பவர்க்கோவெனின் அவற்றை காணும்போதே ஆசையாயிருக்கும். நல்ல ஊறுகாயை கண்டால் அதை யுண்ண நாவில் ஜலம் ஊறுமன்றோ? ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, வால்மிளகு, குங்குமப்பூ இவற்றைக்கண்டால் யார்க்குமே ஸந்தோஷமாயிருக்கும். யார்க்கும் இயல்பாகவே மூலவர்க்கத்தை சேர்ந்த உணவையுண்ணத்தான் ஆசையாயிருக்கும்.

மனிதர்களின் பற்கள் சில மாம்ஸமுண்ணு மிருகங்களின் பற்களை போல் சீக்கிறத்தில் சொத்தை விழுந்துகெட்டுப்போவதில்லை. அன்றியும் அவர்கள் மூச்சுவிடும்போது புலாலுண்ணும் மிருகங்களின்மூச்சுக்காற்றையும் போலத்துர்கந்தம் வீசுகிறதுமில்லை. மூலவர்க்க உணவு நன்றாய்ப்பக்குவஞ் செய்யப்பட்டாலும் படாவிட்டாலும் தேகத்துக்குக்கேட்டை யுண்டுபண்ணும் மேலே கூறியவையனைத்தையும் உண்மையென்று நிபுண வைத்தியர்கள் கண்டறிந்து அப்படியே அனுஷ்டித்துக்கொண்டும் வந்திருக்கிறார்கள்.

---

## மெடிகல் ரெஜிஸ்டிரேஷனும் ஆயுர்வேத வைத்தியமும்.

---

இந்த மெடிகல் ரெஜிஸ்ட்ரேஷன் விஷயமாகச் சிலநாட்களாய் ஆங்கிலப் பத்திரிகைகளின் வாயிலாகப் பலவாறு வியாஸங்கள் வெளி வந்துகொண்டிருக்கின்றன வென்பதையும் அது விஷயமாக செய்ய வேண்டிய சீர்திருத்தங்களையும் சென்ற மாத சஞ்சிகையில் சொல்லியிருக்கிறோம் அது விஷயமாக பண்டிட், எம். துரைஸாமி ஐயங்கார் சுதேசமித்திரனில் எழுதியிருக்கும் வியாசத்தை இங்கு கூறுகிறோம்.

வைத்தியம் செய்யுந் தொழிலையுடைய ஒவ்வொரு மனிதனும் தனது பெயர் முதலியவைகளை ரிஜிஸ்டர் செய்து லைஸென்சு பெற்று வைத்தியம் செய்யவேண்டும்; என்றாலும் மேல்நாட்டு வைத்திய சாஸ்திரங்களைப் படித்து யூனிவர்ஸிடி பரீட்சையில் தேறி டாக்டர் என்று பெயர் வாங்கினவர்களுக்கன்றி இதர வைத்தியருக்கு இந்த லைஸென்சு கொடுபடக்கூடாது. வைத்தியம் செய்வோர் அனைவரும் அவ்வைத்திய முறைக்கு அங்கங்களான சரீரத்வம் (Physiology & Antomy) பதார்த்தகுணபாடம் (Materia Medica) ஆரோக்யம் (Hygiene) ரோகநிதானம் (Pathalogy) பிரஸவ சாஸ்திரம் (Midwifery) முதலிய சாஸ்திரங்களைப் படித்திருக்கவேண்டுமென்றும், இம்மாதிரி ஆங்கில வைத்தியம் செய்வோரன்றி மற்றவர் கற்றவரல்லவென்றும், ஆனதால் அவ்வித வைத்தியர்கள் ஜனங்களின் சரீரத்தைக் கெடுத்துவிடுவதற்குக் காரணமாகின்றனர் என்றும், ஆனதுபற்றி இத்தகைய வைத்தியர்களை வைத்தியம் செய்யவொட்டாமல் தகைந்துவிட வேண்டுவது ஜனங்களின் க்ஷேமத்திற்கு மிகவும் அவசியமானதென்றும் ஆங்கில வைத்தியம் கற்றவர் கருதுகின்றனர்.



அவர்கள் சொல்வதிற் சிறு பாகம் உண்மையாகவும் உலகத்துக்கு உபயோகமானதாகவும் இருப்பினும், உண்மையாகாதனவும், உலகத்துக்கு உபத்திரவங்களை யுண்டுபண்ணுபவையாகவும் சில இருக்கின்றன. இவர்கள் எண்ணும் விதமாய் நாட்டு வைத்தியர்களிற் பெரும்பான்மையோர் வைத்திய சாஸ்திரங்களைக் கற்காமலே, விஷயம் தெரியாமலே, அநுபோகமேது மில்லாமலே, வைத்தியம் செய்ய முற்படுவது பெருந் தப்பிதமென்பதை நாமும் அங்கீகரிக்கின்றோம்; ஆனால் அவர்களைப் பார்த்து ஆயுர்வேத வைத்தியர்களிற் பெரும்பான்மையோரான படித்தறிந்து நன்கு அநுபோகமுள்ளவரையும் அதே கண்ணால் பார்ப்பது பகுத்தறிவுக்கு இலக்ஷணமல்ல. ஆயுர்வேத வைத்திய சாஸ்திரங்களைக் கசடறக்கற்ற பலபெரிய ஆயுர்வேத டாக்டர்கள்; இங்கிலீஷ் வைத்தியர்களைவிடப் பல விஷயத்திலும் உலகத்தில் அசாத்தியமான வியாதிகளையும் ஸ்வஸ்தப்படுத்தக் கூடிய அவ்வளவு அதிக திறமையுள்ளவர்களாயிருக்கின்றனர் என்பதை இங்கிலீஷ் வைத்தியரில் பெரிய அநுபோகசாலிகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஆயுர்வேத வைத்தியத்தின் சிறப்பு இத்தகையதென்று அறியாத இந்த ஆங்கில வைத்தியர்கள், ஆங்கில வைத்தியம் ஆயுர்வேத வைத்தியம் என்னும் இவ்விருமுறைகளிலும் நல்லறிவுள்ள லெப்டினண்ட் கர்னல் W. G. கிங் M. B., and C. M., D. Ph., C. I. E. I. M. S. (Sanitary Commissioner to the Government of Madras) என்கிற இவர் முதலிய பெரியோரின் கொள்கைகளைச் சற்றேனும் அறிந்திருப்பாராகில் இவ்வாறு சொல்ல இவ்விஷயத்தில் துணிவுபெறமாட்டார்கள். இந்த ஆங்கில வைத்தியர்கள் ஆயுர்வேத சாஸ்திரங்களின் தத்துவங்களைச் சிறிதும் படித்தறியாமலே கண்ணை மூடிக்கொண்டு அது சரியான சாஸ்திரமல்லவென்று சொல்லி, அந்தச்சிறந்த சாஸ்திரங்களையும் அவை செய்து உலகத்திற்

பிரசுரம் செய்த மஹாமேதாவிகளான நமது மூத்தோரையும் இப்பொழுது இச்சாஸ்திரங்களின் தத்துவங்களை யறிந்து மிகப்பெயர்பெற்ற பெரிய வைத்திய நிபுணரையும் அனியாயமாய் அலக்ஷியம் செய்வது எமது மனதில் விசனத்துடன் வியப்பையும் தருகின்றது. நாட்டு வைத்தியத்தை தொலைத்துவிட இவர்கள் முன்வருகிறார்களேயன்றி, அதில் உள்ள சாராம்சம் என்னவென்பதை நிதானித்து யோசிக்க இவர்களில் ஒருவரும் வெளிவரவில்லை. ஆரிய வைத்திய நூல்களையும், அவற்றின் கொள்கைகளையும் உலகில் அழிந்துபோக விடாமல் மேலோங்கச் செய்ய ஆங்கில வைத்தியம் கற்ற நமது சுதேச டாக்டர்கள் அல்லது கவர்ன்மெண்டார் முற்படுகிறார்களில்லையானாலும், அதைச் செழிக்கச் செய்யக் கூடுமானவரையில் உற்சாகத்துடன் பிரவிருத்திக்கும் படித்தறிந்த பெரியவர்களையும் அப்படிச் செய்ய விடமாட்டோமென்று ஆங்கில வைத்தியங்கற்ற நமது இந்தியர் கூட கவர்ன்மெண்டாரைத் தூண்டினாரானால், இதைவிட நமது ஜனங்களுக்கும் நமது பூர்வீக சாஸ்திரங்களுக்கும் நமது மூத்தோர்களின் அபாரமான புத்தி வைபவங்களுக்கும் கேடு வேறொன்றும் வேண்டுமோ? படித்தறியாத பாமர வைத்தியர்களை அத் தொழிலிலிருந்து விலக்குவது மாத்திரம் நன்மைக்கிடமாகுமேயல்லாது, படித்தறிந்த விவேகிகளான ஆயுர்வேத வைத்தியரையும் அப்பாமருடைய கணக்கில் சேர்ப்பதென்பது பலவகையிலும் தீமைக்கே இடமாகும். இப்பொழுது ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஆயுர்வேத காலேஜ் முதலியவற்றை நல்ல ஸ்திதிக்குக்கொண்டு வருவதற்கும் அந்த ஸ்தாபனங்களில் சரீரதத்துவம் முதலிய வைத்தியத்திற்கு வேண்டிய சாஸ்திர முறைகளை நன்கு கற்பிப்பதற்கும், இன்னும் பலவிடங்களில் ஆயுர்வேத பாடசாலைகளை யேற்படுத்துவதற்கும் அவற்றின் மூலமாய் நாட்டு வைத்தியர்களின் திறமையை மேன்மைப்படுத்துவதற்கும் இவர்களும் கவெர்ண்மெண்டாரும் முற்பட்டால் பிரயோஜனகரமாகவும் பலவிதத்திலும் நன்மைக்குக் காரணமாகவும் ஆகுமேயன்றி, மற்ற வைத்தியங்களை ஒழித்துவிடவேண்டி முயற்சிசெய்தால் அது இந்தியாவிற்கே பெருங்கேட்டை விளைவிக்கக் கூடியதாகுமென்பதில் சற்றும் சந்தேகமில்லை.

ஆயுர்வேத வைத்தியரையே ஒழித்து விட்டார்களானால் பெரிய நகரங்கள், சிறிய நகரங்கள், இவைகளில் மாத்திரமே யல்லாமல் கிராமாந்தரங்களிலும் ஆஸ்பத்திரிகள் அல்லது இங்கிலீஷ் வைத்தியர்கள் இருக்கவேண்டுவது இன்றியமையாதது. இந்த இங்கிலீஷ் வைத்தியம் செய்வோரைச் சிறு கிராமங்களிற்போய் வசிக்கச்சொன்னால் வசிப்பார்களா?



இவர்களுக்கு அங்கு வருகிற வரும்படி எந்த மூலைக்கு? அப்படியானாலும் நாட்டுவைத்தியரைப்போல் உள்ளூரில் அகப்படும் பதார்த்தங்களைக்கொண்டு கஷ்டமின்றி மருந்துகள் செய்யவும் உபயோகிக்கவும் இவர்களால் முடியுமா? இவர்களுக்கு இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி முதலியவிடங்களிலிருந்து அழகு அழகாக ஸீல் செய்த பாட்டில்களில் வரும் மருந்துகள் கிடைக்குமாறு இங்கிலீஷ் மருந்து ஷாப்புகள் கிராமங்கள்தோறும் ஏற்பட்ட பிறகல்லவோ ஆங்கிலங்கற்ற வைத்தியர்கள் அவ்வூர்களிற்போய் வைத்தியம் செய்ய முடியும்? இல்லையேல் இவர்கள் கொடுக்கும் பிரிஸ்க்ரிப்ஷன் சீட்டை யெடுத்துக்கொண்டு எங்கென்று ஓடுகிறது? மேலும் யூனிவர்ஸிடி டாக்டர்கள் என்றால் அவர்களுக்கு, வீட்டுக்கு வருவதற்குப் பணம், கைபிடித்துப்பார்ப்பதற்குப் பணம், மூத்திரப் பரீட்சை செய்யப் பணம், பிரிஸ்கிரிப்ஷன் எழுதிக் கொடுக்கப்பணம் இவ்வளவும் கொடுத்துவிட்டு மருந்து ஷாப்புக்கும் ஒன்றுக்குப் பத்தாய்க் கொடுக்க, கிராமாந்தரத்தில் வசிப்போரும் மற்ற எளிய ஜனங்களும் எவ்வாறு சக்தியுள்ளவர்களாவார்கள்? ஆயுர்வேத வைத்தியர்கள் அந்தந்த ஜனங்கள் அந்தந்த ஊர்கள் முதலியவைகளுக்குத் தகுந்த விதமாய்ப் பற்பல முறைகளைச்சொல்லி மருந்துகளை இலவசமாகச் செய்விக்கின்றனர்.

நாட்டு வைத்தியர்கள் பல தடவை ரோகிகளைக் கெடுத்து விடுகின்றனரென்றால், அத்தகைய மூடர்கள் ஆங்கில வைத்தியரிலும் இல்லையென்று எவரேனும் நிச்சயமாய்ச் சொல்லக்கூடியவருண்டோ? ஆங்கில வைத்தியர்கள் ஸாமர்த்தியசாலிகளென்றால், அம்மாதிரி வைத்தியர் ஆயுர்வேத வைத்தியரிலும் பலர் இருக்கின்றனர். சாதாரண ரோகங்கள் கூட இங்கிலீஷ் வைத்தியர் (ஸமர்த்தர்) பார்த்துக் கைதவறிபோவனவுமுண்டு. பெரிய ரோகங்கள் இங்கிலீஷ் வைத்தியத்தால் பிரயோஜனப்படாமல் ஆயுர்வேத வைத்தியத்தால் சுகப்பட்டதுமுண்டு. நன்றாய் யோசிக்கப்போனால் நம் இந்திய நாட்டில் ஆங்கில வைத்தியம் இல்லாமற்போனாலும் ஆயுர்வேத வைத்தியம் இல்லாமல் ஒரு க்ஷணமும் இருக்க முடியாது. எத்தனை ஆஸ்பத்திரி ஏற்படுத்தினாலும் இந்த வைத்தியரால் இருக்கும் பிரயோஜனங்களுக்கு ஒருக்காலும் ஈடாகாது.

அனேக நாட்களுக்கு முன் ஏற்பட்ட இவ்வாயுர்வேத சாஸ்திரம் இக்காலத்திய ஜனங்களுக்கு உபயோகப்படாது என்று சொல்வது வெகு விசித்திரமாயிருக்கிறது? அந்த சாஸ்திரத்தில் காலங்களுக்கும் தேசங்களுக்கும் ஏற்றவாறு வெவ்வேறு வித ஏற்பாடுகள் வெகு ஆச்சரியகரமாய்ச் சொல்லியிருப்பதை இவர்கள் அறியாமல் இப்படிச் சொல்லுகின்றனரே என்று விசனப்படுகிறோம். அப்படியானாலும் மேல் நாட்

டாருடைய சுபாவம் முதலியதற்கேற்றவாறு ஏற்படுத்திய சாஸ்திரங்களைப் படித்துவிட்டுக் கீழ்நாட்டாருக்கு ஒத்துக்கொள்ளாத அந்த விதமான சிகிச்சையைச் செய்வதற்கு இவர்கள் எப்படி முன் வருகிறார்கள்?

இப்பொழுது சென்னையில் இரண்டு ஆயுர்வேத இன்ஸ்டிட்யூஷன்கள் ஏற்பட்டு அவற்றில் மாணாக்கர்கள் வைத்தியம் கற்கும் முறைகளைப் பார்த்தால் மேற்சொன்னவாறு ஏற்பாடுகள் செய்யாமல் வேறு விதமாயும் முயற்சி செய்யக்கூடும் போலிருக்கிறது. இப்பொழுது நமது கவர்ன்மெண்டார் இத்தேசத்திற்கு நன்மை செய்ய இச்சிப்பார்களானால் இப்பொழுது இருக்கும் ஆயுர்வேத இன்ஸ்டிட்யூஷன்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவரப் பிரயத்தனம் செய்யவேண்டுவதுடன், அவ்வித இன்ஸ்டிட்யூஷன்களை இன்னும் அனேக விடங்களில் ஏற்படுத்தவும் முயலவேண்டும். அந்த இன்ஸ்டிட்யூஷன்களில் படித்து டிப்ளோமா பெற்றிருக்கும் ஆயுர்வேத டாக்டர்களையும் லைஸென்சு பெறயோக்கியதையுள்ளவரென நிர்ணயிக்கவேண்டும். இல்லாமற்போனால், இங்கிலீஷ் வைத்தியம் செய்துகொள்ளச் சக்தியற்ற ஜனங்கள் நிர்க்கதியாய் வைத்தியம் என்னும் பெயரையும் சொல்லாமல் சாகும் வரையிலும் ரோகத்துடன் வாதனைப்படவேண்டியது தான் கதியென்று நிச்சயித்து, தைரியமும் ஒடுங்கிப்போய் அதோகதியாய் விடுவார்கள். அப்பொழுது 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது' என்பது திண்ணம்.

## மின்சாரத்தால் தோட்டப்பயிர் செய்தல்.

மின்சாரமென்பது சாஸ்திரீய (Scientific) முறைகளால் ஒரு வஸ்து இயக்கும் ஒருவகை சக்திக்குப் பெயர். மின்சார விசையினால் ஆகும் காரியங்கள் அனேகமிருக்கின்றனவெனினும், இந்தியாவின்கண் இன்னும் வெளிவராத பற்பல விநோதமான செயல்களை மானிடருக்கு மிக்க உபயோகமாகும்படி மேற்றிசையிலுள்ள, ஐரோப்பியரும் அமெரிக்கரும் கண்டுபிடித்துத் தம் நாடுகளில் நடத்திவருகிறார்கள். அப்படி நடத்தி வருவதில் மின்சார விசையைக்கொண்டு பசுக்களிடமிருந்து பால் கறப்பதொன்று, கறந்தபாலைக் கட்டியாக்கித் தகரம், பீங்கான் போன்ற டப்பிகளில் அடக்கி விற்பனைக்குத் தயாராயிருக்கும்படி செய்வது மற்றொன்று; இப்படியாக பலவிதமாய் நவீன செயல்முறைகளை அத்தேசத்தவர் கண்டுபிடித்திருப்பதுடன் இப்போது தோட்டப்பயிர் செய்வதிலும் (Gardening) மின்சார விசையை உபயோகப்படுத்தலாமென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். செடிகளைப் பயிராக்குவதில் மின்சார விசை எப்படி உபயோகமாகுமென்று பலர் சந்தேகிக்கக் கூடுமாயினும், இன்றைக்கு 160-வருஷங்களுக்கு முன்னர்ப் பரீக்ஷார்த்தமாக முதல் தடவையாய் மின்சார விசையைச் செடிகளில் பிரயோகித்து அவைகளைச் செழிக்கச் செய்வதிலும், புஷ்பிக்கச்செய்து காய்பழங்களைச் சீக்கிரம் உண்டாகும்படி செய்வதிலும் ஆராய்ந்தறியப்பட்டது. தற்காலம் மின்சார விசையைக்கொண்டு பயிராக்கப்படுவதை மூன்று தேசங்களில் வெகு அதிகமாக அனுசரித்து வருகிறார்கள். முதலாவது ஐரோப்பாவிலுள்ள பிரான்சு தேசம். கண்ணாடியினால் கூண்டுகள் கட்டி அவையினுள் விளக்குகளை வைத்து, வேறு சில யந்திரங்களின் உதவியைக்கொண்டு மின்சார விசையை உற்பத்தி செய்து தோட்டப்பயிரை விருத்தி பண்ணுவதில் கவனம் செலுத்தி வருகிறார்கள். ஜர்மனி தேசத்தில் "எலெக்டிரிக் கர்ரெண்டு" என்ற மின்சார விசையைச் செடிகளின் வேர்களிடம் விட்டுப் பரீக்ஷை பார்க்கின்றனர். இங்கிலண்டில் உவ்ஷாம் என்னுமிடத்திலிருக்கும் பண்ணையில் மின்சார விசையைச் சென்னை டிராம் வண்டிகளுக்கிருப்பதையொப்ப கம்பங்கள் நாட்டித் தலைக்கு மேலான உயரத்தில் செம்புக் கம்பிகள் மூலமாய்ப் பூஸாரத்திற்கு விசையைக் கொண்டுபோய் விட்டுப் பரீக்ஷிக்கின்றனர். இவ்விதமான உயரக்கம்பிகளால் விசையைப் பூமியில் விடுவதனால் அதிக பலத்தைச் செடிகளுக்குக் கொடுக்கலாமென்று 1746-வது வருஷத்தில் பெய்ம்பரே என்ற ஸ்காட்லண்டு தேசத்தவர் கண்டுபிடித்தாசரித்து வந்தனர். இதை 1885-வது வருஷத்தில் ஹெல்ஸிங் போர்ஸ் யூனிவர்ஸிடியைச் சேர்ந்த கலம்ஸ்ட்ராம் என்ற போதகாசிரியர் அனுசரித்து வந்தது காரணமாகவும் இம்முறையினால் பலன் அதிகமாகக் கிடைப்பது நிச்சயமென்று ஏற்படுவதினாலேயும், இச்சமயம் மின்சாரவிசையைத் தோட்டங்களில் பிரயோகிப்பது பிரான்சு, இங்கிலாண்டு, ஜர்மனி ஆகிய இம்மூன்று தேசங்களிலும் அபரிமிதமாகத் தோட்டக்காரரது வழக்கமாகயிருக்கின்றது. பருவமழை பெய்யாது மோசஞ்செய்துவிட்ட காலத்தும் மின்சாரவிசை சம்மந்தமாயுள்ள தோட்டங்களில் பேரிக்காய்கள், உருளைக்கிழங்கு, பட்டாணிக்கடலை. பின்னுமிரண்டொரு கந்தமூலாதிகள் வெகு வெள்ளாமையுடன் செழிப்பதாகத் தெரியவருகிறது. ஆகையால் நாகரீகத்திலும் விஷயா விஷயங்களைச் சூக்ஷமாய்க் கண்டறிவதிலும் அதிக கவனஞ்செலுத்தி 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்ற பழமொழிப்படி நாளுக்கு நாள் சாஸ்திரீய முறைகளில் மேம்பாடடைந்துவரும் மேற்றிசையாரையொப்ப நம்மிந்திய தேசத்தவர் வளம் பெறவாழ்வதெக்காலமோ ஈசனே அறிவர்.

# வைத்திய குறிப்புகள்.

நகச் சுற்று அல்லது உகிர்ச் சுற்று:—இது நகக் கண்களில் வீக்கங்கொண்டு பருவைப்போல் தோன்றி அதிக பாதையை உண்டாக்கும். இதற்குப் புளிச்சக் கீரையில் விளக்கெண்ணெய் தடவி அனலில் வாட்டி விரலில் உபத்திரவமுள்ள விடத்தில் சுற்றி காற்றுப்படாமல் கட்டி வைக்கவேண்டியது.

பிளேக் நோயைப் பரவச் செய்யும் புழு:—அஸ்ஸாம் நாட்டைச் சேர்ந்த ஹாபிகஞ்ச் சப் டிவிஷனில் வெற்றிலையின் மேல் ஒரு விதப் புழுக்கள் காணப்படுகின்றனவாம். அப்புழுவைத் தெரியாமல் வெற்றிலையோடு சேர்த்து சாப்பிட்டு விடுவார்களானால் பிளேக் நோய் அவர்களுக்குப் பரவி விடுவதாய்ச் சொல்லப்படுகிறது.

ஐஸ்க்ரீம் அருந்தியதால் ஆபத்து:—இட்டாலி தேசத்தின் கிழக்கிலுள்ள ராவண்ணு டிஸ்டிரிக்டில் அழுகின கோழிமுட்டைகள் கலந்து செய்த ஐஸ்கிரீமை யுண்டதனால் 800-பேர் வியாதியுற்றுப் போனார்களென்று தெரிகிறது, இவர்களில் 9-பேர் இறந்துவிட்டார்களென்றும், 70-பேர் அபாயகரமான நிலையில் இருக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது.

ஆகாரம் புசிப்ப தெப்படி:—எந்த வஸ்துவையும் செம்மையாய் மென்று தின்றால் சீக்கிரத்தில் ஜீரணமாய்விடும். (Lauder Pruntan) லாடர் பிரண்டன் என்னும் டாக்டர் தமக்கு 32-பற்களிருப்பதால் சாப்பிடக்கூடிய எந்த பதார்த்தத்தையும் 32-தடவை மென்று சாப்பிடுகிற வழக்கத்தை தாம் அனுஷ்டித்து வந்ததால், தான் நோய் என்னும் கஷ்டத்திற்குள்ளாகாமல் சுகமாய் இருந்ததாக கூறியிருக்கிறார்.

காயம் அல்லது விரணம்:—கீழே விழுந்து காயமுண்டானால் வெங்காரத்தை மெல்லியதாய்ப் பொடி பண்ணி தேங்காயெண்ணெயில் குழைத்துப் போடவும். வேறு காயமானால் ஒடிக்கோலனைத் துணியில் நனைத்து காயத்தின்மேல் போடவேணும். துணி உலர்ந்துபோனால் 5, 6-தடவை ஒடிக்கோலனை அதில் விட்டு துணி உலராமல் நனைத்துக் கொண்டிருக்கவும். காயத்தில் சீழ் பிடிக்காது; சீக்கிரத்தில் ரணம் ஆறிவிடும்.

பாம்புக் கடிக்கு கெரோஸின் ஆயில்:—பாம்புக்கடிக்கு மண் எண்ணெய் என்னும் கெரோஸின் ஆயில் நல்ல மருந்தாகும். பாம்பு கடித்தஉடனே கடித்த இடத்தைக்கெரோஸின் எண்ணெயில் அமிழ்த்தி வைத்தால் புகை புறப்படுவதுபோல் கடித்த இடத்திலிருந்து பச்சையாக ஆவிபோல் ஒன்று வெளிப்படுமாம். இது எண்ணெயோடு சம்பந்தப்படாது. ஆனாலும் எண்ணெயில் கண்ணுக்கு நன்றாய்த் தெரியுமென்று ஓர் டாக்டர் சொல்லுகிறார்.



ஸ்நானத்துக்குக் கூட்டு:—சோற்றுப்பு பலம் 2, கற்பூரம் $\frac{1}{2}$அவுன்ஸ் நவச்சாரம் $\frac{1}{2}$-அவுன்ஸ் இம்மூன்றையும் 24-அவுன்ஸ் பிடிக்கும் ஒரு புட்டியில் போட்டு அது நிறைய வென்னீர்விட்டு காற்குபோட்டு குலுக்கி வைத்துவிட்டு 24-மணி நேரம் சென்ற பிறகு, அதை செம்மையாய்க் குலுக்கி அதில் அரை அவுன்ஸ் எடுத்து கொஞ்சம் ஜலம் கலந்து தேகத்தில் தேய்த்து ஸ்நானம் செய்தால் தேகத்திலுள்ள அழுக்கெல்லாம் எடுபட்டு ஆரோக்கியமுண்டாகும்.

கண்ணை மூடிக்கொண்டிருந்தாலும் பிரகாசம் தோன்றுவானேன்:—நாம் கண்ணைக் கெட்டியாக மூடிக்கொண்டால் இருட்டாய் இருக்கும். ஆனால் மூடிய கண்ணைச் சிறிதுநேரம் கையால் தேய்த்துக் கொண்டேயிருந்தால் கண்ணுக்கு எதிரில் ஓர் பிரகாசமான ஒளி சுழல்வதுபோல் தோன்றும். இருந்தாற்போலிருந்து கண்முன் ஏதேனும் தாக்கினால் தளதளவென்று ஒளிப்பொறிகள் பறப்பதுபோல் காணப்படும். இதற்குக் காரணம் மூளையிலிருந்து கண்ணுக்கு வரும், பார்வை நரம்பில் ஏற்படுகிற சலனத்தினால் மூளையில் உண்டாகும் ஓர் வகை மயக்கமேயாகும்.

ஈரவெங்காயத்தின் சிலாக்கியம்:—விஷக்காற்றைக் கிரகித்துக் கொள்ளும் சக்தி ஈரவெங்காயத்துக்குண்டென்பது முன்பே இந்தியர்களுக்குத் தெரிந்த விஷய மென்றாலும், இப்போது நன்கு ரூபிக்கப்பட்டிருக்கிறது. வடஇந்தியாவில் விஷபேதியாவது, பெரியம்மையாவது தோன்றியபோது ஈரவெங்காயத்தை மாலையாகக் கோர்த்து வீட்டு முகப்பில் தூக்கி வைப்பது ஜனங்களின் வழக்கம். இந்த வழக்கம் மிகவும் நன்மையான தென்றும், விஷக்காற்றை ஈரவெங்காயம் கிரகித்துக்கொள்கிற தென்றும் ஐரோப்பிய சாஸ்திரிகளிப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். வேப்பிலைக்கும் இதே சக்தியுண்டென்று தமிழ் வைத்திய நூல்கள் கூறுகின்றன.

வென்னீர்பாகம்:—வென்னீரானது அநேகவியாதிகளை சௌக்கியப்படுத்துகிறதென்பது உலகப்பிரசித்தம். அநேகருக்கு வென்னீர் செய்கிற பாகம் தெரியாது. டாக்டர், டெல்மானிகோ, (DR., DELMONICO) வென்னீரை பாகத்துடன் செய்து பாட்டில் ஒன்றுக்கு 25-சதத்திற்கு விற்று வந்திருக்கிறார். அதில் அநேக வியாதிகள் சௌக்கியமாயிருக்கிறது. பாகம்:—பாத்திரத்தை சுத்தமாய்க் கழுவி அடுப்பில் வைத்து காய்ச்சி செம்மையாய் சூடு வந்த பிறகு அதில் ஜலம் வார்த்து ஒரு கொதி வந்தவுடன் இறக்கி உபயோகித்துக்கொள்ளவும். அதிகமாய் சுடவைப்பதினால் ஜலத்தின் குணத்தைத் தரத்தக்க சத்து தீய்ந்து ஆவியாய்ப் போய்விடுகின்றது.

பருத்திக்கொட்டை மாவு:—கோதுமை மாவைவிடப் பருத்திக் கொட்டை மாவு உடம்புக்குப் புஷ்டிதரக் கூடியதென்று மிஸ்டர் அலிசன் என்பவர் பரிசோதித்துப் பத்திரிகைகளுக்கு எழுதுகிறார். இறைச்சியைப்போல பருத்திக்கொட்டை மாவு மஸ்துள்ளதாய் இருப்பதோடு, உடம்புக்கொத்ததாயும் கோதுமை மாவைவிட எளிதில் ஜீரணமாகக் கூடியதாயும் இருக்கிறதாம், டல்லாஸ் டிஸ்டிரிக்டில் ஜனங்கள்

அநேகமாய் கோதுமையைவிட்டு விட்டுப் பருத்திக்கொட்டை மாவை உபயோகிக்கிறார்களாம். இந்த மாவை உண்டுபண்ணும் பொருட்டு மிஸ்டர் அலிசன் ஒரு யந்திரசாலை (Factory) ஏற்படுத்தியிருக்கிறாராம். இந்த மாவு தயார் செய்வதற்குக் கோதுமை மாவு தயார் செய்வதில் ஏற்படும் செலவில் பாதி செலவே யாகுமென்று சொல்லுகிறார்.

---

**வென்னீரின் உபயோகம்** :—வென்னீரை வைத்தியத்துக்குக் கையாளாதவர்கள் ஒருவருமில்லை. வயிற்றுநோய், மார்நோய், மூச்சடைப்பு, கீல்வாய்வு, தொண்டைநோய் இவைகளுக்கு சாதாரணமாய் வென்னீரை உபயோகப்படுத்தி சுகமடைவதை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? அப்படிக்கிருந்தாலும் வைத்தியர் சொன்னபடி உபயோகிக்க வேண்டுமே யல்லாமல் அவரவர்களுக்குத் தோன்றினபடி வழங்கினால் சிகிச்சா உபசாரமாகாமல் விபரீதமாய் முடியும். குழந்தைகளுக்கு நெஞ்சில் கபம் கட்டியிருந்தால் ஒரு கம்பளித்துண்டை பொங்கக் காய்ந்த வென்னீரில் தோய்த்துப் பிழிந்து கழுத்தைச் சுற்றி ஆவியிருக்குமளவில் சுற்றிவைத்தால் பத்து நிமிஷத்தில் அந்தக் கபம் கரைந்துபோகும். பல் நோய் கண்டாலும், சைத்தியத்தால் கன்னத்தில் நரம்பு நொந்தாலும் வென்னீர் ஒத்தடம் கொடுக்க லகுவாகும். தலைநோய் கண்டால் கால்களை வென்னீரில் வைத்துக்கொண்டு பிடரியிலும் வென்னீர் ஒத்தடம் கொடுத்தால் நீங்கிப்போகும். பித்தநீர் வெளிப்படுத்த வேண்டுமானால் வென்னீரை உட்கொள்ளவேண்டும். நகத்தைச்சுற்றி உண்டாகும் உகிர்சுற்று என்னும் புண்ணுக்குப் பொறுக்கப் பொறுக்கப் புண் விரலைத் தோய்த்தெடுத்தால் சீக்கிரத்தில் ஆறிப்போய்விடும். கட்டிகளையும், ரணங்களையும் வென்னீரால் அலம்புவதே உபசாரமாகும்.—(வி. போ)

---

**சீனக்காரம்** :—இது பார்வைக்கு வெண்ணிறமாயும், (Crystallized) ஸ்படிகம் போன்றதாயும் வாயில் போட்டால் கரிப்பாயுமிருக்கும். இது உடம்பிற்குக் கெடுதிசெய்யும் பதார்த்தமல்ல. உள்ளே சேர்ந்தாலும் யாதொரு குற்றமுமில்லை. இதனால் இதை உள்ளே சேர் என்று பொருள்படாது, இதற்கு சுதேச வைத்தியத்திற்கு ஏற்ற குணங்கள் உண்டு.

1. பல்வலி, பல்லில் உள்ள புழுக்கள் ஒழிவதற்கு, கொட்டாங்கச்சியைச் சுட்டுப் பொடிசெய்து அப்பொடி இரண்டு பாகமும் சீனக்காரம் ஒரு பாகமும் சேர்த்துக் காலையிலும் மாலையிலும் தேய்த்து வர, ஒரு வாரத்திற்குள் குணம் தெரியவரும்; அல்லது சீனக்காரத்தை வாயில் போட்டு மென்று அதன் ஜலம் வர வர வைத்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாய்க் கீழே உமிழவும்.

2. மூக்கினின்று இரத்தம் வருதலுக்கு, சீனக்காரத்தைப் பொடி செய்து ஜலத்தில் சேர்த்து மேலே தடவினால் குணம் உண்டாகும்.

3. கண்வலி கண்ணிலிருந்து ஜலம் வடிதல் முதலானவைகளுக்கு (Rose water) பன்னீரில் சீனக்காரத்தைப் பொடி செய்து போட்டு ஜலத்தைக் கண்ணில் ஊற்றுவதினால் குணமுண்டாகும்.

4. பிளவைகளுக்குச் சீனக்காரம், பசுவெண்ணெய், பச்சைக் கற்பூரம், (Indian Pomattum) இந்தியன் பொமாட்டம் என்னும் மெழுகு, இவைகளைச் சேர்த்துத் தடவி வந்ததில் குணம் கண்டிருக்கிறது.



**வெந்நீர்** :—நாம் உட்கொள்ளும் ஜலமானது எப்பொழுதும் உஷ்ணமாயிருக்கவேண்டும். ஜலத்தில் நம் கண்களுக்குப் புலப்படாத புழுக்கள் இருப்பதாகவும் ஆதலால் ஜலத்தை உஷ்ணம் செய்து பானம் பண்ணவேண்டுமென்றும் பெரியோர்கள் சொல்ல நாம் கேட்டிருக்கிறோம். இது மிகவும் உண்மையே, குளிர்ந்த ஜலத்திற்கு யாதொரு குணங்களும் இல்லை. உஷ்ணம் செய்தால் அதன் குணங்கள் தெரிய வரும்.

1. காங்கையைக் குளிர்ந்த ஜலம் கொஞ்சம் கொஞ்சமாய் விருத்தி செய்கிறது. வெந்நீரைப் பானம் பண்ணினால் காங்கை கொஞ்சம் கொஞ்சமாய்த் தணிய ஆரம்பிக்கும்.

2. கண்ணில் உண்டாகும் கிருக்கிக் கட்டிகளுக்கு, சூடான ஜலத்தில் பசுவெண்ணெயைப் போட்டு அந்த ஜலத்தை ஊற்றி வருதலால் சீக்கிரம் குணமுண்டாகும்.

3. சொறி சிரங்குகளுக்கு வெந்நீரில் ஸ்நானம் செய்தல் நலம் உஷ்ணத்திற்கு உஷ்ணம் சேர்ந்தால் தான் வியாதி சீக்கிரம் குணமடையும்.

4. வயிற்று வலிக்கு வெந்நீரை ஒரு பாத்திரத்தில் விட்டு வயிற்றின் மேலே ஒற்ற ஒற்றக் குணமுண்டாய் வலி நிற்கும்.

DR. S. V. SURMA, A. V. M. S.,

---

## வர்த்தமானங்கள்.

---

**உப்பு** :—போனவருஷம் எப்பிரல், மே மாதங்களில் இந்திய ஜனங்கள் தின்ற உப்பைவிட இந்தவருஷம் அதே மாதங்களில் அன்னோர் தின்ற உப்பு 15,000-மணங்கு அதிகமென்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.

---

**பிளேக் கமிட்டி** :—சிம்லாவில் கூடி விசாரணை நடத்திக்கொண்டிருந்த பிளேக் கமிட்டியார் தங்கள் வேலையை முடித்து விட்டார்கள். அக்கமிட்டியார் தங்கள் சிபார்சுகளைக் கூடிய சீக்கிரம் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பிவிடுவார்கள்.

---

**கோதுமையும், அரிசியும்** :—உலகத்தில் எவ்வளவு கோதுமை உண்ணப்படுகிறதோ கிட்டதட்ட அவ்வளவு அரிசியும் உண்ணப்படுகிறதென்று தெரிகிறது. 19000 கோடி பவுண்டு (lb.) கோதுமையும் 17500 கோடி பவுண்டு அரிசியும் உலகத்தில் விளைவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

---

**நியூயார்க் தெருக்குப்பைகள்** :—சென்ற வருஷம் நியூயார்க் தெருக்களில் கூட்டி யெடுத்த குப்பைகள் 468000 பவுனுக்கு விலைபோயின வென்று சொல்லப்படுகிறது. இதில் பழைய கண்ணாடிப்புட்டிகள் 3600 பவுனுக்கும் கொழுப்பு 5000 பவுனுக்கும் இருந்தன, மீதி யெல்லாம் சாம்பல்.

**நூதன செடிகளைச் சேர்த்தல்** :—அமெரிக்கர் 1909-ஞு ஏப்பிரல் மாதம் 1தேதிமுதல் ஜூன்மீ 30தேதி வரை [illegible]8, நூதன செடிகளையும் வித்துக்களையும் அயல் நாடுகளிலிருந்து தங்கள் தேசத்திற்கு கொண்டு போய் பயிர் செய்திருக்கிறார்கள். முதலிலிருந்து 2[illegible],717 புதிய செடிகள் அந்நாட்டாரால் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. நம்மவர்களோ கேட்பானேன்? எவ்விஷயத்திலும் அமரிக்கர் அதிசாமர்த்தியமுள்ளவர்களே.

---

**வைத்திய இலாகா உயர் பதவி உத்தியோகங்களும் பிரைவேட் பிராக்டிஷனர்களும்** :—வைத்திய இலாகாவில் சிலஉயர் பதவி உத்தியோகங்களை பிரைவேட் பிராக்டிஷனர்களுக்கும் (சொந்தத்தில் வைத்தியஞ்செய்யும் டாக்டர்கள்) வேறு சிலருக்கும் கொடுப்பதைப்பற்றிய யோசனை இன்னும் கவர்ன்மெண்டாருக்கு இருந்துகொண்டு வருவதாய்த் தெரிகிறது. அவ்விஷயம் முடிவு செய்யப்படுவதற்கு முன்னே இந்தியா மந்திரியிடமிருந்து ஒரு உத்திரவு வந்திருக்கிறது. அதனில் கல்கட்டா மெடிகல் காலேஜில் ஒரு போதகாசிரியர் ஸ்தானம் பிரைவேட் பிராக்டிஷனர்களுக்கு தனியே வைக்கப்படவேண்டுமென்று இந்தியா மந்திரி சொல்லியிருக்கிறார்.

---

**அமேரிக்காவில் இந்துக் கோவில்** :—ஸான் பிரான்ஸிஸ்கோவில் ஓர் இந்து தேவாலயம் 60 ஆயிரம் டாலர் செலவழித்துக் கட்டப்பட்டிருக்கிறது. [டாலர் ரூபா. 3—2—0 மதிப்புள்ள நாணயம்] தோற்றத்தில் அது இந்துக்கோவிலும், கிறிஸ்தவர் சர்ச்சும், மகம்மதியர் மசூதியும், ஹிந்து மடமும், அமெரிக்க வீடும் எல்லாம் கலந்தது போலிருக்கிறது. இந்தக் கோவிலில் 100-பேர் வரையில் வந்து போகிறார்களென்றும் இந்த மடத்தில் அமெரிக்கர்கள் உள்பட 7 பேர்கள் கைங்கரியம் செய்துகொண்டு ஹிந்து மதத்தைக் கற்று அதை யப்பாகங்களில் பரப்ப முயன்று கொண்டிருக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது. இந்தக் கோவிலில் நம் தேசத்திலிருக்குங் கோவில்களில் போலப் பசுவின் சாணமோ, வானரங்களோ, அசங்கிதமான சித்திரங்களோ தேவதாசிகளோ, விக்கிரகங்களோ கிடையாது. இயேசு கிறிஸ்துவின் ஒழுக்கமும் நீதிகளும் அங்கு கற்பிக்கப்படுகின்றன.

---

## விசித்திர விஷயங்கள்.

**புஷ்பத்தால் செய்த ஒரு நவீன கெடியாரம்** :—ஐரோப்பாவில் பிரிடிங்டன் என்னுமிடத்தில் ஓர்வகைப் புஷ்பத்தினால் 12-அடி உயரத்தில் ஒரு கெடியாரம் செய்திருக்கிறார்களாம். இதற்குப் பிடித்த புஷ்பம் பத்தாயிரமாம்.

---

**வாழைப்பழத்தோலில் சோப் செய்கிறது** :—ஆப்பிரிக்காவின் மேற்கு பாகங்களில் வெள்ளையரும் சுதேசிகளும் பனானஸ் (Bananas) என்ற வாழைப்பழங்களின் தோலைச்சுட்டு சாம்பலாக்கி அதோடு தண்ணீரையும் பனையெண்ணெயையுஞ் (Palm oil) சேர்த்து சோப்பாக உபயோகிக்கிறார்களாம். நாம் வீணானவை என்று எறிந்து விடுகிறதெல்லாம் உபயோகமாகிறது.



**உயரமான கோபுரம்** :—உலகிலுள்ள கோபுரங்களிலெல்லாம் உன்னதமான கோபுரமானது நியூயார்க்பட்டணத்தில் கட்டப்படபோகிறதாம் அது 62-அடுக்குடையதாம் 900-அடி உயரமுள்ளதாம், அதன் மாளிகை 34-அடுக்குடையதாய் எழுப்பப்பட்டு அதற்குமேல் 18-அடுக்குள்ள கோபுரம் கட்டப்படுமாம். இந்தக்கட்டிடம் முடிவுபெறின் இதனிலும் பெரிய கட்டிடம் உலகில் வேறெங்குமிராதுபோலும்.

---

**பெரும் அலைகள்** :—சமுத்திர அலைகளின் விசேஷம் வடஅட்லாண்டிக் சமுத்திரத்திலே மிகுதியும் பிரமாண்டமானது என கருதப்பட்டிருந்தது. இங்கத்திய அலைகள் சுமார் 20-முதல் 25-அடி உயரம் வரை எழும்புவதாக கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் இப்போதோ ஆப்பிரிக்காவின் தென்கோடியான நன்நம்பிக்கை முனையில் வடமேற்குத் தென்றலினால் [illegible] அலைகள் சுமார் 40-அடி உயரமெழும்புவதாய் இப்போது கணக்கிடப்படுகிறது.

---

**கண்ணாடியால் செய்யப்படுகிற விநோத இடிமயிர்** :—நம் மிந்திய தேசத்தில் மயிரில்லாத ஸ்திரீகள் கடைகளில் இடிமயிர் என்று அழைக்கப்படும் சடைகளை வாங்கி கட்டிக்கொள்ளுகிற வழக்கத்தைப் போல ஐரோப்பாதேசங்களிலும் மயிரில்லாதவர்கள் அப்படி செய்கிறது வழக்கம். இப்போது அச்சீமைகளில் இடிமயிர்மிகவும் அருமையாயும் கிராக்கியாயுமிருக்கிறபடியினாலே, தற்சமயம் கண்ணாடிகளை வேலைப்பாடுசெய்து அதுகளினின்று மயிர் இழைகளாக வருவித்து இடிமயிராகச் செய்து விற்கிறார்களாம். அது அதிக மிருதுவாயும், கெம்பீரமாயும், மனோரம்மியமாயும், பளபளப்பாகவும் இருக்கின்றனவாம்.

---

**வயல் அரசர்** :—ஆஸ்திரேலியாவில் சுமார் இங்கிலாந்தின் 5-பாகத்திலொரு பாகத்தை வயல் கட்டி 60-ஆயிரம் கால் நடைகளை வைத்துக்கொண்டு ஆக்ஷிபுரிந்து வருபவர் **மிஸ்டர் சிட்னிட்மான்** என்னும் பிரபு இவருக்கு மேலாக அமெரிக்காவில் **மிஸிஸ் ரிச்சர்ட்கிங்** என்னும் ஸ்திரீ 300-மைல் விஸ்தீரண கம்பிசுற்றி வயல் கட்டி சுமார், 2-லக்ஷம் கால் நடைகளை வைத்து நடத்தி வருகின்றனள். அக்கால் நடைகளை மேய்க்க 300-பையன்களமர்த்தப்பட்டிருக்கின்றனர். இவள் தனது விடுதியை விட்டுவயல்களைவந்து பார்க்கவேண்டுமானால் 13மைல் சவாரி வரவேண்டியதாகவிருக்கிறதாம். இவளுக்கு இரண்டாவதாக வயல் அரசராகவிருப்பவர் அமெரிக்காவிலுள்ள **மிஸ்டர் ஜான் நியூமான்** இவர் அங்கு (பட்டர் கிங்) வெண்ணெய் அரசரென்றழைக்கப்படுகின்றனர்.

---

## பத்திரிகை வரவு.

மைலாப்பூர் ஜெனரல் சப்ளைஸ் கம்பெனியாரால் பிரசுரிக்கப்படும் "விவேக போதினி" என்னும் மாதாந்தப் பத்திரிகையின் ஜூலை, ஆகஸ்டு மாத சஞ்சிகைகளை வந்தனத்தோடு வரப்பெற்றோம். இதில் தமிழ் நாட்டு ஜனங்களுக்கு மிக்க உபயோகமுள்ள, வியவசாயம், கைத்தொழில், நீதிகளைப் புகட்டும் சிறு கதைகள், மத சம்மந்தமான வியா

ஸங்கள், சுகாதார விதிகள், நாவல்கள், வர்த்தமானங்கள், வானசாஸ்திரங்கள் முதலிய விஷயங்கள் வரையப்பட்டிருப்பதோடு, ஆகஸ்டு மாத சஞ்சிகை மாட்சிமைதங்கிய நமது புதிய சக்கிரவர்த்தி, சக்கிரவர்த்தினி இவர்களுடைய அழகிய உருவப் படங்களுடன் வெளிவந்திருக்கிறது. இப்பத்திரிகை தமிழறிந்த ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்கள் கையிலும் இருந்து பயனளிக்கத் தகுந்தது என்னலாம்.

---

கீழ்நத்தத்திலிருந்து வெளிவரும் 'Self-Culture' என்னும் ஆங்கில மாதாந்தப் பத்திரிகையின் கடந்த, மே, ஜூன் மாதத்திய சஞ்சிகைகள் வரப்பெற்றோம். இச்சஞ்சிகைகளில் சர்வகலா சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், மானத பூசை, வேதாந்தம், அந்தரங்கக்கலைகள் முதலிய பல அரிய பெரிய விஷயங்கள் அனந்தம் அடங்கியிருக்கிறது. இதின் வருஷ சந்தா இந்தியாவுக்கு ரூபாய் மூன்றுதான். இப்பத்திரிகையை நமக்கு தன்புகூர்ந்தனுப்பிய பத்திராதிபர் டாக்டர் K. T. ரமஸாமி அவர்களுக்கு நமது மனப் பூர்வமான வந்தனமளிக்கின்றோம்.

---

பிரெஞ்சு இந்தியாவின் தலை நகராகிய புதுவையிலிருந்து வெளிவரும் 'கர்மயோகி' என்னும் இனிய தமிழ் மாதாந்தப் பத்திரிகையின் கடந்த பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களின் சஞ்சிகைகள் கிடைக்கப்பெற்றோம். இதில் மகா சக்திக்கு விண்ணப்பம், இந்து தர்மத்தின் ஜீவதத்துவங்கள், பகவத்கீதை, சித்தசுத்தி, ஜப்பான் சரித்திரம், தூமகேது, ராஜப் பிரதிநிதி சட்டசபை, சுவாமி விவேகாநந்தரின் உபந்நியாஸம், உறுதி, காளிக்கு சமர்ப்பணம், உபநிஷதார்த்த தீபிகையும், இன்னும் பல அரிய வியாஸங்களும் வரையப்பட்டிருக்கிறது. இதின் வருஷ சந்தா இந்தியாவுக்கு ரூபாய் 2-தான். இப்பத்திரிகையை அன்புடன் மக்களனுப்பிய பத்திராதிபர் ஸ்ரீஜத், பாரதியாரவர்களுக்கு பன்முறையும் வந்தனம் செலுத்துகிறோம்.

---

சாமான் வரவு :—இவ்வூரிலுள்ள C. ராஜம் & கம்பெனியாரால் அனுப்பப்பட்ட 'Soap'ம் 'Candels'ம் வந்தனத்தோடு வரப்பெற்றுக்கொண்டோம். அவைகள் நன்றாய் தயார் செய்யப்பட்டிருக்கிறது. மேல்நாட்டு மெழுகுவர்த்திக்கு இதை எவ்விதத்தும் நிகராகவே சொல்லலாம்.

---

**"A conundrum which gives the following sentence only if solved"** *i.e.*

"GOD SAVE THE EDITOR"

"VAIDYA BODHINI"

There are as many words as the "Feb" of leap year contains.

All of them are of five letters each.

Thirteen of those are of "Indian Towns",



Two are "colours" where as Three are "Peninsulas"
One in "Asia" others in "Europe"
Without the "sixth" we can't have "seven"
Without the "seventh" we can't live in "North"
Without the "tenth" we can't go off of "house"
Without the help of "Eleventh" we can't "Travel"
Without the help of "Ten" + "Seven"
Difficult to have the "Truth" for "Truth"
All had gone the "Remain" must follow,
Of these, the first is "Wigan" the last is "Whist"
Middle is equal to "Two Tens" in total number.
Which make the word "Lodge" without fail
All had gone only "Remain Three"
Of these the first is "Index" The last is "Price"
Where as the middle is "Mahio"

*N. B.* Readers are requested to give the answer words in order and not to "repeat the same given word and all the "answer" letter must be in the middle of each word.

"Another conundrum in the next number"

V. A. KESAVAN.

குறிப்பு :—சிலாங்கூரைச்சேர்ந்த காபாரிலிருக்கும் நமது பத்திராகாரேயர்களில் ஒருவரான மிஸ்டர் P. கந்தையா அவர்கள் நமது பத்திரிகை விஷயமாய் அசிரத்தையாய் இருப்பதும் ஆச்சரியமே!

---


மகா மக மகா வைபவம் அல்லது குடந்தைப்புராணம்.

கும்பகோணத்தில் 12-வருஷங்களுக்கொருதரம் நடைபெறும் மகாமகதீர்த்தம், க்ஷேத்திரம், மூர்த்தி முதலிய வைபவங்களையும் ஒவ்வொரு சிவஸ்தலம், விஷ்ணுஸ்தலம் முதலியவற்றின் ஆதி உற்பத்தி விபரத்துடனும், பாமரர்களுக்கும் ரஞ்சிதமாயும், சுருக்கமாயும் பஞ்ச குரோச ஸ்தலங்களின் பிரபாவங்களையும் கூறப்பெற்றுள்ள இச்சிறிய செந்தமிழ்நூல் ஒவ்வொரு ஸ்திரி புருஷர்கள் கையிலும் இருப்பது மிகவும் அவசியமாகும். விலை அணா1.

இப்புத்தகம் வேண்டியவர்கள் அடியில்கண்ட விலாசத்திற்கு $1\frac{1}{2}$-அணா ஸ்டாம்பு அனுப்பினால், தபால் மூலமாய் புஸ்தகம் ஒன்று அனுப்பப்படும்.

மானேஜர் :—வைத்திய போதினி ஆபீஸ், கும்பகோணம்.

நமது பத்திரிகையின் அபிவிருத்தி கருதிய திருவாவடுதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ, அம்பலவாண தேசிக பண்டார சன்னதி யவர்கள் ரூபாய் 50 கொடுப்பதாக வாக்களித்து அதற்கட்வான்ஸாக ரூபா 15 கொடுத்திருப்பதாக இதற்கு முந்திய சஞ்சிகைகளில் சொல்லியிருக்கிறோம், அதன்பிறகு 15-7-10-ல் ரூபாய் 20, மஹா சன்னிதானம் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். பால பருவமுடைய நமது பத்திரிகை சுக்கில பக்ஷ சந்திரன்போல் ஜொலித்து தமிழ் நாடெங்கும் உலாவி வருமாறு, நினைத்த காரியங்களை அதிவிரைவில் முடிக்கவல்ல சன்னிதானம் அவர்கள் உதவி புரிவார்களென்று உறுதியாக நம்புகிறோம். அடியில்கண்ட சந்தாத்துகைகளை வந்தனத்தோடு வரப்பெற்றோம்.




| | | |
|---|---|---|
| Mr, M. ராமஸ்வாமி ஐய்யர் ரூ | 1 | 0 |
| ,, சி. கு. அ. சுப்பிரமணிய செட்டியார் | 1 | 0 |
| ,, S. M. P. அல்காந்தர் | 1 | 0 |
| ,, A. [illegible] | 1 | 0 |
| ,, நஞ்சுண்டப்ப உடையார் | 1 | 0 |
| ,, V. ராமசந்திர நாயுடு | 1 | 0 |
| ,, கோபாலஸாமி ரெகுநாத ராஜாளியார் | 1 | 0 |
| ,, சுந்தரலிங்கத் தம்பிரான் சுவாமிகள் | 1 | 0 |
| ,, S. வேதாந்த தேசிக ஐயங்கார் | 1 | 0 |
| ,, R. வெங்கிடசாமி ராஜு | 1 | 0 |
| ,, T. S. Fernando. | 1 | 0 |
| ,, T. M. அங்குசாமி பிள்ளை | 1 | 0 |
| ,, சாது அண்ணாமலை சுவாமி | 1 | 0 |
| ,, மகம்மது யாகூப் சாயபு | 1 | 0 |
| ,, K. லெக்ஷ்மண பிள்ளை | 1 | 0 |
| ,, N. ரெகுபதி ஐயங்கார் | 1 | 0 |
| ,, C. தொரஸாமி ஐயங்கார் | 1 | 0 |
| ,, விஸ்வநாத ஐயர் | 1 | 0 |
| ,, A. பொன்னுஸாமிபிள்ளை | 1 | 0 |
| ,, C. I. அப்பாதுரைபிள்ளை | 1 | 0 |
| ,, V. B. வெங்கடேசம் செட்டியார் | 1 | 0 |
| ,, C. பெரியஸாமி பிள்ளை | 1 | 0 |
| ,, T. ஆழ்வார் ஐயா | 1 | 0 |
| ,, M. அபிரகாம் பண்டிதர் | 1 | 0 |
| ,, M. A. சுப்பிரமணியஐயர் | 1 | 0 |
| ,, R. ஸ்ரீனிவாச ஐயங்கார் | 1 | 0 |
| ,, A. சின்னஸாமி நாயுடு | 1 | 0 |
| ,, T. ராமானுஜம் | 1 | 0 |
| ,, J. John. | 1 | 0 |
| ,, M. N. சிங்காரம் பிள்ளை | 1 | 0 |

அங்கஅமைப்பின் அஸ்திபந்தனங்களைக் காண்பிக்கிற படம்.




# ARYAN INITIATION !

OF THE

## SPIRITUAL BROTHERHOOD !!

OF THE

## INDIAN ACADEMY OF SCIENCE. !!!

Under the guidance of an Adept Master of the Brotherhood, a special Course of Lessons is now ready to initiate you into all the mysteries of LAYA and MANTRA YOGA of the Aryans giving practical methods for HINDU-HYPNOTISM, MESMERISM, TELE-PSYCHY, WILL-CULTURE, SPIRITUAL HEALING, CLAIR-VOYANCE CALIR AUDIENCE CLAIR-SENTIENCE, SPIRIT-COMMUNION, MEDIUMSHIP, and other wonderful secrets for attracting SUCCESS, HEALTH, SPIRITUAL POWER and Soul-Bliss, as practised by the ancient Aryan Adepts.

This Course is the first of its kind in the world and anybody knowing to READ and WRITE ENGLISH can master it and practice its teachings to a wonderful degree.

With a complete outfit and fine Diploma of Membership of the 1st Degree.

Price, Rs. 10 for the first 500 enrolments. The price will be raised to Rs. 15 shortly. Persons ordering the course should send a copy of their photos along with money in ADVANCE. No V. P. System. Look sharp!

---

SELF-CULTURE, a Monthly Official Journal of the Indian Academy of science, is devoted to Mental, Psychic, Spiritual and Occult Sciences Philosophy, Spiritualism, Health-Culture, Vedanta and other Esoteric phases. It is edited by Dr. K. T. Ramasami, Dr. J. M. Peebles of (America) and Prof. J. M. Severn (of England.) Besides it has an able crops of contributors.

Annual subscription Rs. 3, to India. Foreign Sh. 4; To School Students and all Missionaries at a reduced rate of Rs. 2.

Send all orders and remittance direct to

*The Manager,*

**THE INDIAN ACADEMY OF SCIENCE,**

**KIZHANATTAM, Tinnevelly Dist., S. India.**

# சுதேச வைத்திய ரத்தினம்.

## (இரண்டாம் பதிப்பு).

முன்பதிப்பைக் காட்டிலும் விரிவானது.

ஆனரபில், திவான் பகதூர் ஸ்ரீ. R. இரகுநாதறவ் C. S. I. அவர்களுடைய நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றது.

ஐகோர்ட்டு வக்கீல், ஸ்ரீ N. K. ராமஸ்வாமி அய்யர் அவர்களுடைய முகவுரையுடன் எழுதப்பட்டது.

இப்புத்தகம் டாக்டர் S. சந்திரசேகர் அவர்களால் எழுதப்பட்டிருக்கிறது :—இந்தியாவின் முற்கால ஸ்திதியும், தற்கால ஸ்திதியும், சிசு உற்பத்தி விபரம், சிசு பரிபாலனம், இல்லற இன்பம், ஆண்மையின் அழிவும் அதன் மீட்சியும், கர்ப்பவதிகளுக்கு உண்டாகும் நோய்களும அவற்றின் மீட்சியும். விஷபேதி உற்பத்தியும் அதன் பரிகாரமும், போகத்தின் பிரயோஜனம், புலாலுண்ணாமை, மதுபானமறுப்பு, பாலமுது, உழைப்பு, நித்திரை, போஜனம், சூரியவெளிச்சம், ஆகாயம், ஆரோக்யம் முதலிய விபரங்களுடனும், இன்னும் பல அருமையான விஷயங்களுடனும், நம் நாட்டிலுண்டாகும் செடி, கொடிகள், காய், கனிகள், கடைமருந்துகள் முதலியவற்றின் உற்பத்தி விபரம் குணம், செய்கை, உபயோகம், உபயோகிக்கும் விதம், அவற்றைப் பற்பல நோய்களுக்கும் உபயோகித்துக் குணங்கண்ட ஐரோப்பிய டாக்டர்மார்களின் பெயர்களுடனும், பல நூல்களின் ஆதாரங்களுடனும், ஒவ்வொரு மூலிகைகளுக்கும், தமிழ், இங்கிலீஷ் பெயர்களுடனும், இன்றியமையாத இத்தேசத்திற்கு சம்பவிக்கும் நோய்களின் பெயர்களுடனும், அந்நோய்களுக்கு வைத்தியர் உதவியின்றி நாமே செய்துக்கொள்ளக்கூடிய அவுஷத விபரங்களுடன், சிறுவர்களும் வாசிக்கக்கூடிய செந்தமிழ் நடையில் வரையப்பட்டிருக்கிறது. வேண்டியவர்கள் உடனே அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

இவ்வருமையான புஸ்தகம் ஒன்று ஒவ்வொரு குடும்பத்திலும், அவசியம் இருக்கவேண்டியது.

இப்புத்தகம் விலை ரூ. 1—0—0. வி. பி. சார்ஜ் 0—3—0.

**மானேஜர், என். ஆர். டிஸ்பென்ஸரி,**
**தும்பகோணம்.**



# பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

1. **தர்துபுஷ்டி மருந்து** :—அதன் குணத்தை எழுதி முடியாது. அனுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். தாது நஷ்டம், பலஹீனம், ஆண்குறி துவளல், பசியின்மை, கண், கால்எரிவு, தேகவாக்ஷி, சீக்கிரத்தில் ஸ்கலிதம், சொப்பன ஸ்கலிதம், கை, கால், இடுப்பு முதலிய அவயவங்களில் சோர்வு, வலி, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேகவெள்ளை, வெட்டை, நீரிழிவு, மதுமேகம், சதையடைப்பு, இன்னும் பற்பல மூத்திரரோகங்களை போக்கும். சரீரபுஷ்டி, புருஷத்தன்மை, போகசக்தி, ஜீரணசக்தி, அபரிமிதமான தாதுவிருத்தியை உண்டாக்கும். நீத்திருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்கு விலை ரூபா2, வி. பி. சிலவு அணு5 பிரத்தியேகம்.

2. **அக்கினி மாந்தத்திற்கு மருந்து** :—பசியின்மை, புளித்த ஏப்பம், நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய் நாற்றம், அஜீரணம், வயிற்றுப்பிசம், நித்திரை யில்லாமை, பித்த உபத்திரவங்களை சொஸ்தப்படுத்தும். பசி தீபனமும், தேக ஆரோக்கியமும் தரும். டப்பா 1-க்கு அணு 8, வி. பி. சிலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

3. **பிரமேக நிவாரணி** :—எந்த காரணத்தினால் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை, நீர்குற்றல், நீர் தாரை எரிவு, சீழ், ரத்தம் வடிதல், முதலிய வியாதிகளை ஆண் பெண் இருதரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. சிலவு ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

4. **லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரைகள்** :—தாம்பூலம் தரிப்பவர்கள் கையிருப்பில் எப்பொழுதும் வைத்துக்கொள்ளவேண்டிய விலையுயர்ந்த வஸ்து. தந்த நோய், வாய் நாற்றம், அஜீரணம், பித்த வாய்வு, இதுகளை நீக்கும். தாம்பூலத்துடனாவது, தனியாகவாவது சாப்பிட்டபின் 2 மாத்திரை உபயோகித்தால் எப்பேர்க்கொத்த கனத்த சாப்பாட்டையும் உடனே ஜீரணம் செய்வதுடன் வாயில் அநேகமணி நேரம் சுகந்த வாசனையிருக்கும். பிரதிதினம் காலையில் இரண்டு மாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்த அக்கினி மந்தம், மலச்சிக்கல், அஜீரணத்தினாலுண்டாகும் வயிற்றிழிவு, வயிற்று நோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள் தீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன் உபயோகித்து வந்தால் ஜன்னி கிட்ட நாடாது; ஜன்னியில் கொடுக்க ஜன்னி தீரும். இதில் லாகிரி முதலான யாதொரு அபாயகரமான வஸ்து சேரவில்லை. காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்கரேக், பச்சை கற்பூரம் முதலிய அநேக விலைபெற்ற மருந்து சாமான்களும் வாசனைதிரவியங்களும் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. தாம்பூலத்துடன் உபயோகித்தால் பச்சை கற்பூரம் முதலாகிய வாசனை வஸ்துக்கள் உபயோகிக்கவேண்டியது அனுவசியம். அறை, குழந்தைகள் முதல் வயது சென்றவர்களுக்கு சளி, இருமல், காசம், காலரா, பிளேக், சுரம் முதலானவைகளுக்கு வயதுக்கும் தேகத்துக்கும் தகுந்த

**பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை, தென்னாற்காடுஜில்லா.**

### பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

படி 1 முதல் 4 மாத்திரைகள் வரையில் வெற்றிலைச்சாறறில் கொடுக்க சுகமாகும். சீசா 1-க்கு விலை அணா 4. இந்தியாவில் 1 முதல் 12 சீசாக்கள் வரையில் அனுப்ப பாக்கிங்கு, தபால் சார்சு அணா 5-ம் சிலோனுக்கு அணா 7-ம் பிரத்தியேகம்.

5. சர்வநோய்சம்ஹாரன் :—இத்தைலம் கொஞ்சம் தேய்த்தால் கை, கால், கணுக்களின் பிடிப்பு, வீக்கம், முடக்கம், மார்பு நோய், தலை நோய், கழுத்து நோய், பக்க சூலை, இடுப்பு நோய், சூதகவலி, பார்சவாயு, மேகவாயு, முதலான இன்னும் தேகத்தில் உண்டாகும் எல்லா நோய்களையும் சீக்கிரத்தில் குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. சிலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

6. சுகந்த கூந்தல் தைலம் :—இத்தைலத்தால் தலைமயிர், மீசை, கண் இமை, வெகு செழிப்பாகவும், [illegible]ரும். கண்களைக்குளிரச்செய்யும். சகல கண் நோய்களும், தலை நோய்களும், நீங்கும். செம்மட்டைமயிர் கருக்கும். மயிர் உதிராமல் கார்க்கும். கண்களுக்கு பிரகாசத்தைதரும். விலை புட்டி 1-க்கு அணா 8, வி. பி. சிலவு 1 அல்லது இரண்டு சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

7. நேத்திர பிந்து :—கண்ணோய், கண்முற்றல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பீளைக்கட்டல், மாமிசம் வளர்ந்திருத்தல், பூவிழுந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை, புருவம் இவைகளின் வலி, கண் புகைச்சல், இவைகளை குணப்படுத்தும். மாணுக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் வெகு சிறந்த ஔஷதம். மருந்து உபயோகித்தால் கண்ணாடி போடவேண்டியது அனுவசியம். சீசா 1-க்கு விலை அணா 8, வி. பி. 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

8. கர்ணபிந்து :— காதில் சீழ் வடிதல், வலி, குத்தல், குடைச்சல், காதடைப்பு, இரைச்சல், செவிடு, இவைகளை குணமாக்கும். செவி நன்ருய் கேட்கும். சீசா 1க்கு விலை அணா 8, வி. பி. சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

9. சர்வபடை சம்ஹாரன் :—இடுப்பு, தொடையின் இடுக்கு முதலிய இடங்களில் உண்டாகி ஓயாத நமச்சலைத்தந்து வெகு சீக்கிரத்தில் மற்ற இடங்களில் படரும் மேகப்படை சொரி சிரங்கு, தடிப்புப்படை, தேமல் முதலியவைகளை அடியோடு குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை அணா 4, வி. பி. சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

10. பேதி மாத்திரைகள் :—வயிற்றில் வலி, ஆயாசமில்லாமல் சுகமாய் பேதியாகும். அஜீர்ணம், பித்த உபத்திரவங்கள் சகல வாயு, மலச்சிக்கல், அக்கினி மாந்தம், வாதம், கைகால் முதலிய அவயவங்களின் குடைச்சல், வலி, சகல சுரங்கள் முதலியதுகளை சொஸ்தப்படுத்தும். சீசா 1க்கு அணா 8 வி. பி. சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை, தென்னார்க்காடுஜில்லா.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
23 NOV 1910
MADRAS.

உ

# வைத்திய போதினி.

சித்திரப் படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

புத். 1. | 1910-ஞு செப்டம்பர்மீ 1உ | நெ. 5.

## பத்திராதிபர் குறிப்பு.

நமது பிரிய சந்தா நேயர்களே!

இந்நிலவுலகில் 1,45,00,000 தமிழ்மக்களிருந்தும் நமது போதினிக்கு ஓராயிரம் சந்தா நேயர்கள்கூட ஏற்படாதவிஷயம் மிக்க வியப்பேயாகும். சொற்ப சந்தாவைக்கொண்டு பிரதி மாதமும் 28-பக்கங்களுடன் சித்திரப்படங்களோடு வெளிவரும் இப்பத்திரிகைக்கு வருஷமொன்றுக்கு ஒரு ரூபாய் கொடுத்தாதரிக்க முன்வராத நந்தென்னிய வாசிகள் பின்னர் யாதுதான் செய்வார்களோ யாமறியோம்.

நமது போதினியைப்பற்றி நமது நண்பரிலனேகர் புகழ்ச்சியாக பல கடிதங்கள் வரைந்து வருகிறார்கள். அவர்களுடைய நன்மனதுக்கும் இஷ்டத்திற்கும் தக்கதாக தங்களால் கூடியவரையில் சந்தாதார்களைச் சேர்த்து விடுவார்களானல் எவ்வளவோ உத்தமமாகும்.

நம் பத்திரிகாபிமானிகளாகிய Mr, A. நாராயணஅய்யங்கார், Mr, A. பொன்னுசாமிபிள்ளை, Mr, சேனைபட்டி மு. ஆறுமுகம்பிள்ளை Mr, ஜான் மெஸர்ஸ் துரைராஜா அன் கம்பெனியார்களைப்போல, நம்பத்திரிகாபிமானிகள் ஒவ்வொருவரும், தத்தம் சக்திக்கியன்றவாறு தங்கள் தங்கள் மித்திரர்களையும் இப்பத்திரிகைக்கு சந்தாதாரர்களாய்ச் சேரும்படி செய்தால், பலதுளி பெருவெள்ளமாய் பெருகிபத்திரிகை காலவளவில் குன்றின்மேலேற்றிய விளக்கொளிபோல் பிரகாசிக்குமென்பதிலையமில்லை. நம்பத்திரிகாபிமானிகளுக்கு இது விஷயமாய் பிரதி பத்திரிகையிலும் வரைந்து வந்தும் நமது சந்தா நேயர் ஒருவரேனும் அவ்வண்ணம் செய்ய முற்படாதிருப்பதும் நம் சந்தா நேயர்களின் கவனக்குறைவேயன்றி பிறிதொன்றுமில்லை. இப்பத்திரிகை எம்சொந்த லாபத்திற்கன்றி உலக நன்மையைப் பெரிதுங்கருதியே ஆரம்பிவிக்கப்பட்டதென்பதை மீண்டும் சொல்வது மிகையாகாது. இனியேனும் நம் சந்தாநேயர்கள் போதினியின் விஷயமாய் போதிய பாடுபட முற்படும் படியாய் மும்முறையும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

## மாமிசம், ஆங்கிலத்தில் (MUSILES) மஸில்ஸ் என்று சொல்லப்படும்.

மாமிசம், சதை, இறைச்சி, புலால், ஊன், தசை அல்லது பேசி என்று சொல்லப்படுகிற, மனிததேகத்திலிருக்கிற சிவந்த மாமிசங்கள் அடுக்கடுக்காய் அமைந்திருக்கும். சில அகலமாயும், சிலநீண்டுமிருக்கும். அநேக சிறிய இழைகள், சேர்ந்து ஒவ்வொரு மாமிசம் ஏற்படுகின்றது, இழைகளையும் மாமிசங்களையும் ஒன்றோடொன்று இணையும்படி வலை போலொத்த தவ்வால் கட்டியிருக்கும். (Cellular tissue-ஸெல்லுலர் டிஷ்யு) எனும்போடு ஒட்டிக்கொண்டிருக்கிற மாமிசமுனைகள் வெளுத்து பலரூபங்களாயிருக்கும், சில நரம்புகளைப்போல் நீண்டும் சிலஅகலமாயும் இருக்கும். அதற்கு மாமிசத்தந்தி (உள்நாணி, தசைநார், வன்னசை), என்றும், ஆங்கிலத்தில் (Tendon—டென்டன்) என்று பேர், அகலமாய் விரிந்திருக்கிற மாமிசத்தந்திக்கு (Aponeurosis—அப்பனியுரோஸிஸ்) என்றுபேர். மாமிசத்தின் துவக்கத்துக்கு, ஆரம்பமுனை (Origin ஆரிஜன்) என்றும், இணைந்துபோகிற முனை, (Insertion இன்ஸர்ஷன்) என்றுஞ்சொல்லப்படும். சதையின் மத்திய பாகத்திற்கு உடல் என்றுபேர்.

நமது சரீரத்தில் இரண்டு ஜாதி சதைகளுண்டு, ஒரு ஜாதி மனதுக்கேற்றபடி அசையும், அவைகளுக்கு மனதுக்கயிக்குசதைகள் என்றும் ஆங்கிலத்தில் (Voluntary Musiles-வாலென்டரி மஸில்ஸ்) என்று சொல்லப்படும். மற்றொரு ஜாதி தற்செயலாய் அசையும், மனதுக்கயிககமிராது, அவைகளுக்கு மனதுக்கயிக்கமில்லாத சதைகள் ஆங்கிலத்தில் (Involuntary Muscles-இன்வாலென்டரி மஸில்ஸ்) என்று பேர். இரைப்பை, குடல், இருதயம் ஆகிய இவைகளிலிருக்கிற சதைகளுக்கு தற்செயலாய் நடக்கிற குணமுண்டு. மனதுக்கு வசப்படாது. நமது சுவாதீனத்திற்கு உட்படாதிருக்கிறபடியால், அவைகள் மனதுக்கயிக்கமில்லாத சதைகள், மற்றவைகள் மனதுக்கயிக்கப்பட்டவைகளாம்.

மனித தேகத்தில் சுமார் 426 சதைகள் உண்டு. மாமிச சலனத்தால் தேகத்தினுடைய வியாபாரங்கள் நடக்கின்றன. கண்சிமிட்டுதல், நாக்கை நீட்டுதல், கைகால்களை அசைக்குதல், தம்புரு, வீணை முதலிய வாத்தியங்கள் மீட்டுதல், அபிநயம் செய்தல், சம்மட்டியடிக்குதல் இவை முதலிய சலனங்கள் மாமிசங்களால் உண்டாகின்றன.

மாமிசங்களுக்குறிய தொழிலை ஒருவாராய்ச் சேர்த்துச்செய்த அட்டவணையை இதனடியில் காண்க.





அங்க அமைப்பிலுள்ள நிண நரம்புகள், ரசதாரை இவைகளைக்காண்பிக்கிற படம்.

1. நெற்றிச்சதை சுருங்கினால், புருவங்கள் மேலுக்குப் போகும்.

2. கண்குழிகளைச் சுற்றிக்கொண்டிருக்கிறசதைகள் சுருங்கினால், கண்கள் மூடிக்கொள்ளும்.

3. மூக்குக்கடியிலிருக்கிற சதைகள் சுருங்கினால் மேல் உதடு உயரும்.

4. உதடுகளின்சதைகள் சுருங்கினால் வாய் மூடும்.

5. முகவாயிலிருக்கிற சதைகள் சுருங்கினால், கீழுதடு கீழுக்கிரங்கும்.

6. கழுத்து முன்புறத்துச் சதைகள் சுருங்கினால் தலைமுன்னுக்கு வளையும்.

7. பிடரிச்சதைகள் சுருங்கினால், தலையை நிமிரச்செய்யும்.

8. சரீர முன்புறத்துச் சதைகள் சுருங்கினால் உடம்பு முன்னுக்கு வளைந்து விலாவெலும்புகள் கீழுக்கிறங்கும்.

9. முதுகுசதைகள் சுருங்கினால், முதுகு நிமிரும்.

10. மார்புச்சதைகள் சுருங்கினால் தோள்கள் மார்போடணையும்.

11. முதுகின் மேற்புறத்துச் சதைகள் சுருங்கினால் தோள்கள் பின்னுக்கிடையும்.

12. புஜத்தின் முன் பக்கத்துச்சதைகள் சுருங்கினால், முழங்கை முடங்கும்.

13. புஜத்தின் பின் புறத்துச்சதைகள் சுருங்கினால் முழங்கை நிமிரும்.

14. முன்கையின் முன் புறத்துச்சதைகள் சுருங்கினால், மணிக்கட்டும் விரல்களும் முடங்கும்.

15. முன்கையின் பின்புறத்துச்சதைகள் சுருங்கினால், மணிக்கட்டு பின்னுக்கு வளையும் விரல்கள் நிமிரும்.

16. பிரட்டத்துச்சதைகள் சுருங்கினால், தொடை வெளிப்புரம் புரண்டு பின்னுக்குப்போகும்.

17. தொடையின் முன்புறத்துச் சதைகள் சுருங்கினால், முழங்கால் நிமிரும்.

18. தொடையின் பின்புறத்துச் சதைகள் சுருங்கினால், முழங்கால் முடங்கும்.

19. முழங்காலுக்குக் கீழ் காலின் முன்புறத்துச்சதைகள் சுருங்கினால், புறங்கால் முன்னுக்கு வளைந்து, விரல்கள் நிமிரும்.

20. கெண்டைச்சதைகள் சுருங்கினால் பாதம் முன்னுக்கு வளைந்து விரல்கள் வளையும். முன்கையைப்பற்றிப் பிடித்து, விரல்களை அசைத்துப்பார்த்தால் மாமிச சலனத்தைக் கண்டு கொள்ளலாம்.

---

## மரம் முதலியவைகளுக்குக் காணும் வியாதிகள்.

நமது தேசத்தில் மனிதர்களுக்கும், மிருகம், பக்ஷிமுதலிய பிராணிகளுக்கும், பலவிதமான வியாதிகள் தோன்றி ஒவ்வொரு வருஷத்திலும் ஆயிரக்கணக்கான பிரஜைகளையும் கால்நடைகளையும், பக்ஷிஜாதிகளையும் மாய்த்து வருவதுபோல மரம், செடி, கொடி முதலியபயிர்களுக்கும் பலவிதமான வியாதிகள் தோன்றிப் பாழாக்கி வருவதை யாவருமறிந்திருந்தாலும், மனிதர்களுக்குத் தோன்றும் வியாதிகளுக்கு வியாதி மூலத்தைக் கண்டுபிடிக்க எவ்வளவு தூரம் பிரயாசைப்பட்டு அவைகளை நீக்கத்தகுந்த முறைகளையும் ஔஷதாதிகளையும் அரிய முயற்சி செய்கிறார்களோ அவ்வளவு தூரம் வாயில்லா ஜீவன்களுக்கு நேரும் வியாதிகளுக்கு வியாதி மூலத்தைக்கண்டு அவைகளை நீக்கத் தகுந்த முறைகளையும் ஔஷதங்களையும் அறியப் பாடுபடுகிறவர்கள் அரிதாயிருக்கிறார்கள் நமது தேசவாசிகளுக்கு இன்றியமையாததான மாடு, பசு, எருமை, ஆடு முதலியவைகளுக்கு நேரும் வியாதிகளையே நீக்க விசேஷ அக்கறையும் ஆவலும் உதிக்காத நம் ஜனங்கள், தாதுவர்க்கங்களாகிய மரம், செடி, கொடி, பயிர்களுக்கு நேரும் வியாதிகளைப்பற்றி கவனம் செலுத்தி அவைகளை நீக்க முறைகளையும் தக்க ஔஷதங்களையும் கண்டுபிடிக்க முயற்சி யெடுப்பது எக்காலமோ? சுதேச கைத்தொழிலை பெருகச் செய்யவேண்டுமென்ற பெரும் நோக்கத்தில் தங்கள் காலத்தை யெல்லாம் செலவழிக்க முன்வருகிற அறிவாளிகளும், தேசாபிமானிகளும் நம்தேசவாசிகள் விருத்தியடைவதற்கு அவசியமான சிற்சில விஷயங்களை மட்டும் தான் திருஷ்டாந்தங்களாக எடுத்துக் கூறிப்போதிக்க இயலுமேயன்றி நமக்கு இன்றியமையாத தான் ஒவ்வொரு காரியத்தையும்



REGISTERED 28 NOV 1910 MADRAS.

தொட்டுக்காட்டி செய்யத்தூண்டுவது அசாத்தியமானதேயாகும். ஆகையால் நாமே ஒவ்வொரு அற்பமான காரியத்தையும் அதியவசியமான காரியமென்பதாக கவனித்து முயற்சி செய்து ஆராய்ந்தறிந்து தக்க பரிகாரங்களைச் செய்து விருத்தி யடையவேண்டும்.

மரம், செடி, கொடி, பயிர்களுக்கு நேரும் பற்பலவிதமான வியாதிகளை அங்கங்கேயுள்ள குடித்தனக்காரர்களும் வியவசாயிகளும் ஒருவாறு அறிந்திருந்தாலும், அவைகள் நேருவதற்குக் காரணத்தையும் அவைகளை நீக்கத்தக்க முறைகளையும் கண்டு பிடித்து செய்து பயனையடையாதவர்களாகவே இருக்கிறார்கள். மரம், செடி, பயிர்களுக்கு தடுக்கமுடியாத சில வியாதிகள் நேர்வதுண்டு. அதாவது வானம் பார்த்த பயிர்களுக்கு மழைக் குறைவால் சோகை, காய்ச்சல், வரட்சி என்பதாக சில வியாதிகள் தோன்றிப் பயிர்கள் வரண்டு போகத்தொடங்கும். இந்த வியாதிகளுக்கு மழையடித்தாலன்றி வேறு பரிகாரம் செய்ய முடிவதில்லை. காலரா காலத்தில் மழையடித்தும், செவ்வையாக எருவிடப்பட்டும், பட்டம் தவறாமல் களை, கொத்து, வெட்டு முதலிய வேலைகள் செய்தும் நேரப்பட்ட சில வியாதிகளிருக்கின்றன.

ஒவ்வொரு பயிருக்கும் நேரப்பட்ட ஒவ்வொரு வியாதியையும், அவைகளின் குணாகுணங்களையும், அவற்றிற்குப் பரிகார முறைகளையும் இச்சிறுவியாசத்தில் வரைவதென்றால் சாத்தியமாமோ? ஆயினும் திருஷ்டாந்தமாக சிலவற்றைக் கூறிமுடிப்போம்.

காப்பிச் செடிகளுக்கு கருப்பு என்பதாக ஒரு கொள்ளை நோய் உண்டாவது சகஜம். இது செடிகளின் பேரில், கருப்பான தாரைப்பூசினால் எப்படி தோற்றுமோ, அவ்விதமாய் ஒருவித கருப்பான சிறிய பூச்சிகளுண்டாய் வெகு சீக்கிரத்தில் செடிகளையே பாழாக்கிவிடுகிறது. இதற்கு ஐரோப்பிய வியவசாயிகள் பலவிதமான முயற்சிகள் செய்தும் நாளது வரையில் தகுந்த முறைகளையும் ஔஷதங்களையும் கண்டுபிடிக்கவில்லை. நீலகிரி மலையின் பேரிலுள்ள பல காப்பித் தோட்டங்களில் இவ்வியாதி தோன்றிச் செடிகளைப் பாழாக்கித் தோட்டக்காரர்களைப் பெரும் நஷ்டத்திற் குள்ளாக்கிக் கொண்டு வருகிறது.

கரும்பு, சோளம் முதலிய சில பயிர்களுக்கும் சோகை என்பதாக ஒருவிதமான காய்ச்சல் நோய் திடீரென்று கண்டு, சோகையல்லது தழைகளை வரட்டி, வெளுக்கச் செய்து பயிரையே பாழாக்கி விடுகிறதுண்டு.

உருளைக்கிழங்கு பயிர்களுக்கும் புள்ளி நோய் என்பதாக ஒரு வியாதி தோன்றுவதுண்டு, அவரைக்கு மசி என்பதாக ஒரு வித பூச்சிகள் விழுந்து பாழாக்குவதுண்டு. இவ்விதமாய் பயிர்களுக்கும், செடிகளுக்கும் நேரும் வியாதிகளைப்பற்றியும், கால் நடைகளுக்கு உண்டாகும் கொள்ளை நோய், கோமாரி முதலியவைகளுக்கும் காரணங்களை யறிந்து தக்க பரிகாரங்களையும், முறைகளையும் அறியவேண்டுமென்று பதினாலு வருஷ காலமாய் இந்தியாவின் பல பாகங்களுக்கும் பிரயாணம் செய்த காலத்தையும் மற்ற சமயங்களிலும், இவ்விஷயத்தில் கண்ணும் கருத்துமாய் ஆராய்ந்து வந்ததில் சிலமுறைகளையும் ஔஷதங்களையுமறிந்து சிற்சில சமயங்களில் அவைகளைப் பரீக்ஷித்துப் பலனடைந்துமிருக்கின்றோம்.

மைசூர் ராஜ்யத்தில் கொஞ்ச காலத்திற்கு முந்தி சந்தன மரங்களுக்கு ஒருவிதமான வியாதிதோன்றி மரங்கள் பட்டுப்போவதாயும், அதன் காரணங்களை யறிந்து தகுந்த பரிகாரங்களைச் சொல்லுகிறவர்களுக்கு விசேஷ வெகுமதி கொடுக்கப்படுமென்பதாகவும், மைசூர் கவர்ன்மெண்டாராலேயே ஒரு விளம்பரம் பிரசுரஞ் செய்யப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அதற்கு இதுவரையில் யார் எவ்விதமான முறைகளையும் பரிகாரங்களையும், அனுசரிக்கும்படி கூறினார்களோ தெரியவில்லை. அவைகள் எவ்வளவு தூரம் பலனைக் கொடுத்ததோ என்பது யாம் அறியமாட்டோம். ஆயினும் நாம் நம்முடைய ஆராய்ச்சியின் பலனாக அறிந்ததைப் பயிரங்கமாய்க் கூறுவது பிழையாகமாட்டாதென்று உன்னி இப்பத்திரிகையில் அடியில் காணும் விஷயங்களைக் கூறத்துணிந்தோம்.

சந்தன மரங்கள் வளர்ந்துள்ள பூமியானது காற்றுள்ளே பிரவேசிக்க முடியாமலும், தண்ணீர் செவ்வனே உட்சென்று ஒவ்வொருவேரின் நுனியிலுமுள்ள வாய்களுக்கு எட்டமுடியாமலும் இறுகி, கெட்டிப்பட்டுப்போய் விடுமானால் வேர்களில் ஒரு விதமான கறையான் போன்ற சிறிய செம்பூச்சிகளுற்பத்தியாகி, நாளாவட்டத்தில் வேர்களின் நுனியிலுள்ள வாய்களையே அரித்து ஆகாரமாக உட்கொண்டு, வேர்களைக் குடைந்து கொண்டு மரத்திலுள்ள சத்தாகிய ஈரத்தை ஆகருஷித்து, ஏராளமாய்ப் பெருகி, மரத்திற்கு முக்கிய ஆதாரமாகிய வேர்களின் நுனிவாயைச் சத்தைக் கிரகிக்கும் தன்மையற்றதாய்ச்செய்து விடுகிறது. இப்படிப் பூச்சிகள் வேரையரிப்பதால், மரத்தின் இலைகளில் சிறிது தினத்திற்குள் சிறிய சிவப்பான பொட்டுகளும், கொம்பு, அடிமரம் முதலியவற்றிற் குஷ்டம்போன்ற நிறமாற்றமும் காணப்படும். பின்னும் சிறிது தினத்திற்குள் மரம் பட்டுப்போம். இம்மரத்திலுள்ள சுகந்தமே இப்பூச்சிகள் அரிப்பதற்குக் காரணம்.



இதற்குப் பிரதி மரத்தினுடைய அடிப்புறத்தைச்சுற்றிலும் இரண்டடி அகலத்திற்கும், ஓரடியாழத்திற்கும் பள்ளம் வெட்டி, மரத்தின் பரிமாணத்திற்குத் தக்கபடி உப்பும் சாம்பலும் கலந்து கொட்டிப் பரத்தி மண்ணால் மூடி, தண்ணீர் நிற்கும்படி பாத்திகட்டிக் கொண்டு மூன்று நாள் தொடர்ச்சியாய் விடாமல் காலை வேளைகளில் எதேஷ்டமாகத் தண்ணீர் ஊற்ற வேண்டும். வனத்திலுள்ள மரங்களுக்கெல்லாம் தண்ணீர் விடுவது சாத்தியமில்லையே என்று தோற்றுமானால் மழை காலத்தை நோக்கியிருந்து முன் சொன்ன மாதிரி செய்யவேண்டும். ஆனால் மழைத் தண்ணீர், போடப்பட்ட உப்பையும் சாம்பலையும் வாய் வழியாகக் கரைத்துக்கொண்டு போகாமல் வேர்களுக்கு ஊறிச் செல்லும்படி பாத்தியை ஆழமாகவும் அகலமாகவும் செய்து வைக்க வேண்டும். மரம் ஒன்றுக்கு 4-படி முதல் காத்திரத்திற்குத் தக்கபடி 10-படி வரையில் போடவேண்டும். போடப்பட்ட உப்புக்கு சாம்பல் இரண்டு பங்கு அதிகமாக இருக்கவேண்டும். கடலுப்பே சிரேஷ்டமானது. இவ்வியாதியால் பீடிக்கப்படாத மரங்களுக்கு அடிப்பாகத்தில் மரத்தின் பரிமாணத்திற்குத் தகுந்த அளவாய் மழைத் தண்ணீர் நிற்கும்படியாக பாத்திகள் செய்துவைப்பதே போதுமானதாகும். அல்லது சிற்சில மரங்களுக்கு ஒரே பாத்தியாக கால்வாய்கள் போன்ற பள்ளங்கள் வெட்டிவைப்பது அனுகூலமானது. இவ்விதம் செய்து வந்தால் செந்நிறமான சிறிய பூச்சிகள் சீக்கிரத்தில் இறந்துபோமென்பதில் தடையில்லை. வரண்டு போகத் தொடங்கின மரங்களும் தளிர்க்கத் தொடங்கிவிடும். பரீக்ஷார்த்தமாகச் செய்து பார்க்கலாம். இவ்வளவு தானாவென்று அலக்ஷியஞ் செய்யாமல் பொறுமையுடன் செய்ய வேண்டும். செய்தால் சந்தன மரத்தைப் பிடித்த சனியன் உடனே தொலைந்து விடுமென்பதில் சந்தேகமில்லை.

இப்படியே கால்நடைகளுக்கும் பயிர், செடி, கொடிகளுக்கும் நேரும் வியாதிகளைப் பற்றி எமக்கு விவரமாய் அரையணா ஸ்டாம்புடன் எழுதினவர்களுக்கு அனுபோகத்தினால் அடைந்த அறிவை இலவசமாய்த் தெரிவிக்க சித்தமாயிருக்கிறோம். இதை வேறு பத்திரிகைக்காரர்கள் எழுதுவதாயிருந்தால் எமது விலாசத்துடன் பதிப்பிக்கும்படி கோருகிறோம்.

T. C. V. ரமணய்யர்.

## எனாமல் பாத்திரங்கள்.

எனாமல் பாத்திரங்கள் :—எந்த விஷயமும் நமது மேனாட்டார்கள் எடுத்துக்கூறினால் நமக்குப்பத்தியமேயன்றி நம்முன்னோர்களே நமக்குக் கூறினால் அவ்வார்த்தை அவ்வளவு மதிப்புக்கொள்ளுவதில்லை, எனாமல்

பாத்திரங்கள் கூடாதென்று Mr. ரீபர்ட்காஸ்பர் கூறுகின்றார். ஆகாராதிகள் செய்வதற்கும் பானங்கள் காய்ச்சுவதற்கும் ஒவ்வொரு வீட்டிலும் நாம் இப்போது எனமல்-பாத்திரங்களையே உபயோகப்படுத்துகிறோம். பெண்டுகளுஞ்சரி புருஷர்களுஞ்சரி, எனமல் பாத்திரத்தின் தவள நிறத்தைக்கண்டு மயங்கி அவைகளையே வாங்கத்தலைப்பட்டனர். இன்னங் கொஞ்சகாலத்தில் சிரார்த்தாதிகளுக்குக்கூட எனமல் பாத்திரங்களையே உபயோகிப்பார்போலும்! இந்த ஆதுரத்தில் ஜனங்களுக்குச் சிலகேடுகள் சம்பவித்து இருக்கின்றன. இந்தப் பாத்திரங்கள் உள்ளே தடவிய வெண்மண் நிலைநிற்குமளவுதான் உண்ணவும் பருகவும் உபயோகமாகும். வெண்மண் சிறிதேனும் விழுந்தால் பாத்திரம் பிரயோஜனப் படுவதில்லை. எனமல் பாத்திரங்களில் அணுக்கள் உணவு பதார்த்தங்களோடு சேருகிறதினல் தேக அசௌக்கியத்திற்குக் காரணமாகிறதென்று வைத்திய விற்பன்னர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இதனை நம்மவர்கள் கவனித்து எனமல் பாத்திரங்களை வாங்காதொழிவார்களாக.

## இரட்டைக் குழந்தைகள் பிறந்த சில விசேஷ சந்தர்ப்பங்கள்.

---

1. 'ஸாம்பையர்' என்னுங் கப்பல் சேதமடைந்து அதிலுள்ள ஜனங்கள் சிறிய படகுகளிலும் துண்டு துணிக்கைகளிலுமாகத் தொற்றி உயிர்தப்பி யோடும்போது, இரண்டு மரக்கட்டைகளால் இணைக்கப்பட்ட, ஒரு சிறியதெப்பத்தில் ஒரு மாது இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். அந்தத் தெப்பத்திலுள்ள எத்தனையோ ஆடவர் அலைபால் எறியப்பட்டும், பசியால் நலிந்தும் மடிய, இந்தப்பெண்மணியும் அவள் இரு கண்மணிகளும் தெய்வாதீனமாய் உயிர் பிழைத்து கரை வந்து சேர்ந்தார்களாம்.

2. சில வருஷங்களுக்குமுன் மாட்ரிட் நகரத்தில் நடைபெற்ற சர்க்கஸ் ஆட்டத்தில் கார்லோ லாம்புரோ என்பவரது பனிவி, சிங்கம், புலி முதலிய துஷ்ட மிருகங்களோடு விளையாடிக்கொண்டிருக்குந் தருணத்தில் அவைகளின் கூண்டுக்குள்ளேயே யாவருமதிசயிக்க இரட்டைப் பிள்ளைகளைப் பெற்று குழந்தைகளுக்காவது அவளுக்காவது துஷ்ட மிருகங்களால் யாதொரு துன்பமுமணுகாது வெளியேறினளாம்.



3. பிராஞ்சிய ஜெர்மானிய யுத்தத்தில் மாடம் கோல்லட் என்பவள் இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்த சரித்திரம் மிகுந்த ஆச்சரியத்தைத்தரத்தக்கது. மாடம் கொல்லட் என்பவள் பிராஞ்சிய சைனியத்துக்கு ஆகார பதார்த்தம் சவதரித்துக்கொண்டிருந்த கண்ட்ராக்ட்காரரின், மனைவி செடன் நகரத்தில் 2000-க்கு மேற்பட்ட ஜெர்மானிய பீரங்கிகள் வாயைத் திறந்து அக்கினியைக் கொந்தளித்துப் பிராஞ்சியப் படைகளை அதமாக்கும்போது 'கொல்லட்துரைசானி படைமுகத்தில் தங்கியிருந்த கூடாரமும் குண்டுபட்டு சிதறுண்டுபோக' அவளுக்கு துணையாய் நின்ற அவள் பர்த்தாவும் குண்டுபட்டு அவள் பக்கத்திலே மடிய, அந்தப் பதிவிரதை இரண்டு பெண் மக்களைப் பெற்று யாதொரு தீங்கணுகாது ஆச்சரியத்துக்குரிய விதமாய் அவளிரு மக்களோடு தப்பிக்கொண்டாளாம். (முஸ்லிம் நேசன்).

---

## வைத்தியக் குறிப்புகள்.

---

**ஈருள்ளியும் பிளேக்நோயும்** :—தற்சமயம் இவ்விடத்தில் பிளேக் நோயுள்ள ஒருவருக்கு மேற்கூறும் ஈருள்ளியாகிய ஈரவெங்காயத்தைத் துவைத்துத் தனிச்சாரெடுத்து சுமார் 1 மணிக்கொருதரம் ¼-படி வீதம் உள்ளேகொடுத்தும், அதன் சக்கையை நோயுற்ற கட்டியின்மீது கட்டியும் வந்ததில், இரண்டேநாளில் சௌக்கியமாகிவிட்டதால் இதனை எல்லோரும் அறியும்படி வரையலானேன். ரா. சாமிராஜு. சேய்கூன்.

---

**சைந்தியவர்தி சூரணம் செய்முறை** :—சைந்தியலவணம். 1-பங்கு சீரகம் 2-பங்கு, ஓமம் 4-பங்கு, திப்பிலி 8-பங்கு, சுக்கு 16-பங்கு, கடுக்காய் 32-பங்கு, இவைகளின் தூளை நிறுத்தெடுத்து ஒன்றாய்க்கலந்துகொண்டு, வாந்தி, அக்கினிமாந்தம், கிருகிருப்பு, இவை முதலியவைகளுக்கு வேளை ஒன்றுக்கு 1 தோலா வீதம் தினம் 1-க்கு 2 வேளை கொடுக்கவும்.

---

**ஆவாரன் கிருதம் செய்முறை** :—பத்து பலம் ஆவாரன்பூவை 20-பலம் பசு நெய்யிலிட்டு 3-நாள் ஊறவைத்து, பிறகு காய்ச்சிவடிகட்டி அதில் 10-பலம் கற்கண்டும், ஏலம், சீரகம், லவங்கப்பட்டை, சடாமாஞ்சி, சந்தனம் இவைகளின் தூள்வகை 1-க்கு, விராகநிறை ஒன்றுவீதம் சேர்த்து கலந்துக்கொள்ளவும். உபயோகம், பித்தம், அரோசகம், அன்னத்துவேஷம், உஷ்ணம், மேகவியாதிகள் முதலிய ரோகங்களுக்கு 2-தோலா நிறை தினம் இருவேளை கொடுக்கலாம்.

---

**தேள்கொட்டல் Scorpion Sting** :—தேள்கொட்டலுக்குமருந்து தெரியாதவர்கள் உலகத்தில் யாருமில்லை, மந்திரத்தினல் விஷம் இறங்குவதுமுண்டு. தேள்கொட்டின உடனே விஷம் மேலுக்கேறாமல் கொட்டுவாய்க்கு மேல் கயிற்றால் கட்டிவிட்டு, அடியில் கண்ட சிலமருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம். (1) நாயுருவிப்பூண்டின் சமூல

த்தைக்கசக்கித்தேய்க்கலாம். (2) சுண்ணாம்பு ஒட்டடை இவைகளை அரைத்துப்பூசலாம். (3) சுண்ணாம்பும், உப்பும் சமனாய்ச்சேர்த்து அரைத்துப்பூசி அனல்காட்டலாம். (4) வெங்காயத்தைக்கொட்டின விடத்தில் ½-மணி நேரம் தேய்க்கலாம். (5) பெருங்காயம் பூசலாம்.

---

வெள்ளைப்பூண்டும் அதன் உபயோகமும் :—வெள்ளைப்பூண்டு இத்தேசத்தில் எங்கும் உண்டு, இதன் ரசத்தைத் தேகத்தில் தடவினால் சரீரம் கொப்புளித்து விடும். இதனுடைய குணம் கடுகினுடைய குணத்தைப் போலிருக்கும். இதற்கு ஜீரணம் செய்யக்கூடிய சக்தி இருப்பதால் இதைக்குழம்பில் சேர்ப்பார்கள். வெள்ளைப்பூண்டை அதிகமாக உபயோகித்தால் தலைவலி, வயிறு உப்புதல், தாகமெடுத்தல், தேகம் சூடாதல், பேதியுடன் ரத்தங்காணல் இவ்வை நேரிடும். காதுமந்தப்பட்டால் வெள்ளைப்பூண்டு ரசத்தை பஞ்சில் தோய்த்து நாள் ஒன்றுக்கு 4, 5, 6, தடவை காதுக்குள் வைத்தால் குணப்படும். இதன் எண்ணெயைக் கீல்வாயு, வாயு, பிடிப்பு முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். தேகத்தில் வலிவு குறைந்தால் பூண்டு சேர்க்கலாம்.

---

ரெங்கூன் அரிசியும் பெரிபெரி நோயும்:—இரங்கூன் அரிசி என்றும், கப்பலரிசி யென்றும், சுண்ணாம்பு அரிசியென்றும் இவ்விதமான பெயருடன் ஒருவிதமான வெண்மையான பளபளப்புள்ள அரிசியை நம்மவர்கள் பார்த்திருக்கலாம். அது நம்நாட்டு அரிசியைவிட கொஞ்சம் மலிவான விலைக்குக் கிடைக்கிறதென்று சிலர் வாங்கி உபயோகிக்கிறார்கள். நமது அனுபோகத்தில் அது பலருக்கும் தேகத்துக்கு ஒத்துவருவதில்லை, சமைத்தால் சாதமும் அதிகமாய்க்காண்பதில்லை சிலசில்லரை வியாதிகளும்உண்டாவதாகத்தெரிகிறது. இப்போது ஒருவர்த்தமானம் எட்டுகிறது. பெரிபெரி என்ற நோய் அந்த அரிசியால் உண்டாகிறதாம். அதாவது மார்நோய், மாரடைப்பு முதலியன காணுகிறதாம். அந்த அரிசி, யந்திரசாலையில் குத்தப்பட்டு சுத்திகரிக்கப்படுவதில் பார்வைக்கு அழகாய் இருந்தாலும், அரிசிக்கு இருக்கவேண்டிய உத்தம குணங்கள் எடுபட்டுப்போகிறதாம். நமது தேசத்திலும் ரங்கூன் அரிசிதேகத்திற்கு கெடுதல் செய்கிறதென்று தெரிந்திருந்தும் அவ்வரிசியை வாங்கியுண்பதின் காரணம் தரித்திரமேயன்றி வேறல்ல.

---

## வர்த்தமானம்.

காஷ்மீர் சமஸ்தானத்தில் பேதி உபத்திரவம்:—பஞ்சாப்மாகாணத்தைச் சேர்ந்த காஷ்மீர் சமஸ்தானத்தில் பேதியுபத்திரவம் வெகுஜாஸ்தியாய் இருந்துவருவதாய் தெரிகிறது. போனஜூன் மீ 4௳ அந்நோய் அந்தசமஸ்தானத்தில் தலைகாட்டிற்று. அந்தத்தேதிமுதல் நாளது வருஷம் ஜூலைமாதம் 14-ந்தேதிவரை அந்நோய் 1040 பேருக்குக் கண்டதாகவும் 572-பேர் இறந்துபோய்விட்டதாகவும் தெரிகிறது. சென்றமாதம் 14-ந்தேதியன்றும் அந்நோய் அடங்குங்குறிகளைக் காணவில்லையாம்.



விருதுப்பட்டியில் விஷபேதி :—இக்கொடிய நோய் இந்நகரை விட்டு நீங்கினபாடில்லையாம். வெகு பலமாக வேலைசெய்கிறதாம் தெருவெங்கும் அழுகைக்குரல் தொனிக்கிறதாம். வியாதியை நீக்கும்பொருட்டு தேவதைகளுக்கு பீடங்கள் போட்டு பலிகள் கொடுக்கப்படுகின்றனவாம். சானிடேஷன் திருப்தியாயில்லையாம், நகரின்சுகாதாரத்தை யூனியன் போர்டுமெம்பர்களும் அபாதகிரியும் கவனித்தலவசியம்

---

பத்திரிகைவரவு:—விவேகபோதினி, பிழைக்கும்வழி, கர்மயோகி, பிரஹ்மஞானவிளக்கம், திராவிடாபிமானி, Sulf-culture முதலியபத்திரிகைகள் வரப்பெற்றோம். வித்தியாபானு, செந்தமிழ், ஆயுர்வேதபாஸ்கரன் மாதர்மனோரஞ்சனி, வித்தியாபாஸ்கரன், பிரஜாநுகூலன் முதலியபத்திராதிபர்களுக்கு நமது பத்திரிகை பிரசுரிக்குந்தோறும் அனுப்பிவந்தும் ஷெபத்திராதிபர்கள் மாற்றுப்பத்திகை அனுப்பாதகாரணம் அறியோம் இனியேனும் பத்திரிகை அனுப்பிவருவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

---

நமது போதினியின், அபிவிருத்தி கருதிய திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ, மஹாசன்னிதானம் அவர்கள் ஏற்கனவே ரூ 35 கொடுத்திருப்பதாக, சென்ற மாதபத்திரிகையில் பதிப்பித்திருக்கிறோம். சன்னிதானம் அவர்கள் ரூ 50 கொடுப்பதாக வாக்களித்திருந்தபடியே, எஞ்சிய ரூ 15-ம், அதன் பிறகளித்திருக்கிறார்கள். மழலைப்பருவமுடைய நம பத்திரிகையின் அபிவிருத்திகருதி, ஸ்ரீ மஹாசன்னிதானம் இங்ஙன்கொடையளித்ததானது மேகம் பூமிக்குச் செய்யும் உதவி போலாகும்.

---

தவளைத்தோல்:—ஜப்பான் தேசத்தார் தங்கள் தேசத்திலிருக்கும் விதம்விதமான தவளைகளைப் பிடித்து அவற்றின் தோல்களை உரித்துபதப்படுத்தி இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா முதலான தேசங்களுக்கு அனுப்புகிறார்கள். தவளைத்தோலால் மனிப்பர்ஸ் (துட்டுப்பை) முதலிய விநோதமான சாமான்கள் செய்கிறார்கள். ஒருதோல் சுமார் ¼ அணாவுக்கு விலைபோகும். ஜப்பானியர்வருஷாவருஷம் ஏறக்குறைய பதினாயிர ரூபாய் பெறுமான தவளைத்தோலை ஏற்றுமதி செய்கிறார்கள். மனிதன் தவளையைக்கூட சும்மாயிருக்கவிடமாட்டானா?

---

ருஷியாவில் காலராவின் அதிகரிப்பு :—செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் மட்டும் 1205-பேருக்கு இது வரையில் காலரா கண்டிருக்கிறதென்றும், சுற்றுப்பக்க மாகாணங்களில் 65000-பேருக்குக் காலரா கண்டிருக்கிறதென்றும், காலரா மிகவிரைவுடன் அதிகரித்து வருகிறதென்றும், செயிண்ட் பீட்டர்ஸ் பர்க்கிலிராக்கும் "டைம்ஸ்" பத்திரிகையின் நிருபர் தெரிவிக்கிறார். காலரா கண்டவர்களில் சரிபாதி பேருக்கு மேல் மரணமடைகிறார்கள்.

இந்த வியாதியைத்தடுக்க சரியான வைத்தியர்களைக் கொண்டு வரும்படி தென்பாகத்துக்குகவர்ண்மெண்டார் ஆட்களை அனுப்பியிருக்கிறார்கள்.

காகங்களுக்குக் கேட்டகாலம்:—கல்கத்தா முனிசிப்பாலிட்டியார் கல்கத்தாவிலுள்ள காக்கைகளை யெல்லாம் கொல்லும்படி உத்தரவு செய்திருக்கிறார்களாம். காக்கைகளையும, காக்கைக்குஞ்சுகளையும் கொண்டுவந்து கொடுப்போருக்கு வெகுமதிகள் கொடுக்கப்படுகின்றன. இதுவரை எலிகளைக்கொன்று வந்தது காணுமல் இப்பொழுது காகங்களுக்கும் ஜோதிஷ சாஸ்திரப்படி மாரகதிசை வந்து விட்டது போலும், காகங்கள் எலிகளைத் தின்னுவது வழக்கமாகையால் பிள்ளையாரைப் பிடித்த சனியன் அரசமரத்தைப்பிடித்தாற் போல், காகங்களுக்கும் வாரண்டுகள் பிறந்துவிட்டனவோ என்னவோ தெரியவில்லை.

குருடருக்கு ஓர் புதிய பத்திரிகை:—லண்டன் நகரத்தில் பிரசுரமாகும் பேர் போன "டெயிலி மெயில்" என்னும் விபரல் பத்திரிகை குருடரைப் பரிசத்திஞல் வாசிக்கும் பொருட்டு அவர்களுக்காக ஓர் விசேஷ வாராந்தரப்பத்திரிகை பிரசுரம் செய்து வருகிறது. பிரித்தானியாவில் 40,000-ம் குருடரிருக்கின்றார்கள். இவர்களது நன்மையைக்கருதி வெளியாகும் பத்திரிகையின் வருஷசந்தா 6-ஷில்லிங் 6-பென்சாம். இந்தப்பத்திரிகை "டிட் பிட்ஸ்" என்ற பத்திரிகைப்போன்ற வடிவமுடையதும், 20-பக்கங்கொண்டதும், எழுப்பமுடையதுமாயிருக்கின்றது. என்ன ஆதாயங் கருதிடெயிலி மெயில் பத்திராதிபர் குருடருடைய பத்திரிகையை வெளியிட்டாரோ தெரியவில்லை.

ஸிலோனில் ஜனன மரணக் கணக்குகள்:—இந்தவருஷம் மார்ச்சு மாதத்தோடு முடிவாகிற முதல் கால் வருஷக் கடைசி நாளன்று இத்தீவின் ஜனத்தொகை 4091380 முந்திய கால் வருஷ முடிவிலிருந்ததைவிட இத்தொகையில் 8445 அதிகம். ஏனெனில், மரணத்திலும் ஜநனம் 12671 அதிகத்தோடு இந்தியக் கூலிகளின் வரவைவிட, போக்கும் 4226 அதிகமாம். பிரஸ்தாப கால் வருஷத்தில் ரிஜிஸ்தரான ஜனனம் 39729. (34-ஐரோப்பியர்); மரணம் 27058 (25-ஐரோப்பியர்); மரணத்தில் வயதுக்குட்பட்ட குழந்தைகள் 7056; அகஸ்மாத்தாய் ஏற்பட்ட மரணம் 406; பாம்பு கடி 62; முதலைக்கடி 7; யானையால் 4; காட்டுப் பன்றியால் 1; இடிவிழுந்து 2; சூரிய உஷ்ணத்தால் 1; கொலையால் 40; தற்கொலையால் 33; கோர்ட்டாரால் விதிக்கப்பட்ட தூக்குத்தண்டனை 4 ஆம்.



கிரோசின் எண்ணெ கிணறு:—அதிஷ்டமுள்ளவன் மண்ணைத்தொட்டாலும் பொன்னுகும். மேல்நாட்டில் டிட்ஸ்வைவல் என்னுமிடத்தில் ஈ. எல் டிரேக் என்பவர் ஒரு கிணறு தோண்டுவதற்காகப் பிரயத்தனப்படுகிறபோது, ஆயுதத்தால் பூமியில் குடைகிறபோது திடீரென்று குடைந்து கொண்டிருந்த ஆயுதம் பூமியின் அடிக்குகையொன்றில் புகுந்து மறையவும், அந்தத் துவாரம் வழியாய் உள்ளிருந்த எண்ணெய் வெளிக்கிளம்பியடித்தது. பிறகு அதன் உபயோகம் கண்டுபிடிக்கப்பட்டு உலகமெல்லாம் பரவஆரம்பித்த காலையில் "ஈ. எல். டிரேக்" என்பவர் குபேரனுக்கு மிஞ்சிப்போய் விட்டார் உபயோகமற்ற தரிசுநிலங்களாகக்கிடந்த பூமிகளெல்லாம் பொன் விளையும் நிலமாக மாறிப்போயிற்று. அதிஷ்டம் வருகிறபோது சொல்லிக்கொண்டா வருகிறது.

சேலத்தில் பிளேக்:—சேலத்தில் மறுபடியும் பிளேக் வந்துவிட்டதென்ற விஷயம் நேயர்களுக்கு மிகவும் விசனத்தை உண்டுபண்ணுமென்பதற்கு ஐயமில்லை. கிச்சிப்பாளையம் என்னும் கிராமத்தில் அதிக மும்முரமாய்த்தொடங்கியிருக்கிறது. சென்ற ஆகஸ்டு மாதம் முதல் தேதிமுதல் 14௳ வரையில் 33-கேஸ்கள் உண்டாயின. இச்சமாசாரத்தைக் கேட்ட கலெக்டர் மிஸ்டர் பக்லீ ஒசூரிலிருந்து வந்து இவ்வூர் பிரதான நகரவாசிகளோடு டவுன் ஹாலில் ஒருசபைகூட்டி இச்சமாசாரத்தைப்பற்றி ஆலோசித்து கிச்சிப்பாளையத்துக்கு சென்று வீடுகளை யெல்லாம் பரிசோதித்தார். அவ்விடமிருந்து வருகிறவர்களுக்குப் பாஸ்போர்ட் கொடுக்கும்படியாகவும் இவர் உத்தரவு செய்திருக்கிறார். முனிசிபல் அதிகாரிகள் அதிக சிரமப்பட்டு வேலை செய்து வருகின்றனர். இரண்டு மாதங்களுக்குமுன் ஊரைவிட்டுப் போயிற்று என்று எண்ணிய இந்தப் பிளேக் திரும்பவும் வந்து விட்டது மிகவும் விசனிக்கத்தக்கதே.

விநோதமரணம்:—நாகப்பட்டணத்திலிருந்து சென்னைக்குச் சென்று 'மெஸ்ஸர்ஸ்' பெருமாள்செட்டியிடம் வியாபாரம் செய்துவந்த அந்தணர் ஒருவர் சென்ற நாயிற்றுக்கிழமை லிங்கிசெட்டித்தெருவிலிருந்து பகல் 11-மணி சுமாருக்கு ரிக்ஷா ஏறி பிராட்வே வழியாய்ப் போகையில் திடீரென்று வண்டியிலேயே இறந்தாராம். வண்டிக்காரன் பயந்து போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய் ஒப்புவித்து நடந்த சங்கதிகளைத் தெரிவித்தானும். இறந்தவருடைய சட்டைப்பையில் ரூபா 2-ம் "பெருமாள் செட்டி அன் ஸன்ஸ்" என்ற விலாஸமுள்ள கடிதமும் இருந்தன

வாம். அப்பால் இந்தத்தாப்பின்பேரில் போலீஸார் பெருமாள் செட்டியை விசாரித்து இறந்தவருடைய விபரங்கள் தெரிந்து நாகப்பட்டணத்திற்குத் தந்தியனுப்ப பந்துக்கள் வந்தார்களாம் பிறகு பிரேதத்தை ஆஸ்பத்திரியில் பரிசோதித்ததில் ரத்தப்பையின் வியாதியால் இறந்தாரென்று தெரியவந்ததாம்.

---

சீனர்களுடைய சவச்சடங்கு:—சீனன் ஒருவன் செத்துப் போனால் அவனுடைய பிரேதத்தை மையக்குழியில் கொண்டு வைத்து, மார்க்க போதகரால் செய்யப்படவேண்டிய சடங்காசாரங்களைச் செய்துமுடித்தபின், அவனுடைய இனஜனத்தார் அந்தக் குழியில் ஒரு கோழிக்குஞ்சு, இரண்டு மூன்று வகையான மாமிசத்துண்டங்களும் ஒரு கூடை நிறைந்த அரிசியும், காய்கறி பதார்த்தங்கள் சிலதும் எறிந்து, விஸ்கி என்னும் மதுபானப் புட்டி ஒன்றைத் திறந்துபிரேதப்பெட்டிமேல் ஊற்றிவிட்டுமண்ணால் மூட, இன்னுஞ்சில இனஜனத்தார் மெழுகுவர்த்திகளையும் விளக்குக் கூண்டுகளையும் கொளுத்திப்பிடித்துக் கொள்வார்களாம். பிரேதக்குழியில் போடுகிற பண்டபலாதிகள் இறந்தவன் மறுஉலகம் சேருமட்டும் அவனுக்கு ஆகாரமாய் உதவுமென்பதும், இந்தத் தீபங்களாலவன் மறுஉலகத்துக்குச் செல்லும் வழியில் இருள் நீங்கிப் பிரகாசமுண்டாகுமென்பதும் சீனர்களுடைய கொள்கைகளாம்.

---

பீமசேனன்:—லண்டன்நகரில் ஜான்தாமஸ் என்னும் ஒருபாலகனிருக்கிறான். அவனுக்கு ஆறுவயது. இவன்வயதுக்கு மேற்பட்டபருமனுள்ளவன். இவனைபார்த்த ஒருடாக்டர் தமதபிப்பிராயத்தை எழுதுகிறார். இவன் சிறியவனாயிருந்தாலும் ஒரு புருஷனைத் தூக்கிக்கொண்டு சுலபமாக நடப்பான். இவனைப் பள்ளிக்கூடத்துக்குப்போவென்றால் தன் கால்கள் நோகின்றன என்றான். இதுநிஜமல்ல; சரீரம் பருமனாயிருப்பதால் வெகுதூரம் நடக்க முடியாது. புத்தி சக்தி வயதைத் தோற்கடிக்கிறது. இவன் பகலெல்லாம் நித்திரை செய்வான். இவனுக்கு அழகிய உடுப்புகளைத் தரிப்பித்து பலஜனங்கள் ஸஞ்சரிக்கும் இடத்துக்கு அழைத்துப்போய் பெற்றோர்கள் பொருள் சம்பாதிக்கின்றனர். இவனைச் சிறுபிள்ளைகளுடன் விளையாடவிடுவதில்லை. பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினால் மற்ற வித்தியார்த்திகள் பாடத்தை விட்டு இவனைப் பார்ப்பதில் இச்சைகொள்வர். இவனுக்கு ஸ்கூல் பெஞ்சு போதாது. இவனை வண்டியிலேற்றினால் இடம் போதாது; குதிரை இழுக்காது இந்தவாறு அந்த டாக்டர் எழுதுகிறார். இதுவும் ஒரு வியப்புதான்.



## விசித்திர விஷயங்கள்.

ஓர் குருட்டுக்குரங்கு:—பிரஸ்லாவில் ஒரு குரங்குக்குக்கண்ணில் பூவிழுந்தது அதனை ஆஸ்பத்திரிக்கனுப்பி சொஸ்தப்படுத்தினார்கள். இப்போது அது மூக்குக்கண்ணாடிபோட்டுக்கொண்டு உலாத்திக்கொண்டிருக்கிறதாம்.

---

ஒரு தருமப்பெட்டி:—லிவர்பூல்பட்டணத்திலிருக்கிற சிறு குழந்தைகளுக்கான தரும ஆஸ்பத்திரியில் ஒரு தருமப்பெட்டி (Poor Box) வைக்கப்பட்டிருக்கிறது. தருமகுண சிந்தையுள்ளவர்கள் அதில் பணம் போடும்போதெல்லாம், உனக்கு வந்தனம், என்கிற வார்த்தையை அந்தப்பெட்டி காண்பிக்கிறதாம்.

---

ஒரு ஆச்சரியமான பெட்டைக்கோழி:—ஒஹியோவுக்குச் சமீபத்திலுள்ள மிஸ்டர் சேலம் பியர்ஸ் என்பவர் ஒரு பெட்டைக்கோழி வைத்திருக்கிறார். அது அங்குள்ள இலந்தை மரத்தின் மேல் உட்காருமாயின், அன்று மழைமுதலியன இல்லாத சௌகரியமான காலமாயிருக்கும். அது ஷை இலந்தை மரத்தின்மீதில்லாது இறங்கித்தன் கூட்டிற் சேருமாயின், அன்று காலநிலை அசௌகரியமுள்ளதாய் இருக்குமாம். ஆகையால் கவர்ன்மெண்டாருடைய பாரோமேடர் செய்கிறவேலையை அக்கோழியே செய்துவிடுமாம்.

---

சோப்:—பிளோரிடாவிலுள்ள ஜனங்கள் சோப்புக்குப் பதிலாய் துணி வெளுக்கிறதற்கு, ஆரஞ்சிப்பழத்தின் சாற்றைப் பிழிந்து துணியின்மேல் ஊற்றி நன்றாய்க்கசக்கிப்பிழிந்துவிட்டால் துணி பனிக்கட்டி போல் வெண்மை நிறமாய்விடுமாம்.

---

புகைப்படத்தில் புள்ளிகள்:—சீமையில் ஒரு போட்டகிராபர் ஒரு பெண்ணைப் படமெடுத்து அச்சடித்துப் பார்க்கும் போது அவள் முகத்திலில்லாத சிறு புள்ளிகள் படத்தின் முகத்தில் காண 10நாள் கழித்து அப்பெண்ணைப் பார்க்க அம்மைக் கொப்பளங்கள் அவள் முகத்தில் காணப்பட்டனவாம்.

---

ஓர் சன்னியாசியினுடைய தீர்க்க தரிசனம்:—ரோம் நகரத்துக்கடிதர் 'கிராணிகல்' என்னும் பத்திரிகைக்கு எழுதியிருக்கின்றார். ரோம்நகரத்து கத்தோலிக்க குருமடத்தில் ஒரு சந்நியாசிக்குச் சிறிது சுகயீனம் நேரிட போப்பரசருடைய அந்தரங்க வைத்தியராகிய டாக்டர் லப்பரணி அவரைப் பார்வையிடும்படி வரவழைக்கப்பட்டார். டாக்டர் லப்பரணி அவரை பரிசோதனைசெய்தபின் அவருக்கு யாதொரு நோக்காடும் இல்லையென

னும், அவருடைய உடற்சோர்வு இரண்டு நாளைக்குள் குணமடைந்து விடுமென்றும் சொல்லிவிட்டு வெளியேறிவிட, அவர் வெளிச்சென்றபின் சன்னியாசியார் தமது பக்கத்திலிருந்த ஒரு குருவைப் பார்த்து, சகோதரரே! நான் இரண்டு நாளைக்குள் தேகவியோகமாவேன்; நீர் ஒரு மாதத்துக்குள் புவன வாழ்வை புறக் கணித்து சுத்த ஜீவியத்தை யடைவீர், என்னைப் பரிசோதனை செய்யவந்த டாக்டர் லப்பரணியோ இற்றைக்கு 3-மாதத்துக்குள் நம்மிருவரையும் மறு உலகில் சந்திப்பார் என்றார். இவருடைய தீர்க்கதரிசனப்படி 48-மணி நேரத்திற்குள் அவர் சாக, மறு மாதம் அதே தினத்தில் மற்றக் குருவானவரும், சொன்ன மூன்று மாத கால அளவுக்குள் டாக்டர் லப்பரணியும் காலஞ் சென்றார்கள்.

---

மூன்று குழந்தைகள் பிறந்தனவாம்:—சேலம் ஜில்லா தர்மபுரி தாலூகா கோணங்கி அள்ளி கிராமம் மஜரா புதூர் கிராமத்தில் கந்தப்பாசாரி என்கிறவரின் மனைவியார் 4—8—10 செவ்வாய்கிழமைய தினம் இரவு மூன்று ஆண் பிரஜைகளைப்பிரசவித்து குழந்தைகள் மூன்றும், தாயும் சௌக்கியமாக இருக்கிறார்களாம்.

---

## நேயர்களுக்கோர் நிருபம்.

நண்பர்காள்! சற்றே செவிசாய்மின்.

உலகத்திலுள்ள மானிடரனைவரும் நித்ய சுகஜீவியாய் வாழுதற்கும், பெறுதற்கரிய அறம் பொருள் இன்பமாகிய மூன்றையும், இம்மையிற்பெற்று மறுமையில் வீடாகிய மோக்ஷத்தைப்பெறுதற்கும் சரீராரோக்கியமின்றி நிகழாதென்பது தேற்றமே. உலகவாழ்க்கையிலும் தத்தங்கைங்கிரியங்களிற்றாழாது நிற்பதற்கும் தன் நன்மைக்காகவும் தமர்நன்மைக்காகவும் சகநன்மைக்காகவும் பாடுபட்டு உலகமெல்லாம் புகழ்க்கொடி நாட்டுதற்கும் தேகாரோக்கியமே. இருளடர்ந்த இவ்வுலகில் நல்வினையுந்தீவினையும், பாபமும் புண்ணியமும் ஒன்றிற்கொன்று வேற்றுமையின்றி பாபத்தைப்போற் புண்ணியமும் புண்ணியத்தைப் போற்பாபமும் பரந்து கிடப்பதைப்பகுத்தறிந்து நடக்கும் மனோரோக்கியத்திற்குந் தேகாரோக்கியமே. அனவரதமும் அற்புத நிறைந்த பற்பல செயல்களுமியற்றி உலகத்திற்கோ ரருந்துணையாக்குவதும் திரேகாரோக்கியமே. ஆதலின் யாவருந் தேகசௌக்கியம் என்னும் அரிய பேற்றை பெறுதற்கும், பெற்றபின் பேணுதற்கும் வேண்டிய சாதனங்களைக் கைப்பற்றி யொழுகாவிடில் வாணாளும் வீணாளன்றோ! பண்டை நாளின் நடைபிறழ்ந்து காலவேறு பாட்டால் விபரீத ஞானந்தோன்றியவாங்கு விபரீத நோய்களுந்தொடரப்பெற்று, தற்காலம் நம்தேயமிருப்பது தௌர்பாக்கிய நிலைமையே என்பதை முற்காலத்தின் நிறைவை நோக்குழி தற்காலத்தின் குறைவு நன்கு புலப்படும். இத்தகைய பெருங்குறை யெல்லாம் நீங்கவும், நம்தேயத்தினர் அல்லிக்கொடிபோற் செழித்து ஆலம் விழுதுபோற் படரவும் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்றபடி பிணியெய்தா வாழ்வைப்பெறவும், சிரகாலமுந்தீர்க்க வச்சிரதேகிகளாயிருக்கவும் தமது கருணைப்பெருக்கத்தால் நம்தேயத்தினருக்குநலம் பயக்கவெழுந்துள்ள ஸ்ரீமாந் சந்திரசேகரின் மாட்சிமை பெரிது பெரிது. இவரால் வெளிவந்துள்ள "சுதேச வைத்திய ரத்தினம்" என்னு மரிய பெரிய ஆயுர்வேத சாஸ்திரத்தைப்பற்றிப் பேசும் புகழ்ச்சிகளை எம் காதிரண்டும் கேட்டு முடிபோகவில்லை. இத்தகைய நூலை யாம் இதுகாறும் பாராத பெருங்குறைவிற்குப்பெரிதும் விசனிக்கிறோம். நிற்க தற்காலமும் "வைத்திய போதினி" யென்னும் பெருமையான்ற பத்திரிகையின்வாய் நோய்களையும், நோயின்குணங்களையும் நோயை நிவாரணிக்கும் சுருதி யுக்தி அனுபவங்களாற்றெளிந்த அவுடதப்பிரயோகங்களையும், யாவருங்கொள்ளை கொண்டுணரும்படி தெள்ளிதின் விளக்கி நிற்கும் இதன் அருமை பெருமைகளை எமது நாவொன்றால் நவிலுந்திறத்ததன்றே. ஆதலின் யாமெல்லோரும் கனம்பத்திராதிபரவர்களுக்கு இன்னு மிவைபோன்ற உலகநன்மைக்கேதுவான அரிய நூற்களியற்ற வேண்டுமென்னும் மனவெழுச்சிக்கும் ஊக்கத்திற்கும் உலகக்குறைவே தன்குறை யென்று நினைக்கும் பத்திராதிபரின் பெருந்தன்மையில் நூற்றிலொரு பங்கேனுமுபயோகித்து வாக்கு சகாயங்களால் உதவிபுரியவேண்டுமென்பதே எமதுகோரிக்கை. யாவரும் இதனை நன்குகவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அன்றியும் அருந்துணையாயொளிரும் பத்திராதிபருக்கும் என்ஞான்றும் வச்சிரசரீர வாழ்வருள சர்வதயாபரத்தனி முதல்வனை அனவரதமும் மனவிரதமாய்ப்பிரார்த்தனை பூண்டொழுகுவோமாக. ஈண்டு யாமும் பத்திராதிபருக்கு மங்களவாழ்த்துக்கூறி இத்துடன் நிறுத்துவோம்.



### வாழ்த்து.

அங்கணன் றிலத ஞால மனைத்தினுஞ் சூழ மாந்தீ
நுங்கணுள் சிறக்க நாளு முயிருடன் நிலைக்க நற்செல்
வங்கணுடோறு மோங்கி வாழ்கச் செய் வலென்றுபூண்ட
கங்கணன் "சந்திரசேகர" இறை வாழ்க மாதோ.

சுபம்! சுபம்!! சுபம்!!!

இங்ஙனம்,
M. S. சுந்தரம் ஆசாரி,
மார்க்கயன் கோட்டை.

---

## மானிடரின் ஏழு பருவங்கள்.

SEVEN AGES OF MEN.

---

நானிலம் யாவுமோர் நாடக சாலையே
ஆண்பெண் யாவரும் அதில்நடிப் பவர்தாம்
மறைவுந் தோற்றமும் மற்றவர்க் குள்ளன
ஆயுள் நாளில் ஏயபல் வேடம்
எடுத்தவர் புவியில் நடிப்பவ ராவார்
ஒவ்வொரு வருக்கும் ஓரேழு பருவமாம்

162396

கக்கிக் கதறக் கைப்புறத் தேந்தி
செவிலித் தாய்வளர் சவலைப் பருவமே
பருவங் களில்முதல் பருவமதாகும்
தூண்ட நிற்ப வேண்டா வெறுப்பொடு
புத்தகப் பையொடு நத்தைபோல் ஊர்ந்து
மினுங்கிய வதனம் சிணுங்கிச் சிணுங்கிக்
காலைப் பொழுதிற் கல்விக் கழகம்
மெள்ளச் செல்லும் பள்ளிப் பிள்ளை—பின்
காதலித் திருக்கும் காரிகை தன்னுடைப்
புருவ மாதிய புழுங்கிய மனத்தொடு
தன்பா மாலை சாற்றித் துதித்து
மட்டிலா உலைபோல் நெட்டுயிர்ப் பெய்தும்
காதல னாகும் காளை—அதன்பின்
அதிசய சப்தமும் அடர்புலித் தாடியும்
பேர்அழி யாவகை பேணுதல் ஊக்கமும்
எதற்கும் சண்டைக் கிழுக்கும் படியாச்
சடுதியிற் கோபம் சனிப்பதுங் கொண்டு
நீர்மேற் குமிழிபோல் நிலையிலாப் புகழ்பெற
பீரங்கி வாயில் சீரங்கம் போக்கவும்
சித்தமா யிருக்கும் யுத்தவீரன்—பின்
செழிப்புறு சேவற் கொழுப்பின லாகிய
பேரொழில் வாய்ந்த பேழைபோல் வயிறும்
நிர்த்தாட் சிணிய நேத்திரம் இரண்டும்
வழங்குங் காலத் தொழுங்கின் படியே
நறுக்கிய தாடியும் முறுக்கிய மீசையும்
நல்லுப தேசமும் நாடறி வழக்கமும்
இன்ன யாவும் இனிதுறக் கொண்ட
பண்பார் நீதி பதி—அதன் பின்னர்
கச்சற் றேகமும் கால்களிற் சோடும்
மூக்கிற் றரித்து மூக்குக் கண்ணாடியும்
இருகவுள் தோலாம் இரும்பை வீழ்ச்சியும்
பாலியத் தினிது பத்திரப் படுத்திய
மேற்சோ டிறண்டும் மிகப்பெரி தாம்படி
ஒடுங்கிச் சுருங்கிய ஓரிரு பாதமும்
ஆணவப் பெருங்குரல் அனைத்தையும் இழந்து
குழவியின் குறுகிய குறலினைப் போன்று
கீச்சென வொலிக்கும் பேச்சையே கொண்டு
தேசலாம் குன்றிய மாசுலாம் குரூபியே
ஆரும் பருவமாம்—அதன் பின்னர்
பல்லும் பார்வையும் சொல்லும் சுவையும்
யாவையும் இழந்து யாவையும் மறந்து,
மறுவறும் சேய்என மதித்தனர் வெய்துவோன்
அடிக்கடி மாறும் இவ்வற்புத சரிதை
முடியும் இக்காட்சி யொடுமுடிந் திடுமே!

ர. போ.



## ஹாஸ்ய துணுக்குகள்.

ஓர் வீட்டுத் திண்ணையில் ஓர் ஸ்திரீயும் மற்றொரு திண்ணையில் இவளது சகோதரனும் நின்று கொண்டிருக்க, அச்சமயம் அவ்வீதி வழியே செல்ல நேரிட்ட மற்றொருவன் திண்ணையின் பேரில் நின்று கொண்டிருந்த இப்பெண்ணினிடம் வந்து அவளது கன்னத்தில் ஓர் முத்தம் குடுக்க இதைப் பார்த்த இவளது சகோதரன் என்ன ஐயா! என் தமக்கையை முத்தம் இட்டீர் என்று கேட்க இவன் இல்லை பையா முத்தம் இடவில்லை. கன்னத்தில் ஏதோ வடுவொன்று தெரிந்தது அதை உற்று நோக்கினேன். என்றும் மேலும் அதற்காக கோபியாதே இந்தா இதையெடுத்துக்கொள் என்று அணா நான்கை அப்பையன் கையில் வைக்க அதற்கு அப்பையன் ஓய் நான் நான்கு அணா வாங்குகிற வழக்கமில்லை. ரூபா ஒன்றுதான் வாங்குகிற வழக்கம் என்றானாம்.

வீ. ஏ. கேசவன், தஞ்சை.

ஒரு சுவாமிகளுக்கு பஞ்சபக்ஷிய பரமான்னத்துடன் செவ்வையாய் விருந்திட்டார்கள். சுவாமிகளும் போஜனப் பிரியராகையால், வயிறு முட்டத்தின்று திண்ணையில் உட்கார்ந்திருக்கையில் வீட்டு எஜமானி வந்து சுவாமி! கொஞ்சம் பகவத்கீதை பாராயணம் செய்விக்கட்டுமா? என்று கேட்கச்சுவாமிகள் வயிற்றைத் தடவிக்கொண்டு அப்பப்பா! இனி மேல் ஒன்றும் எடுத்துக்கொள்ளமுடியாது—என்று பதில் சொன்னார்.

---


## வெள்ளி சாமான்கள்.

கூஜா, டம்ளர், சொம்பு, பஞ்சபாத்திரம், கிண்ணி, டீசெட், காப்பு, புதுச்சேரி கொலுசு, பட்டை கொலுசு, முதலியவை மிகவும் நேர்த்தியான வேலைப்பாடுள்ளவைகளாய் விற்பனைக்கு தயார் செய்து வைக்கப் பட்டிருக்கின்றன. வேண்டியவர்கள் உடனே எழுதவும்.

**V. B. வெங்கடேசம் செட்டியார்,**
ஜவுளி, வெள்ளி பாத்திர வியாபாரம்,
பெரிய தெரு கும்பகோணம்.


---

## தேசிக ஸம்பிரதாய விவர்த்தினீ ஸபா.

இந்நாமதேயம் பூண்ட ஓர் ஸங்கம் இத்திருக்குடந்தை திவ்யக்ஷேத்ர வாஸிகளாகிய சில சாஸ்திர வித்வான்களினுதாரணையின் கீழ் சென்ற 1½-வருஷகாலமாக நடைபெற்றுவருகிறது.

இச்சபையார் தூப்பில் நிகமாந்த மஹாதேசிகனருளிச் செய்திருக்கிற ஸ்தோத்ரபாடங்கள், ராமானுஜ மதகிரந்தங்கள், திருப்பாவை முதலிய பிரபந்தங்கள் இன்னும் பொது ஜன ஸாதகார்த்தமாக அப்போதைக்கப் போது தேவையாகத் தோன்றும் பல கிரந்தங்களையும் ஸம்ஸ்கிருத வியாக்கியானத்துடனும் தமிழ் மொழி பெயர்ப்புடன் பிரசுரித்து வருகிறார்கள். வர்ணாசிரமதர்மங்களைப் பரிபாலிப்பதி லுண்மையான அபிமானமுள்ளஒவ்வொருகனவானு மிதை கவனித்தலவசியம். **சந்தா விபரம்.** அயலூராருக்கு 12-ஸஞ்சிகைக்கு முன் பணம் கட்டவேண்டியது ரூபா 3—6—0. உள்ளூராக்கு ஸஞ்சிகை 1-க்கு 0—4—0. அயலூராருக்கு தபாற்கூலி உள்பட 0—6—0.

# ADVERTISEMENTS.

## ARYAN INITIATION!

OF THE

## SPIRITUAL BROTHERHOOD!!

OF THE

## INDIAN ACADEMY OF SCIENCE. !!!

Under the guidence of an Adept Master of the Brotherhood, a special Course of Lessons is now ready to initiate you into all the mysteries of LAYA and MANTRA YOGA of the Aryans giving practical methods for HINDU-HYPNOTISM, MESMERISM, TELE-PSYCHY, WILL-CULTURE, SPIRITUAL, HEALING, CLAIR-VOYANCE CALIR AUDIENCE CLAIR-SENTIENCE, SPIRIT-COMMUNATION, MEDIUMSHIP and other wonderful secrets for attracting SUCCESS; HEALTH, SPIRITUAL POWER and Soul-Bliss, as practised by the ancient Aryan Adepts.

This Course is the first of its kind in the world and anybody knowing to READ and WRITE ENGLISH can master it and practice its teachings to a wonderful degree.

With a complete outfit and fine Diploma of Membership of the 1st degree.

Price, Rs. 10 for the first 500 enrolments. The price will be raised to Rs. 15 shortly. Persons ordering the course should send a copy of their photos along with money in ADVANCE, No. V. P. System. Look sharp!

SELF-CULTURE, a Monthly Official Journal of the Indian Academy of science, is devoted to Mental, Psychic, Spiritual and Occult Sciences Philosophy, Spiritualism, Health-Culture, Vedanta and other Esoteric phases. It is edited by Dr. K. T. Ramasami, Dr. J. M. Peebles of (America) and Prof, J. M. Severn (of England.) Besides it has an able crops of contributors.

Annual subscription Rs. 3, to India. Foreign Sh. 4; To School Students and all Missionaries at a reduced rate of Rs. 2.

Send all orders and remittance direct to

*The Manager,*

**THE INDIAN ACADEMY OF SCIENCE,**

**KIZHANATTAM, Tinnevelly Dist., S. India.**




## பிரஹ்மஞான விளக்கம்.

இப்பத்திரிகை பிரமஹ்ஞான சபையிலுள்ள தமிழ்தெரிந்த சங்கத்தினர்களின் உபயோகத்திற்காக, 1909-ஆ ஆகஸ்டுமீ 21—22-ம் தேதிகளில் நாகையிற் கூடிய தஞ்சைஜில்லா பிரஹ்மஞானசபை கான்பரன்ஸில் தீர்மானித்த பிரகாரம் பிரசுரமாகின்றது.

**இதன் வருடசந்தா.**

| | |
|---|---|
| இந்தியா, இரங்கூன், இலங்கை முதலிய விடங்களுக்கு | ரூ. 1—0—0. |
| பினங்கு, சிங்கப்பூர் முதலிய விடங்களுக்கு ... | ரூ. 1—8—0. |
| தனிப்பத்திரிகை ... ... ... ... | ரூ. 0—2—0. |

**விளம்பர விகிதம்.**

| | ரூ. அ. ப. |
|---|---|
| முழுப்பக்கம் ஒரு மாதத்திற்கு ... ... | 8—0—0. |
| ,, மூன்று மாதத்திற்கு ... ... | 20—0—0 |
| ,, ஆறு மாதத்திற்கு ... ... | 35—5—0 |
| ,, ஒரு வருஷத்திற்கு ... ... | 60—0—0 |
| வரி யொன்றுக்கு 1-மாதத்திற்கு ... ... | 0—4—0 |

இதில் துண்டு விளம்பரங்களை வைத்து பிரசித்தப்படுத்த வேண்டுமானால் மேற்சொன்ன விகிதத்தில் பாதி விகிதத்திற்கு வைத்து அனுப்பப்படும்.

ஒருரூபாய்க்குக்குறைந்த விளம்பரம் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

S. வைத்திலிங்க முதலியார்,
காரைக்கால்.

---


ஓம்:
வந்தேமாதரம்:

## பாலசந்திர பற்பொடி.

கல்நார் பஸ்பம் முதலிய சுதேச அவுஷத முறையையும், கார்பாலிக் ஆசிட் முதலிய இங்கிலீஷ் முறையையும் அனுசரித்து தயார் செய்யப்பட்டிருக்கிறது. எவ்விதமான பல் நோயையும் தவராது தீர்த்து உறுதியாய் இருக்கும்படி செய்யக்கூடிய குணமுடையது. அநேக கனதனவான்களால் நற்சாக்ஷிபத்திர மளிக்கப்பட்டிருக்கிறது. சகல மானவர்களும் உபயோகிக்கவேண்டியதற்காக 1-அவுன்ஸ் அடங்கிய சீசா 1-க்கு அணா 2. டைஜன் 1-க்கு ரூபா 1—2—0.

ஆலங்குடி முதல்தரமான இருவாளிப்பு பாக்குவெட்டிகள் 0—3—6 முதல் கிடைக்கும். வியாபாரிகளுக்கு தகுந்தகமிஷன் கொடுக்கப்படும்.

புரோப்ரைட்டர்,
பாலசந்த்ர டிரேடிங் ஹால்,
ஆலங்குடி,
நீடாமங்கலம் S. I. R.



## பத்தோன்பதாவது நூற்றாண்டின் ஓர் அதிசயம்.

# மன்மதரஞ்சன்.

சம்போக சந்தோஷமளிக்கப் பேர்பெற்றது.

பால்ய போகத்தாலும், மிதமிஞ்சிய அதிபோகத்தாலும், திரேகசுபாவமறிந்து போகிக்காததாலும் தாமஸஸ்கலிதத்திற்கேதுவின்றி, துரிதஸ்கலிதத்திற்காளாகி யாதொரு இன்பசுகமின்றியும், இல்லர சுகத்தை யனுபவிக்க வல்லமையில்லாமலும் பரிதபிக்கும் அன்பர்காள் !

உம்து திரேகம் என்ன நிலமையிலிருந்தாலும் சரி, உமக்கு என்ன பலன் வேண்டுமானாலும சரி, தாதுபுஷ்டிக்கும் சுருசுருப்புக்கும் நம்பத்தகுந்ததும் உண்மையுமான மருநது இதோ இருக்குது பார் ! மன்மதரஞ்சன் மாத்திரை சுகதேகிகளும் சாப்பிடலாம். மனோற்சாகம், ஞாபகசக்தி, வீரியவிர்த்தி, போக சக்தி, இந்திரியக்கட்டு, தேகபலம், சரீராரோக்கியம் முதலியனவுண்டாகும். மறதி, சோம்பல், அசதி, துர்பலம், பசிமந்தம், அஜீரணம், இடுப்புவலி, துரிதஸ்கலிதம் முதலியவை நீங்கும் பரீட்சித்துப்பார்க்கவும். தீவிரமாயும் தீர்க்கமாயும் தாதுபுஷ்டியை உண்டாக்குவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை. பரிக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம், இதற்கு வேறு பத்தியமே கிடையாது. புஷ்டியான ஆகாரம் சாப்பிடுவது அவசியம் இது (கோனுண்ட்) எனற ஓர் அமெரிக்க டாக்டர் கையாடிவந்த அருமையான முறை. 36-மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு விலை ரூபா 2. வி. பி. சார்ஜ 1-முதல் 6-புட்டிகள் வரையில் அணு4பிரத்தியேகம்:—என். ஆர். டிஸ்பென்ஸரி, கும்பகோணம்.

---

### ஜப்பான் சரித்திர விளக்கம்.

இப்புத்தகத்தில் ஜப்பானியரின் முற்கால ஸ்திதிக்கும், தற்காலஸ்திதிக்குமுள்ள வித்தியாசங்கள், ஜப்பானியரின் முன்னேற்றம், ருஷ்ய ஜப்பானிய யுததம் அவர்களின் நடை உடை பாவனைகள் ஜப்பானின் சீதோஷ்ண ஸ்திதிகள், அத்தேசத்திலுள்ள மலைகள், எரிமலைகள், ஏரிகள், நதிகள் முதலியன்வும், இன்னும் பல அரிய இரகசியங்களடங்கிய இச்சிறு புத்தகம் தமிழறிந்த ஒவ்வொருவர் கையிலும் இருப்பது மிகவும் அவசியம் இப்புத்தகம் வேண்டியவர்கள் 4-அணுவுக்கு ஸ்டாம்பு அனுப்பினால், புத்தகம் தயாரானவுடன் அனுப்பப்படும். புத்தகம் தயாரான பிறகு வேண்டியவர்களுக்கு ரூபா 1. ஜாக்கிறதை

வைத்தியபோதினி ஆபீஸ், கும்பகோணம்.



## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

11. ஜ்வர சம்ஹாரி:—தீராத நாள்பட்ட சகல சுரங்கள், குளிர்ச்சுரம் முறை சுரம், வாத சுரம், பித்த சுரம், அஸ்தி சுரம், மலை சுரம் மார்வலி, காமாலை, பிடரிவலி, இடுப்புவலி, விலாவலி, முழங்கால்வலி, உடம்புவெளுப்பு, மயக்கம், தாகம், இருமுறை சுரம், நாலாமுறை சுரம் முதலிய சகல சுரங்களை அடியோடு போக்கும். டப்பா 1க்கு ரூபா 1, வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம்.

12. உரோம சம்ஹாரி :—இந்த சூரணத்தை மயிருள்ளவிடத்தில் தடவினால் வெகுஎளிதில் மயிர் நீக்கிவிடும். சீசா 1க்கு அணு 4. 1 முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம்.

13. சுகந்த பல்பொடி :—நல்ல ஜீரண சக்தியைத் தரும். பல்வலி எக்காலத்திலும் வராது. பல் எக்காலத்திலும் விழாது. சீசா 1க்கு விலை அணு 3 வி. பி. சிலவு 1 முதல் 5 சீசாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

14. ஸ்கலித ரக்ஷிணி :—பலஹீனத்தாலும், உஷ்ணத்தினாலும், சிற்றின்பத்தில் பாலியத்தில் நுழைந்து மூழ்கியிருந்த காரணத்தாலும், தூக்கத்திலும், சொப்பனத்திலும், இந்திரியம் தானாக வெளிப்படுவதை நிற்பாட்டி தேக திடத்தை தரும். சீசா 1-க்கு அணு 8, வி. பி. சிலவு 1-முதல் 6-சீசாக்கள் வரையிலும் அணு 5 பிரத்தியேகம்.

15. உயர்ந்த கஸ்தூரி :—மிகவும் நேர்த்தியானதும், முதல் தரமானதும், காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி நம்மிடத்தில் எப்பொழுதும் கிடைக்கும். தோலா 1-க்கு ரூபா 48. 1-ரூபாய்க்கு குறையாமல் சில்லரையிலும் விற்கப்படும். வி. பி. சிலவு பிரத்தியேகமாகும்.

16. தேள்கொட்டின் மருந்து :—இம்மருந்தை விஷம் தீண்டிய இடத்தில் தடவினால் தக்ஷணமே விஷமிறங்கி வருத்தப்பட்டு சகிக்க முடியாத வேதனையில் நின்று நீங்கி யாவரும் ஆச்சரியப்படத்தக்க விதமாய் ஆனந்திக்கும்படியான அனுகூலத்தைத் தரும். கிரயம் சீசா 1-க்கு அணு 2. இந்தியாவிலும் பர்மாவிலும் 1-முதல் 12-சீசாக்கள் வரையிலும் வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம்.

முக்கியகுறிப்பு :—ஒரே தடவையில் 12-சீசாக்களுக்குக் குறையாமல் வாங்கினால் டஜன் 1-க்கு 2—8—0 வீதம் கொடுக்கப்படும். வி. பி. சிலவு அணு 5-பிரத்தியேகம். இக்குறிப்பு தேள் மருந்து தவிற மற்றெந்த மருந்திற்கும் சம்மந்தப்படமாட்டாது.

17. மேகரண மருந்து :—இதை வெள்ளைத் துணியில் தடவி ரணங்களின்மேல்போட, அரையாப்பு, கண்டமாலை, விப்புருதி, தொடைவாழை, செவ்வாப்பு, ஆசனப்பவுத்திரம், அழுகுளியன், பிளவை, கிரந்தி மேக வெடிப்பு, இலிங்கப்புற்று, யோனிப்புற்று முதலிய இரணங்கள் ஆறி சொஸ்தமாகும். விலை சீசா 1-க்கு அணு 8, இந்தியாவிலும் பர்மாவிலும் 1-முதல் 3-சீசாக்கள் வரை வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம்.

---

பி. சுப்பராய், பாங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

18. **கண்டசுத்தி மாத்திரைகள்:**—டைரக்ஷனில் சொல்லியபடி இதை சாப்பிட்டு வந்தால் தொண்டை கட்டு, தொண்டை கம்மலை நீக்குவதன்னியில், இன்பமாய் பாடுவதற்கு இசைந்த குரலைத்தரும், சங்கீத வித்வான்களுக்கும், பிரசங்கஞ் செய்யப்பட்டவர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் இது ஓர் அருமையான ஔஷதம். எத்தனை நேரம் பாடினாலும், பிரசங்கித்தாலும், குரல் கம்மாது, இனிய ஓசையைத்தரும். கிரயம் சீசா 1-க்கு அணா 8. இந்தியாவிலும், பர்மாவிலும் 1-முதல் 6-சீசாக்கள் வரையில் பாக்கிங்கு தபால் முதலிய சிலவு அணா 5-பிரத்தியேகம்.

19. **சுகந்த ஸ்நாநப்பொடி:**—இந்த வாசனைப்பொடியை தினந்தோறும் தேகத்தில் தேய்த்து ஸ்நாநம் செய்துவந்தால் தேகத்திற்கு சுகந்த பரிமளத்தைத் தந்து தேமல், அறிப்பு, சொறி, சிரங்கு, கற்றாழை நாற்றம், கைகால் எரிச்சல், மேக காங்கை, சரீரவரட்சி, கணச்சூடு. வெடிப்பு, கரப்பான், தலைவலி, சொறி மேகம், படர் தாமரை, மேக ஊரல், கிரந்தி முதலிய இன்னும் அநேக வித தோலைப்பற்றிய வியாதிகள் தீரும். நல்ல வாசனையும் காந்தியும லக்ஷ்மீகரமும் ஆரோக்கியமும் உண்டாகும். அரைக்குழந்தைமுதல் யாவரும் உபயோகிக்கலாம். டப்பா 1-க்கு விலை அணா 8, வி. பி. சிலவு அணா 3 பிரத்தியேகம்

20. **சஞ்சீவி மாத்திரைகள்:**—இம்மாத்திரைகளினால் தலைவலி தலைபாரம், சளி, இருமல், சுரம், மயக்கம், வாந்தி, விஷசுரம், வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, தெற்குத்திக்கணை முதலியநோய்கள் தீரும். அரைக்குழந்தை முதல் யாவரும் உபயோகிக்கலாம். விலை சீசா 1-க்கு அணா 0—10—0. இந்தியாவிலும் பர்மாவிலும் 1-முதல் 6-சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய சிலவு அணா 5 பிரத்தியேகம்.

21. **மஹா கோரோஜனை மாத்திரைகள்:**—இம்மாத்திரையினால் இருமல், சளி, சுரம், வயிற்றுப்பிசம், இளைப்பு, வலி, மயக்கம், தெற்குத்திக்கணை, ஜன்னி, வயிற்றுப்போக்கு, தோஷம், முக்குமாந்தம், ஊதுகணம், செவ்வாப்பு, கடுவான், கரப்பான், பால் மாந்தம் முதலிய எல்லா மாந்தங்களும், கருங்கிரந்தி, செங்கிரந்தி, மலஜலக்கட்டு முதலியதுகளும் மலை சுரம், முறை சுரம், முதலான பலவித சுரங்களும் அடியோடு நீங்கும், சீசா 1-க்கு விலை அணா10. 1-முதல் 6-சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

22. **கரப்பானுக்கும் சொறிசிரங்குக்கும் மருந்து:**—இம்மருந்தை டைரக்ஷனில் சொல்லியபடி மேலுக்குமட்டும் உபயோகித்துவந்தால் வெகு சீக்கிரத்தில் எவ்வித நமைச்சல்களும், சொறி, சிறங்கு, வரட்டுச் சொறி, அநேக குழந்தைகளுக்கு தேகமெங்கும் அல்லது சிலபாகங்களில் கண்டு அதிக நமைச்சலையும் தொந்தரவையும் தருகின்ற எவ்வித கரப்பான்களையும் வெகு சீக்கிரத்தில் ஆற்றிவிடும். விலை சீசா 1-க்கு அணா 0—8—0. இந்தியாவிலும், பர்மாவிலும் அனுப்ப வி. பி.சிலவு 1 அல்லது 2-சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

---

**பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.**

REGISTERED 28 NOV 1910 MADRAS


# வைத்திய போதினி.

**சித்திரப் படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.**

புத். 1. | 1910-ஹு அக்டோபர் & நவம்பர்மீ | நெ. 6 & 7


## பத்திராதிபர் குறிப்பு.

**நமது பிரிய சந்தா நேயர்களே!**

*நமது பத்திரிகை ஆரம்பமாகி கடவுள் கிருபையாலும் "அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு" என்னும் வசனத்திற் கோரிலக்கியமாகவும், தஞ்சமென்றடைந்தவருக்குத் தளராப்பாது காப்பாகவும், தெய்வத்தமிழருமை குன்றாவண்ணம் தமிழறக்கட்கோர் புகலிடமாகவும், பரோபகார சிந்தைக்கு உறைவிடமாகவும், தென்னிந்தியவாசிகட்டு ஓரணிகலமாகவும் விளங்கும்திருவாவடுதுறை ஆதீனம் மஹாசன்னிதானம், ஸ்ரீலஸ்ரீ, அம்பலவாணதேசிக பண்டாரசன்னதியவர்களின் உபகாரத்தாலும், போஸ்டல்சூப்ரின்டெண்டெண்ட் ஸ்ரீமான், K. அமுர்தலிங்கம் பிள்ளையவர்களுடைய ஆதரணையினாலும், நாகை ஜெனரல்ஸ்டோர் மிஸ்டர், R. ஸ்ரீனிவாசய்யங்காரவர்களுடைய அபிமானத்தாலும், ரெவினியு செட்டில்மெண்ட் மிஸ்டர், A. நாராயணய்யங்கார் அவர்களுடைய விடாமுயற்சியாலும், உங்கள் அனைவரின் அன்புடைய ஆசீர்வசனத்தாலும், பாலபருவமுடைய நம் பத்திரிகை மாந்தம் முதலிய பிணிவாயிற் பட்டு பின்னடையாது, சுக்கிலபக்ஷ சந்திரன்போல் பிரகாசித்து வருகிறது. இது போலவே இனியும் செழுத்தோங்குமாறு பத்திரிகையின் அபிவிருத்தியைக்கருதி நாம் சில வெளியூர்களுக்குப்போக வேண்டியிருப்பதால், இம்முறை அக்டோபர், நவம்பர் இவ்விரண்டுமாத சஞ்சிகையையும் ஒருங்குசேர்த்து வெளியிட நேர்ந்திருக்கும் இத்தவறுதலுக்கு நாமே கவலுகிறோம். பத்திரிகையின் அபிவிருத்தியைக் கருதியவர்களும், அபிமானமிக்குள்ள நேயர்களும் பிழை பொறுப்பார்களென்று நம்புகிறோம்.*

*தென்னிந்தியாவில் இது போன்ற பல பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டு பிரபலமாகாமல் பின்னடைந்து போனதின் காரணம் பத்திரிகாபிமானிகளின் கவனக்குறைவேயன்றி, பத்திராதிபர்களின் முயற்சிக்குறைவல்ல. ஜப்பான் தேசத்தில் 35-வருஷங்களுக்கு முன் ஒரே ஒரு சமாசாரப்பத்திரிகை இருந்தது. இப்போது 2000-பத்திரிகைகளுக்கு மேற்பட்டிருக்கிறதை உத்தேசித்தால், அத்தேச அபிவிருத்திக்குப் பத்திரிகையே ஓர்முக்கிய காரணமெனத்தோற்றுகிறது. ஜப்பானியரைப்போல் நந்தென்னிந்திய வாசிகளும், தேசாபிமானம் மேலிட்டு பத்திரிகைகளைப்பாதுகாக்கும் காலம் என்று வருமோ இதை எம்பிரானன்றி எவர் அறிவர்!*

## கருப்பத்தில் சிசு வளருதல்.

மானிட தேகமானது சுக்கிலநாதக் கூட்டுறவால் உண்டாகிறதென்றும், * அச்சுக்கிலஸ்ரோணிதங்களில் கருப்பூச்சி என்னும் ஓர் கிருமி இருக்கிறதென்றும், இக்கிருமிகளே சிசுவுற்பத்திக்கு ஆதாரமென்றும் அனைவருமறிவர். அறியாதாற்கு அடுத்தமுறை தொடுப்போம். அச்சுக்கிலக் கிருமியினால் கருவளர்ச்சி எங்ஙனம் உண்டாகிறதென்பதை இதனடியில் சங்கிரகமாகக் கூறுவாம்.

சுக்கிலக் கிருமியானது சுரோணித முட்டையில் சென்று கருவுயிர்த்த முதல்நாளில் சிசுவானது கண்ணுக்குத் தோன்றாத அணுவத்தனையாயிருந்தபோதிலும், விரைவில் வளரத்தொடங்கிப் பத்துநாளில் கடுகத்தனை பருமனும், பிசின் தன்மையுள்ளதுமாய்ப் பளிங்குபோல் தோன்றும். பன்னிரண்டாம் நாளில் மிளகளவு பெரிதாகி அதனுள்ளிருக்கும் நீரில் ஓர் வெள்ளைப் புள்ளி சற்று நீளமுள்ளதாய் கண்ணுக்குத்தோன்றும்.



3-வது வாரம்.

இருபத்தோராம் நாளில் அதாவது மூன்றாவது வாரம் இலந்தைப் பழப் பருமனாய் உருண்டை வடிவானது மாறிப் புழுவைப்போல் நாலு குண்டுமணி நிறையுள்ளதாய்த்தோன்றும் முப்பதாம் நாளில் பிண்டமானது சுண்டைக்காய்ப் பிரமாணமான புழுவாய் அரை அங்குல நீளமுள்ளதாய்த் தோன்றும். அன்றியும் ரத்த சரங்களாலாகிய அழகான சொற சொறப் புள்ளபோர்வைபோன்ற புறக்கவசத்தால் மூடப்பட்டிருப்பதுடன், உட்கவசமும் பனிநீரும் இதற்குள் உண்டு சரீரத்தைவிட தலை பெரிதாயிருக்கும்.

ஐந்து வாரத்தில் சரீரத்தைவிடச் சிரசு பெரிதாகவும், நேத்திரஸ்தானத்தில் இரண்டு புள்ளிகளுள்ளதாகவுந்தோற்றும், எழாவது வாரத்தில் நேத்திரங்களும் செவிகளுமுண்டாகி, அஸ்திகள், மூளை, ஈரல் முதலியவைகளின் குறிதோன்றிப்பிண்டம் முக்கால்அங்குல நீளமாகும்.

இரண்டாவது மாதத்தில் கண், காது. மூக்கு, வாய், நெற்றி, இருதயம், மூளை, ஈரல், கழுத்து முதலியவற்றின் குறிதோன்றிச் சரீரத்தில் மூன்றிலொருபாகம் சிரசாயிருக்கும். பிண்டம் எலிக்குஞ்சுபோல் ஒன்றரை அங்குல நீளமுள்ளதாயிருக்கும்.

* சுக்கிலம், புருஷனுடைய வெண்மையான இந்திரியம். ஸ்ரோணிதம் என்பது கன்னிகையின் காமநீர்.





3-வது மாதம்.

மூன்றாவது மாதத்தில் கண்ணிமையானது கண்ணை மூடியிருப்பது தெரியும். உதடுகள் ஒன்றோடொன்று பொருந்தியிருக்கும், பிண்டமானது, ஆண், பெண் என்று தெளிவாய்த் தெரியத்தக்கதாக, ஆண், பெண் உறுப்புகள் தோன்றும். கைகால்விரல்கள் நன்றாய்த் தெரியும். சரீரத்தில் இரத்தவோட்டமுண்டாகி இருதயம் பலக்க அடிக்கிறது கேட்கும். பிண்டத்தின் நீளம் நாலு அல்லது ஐந்து அங்குலம். நிறை இரண்டு முதல் நாலு அவுன்ஸ் வரையிருக்கும்.



4-வது மாதம்.

நாலாவது மாதத்தில் பிண்டத்திற்கு சிசுவென்று பெயராகும். நீளம் ஆறு முதல் எட்டு அங்குலம். நிறை ஏழு முதல் எட்டு அவுன்ஸ். தோல் ரோஜா புஷ்பம்போல் சிவந்து சதை வளர்ந்திருக்கும். கண், வாய், மூக்கு, முடி இவைகள் இருக்கும். இம்மாதத்தில் சிசுவானது தாயின் கர்ப்பத்தில் சுழன்றுகொண்டு வருவது தோன்றும். இக்காலத்தில் வெளியாகும் சிசு சில மணி நேரங்கள் உயிரோடிருக்கும்.



5-வது மாதம்.

ஐந்தாவது மாதத்தில் சிசுவின் நீளம் எட்டு முதல் பத்து அங்குலம். நிறை எட்டு முதல் பதினொரு அவுன்ஸ். இம்மாதத்தில் சிசுவின் தலை மற்றபாகங்களை விட கனதியாய்ப் போய்விடுவதால் தலை கீழாக மாறிவிடும்.



6-வது மாதம்.

ஆறாவது மாதத்தில் பன்னிரண்டரை அங்குல் நீளமும் ஒரு பவுன் நிறையுமாயிருக்கும். சிரசு, கண்பட்டைகளில் உரோமம் தோன்றும்.



7-வது மாதம்.

ஏழாவது மாதத்தில் ஒவ்வொரு அவயவமும் பூர்த்தியாக வளர்ந்து முகத்திலுள்ள ஒவ்வொரு உறுப்புகளும் முழுப்பாகமாய்த் துலங்குவதோடு, எலும்புகளெல்லாம் உறுதியாகிச்சிசு பூரணப்படும். நீளம் பன்னிரண்டு முதல் பதினொன்கு அங்குலம். நிறை ஏறக்குறைய மூன்று பவுன். இக்காலத்தில் சிசுபிறந்து அதிகப்பத்திரமாய் பாதுகாக்கப்பட்

டால் பிழைத்துக்கொள்ளும். ஆனால் அதிக பலவீனமாயிருப்பதால் அதிக ஜலம்விட்டு ஸ்நாநம் செய்விக்கமுடியாது. ஆனால் கடற்காளானை (Sponge) தண்ணீரில் தோய்த்து மெதுவாய் தேகத்தை சுத்தப்படுத்த வேண்டும். பால்குடிக்கிற நேரந்தவிர மற்ற நேரங்களிலெல்லாம் அமைதியாய்த்தூங்க இடங்கொடுக்க வேண்டும். மேலும் அவ்விதக் குழந்தைகளுக்குப்போதுமான அனல் உண்டாக்கக்கூடிய சக்தியில்லாதிருப்பதால் கோழியானது தன் குஞ்சுகளைத் தன் செட்டைக்குள் வைத்து அனலுண்டாக்குமாபோல் குழந்தையைக் கம்பளித்துணிகளில் (Flannel) சுற்றி தாயின் முன் கிடத்தவேண்டும். அல்லதுவேறொருவர் மடியில் வைத்து அனலுண்டாக்க வேண்டும்.

எட்டாவது மாதத்தில் சிசுவின் நீளம் பதினாறு முதல் பதினெட்டு அங்குலம். நிறை நாலு முதல் ஐந்து பவுன். சரீரமெல்லாஞ்சிவந்து ரோமத்துவாரங்கள் மிக நுட்பமாக ஏற்பட்டு ரோமங்களும் சிறிய குறுத்துக்களாகத் தோன்றும்.

ஒன்பதாவது மாதத்தில் சிசுவின் நீளம் பத்தொன்பது முதல் இருபத்தொரு அங்குலம். நிறை நாலு முதல் ஐந்து பவுன். சர்வாங்கங்களும் வளர்ந்து பருத்து வலுவேறி ரோமங்களெல்லாம் நன்றாய் வளர்ந்திருக்கும். சிசுவானது தன் இருகரங்களையும் முன்னாலே குவித்து, தலையையும் கால்களையும் மடக்கி அண்ட வடிவமாக வளைந்து கொண்டு தலை கீழாய்ச் சராயு என்னப்பட்ட பையிலே அசைவாடிக்கொண்டும், அடிக்கடி நீண்டும், நிமிர்ந்தும், துடித்துக் கொண்டிருக்கும்.

ஆரம்பத்தில் சிசு மிகச் சிறிதாயிருப்பதால் ஷெடி நீரில் மிதந்துகொண்டு சில சமயம் தலை மேலாகவும், சில சமயம் கால் மேலாகவும் கிடக்கலாம். ஆனால் தலையானது சரீரத்தின் மற்ற பாகங்களைவிடக் கனதியாயிருப்பதால், அநேகமாய் தலை கீழும் சரீரம் மேலுமாகவே கிடக்கும். கடைசி மாதத்தில் சிசுவானது பெரிதாய் வளர்ந்து விடுகிறதினாலும், கருப்பையின் அகலமானது சிசுவின் நீளத்தைவிடக் குறைவாயிருப்பதனாலும், கீழ்நோக்கிய தலைமேல் போகமுடியாமல் அவ்விதமாகவே யிருந்துகொண்டு வளரும். ஜீவகாருண்யர் செய்திருக்கும் இவ்வித ஏற்பாட்டினால் பிரசவம் ஆரம்பிக்கும்பொழுது குழந்தை எளிதில் வெளிவரத்தக்க ஸ்திதியிலிருக்கிறது. ஏனெனில் சிசுவின் தலை பிரமதத்திலே வெளிவருவதால் தாய்க்கும் பிள்ளைக்கும் நன்மையுண்டு. கருப்பையின் இடம் அதிகச் சிறிதாயிருப்பதால் சிசுவானது கைகால்களை மடக்கிக்கொண்டு சுருண்டு கிடப்பதைப் பார்க்கிறோம். குழந்தை பிறக்கும்



REGISTERED 28 NOV 1910 MADRAS

சமயத்தில் தாயின் சரீரக்கட்டுகள் தளர்ந்து கருப்பை சுருங்கி நெருக்குவதால் தாய்க்கு வலியுண்டாகும். அது ஆரம்பத்தில் லேசாகவும் அதிக நேரத்துக்குப் பின்னும் வந்துகொண்டிருக்கும். பிற்பாடு நேரஞ்செல்லச்செல்ல கருப்பையானது அதிகமாய் நெருங்கிச் சுருங்குவதாலும், ஸ்திரீயின் அடிவயிற்றின் மாம்சத்தை சுருக்கித் தள்ளுவதனாலும், யோனித்துவாரம் விரிந்து கொடுப்பதனாலும் வலி அதிகரித்து அடிக்கடி உண்டாகும். அப்பொழுது பிள்ளையைச் சுற்றியிருக்கும் பை உடைந்து அதனுள்ளிருக்கும் நீர் வெளியாகும். சிறிது நேரத்திற்குள் சிசுவின் தலை தோன்றி குழந்தை பிறக்கும், அப்போது நஞ்சுக் கொடியும் மற்றுமுடைந்த ஜவ்வுகளும் வெளியேறும். அச்சமயத்தில் உடைந்த இரத்தக்குழாய்களிலிருந்து உதிரமானது தாராளமாய் வரும். பின்பு அதை நிறுத்தும்படி கருப்பை சுருங்குவதால் அவைகளுஞ் சுருங்கித் தம் ஸ்தானத்திற்சேரும். குழந்தை பிறப்பதற்குமுன் உண்டாகும் அகோரவலியை நீக்கும்பொருட்டு தற்காலத்தில் குளோரோபாரம் (Chloroform) என்னும் அவுஷதத்தைக் கொடுக்கப்பட்டு வருகிறது. இம்மருந்தை உபயோகிக்கக்கூடாதென்று அநேகர் தடுத்தபோதிலும், **ஸ்திரீ ரத்னமாகிய விக்டோரியா (Victoria) மகாராணியே** இவ்வௌஷதத்தை உபயோகித்து உபத்திரவமில்லாமல் பிரசவித்தார்களென்று பிரசித்தியானவுடன் ஆங்கிலேய ஸ்திரீகளெல்லோரும் அப்பிரயோகத்தையே அனுஷ்டித்து வருகிறார்கள்.

குழந்தை பிறந்தபின் சிலநாட்களாக மிகுந்திருக்கும் நஞ்சு பாசி போல் உதிரத்தோடு சேர்ந்து வெளியேறும், இந்நாட்களில் அனாவசியமாய் உதிரப்பிரவாகம் உண்டாகாதபடிக்குக் கருப்பை சுருங்கவேண்டியது அவசியம். ஆகையால் கருப்பைக்குக் கிளர்ச்சி உண்டாகும்படி குழந்தையைச் சீக்கிரம் பால் குடிக்கும்படி செய்யவேண்டும். ஆனால் இரண்டு மூன்று நாள் வரைக்கும் சரியான பால் ஸ்தனங்களிலுண்டாகாதபடியால் குழந்தைக்கதனால் பிரயோஜனமிராது. ஆனால் பிறந்து 24-மணி நேரம் வரைக்கும் குழந்தைக்கு யாதொரு ஆகாரமும் தேவையில்லை. அப்படித் தேவையிருக்குமாயின் தேன் கொடுப்பது வழக்கம். பிரசவித்துப் பத்து அல்லது பதினான்கு நாள் வரைக்கும் ஸ்திரீயானவள் அசையாமல் தன் படுக்கையிலிருந்து அந்தந்த அவயவங்கள் தத்தம் ஸ்தானங்களில் சேர்வதற்கு இடங்கொடுக்க வேண்டும். அதற்குள்ளாக உதிரப்பெருக்கும் நின்றுவிடும். அதன் பின்பு குறைந்தது நான்கு வாரத்திற்குள் ஸ்திரீ கடினமான வேலைகளை செய்ய ஆரம்பிப்பதனாலும், மெத்தைப்படிகளில் ஏறி இறங்குவதனாலும் மேற்படி உறுப்புகளில்

சில வெளியே வந்துவிடும். பிற்பாடு அவைகளைத் தத்தம் ஸ்தானங்களில் நிலைநிறுத்துவது கஷ்டம். ஆகையால் பேறுகாலமான ஸ்திரீ சிறிதுகாலத்திற்கு அதிகமாய் நடமாடாமல் ஜாக்கிறதையாய் இருக்க வேண்டும்.

---

## மனோவியாபக சக்தி.

கடலாடை சூழ்ந்த காசினியின்கண் உற்பவித்துலவும் சகலஜீவ சாரசரப் பொருட்களிடத்தும், மேலானதாய் மனிதப்பிறவி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. "அரிதரிது மானிடராதலரிது" எனும்முதுமொழியை எவர்தாமுணரார். இத்தகைய மனுக்குலத்திற்கு அரியசக்தியாய் விளங்கி அனவரதமும் அற்புதம் நிறைந்த தற்பரவஸ்துவாய் விளங்குவது மனம். அம்மனத்தின் மாண்பை எத்தகையது எனவரையறுப்பது கூடாமை. வேதாந்த சித்தாந்த இதிகாசாதி புராண நூற்களிலும் இம்மனத்தின் மாண்பும் குரங்குக் கொப்பான விபரீத சேஷ்டைகளும், நன்கு விளக்கப்பட்டுள்ளன. எந்த வேதாந்த சாஸ்திரத்தைக் கையிலெடுப்பினும் "மனதை யடக்கு" எனக்குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். மனதை யடக்கியாளுந்தன்மைதான் மிக்கது. இம்மனமானது வாய்வின்கூறு, காற்றானது எங்ஙனம் ஓரிடத்தில் நிலையின்றிசலித்துக் கொண்டே இருக்கின்றதோ, அங்ஙனமே மனமும் ஊரெல்லாம், உலகெலாம் சுற்றிச்சுழன்று ஓரிடமும் தங்கித்தரியாமல் அலைபாய்ந்து வருகிறது. இம்மனத்தை சமுத்திரத்து அலைகளுக்கும் ஒப்பிடலாம். எங்ஙனமெனில், கடலில் ஆண் அலையென்றும், பெண் அலையென்றும் இரண்டு பிரிவுகள் உள்ளன. இதைச் சாதாரண ஜனங்களும் கூறுவர். அதில் ஒன்று படிப்படியாய் கரையையடுத்து வெண் நுரைகளுடன் வந்துதாக்கும். மற்றொன்று படிப்படியாய் பழயபடியும் போய்ச்சேரும் அத்தகையதாகவே மனமும் பலபல விஷயங்களைத் தன்னுள் ஆவாஹனப்படுத்தி மூளையில் பதனமாக்கிக் கொண்டுவரும். நாம் நினையாத விதமாய் திடீரென்று பழயபடியும் எதிரில் நடப்பதுபோல் அற்புதக் காட்சிகளும், ஆச்சரியக் கனவுகளும், ஞாபகத்துக்குக் கொண்டுவர நாமெவ்வளவோ முயன்றும் முடியாது போன நினைவுகளும், பளிச்சென்று மேகத்தில் தோன்றி மறையும் மின்னலொளியைப்போல நமக்குத் தெரியவருகின்றதைக் கண்கூடாகப்பார்த்து வருகின்றோம். இம்மனத்தின் மாட்சிமையைக் குறித்தே "மனம் போலிருக்கும் மங்கிலியம்" "மனமுண்டானால் வழியுண்டு" எனவும் மனதைப் புறஞ்செல்ல விடலாகாதென்பதைக்கருதி "மனம்போன போக்கெல்லாம் போக



வேண்டாம்" என்றுங் கூறப்பட்டிருக்கின்றது. இதற்குத்தான் மனோவியாபக சக்தி எனவும் கூறுவர். இம்மனத்தின் சக்திப்பிரயோகத்தினால், பலசாலியான ஒரு மனிதனைத் துர்ப்பலமுள்ளவனாகவும், துர்ப்பலமுளானைப் பலிஷ்டனாகவும், ஆழ்ந்த துக்கத்திலிருப்பவனை மிக்க களிப்புடையவனாகவும், களிப்புடையானை கவலையாளனாகவும், வியாதிகளையகற்றவும், கெட்ட நடவடிக்கைகளைப் பற்றறத் தொலைவிக்கவும், இன்னும் எண்ணிறந்த வகையான நன்மையான காரியங்களை நடத்தவுங் கூடும். இதைக் கண்டு தான் பேதை ஜனங்கள் குறி கேட்பதும், உடுக்கடித்துப் பிழைக்கும் அம்மன் கொண்டாடிகள், ஆத்தாள் கொண்டாடிகளிடம் துட்டுத்துக்காணிகளைக் கொடுக்கிறதும், குடுகுடுப்பாண்டியிடம் அரை வஸ்திரங்களை அவிழ்த்துக் கொடுக்கிறதும், அன்னவர்கள் செய்யும் அட்டகாசங்களில் மதிமயங்கி மனமருள்வதும், சகஜமாயிருந்து வருகின்றது. அவர்களுக்கு அப்பியாசமாகியிருக்கும் கொஞ்சமான மனோபாவத்தினாலேயே இத்தகைய ஆர்ப்பாடம் புரிவார்களானால் பூரண சக்தியடைந்தவர்களுடைய பெருமையை எங்ஙனம் கூறற்பாலது. இதனால் உலகத்தினிடத்து மானுடயாக்கையைப் போர்த்திருக்கும் ஜனசமுகத்தில் செல்வாக்கு, மரியாதை, மனக்கிளர்ச்சி, தேக தத்துவ பலங்கள், குடும்பந்தாங்கல் முதலிய அரிய காரியங்களெல்லாவற்றிற்குமே சிறக்கச் செய்வது மனதையடக்கியாளுந்தன்மையேயாம். இம்மனோ தத்துவபலன் எத்தன்மையதென்பது ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்க வேண்டும்.

பட்டணத்து சிப்பாய் ஒருவன் சண்டை நடந்துவருங்காலத்தில் தண்டு இறங்கியிருக்கும் கூடாரத்தை சுற்றிலும் பாராக்கொடுத்துக்கொண்டிருந்தான். மற்றும் அநேக சிப்பாய்களும் சுற்றிலும் பாராக்கொடுத்துக்கொடுத்துக் கொண்டிருந்தனர். மணி 12-அடித்தது. நடுநிசி, நல்லிருள், அப்போது வசந்த காலமானதால் குன்றிடைப்பிறந்த தென்றல் குளிர்ந்து வீசிக்கொண்டிருந்தது. குளிர்ந்து இனிமையாய் வீசும் காற்றின் சுகத்தால் தன்னை மறந்து கையில் துப்பாக்கியுடன் நின்றநிலையிலேயே தூங்கி விட்டான். கைதனிலிருந்த துப்பாக்கியும் மெல்லெனக்கை நழுவிக் கீழ்விழ்ந்தது. பக்கத்தில் பெரிய பீரங்கி யொன்றும் கிடந்தது. பாராக்கொடுக்கும்போது சண்டை நடக்கும் ஸ்தலங்களில் தூங்கவும் கூடாது. கையில் துப்பாக்கியின்றியிருத்தலுமாகாது ; இங்ஙனமாகப் பாராவைப் பார்வையிடுவதற்காக மேலதிகாரி குதிரை மீதேறி வெகுவேகமாய் சப்தத்துடன்வரவே சிப்பாய் விழித்துக்கொண்டு தூக்க

மயக்கத்தினாலும், திடீரென்று விழித்த கலக்கத்தாலும், துப்பாக்கி கையிலில்லை யென்பதுணர்ந்து பக்கத்தில் கிடந்த நாலாள் சேர்ந்து தூக்கும் வலிமையுள்ள பீரங்கியைத் தூக்கிக் கொண்டு நின்றான். இதைப் பார்த்து கர்னல் துரை ஆச்சரியமடைந்து ஒன்றும் பேசாமல் சென்றான். அவன் அந்தண்டை போனதே இவன் தன் கையிலுள்ளது துப்பாக்கியல்லவென்றும் பீரங்கி யென்றுமுணர்ந்து நின்ற விடத்திலேயே போட்டுவிட்டான். அப்புறம் அசைக்கக் கூட அவனால் இயலவில்லை. நாலாள் தூக்கும் பீரங்கியை இவன் ஒருவன் எப்படித் தூக்கினான்? மனதின் திறலன்றோ? இங்ஙனமேதான் முடியக்கூடாத காரியங்களும், அற்புதமான செயல்களும், மனத்தின் தன்மையால் சித்தித்திருக்கின்றன. மேலும் சமீப காலத்தில் என் ஊருக்கருகாமையில் ஒரு விநோத சம்பவம் நிகழ்ந்தது. அதுவும் மனத்தின் தன்மையை செவ்வனே விளக்கும். அதை இச்சமயம் நேயர்களறியாமலிருக்கக்கூடாது; கூறாமலிருக்கவும் என் மனம் இடங்கொடுக்கவில்லை. அதாவது; எனது ஊருக்கருகாமையிலுள்ள ஓர் கிராமத்தில் தோட்டக்காரன் ஒருவன் வழக்கம் போல் ஒருநாள் தனது தோட்டத்திற்கு மத்தியானம் சென்றான். சோளப்பயிர்கள் நன்றாய் செழித்து வளர்ந்து கரையையடுத்த இருபுறமும் பச்சைப்பசேரென்று ஒரு ஆள் மட்டமாய் உயர்ந்திருந்தன. அவ்விடம் வெகு நாளாய் ஓர் புற்றுமுண்டு. அதன் வழியாய்த்தான் தோட்டத்தைச் சுற்றிச்செல்லவேண்டும். அந்தப்புற்றைச்சுற்றிலும் சோளப்பயிர்கள் யதேஷ்டமாய்த் தலை நிமிர்ந்திருந்தன. இவ்வழியாய் மேற்படி குடியானவன் சென்றான், அச்சமயம் புற்றின் மீது தலைவைத்துப் படுத்திருந்த பாம்பும் இவனைத் தீண்டிற்று. இவன் போகும் அவசரத்தில் அதைக் கவனியாமல் சோளத்தட்டை காலில் உராய்ந்து இருக்கிறதென்று காலையுதறிவிட்டுச் சென்றான். அதைப் பற்றி அவனது நினைவில் தாக்கவுமில்லை. இங்ஙனமாக மூன்று நாட்கள் கழிந்தன. நாலாநாள் வழக்கப்பிரகாரம் அவ்வழி சென்ற காலையில் பழிகாரப் பாம்பு கண்ணெதிரில் விரைந்து செல்வதையும், புற்றுக்குள் நுழைவதையும் கண்டான். ஆஹா! என்ன ஆச்சரியம்!! அன்று நாம் செல்கையில் சோளத்தட்டை உராய்ந்தது என்று நினைத்தோம். இரத்தம் கூட வந்தன்றோ?. இந்தப் பாழும் பாம்பன்றோ கடித்ததென்று மனதில் உதித்தது. மயக்க மேறியது. விழுந்தான் கீழே வாயில் இரத்தம் கக்கியது. ஆள் பைசலானான். அந்தோ!



*மனத்தின் கூறு இங்ஙனமிருப்பதால் இம்மனதை எத்தகையதாய் அடக்கியாளவேண்டுமென்பதைப்பற்றி ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளல் ஆவசியகமாம். இதன் மகிமையைப்பற்றி 'சைகாலஜி' (Sycolagy) முதலிய ஆங்கில நூல்களை வாசிப்பின் நன்கறியலாம். ஆனால் நம் தமிழ் நாட்டினரில் ஆங்கிலேய பாஷையறியாதார் தெரிந்துகொள்ளல் கடினமாகலான் சமயம் நேர்ந்துழிமொழிபெயர்த்தெழுதுவாம். நிற்க, மேற்குறிப்பிட்ட மனத்தின் தன்மை இங்ஙனமிருப்பதால் மனத்தையடக்கி தேகவன்மையை வியர்த்தமாக்காமல் இந்திரிய நிக்ரகம்செய்து உடம்பைப்பேணும் உத்தமர்களை "பரமபிதாவுக்கு" சமானமாக மதிக்கவேண்டும். அன்னவர்வள் தான் அற்புதக்காரியங்களைச் செய்தற்குரியவர், மஹாத்மாக்கள் என்று அவர்களைப் பணிதல் தகும். சகல போகங்களையும் வெறுத்து ஆசை யெனும் பசாசையோட்டி, காசாசை யெனும் பைசாசவலையிற் சிக்காமல், ஆணுவமென்பதை யறுத்து, இந்திரிய நிக்ரகம் செய்து மனத்தை ஒரு வழிப்படுத்தி, வைராக்கிய "தீபமாய், எனக்

* சில மனதைப்பற்றிய வியாதியஸ்தர்களுக்கு அதிக நல்ல அவுஷதங்கொடாமலே வியாதிக்காரர்களை நல்ல மாதிரியாகவும், பக்ஷமாகவும், பயமுறுத்தியும் நடத்தி வருவதால் அவ்வியாதி முழுவதும் சவுக்கியப்பட்டுப்போகுமென, சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அம்மாதிரியாகவே சிலருக்கு பயம் முதலியவைகளினால் அவ்வியாதி சுவஸ்தப்பட்டிருக்கிறது.

அதற்கு திருஷ்டாந்தம்:—ஸ்ரீமான், டாக்டர் வரதப்ப நாயுடுகாரு அவர்கள் இரண்டு வியாதியஸ்தர்களை சுவஸ்தப்படுத்தினார். அவர் செய்த சமயோஜித சிகிச்சையை நினைக்கும்போதெல்லாம் எனக்குஅதிக ஆனந்தத்தை உண்டுபண்ணுவதால் தக்க இடத்தில் இதை உதாரணமாகக்கொண்டுவராமலிருக்கக் கூடவில்லை. அவையாவன, சென்னையில் ஓர் சிறுவனுக்கு, தினமொன்றிற்கு ஏழெட்டு முறை வலிப்பு வந்து கொண்டிருந்தது. அதில் கைகால்களை இழுத்தல், மூர்ச்சையாய் விடுதல் முதலிய பலரோகங்களுண்டாயிருந்தன. பெற்றோர் அதற்காக செய்யாத சிகிச்சையும், கொடுக்காத அவுடதங்களுங்கிடையா. அச்சிறுவன் நாயுடு அவர்களிடம் கொண்டுவரப்பட்டபோது அதைப்பற்றி நாலைந்து தினம் யோஜித்து தீர்மானித்ததாவது, மருந்தைக் கொடுப்பதைவிட தந்திர சிகிச்சை செய்யவெண்ணி, அச்சிறுவனுக் கெதிரிலேயே மூட்டம்போட்டு இரும்பு சலாகைகளைக் காயவைத்துவிட்டுப் பேசிக்கொண்டேயிருந்தார். இவ்விதம் 2-3மணிநேரம் இருந்தும் அவ்வலிப்பு வரவில்லை. அதன் பேரில் இதுதான் தகுந்த சிகிச்சையெனத்தீர்மானித்து தினம் அங்கே

குள் நீ உனக்குள் நான் "எனும்" I am in my father, And my father is in me "அஹம்பிரமாஸ்மி" "தத்துவமஸி" "ப்ரக்ஞானம், பிரமம்" என்று சகலவிதமாயறிந்து "I and my father are one" "எந்தையும் நானுமொன்று, என்னில் எந்தையும் எந்தையில் யானுமே யுளோம்" என்ற சகல மத சித்தாந்தக் கொள்கைப்படி கடவுளின் கடாக்ஷ வீக்ஷணியத்திற்குப் பாத்திரராய் கடவுளோடு இரண்டறக்கலந்து பேரின்ப முத்திநிலையை ரிஷிகள், ஞானிகள், கிறிஸ்து, ஸென்ட்பால் முதலிய மஹான்கள் உரைத்தமைபோல் வழிபட்டுய்யும் பெரியோரைப் பணிவோரே பெறும் பேறுற்றவராவர். அன்னவர்களே மனோவியாபக சக்தியில் மிஞ்சிய தவயோகிகளென்னப்பெருமை பெறும் பேருற்றவர். இனி இம்மனதை எப்படி அடக்கியாளுந்தன்மையை யடையலாமென்பதைப்பற்றி அடுத்த முறை தொடுப்போம்.

K. S. வைத்தினாதய்யர்.

---

இரண்டுமணிநேரம் இருந்து வந்தார். அவர் இருக்கிறவரையில் அந்நோய் தலைகாட்டுவதில்லை; அவர் போனபின் வருவதுண்டு. அதன்மேல்அந்தப்பையனை சிலநாள் தன்னுடன்கூடவே வைத்திருந்து முழுவதும் சுவஸ்தப்பட்டபின்பு பெற்றோரிடத்தில் ஒப்புவித்தார். அச்சிறுவன் இன்னும் சுகஸ்திதியிலிருக்கிறான். அவ்விதமே இன்னொரு அம்மாளுக்கு வாய்திறக்கவும், போஜனம் பண்ணவும் ஹேதுவில்லாது மனப்பேய்ப் பிடித்திருந்தது. இதுவும் மெஷ்மெரிஸ தந்திர சிகிச்சையினாலேயே நிவர்த்தியாயிற்று.

இன்னும் கொக்கோக சாஸ்திரியாரும் சொல்லுகிறதாவது, பெண்ணிற்குமுன் ஆணிற்கு விந்து ஸ்கலிதம் உண்டானால், அதைத்தடுப்பதற்காக சம்போக காலங்களில் தன் மனதை வேறு விஷயத்தில் செலுத்தி, போகத்தில் இல்லாததுபோல் பாவித்திரிப்பதினால் ஸ்திரீக்கு முந்தி புருஷனுக்கு ஸ்கலிதம் ஆகாதெனச் சொல்லியிருக்கிறார். இன்னும் ஒரு வியாதியஸ்தனை நோக்கி உனக்கு ரஸ மருந்துகள் கொடுக்கிறேன். உன் வாய் ரணமாய் விடுமெனச் சொல்லி, சாதாரணமாகிய, வெண்ணெய், ரொட்டி முதலாகிய உணவுகளில் யாதொரு மருந்தையும் கலக்காது அரைத்துருட்டிச் சாப்பிடக்கொடுக்க வாய் ரணமாய்விடும்.

மேற்காட்டிய திருஷ்டாந்தங்களினால் மனிதருக்குண்டாகும் சில விஷயங்களினால் சுபாவமாயுண்டாயிருப்பது இல்லாமற் போய்விடுவதும், சிலவேளை அவர்கள் சக்திக்கு அதிகமாகச் செய்யக்கூடிய வல்லமை உண்டாகிறதெனவுந் தெரிய வருகிறது. (பத்திராதிபர்.)



ஆகஸ்டு மாத சஞ்சிகையின் 66-வது பக்கத்தொடர்ச்சி.

## மனிதர்க்குரியவுணவு.

மாம்ஸத்தையோவெனில் எத்தனையோ முறையாய்ப் பக்குவப்படுத்தியே உண்ணவேண்டும். ஊனையுண்பவர்கள் அதிகமாகப் பசி தாங்கமாட்டார்கள், தானியங்களை யுண்பவர்களுக்கு உபவாசஞ் செய்வதிலும் வருத்தமிராது. ஊனுண்பவர்களின் பல்லும் வாயும் எப்பொழுதுமே துர்க்கந்தமாக நாறிக்கொண்டிருக்கும். அவர்களுடைய மல மூத்திரங்களும் கணக்கில்லாதபடி துர்க்கந்தமாக நாறும். வைத்தியர்கள் எந்த நோய்க்கும் புலாலுண்பதை நிறுத்திவிடவேண்டுமென்று பத்தியம் விதிப்பார்கள். புலாலுண்பவர்கள் அதிகமான சீதோஷ்ணத்தைத் தாங்கமாட்டார்கள். காய், கறி, கிழங்குகளைமட்டுமே யுண்பவர்களின் தேகக்கட்டு உறுதியாயிருக்கும்; அவர்கள் தேகம் அதிகமாகவும் பெருக்காது; இளைத்தும் போகாது, புலன்களின் நுகர்ச்சியுங்கெடாதிருக்கும், கண்ணுக்கழகாயும் தேகவலிமை யுடையவர்களாயு மிருப்பார்கள். இதனாலும் மூலவர்க்க உணவே ஏற்ற உணவென்றறியலாம். ரஸாயனசாஸ்திர முறைப்படியும் சற்றே பார்ப்போம். புலாலுணவு எளிதில் ஜீரணமாகுமென்றும், தேகத்திற்கு நல்ல புஷ்டியைத் தருமென்றும் சிலர் சொல்லுகிறார்களே யன்றி இது உண்மைதானென்று எல்லோருமொப்புக்கொள்ளும்படி இன்னும் ரூபித்துக்காட்டவில்லை. மூலவர்க்கமே மனிதர்க்குச் சிறந்த உணவென்றும், அவற்றுள் சில மாம்ஸத்திலும் பல மடங்கு பலமுடையனவென்றும், அவை எளிதில் ஜீரணமாகின்றனவென்றுங் கண்டிருக்கிறார்கள்.

அரிசி, பயறு வர்க்கங்கள் ஆகிய இவற்றின் சாரமானது மாம்ஸத்தின் ஸத்திலும் அதிகமானதுமன்றித் தேகத்திற்கும் நன்றாய்ப் பொருந்தியதென்று கண்டிருக்கிறார்கள். உருளைக்கிழங்கின் ஸத்து இறைச்சியின் ஸத்துக்கு குறைந்ததேயன்று. புலாலையுண்பதினால் தேகத்திற்கு அவசியமிருக்கவேண்டிய உஷ்ணங்குறையாதென்று சிலர்சொல்லினும், காய் கறிகளிலிருக்கிற கரியமிலவாயு தேகத்திற்கு உஷ்ணத்தை அதனினும் அதிகமாகத்தரும். இது விஷயத்தில் வைத்தியர்கள் சொல்லுவதைச் சற்றே நன்றாக ஆலோசித்துப் பார்ப்பது அவசியமாகும். பேதி முதலிய விஷஜ்வரமும், கொள்ளை நோய்களும், பரவும்போது புலாலையுண்பது கூடாவே கூடாதென்பது வைத்தியரின் கொள்கையாகும். அக்காலத்தில் கந்த மூலங்களையுண்பவர்களுக்கு அந்நோய்கள் அதிகமாக உண்டாவதில்லை. காயம், நசிவு நெருப்புப்பட்டபுண் இவை எளிதில் ஆறவேண்டுமானால் ஊனையுண்ணாமலிருத்தல் வேண்டும்.

இவ்வுலக சரித்திரத்தின்படி பார்த்தால் சாக பக்ஷணஞ்செய்கிறவர்களெல்லோரும் பலவான்களாகவும், நீடித்த ஆயுளுடையவர்களாகவும், நோயற்ற வாழ்வுடையவர்களாகவும், சிறந்த புத்திமான்களாகவுமிருக்கிறார்களென்பதைக் காணலாம். ஊனைப் பெருமிதமாக உண்ண உண்ண மனிதர்களின் அந்தமும், அழகுங்குன்றிப்போம், ஆங்கிலேயர், ஜர்மனியர், பிராஞ்சுக்காரர், அமெரிக்கர் முதலியவர்கள் மூலவர்க்க உணவையும் மாம்ஸத்தையுஞ் சேர்த்துண்டு நன்றாக அழகு வாய்ந்து சுகமாயிருக்கிறார்களென்றாலும, அவர்களிலும் ஊனை விலக்கிக் கொல்லாவிரதம் பூண்டு கந்த மூலங்களை மட்டுமே உண்பவர்களே எல்லாச்சிறப்புமமைந்தவர்களாம். இதனாலும் புலாலுண்ணாமையின் பெருமையை நன்றாயறிந்து கொள்ளலாம்.

ஊனுண்டல் கூடுமென்பதற்கு நீதி நூல் தான் இடங்கொடுக்கிறதோவென்று பார்ப்பின் அதுவும் அவர்களுக்கு முற்றுமே விரோதமாகும். ஊனைஉண்பதனால் அது தேகத்தில் ஓர்வித உணர்ச்சியையுண்டாக்கிச் சிற்றின்பப் பிரியர்களாக்கும். அப்படிக்கின்றி ஸாத்துவிக ஆகாரமான கோதுமை, அரிசி, பயறு முதலிய தானியவர்க்கங்களை மட்டும் உண்டுகொண்டு வந்தால் அது தேகத்திற்கு அநுகூலமாய், மனம்போன போக்கின்படியெல்லாம் மனதைச் செல்லவிடாது அதை ஒரு நிலையில் நிறுத்தி நம்மை நல்வழியிற் செலுத்தும். தன்னூன் பெருக்குதற்கு பிறிதூன் உண்பவனுக்கு அருளுடைமை எப்படி உண்டாகுமோ தெரியவில்லை. ஒருயிரையுங் கொல்லாமலும், புலாலை உண்ணாமலிருப்பவர்களை எல்லா உயிருமே கைகூப்பித் தொழும்; நாம் மற்ற உயிர்களுக்குத் திங்கு நினையாமல் அவைகள் நம்மைக் கண்டால் அஞ்சாதபடியுஞ் செய்பவனே கடவுளுடைய கருணைக்குப் பாத்திரனாவான். அஹிம்ஸை தர்மங்களுக்கெல்லாம் உத்தமமானது. இது எம்மதத்தவர்களுக்கும் சம்மதமானது. இந்தப் பூமியில் அபிரிமிதமாய்க் காய்களும், கனிகளும், கிழங்குகளும், பலவகையான தானியவகைகளுமிருக்கையில் அநியாயமாய் உயிர் வதைசெய்வது நன்றாகாது.

நாம் அனுபவசித்தமாய்ப் பார்ப்பின் ஊனுண்பதை விலக்கி, மூலப்பொருள்களுள் நமக்குரிய நல்ல ஆகாரங்களைமட்டுமே தேர்ந்துண்பது, இகத்துக்கும் பரத்துக்கும் நன்றாகும். ஒருவன் தனக்குரிய உணவாகிய தானியவகைகளைவிட்டு ஊனையுண்ணின் அதனால் பலவகையான நோய்களுண்டாவது திண்ணம். குரங்கு, மான் முதலியவற்றிற்கு ஊனையுண்ணப் பழகுவதனால் அவற்றிற்கு நாளடைவில் நோயுண்டாகிக் கெட்டுப்போம். இக்காலத்தில் அங்கங்கேயுள்ள விவேகிகள் ஊனையுண்



பது கூடாதென்று அதை மெள்ள மெள்ள விலக்கி வருகிறார்கள். ஊனை ஒருபொழுதுமேயுண்ணாதிருக்கும் ஜப்பான் தேசத்தாரைப்போன்ற சூரர்களை எங்குமே காண்பதரிதன்றோ? ஆதலால் புலாலுண்ணாமையே பெருமையுடைத்தென்றுகொண்டு ஸர்வஜீவதயாபரர்களாயிருத்தலே உத்தமமான தருமமென்று கொள்ளல்வேண்டும்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லாவுயிருந் தொழும்."

## சங்கீதப் பயிற்சி.

இளைப்பாற்றும் விநோதங்களிற் சங்கீதம் மிகவும் மனதிற்கடுத்தது. இம்மண்ணுலகத்திற்கும் விண்ணுலகத்திற்கும் ஆதாரமாயிருப்பதும் நன்னடைக்குரிய உணர்ச்சியைப் பயிர்ச்சி செய்யத்தக்கதும், இவ்வுலகத்தை மறந்து மறு உலகத்தை எண்ணச்செய்வதும், நம்முடைய நினைவுகளை மனத்தை விட்டுப் பறக்கச்செய்து விண்ணுலகவாசிகளாகிய அழிவின்மையோர்களுடன் கைபிடித்து உலாவச்செய்வதும், இன்னும் பிரியம், அன்பு, நேசம் இவற்றினையெல்லாம் அதிகரிக்கச் செய்யும் கருவியும் இச்சங்கீதமேயாம்.

ஆங்கிலத்தில் டிரைடன் (Dryden) என்னுங் கவிஞரியற்றிய அலெக்ஸாண்டர்ஸ் வ்வீஸ்ட் (Alexandra's feast) என்னும் பாட்டில் இச்சங்கீதத்தின் சக்தி நன்றாய் விளங்கும். இப்பாட்டில் எந்தெந்த ரசங்கள் பிரதானமோ அந்தந்த ரசங்களுக்குத் தகுந்தபடி அலெக்ஸாண்டர் மனது வேறுபடும். வீரரச சமயத்தில் தான் யுத்தம் செய்வதாக பாவனை செய்வான். சோகரச சமயத்திற் கண்ணீர் சொரிவான். சிருங்காரரச சமயத்தில் தன் மனைவி ஸ்தனங்களில் விழுவான். இப்படி மனதை உருகச்செய்யும் சங்கீதம் ஆதிகாலமுதல் ஜனங்களுக்குப்பிரியகரமாகவே இருந்து வருகிறது. ஜூபல் (Jubal) என்பவன் சங்கீதத்தை கோஷிக்கச் செய்தபொழுது கேட்டிருந்த ஜனங்கள் தெய்வலோகத்து சப்தமோவென்று நினைத்து அச்சப்தத்தை ஆராதிக்கத் தொடங்கினார்களென்றும், ஸிஸிலியா (Cecilia) என்பவன் தன் வாத்தியத்தை வாசிக்கத் தொடங்கினபோது கேட்டிருந்த தேவதூதனொருவன் மண்ணுலகத்தை விண்ணுலகமென்றெண்ணி இறங்கினானென்றும், ஆர்பியஸ் (Orpheus) என்பவன் தன் வாத்தியத்தை முழக்கின பொழுது மரபட்டைகளெல்லாம் அச்சுககரமான சப்தத்தைப் பின்பற்றி

ப்போயினவென்று, ஐரோப்பிய நாடுகளிலும், அதிக கரேமனதுள்ள விசுவாமித்திர மஹரிஷியின் நேத்திரத்தைத் திறக்கச்செய்ததும் மேனகையின் மேன்மையான இவ்வானந்தகரமான கானமே என்றும், கைலாசகிரியைப் பெயர்த்தபோது சிவபெருமான் பாதத்தால் நசுக்குண்டு அவஸ்தைப்பட்ட, அரக்கனான இராவணனும் விடுதியடைந்ததற்குக் காரணமும் இக்கானந்தானென்றும் நம் தேசத்தில் கூறுவர்.

கொஞ்சகாலமாக இச்சங்கீதம் துர்விஷயங்களிற் பிரயோகிக்கப்பட்டுச் சங்கீதத்தின்பேரில் ஒருவிதமான அருவை ஜனங்களுக்கு ஏற்பட்டு விட்டது. சங்கீத பயிற்சியும் துர்நடக்கையும் அநேகமாய்த் தங்கை தமக்கை போலக்கூடி வாழ்கின்றன. நன்னடக்கை, நற்குணம், நன்றியறிவு, பயபக்தி இத்தன்மையான குணங்களைப் போதிக்கும் சத்கீர்த்தனைகளையே ராகதாளத்துடன் கற்பிக்க வேண்டியதே யொழிய "மிஞ்சி நட நடக்கும்" "ஏண்டி குட்டி தங்கமே" "ஆசைகொண்டேன் மன்னவா" என்பன முதலான ஆபாசபாடல்களுக்கு இடங்கொடுக்கக் கூடாதென்பது எமது துணிபு.

சங்கீதத்திற்கு இப்பொழுது இருக்கிற மஹத்துவக் குறைவைப் போக்கி, அதைக்கனப்படுத்தி சற்பாத்திர விஷயங்களிற் பிரயோகித்து மேன்மேலும் விருத்திக்குக் கொண்டுவரவேண்டியது. நம் தேசத்தில், செய்யவேண்டிய சீர் திருத்தங்களிலொன்று. (பிரஜானுகூலன்.)

---

## VACCINATION.

### அம்மை வைத்தல்.

ஜூலை மாத "பிழைக்கும் வழி" யில் இந்த விஷயமாக வெளிவந்திருக்கும் வியாஸமாவது:—சென்னப்பட்டணம் முதலிய பெரியபட்டணங்களில் குழந்தை பிறந்த ஆறு மாஸத்துக்குள் அம்மை குத்திவிடவேணுமென்றும், அப்படிக் குத்தாவிட்டால் பெற்றோர்கள் தண்டனைக்குள்ளாவார்களென்றும், முனிஸிபாலிட்டியார் கட்டாயப்படுத்துவது பட்டண வாஸிகள் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். கிராமாந்தரங்களிலும் கிராம முனிசீபைக்கொண்டு சிபார்சு செய்யச்சொல்லி அம்மை போட்டாதவர்களுக்கு அம்மை வைக்கும்படி கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்து வருகிறார்கள். அம்மை குத்துவது என்பது என்ன? அதை யார் கண்டுபிடித்தது? அதனால் என்ன பிரயோஜனம்? என்னும் இந்த விஷயங்களைப்பற்றி ஜூன் மாஸத்து "நல்லாசிரியனில்" வி. கே. நாராயணஸாமி அய்யர் ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார்.



18-வது நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தில் க்ளஸ்டர்ஷயர் மாகாணத்தில் பசுக்களுக்கு வைசூரி கண்டிருந்த சமயத்தில், பசுவின் மடியில் எழும்பியிருந்த முத்துகள் பால் கரக்கும்பொழுது உடைந்து பால் கரப்பவர்களுடைய விரல்களில் பட்டு முத்துகள் எழும்பி வந்ததினால், அவர்கள் தங்களுக்கு வைசூரியாகிய பெரிய அம்மை வருகிறதில்லை என்று உறுதியாகச் சொல்லி வந்தார்கள். அந்தக் காலத்தில் எட்வர்ட் ஜென்னர் என்று ஒரு வைத்திய பண்டிதர் இருந்தார். பால் கறப்பவர்கள் சொல்லிய விஷயம் ஷை பண்டிதர் காதில் படவே, பெரியம்மை போட்டியவர்களின் மேல் வைசூரி நீரைப்பிரயோகம் செய்து பரீட்சித்து, அவர்களுக்கு வைசூரி நோய் வாராதிருக்கக்கண்டார். உடனே, அவர் பசுவின் வைசூரி நீரை மனிதர்மேல் செலுத்தி, எழும்பும் முத்துக்களின் நீரை மற்ற மனிதர்கள் மேல் செலுத்துவதனால் முத்துகள் உண்டாகுமென்றும், அப்படி உண்டான பின் அவர்களுக்கு வைசூரி வாராதென்றும் வெளிப்படுத்தினார். இந்த வைசூரி நீர் பசுவினது இரத்தத்தில் வேறுபட்டு வைசூரியை முறிக்கும் சக்தியை உடையதாகிறது.

காலக் கிரமத்தில், டாக்டர் ஜென்னர் பசு வைசூரிப்பிரயோக விஷயமாய் அனுஷ்டித்த முறை பல மாறுபாடுகளை அடைந்தது. இப்போது பசு வைசூரி நீரைக் கன்றுக்குட்டிகளின் மடிகளின்மேல் பிரயோகித்து, மடிகளிலிருந்து உண்டாகும் வைசூரி நீருடன் க்ளிஸரைன் லானோலைன் முதலிய சரக்குகளைச் சேர்த்து, அது சீக்கிரத்தில் வீர்யமற்றுப் போகாமலிருக்கும்படி சிறிய ஈயக்குழாய்களில் அடைத்து, மாகாணங்களின்பல பாகங்களுக்கும் அனுப்பி அம்மை குத்துவதை ஜனங்களுள் பரவச் செய்கிறார்கள்.

இதுவரையில் ஒருதடவை அம்மை வைத்த பிறகு எழு வருஷம் வரையில் அதன் வீர்யம் தேகத்தில் இருக்குமென்று எண்ணிவந்தார்கள். இப்போது சில ஸமயங்களில் அம்மை வைத்தும் இரண்டு மூன்று வருஷங்களுக்குப் பிறகு பெரியம்மை வார்க்கிறதென்று கண்டு, இரண்டாம் தடவையும் அம்மை வைப்பது நலமென்று சொல்லுகிறார்கள்.

பசு வைசூரிப்பிரயோகமான பிறகு ஒருவனுக்குப் பெரியம்மை வார்த்தாலும் அது வேகமற்று மிகவும் அற்பமாயிருக்கும். சில மணிகள் கண்டாலும் பிராணனுக்கு அபாயம் நேரிடுவது மிகவும் அபூர்வம்.

பெரியம்மை என்னும் இந்தக்கொடிய ஒட்டுவாரட்டி வியாதியை நிவர்த்தி செய்ய மேற்கூறியபடி தகுதியான சாதகங்களிருந்தும், ஜன

ங்கள் அறிவின்மையால் இவ்வியாதியை * மாரியாத்தாள் என்று நம்பி வேண்டிய பூஜை, பலி முதலிய காரியங்களில் அதிக பணம் செலவு செய்து, தங்கள் கோரிக்கை நிறைவேறுமல் அநேகர் இறந்துபோகிறுர்கள்.

இப்போது ஐரோப்பா தேசங்களில் கட்டாயப்படுத்தி துரைத்தனத்தார் அம்மை குத்துவதால் குடிகளுக்கு அம்மையால் நேரிடும் மரணம் வருஷந்தோறும் குறைந்து வருகிறது. நமது தேசத்தார் ஐரோப்பியர்களினின்றும் நடை, உடை, பாவனை, ஆகாரம், மதம் முதலியவற்றில் வேறுபட்டிருப்பதால் இங்கே கிராமாந்தரங்களில் பலாத்காரம் செய்யாமல் பெரிய பட்டணங்களில் மட்டும் கட்டாயப்படுத்தி வருகிறுர்கள்.

குழந்தைகளுக்கு, பிறந்த ஆறும்வாரம் முதல் ஆறு மாதத்திற்குள்ளாக பல்மாந்தம் காணுமுன், அம்மைவைப்பது உத்தமம். ஆனுல் சொரிசிரங்கு முதலியபிணிகள் கொண்டிருக்குங்காலத்தில் வைக்கக்கூடாது.

---

## A NOTE ON HAIRY CATERXILLARS.
## கம்பளிப் பூச்சியைப் பற்றிய குறிப்பு.

---

சென்னை விவசாய சங்கத்தார் கம்பளிப் பூச்சியைப்பற்றி வெளிப்படுத்தியிருக்கும் விளம்பரமொன்றை ஆவணி மாதத்திய "விவேகபாநு" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருப்பதை இதனடியில் பதிப்பித்திருக்கிறோம்:—தமிழ் ஜில்லாக்களில் "கம்பளிப் பூச்சி" என்று சொல்லுகிற மயிருள்ள புழுக்கள் பயிரைச் சேதப்படுத்தும் ஜெந்துகளென்று தென்னிந்தியாவிலுள்ள எல்லாருக்கும் தெரியும். மழைகாலத்தில் திடீரென்று உண்டாய் வெள்ளாமைகளுக்கு அதிக கெடுதிசெய்கின்றன. அவைகள் சோளம், கம்பு, நிலக்கடலை, பயறுவகைகள் இவைகளைத்தான் விசேஷமாய் அழித்துவிடுகின்றன.

இந்தக் கம்பளிப் பூச்சிகள் பயிர்களைத் தின்றபின் மண்ணுக்குள் நுழைந்துகொண்டு பேரீச்சங்கொட்டையைப்போல் உருமாறி மறு வருஷம் மழைகாலம் வரும் வரையில் அந்தப்படியே (மண்ணுக்குள்) கிடக்கும். மழைகாலம் ஆரம்பித்து தரை போதுமானபடி நனைந்ததும் இந்த

* நமது தஞ்சைஜில்லாவில் உயர்பதவி உத்தியோகம் வகிக்கும் ஓர் ஐரோப்பியருக்கு பெரியம்மை கண்டபோது யாதொரு சிகிச்சையும் செய்யாமல் மாரியாத்தாளுக்கு வேண்டிய பலிகளும், காணிக்கைகளும் செலுத்தி குணமடைந்தார். (பர்.)



பூச்சிகள் மேல்நோக்கித் துளைத்துக்கொண்டு தரைமட்டத்துக்கு வந்து, பொட்டுப் பொட்டாயிருக்கும் சிறகுகளுடனும் மஞ்சள் அல்லது சிகப்பு வரிகளுள்ள உடம்போடுங்கூடிய வெள்ளைப் பூச்சிகளாக வெளிக்கிளம்புகின்றன. இந்தப் பூச்சிகள் சாதாரணமாய்க் கொள்ளை கொள்ளையாய் ஒரே தடவையில் ஒருமிக்கக் கிளம்புகின்றன. அப்போது கிராமாந்தரங்களில் விளக்கைச்சுற்றிலும் இவைகள் கூட்டமாய் திரண்டுகொண்டிருப்பதைப் பார்க்கலாம். பெட்டைப் பூச்சிகள் இலைகளில் அநேக முட்டைகளிடுகின்றன. கம்பு, சோளம், நிலக்கடலை இவைகளின் இலைகளின் கீழ்பக்கத்தில் திரள்திரளாய் முட்டைகளிருக்கக்காணலாம். இந்த முட்டைகள் பொரிந்து பின் கம்பளிப் பூச்சிகளாகும்.

**இதற்குப் பரிகாரமான உபாயங்கள்.**—இந்தப் பூச்சிகள் முட்டையிடுவதால்தான் திடீரென்று புழுக்கள் உற்பத்தியாகின்றன. ஒரு பூச்சி சுமார் 500 முதல் 1,200 முட்டைவரையிலும் இடும். ஆகையால் ஒரு பூச்சியைக் கொன்றுல் பின்னிட்டு 500 முதல் 1,200 புழுக்கள் வரையிலும் கொன்றதுபோலாகும். நல்ல மழைபெய்து தரை தக்கபடி நனைந்ததும், கூடுகளிலிருந்து நூற்றுக்கணக்காய் பூச்சிகள் புறப்படுகின்றன. இந்தப் பூச்சிகளுக்கு விளக்கண்டை வந்துசேர அதிக ஆவல். இந்தப் புழுக்களின் தொந்திரவுள்ள இடங்களில் சமயம்பார்த்து விளக்குப் பொறிகளை வைத்தால் இந்தப் பூச்சிகளை ஒருமிக்கத் தொலைத்துவிடலாம்.

விளக்குப்பொறி என்பது விளக்கண்டை வரும் பூச்சிகளை தானுகக் கொல்லும் ஒரு சூத்திரம். இச்சூத்திரம் பூச்சிகளை இழுக்கிறதற்கு விளக்கொன்றும், அதன்கீழ், வந்த பூச்சிகளைக்கொல்ல மண்ணெண்ணெய் கலந்த தண்ணீருள்ள தட்டம் ஒன்றும் சேர்ந்து அமைந்துள்ளது. ஒரு சிறு மண்ணெண்ணெய் விளக்கு உள்ளே வைக்கக்கூடிய நான்கு மூலைக்கண்ணுடி லாந்தரை வைத்துக்கொண்டு விளக்குப்பொறி செய்துவிடலாம். இதன் விலை சொற்பம். இது எல்லா ஊர்களிலும் சுமார் 6-அணுவுக்கு வாங்கலாம். தேங்காய் எண்ணெய் பாதி மண்ணெண்ணெய் பாதியாகக்கலந்து உபயோகிக்கவேண்டும். தனி மண்ணெண்ணெயைவிட இந்தக் கலப்பு பிரகாசமாய் எரியும். புகையும் பிடியாது. பூச்சிகளைப்பிடிப்பதற்கான மண்ணெண்ணெய் கலந்த தண்ணீரின் விஸ்தீரணம் அதிகமாய் இருக்கும்படி தட்டம் அகன்று இருக்கவேண்டியது அவசியம். $2\frac{1}{2}$ முதல் 3-அங்குலம் ஆழமும் சதுரமும் உள்ள ஒரு தகரத் தட்டம் இதற்கு எற்றதென்று அநுபோகத்தில் தெரிந்திருக்கிறது. 6-அல்லது 8-அணுவுக்கு எந்த தகரக்கடைக்காரனும் செய்து கொடுப்பான்.

இதில்லாவிட்டால் ஏற்றச்சால்போல் அகன்றவாயுள்ள எந்தப் பாத்திரமும் இதற்கு உதவும்.

தனியாக ஒரு மூங்கில் கால் நட்டு அதிலிருந்து தட்டத்திற்கு மேலே லாந்தரை தொங்கவிடவேண்டியது. ஆழமில்லாத பாத்திரமாயிருந்தால் அதன் நடுவில் ஒரு கல்வைத்து அந்தக் கல்லின்மேல் லாந்தரை வைத்துவிடலாம். எந்தப் பயிரைக்காக்க இந்த ஏற்பாடு செய்கிறோமோ அந்தப் பயிர்மட்டத்திற்குமேல் இந்தக் கருவி முழுவதும் உயர்ந்து இருக்கவேண்டும். தூரத்திலிருந்து பார்த்தால் விளக்குத் தெரியும்படி ஒரு மண் குவியலின்மேல் வைக்கலாம்.

**விளக்குப் பொறிச் சோதனைகள்.**—இந்த உபாயம் பலிக்கிறதா என்பதை சோதித்தறியும்பொருட்டு 1909-வருஷம் ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் மஞ்சக்குப்பஞ் ஜில்லாவிலிருக்கிற பள்ளிக்குப்பம் கிராமத்து நிலங்களில் 15-விளக்குப் பொறி வைத்திருந்தது. முதலில் ஒரு சிறு கூட்டம் முந்தியநாள் பெய்த 1-அங்குல மழைக்கப்புறம் ஜூலைமீ 23உ இரவிலும், பிறகு அதிலும் மிகப்பெரிய கும்பல் ஆகஸ்டுமீ 8உ பெய்த 1½ அங்குல மழைக்குப்பின் 10உ சாயந்திரமும் ஆக இரண்டு வெவ்வேறு கும்பலாக அவ்வருஷம் இப்பூச்சிகள் புறப்பட்டன. முதற் கூட்டமோ கொஞ்சம் 400-பூச்சிகள்தான் 4-ராத்திரியில் பிடிபட்டன. இரண்டாவது கும்புலில் நாலிரவில் 7,400 பூச்சிகள் பட்டிறந்தன. அதில் 3,800 முதனாளிரவிலேயே பிடிபட்டன. இந்த 7,400 பூச்சிகளில் குறைந்த பட்சம் அரைவாசி பெட்டைகளாயிருக்கவேண்டும். ஒருபெட்டை 500 முதல் 1,200 முட்டைகள் வரையிடுகிறதென்பதை யோசித்துப் பார்க்கும்போது இந்தப்பொறி எவ்வளவு சிறந்ததென்பது தெளிவாய் நாம் காண்கிறோம். இந்த உபாயத்தால் தப்புவிக்கப்பட்ட நிலங்களுக்கருகில் ஒரு பூச்சிகூட காணாததினாலே பள்ளிக்குப்பங் கிராமத்துக் குடியானவர்கள் இது ஒரு கைகண்ட முறை என்று செவ்வையாய் அறிந்துகொண்டார்கள்.

**முடிவு.**—இந்த தந்திரத்தினால் பூரண நன்மையடைய வேண்டுமானால் ஒரு கிராமத்திலிருக்கும் இரண்டொரு குடியானவர்கள் மட்டும் தங்கள் நிலங்களில் விளக்குப் பொறிகளை வைத்தால் போதாது. அப்படிச்செய்வதினால் அந்தப் புலங்களிலும் அவைகளுக் கடுத்த புலங்களிலும் உள்ள பூச்சிகள் தப்பாமல் பிடிபட்டிறக்கும் என்றாலும், இந்த விளக்குப் பொறிகளுக்கு எட்டாத தூரத்திலுள்ள மற்றப்புலங்களிலிடப்



பட்டிருக்கும் முட்டைகள், பொறித்த புழுக்கள் கடைசியில் இங்கும் வந்து சேர்ந்துவிடும். ஆகையால் ஒரு இடத்திலுள்ள எல்லா குடிகளும் ஏகோபித்து கொல்லைகளெங்கும் விளக்குப்பொறிகளை கட்டாயம் நடவேண்டும். இப்படி எல்லாரும் ஒருமித்துச் செய்வதால் இந்த உபாதையை வரவொட்டாமல் தடுக்கமுடியும் என்று நம்பலாம். ஒன்று சோராமல் போனாலோ இப்பொறிகளெல்லாம் கேலிக்குத்தான் இடமாகும். கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால் (முதல்) மழை பெய்து நின்ற உடனே விளக்கு ஏற்றிவிடவேண்டும். முதனாளிரவு பிடிபடும் பூச்சிகளின் தொகை பின்னிட்டுப்பிடிபடும் பூச்சிகளெல்லாவற்றையும்விட அதிகமாயிருக்கும். ஆணும் பெண்ணும் சேர்ந்த பின்னிட்டு விளக்கண்டை பூச்சிகள் ஆவலோடு விசேஷமாய் வருகிறதில்லை. இந்த உபாயம் கைகூடவேண்டுமானால் (மழை நின்றவுடனே) சற்றும் தாமதம் செய்யாமல் விளக்குப் பொறிகள் வைத்துவிடவேண்டியது அவசியம்.

**விளக்குப் பொறி வைத்தல்.**—செலவு சுருக்கமான விஷயம். அதற்குவேண்டிய கைம்முதல் ஒரு ரூபாய்க்குமேலில்லை. லாந்தர் 6 அணா. தகரத்தட்டம் உபயோகிப்பதனால் அது ஒரு 6 அல்லது 8 அணா. மூங்கில் கால் சட்டம் வகைராவுக்கு ஒன்று அல்லது இரண்டணாவுக்கு மேல் செல்லாது. பத்திரமாய் வைத்துக்கொண்டால் பல வருஷமிருக்கும். ஒரு ராத்திரிக்கு ஒரு விளக்குக்கு 6 அல்லது 8 பைசா எண்ணெய் செல்லும். மொத்தத்தில் இரண்டு வாரத்துக்குமேல் விளக்கு வைக்க வேண்டியிராது. ஆனதினாலே எண்ணெய்ச் செலவு சுமார் 8 அணா பிடிக்கும். இந்தக் கம்பளிப் பூச்சிகளால் விளைகிற நஷ்டத்தை பார்த்தாலோ அரைவாசி முக்கால்வாசி பயிரைச் சேதப்படுத்தி நிலத்தின் நயத்திற்கும் பயிரின் உயர்த்திக்கும் தக்க ஏகர் ஒன்றுக்கு 20 ரூபாய் முதல் 50 ரூபாய் வரையில் நஷ்டம் உண்டாகிறது.

---

நமது சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் தங்கள் விலாசம் மாறும்போதெல்லாம் உடனுக்குடன் தங்கள் புதிய விலாசத்தைத் தெளிவாய் தெரியப்படுத்த கோரப்படுகிறார்கள். நமது சந்தா நேயரேனும், பிறர்களேனும் நமது ஆபீசுக்கு எவ்வித முகாந்திரத்தைக்கொண்டும் எழுதுபவர்கள் ரிப்ளை கார்டு எழுதினாலன்றி பதில்கிடைக்கமாட்டாதென்பதை அறியவும்.

பத்திராதிபர்.

## இரத்தம் (The Blood) தி பிளட்



அங்கமுழுவதிலும், இரத்தம் சென்று பாவும் வகை.

புற்பூண்டு மரம் முதலிய தாவரங்கள் சிலதில் இரசமும் மற்றும் சிலதில் பாற்களுமிருந்து அவைகளை போஷித்து வருவது போலவே, மனிதசரீரத்திலும், மற்றுமுள்ள ஜீவப் பிராணிகளிலும் இரத்தமென்னும் ஓர் வகை சிவந்த ரசம் ஙக்கப்பட்டிருக்கிறது. ரத்தமானது சரீரத்துக்குப்பிரதானமாயிருக்கிற வஸ்து; அதனால் நூதன சம்பவமும் (Development—டிவலப்மென்ட்) வளர்த்தியும் (Groth—குரோத்) சமானமாக்கிக்கொள்ளுகையும் (Asslmilation—அஸ்லிமிலேஷன்) உண்டாகின்றன. ஜீவநிலைக்குக் காரணம் ரத்தமேயாம். அந்த ரத்தமானது உறுப்புகளால் ஸமரஸப் படுகின்றது. ரத்தம் தேகத்தைச் சுழன்றுகொண்டிருக்கும்போது திரவரூபமாயிருக்கும். அதைத்தேகத்திலிருந்து வெளிப்படுத்தினால் உறைந்துவிடும். ரத்தத்தில் ஜலமும் அணுக்களுமுண்டு. ஜலத்துக்கு ரத்தநீர்) Liquor Sanguinis—லிகர் ஸான்குவினிஸ்) என்றும், அணுக்களுக்கு ரத்த அணுக்கள் (Globules—கிளாபியூல்ஸ்) என்றுபேர், ரத்தநீரில் சீரம் (Serum) என்கிறஜலமும், பைபிரின் (Fibrin) லிம்ப் (Lymph) என்கிற இழைகளையொத்த பதார்த்தங்களுமிருக்கின்றன. ரத்தம்உறையும்போது பசையானது ரத்த அணுக்களைச்சேர்த்து இறுக்கிக்கொள்ளும். அதற்கு கிளாட் (Clot) என்று பேர். சீரமானது கசிந்து கிளாட்டைச்சூழ்ந்து கொண்டிருக்கும். சீரமென்னும் ஜலத்தில் அல்பியூமன் (Albumen) என்னும் பதார்த்தமும், சில உப்புகளும், கொஞ்சம் கொழுப்பும் இருக்கின்றன. கிளாட் என்னும் உறைந்த ரத்தத்தில் பைபிரின் என்னும்



பசையான பதார்த்தமும் ரத்த அணுக்களும் அடங்கியிருக்கின்றன. ரத்த அணுக்களில் இரண்டு விதங்களுண்டு. அவைகளில் ஒன்று சிறுத்து சிவப்பாய், பக்கங்கள் அழுந்தி விஸ்தாரமாய் இருக்கும் மற்றொன்று பெருத்து வெள்ளையாய் குறைந்திருக்கும். சிவந்த அணுக்களே ரத்தத்துக்குநிறத்தைக்கொடுக்கின்றன. அவைகளில்*அயம் உண்டு அந்த அயம் குறைவதே பாண்டு ரோகம். ஜலத்தைப்பார்க்கிலும் ரத்தம் அதிககனம், புருஷரைவிட ஸ்திரீகளுக்கு ரத்தம் கனத்தில் குறைந்திருக்கும். ரத்தத்திலிருக்கிற ஜலமானது காலத்துக்குக்காலம் பேதப்படும். போஜனத்தினாலும் திரிச்சலினாலும், காற்றினாலும் அதன் அளவு பேதப்படும். ரத்தத்தின் பிரயோஜனமாவது சர்வாங்கத்தையும் போஷித்து ஆதரிக்கின்றது. தேக போஷணைக்குரிய பதார்த்தங்களெல்லாம் ரத்தத்திலிருப்பதால் அது தேகத்தில் வியாபிக்கும் போது அந்தந்த உறுப்புகள் தங்களுக்கு வேண்டிய பொருள்களை கிரகித்துக்கொள்ளும். அல்லது உறுப்புகளுக்கு வேண்டிய பதார்த்தங்களை, ரத்தம் கொண்டுபோய்க்கொடுக்கிறதென்றும் சொல்லலாம். தேகத்திலிருக்கிற பிரயோஜனமில்லாத பதார்த்தத்தைச் சேர்த்துக்கொண்டு ரத்த பரிசுத்த ஸ்தானமாகிய நுரையீரலுக்கு (Lungs) கொண்டு போகின்றது. நாடியிலிருக்கிற ரத்தம் அதிக சிவப்பாயிருக்கும். அது நல்லரத்தம், நாளத்திலிருப்பது கறுத்திருக்கும். அது கெட்ட ரத்தம். நாடி அறுபட்டால், பீச்சாங்குழலிலிருந்து பீரிடுவது போல் ரத்தம் பீரிட்டோடும். (Gets out) நாளத்திலிருந்து ரத்தம் கசியும் (oozes-out) மானிட தேகத்தில் சுமார் 30-பவுன் ரத்தமுண்டு. ஆனால் தேகக்கூறுக்கு தக்கபடி வித்தியாசப்படும்.

† இருதயத்தினுடைய அறைகள் சுமார் 4-அவுன்ஸ் ரத்தம் கொள்ளும். சரீர சுகத்திலிருக்கிற புருஷனுக்கு ‡ இருதயமானது ஒரு மின்

* Note—ரக்தத்திலுள்ள அயம் குறைவதே பாண்டு ரோகம், அயம் குறைந்தால் ரக்தத்திலுள்ள பரமாணுச்சிற்றுயிர்களின் அளவு குறையும். பாண்டுரோகத்தையுடைய ஒரு ஸ்திரீயின் ரக்தத்தைப் பரிசுஷித்தபோது அதில் ரக்த அணுக்கள் 100-க்கு 46-பங்கு இருந்தபோது, அயஞ்சேர்ந்த அவுஷதங்களை அவளுக்கு கொடுத்து மறுபடியும் ரக்தத்தைப்பரிசுஷித்தபோது ரக்த அணுக்கள் 100-க்கு 96-பங்காக தொகையிலதிகப்பட்டு அவளுடைய வெளுத்ததேகமும் உதடுகளும் மாறி அவள் முகத்தில் வசீகரமுண்டானதாய்த்தெரிகிறது. இது பற்றியே சாதாரண ஜனங்களும் இரத்தயன் இரும்பைபத்தின்பான் என்றுசொல்லுகிறார்கள்.

† இருதயத்தின் ஏற்பாட்டைக் காண்பிக்கிற சித்திரப்படம் அடுத்த சஞ்சிகையில் அச்சிடப்படும்.

‡ Note—மார்பின் இடது பக்கத்தின் ஐந்தாவது ஆறாவது விலாவெலும்புகளுக்கிடையில் கையைவைத்துப்பார்த்தால் இருதய மார்துடிப்பு நன்றாய்க்கேட்கும். இதற்குக்காரணம் இருதயம் சுருங்கும் பொழுது அதன் உச்சி மார்பின் சுவற்றில் மோதுகின்றது, இதனாலேதான் மார்பில் கையைவைத்துப்பார்த்தால் அடிப்பதுபோலத்தெரிகின்றது.

னிட்டுக்குச் சராசரி 70-முதல் 80-ஆவர்த்தி அடித்துக்கொள்ளும். ஆனால் குழந்தைகளுக்கு நாடி அதிக தீவிரமாக ஓடும். அது ஒரு மின்னிட்டுக்கு 120-முதல் 140-தாய் இருக்கும் ஸ்திரிகளுக்கு இருதயநடை அதிகப்பட்டிருக்கும். நடக்கும் போதும், நிற்கும் போதும், இருதயம் சீக்கிரமாயும், படுத்துக்கொண்டிருக்கும் போதும், நித்திரை செய்யும் போதும் மெதுவாய் நடக்கும். இருதயத்தின் தொழில்—இருதயத்துக்கு கமலம் போல் விரிந்து குவிகிற இரண்டு தொழிலுண்டு, மேல் அறைகள் இரண்டும் ஏககாலத்தில் விரிந்து, ஏககாலத்தில் குவியும். கீழறைகளும் அவ்விதமாகவே விரிந்து குவியும். மேல் அறைகள் விரியும்போது, கீழ் அறைகள் குவியும்; கீழ் அறைகள் விரியும்போது மேல் அறைகள் குவியும்.

ரத்த ஓட்டம் (Circulation of the blood—ஸர்குலேஷன் ஆவ் தி பிளட்) இருதயத்திலுள்ள இடது பக்கமிருக்கிற சிவந்த ரத்தமானது, தேகமெங்கும் பரவி, உறுப்புக்களைப்போஷிக்கும். தேகத்திலிருக்கிற அப்பிரயோஜன பதார்த்தங்கள் ரத்தத்திற் கலந்து ரத்தம் கறுத்துவிடும். இவ்விதமாய்க்கறுத்துக் கெட்டுப்போன ரத்தமானது, இரண்டு பெருநாளங்கள் (Venae cavae--வீனிகேவி) வழியாய் இருதயத்தின் வலது சிரவத்திற்கு (Right Auricle—ரயிட் ஆரிகல்) வருகிறது. அதிலிருந்து வலது சடரத்திற்கு (Right ventricle—ரயிட் வென்டிரிகல்) இறங்கும். பிறகு அதிலிருந்து, புப்புஸ நாடி வழியாய் சுவாஸப்பைக்குட் செல்லும். சுவாசப்பையில் இந்தக்கெட்ட ரத்தமானது, காற்றுவாடைபட்டு தோஷம் நீங்கி சிவந்து நல்ல ரத்தமாகி விடும். இவ்வாறு பரிசுத்தப்பட்ட ரத்தமானது பிறகு புப்புஸ நாளங்கள் (Pulmonary veins—பல்மோனெரி வெயின்ஸ்) வழியாய் இடதுசிரவத்திற்கு (Left Auricle-லெப்ட் ஆரிகல்) வரும்; அதிலிருந்து இடது சடரத்திலிறங்கும். பிறகு அதிலிருந்து பெருநாடி [Aorta—எயார்ட] வழியாகச்சென்று தேகமெங்கும் வியாபித்து கெட்டுமறுபடியும் இருதயத்திற்கு வருகின்றது. இவ்விதமாக ரத்தமானது சதாகாலமும் தேகத்தைச் சுற்றிக்கொண்டே இருக்கின்றது. தாவரவர்க்கங்களிலுள்ள திரவப்பசை வரண்டுபோனவுடன் அம்மரஞ்செடி கொடிகள் எங்ஙனம் பட்டுப்போகின்றதோ, அது போலவே ரத்த ஓட்டம் இருக்கிற வரையில் பிராணனிருக்கும், அது நின்றுவிட்டால் பிராணன் போய்விடும். உற்றுப்பார்த்தால் உதிரமே உயிர்!

That Blood is life is true and sure,
Therefore, O Man! Preserve it Pure.



## மலேரியா என்னும் முறைக்காய்ச்சல்.

மலேரியா என்னும் முறைக்காய்ச்சல் வராமலே தடுப்பதைக் குறித்தும், வந்தால் அதற்குச்செய்யவேண்டிய சிகிச்சைகளைக் குறித்தும் ஜனங்களுக்குச் சாதாரணமாய்த்தெரியும்படி டாக்டர் Mr, U. ராமராவ் அவர்கள் எழுதுகிறதாவது.

1. இரத்தத்தில் அதை உறிஞ்சுகின்ற மிகவும் சிறிய கிருமிகள் இருப்பதால் இந்த முறைக்காச்சல் உண்டாகின்றது. இந்தக்கிருமிகள் இரத்தத்திலிருந்துகொண்டு விர்த்தியாகின்றன. மேற்படி கிருமிகளின் எண்ணிக்கை விஸ்தாரமான உடனே ஜ்வரத்தைக்கொண்டு வருகிறது.

2. மலேரியா கிருமிகள் இருப்பதின் முக்கியமான ஜாடையென்னவென்றால் சாதாரணமாய் தீர்மானிக்கக்கூடிய ஓர்விதமான ஜ்வரம் வருவது தான். இந்த ஜ்வரம் அடிக்கடி தணிந்துவிடுகின்றது. தேக உஷ்ணமானது ஒரு வேளை சமஸ்திதிக்காவது அதற்கும் கீழ் ஸ்திதிக்காவது வந்து மறுபடியும் உயரும். இந்த ஜ்வரம் வழக்கமாக ஏற்பட்ட காலக்கிரமங்களில் வரும். 24-மணிக்கு ஒரு தடவையாவது, 48-மணிக்கு ஒரு தடவையாவது, அல்லது 72-மணிக்கு ஒரு தடவையாவது வரும்.

3. எந்தவிதமான ஜ்வரமாயிருந்தபோதிலும் அதற்கு மூன்று நிலைமைகளுண்டு. குளிர்ச்சியான நிலைமை, வெப்பமான நிலைமை, வேர்வை விடும்படியான நிலைமை. குளிர்ச்சியான நிலைமையில் தேகமுழுமையும், தலை முதல் கால் வரையில், நடுக்கமுண்டாகும். இந்தக்குளிர்ந்த நிலைமையிலிருந்தும் உஷ்ணம் மாத்திரம் அதிகமாய்க்கொண்டுவரும். சிறிது நேரத்தின் பிறகு நடுக்கம் நின்றுபோம். உஷ்ணம் மாத்திரம் 103-அல்லது 104-சில வேளைகளில் 105-டிக்கிரி அல்லது அதற்கு மேலும் அதிகமாகும். சுமார் ஒரு மணி நேரத்தின் பிறகு உஷ்ண நிலைமை மறைந்துபோம் நோயாளிகளுக்கு விசேஷமாக வேர்வைவிட்டு ஜ்வரமும் சீக்கிரம் குறைந்து விடுகிறது.

### தடுக்கும் முறை.

4. முறை ஜ்வரம் தொத்து வியாதி. அது கொசுக்கள் மூலமாய்ப்பரவுகிறது. முறை ஜ்வரம் வந்திருக்கும் ஒரு மனிதனை ஒரு கொசு கடித்தால் அம்மனிதன் உதிரத்திலிருக்கும் கிருமிகளில் சிலது அக்கொசுவின் வயிற்றில் புகும். அது அனுபலிஸ் ஜாதியில் சேர்ந்தவை போன்ற ஓர்விதமான கொசு

வாயிருந்தால் அதனுடைய வயிற்றில் அந்தக்கிருமிகள் அபிவிருத்தியடைந்து வயிற்றிலிருந்து ரத்தம் வியாபிப்பதால் வாயின் எச்சலில் சேரும். அந்தக்கொசு ஒருவனைக் கடிக்கும்போது இந்த விஷபத்தை அம்மனிதன் ரத்தத்தில் பிரவேசிக்கச் செய்கிறது. பிறகு யாருடைய ரத்தத்திலிருந்து அந்த விஷம் எடுக்கப்பட்டதோ அவனுக்கு நேர்ந்த ஜ்வரம் போலவே இவனுக்கும் உண்டுபண்ணுகிறது. ஆகையால் மலேரியா ஜ்வரங்கள் கொசுக்கடியினால் தான் உண்டாகின்றன.

5. முன்னொரு காலத்தில் நினைத்திருந்தபடி நமக்கு மலேரியா ஜ்வரம் அசுத்தமான ஜலபானம் செய்வதினாலாவது, பூமியிலிருந்தாவது, அசுத்தமான நாற்றத்தைக் கிரகிப்பதினாலாவது உண்டாவதில்லை. ஜலமும் காற்றும் மலேரியாவுக்கு எவ்விதமாகச் சம்மந்தப்பட்டவையென்றால், அவைகள் மலேரியாவைக் கொண்டுவரும் கொசுக்களுக்கு இருப்பிடமாயிருக்கின்றன. மலேரியா ஜ்வரங்கள் கொசுக்கள் மூலமாய்த்தான் வியாபிக்கிறதென்பதும், ஒரு மனிதனிடத்திலிருந்து மற்றொருவனுக்கு வேறே எவ்விதமாயும் ஒட்டவைக்க முடியாதென்பதும் நிச்சயமாய்த் தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள்.

6 நல்ல ஒரு கொசுத்திரையில்லாமல் எப்போதும் நித்திரை செய்யக்கூடாது. உடம்பில் எங்கேயும் கொசுக்கடிக்காமல்-இருக்கும் பொருட்டு, உடுப்புகளைப் போட்டுக்கொள்ளாமல மாலை வேளைகளில் வெளியே போகவாவது, வீட்டின் தாழ்வாரத்தில் உட்காரவாவது கூடாது. வீடுகளின் வாசல்களையும் ஜன்னல்களையும் கொசுக்கள் வரவொட்டாமல் வலைகளால் மூடிவைக்கவேண்டியது.

7. பெரிய கொசுக்கள் நல்ல வெயில் பொறுக்கமாட்டாது. ஆகையால் அவை வெயில் வேளையில் வீடுகள், செடிகள் இன்னும் அப்பேர்ப்பட்ட இடங்களில் பதுங்கும். ஆகையால் மத்தியான வேளையில் இந்தக்கொசுக்கள் நம்மைக் கடிக்கும் என்றபயம் இல்லை. இந்த அனோபலிஸ் கொசுக்களின் முக்கியமான குணம் என்னவென்றால், சூர்ய அஸ்தமனத்திற்கும் சூர்யோதயத்திற்கு மத்தியில் ராத்திரி வேளையிலேயே எப்போதும் கடிக்கின்றன. ஆகையால் பகல் காலத்தைவிட இராத்திரியிலேயே மலேரியாஜ்வரம் வருகிறதென்ற பயம்ஜாஸ்தியுண்டு.

8. பாய்ச்சலில்லாத குட்டைகளை யெல்லாம் உலர்ந்த மண்ணால் நிறப்பிட வேண்டியது. வீடு சுற்றிலும் ஜலம் நன்றாய்ப்போகும்படியான ஜலதாரைகள் கட்டிவிட வேண்டியது.



வீடு எங்கும் உலர்ந்து இருக்கவேண்டும். வெளியே போக்க முடியாத மீதி ஜலம் இருந்தால் அதில் கொசுக்கள் உற்பத்தியாகாமலிருக்கும் பொருட்டு அந்த ஜலத்தினமேல் கிருஸனாயில் போடலாம். அந்த கிருஸனாயில் ஜலத்திலிருக்கும் புழுக்களைக் கொன்றுவிடுவதோடுகூட, ஜலத்தின் மேல் முட்டையிட வரும் பெரிய கொசுக்களையும் கொன்றுவிடுகிறது. மலேரியா ஜ்வரங்கள் இருப்பதாகத் தெரிந்தவிடங்களில் எந்த மாதிரியான நீர் தங்கலும் 10-நாள் அல்லது 14-நாள் நின்றிக்குமாயின் ஆரோக்கியத்திற்கு அபாயமாகவே நினைக்கவேண்டும்.

9 ஜலம் தங்கும்படியான உபயோகமற்ற உடைந்த வீட்டுச்சாமான்கள் அதாவது காலியான பூந்தோட்டங்கள், வெறும் தகர டப்பிகள் முதலானவைகளை ஜாக்கிரதையாய் அழித்துவிடவாவது அல்லது ஒழித்துவிடவாவது வேண்டியது. வீட்டின் உபயோகத்திற்காகத் தண்ணீரைக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு ஆதாரமான எல்லாத் தொட்டிகளையும் வாய்க்கால்களையும் குறைந்த பக்ஷம் 8-நாளைக்கு ஒரு தடவையாவது சுத்தி செய்யவேண்டியது. கனத்த ஒரு மழைபெய்தவுடனே தோட்டத்தின் நிலத்தைப் பரிசோதித்து அங்குமிங்கு மிருக்கும் சிறிய பள்ளங்களை யெல்லாம் நிறப்பிச் சமமாக்கவேண்டியது.

10. தும்பு சேர்ந்த உடுப்புகளையாவது திரைகளையாவது, ஆணிகளிலும் முளைகளிலும் தொங்கவிட்டு வைக்கக்கூடாது. இவைகளால் தான் முக்கியமாய்க் கொசுக்கள் வந்து சேருகிறது. ஆகையால் அவைகளை நன்றாய் மூடப்பட்ட பெட்டிகளில் வைக்கவேண்டியது.

11. எவ்விதமான புகையும் கொசுக்களை துரத்தி விடும். இன்னும் புகை ஜாஸ்தியாயிருந்தால் அவைகளை அடக்கிவிடும். கொசுக்களைக் கொல்லவேண்டுமென்றால், வீட்டின் சந்துகள் எல்லாவற்றையும் நன்றாய் மூடிவிட்டுப் புகை நேராய் அந்தக் கொசுக்களிடத்தில் சேரும்படி செய்யவேண்டியது. சாதாரணமாய் ஆட்சேபனை இல்லாததும் இந்துக்கள் எல்லா வீடுகளிலும் கிடைக்கக்கூடியதுமானது சாம்பிராணி, இதையும் மற்றும் கந்தகம், வேப்பிலை, புகையிலை முதலானவைகளையும் எரிக்கலாம்.

12. மலேரியா ஜ்வரத்தை வராமல் தடுப்பதற்கு எல்லாவற்றிற்கும் மேலானதும் நிச்சயமாய் நம்பக்கூடியதுமான வழியென்னவென்றால், இந்த ஜ்வரம் கண்டு இருக்குமிடத்தில் இருக்கும் வரையில் 7-நாளைக்கு ஒருமுறை இரண்டு அடுத்த நாளில் 10-க்ரெயின்ஸ் குயினா சாப்பிடவேண்டியது. மலேரியா கிருமிகள் சேர்ந்து இருக்கும் எல்லா மனிதர்களையும் குயினா கொடுத்துப் பரிசுத்தப் படுத்தவேண்டும்.

13. சிகிச்சை :—மலேரியா ஜ்வரத்தைச் சொஸ்தப்படுத்துவதற்கு குயினுதான் தகுந்த மூலிகை அதை முறைப்படி போதுமான அளவில் கொடுத்த விடங்களில் அது சொஸ்தப் படுத்தத் தவறினதேயில்லை. பெரியவர்களுக்கு ஜ்வரத்தின் எந்த நிலைமையிலும் 20-க்ரெயின்ஸ் குயினுவை எலுமிச்சம் பழம் ரசத்தில் சேர்த்துக் கொடுத்து விடலாம். முதல் தரம் கொடுத்த 6-மணி நேரத்திற்குப் பிறகு மறுபடியும் இன்னொரு தரம் 10-க்ரெயின்ஸ் கொடுக்கவேண்டியது. அம்மாதிரி 6-முறை ஆகும் வரையில் சாப்பிடவேண்டியது. அதன்பின் ஒருவாரம வரையில் 1-நாளுக்கு மூன்றுதரம் 2-க்ரெயின்ஸ் சாப்பிடவேண்டியது. வயிற்றைத் தள்ளும்படியான மருந்து ஏதாவது சாப்பிட்டு மலப் பிரவர்த்தி சரியாயிருக்கும்படி செய்து கொள்ள வேண்டியது.

டாக்டர், ப. ராமராவ்.

## வர்த்தமானங்கள்.

இங்கிலீஷ் பத்திரிகைகள் :—உலகத்திலுள்ள பத்திரிகைளில் 10068 இங்கிலிஷ் பாஷையில் பதிப்பிக்கப்படுகின்றனவாம்.

குருடர்களின் தொகை :—உலகத்தில் 10-லக்ஷம் பேர்களில் 60-பேர் குருடராயிருக்கிறார்களாம்.

உலகத்தில் செலவழியும் மிளகு:—வருஷந்தோறும் உலகத்தில் செலவழியும் மிளகின் விலை 7,50,500 பவுனுகிறதாம்.

வெள்ளை யானை:—சியந்தேசத்தில் ராஹெங் நகரையடுத்த வனாந்தரத்தில் 3 அடி உயரமுள்ள ஒரு வெள்ளையானைக்குட்டி பிடிக்கப்பட்டு பாங்காக் நகரத்துக்கனுப்பப் பட்டிருக்கிறதாம்.

விலையுயர்ந்த முத்து :—பம்பாய் வர்த்தகர்களிடம் ஒரு அழகிய நல்முத்து பரீக்ஷைக்காக வந்திருக்கிறதாம். 34-காரெட் நிறையுள்ளதும், முக்கால் அங்குலம் பருமனுமான இந்த முத்து ஜோதிமயமாய்த் தோன்றுகிறதாம். இதைவிடச் சிறந்த முத்து உலகத்தில் கிடையாதென்று கூறுகிறார்கள்.

பஸிபிக் சமுத்திரக் கரைக்கும் டென்வர் என்னுமிடத்துக்கு மிடையில் ஒரு ரெயில்வே போடப்படுகின்றதில் வேலை செய்துகொண்டிருந்த கூலிக்காரர்கள் ஒரு உப்புச் சுரங்கம் கண்டுபிடித்து இருக்கிறார்கள். 15-மைல் நீளமும் 8-மைல் அகலமும் அநேக அடி ஆழமுமாக தனி உப்புக்கட்டிகளாய் நிறைந்திருக்கின்றனவாம். இந்த இடத்தில் முன் ஒரு பெரிய உப்புக்கடல் இருந்ததாகவும், அந்தக் கடல் ஏதோ காரணத்தால் தானுகவற்றி விட்டபொழுது அதிலிருந்து உப்பு இவ்வாறு உறைந்து கிடப்பதாயும் ஊகிக்கப்பட்டிருக்கிறது.



ஓர் புதியதந்தி :—கம்பியில்லாத தந்தியில் (Wireless Telegraphic) ஒரு நிமிஷத்தில் 200-வார்த்தைகள் பேசப்படுகின்றன. இப்போது டாக்டர் வால்டிமார் பவுல்கன் என்பவர் ஓர் நவீனத் தந்தி கண்டுபிடித்திருக்கிறார். இங்கிலாந்தில் கூலர்கேட்ஸ் என்னுமிடத்திலிருந்து டென்மார்க் தேசத்திலுள்ள கோபன்ஹேகன் பட்டணத்திற்கு இத்தந்தியின் உதவியால் ஒரு நிமிஷத்தில் 200 வார்த்தைகள் பேசப்பட்டன. காலத்திற்கேற்கவே ஒவ்வொன்றும் புதிது புதிதாய்க் கிளம்புகின்றது.

கெரோஸின் எண்ணெக்குப் பதில் :—அமெரிக்கா தேசத்தில் ஒரு பரீக்ஷகன் கெரோஸின் எண்ணெக்குப்பதிலாக சுளுவான ஒரு பதார்த்தத்தைக் கண்டுபிடித்திருக்கிறான். இதைச் செய்வதற்கு டின் 1-க்கு ஒரு அணு விலையாகிறது. இதைச் செய்யும் விதம் சில மூலிகைகளால் ஒரு விதமான உப்பை உற்பத்தி செய்து, அந்த உப்பை ஜலத்தில் கரைத்தால் அவ்வளவு ஜலமும் எண்ணெயைப்போல் எரியக்கூடிய ஸத்துள்ளதாகிறதாம். கெரோஸின எண்ணெயைவிட மூன்று மடங்கு வெளிச்சத்தை இந்த உப்பு ஜலம் கொடுக்கிறதாம்.

ஓர் நூதன வியாதி:—கிளாஸ்கோ நகரத்தில் மூளைக்கலக்கம் என்னும் ஒரு வியாதி இப்பொழுது தொற்று வியாதிபோல் எல்லாரையும் பிடிக்கத்தொடங்கி விட்டது. ஜனவரிமாதத்தில் 103 பேர்களுக்கு இவ்வியாதி கண்டதில் 51 பேர்கள் மரணமடைந்தார்கள். தினந்தோறும் அதிகப்பேர்களுக்கு இவ்வியாதி காணப்படுகிறது. இது பாதிக்குமேல் பிள்ளைகளுக்குத்தான் வருகின்றது. மெல் பாஸ்டென்னுமிடத்தில் சமீபத்தில் இரண்டு குழந்தைகள் இறந்து போயின.

சமுத்திரத்தில் மண் எண்ணெ ஊற்றுகள் :—அரக்கன் கரையையடுத்த செடுபா என்னும் தீவுக்கூட்டங்களில் அனேகம் மண்ணெண்ணெய் ஊற்றுகள் உள்ளவைகளாயிருப்பதாகவும், அப்பகுதியில் எண்ணெய் ஊற்றுகளையுடைய தரை சமுத்திர மட்டத்திலிருந்து சொற்ப ஆழமட்டில் உயர்ந்திருப்பதாகவும், சமுத்திரத்தின் அடிவாரத்திலிருந்தும் எண்ணெய் ஊற்றுக்கண்கள்

திறந்து பொங்கி அப்பகுதிகளில் நீரோடு எண்ணெய் கலந்திருப்பதாலும், மரக்கலமோட்டுவோர் செடிபா தீவுகளை யடுத்துவரக் கூடாதென்றும், "கைபாக்பை" துறைமுகத்துக்குத் தெற்கிலிருந்துவிலகிப்போக வேண்டும் என்றும் கடலோடிகள் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

## விசித்திரவிஷயங்கள்.

லோர்ட் வால்சிங்காம் பிரபு 1888-ளு ஆகஸ்டுமீ 30வ வேட்டைக்குப்போய் ஒரே தினத்தில்தான் ஒருவராகவே நின்று 1058 பறவைகள் சுட்டுக்கொண்டு வந்தாராம்.

லிவர்ப்பூல் நகரத்தில் சமீபத்தில் நடைபெற்ற குதிரைப்பந்தயத்தில் ஒற்றைக்கண் பொட்டையான குதிரையே முதல்வெற்றிபெற்றதாம். அந்தப்பொட்டைக்குதிரையை ஓட்டிக்கொண்டு சென்றவனும் ஒருகண் பொட்டயனா யிருந்ததுமன்றி அதற்குடையவரும் ஒற்றைக்கண் பொட்டையனும்!

இடிவிழுந்த விநோதம் :—பிரான்சு தேசத்திலடித்த பெரும் புயலினால் ஒரு சமைக்காரன்மேல் இடிவிழுந்தபோது அவன் சற்றுங்காயப்படாமல் நிர்வாணமாக்கப்பட்டான். அவனுடைய காற்சட்டை, சப்பாத்து முதலியவைகள் பக்கத்தில் எரிந்துகொண்டிருந்தனவாம். அவனுடைய பாதங்கள் 4-அங்குலத்துக்கு நிலத்துள் தாழ்ந்திருந்தனவாம்.

விசித்திர விபரீதப்பிரவி:—உத்தகமண்டலத்திலொருவர் ஓர் பத்திரிகைக்கெழுதுகிறார். இரண்டு இருதயங்களுள்ள பிறவியைக்காண்பதரிது. ஆனால் இப்படி இவ்விடம் ஒரு பையனுக்கிருப்பதாக மூன்று வைத்திய பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். மற்றவர்களைவிட இவனுக்கு இரட்டிப்பு பங்கு கிடைத்திருந்தபோதிலும் அதனால் அவனுக்கு யாதொரு அசௌக்கியமுமிருப்பதாகத்தோன்றவில்லை.

மின் சார சக்தியால் ரொட்டி சுடுதல் :—ஸ்விட்ஸர்லாந்தில் கெர்ன்ஸ் பட்டணத்தில் ஒரு ரொட்டிக் கடைக்காரன் மின்சார சக்தியால் ரொட்டி சுட்டு விற்பனை செய்கிறான். அவனுடைய அடுப்பின் நீளம் 8 அடி, அகலம் 4 அடி. இதில் தனித்தனி 2 பவுன் நிறை ரொட்டிகள் 50 ஏககாலத்தில் வேகும். இவைகள் வேகப்பிடிக்கும் நேரம் $1\frac{1}{2}$-மணி. பன்னிரண்டு மணி நேரத்தில் 400 ரொட்டிகள்போல் சுட்டு விற்பனை செய்கிறான்.



இரட்டைத் தலையுள்ள பாம்பு :—ஒரிஸா மாகாணத்தைச் சேர்ந்த டால்கர் ராஜ்யத்தில் ஒரு தோட்டத்தில் இரண்டு தலையுள்ள ஒரு பாம்பு பிடிக்கப்பட்டது. அதற்கு 4-கண்களும், 2 வாய்களும், 2-நாக்குகளுமிருக்கின்றனவாம். நீளம் ஒரு அடியிருக்கிறதாம். அது பிடிக்கப்பட்டு 20-நாட்களாகியும் ஆகாரம் கிடையாதாம். என்றாலும் உயிருடன் சௌக்கியமாய்த்தானிருக்கிறதாம். இப்பொழுது டேல்கோ டிஸ்பென்ஸரியில் வைக்கப்பட்டிருக்கிறதாம்.

கென்ட் மாகாணத்திலுள்ள கௌடன் நகரில் ஒரு புறா தினமும் இரண்டு மைலுக்கப்பாலுள்ள நாட்டுப்புறத்துச் சிறுவனைப்பின் தொடர்ந்து, பாடசாலைக்கு வந்து அச்சிறுவன் திரும்பும்போது தானும் திரும்புகிறதாம். அதுமட்டிலும் அப்புறா பாடசாலை இரைச்சலுக்கஞ்சாது பாடசாலைக்குள் குந்தியிருப்பதுமன்றி, உபாத்தியாயர் ஆர்மோனியம் என்னும் வாத்தியம் வாசிக்கும்போது, ஆர்மோனியப்பெட்டி மேலுட்கார்ந்து கேட்டுக்கொண்டிருக்குமாம்.

## வைத்திய குறிப்புகள்.

1. மேகரணத்திற்கு:—துரிசு பலம் 1 சுண்ணாம்பு பலம் 1 விளக்கெண்ணெய் விட்டரைத்துத் தடவிப்போடவும்.

2 நெருப்புப்பட்ட புண்ணுக்கு:—ஊமத்தை இலைச்சாற்றில் நல்லெண்ணெய் கலந்து பூசவும். செம்பை இலைச்சாற்றில் நல்லெண்ணெய் கலந்து தடவவும். ஆவரங் கொழுந்தையும் நல் நல்லெண்ணெயும் கலந்து தடவவும். பசலை இலையை மோரில் அரைத்தும் பூசலாம்.

3. காதில் சீழ்வடிகிறதற்கு:—சாதிகாரத்தம்பழரசம், எலுமிச்சம்பழரசம், பசுமஞ்சள்ரசம், ஆதண்டைச்சாறு, பசும்பால், நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், நெய்வகைக்குச்சேர் 1, அரத்தை 2, மரமஞ்சள், சதகுப்பை வகைக்கு பலம் 5. இவற்றை பதமாய்க் காய்ச்சி எடுத்துவைத்துக்கொண்டு தலை முழுகவும்.

4. இரத்தவாந்திக்கு:—பசுவின்நெய் சேர் $\frac{1}{4}$, எலுமிச்சம்பழச்சாறு சேர் $\frac{1}{4}$, இவற்றைக்கலந்து மூன்று நாட்களுக்குகொடுத்து வர இரத்தவாந்தி நீங்கும்.

5. மண்டையிடி, மண்டைக்குத்து. ஒற்றைத்தலைவலி இவைகளுக்கு:—நெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண

ணெய், வகைக்குப்பலம் 3 இந்திரமூலம், கஸ்தூரிபணவெடை 1, கரிசிலாங்கண்ணிச்சாறு சேர் 5. இவற்றைச்சேர்த்துப் பதமாய்க்காய்ச்சி வடித்துத்தலை முழுகவும்.

6. மூலம், கிராணி, வயிறுகடுப்புக்கு:—கொம்பரக்கு, குந்தரிகம்பிசின், அதிவிடயம், குராசாணிஓமம், ஜாதிக்காய், அபினி இவற்றை வறுத்து நல்லெண்ணெய் விட்டரைத்து இம்மருந்தினையுட்கொள்ளவும். மூன்று நாள் வெந்நீர் சாதம் சாப்பிட கிராணி, வயிற்றுக்கடுப்பு முதலியன தீரும்.

7. சுரத்திற்கு:—பூரம் விராகனெடை 5, சுத்திசெய்தவெள்ளைப் பாஷாணம் விராகனெடை $1\frac{1}{4}$, இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றாலரைத்துப் பயரளவு உட்கொள்ள ஜுரம் தீரும்.

8. சூட்டுக்கு:—சீரகம் பலம் 5, மிளகு படி $\frac{1}{8}$, கிராம்பு பலம் $\frac{1}{5}$, சாதிக்காய் பலம் $\frac{1}{4}$, இவற்றைச் சோற்றுக்கற்றாழைச் சாற்றில், நாரத்தம் பழச்சாற்றில் எட்டுநாளூரப்போட்டுக் காயவைத்துப் பிறகு நான்கு நாட்களூறப்போட்டுக் காயவைத்து பனவெல்லம் பலம் ஒன்றுகூட்டி, இவற்றைப் பசுநெய்விட்டரைத்துத்தேற்றாங்கொட்டை விதம் சாப்பிடச் சூடு தீரும்.

---

பாரிசவாய்வுக்கேற்ற அனுபோக முறை:—இந்நோயானது சாதாரணமாக வாத பூமியில் வாசஞ் செய்வோருக்கும், வாததிரேகிகளுக்குமே அடிக்கடி வந்து தோன்றும். இது மகா கொடிய நோய்களிலொன்றென்பதற்குச் சந்தேகமில்லை. அண்டவாய்வானது மேக நீரின் காரணத்தினால் நரம்பில் வீக்கந்தோன்றி, அதுவே குத்தும் குமரலுமாய் மகாவேதனையைக்கொடுக்கும். உடனே அதற்கோர் மருந்து சாப்பிடாவிட்டால், அவ்வீக்கமே யிருக்க யிருக்க அவ்வுருவத்தை யண்டத்தை யொத்த பிண்டமாக வாக்கி விடுமென்பது உண்மை. நாமறிந்த மட்டில் இந்நோயானது, சென்னை, திருவல்லிக்கேணி பாகங்களில் வாசஞ்செய்வோருக்கும், இலங்கை தென்பாரிசமாகிய காலி (Galle) யிலும் மற்றும் வாத பூமியில் வாசஞ்செய்வோருக்கும் (எவ்வளவு பக்குவமாக விருந்தாலும்) சாதாரணமாக உற்பத்தியாகுமாகையால் இந்நோய் கண்டவுடன் கீழ் கண்ட சுலபமான முறையை உபயோகிக்கவும். அதாவது ஒருகோழி முட்டையில் சிறு துவாரஞ்செய்து அதற்குள் இரண்டு மிளகெடை அளவில் (பிரமாணத்தில்) சுத்தமான பெருங்காயத்தை உட்செலுத்தி மேற்படி துவாரத்தை மாவினாற் பொதிந்து முழுவேக்காடாக வேகவைத்து, உதயத்தில் பல்லிற்படாமற் சாப்பிடவேண்டியது. முட்டை சாப்பிட்ட ஒரு மணி நேரத்திற்குப் பிறகு காப்பித்தண்ணீராவது மற்றும் ஏதாவது சாப்பிடவேண்டியது. இவ்வண்



ணம் 16-நாளைக்குச் சாப்பிட்டு வந்தால் எப்பேர்ப்பட்ட வாயுவையுங்கண்டித்து, சென்றது போக மிச்சத்திற்குச் சுகத்தைக் கொடுக்கும். பத்தியம் யாதொன்றுமில்லையென்றாலும் வாய்வு பதார்த்தங்களையும், கெடுதலான செய்கைகளையும் விலக்கிவைத்தலுத்தமம். முட்டை வாய்வுகுண முடையதென்றாலும், காரஞ்சேருகிறபடியால் வலுவைக் கொடுத்து வாய்வைக் கண்டிக்குஞ்சஞ்சீவியாகும்! (S. V. மாரல், புதுப்பேட்டை, சென்னை.)

---

## நமது “வைத்திய போதினி”.

நம் இந்திய நாடு க்ஷேமமடைவதற்கு இன்றியமையாத முதற்காரணம் தேசாபிமானமும், அவ்வபிமானம் உண்டாவதற்கு பத்திரிகாபிமானமும் அவசியம் வேண்டுமென்பது யாவரும் அறிந்ததே. இவ்விதக்குறைவுகள் நம்மிடம் இருக்கின்றமையினாலேயே நம் எண்ணம் கை கூடவில்லை. நமது சரீர மனோசக்திகள் பெலங்குன்றி நிற்கின்றன, சுயநலவெறுப்பும் பொது நல விருப்பும் இன்னும் வரவேயில்லை. நம்மோர்களில் மிகச்சிறந்தவர் என்று பெயர் எடுத்து இருப்பவர்களுங் கூட தோத்திரப் பிரியரும் பிறரைக்கெடுத்து வாழ்கிறவரும் அனாதைச் சொத்துக்களை அபகரிக்கிறவரும் அகிர்த்தியக்காரரும், விபசாரம், வேசித்தனம், ஜாதிபேதம் சமயபேதமுடையோரும், தான் சரியாய் வாழ்ந்தால் போதுமென்று நினைக்கிறவருமாயிருக்கிறார்களேயன்றி, உண்மையாய்ப் பொது நலத்திற்கும் சத்தியத்திற்கும் உழைப்பவர் ஆயிரத்துள் ஒருவரேனுங்கிடைப்பது அருமையாயிருக்கிறது. அன்றியும் தாம் அறிந்துள்ள அற்ப விஷயங்களையும் பிறருக்குச் சொல்லக்கூடாதென்னும் பொறாமையானது பூரணமாய் ஒவ்வொருவரிடத்திலும் குடிகொண்டிருக்கிறது இவ்விதக் குறைவுகளாலேயே நம்தேயம் அபிவிர்த்திக்குக் கூடவில்லை. சில ஆண்டுகளுக்குமுன் சில உத்தம சீலர்கள் எழுந்து இத்தகைய நம் நாட்டின் நிலைமையை நன்கு ஆராய்ந்து இவைகள் நீங்குவதற்கேதுவாக ஒருவர் அறிந்திருக்கும் அரிய விஷயங்களை பகிரங்கமாய் யாவரும் அறியும்பொருட்டு பத்திரிகைகள் நடத்த ஆரம்பித்தனர். பொதுவாய்ப்பத்திரிகையாலடையும் அபாரநலங்களனந்தம். ஒருவன் எவ்வளவு மந்த சுபாவமுடையவனாயிருந்தாலும் நாளடைவில் அவனுடைய அறிவை முதிரச்செய்து அவனைத்தக்க அறிவாளியாக்குவது பத்திரிகையே என்பதைப் பிரத்தியக்ஷமாய்க் காண்கிறோம்! ஒருவனுக்குள்ள கொடிய குணங்களைக்களைவதற்கும், பத்திரிகையில் பெரிதும் மேதாவிகளின் நோக்கம், நடையுடை, பாவனை, திறம் முதலியவனவே பொதிந்து கிடக்கின்றமை

யால், தாமும் அதனில் ஈடுபடவேண்டுமென்னும் மனவெழுச்சிக்கும் அப்படியே அவ்வரிய பழக்கங்களைத்தாமும் பெற்று மேதாவிகளாவதற்கும் இன்றியமையாத துணை பத்திரிகையைத்தவிர வேறில்லையென்பது தேற்றமே. இத்தகைய நிரந்தரமான பயனைத்தந்து நிற்பனவும் நம் நாட்டில் நடைபெறுவனவுமான பத்திரிகையில் எப்பத்திரிகையாயிருப்பினும் அவையெல்லாம் மென்மேலும் செழிந்தோங்குக.

பொதுப்பட பத்திரிகையின் குணம் இவ்விதமிருப்பின் அதிலும் இவ் "வைத்திய போதினி" முதலான இவைபோன்ற சர்வோத்கிருஷ்டமானதும், லோகோத்தாரமானதுமான பத்திரிகையின் பான்மையைப்பகரவும் பெறுமோ. இவ் வைத்திய போதினியின் நன்னோக்கம் இதன் பெயரே நன்கு விளக்கும், அன்றியும் அறிவாளிகளால் ஏனைய பத்திரிகையின் பாராட்டுங்குன்றித் தற்காலம் இதுவே தலையெடுத்து நிற்பதே போதுமானதாயிருக்கிறது. இதில் யாவரும் சுகபாக்கிய போக்கிஷத்தை அடையும் வழியும் விசேஷமாக வைத்திய சாஸ்திராநுசாரமான விஷயங்களும் நிரம்பி இருக்கின்றமையால், இஃது யாவருக்கும் இன்றியமையாத் துணைக் கருவியாயிருக்கிறது. அவற்றிலும் அரிய சித்திரப்படங்களுடன் வியாக்யானப்படுத்துவதில் பத்திராதிபரின் வித்வசாமர்த்தியமும் அரிய பெரியநூற்களில் தாம் அடைந்திருக்கும் அநுபவங்களைத் தெள்ளி தினுணர்த்தும் போதனை நுணுக்கமும் பார்ப்போர்க்குத்தெற்றெனவிளக்காமலிரா.

சில பத்திரிகைகள் எடுத்தளவில் பிரீதியைக்கொடுத்து பின்னர் நாளுக்குநாள் குறைந்து இருந்த இடமும் தெரியாமல் போய் விடுகின்றன. அவைகளெல்லாம் பத்திரிகைகளுக்கு அழகன்று, ஒவ்வொருவரையுந் தேடிவரும் பத்திரிகையானது நண்பரைப்போன்றது. "கற்றறிந்தோர் கேண்மை நுனியிற் கரும்பு தின்னற்றே" என்பதுபோல் ஆரம்பத்தில் சிறிதாகவும், நாளடைவில் பெரிதாகவும் விர்த்தியடைவிக்க வேண்டுமென்னும் பத்திராதிபரின் கருத்து எளிதில் யாவருக்கும் விளங்கும்.

இவை நிற்க:—லோகோத்தாரமான பத்திரிகா நிர்வாகத்திற்கும் பிரதானம் சந்தாநேயர்களின் பேருதவியேயாகும். இவ்விதப் பத்திரிகையாகிய உடலுக்கு உயிர்போன்ற நண்பர்களாகிய நாமெல்லோரும் இதுகாறும் இதன் அருமையான தோழமை பெருவிடினும், உடனே பெறுவதுடன் நாம் அடையும் இன்பத்தையே நம்மைச் சார்ந்த பல்லோர்க்கும் அடைவிக்கவேண்டியது. கற்றோர் கடனாதலின் யாவருக்குங் காண்பித்து அபிவிர்த்திசெய்யவும் நமது கடமையினும் முக்கிய கடைமையே. சர்வகலா சாலையிற் பயின்ற ஆங்கிலேய விற்பனருக்கும் இப்பத்திரிகை பயன்படத்தக்கதே. எனெனில் தமிழின் விர்த்திக்கும் அஞ்ஞான அந்தகாரத்தில் ஆழ்ந்தியிருக்கும் தம் மனைவி மக்கள் சகோதரர் சகோதரிகள் முதலோர்க்கு அறிவு ஊட்டுதற்குமென்க.

இங்ஙனம்,

**M. S. சுந்தரமாசாரி,**

மார்க்கயன்கோட்டை.



## பழங்களிலும் மின்சாரமிருக்கின்றது.

உலகத்து மாந்தர் பல்லோருக்கு அதியாச்சரியமான ஆநந்தத்தையும், இலாபங்களையுந்தருவதான வேலையைச்செய்து ஜன சமூகத்திற்குப் பெரிதும் உற்றதாயிருக்கிற மின்சாரசக்தியின் வல்லமையைப்பற்றி நம் பூர்வீக ஆரியர்களே நன்கு அறிந்து காரியங்கள் செய்திருக்கின்றார்களென்பதற்கு ஆதாரங்கள் வேண்டிய வளவு இருக்கின்றன. ஜைன விக்கிரகம் ஒன்று நாகப்பட்டணத்திலிருந்ததும், அதைக் களவாடிக்கொண்டு ஸ்ரீரங்கம் சேர்க்க திருமங்கைமன்னன் போந்து அதனைத்திருடிக்கொண்டு ஸ்ரீரங்கம் சென்று நம்பெருமானுக்குத் திருமதில் கட்டுவித்ததுமான கதையைக்கேட்டவர்கள் இப்போதைய மின்சாரசக்தியை மிகுதியும் வியக்கமாட்டார்கள். அப்போது எலக்டிரிக்வல்லமையால் ஜைனப்பொன் பிம்பம் "ஈயத்தாலாகாதோ இரும்பினாலாகாதோ, பூயத்தால் மிக்கதொரு பூகத்தாலாகாதோ, தேயத்தேபித்தளை நற்செம்புகளாலாகாதோ விம், மாயப்பொன் வேண்டுமோ மதித்தென்னைப் பண்ணுகைக்கே" என்று மொழிந்து ஸ்ரீ ஆழ்வார் மைத்துனன் அதனை அபரிசுத்தப்படுத்தலும் ஓடுதலும் பேசுதலுமொழிந்து பொட்டென விழுந்திட்டதென்றால் அக்காலத்து இம்மின்சாரசத்தி எத்துணை யற்புதமான வேலைகளில் நம்மவர்களால் உபயோகப்பட்டிருப்பதென்பது எவருமெளிதிலறியலாகும். அப்பேர்ப்பட்ட ஜாதியார்களாகிய நாமே இப்போது பிறர் செய்வதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, நாமும் எதுவும் தெரியாதவர்போன்று காலங்கழிக்கின்றோம். இதுவொரு விஷயமே பூர்வகாலத்திய நம்மவர்களுக்கும், இக்காலத்திய நம்மவர்களுக்கும் உள்ள பேதத்தைத் தெற்றென விளக்கிக் காட்டுகின்றது. மின்சார சாஸ்திரம் போன்ற எல்லாச் சாஸ்திரமும், நம்மிந்துக்களறியாததில்லையானாலும், அதனை அக்காலந்தொட்டு அநுபவமுறையில் கையாண்டு வழக்கத்திற் கொண்டுவருபவரில்லாது போனதே நமது ஜனசமூகத்தில் ஓர் பெருங்குறையும், பெருத்த அறியாமையுமாய் நின்றிருக்கின்றது.

மின்சார சக்தியினால் வண்டிகள் ஓடுவதும், செய்திகள் போக்குவரத்து செய்வதுமான அபூர்வகாரியங்களும், இன்னும் எவ்வளவோ மகத்தான காரியங்களும் நடக்கின்றனவென்பது உலகப் பிரசித்தமே. ஒன்றுடன் மற்றொன்று உராயப்படின் மின்சாரசத்தி எதனிடத்துமுண்டாகிறதென்பது பலரும் அறிந்த விஷயமாயிருக்கிறது. ஏறக்குறைய எல்லாப் பொருள்களிலும் இப்படி மின்சார சத்தியுளதென்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பினும் பழவகைகளில் மின்சாரசக்தியுளதென்று இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை. ஏறக்குறைய எல்லாப் பழவகைகளிலும் இச்சத்தியுண்டெனவே கொள்ளல் இன்றியமையாததாயிருக்கின்றது. திராட்சைப் பழங்களென்ன, முத்துக்கொட்டை, இலுப்பைக்கொட்டை, கொட்டைப்பாக்கு முதலியவைகளென்ன, இவைகளிலெல்லாவற்றிலுமே இம்மின்சார சக்தி பரவியுள்ளதென்று ஒரு ஐரோப்பிய மின்சார சக்தி வல்லுநர் கண்டு பிடித்திருக்கிறதாகத் தெரியவருகிறது. அநேகர் பழங்களிற்கூட மின்சாரம் இருக்கிறதா என்று ஆச்சரியப்படுவார்கள். இப்பழங்களும், கொட்டைகளும், ஏறக்குறைய காய்கறி பதார்த்தங்களும் இம்மின்சார சக்தியின் மூலஸ்தானமென்றே சொல்லும்படியாயிருக்கிறது. மேற்கூறிய பழங்களிலும், காய்கறி பதார்த்தவகையராக்களிலும் இம்மின்சார சத்தியுள்ளபோதிலும், அவ்வப்பழங் கொட்டை பதார்த்தவகைராக்களின் தன்மைகளைப் பொறுத்து அம்மின்சார சத்தியாங்காங்கு குடிகொண்டிருப்பதைப் பரி

சோதித்துப்பார்க்க ஒரு இலேசான (Galvanometre) கால்வனுமீடர் என்று சொல்லும்படியான மின்சாரமளக்குங் கருவிதேவையாகும்.

பூமியி லெப்போதும் ஒருவிதமான (Negative Electricity) எதிர்மறை மின்சார சத்தியும், காற்றில் உடன்பாட்டு (Positive Electricity) என்றதோர் மின்சார சத்தியும், இயற்கையாய் வியாபித்திருக்கின்றன. தண்ணீரின் உதவியே பூமியில் வித்யுத் (Electricity) நிலைகொண்டிருப்பதற்குற்ற காரணமாகும். அம்மாதிரியான வித்யுத் சக்தி பூமியிலுள்ள தண்ணீர் ரூபமாம். அச்செடி கொடிகளிலுள்ள பதார்த்தங்களில் ஸாரமாய் ஏறி நிற்கிறது. செடிகொடி வகையராக்களின் வளர்ச்சியில், பூமி மின்சாரசத்தி கொண்டிருக்கிறவரையில் அச்செடி கொடிகளில் ஸாரம் பிரவகித்து வருவதாகும். செடியின் சில பாகங்கள் மின்சார சத்தி கொண்டிருக்கும் சிறிய அறைகளாயிருந்து வருகையில், அச்செடிகளில் மின்சார சத்தி கொண்டிருக்கு மடியிட மொன்றுவது பூமியுடன் சம்பந்தப்பட்டும் இவற்றிற் செல்லாம், பாஸிடிவ் எலெக்டிரிஸிடி கொண்ட காற்றும், ஒருபுறத்தில் மரங்களினிலை வளர்ச்சிக்காவது, பழம் காய்களின் வளர்ச்சிக்காவது காரணபூதமாய் விளங்கும். இயற்கையாய்ப்பூமிக்கும் செடி கொடிகளும் சம்பந்தப்படுத்தும்படியாய் வியாபித்திருக்கும் மின்சார சத்தி அச்செடி இயற்கையாய் ஒடிந்தாவது, அழிந்தாவது, மனிதரால் அருக்கப்பட்டாவது கீழ் விழுகிறவரையில் அவைகளுள் பொருந்தியிருக்கின்றது.

பழ வகைகளில் மின்சாரசக்தி பொருந்துவது மிகவும் சாதாரணமேயாம். பூமியிலுள்ள வித்யுத்சக்தியும் ஆங்குள்ள நீர் ஈரத்துடன் சம்மந்தப்பட்டு அச்சக்தி பூமியில் ஈரமுள்ள வரையில் செடியிலுள்ள பழங்களில் இலேசாய் வியாபித்து நிற்றல் எளிதாகின்றது. காய்ந்த மணல் இச்சத்தியைப் பரவச்செய்யும் சுபாவம் பொருந்தியில்லாததானது, செடிகொடிகள், பூமியில் ஈரமில்லாது போகுங்காலத்தில் தளிர்க்காது அழிந்து போவது நிதர்சனமாகக் காட்டும். பூமியிலுள்ள நீரே, செடியின் ஒவ்வொரு பாகத்திலும் வியாபிக்கும் ரஸம் அல்லது ஸாரத்தின் பிரவகித்தலுக்குக் காரணமாகி இவ்வீரமே ஸாரமாகி செடிகளின் நுனிவரையில் புகுந்து பாய்வதாகின்றது. பின்னர் இலைகள் தளிர்க்க ஆரம்பிக்கப் பூமியிலிருந்து சத்தி அதில் தாக்குகிறது. இலைகள் நன்றாகத்தளிர்க்கவும், அவற்றில் வித்யுத்சத்தி பிரவேசிக்க புட்பங்களும் அச்சத்தி மகிமை கொண்டு தாராளமாய் பூப்பனவாகின்றன. இப்படியே காய் காய்த்துப் பழம் பழுக்கையிலும் இச்சத்திகளுதவிகொண்டு தான் அவைகள் இயங்குகின்றன. இவ்வாறு பழங்களில் இம்மின்சாரசத்திகள் பொருந்தியிருப்பனவாகக் கண்டுபிடித்தவர் சீமை இலந்தைப் பழங்களிலும், இரண்டாவதாக கிச்சிலிப்பழங்களிலும் (Apples and Oranges) விசேஷமான மின்சார சக்திகள் பொருந்தி யிருப்பனவாகவும், அவைகளில் மின்சார சக்திகள் தங்கு மறைகளே பிரத்தியேகமா யிருப்பனவாகவும் கண்டுபிடித்தார். எவ்வெப்பழங்களில் உட்பாகம் பகுதி பகுதியாய்ப் பிரிக்கப்பட்டு சாராம்சங்கள் மிகுந்திருக்கின்றனவோ, அம்மாதிரியான பழங்களில் விசேஷமான மின்சார சக்திகள் பொருந்தியிருப்பதாகவே கண்டுபிடிக்கப்பட்டது. பேரிப் பழங்களிலும், இவை போன்ற பழங்களிலும், பரீக்ஷார்த்தமாகப் பாதியாகப் பகிர்ந்து பார்த்தால், ரசாயன பரீக்ஷகர்கள் அவைகளில் இச்சத்திகள் எம்மாதிரியாய்ச் சேமித்து வைக்கப்பட்டதென்பதறிவார்கள்.



இப்பேர்ப்பட்ட பழங்களில் இருப்பதுபோல வெகுவாய் இல்லாமற்போனபோதிலும், காய் கறிகளிலும் ஏதோ கொஞ்ச பாகமாவது மின்சாரசத்தி பொருந்தியிருக்கின்றது. ஈசுவர சிருஷ்டியில் இயற்கையாய் இப்பழவகையராக்களில் அமைந்திருக்கும் அறியற்புத சக்திகளையறிந்து உள்ளுக்குச் சௌகரியமாய் அவைகளை உபயோகப்படுத்தி திடகாத்திர சரீரங்கள்பெற இம்மின்சார ஆராய்ச்சிக்காரர் எவ்வளவோ காரியங்கள் செய்யலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்கள் இப்பழங்களிலும் காய்கறி வகையராக்களிலும் செய்யும் இச்சோதனைகள் முற்றுப்பெற வேண்டுமென்பதே எல்லாருடைய கோரிக்கையுமாம். (நாகரீகன்.)

---

1. வைத்திய போதினியின் ஜூன்மீ பத்திரிகையில் V. A. கேசவன் என்று கையொப்பமிட்டு எழுதியிருக்கும் விடுகதைகளுக்கு விடை.

(a) மதலை......துன்பமானால் இப்பூமண்டலத்தில் மானிட ஜன்மம் எடுத்து வரும் ஜனங்கள் எல்லாம் தாம்தாம் தங்களுக்கு மகவை பெறும்வரை துன்பமில்லை. குழந்தையை பெற்று, பெற்றோர் என்று பெயர் வரும் பரியந்தம் மிகுந்த சந்தோஷமாக இருக்கலாம்.

(b) எங்கள்......கறக்கும், கள்ளி.

## விடுகதை வினா.

ஓர் மனிதன் 25 மாங்கன்கள் கொண்டுவந்தான் அவன் அவைகளை பனிரெண்டு வரிசைகளாகவும், மேலும் வரிசை ஒன்றுக்கு 5 மாங்கன்கள் வீதம் வைக்கவேண்டும் என்று யோஜித்து அப்படியே செய்தான். ஷை 25 கன்களை எப்படி 12 வரிசைகளாகவும் வரிசை ஒன்றுக்கு 5 மரங்களாகவும் வைக்கக்கூடும். (வீ. ஆதி, தஞ்சாவூர்.)

## CONUNDRUMS.

I am not very big. I am not very old.
But I will do. What I am told.
And tell me who I am. (V. A. KESAVAN.)

## ஞானம்.

நாம் இந்த உலகத்தைக் காட்சியாலறிந்து உலகத்துக்குக் காரணம் உண்டென்று யுக்தியாலறிகிறோம். உலகத்துக்குக் காரணம் மனுஷீகமானது அல்ல என்பது நிச்சயமானதால் அக்காரணம் தெய்வமேஎன்று அனுமானிக்கிறோம்.

உலகத்துக்குத் தெய்வமே காரணமானதால் நாம் இருப்பதற்கும், கண், வாய், கை முதலியதைப் பெற்றிருப்பதற்கும் தெய்வமே காரணம் என்று யுக்திப்பிரமாணத்தால் அறிகிறோமல்லவா? மனச்சாட்சி எனும் பிரமாணத்தாலோ இன்னொரு அறிவுவரும். பாவம் செய்வதோ சன்மார்க்கமாய் நடப்பதோ, எது நமக்கு கடமை என்று கேட்டால் பாவம் அல்ல சன்மார்க்கமே கடமை என்று மனச்சாட்சி திட்டமாய் அறிகிறது. ஆகையால் பாவ உபயோகத்துக்காக அல்ல.

## ஹாஸ்ய துணுக்கு.

### 103-வது பக்கத்தின் தொடர்ச்சி.

ஓர் உபாத்தியாயர் தன்னிடம் வாசித்து வரும் பிள்ளைகளில் ஒருவனைப்பார்த்து என்னடா பையா நான் கேழ்க்கப்போகிற கேழ்விக்கு உத்திரம் அளிப்பாயா என, பையன் அப்படியே செய்கிறேன் எனவும்,

உபாத்தியாயர் "கேள்வி" சர்க்கரை என்ன மாதிரி இருக்கும் சொல் என்றார்.

பையன்:—என்ன சார் இதுதானா ஓர் பெரிய கேழ்வி இது எனக்குத்தெரியாதா என்று சர்க்கரை, இஞ்சியைப்போல் புளித்துக்கொண்டிருக்கும் என்றானாம்! இதற்குள் மற்றொரு பையன் எழுந்திருந்து உபாத்தியாயரைப் பார்த்து என்னசார் இத்தனை நாள் தங்களிடம் கல்வி கற்று இன்னும் சர்க்கரை, இன்னதென்று உணராமல் சர்க்கரையை கடுக்காயாக நினைத்து இஞ்சியைப்போல் புளித்துக்கொண்டிருக்கும் என்று சொல்கிறான் என்றானாம்! (வீ. ஏ. கேசவன், தஞ்சை.)

**அடியில்கண்ட சந்தாத்துகைகளை வந்தனத்துடன் வரப்பெற்றோம்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Mr. | கோதண்டபாணிமூப்பனார் | ரூ. | Mr. | ஐயாசாமிராவ் | ரூ. |
| ,, | K. S. Raj & Co. | 1 | ,, | சு. சிவசிதம்பரம்பிள்ளை | 1 |
| ,, | வெள்ளையநாடார் | 1 | ,, | T. மாசிலாமணி | 1 |
| ,, | S. R. ரெங்கசாமிஐய்யர் | 1 | ,, | K. கோவிந்தராஜா | 1 |
| ,, | G. Z. Thomes | 1 | ,, | Thomas (Nazarath) | 1 |
| ,, | V. C. Narayanasawmy | 1 | ,, | Joseph V. Fernandez | 1 |
| ,, | G. ராமானுஜம்ஐய்யங்கார் | 1 | ,, | S. V. நடராஜய்யர் | 1 |
| ,, | P. அனந்தநாராயணஐய்யர் | 1 | ,, | S. N. சுந்தரேசஐய்யர் | 1 |
| ,, | C.S. Ramachandra Iyer | 1 | ,, | S.P. கல்யாணசுந்தரஐய்யர் | 1 |
| ,, | V. பஞ்சாபகேசய்யர் | 1 | ,, | தி. ந. தியாகராஜய்யர் | 1 |
| ,, | J. Sammuel | 1 | ,, | ஜான்தெய்வசிகாமணி | 1 |
| ,, | K. V. கந்தையா | 1 | ,, | M.V. வெங்கிட்டராமய்யர் | 1 |
| ,, | D. Thomas | 1 | ,, | M. Bastian Pinjora | 1 |


## கர்மயோகி

### ஓர் மாதாந்தப் பத்திரிகை.

ஆரியதர்மம், பாரதநாட்டுக்கலைகள், தொழில்கள், காவியங்கள், சாஸ்திரங்கள், ராஜாங்க விஷயங்கள் முதலானவற்றை யெல்லாம் பற்றி விவரிக்கும். யாவரும் வாசித்து எளிதிலுணரத்தக்க விதத்தில் சாதாரணமான இனிய தெளிய தமிழ் நடையில் எழுதப்படுவது. இதைவிட அருமையானதும் குறைந்த சந்தா உள்ளதுமான பத்திரிகை தமிழ் நாட்டில் வேறே கிடையாது. மாதிரிப் பத்திரிகை வேண்டுவோர் காலணாக் கார்டு எழுதினால் உடனே அனுப்பப்படும்.

### சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களுக்கு 1-வருஷம் ரூபா 2—0—0. 6-மாதம் ரூபா 1—4—0. பினாங்கு, சிங்கப்பூர் முதலான இடங்களுக்கு ரூபா 3—0—0. தனிப்பிரதி அணா 4.

"கர்மயோகி" பத்திரிகைக்குத் தமிழ் நாட்டிலும், வெளித்தேசங்களிலுள்ள தமிழ்க் குடியேற்றங்களிலும் ஏஜெண்டுகள் வேண்டும். ஏஜெண்டுகளுக்குத்தக்க சம்பளங்களும், கமிஷன்களும் கொடுக்கப்படும்.

தாம் இதுவரை சந்தாதாரில்லாவிட்டால் உடனே ஒருபோஸ்டுகார்டு எழுதி பெயரை பதிந்துகொள்க.

**மானேஜர், "கர்மயோகி காரியஸ்தலம், புதுச்சேரி.**





## சுத்தமான வெள்ளிப் பாத்திரங்கள்.



கூஜா, டம்ளர், சொம்பு, பஞ்சபாத்திரம், கிண்ணி, டீசெட், காப்பு, புதுச்சேரி கொலுசு, பட்டை கொலுசு முதலியவை மிகவும் நேர்த்தியான வேலைப்பாடுள்ளவைகளாய் விற்பனைக்கு தயார் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. வேண்டியவர்கள் உடனே எழுதவும்.

**V. B. வெங்கடேசம் செட்டியார்,**
ஜவுளி, வெள்ளி பாத்திர வியாபாரம்.
பெரிய தெரு கும்பகோணம்.



## தேசிக ஸம்பிரதாய விவர்த்தினீ ஸபா.

இந்நாமதேயம் பூண்ட ஓர் ஸங்கம் இத்திருக்குடந்தை திவ்யக்ஷேத்ர வாஸிகளாகிய சில சாஸ்திர வித்வான்களினாதரணையின் கீழ் சென்ற 1½-வருஷகாலமாக நடைபெற்றுவருகிறது.

இச்சபையார் தூப்பில் நிகமாந்த மஹாதேசிகனருளிச் செய்திருக்கிற ஸ்தோத்ரபாடங்கள், ராமானுஜ மதகிரந்தங்கள், திருப்பாவை முதலிய பிரபந்தங்கள் இன்னும் பொது ஜன ஸாதகார்த்தமாக அப்போதைக்கப்போது தேவையாகத் தோன்றும் பல கிரந்தங்களையும் ஸம்ஸ்கிருத வியாக்கியானத்துடனும் தமிழ் மொழி பெயர்ப்புடன் பிரசுரித்து வருகிறார்கள். வர்ணாசிரமதர்மங்களைப் பரிபாலிப்பதி லுண்மையான அபிமானமுள்ள ஒவ்வொருகனவானும் இதை கவனித்தலவசியம். **சந்தா விபரம்.** அயலூராருக்கு 12-ஸஞ்சிகைக்கு முன் பணம் கட்டவேண்டியது ரூபா 3—6—0. உள்ளூராக்கு ஸஞ்சிகை 1-க்கு 0—4—0. அயலூராருக்கு தபாற்கூலி உள்பட 0—6—0.



ஓம்: வந்தேமாதரம்.

## பாலசந்திர பற்பொடி.

கல்நார் பஸ்பம் முதலிய சுதேச அவுஷத முறையையும், கார்பாலிக் ஆசிட் முதலிய இங்கிலீஷ் முறையையும் அனுசரித்து தயார் செய்யப்பட்டிருக்கிறது. எவ்விதமான பல் நோயையும் தவராது தீர்த்து உறுதியாய் இருக்கும்படி செய்யக்கூடிய குணமுடையது. அநேக கனதனவான்களால் நற்சாக்ஷிபத்தி மளிக்கப்பட்டிருக்கிறது. சகல மானவர்களும் உபயோகிக்கவேண்டியதற்காக 1-அவுன்ஸ் அடங்கிய சீசா 1-க்கு அணா 2. டிஜன் 1-க்கு ரூபா 1—2—0.

ஆலங்குடி முதல்தரமான இருவாளிப்பு பாக்குவெட்டிகள் 0—3—6 முதல் கிடைக்கும். வியாபாரிகளுக்கு தகுந்தகமிஷன் கொடுக்கப்படும்.

N. A. S. Iyer F. T. S.
புரோப்ரைட்டர்,
**பாலசந்த்ர டிரேடிங் ஹால்,**
ஆலங்குடி, நீடாமங்கலம் S. I. R.

கும்பகோணம் ஆனரயிள் திவான்பகதூர் மகாகனம் பொருந்திய R. ரெகுநாதராயர் அவர்கள் C. S. I. சொல்லுகிறதாவது,
I have used this tooth powder. I found it usefull.
(Sd.) R. RAGUNATHA RAO.

# ARYAN INITIATION!

OF THE

## SPIRITUAL BROTHERHOOD!!

OF THE

## INDIAN ACADEMY OF SCIENCE. !!!

Under the guidence of an Adept Master of the Brotherhood, a special Course of Lessons is now ready to initiate you into all the mysteries of LAYA and MANTRA YOGA of the Aryans giving practical methods for HINDU-HYPNOTISM, MESMERISM, TELE-PSYCHY, WILL-CULTURE, SPIRITUAL, HEALING, CLAIR-VOYANCE CALIR AUDIENCE CLAIR-SENTIENCE, SPIRIT-COMMUNATION, MEDIUMSHIP and other wonderful secrets for attracting SUCCESS, HEALTH, SPIRITUAL POWER and Soul-Bliss, as practised by the ancient Aryan Adepts.

This Course is the first of its kind in the world and anybody knowing to READ and WRITE ENGLISH can master it and practice its teachings to a wonderful degree.

With a complete outfit and fine Diploma of Membership of the 1st degree.

Price, Rs. 10 for the first 500 enrolments. The price will be raised to Rs. 15 shortly. Persons ordering the course should send a copy of their photos along with money in ADVANCE, No. V. P. System. Look sharp!

SELF-CULTURE, a Monthly Official Journal of the Indian Academy of science, is devoted to Mental, Psychic, Spiritual and Occult Sciences Philosophy, Spiritualism, Health-Culture, Vedanta and other Esoteric phases. It is edited by Dr. K. T. Ramasami, Dr. J. M. Peebles of (America) and Prof. J. M. Severn (of England.) Besides it has an able crops of contributors.

Annual subscription Rs. 3, to India. Foreign Sh. 4; To School Students and all Missionaries at a reduced rate of Rs. 2.

Send all orders and remittance direct to

*The Manager,*

**THE INDIAN ACADEMY OF SCIENCE,**

**KIZHANATTAM, Tinnevlley, Dist. S. India**




## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

23. கேசஸௌவாசனி:—உசிதமான சீமை வாசனை சாமான்கள் சேர்த்து செய்யப்பட்ட இத்தைலத்தால் கூந்தல் செழிப்பாகவும், நெருக்கமாகவும், கருப்பாகவும், வளரும். கண்கள் குளிரும், தலைநோய் போகும், மூளையைப் பலப்படுத்தும், மிகவும் வாசனையுள்ள தைலம். சீசா 1-க்கு ரூபா 1. வி. பி. செலவு 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

24. இரக்ஷாமிர்தம்:—தாவரவர்க்கத்தைச்சார்ந்த அநேக அபூர்வ மூலிகைகளால் செய்யப்பட்ட இச்சூர்ணம் காபி, தேயிலைக்குப்பதிலாக உபயோகப்படுத்துவதற்காகவே தயார் செய்யப்பட்டிருக்கிறது. காபி தேயிலைக்குள்ள துர்குணங்கள் இதற்கில்லை. காபி பொடியை எவ்விதம் உபயோகிக்கிறோமோ அவ்விதமாகவே இதையும் உபயோகிக்க மிகவும் ருசியான பானமாகும். அரைக்குழந்தை முதல் விருத்தாப்பியர்கள் வரையில் எல்லோரும் உபயோகிக்கலாம். சுரம், ஜன்னி, கர்ப்பம், பிரசவம், காலரா முதலிய காலங்களில் ௸ சூரணத்தின் கஷாயத்தை பாலுடன் அல்லது பாலை சேர்க்காமல் சமயத்திற்கு தக்கபடி உபயோகிக்க ஜனங்களை நோய்களிலிருந்து குணப்படுத்துவது மன்றியில் நோய்வாராமல் காக்கும். பித்தவாயு, காசம், க்ஷயம், அஜீரணம், மலச்சிக்கல், தலைவலி முதலியவைகளை போக்கும். இரத்தத்தை சுத்தி செய்து தாதுவிர்த்தியையும், தேக ஆரோக்கியத்தையும் தரும். அக்கினி மாந்தமுள்ளவர்களுக்கும், மதுமூத்திரம், அதி மூத்திரரோகிகளுக்கும் அருமையான வஸ்து. இதை வழக்கமாய் உபயோகித்து வந்தால் மதுமூத்திர ரோகிகளின் நீரிலுள்ள தித்திப்பையும், நீரின் அளவையும் குறைத்து மூத்திர ரோகத்தை அடியோடு குணமாக்கும். தேகத்தின் உஷ்ணத்தை சாந்தி செய்யும். மூளையை பலப்படுத்தி ஞாபக சக்தியை அதிகப்படுத்தும். மாணாக்கர்கள், வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள் பகைக்கத்தக்க குணமுள்ள காபி தேயிலையை விட்டுவிட்டு இதை உபயோகிக்க அருமையான சூர்ணம். டப்பா 1-க்கு விலை அணா 6. வி. பி. செலவு அணா 3 பிரத்தியேகமாகும்.

25. சர்பத்துகள்:—திராக்ஷைப்பழம், நன்னாரிவேர், ரோஜாபுஷ்பம், வாழைப்பழம், எலுமிச்சம்பழம், மாதளம்பழம். கிச்லிப்பழம், பாதம், அன்னாசிப்பழம், துருஞ்சிப்பழம், கொமட்டிப்பழம், சீமை இலந்தைப்பழம், தாமரை புஷ்பம், இஞ்சி சர்பத்துகள். ௸ சர்பத்துகள் பழவகைகளின் சத்துக்களால் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் துளிகள் கணக்காகவே உபயோகிக்கவேண்டும். ஒரு சேர் குளிர்ந்த ஜலத்திலாவது சோடாவாடரிலாவது சுமார் 5 துளிகள் சேர்த்தால் மிகவும் இனிப்பாகவும் எந்த பழ சர்பத்து உபயோகிக்கப்பட்டதோ அந்த பழத்தின் மதுரமான வாசனையோடுங்கூடிய சர்பத்தாகும். ½ அவுன்சு சீசாக்களில் விற்கப்படும். இச்சிறு சீசாவிலுள்ள சர்பத்து 50 சேர் குளிர்ந்த ஜலத்துடனாவது சோடா வாட்டரோடாவது சேர்த்

## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

தால் 50 சேர் உசிதமான சர்பத்தாகும். அரை அவுன்சுள்ள சீசா 1-க்கு விலை அணா 8, வி. பி. செலவுகள் 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்

26. சுகந்த மூக்குத்தூள்:—இந்த மூக்குத்தூள் மிகவும் நேர்த்தியான முறையால் செய்யப்பட்டிருக்கிறது. வெகு இன்பமான வாசனையுடையது. ஒரு நாளைக்கு ஒரு மனிதன் எவ்வளவு மூக்குத்தூள் உபயோகிப்பானோ அவ்வளவு சாதாரண புகையிலை மூக்குத்தூளுடன் நம்முடைய சுகந்த மூக்குத்தூளில் ஒரு சிட்டிகை எடுத்து நன்றாய்க்கலந்து கொண்டால் அந்தத்தூள் முழுவதும் அதிகமனோரம்மியமான வாசனையுள்ள மூக்குத்தூளாகிவிடும். கடைகளில் விற்கும் சாதாரண மூக்குத்தூளுடன் ஒரு சிட்டிகை சேர்த்தாலே போதுமானது, தனிமையாக உபயோகப்படுத்துவது அனாவசியம் இத்தூள் சேர்ந்த மூக்குத்தூள் கெடாமல் நெடுநாள் சுகந்த பரிமளத்துடன் காரம் போகாமலிருக்கும். தலைவலி, பீனிசம், சலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், மண்டைக்குற்று, நீர் பீனிசம், நாசியில் துர்நாற்றம், மயக்கம் முதலியது தீரும். இதில் நவச்சாரம் சேரவில்லை. வழக்கமாக மூக்குத்தூள் உபயோகிப்பவர்களிடத்திலுள்ள துர்நாற்றத்தை நீக்கி சதா கமகமவென்று பரிமளத்தை வீசிக்கொண்டேயிருக்கும். இத்தூள் உபயோகித்தால் அடிக்கடி நசியம் போடுகிற வழக்கத்தை நாளுக்கு நாள் குறைத்து கடைசியில் சிலர் தூள்போடும் அப்பியாசத்தையே முற்றிலும் விட்டுவிடும்படிக்கு செய்யும். ஒரு சீசாவிலுள்ள சுகந்த மூக்குத்தூள் சுமார் ஒரு மாதத்திற்குப்போதுமானது. சீசா 1-க்கு விலை அணா 4, வி. பி. செலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அணா 3 பிரத்தியேகம், 4 முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம், 7 முதல் 12 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 7 பிரத்தியேகம்.

27. அசோக கிருதம்:—ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் பகிஷ்டை சரிவர உண்டாகாதிருத்தல், அகாலங்களில் பகிஷ்டையாகுதல். பகிஷ்டைகாலங்களில் வெகு கடினமான சூலை நோயுண்டாகுதல், பகிஷ்டையாகும் சமயத்தில் வயிற்றுவலி, காலெரிவு. தேகங்கனத்தல். வாந்தியாகுதல், பகிஷ்டையாகும் சமயத்தில் ரஜஸ் அதிகமாகப்போகுதல் முதலிய ரஜாதோஷங்களும், யோனி சுருக்கம், யோனிப்புற்று, கருப்பையிலிருந்து சீயொழுகுதல், எப்போதும் கருப்பையிலிருந்து வெண்மையான நீர் ஒழுகுதல், யோனி ரணங்கள் இவை முதலிய ஸ்திரீ சம்பந்தமான சகல ரோகங்களையும் போக்குவதில் இது நிகரற்ற அவுஷதம். சூதக சூலை ரோகங்களுக்கும் மற்றும் அநேக யோனி சம்பந்த ரோகங்களுக்கும் அற்புதமாய் நன்மைசெய்யும். விலை சீசா 1-க்கு ரூபா ஒன்று. 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 5 - DEC 1910 MADRAS

உ

# வைத்திய போதினி.

சித்திரப் படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

புத் 1. } 1910-ஹு டிஸம்பர்மீ 1உ {நெ. 8.

## பத்திராதிபர் குறிப்பு.

நமது பிரிய சந்தா நேயர்களே!

ஜனோபகாரமான தொழிலைச் செய்வதே நலமென உணர்ந்து இப்பத்திரிகையை நடத்த முன் வந்தோம். பத்திரிகை நடத்துவதென்றால் இலகுவான காரியமல்லவென்றும், பத்திரிகையில் வரையப்படும் விஷயங்கள் பலருக்கும் பயனையளிக்கக்கூடிய நவீன வியாசங்களோடு வெளிவரவேண்டுமென்பதை நாம் சொல்லாமலே விளங்கும். இங்ஙனம் ஜனோபகாரத்தை முன்னிட்டு வரையும் வியாசங்களில் சிறிதளவேனும் குற்றம் காணப்படில் அரசாங்கத்தாரால் ஏற்படும் அபவாதமும் அபராதமும், அதனால் ஏற்படும் மானக்கேடும், நஷ்டமும், கஷ்டமும் அனந்தமென்பதை யாமறிந்திருந்தும் இச்சஞ்சிகையை இவ்வித குறைந்த சந்தாவோடு நடத்த முன்வந்ததேனென்றால் நமது தென்னிந்திய வாசிகள் சுக சரீரிகளாய் நீடிய ஆயுள் பெற்று, வாழவேண்டுமென்பதே. பரோபகார சிந்தைகொண்ட சில கனவான்களே பத்திரிகையை ஆதரித்து வருவதாலும், அவர்களையும் சில போலி மனிதர்கள் நமக்கு பத்திரிகை எதற்கு, வர்த்தமானமெதற்கு, வைத்தியமெதற்கு, சுகாதாரமெதற்கு, எனச் சொல்லித் தடுத்துவிடுவதாலும், நமது பத்திரிகையை பெற்றுக் கொண்டுவந்த சில கனவான்கள் எக்காலத்தில் தங்கள் சந்தாத் தொகையை அனுப்புவார்களென்று நாம் எதிர்பார்க்கக்கூடுமோ அத்தருணத்தில் பத்திரிகையை மறுக்க எத்தனிப்பதாலும், சிலர்கள் வி. பி. மூலமாய் பத்திரிகைகளை அனுப்பச்சொல்லி அதைப் பெற்றுக்கொள்ளாமல் திருப்பி

விடுவதாலும், சிலர்கள், வி. பி. அனுப்புவதற்கு முந்தியெல்லாம் பத்திரிகைகளைப்பெற்றுக்கொண்டு, வி. பி. போனவுடன் மறுத்துவிடுவதாலும், இவ்விதப் போலி மனிதர்களால் பலவித கஷ்டமும் நஷ்டமும் உண்டாகிறது.

நமது பத்திரிகை ஆரம்பமாகி 8-மாத காலமாகியும் சந்தா நேயரில் சிலர் இன்னும் தமது சந்தாத் தொகையைக் கொடுத்தாதரிக்காமலிருப்பது இனிமேலும் அழகல்ல! நமது சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் இஷ்டமித்திரர்களுக்கும் மற்றுமுள்ள ஜனங்களுக்கும் தெரிவித்து அவர்கள் ஒவ்வொருவரையும் சந்தாதாரராய் இருக்கச் செய்யும்படியாயும், குறைந்தபக்ஷம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கையொப்பக் காரர்களையேனும் சேர்த்தனுப்பும்படியாயும் மிகவும் தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். அங்ஙனமே செய்ய முற்படும் கனவான்கள் கௌரவத்தையும், இகலோக பரலோக சாதகத்தையும், அடைவார்களென்பது திண்ணம். இப்பூவுலகில் பிரதி மனிதர்களுக்கும் எத்தனையோ வழிகளில் திரவியம் சிலவாய்க்கொண்டுவருகிறது. உற்றுப்பார்க்கின் நல்ல வழியில் சிலவு கொஞ்சந்தான் ஏற்பட்டிருக்கக் கூடும். சிலர்களுக்கு அதுவும் இல்லாமலே இருந்திருக்கலாம். இப்பரோபகாரமான பத்திரிகாபிவிருத்தியைக் கருதி வருஷத்திற்கு ஒரு ரூபா கொடுப்பது ஒரு பெரிதல்ல! பரம ஏழைகளும் வாங்கி வாசிக்கும்படி சந்தாத்தொகை வெகு சாமான்யமாய் ஏற்பட்டிருக்கிறது.

நமது சந்தா நேயர்கள் நமது வேண்டுகோளுக்கிணங்கி தங்கள் தங்களால் கூடிய அளவு முயற்சி எடுக்க முற்படுவார்களானால் பத்திரிகையை இவ்வித குறைந்த சந்தாவுக்கே இப்போது 28-பக்கங்களுடன் வெளிவரும் பத்திரிகையை 36-பக்கங்களுள்ளதாய் வெளியிட எண்ணியிருக்கிறோம். மேலும் இப்பத்திரிகையை பிரதி மாதத்திலும் காலாகாலங்களில் பதிப்பித்து வெளியிட நமக்கு சொந்தமாகவே ஓர் அச்சுயந்திரசாலை இருந்தால் நலமெனவெண்ணி சென்ற செப்டம்பர்மீ 17௳ ஐகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் ராதாகிருஷ்ணய்யரும் நாமும், தஞ்சைஜில்லா கலெக்டர் அவர்களிடம் ஆஜராகி டிக்ளரேஷன் எழுதிவைக்க முயன்றபோது கலெக்டர் துரையவர்கள் இந்திய தேசத்து 1910-ம் வருஷத்திய புதியஅச்சுச் சட்டப்படி ரூபா 500 ரொக்கமாக டிபாசிட் கட்டுவதானால் அச்சுயந்திரசாலை ஸ்தாபிக்க ஆர்டர் கொடுப்பதாக அபிப்பிராயம் கொடுத்தார்கள். பால பருவமுடைய நம் பத்திரிகையை பதிப்பிக்கவேண்டிய அச்சுக்கருவிகள் சுமார் ரூ. 1500-ம் வட்டியில்லாத ரொக்க டிபாசிட் ரூபா 500-ம் ஆக ரூபா 2000-ம் சிலவிடவேண்டியிருப்பதை யோசித்து தற்காலம் நிறுத்தி வைத்திருக்கிறோம்.



நமது பத்திரிகாபிமானிகளாகிய திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ மஹாசன்னிதானம் அவர்கள் நமது பத்திரிகையின் அபிவிருத்தியைக் கருதி ரூபா 50 நன்கொடையளித்திருப்பதை ஏற்கனவே எழுதியிருக்கிறோம். ஏனைய மடாதிபதிகளும் இவர்களை பின்பற்றுவார்களானால் மேகம் பூமிக்குச்செய்யும் உதவிபோலாகும்.

தவிர நம் பத்திரிகையின் அபிவிருத்தியைக்கருதி ஐந்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்போருக்கு நம்மால் இயற்றப்பட்டுள்ள 'சுதேச வைத்திய ரத்தினம்' என்னும் ஒரு ரூபா விலையுள்ள புத்தகம் ஒன்று இனாமாக அனுப்ப ஏற்பாடுசெய்திருக்கிறோம். முற்கூறிய விஷயங்கள் யாவும் முட்டின்றி முடிவுபெறுமானால் எவ்விதத்திலும் எச்செலவுவரினும் சொந்தமாகவே ஓர் அச்சுயந்திரசாலை ஸ்தாபிக்கவும், எண்ணியிருக்கிறோம். திருவருள் எப்படியோ.

## ஒரு தோல் உரியும் மனிதன்.

சர்ப்பங்கள், நண்டுகள் முதலான ஜீவஜெந்துக்களுக்கு மாதாமாதம் தோலுரிந்து வேறு தோலுண்டாகிறதென்று நாமறிவோம். இலைகளுள்ள மரங்களெல்லாம் வருஷத்தில் ஒரு முறை தங்கள் இலைகள் உதிர வேறு புது இலைகள் துளிர்க்கப்பெறுகின்றன, சிலமரங்களில் வருஷத்தில் இரண்டுமுறை புது இலைகள் உண்டாகின்றன, ஆனால் மனிதன் வருஷாவருஷம் தன் பழைய தோலையிழந்து புதுத்தோலையடைகிறானென்று இதுவரையில் எவரும் கேள்விப்பட்டதில்லை. இப்போது அமெரிக்காவின் ஐக்கிய நாடுகளில் (இண்டியனாபோலீஸ்) என்ற பட்டணத்தில் ஒருவன் தன்குழந்தைப் பருவமுதற்கொண்டு ஒவ்வொரு வருஷமும் தவறாமல் பாம்பைப்போல் தோலுரியப்பெற்று அதற்குப் பதிலாய் புதுத்தோல் அடைந்துகொண்டுவருகிறான், அத்துடன் அவன் கால் விரல்களிலும், கை விரல்களிலுமுள்ள நகங்களும் கழன்றுபோய் வேறு நகங்கள் வளருகின்றன. அவனுக்குத்தோலுரியும்போதும், நகங்கள் கழலும்போதும் யாதொரு உபத்திரவமுமில்லையாம். ஆனால் அந்தக்காலத்தில் லேசாய் ஜுரம் மாத்திரம் அடிக்கிறதாம், பழைய தோல் போய்ப்புதிதாய் உண்டான தோல் தடித்து உறுதிப்பட மூன்றுவாரம் பிடிக்கிறதாம். டாக்டர்கள் இந்த அதிசயமான மனிதனைப் பலதடவையும் பரிசோதனைபண்ணிப் பார்த்தார்கள். ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை என்றும், பாம்பாய்ப்பிறக்க வேண்டியவன் பிசகி மனுஷனாய் பிறந்தானென்றும் சொல்லிக்கொள்ளப்படுகிறது. இவ்விதமான விநோதப்பிறவியைப்பற்றி மத்யாறிமட்டில் சில அத்தாக்ஷிகள் கூறுவோம்.

(1) **லியாவுல்-அப்ஸார்** என்னும் கிரந்தகர்த்தாவானவர் தன்னுடைய கிரந்தத்தில் எழுதுகிறார். துருக்கிஸ்தானத்தி (Turkey) ல் உள்ளவரும் மகாத்மாவுமான ஜமாலுந்தீன் சாகிபு சொல்லுகிறார். ஓர் ஸ்திரீக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதன் தலை மனுஷத்தலையும் மற்றத் தேகம் பாம்பின் தேகமுமாயிருந்தது. ஆனால் எந்நேரமும் அதுவோர் பள்ளத்திலிருக்கிறதும், வேண்டியகாலங்களில் தன் தாயிடம் வந்து பால் குடிக்கிறதும், பால்குடித்துவிட்டு மறுபடியும் அப்பள்ளத்திற்போய் வசிக்கிறதுமாயிருந்தது. அது துஷ்ட ஜந்துவின் இனத்திற்சேர்ந்ததாகையால் **சட்டப்படி** அது கொல்லப்பட்டது. அக்காலத்திலுள்ள அறிவாளிகள் அப்பிள்ளை பிறந்த காரணத்தை தெரிந்துகொள்ள முயன்றபோது அக்குழந்தையின் தாய் சொன்னதாவது—புணர்ச்சி காலத்தில் ஒரு பாம்பைப்பார்த்து தான் பயந்து, தான்சம்சர்க்கத்திலிருந்தாலும், தன் திடுக்கம், பயம் தன்மனதைவிட்டகலாது அப்பாம்பின் ஞாபகமே குடிகொண்டிருந்தது என்பதே.

(2) **டாக்டர், பூதேடாட்ஸ் துரை சொல்லுகிறார்:**—ஓர் ஸ்திரீக்கு 11-பிள்ளைகள் சௌக்கியமுள்ளவர்களாகவும், நல்ல புத்திமான்களாகவும், பிறந்தார்கள். 12-ம் பிள்ளையானது நலிவுடையதாகவும் காடியின் சுபாவகுணமுள்ளதாகவும் இருந்தது. இதற்குக் காரணத்தை நிச்சயிக்கும்போது தெரியவந்ததாவது 12-ம் குழந்தை உண்டாயிருந்த மூன்றாம் மாதத்தில் அவள் ஓர் காடிக்குட்டியினால் பயமுறுத்தப்பட்டு அந்தப்பயமே அவள் மனதில் குடிகொண்டிருந்தது என்பதே.

(3) பூஸ்டின் என்னும் பட்டணத்தில் ஓர் கருப்ப ஸ்திரீ கிளிப்பிள்ளையினால் பயமுறுத்தப்பட்டு அந்தப்பயமே அவள் மனதில் குடிகொண்டிருந்தது; அந்தப்பயனாக அவளுக்குப் பிறந்த குழந்தையின் பேச்சு, நடவடிக்கைகள் யாவும் கிளிப்பிள்ளையை யொத்திருந்தன.

(4) நாலுமாதஞ் சென்ற ஓர் கெர்ப்ப ஸ்திரீயானவள் ஓர் சிறுத்தைக்குட்டியின் தலையை பலமாய் அழுத்தி நசுக்கிவிட்டு, பின்பு அதைப் பற்றி மிகப்பரிதாபப்பட்டாள். அதன் பிறகு ஆறு மாதஞ்சென்று ஓர் ஆண் மகவைப்பெற்றாள், அக்குழந்தையின் தலையானது முன் நசுக்கப்பட்ட சிறுத்தைக்குட்டியின் தலையைப்போல முன்னிற்குப்பிதுங்கி நசுக்கப்பட்டதாயிருந்தது. இதற்கு காரணமும் முன் நடந்ததுவே.

(5) இரண்டு மாதத்து கருப்பஸ்திரீ ஒருத்தி விபரீதமான ஓர் குழந்தையைக் கவனமாய்ப்பார்த்து ஆச்சரியப்பட்டு அவள் மனதில் உண்டானதாவது—என் வயிற்றிலிருக்கிற குழந்தையும் ஒரு வேளை



இப்படிதானாகுமோ என்னவோவெனப் பயமுற்றவளானாள். ஈற்றில் முன்கண்ட குழந்தையைப்போலவே ஓர் கையும் ஓர் காலுமில்லாத குழந்தையே பிறந்தது.

இவ்விதம் கருப்பஸ்திரீகளானவர்கள், மிருகம், ஊர்வன, பறவை முதலியவைகளினால் பயமுறுத்தப்பட்டு அக்காலங்களில் கருப்பத்திலிருந்த சிசுக்கள் அநேகமாய் அம்மிருகங்களின் ரூபம், நடவடிக்கை முதலியவைகளை ஒத்திருந்தன. இவையெல்லாம் கருப்பவதிகளுக்கு ஏற்படும் மனவிகற்பமேயொழிய வேறொன்றுமல்லவென்பதற்கு இன்னும் பல திருஷ்டாந்தங்களிருக்கின்றன.

இன்னும் கருப்ப ஸ்திரீயானவள் தன்புருஷனுடைய ஞாபகமாகவும் தன் புருஷன் மேல் அதிக அன்புள்ளவளாகவுமிருந்தால் பிள்ளையானது தகப்பனைப்போலவேயிருக்கும். தன் புருஷனுடைய ஞாபகமும் தன் ஞாபகமும் சமமாயிருந்தால் தந்தை தாய் இருவருடைய அங்க அடையாளமுள்ளதாயிருக்கும். உறவினர், வைத்தியர்கள், உபாத்தியாயர், குரு, ஆகிய இவர்களின் மரியாதை, கருப்பவதியின் மனதில் அதிகமாயிருந்தால் அவர்களைப்போன்ற குழந்தையே பிறக்கும். இவையன்றி சாப்பிடுகிற வஸ்துக்கள், சாராயம், திராக்ஷை முதலிய எந்த தின்பண்டத்தில் கருப்பவதிக்கு அதிக இஷ்டமுண்டாகிறதோ அந்த வஸ்துக்களின் மேல் அவளுக்குப் பிறக்கும் குழந்தைக்கும் உண்டாகிறதென்று **ஷெ பூதேடாட்ஸ் துரையவர்கள்** சொல்லுகிறார்,

இன்னும் நம்முன்னோர்கள் எழுதியிருக்கிறதாவது, கருப்பவதிகளுக்கு ராஜாவைப்பார்க்கவேண்டுமென்கிற பிரியம் அதிகப்படத் தன் பிள்ளையானது நல்ல அதிர்ஷ்டமுடையவனாயும், செல்வவானாகவும் இருப்பான். உயர்ந்த பட்டு வஸ்திரங்கள், முத்து, மாணிக்கம் முதலியவைகளை அணிந்துகொள்ளும் விருப்பம் அதிகமாகவிருந்தால் பிள்ளைக்கும் அவ்விச்சையே அதிகமாகும். சன்மார்க்கர்கள் நல்லவர்கள் ஆகியவர்களைத்தரிசிக்கும் இஷ்டம் அதிகமாயின் குழந்தையும் சன்மார்க்க நடையுள்ளதாயிருக்கும். புலி, கழுதைப்புலி, முதலிய துஷ்டமிருகங்களின் ஞாபகம் அதிகமாயிருக்கில், பிள்ளை துஷ்ட நடவடிக்கையுள்ளவனாகவும், பிறருக்கு துன்பமுண்டாக்குகிறவனாகவுமிருப்பான். கடற்பன்றிக்கறியில் இச்சை அதிகமாயிருந்தால், பிள்ளை அதிகமாய்த்தூங்குகிறவனாயும், அதிக மறதியுள்ளவனாகவுமிருப்பான், இன்னும் தாய் தந்தையின் சிந்தையின் காரியம் அக்குழந்தைக்கும் சித்தமாகிறது. ஆனால் பெரும்பாகம் தாயின் சிந்தையின் பலனே காரணமாகையால் மாதாந்த ருதுகாலந்தொடங்கி பிள்ளை பெறுகிறவரையில் பரிசுத்தமான சிந்தை

யுடையவர்களாகவும், மனக்களிப்பு, நற்செய்கை, நற்குணம் ஆகியவைகளுடையவர்களாகவும், அழகிய ஸ்திரீகளோடு ஸ்நேகமுள்ளவர்களாகவும், சிங்காரவனங்களில் உலாவி உல்லாசமாயும், நல்லதும் சீக்கிரம் ஜீரணிக்கத்தக்கதுமான ஆகாரங்களைப் புசிக்கிறவர்களாகவும் மனவருத்தம், விசனம், கோபம் முதலியவைகளை விலக்கினவர்களாகவும் இருக்கவேண்டும்.

இந்தியாவிலுள்ள சாதாரண ஜனங்களிற் சிலர் சூரிய சந்திர கிரணகாலங்களில் கருப்ப ஸ்திரீகளை வெளியில் அனுப்புகிறதில்லை, பாட்டு முதலியவைகள் பாடி, அவர்கள் சிந்தை சூரிய சந்திரர்கள் குறைவதில் மனஞ்செல்லாவண்ணமாய்ச் செய்துவருவதும் காண்க. ஆனால் சிலர் இப்படிச் செய்வதற்குப்பதிலாய் கிரகண காலங்களில் கருப்ப ஸ்திரீயைப் படுத்திருக்கச்செய்து உலக்கையையும், அம்மிக்குழவியையும் சமீபத்தில் போட்டுவைத்திருக்கிறார்கள், இதன் காரணம் இவர்களெண்ணம் அவற்றின் மேல் செல்லுமென்பதேயன்றி வேறல்ல.

சக்கிரவர்த்தியின் சரித்திர சங்கிரகம்—மென்னும் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதாவது, இந்தியாவில் செங்கோல் செலுத்திய மஹாசக்ரவர்த்தியாகிய அக்பரை அவர் தாய் கருப்பமாய் இருக்கையில், அந்த அம்மாள் தன் குதிகாலில் ஊசியினால் அழகிய புஷ்பங்கள் தானே செதுக்கிக்கொள்ளுகிறது வழக்கமாயிருந்தது. ஒரு நாள் அக்பரின் தந்தையாகிய ஹுமாயூன் இதைக்கண்ணுற்று இப்படிச் செய்வதின் காரணமென்னவென்று கேட்டார்; அதற்கந்த அம்மணி, என் வயிற்றிலிருக்கிற குழந்தையின் காலில் இவ்வித புஷ்பங்களிருக்கும்படி எனக்குப்பிரியமாயிருக்கிறபடியால் இவ்விதம் செய்கிறேன் யென்றார்கள். பிள்ளை பிறந்தபின் இப்படியே இருந்ததாம்.

இன்னும் அக்பருடைய காலத்தில் கருப்பவதியாயிருந்த ஒரு ஸ்திரீயின் புருஷன் சண்டையில் வெட்டுப்பட்டான். பிள்ளை பிறந்தபின் தகப்பனுக்கு எவ்விடத்தில் காயம்பட்டதோ பிள்ளையும் அந்தவிடத்தில் வெட்டுண்ட அடையாளத்தோடு பிறந்ததாம். மேற்சொல்லி வந்த உதாரணங்களைக்கொண்டு கர்ப்ப ஸ்திரீகளின் மனவிகற்பமே, சற்புத்திரோற்பத்திக்கும், அலி, குருடு, செவிடு, ஊமை, அங்கஹீனம் இன்னும் பல பிறவிகளுக்கும் ஆதாரமாயிருக்கிறதென்று தெரிந்துகொண்டோம். இதுபோலவே, இவ்வியாசத்திற்கு தலையங்கமாயுள்ள "**தோல் உரியும் மனிதனுக்கு**" அவன் தாயினுடைய மனவிகற்பமே காரணமென்று சொல்லி இவ்வியாசத்தை இவ்வளவோடு முடிப்போம்.



## மிதமிஞ்சின கலவியின் கெடுதி.

முதலில் மூன்று விஷயங்களைப்பற்றி நாம் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கின்றது அவையாவன, (1) ஆன்மா, (2) ஜீவாக்கினி (3) காமாக்கினி.

முதலாவது ஆன்மாவெனினும், ஆத்துமாவெனினும், ஜீவன் எனினும் ஒக்கும். இரத்தத்தின் கொழுமையினின்றெழும் ஆவிக்கு ஆன்மாவென்று பேர். நமது சரீர குணத்தை நடத்தும் ஆன்மாக்கள் மூன்று, அவையாவன, (1) அறிவான்மா (2) ஜீவான்மா (3) தேகான்மா.

1. அறிவான்மா (Mental energy or spirit) இது தலையிலுள்ள மூளையை இருப்பிடமாகக்கொண்டு சிந்தித்தல் முதலிய உள்ளுணர்வுகளையும், கண்பார்வை, செவிகேழ்குதல் முதலிய வெளியுணர்வுகளையும் அசைவையுமுண்டாக்குகிறது, மூளைக்கு தீங்கு நேரிட்டால் அவயவங்களின் அசைவுக்குப், தீங்கு நேரிடும் இது பக்ஷவாதம் (Paralysis) ரக்தசிரஸ்தாபரோகம் (Apoplexy) அபஸ்மாரகரோகம் (Epilepsy) முதலிய ரோகங்களிற்காணலாம்.

2. ஜீவான்மா (Animal energy or spirit) இது ஹிருதயத்தை இருப்பிடமாகக்கொண்டு தேகத்திலுள்ள அவயவங்களை உயிர்ப்பித்து சந்தோஷம், துக்கம், பயம், கோபம், பகுத்தறிவு ஆகியவைகளை யுண்டாக்கும்.

3. தேகான்மா (Natural energy or spirit) இது ஈரலை இருப்பிடமாகக்கொண்டு தேகத்தை போஷிக்கும். ஈரலுக்கு தீங்கு நேரிட்டால் தேகம் வற்றியுலர்ந்து போம்.

மேற்கண்ட மூன்றும் ஒன்றோடொன்று அதிக சம்மந்தப்பட்டிருக்கிறபடியால் இவற்றில் ஒன்றிற்கு கெடுதி நேரிட்டால் அது மற்றொன்றையுந் தொடர்ந்து அக்கெடுதியின் அளவிற்குத்தகுந்தபடி சீக்கிரமாகவும், தாமதமாகவும், அதிகமாகவும் குறைவாகவும் நேரிடும். இரண்டாவது ஜீவாக்கினி முற்கூறியபடி இரத்தத்தின் கொழுமையினின்றெழும், ஆவி ஆன்மாவாம். அவ்வான்மாவின் சிகையே ஜீவாக்கினியாகும். ஜீவாக்கினியானது தேகத்தில் நிலைத்திருப்பதனால் ஜீவிக்க ஆதாரமாகவும், தேகவுறுப்புகள் அந்தந்தத்தொழிலை ஒழுங்காய் நடத்தவும் இடமுண்டு. இது தேகத்தை விட்டு நீங்கும்போது தேகத்தின் சகல தொழில்களும் நின்றுபோகும். மனிதனுடைய அந்தியத்தில் ஜீவாக்கினி குறைந்து தேகம் குளிர்ந்து போகும் அப்போது சீதளம் மேலிட்டுப்போனதாக நம்மவர்கள் சொல்வதுண்டு.

மூன்றாவது காரணாக்கினி நாம் செய்கிற போஜனபானங்கள் அக்கினி, வெயில், தேகவுழைப்பு, சூடான காற்று, இவைமுதலியவைகளால் உண்டாகும் சூட்டிற்கு காரணாக்கினி என்று பேர். இந்த சூடு அதிகரிப்பதனால் பல வியாதிகளுக்கிடமாகின்றது.

இப்பொழுது நம் ஆன்மாக்கள், ஜீவாக்கினி, காரணாக்கினி என்பவைகள் இன்னதென்றும், அவை தேகத்தோடு எவ்விதமாக சம்மந்தப்பட்டிருக்கிறதென்றும் தெரிந்துகொண்டோம். இனி மிதமிஞ்சின புணர்ச்சியின் கெடுதிகளை விபரமாகத்தெரிந்துகொள்வோம். அளவிற்கதிகமான சம்போகத்தினால் தேகத்தினின்று கழியவேண்டிய அளவிற்கதிகமான இந்திரியம் வெளிப்படும். இந்திரியம் இரத்தத்தின் சாரமாகையால் இரத்தம் அளவிற் குறையும்; இரத்தம் குறைந்தால் அதன் கொழுமையினின்று உண்டாகும் ஆன்மாக்கள் குறையும், ஆன்மாக்கள் குறைவதால் அதின் உச்சியினின்று உண்டாகும் ஜீவாக்கினி குறையும், ஜீவாக்கினி குறையவே தேகவுறுப்புகளின் சுபாவத்தொழில் கெட்டு, தேகங் கலக்கப்பட்டு, கட்டுமுட்டாகிய பலம் மட்டுப்பட்டு, யாதொரு அட்டியில்லாமல் மட்டில்லாத துஷ்ட வியாதிகளுக்குட்பட்டு நஷ்டமடைய நேரிடுமென்பது ஸ்பஷ்டம்

இரண்டாவது அதிபோகத்தினால் காரணாக்கினியும் அதிகரித்துக்கொண்டேயிருக்கும். இதனால் தேகவுறுப்புகள் அதிக வெப்பமாகி அவைகளின் தொழில் ஒழுங்கீனமாகி இரத்தக்குறைவுண்டாகி தேகபலம் க்ஷீணமாகி ஜனங்கள் சாகிறார்கள்.

மூன்றாவது உலகத்தின் எல்லா இன்பங்களைப்பார்க்கிலும் போகத்தில் மேலான இன்பமுண்டாயிருப்பதனாற்றான் ஆன்மாக்களின் தேகதத்துவமும் அதிகமாய் வெளிப்படுகின்றது. இக்காரணத்தினாற்றான் யாவருக்கும் போகத்திற்கு பின்பு பலஹீனமும் சோர்வுமுண்டாகிறது. ஆகையினால் அதிபோகத்தினால் ஆன்மாக்களின் சாரமும் அதிகமாய் வெளிப்படும். இதனால் மனிதர் தேகம் அஸ்தியாகவற்றி சத்தற்று அகால மரணத்திற்குள்ளாகிறார்கள்.

நான்காவது மிதமிஞ்சின போகத்தினால் இந்திரியம் அளவிற்கதிகமாய் வெளிப்படும், வெளிப்படவே இந்திரிய உற்பத்தி குறைந்து இந்திரியத்திற்கு பதிலாக இரத்தம் வெளிப்பட ஆரம்பிக்கும். இரத்தம் வெளிப்படுவதனால், இரத்த நரம்புகள் ஹிருதயம், ஈரல் முதலாகிய உறுப்புகளின் தொழில்கள் கெட்டு இரத்தக்குறைவுண்டாகி தேகபோஷணை குறைந்து, தேகந்தளர்ந்து முடிவில் ஜீவன் ஏகும்.



இன்னும் அதிபோகத்தினால் சரீரத்திலுள்ள உள்ளுறுப்புகள் கெட்டு அவ்வுறுப்புகளின் தொழில்கள் ஒழுங்கீனப்பட்டு அநேக வியாதிகளுக்கிடமாகின்றன. பெரும்பான்மையும் சித்தப்பிரமை, நித்திரையின்மை, பஞ்சேந்திரிய உணர்ச்சிக்குறைவு, நீரிழிவு, கல்லடைப்பு, சதையடைப்பு, கைகால் நடுக்கல், மேகம், பிரமேகம், முகவாதம், கீல்வாதம், அங்குஷ்டவாதம், நரம்புவாதம், பக்ஷவாதம், ஹிருதயரோகம், தலை சுழற்றல், மந்தாக்கினி, புத்திக்குறைவு முதலியவைகளுண்டாகின்றன.

பலஸ்திரீகளிடத்தில் அதிகபோகமுள்ளவர்களின் சுக்கிலத்தின் தத்துவம் குறைந்து போவதால் புத்திர சம்பத்து உண்டாகாது. ஒருவேளை உண்டான போதிலும், எலிக்குஞ்சுகளைப்போலவும், மூஞ்சூறுகளைப்போலவும், சப்பையும், ஜவ்வுமாய்ப் பிறந்து சொற்பநாளிருந்து அற்பாயுளாய் விடும்.

இன்னும் அதிபோகத்தினால் தேகப்பசைகள் குறைந்து போவதால், மெலிந்த தேகிகள் அதிசீக்கிரத்தில் (Hectic fever) விடாஜுரமென்னும் மஹாரோகத்திற்காளாகி அவமே அதற்கிரையாகிறார்கள். ஆஹா! இச்சுக்கிலத்தின் வல்லமையை என்ன சொல்லுவோம். இது இருக்குமிடத்திலின்பம். போகும்போதுமின்பம். போனவிடத்துமின்பம். போய்விட்டாலோ துன்பம். விந்துவிட்டாயா! நொந்துகெட்டாயா!

நெடுங்காமம் முற்பயக்கும் சின்னீர இன்பத்தின் முற்றிழாய்—
பிற்பயக்கும் பீழை பெரிது.

---

## வாந்திபேதியைத் தடுப்பதற்கும், சொஸ்தம் செய்வதற்கும், அநுசரிக்கவேண்டிய விதிகள்.

1. மிதமாயும், காலாகாலத்திலும், வழக்கம்போல் ஆகாரத்தைப் புசிக்கலாம். நன்றாய் பழுக்காத அல்லது அழுகிப்போன பழங்களை அல்லது காய்கறிகள் முதலியவைகளை உண்ணக்கூடாது. நன்றாய் பாகம் செய்யப்பட்ட காய்கறிகள், கனிந்த பழங்கள் இவைகளை யுண்ணலாம். கெட்டுப்போன மாமிசம், மீன், ஆறிப்போன அன்னம் இவைகளை உண்ணவே கூடாது. குழந்தைகளுக்கு புளித்துக் கெட்டுப் போகாத நல்ல பாலை வாங்கிக் கொடுக்கவேண்டும். பால்காரன் பாலில் சேர்க்கும் தண்ணீர் மிகவும் அசுத்தமானது. ஆதலால் பாலை எப்பொழுதும் காய்ச்சியே உபயோகப்படுத்தவேண்டியது.

2. கக்கூஸ், சாக்கடை, குப்பைத்தொட்டி முதலியவைகளிலிருந்து உண்டாகும் துர்நாற்றம் தேகத்துக்கு மிகவும் கெடுதியானது. ஆதலால் மேற்சொன்ன இடங்களைப் பினையில் (Phenyle) முதலிய மருந்துகளைத் தண்ணீரில் கரைத்து தினம் 2 அல்லது 3 தடவை தெளித்து சுத்தமாய் வைக்கவேண்டும். காய்ந்த குப்பைகளை வீட்டில் வைக்காமல் குப்பைத்தொட்டியில் கொட்டவாவது தீ வைத்துக் கொளுத்தவாவது வேண்டும். நீர் சம்பந்தமான குப்பைகளை சாக்கடையில் கொட்டி நன்றாய் தண்ணீர் விட்டுக் கழுவவேண்டும்.

3. வாந்திபேதியுள்ள காலங்களில் தண்ணீரை அப்படியே உபயோகிப்பது மிகவும் கெடுதியானதால் நன்றாய் வடிகட்டிக் கொதிக்கவைத்து உபயோகப்படுத்தவேண்டும்.

4. இப்படி வாந்திபேதியுள்ள காலங்களில் ஒவ்வொருவரும் டாக்டர்களால் கொடுக்கப்பட்டாலொழிய வேறு எவ்விதத்திலும் சுகபேதிக்கு மருந்து சாப்பிடவே கூடாது.

5. குளிரைத் தடுப்பதற்கும், வெயர்வையைத் தடுக்காமலிருப்பதற்கும், வயிற்றில் இழுப்பைத் தடுப்பதற்கும் கம்பிளிச் சட்டை, கம்பிளி பெல்ட்டு முதலியவைகளையே உபயோகிக்கவேண்டும்.

6. நீர் வசிக்கும் வீடு, படுக்கும் அறை முதலிய இடங்களில் நல்ல காற்று பரவும்படியாய் ஜன்னல்களையும், கதவுகளையும் நன்றாய்த் திறந்து வைக்கவேண்டும்.

7. மதுபானம் செய்தால் வாந்திபேதியை உண்டுபண்ணுமாதலால் உண்பதிலும், மதுபானம் செய்வதிலும் மிதமாயிருத்தல் நல்லது.

8. வாந்திபேதியைப்பற்றி பயப்படாமலும், அதையே மனதில் நினைத்துக்கொள்ளாமலுமிருக்கவேண்டும். ஏனென்றால் பயம் மனோவியாகூலம் முதலியவைகள் தேகத்தை பலவீனப்படுத்தி வாந்திபேதி வருவதற்கு ஹேதுவாகின்றது.

9. வாந்திபேதிக்கு முன் காணும் அஜீரணம் எளிதில் சொஸ்தம் செய்யக்கூடியது. இந்த அஜீரணத்துக்கும் சாதாரணமாய் உண்டாகும் அஜீரணத்துக்குமுள்ள வித்தியாசத்தைக் கண்டுபிடிப்பது அரிது. ஆதலால் அஜீரணம் கண்டவுடனே ஒரு டாக்டரிடத்தில் தெரிவித்து வைத்தியம் செய்துகொள்ளவேண்டியது மெத்த அவசியம். அவைகள் இரண்டும் வெவ்வேறு வியாதிகளாயிருந்தாலும் ஒன்று மற்றொன்றுக்குக் காரணபூதமாயிருக்கிறது.

10. ஒவ்வொரு வீட்டிலும் 1-புட்டி குளோரோடயின் (Chlorodyne) அல்லது காம்பரோடயின் (Camphorodyne) இருக்கவேண்டும்.



வாந்திபேதி கண்டவுடன் பெரியவர்களுக்கு ஒரு அவுன்ஸ் தண்ணீரில் 40-முதல் 60-துளிவரையிலும், குழந்தைகளுக்கு ஒரு வயதுக்கு ஒரு துளி விழுக்காடு வயதுக்கு தக்கபடி போட்டு உடனே உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். முதலில் கொடுத்த மருந்தை வாந்திசெய்துவிட்டால் மறுபடியும் ஒரு தடவை கொடுப்பதுடன் வயிற்றுக்கும் கடுகு அரைத்து பற்றுபோடவேண்டும். வயிறு, கால் கைகளில் கொறுக்கு வலி வாங்குதலும் மேன்மேலும் தண்ணீர் போல வாந்தியும், பேதியும் உண்டாகுமானால் அது தான் உண்மையாய் வாந்திபேதி மிகக்கடுமையான நிலைக்கு வந்திருக்கிறதென்று அறிந்துகொள்ளலாம். இப்போது மேற்சொன்ன மருந்துகளைக் கொடுக்கக்கூடாது. வாந்தியைப் பனிக்கட்டியை நாக்கில் வைத்து உரிஞ்சச் செய்தாவது அல்லது பால், சோடா, பனிக்கட்டி மூன்றையும் கலந்து குடிக்கச்செய்தாவது நிறுத்தவேண்டும். கால், வயிறு இவைகளில் கொறுக்கு வலி உண்டானால் சுக்குப்பொடி அல்லது கற்பூரத்தைலம் (Turpentine) தேய்த்தால் நின்றுவிடும். கால், கைகளில் சீதளம் தட்டாமலிருப்பதற்கு வெந்நீர் நிரம்பிய புட்டிகளைக் (Bottles) கொண்டு ஒத்தடம் கொடுக்கவேண்டும்.

11. வாந்திபேதி முதல் முதல் கண்டவுடனே நோயாளியைப் படுக்கையிலிருக்கச் செய்யவேண்டும்; புஷ்டியான ஆகாரம் ஒன்றும் கொடுக்கக் கூடாது. இந்த விதிகளை அனுசரிப்பதினால் வைத்தியர் தேவையில்லை என்று நினைக்கக்கூடாது. இவைகளெல்லாம் டாக்டர் வருவதற்கு முன் செய்யவேண்டியவைகள்.

12. உங்களுடைய பந்துக்களுக்காவது, சிநேகிதர்களுக்காவது, அல்லது வேலைக்காரர்களுக்காவது வாந்திபேதி கண்டு அவர்களுக்கு வீட்டிலேயே சரியானபடி வைத்தியம் செய்ய சௌகரியப்படாவிட்டால் உடனே அவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடவேண்டும். அங்கே அவர்களுக்கு நல்ல மருந்து கொடுத்துக் காப்பாற்றுவார்கள். மேலும் அப்படி செய்வதினால் உங்களுடைய குடும்பத்தில் வேறு யாருக்காவது வாந்திபேதி வராமல் தடுப்பதுடன் வாந்திபேதி கண்டவர்கள் பிழைப்பதற்குஹேது உண்டாகின்றது. ஏழை ஜனங்கள் வாந்திபேதி கண்டவர்களுக்கு நல்ல வைத்தியம் செய்வது மிகவும் கஷ்டம்.

13. வாந்திபேதியின் விஷமானது வாந்தியிலும், பேதியிலும் இருப்பதால் அவைகளை உடனே அப்புறப்படுத்துவதுடன், அவைகளை நன்றாய் சுத்திகரிக்கவேண்டும், மேற்படி வாந்திபேதிகளை பினைல் போடப்பட்ட ஒரு பாத்திரத்தில் ஏந்தி நன்றாய் மூடிப் பாத்திரத்துடன் ஜனப்போக்குவருத்தில்லாத விடத்தில் தோட்டி வரும் வரையில் வைத்திருக்கவேண்டும்.

14. விஷசம்பந்தப்பட்ட துணிகள், படுக்கை, பாத்திரங்கள் இவைகளைப் பினைல் முதலிய மருந்து சேர்க்கப்பட்ட தண்ணீரைக்கொண்டு நன்றாய் கழுவி சுத்தம் செய்யவேண்டும். இது உங்கள் வார்டு சானிட்டரி இன்ஸ்பெக்டரால் செய்யப்படும். அவர் செய்ய வரும்போது தடுக்காமல், வாந்திபேதி கண்டவுடன் அவருக்குத் தெரியப்படுத்தி துணி, பாத்திரங்கள், படுக்கை முதலியவைகளை சுத்திகரிப்பதில் உங்களைவிட அவர்களுக்கு நன்றாய்த் தெரியுமாதலால் அவரைக்கொண்டு செய்யச் சொல்வதுடன் வாந்திபேதி பரவுதலையும் தடுக்கவேண்டும். துணிகளைத் தீயில் போட்டுக்கொளுத்துதல் மிகவும் உத்தமம். வாந்திபேதி கண்ட வீடுகளெல்லாம் அது முடிந்தவுடன் கந்தகப்புகைபோடுவதுடன், பினைல் ஜலத்தைத் தெளித்து சுண்ணம்பு அடித்து சுத்தம் செய்யவேண்டும்.

15. வாந்திபேதிக்காரர்களிடத்தில் நெருங்கி உதவி புரிந்துகொண்டுவந்த ஒவ்வொருவரும் தாகத்துக்கு சாப்பிடும் முன்னும், போஜனம் செய்யுமுன்னும், முகம், கை, கால்களை நன்றாய்க் கழுவிக்கொண்டு சாப்பிடவேண்டும். வியாதிக்காரர் இருந்த அறையில் சாப்பிடவே கூடாது.

டாக்டர் யு. ராமராவ்.

---

## நேத்ர ஸம்ரக்ஷணம்.



மனிதனுக்கு நேத்திரம் பிரதானமென்பது எல்லோரும் அறிந்த விஷயம். கண்களை ஒவ்வொருவரும் காப்பாற்றிக்கொள்வது அவசியம். இக்காலத்துச் சிறுவர்கள் அதிக பால்யத்திலேயே பீடிக்கப்படுகின்றனர். சிலர் தங்கள் கண்களை ஆரோக்கியமாய் வைத்துக்கொள்ளாமல் பார்ப்பவருக்கு அருவெருப்பையுண்டாக்கும்படி பிளிச்சை பொருக்கு துர்நீர் முதலிய அஸக்யங்களைக் கழுவாமல் கண்களிலேயே பத்திரமாயிருக்கும்படி விட்டுவிடுகிறார்கள். அசுசியாயிருந்தால் சுத்தம் செய்வது கஷ்டமாயிருக்கிறது. இவர்களின் ஸந்ததிகளின் கண்களும் இவ்விதமே ரோகத்தால் துன்புறுகிறதென்று சொல்லவேண்டியதவசியமே இல்லை. கண்களை நன்றாய்ப் பாதுகாத்தால் ஒருவிதக்கெடுதியும் அவைகளுக்கு நேரிடா. (1) கண்கள் சோர்வடைந்திருக்கும் போதும் வெளிச்சம் குறைவாயும் அல்லது அதிகமாயிருக்கும்போதும் திருஷ்டித்துப்பார்ப்பது பிசகு. (2) நாம் படிக்கும்போதும் எழுதும்போதும் விளக்கு வெளிச்சம் இடது புறத்திலிருந்து வரும்படிவைக்கவேண்டும். (3) படிக்கும் அறை குளிர்ச்சியாயும் நமது கால்கள் சூடாயும் கழுத்து தாராளமாயும் வைக்கவேண்டும். (4) படிக்கும் புஸ்தகம் கண்களுக்கு 15-அங்குல தூரத்தில் நேராக இருக்கவேண்டும் வண்டியின் மேற்பிரயாணஞ்செய்யும் போதும் படுத்திருக்கும் போதும் படிக்கலாகாது. (5) 15-அங்குலத்துக்கு மேற்பட்டால் தூரதிருஷ்டியும் குறைந்தால் சமீப திருஷ்டியும் உண்டாகி நேத்திர ரோகங்கள் ஏற்படும் (6) காலையிற் சாப்பிடுமுன் எழுதுகிறதாவது படிப்பதாவது அல்லது வேலை செய்வதிலாவது கண்களை உபயோகப்படுத்தக்கூடாது (7) வியாதிக்காரனாயிருந்து ஆரோக்யமடைந்த வேளையில் நேத்திரங்களை உபயோகிப்பது பிசகு. (8) விநோதார்த்தம் கண் விழிகளை திருப்பக்கூடாது. (9) கண்களுக்கு தூரதிருஷ்டியல்லது ஸமீப பார்வையுண்டாயிருந்தால் சுலோசனங்களை உபயோகிக்கவேண்டும். (10) நடக்கும்போது திருஷ்டியை தூர உபயோகிப்பதும் அடிக்கடி மாற்றுவதும் நேத்திரத்துக்கு அபாயம். (11) கண்ணீர் வரும்படியான காரியங்களைச்செய்யக்கூடாது. (12) கடுமையான நோய்கள் வந்தபோது உத்தமனான நேத்திர வைத்தியனிடம் காட்டவேண்டும். (13) அஞ்சனம் கலிக்கம் சுர்மா முதலியவைகளை உபயோகிப்பது தவறு. (14) நித்திரையிலிருந்தெழுந்தவுடன் அதிக வெளிச்சத்தைப் பார்க்ககூடாது.

(இன்னும் வரும்).

பூ. ப. செல்லக்குமாரக்கவுண்டர்,
கணக்கன்பட்டி.

---

## தேயிலையும் அதனால் உண்டாகும் தீமைகளும்.

இப்பூவுலகில் நாகரீகமதிகரிக்க அதிகரிக்க மனிதர்கள் தாகத்திற்கு தண்ணீர் அருந்துவதில் மாத்திரம் திருப்தியடையாமல், காப்பி, தேயிலை, கோகோ முதலிய பானங்களையும் பருகுகிறார்கள். காப்பி, தேயிலை, கோகோ முதலிய பானங்கள் சீதளமிகுந்த மேல்நாட்டிற்கே இன்றியமையாத பானமாகுமேயன்றி உஷ்ணப்பிரதேசமாகிய நம்மிந்திய நாட்டிற்குச் சிறிதும் ஏற்றதல்லவென்பதை எடுத்துரைப்போம்.

தேயிலையானது காப்பிக்கொட்டையைக்காட்டிலும் கொடிதாயும், நரம்புக்கூடுகளைத் தளர்ச்சியடையச்செய்வதாயும், மனிதசரீரத்தில் இயல்பாய் ஏற்பட்டுள்ள பித்தத்தைக் குறைத்து (Gall Stone) சரீரத்தை இளைக்கச்செய்வதாயும், மூட்டுவீக்கம், அதாவது மாமிசத்தையனுசரித்துக் காணுகிற ஓர்விதமான வாதரோகத்தை (Inflammatory Rheumatism) உண்டுபண்ணு

வதாயும் இருக்கிறது. காப்பி, தேயிலை, கோகோ, மதுபானம் முதலிய பானங்கள் நாளாவர்த்தியில் மனிதர்களின் ஜீரண சக்தியைக் கெடுப்பதில் மகாஉக்கிரமுள்ளதாயும் இருக்கிறது. பால பருவமுதற்கொண்டே ஏற்பட்ட இத்துர்ப்பழக்கங்களைக் கைக்கொண்டவர்கள் இவ்வகைப் பானங்களைப் பருகுவதனால் (Stimulant) ஓர்வித சுருசுருப்பு உண்டாவதாக நினைக்கிறார்கள். அது வாஸ்தவமே! பருகினவுடன் சுருசுருப்பைக்கொடுக்கும் இவ்வகைப் பானங்கள் சிறிது நேரத்திற்கெல்லாம், நவில முடியாத நரம்புத் தளர்ச்சியையும், ஆயாசத்தையும் உண்டு பண்ணுகிறதும் தவிர, ஆண்தன்மையையும் அடியோடு நசிக்கச் செய்கிறது. காப்பி, தேயிலை, புகையிலை, மதுபானம், அபின் முதலிய பழக்கமுள்ளவர்கள் அவ்வகை வஸ்துக்களை உபயோகித்தவுடன் ஓர்வித ஆனந்தக்களிப்பை அடைவதாக நினைத்து இடைவிடாது அவ்வஸ்துக்களை அருந்தி அவமே, செப்பொண்ணாத சிரமத்திற்காளாகிறார்கள் என்பது சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் தேத்தண்ணீரானது பருகினவுடன் ஓர்வித ஊக்கத்தையும், நாடிகளை தீவிரமாய் நடக்கச்செய்வதாயும், நித்திரையை வரவொட்டாமல் தடுக்கக்கூடியதாயுமுள்ள ஓர் பானமாகுமெனினும் அதனால் விளையும் தீமையோ அனந்தம். நமது பத்திரிகா நேயர்கள் இவ்வகைப் பானங்களைப் பருகுவதைக் காட்டிலும் நம்மால் இயற்றப்பட்டுள்ள "சுதேச வைத்திய ரத்தினம்" என்னும் புத்தகத்தில் செப்பி இருக்கிற கேழ்வரகுக் காப்பியேனும், கோதும்பைப்பாற் கஞ்சியேனும் பாவிப்பது பலவிதத்திலும் நன்மையைக் கொடுக்கும். சைனா, ஜப்பான் முதலிய தேசத்தவர்கள் தங்கள் சிறுவயது முதற்கொண்டே இவ்வகைப் பானங்களைப்பருக பழகிவருகிறார்கள். தேத்தண்ணீர் பருகுவதனால் மேற்கூறிய நோய்களுக்கு உள்ளாவதை அறிந்தும், நீண்டகாலமாகவும அபிரிமிதமாகவும்பாவித்து வருகிறார்கள். ஆனால் தேயிலையினால் உண்டாகும் தீமைகளை வரவொட்டாத விதமாய் இப்பானத்தைப்பக்குவம் செய்து பருகி வருகிறார்கள்.

## வர்த்தமானங்கள்.

ருஷியாவில் பேதி:—154,445 பெயர்களுக்கு பேதிகண்டதில் 74,723 பெயர்கள் எமனுக்கு விருந்தாளிகளானார்களாம்.

இத்தாலி:—நேப்பில்ஸ் நகரில் காலரா துவங்கிவிட்டது 22 புதிய கேஸ்களும் 14 மரணங்களும் சம்பவித்து விட்டது.



பையனும் முதலையும்:—ஈபோவில் ஒரு மலாய்ப்பையன் பாய்டு என்னுமிடத்துக்கருகில் ஆற்றில்குளித்துக்கொண்டிருக்கையில் முதலை ஒன்று அப்பையனை இழுத்துக்கொண்டு போய்விட்டதாம்.

சீனர்களும் வேர்க்கடலையும்:—சீனர் சாதத்துடன் ஒரு கையளவு வேர்க்கடலைப் பருப்பைச் சாப்பிடுவார்கள். இதனால் பித்தம் இல்லை, தேகத்துக்கு வலிவு ஏறுகிறது.

காங்கிரேஸ் அக்ராஸனாதிபதி:—இந்த வருஷம் அலகாபாத்தில் கூடப்போகிற காங்கிரெஸ் மகாசபையின் தலைமையை வகிக்க ஸர்வில்லியம் வெட்டர்பர்ன் அவர்கள் டிஸம்பர்மீ 16-ந்தேதி பம்பாய் வந்து சேருவாராம்.

முதலையின் பொக்கிஷம்:-எகிப்து தேசத்தின் கரையில் 28 அடி நீளமுள்ள ஒரு முதலையை ஒரு வெள்ளையன் சுட்டுக் கொன்று விட்டானாம். அதின் வயிற்றில் 319 தங்கப்பவுன் அடங்கிய தோற்பை ஒன்று இருந்ததாம். இதுவும் கலிகாலப்புதுமையே!

நூதன சிகிச்சை:—மின்சார சக்தியைக்கொண்டு கால் கை முறிந்தவர்களுக்கு குணப்படுத்தக்கூடிய சில பரீட்சைகள் பிரானஸில் கடந்தமீ 25-ம் தேதி பெரிய ஆஸ்பத்திரியில் நடைபெற்றதுடன் அவயவங்கள் முறிந்துபோன சிலர்களுக்கும் சிகிச்சை செய்யப்பட்டனவாம்.

புதிய எரிமலை:—நியுசீலந்து தீவைச்சேர்ந்த வாயிமாங்கு என்னுமிடத்திலே ஓர் எரிமலை புதிதாக அக்கினிகக்கத் தொடங்கியிருக்கிறது. இம்மலையின்மேலேயுள்ள பெரும் வெடிப்பால் அக்கினியும், கந்தகமும், சேறும் வெளியே வந்துகொண்டிருக்கின்றனவாம்.

போர்த்துகல்:—வருகிற டிசம்பர் மாதத்தில் பொர்த்துகல் மானுயல் அரசரை ஜெர்மனிக்கு வந்து போகும்படியாக ஜெர்மன் சக்கிரவர்த்தியவர் இராஜ அழைப்பு கொடுத்திருக்கின்றனர். இவ்விராஜ சந்திப்பானது மிகுந்த உன்னதமாக விருக்கவேண்டுமென இப்போதே காரிய நிர்வாகங்கள் செய்யப்படுகிறதாம்.

எதைத்தான் மனிதர்கள் புசியார்:—கொஞ்ச காலமாக இங்கிலாண்டில் நத்தையையுந் தின்ன ஆரம்பித்திருக்கிறார்கள். மீன் பிடிக்குஞ் செம்படவர்களைப்போல நத்தையைப் பிடிக்க ஓர் வகுப்பார் ஏற்பட்டிருக்கிறார்கள். ஒரு அணாவுக்கு 10 நத்தைகளை விற்று வருகிறார்களாம். ஒரே தடவையில் 120 முதல் 150 நத்தை வரையில் ஒரு மனிதன் சாப்பிடலாமாம்.

நம்பத்திரிகாபிமானிகளில் ஒருவரான திருவாவடுதுறை ஆதீனம் டிரஸ்டி ஸ்தானீகம் கட்டளை மடம் ஸ்ரீ வைத்தினாதத்தம்பிரான்சுவாமி அவர்கள் நமது பத்திரிகாபிவிருத்தியைக் கருதி, ரூபா 5 நன்கொடை அளித்திருக்கிறார்கள். பரோபகார சிந்தையும், பத்திரிகாபிமானமும் ஒருங்கே நிறைந்துள்ள ஸ்ரீ தம்பிரான் சுவாமியவர்களுக்கு நமது மனப்பூர்வமான வந்தனமளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**பூச்சிகள்:**—ஒருகாலத்தில் நாற்பதினாயிரம் கண்ணுக்குத்தெரியாத நுட்பமான சிறிய பூச்சிகள் உள்ளே புகுவதாயும், அவற்றில் நாற்பது மாத்திரமே வெளியே திரும்பி வருவதாயும் ஸ்ட்ராஸ் என்ற ஸாஸ்திர நிபுணர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். ஆகவே பாக்கியிருக்கும் 39,960 பூச்சிகள் மூக்கிலுந் தொண்டையிலுஞ் சுவாசாயங்களிலுந் தங்கி வியாதிகளுக்கு ஏதுவாகின்றனவென்று சொல்லப்படுகின்றது.

---

ஜியார்ஜ் சக்கரவர்த்தி அக்டோபர்மீ 19-ந்தேதி நமது புதிய கவர்னர் ஜனரலாகிய லார்டு ஹார்டிஞ்சை தமது அரண்மனைக்கு வரவழைத்து அவருடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தார், பின்பு லார்டு ஹார்டிஞ் அரசருடன் விருந்துண்டு திரும்பினார். லேடி ஹார்டிஞ்சும் அக்டோபர்மீ 20ந்-தேதி அரசரால் வரவேற்கப்பட்டு உபசரிக்கப்பட்டார்கள்.

---

**தென்னாப்பிரிக்கா:**—இந்தியாவினின்று மறுபடி அனுப்பப்பட்ட இந்தியர்களை ஏற்றிச்சென்ற 'சுல்தான்' கப்பலானது டர்பன் போய்ச் சேர்ந்தது. 32-பேர் கேப்டவுனுக்கு அனுப்பப்பட்டார் 28-பேர் நெட்டாலுக்குள் சேர்த்து கொள்ளப்பட்டனர். 18-பேர் திரான்ஸ்வாலுள் போவதற்கான ஏற்பாட்டின் தீர்மானத்தை யுன்னி கப்பலிலேயே தங்கியுள்ளனர். திரான்வாலுள் போக 33-பேர் திருப்தியான உரிமை காட்டினர். 18-பேர் இந்தியாவுக்குத் திருப்பிவிடப்படலாயினர். அந்தோ! இப்பரிதாபம் எப்போது நீங்குமோ.

---

**ஆப்கானிஸ்தானம்:**—அமீரவர்கள் சீக்கிரத்தி லொரு தர்பார் கூட்டப்போகின்றார், இத்தர்பாருக்கு அனேக ஜில்லாக்களின் பிரதிநிதிகளும், எல்லையோரமாயுள்ள அநேக ஜில்லாக்களின் பிரதிநிதிகளும் எல்லையோரமாயுள்ள அநேக மூல்லாக்களும் விஜயமாகும்படி ஆக்ஞாபித்துள்ளனர். எல்லைப்பக்கமாய் ஆயுத வியாபாரஞ் செய்பவர்களுக்கு நஷ்ட முண்டாக்கும்படியாக வேறு வியாபாரிகள்வந்து கள்ள வர்த்தகம் புரிந்துபோய்விட்டதால் நஷ்டமடைந்த வர்த்தகர்களுக்கு சொற்ப பண உதவிபுரிந்து சாவதானமுண்டாக்கலாயினர். காபூலில் காலரா பலமாக குடிகொண்டுவிட்டது. தினத்திற்கு சராசரி நூறு கேஸ்களுக்கு குறைவில்லையாம்.

---

**செல்வத்திற்குத்தக்க துக்கம்:**—மேற்றிசை நாடுகளில் சௌக்கிய லாபங்கள் விசேஷமாக விரும்பப்பட்டு வருவதில் அவர்கள் மனோ சமாதானத்தைக் கைவிட்டு விடுகிறார்கள். நாளுக்குநாள் நூதனவிதமான சௌகரிய சுகங்கள் மலிந்து வருகின்றன. அந்த செல்வத்திற்குத்தக்கபடி துக்கமும் நிகழ்ந்துகொண்டு வருகிறது. அடிக்கடி, பூகம்பம், கப்பற்சேதம், சமுத்திரவிபத்து, எரிமலைவீழ்ச்சி என்று பற்பல விதமாகக் கேள்விப்படுகிறோம். இப்போது ஸ்பெயினைச்சேர்ந்த ஸேவிலான் என்ற இடத்தில் ஒரு புதுமாதிரியான ரோகம் தோன்றியிருக்கிறதாம். அதற்கு அடையாளமாக கழுத்துப்புறங்களில் சிவப்பு கலந்த நிறமாய் சிறுபுள்ளிகள் காணப்படுகின்றனவாம். வியாதிகண்ட மூன்று நிமிஷத்தில் மரணம் உண்டாகிறதாம். இதுயதார்த்தமாகவே வியாதிதானோ, அல்லது பூச்சி கடியின் விஷம்செய்கிற வேலையோ யாதோ கிரகித்துக்கொள்வது கஷ்டமாயிருக்கிறது. இதுவும் ஓர் விந்தையே!


REGISTERED 1910

**சேலத்தில் பிளேக்:**—நாளது வாரத்திலும் பிளேக் மஹாமாரி இந்நகரில் அதிகமாகவேயிருக்கிறது. கடந்த நவம்பர் மாதம் 4உ முதல் 10உவரை 124-பேர் பிளேக் நோயால் பீடிக்கப்பட்டு 105-பேர் மரணமாயினர். பிளேக் ஆரம்பித்த ஆகஸ்ட் மாதத்தில் அதனால் பீடிக்கப்பட்டவர்கள் 77-பேர், மரித்தவர்கள் 64-பேர். செப்டம்பர் மாதத்தில் பீடிக்கப்பட்டவர்கள் 299-பேர், மரித்தவர்கள் 250-பேர். அக்டோபர் மாதத்தில் பீடிக்கப்பட்டவர்கள் 284-பேர், மரித்தவர்கள் 266-பேர்கள். நவம்பர்மீ 1உ முதல் 10உவரை பீடிக்கப்பட்டவர்கள் 169-பேர், மரித்தவர்கள் 149-பேர். நவம்பர் 10உவரை இந்நகரில் பிளேக்கால் பீடிக்கப்பட்டவர்கள் மொத்தம் 829-பேர், மரித்தவர்கள் மொத்தம் 729-பேர். இதுதவிர இங்கிருந்து வெளியூர்களுக்குப்போனவர்களிலும் அநேகர் மரித்திருக்கின்றனர். இன்னும் கணக்குக்குவராத மரணங்களும் இருக்கலாம். சேலத்தைச்சுற்றி பல ஊர்களிலும் பிளேக் நோய் பரவி மரணங்கள் உண்டாகின்றன. நாளது வாரத்தில் ஆத்தூர் சுக்கம்பட்டி, அழகாபுரம், நாழிக்கல்பட்டி முதலிய ஊர்களில் தலைகாட்டி மரணங்களுண்டானது. நாழிக்கல் பட்டியில் இதுவரை 11-மரணங்கள் உண்டாயிருப்பதால் அவ்வூரை காலிசெய்யப் போகின்றனர். ஊரில் முக்கால் பாகத்துக்குமேல் காலியாகிவிட்டது. இனாக்குலேஷன் அதிகமாகச் செய்யப்படுகிறது. கடந்த மாதத்தில் மட்டும் 9468-பேர் இனாக்குலேஷன் செய்யப்பட்டார்கள். கிரோஷினாயில் எமல்ஷனால் 1500-வீடுகளுக்குமேல் சுத்தஞ்செய்யப்பட்டிருக்கிறது. அவ்வேலை வெகு மும்முரமாய் நடக்கிறது. தவிர அரிசிப்பாளையத்தில் ஒரு சேடன் வீட்டில் 7-பேர் பிளேக் நோயினால் மரித்துப்போகவும், ஷை சேடன் இவ்வுலக வாழ்வை முற்றிலும் மறந்து தனது 5-வயதுள்ள ஒரு பையனைக்கிணற்றில் நவம்பர்மீ 7உயன்று எறிந்துவிட்டு தானும் குதித்துவிட்டான். என்ன பரிதாபம்! மறுநாள் பிரேதம் கண்டெடுக்கப்பட்டு அடக்கஞ்செய்யப்பட்டது. அந்தோ! பரிதாபம்.

---

## வைத்தியக் குறிப்புகள்.

**அந்தர்க்கதஜ்வரம்:**—இதுவே உட்சுரம். அஸ்திவெட்டை, அஸ்திகதஜ்வரம்:—இதற்கு 1 ஆழாக்கு வெந்நீரில் 1 விராகனிறை விஷ்ணுக்கிராந்தி சேர்த்து, 2 மணி நேரம் ஊறவைத்து அதில் ¼ ஆழாக்கு வீதம் தினம் 3 தடவை கொடுக்கவும்.

**ஏலாதி வடகம்:**—ஏலம், லவங்கப்பட்டை, திராக்ஷப்பழம், திப்பிலி வகை 1-க்கு பலம் 1. அதிமதுரம், சருக்கரை, பேரீச்சம்பழம், வகை 1-க்கு பலம் 3, இவைகளை இடித்து கழர்ச்சிக்காய் பிரமாணம் உருண்டை செய்துகொள்ளவும். இதன் உபயோகம்:—அக்கினி மாந்தியம், பித்தாதிகம், வயிற்றுவலி இவைகளுக்கு 1 அல்லது 2 உருண்டை கொடுக்கலாம்.

**ஜம்பீராதி கிருதம்:**—எலுமிச்சம்பழ ரசம்படி 1, பசுவின் நெய் படி 1½ இவைகளைச்சேர்த்துக் காய்ச்சி பதத்துக்கு வரும்போது வடிகட்டி அதில் பரங்கிச்சக்கை பலம் 2, சுக்கு, திப்பிலி, மிளகு, வகைக்கு பலம் ½, சீரகம் பலம் 1, இந்துப்பு பலம் ½, கல்லுப்பு பலம் ½, வஸ்திர

காயம் செய்த இலைகளின் பொடியைத்தூவி பதத்திலிறக்கிக்கொள்ளவும். இதன் உபயோகம்:—எவ்விதமான பித்தரோகங்களுக்கும் வேளையொன்றுக்கு விராக நிறை 1-வீதம் தினம் 2, 3 தடவை உபயோகித்துவரவும்.

**பிரான்ஸ் தேசத்திற் பிரசுரமாகும் ஒரு வைத்தியப்பத்திரிகை:—** ரோகிகளுக்கு ஆகாரத்தில் உப்பைக்குறைத்துச் சிகிச்சை செய்வதால் சீக்கிரம் அனுகூலம் கிடைக்குமென்று சில வைத்தியர்கள் அபிப்பிராயப்படுவதாகச் சொல்லுகின்றது. இந்த அபிப்பிராயத்தை ஜெர்மானிய வைத்தியர்களும் அங்கீகரிக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள், கரப்பான்வந்து அவஸ்தைப்படும் குழந்தைகளுக்கு உப்பை நாலிலொரு பாகமாகக் குறைத்து ஆகாரங்கொடுத்து வந்தால் ஒரு மாதத்திற்குள் குணமாகிவிடும் என்று கண்டுகொண்டிருக்கிறார்கள். கரப்பான், சர்மரோகம், வாதரோகம் முதலிய வியாதிகளுக்கு நம் ஆயுர்வேத வைத்திய முறைப்படி உப்பில்லாத பத்தியம் வைப்பது இன்றைக்கும் இந்தியாவில் கையாளப்பட்டு வருவது ஒவ்வொருவரும் அறிந்த விஷயமே, தற்காலத்தில் மேனாட்டு வைத்தியர்கள் நவீனமாகக் கண்டுபிடித்ததாகச் சொல்லும் ஒவ்வொரு சங்கதியும் நம்மிந்திய நாட்டில் பழமையான விஷயமாகவே இருந்துவருகிறது. அறிவின்மையால் நம்மிந்திய ஆயுர்வேதத்தைத் தூஷித்துப் பரிகசிக்கும் அறிவிலிகளுக்கு இதைவிட வேறு அத்தாக்ஷியும் வேண்டுமோ!

## விசித்திர விஷயங்கள்.

**ஒரு புதிய வண்டி:—** பிரஞ்சு யுத்த அதிகாரிகள் நிலத்திலும் நீரிலும் தானாக ஓடும் ரதமொன்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இது நால்வரை ஏற்றிக்கொண்டு நிலத்தில் மணி 1-க்கு 40 மைல் வீதமும், நீரில் 12 மைல் வீதமும் செல்லுமாம்.

**பேசுங்கடிகாரங்கள்:—** ஸ்விட்ஸர்லாண்டில் முகமும் முள்ளுமில்லாத நூதனவகையான கடிகாரங்கள் செய்யப்படுகின்றன. இந்தக் கடிகாரங்களைப்பார்த்து மணி தெரிந்துகொள்ள முடியாது. தெரிந்துகொள்ள வேண்டுமானால் ஒரு பொத்தானை அழுத்தவேண்டும். அப்போது இத்தனை மணியென்று கடிகாரம் சத்தமிடும். பேசுங் கடிகாரமும் வந்துவிட்டன.

நைகோலாஸ்டெஸ்லா வென்னும் பேர்பெற்ற மின்கார மேதாவி இப்பொழுது கம்பியில்லா தந்திபோல் கம்பியில்லா மின்சார விளக்கு (Wire less Electric Light) கண்டு பிடித்திருக்கிறார். இப்பொழுது அவருடைய வேலைச் சாலையில் அதற்கு வேண்டிய இயந்திரங்கள் தயார் செய்யப்பட்டுவருகின்றன. முதலாக நியூயார்க்கு கடற் றுறையில் 100 மையிலுக்கு விளக்கிடப்போகின்றார்.

மலைகள் சிறகுடையனவாய் முந்நாளில் பறந்தனவென கதைகளில் படித்திருக்கின்றோம். இப்பொழுது ஒரு இயந்திரத்தால் அவைகளை அந்த மாதிரி பறக்கச்செய்யக்கூடுமெனக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் அதன் வேகமட்டும் சற்றுக் குறைவாயிருப்பதாக ஊகிக்கப்படுகிறதாம்.



எலிகளைக்கொல்ல ஒரு புதுமாதிரியான இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கூட்டுக்குள் மின்சார விளக்கும் அதனாலுண்டான தீனியும் காணப்படுகின்றன. எலி உள் நுழைந்தவுடன் மறுபடி திரும்ப முடியாமல் 50, 60, சகண்டுகளுக்குள் உயிர்துறக்கிறது. இதோடு விடாது அது இறந்தது என்றுகூட தெரிவிக்கக்கூடிய அமைப்பும் வைக்கப்பட்டிருக்கிறதாம்.

ஒரே கூரையுடையதாயும், நடுவில் யாதொரு விதமான தூண் முதலிய சார்பு மின்றி ஒரு கட்டிடம் ருஷிய நாட்டிற்கு பிரதான பட்டினமாகிய செண்டு பீட்டர்ஸ் பர்க்கிலிருக்கிறது. அது நீளத்தில் 620 அடியும் அகலத்தில் 150 அடியுமுள்ளது. பகலில் துருப்புகள் படை பயிலகூடியதாயும், இரவில் 20000 வத்திகளிருந்தால்தான் வெளிச்சம் கொடுக்கக்கூடியதாயு மிருக்கிறது. இது ஒரே ஒரு இரும்பு ஓட்டின் பலத்தில் நிற்கின்றது.

பெரிய பட்டணங்களில் உள்ள மாடிவீடுகளில் தீப்பிடித்து எரியும் போது சிலர் கட்டிடங்களிலிருந்து வெளியே வர முடியாமல் அக்கினிக்கு இரையாவதாக கேள்விப்படுகிறோம். இதுவரையில் இதனை நிவர்த்தி செய்ய முயன்றதாக தெரியவில்லை. இப்பொழுது நியூயார்க்குப் பட்டினத்தில் ஒரு ஆன்மாகாப்பாற்றும் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாயும் அதனை சுட்டமாத்திரத்தில் ஒருமெல்லிய நூல் அதன் வழிச்சென்று அதன் கடைசியில் ஒரு பலமான கயிறு கட்டப்பட்டிருப்பதாயும் அதனைக் கண்டு பிடித்து உயிருடன் இறங்கும் படியாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதாம்.

## ஹாஸ்யத்துணுக்குகள்.

பத்துப் பெரிய மனுஷியாள் சேர்ந்து சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், ஒரு வக்கீல் "எனக்கு மந்த புத்தியுள்ள புத்திரன் பிறக்கும் பக்ஷத்தில், அவனுக்கு இரண்டு வேலி நிலம் வாங்கிக்கொடுத்து விவசாயத்தில் போடுவேன்" என்று சொன்னார். உங்களது தகப்பனாருக்கு அப்படிப்பட்ட அபிப்பிராயம் இல்லாமற் போயிற்றல்லவா! யென்று அங்கிருந்த ஒரு குடித்தனக்காரன் பரிகாசமாய்ச் சொன்னான்.

ஏதாவதொரு துக்ககரமான சமாசாரம் தனக்குத் தெரிந்திருக்கும் பக்ஷத்தில் அதனைக் களபோஸ் காமம்மாள் போஜன காலத்தில் எல்லாருடனும் சொல்லுவாளாம். அப்படிச் சொல்வதனால் மாசமொன்றுக்கு இரண்டு மூட்டை அரிசி மிஞ்சிப்போகுமாம்.

---

**Vol. 1. அக்டோபர் & நவம்பர்மீ வைத்தியபோதினி.**
**143 பக்கம் வீ. ஆதி தஞ்சாவூர் விடுகதை வினாவுக்கு விடை.**



இதில் நேர் வரிசைகள் 10-ம் மூலை வரிசைகள் 2-ம் ஆக வரிசைகள் 12 இவற்றுள் வரிசைக்கு 5 மரங்கள் வந்தமை காண்க.

**கணக்கறியாதவன்,**
சூலூர்.
கோயம்முத்தூர்.

# ARYAN INITIATION!
OF THE
# SPIRITUAL BROTHERHOOD!!
OF THE
# INDIAN ACADEMY OF SCIENCE. !!!

Under the guidence of an Adept Master of the Brotherhood, a special Course of Lessons is now ready to initiate you into all the mysteries of LAYA and MANTRA YOGA of the Aryans giving practical methods for HINDU-HYPNOTISM, MESMERISM, TELE-PSYCHY, WILL-CULTURE, SPIRITUAL, HEALING, CLAIR-VOYANCE CALIR AUDIENCE CLAIR-SENTIENCE, SPIRIT-COMMUNATION, MEDIUMSHIP and other wonderful secrets for attracting SUCCESS, HEALTH, SPIRITUAL POWER and Soul-Bliss, as practised by the ancient Aryan Adepts.

This Course is the first of its kind in the world and anybody knowing to READ and WRITE ENGLISH can master it and practice its teachings to a wonderful degree.

With a complete outfit and fine Diploma of Membership of the 1st degree.

Price, Rs. 10 for the first 500 enrolments. The price will be raised to Rs. 15 shortly. Persons ordering the course should send a copy of their photos along with money in ADVANCE, No. V. P. System. Look sharp!

SELF-CULTURE, a Monthly Official Journal of the Indian Academy of science, is devoted to Mental, Psychic, Spiritual and Occult Sciences Philosophy, Spiritualism, Health-Culture, Vedanta and other Esoteric phases. It is edited by Dr. K. T. Ramasami, Dr. J. M. Peebles of (America) and Prof, J. M. Severn (of England.) Besides it has an able crops of contributors.

Annual subscription. Rs. 3, to India. Foreign Sh. 4; To School Students and all Missionaries at a reduced rate of Rs. 2.

Send all orders and remittance direct to

*The Manager,*
**THE INDIAN ACADEMY OF SCIENCE,**
**KIZHANATTAM, Tinnevlley, Dist. S. India.**

---

## சுத்தமான வெள்ளிப் பாத்திரங்கள்.



கூஜா, டம்ளர், செம்பு, பஞ்சபாத்திரம், கிண்ணி, டீசெட், காப்பு, புதுச்சேரி கொலுசு, பட்டை கொலுசு முதலியவை மிகவும் நேர்த்தியான வேலைப்பாடுள்ளவைகளாய் விற்பனைக்கு தயார் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. வேண்டியவர்கள் உடனே எழுதவும்.

**V. B. வெங்கடேசம் செட்டியார்,**
பெரிய தெரு கும்பகோணம்.







## காசி வயிரவர் கயிறு.

| | | | |
|---|---|---|---|
| முதல் நெம்பர் 100-க்கு ... ... | 3 | 0 | 0 |
| 2-வது நெம்பர் 100-க்கு ... ... | 2 | 8 | 0 |
| 3-வது நெம்பர் 100-க்கு ... ... | 0 | 6 | 0 |

விலாசம், மானேஜர்,
பட்டு பீதாம்பரக் கம்பெனி, காசி,
Benares City.

---

## குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை, வெங்கலத்தால் செய்த செம்பு, குடம், கரண்டி முதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு

| | | | |
|---|---|---|---|
| செட்டு 1-க்கு ரூபா | 2 | 0 | 0 |
| பெரிய செட்டு 1-க்கு ரூபா | 4 | 0 | 0 |

உடனே எழுதுங்கள். விலாசம் மானேஜர்,
பட்டு பீதாம்பரக் கம்பெனி, காசி,
Benares City.

---

## மடிதாவளிகள் வைதீகர்களுக்கு.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | முழம் 1-க்கு ரூபா | 0 | 14 | 0 | 9 | முழம் 1-க்கு ரூபா | 2 | 0 | 0 |
| 6 | „ „ „ | 1 | 4 | 0 | 10 | „ „ „ | 2 | 8 | 0 |
| 7 | „ „ „ | 1 | 8 | 0 | 12 | „ „ „ | 3 | 8 | 0 |
| 8 | „ „ „ | 1 | 12 | 0 | 15 | „ „ „ | 4 | 4 | 0 |

தபால் சார்ஜ் பிரத்தியேகம். விலாசம், மானேஜர்,
பட்டு பீதாம்பரக் கம்பெனி, காசி,
Benares City.

---

உருத்திராக்ஷங்கள் !! ஜபமாலைகள் !!

## பரிசுத்தமானது.

108 உள்ளமாலை 1-க்கு 6. அணா முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6 முககண்டிகள் 33 உள்ளது கண்டி 1-க்கு ரூபா 1-முதல் 10-வரை. 5 முககண்டி 32 உள்ளது கண்டி 1-க்கு அணா 10 முதல் ரூபா 10 வரை. விலை அதிகப்படுவது போல் மணிகள் பெரிதாக இருக்கும்.

சம்மதமில்லாததைத் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

விலாசம் மானேஜர்,
பட்டு பீதாம்பரக் கம்பெனி, காசி.
Benares City.

---

பனி ! பனி !! பனி !!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி, ரோமத்தால் செய்த உறுதியும், நைஸும், நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள், 6-முழம் நீளம் 3-முழம் அகலம், செகப்பு முதலிய சகல நிறத்திலுந் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூ. 5—0—0. தபால் செலவு பிரத்தியேகம்.

விலாசம் மானேஜர்,
பட்டு பீதாம்பரக் கம்பெனி, காசி.

# COMPLETE LETTER WRITER.

**2nd Edition Revised and Enlarged**

BY

HARI CHARAN DAS

**Price Re. 1** (*Full cloth Gilt 320 pages.*)

A universal Guide to the Art of Letter writing for all positions of life.

IT CONTAINS CHAPTERS ON :—1. Private correspondences, 2. News paper, 3. Doctors, 4. School correspondences, 5. Government & Commercial, 6. Collector's office, 7. Attorneys, Vakils and muktears, 8. Steamer, 9. Police, 10. Municipality, 11. Income-tax, 12. Railways, 13. Tramways, 14. Medical department, 15. Postal department, 16. Telegraph department, 17. Precis writing, 18. Drafting, 19. Docketing, 20. Book keeping, 21. Miscellanious forms, 22. Miscellaneous applications forms, 23. Forms of Address, 24. Paper currency, Abbreviations and daily wages.

A copy of the valuable book will dispense with the necessity of seeking the help of others for writing letters or applications, etc.

**ENGLISH ETIQUETTE & PROVERBS.**

A very useful book for those who have to come in contact with Englishmen Price 5 annas only.

**M. L. DAS & Co.,**

**Book-sellers & Publishers,**

*122, Baitakkhana Road, Calcutta.*

---

ஓம் : வந்தேமாதரம்.

## பாலசந்திர பற்பொடி.

கல்நார் பஸ்பம் முதலிய சுதேச அவுஷத முறையையும், கார்பாலிக் ஆசிட் முதலிய இங்கிலீஷ் முறையையும் அனுசரித்து தயார் செய்யப்பட்டிருக்கிறது. எவ்விதமான பல்நோயையும் தவராது தீர்த்து உறுதியாய் இருக்கும்படி செய்யக்கூடிய குணமுடையது. அநேக கனதனவான்களால் நற்சாக்ஷிபத்தி மளிக்கப்பட்டிருக்கிறது. சகல மானவர்களும் உபயோகிக்கவேண்டியதற்காக 1-அவுன்ஸ் அடங்கிய சீசா 1-க்கு அணா 2. டஜன் 1-க்கு ரூபா 1—2—0.

ஆலங்குடி முதல்தரமான இருவாளிப்பு பாக்குவெட்டிகள் 0—3—6 முதல் கிடைக்கும். வியாபாரிகளுக்கு தகுந்தகமிஷன் கொடுக்கப்படும்.

N. A. S. Iyer F. T. S.
புரோப்ரைட்டர்,
**பாலசந்திர டிரேடிங் ஹால்,**
ஆலங்குடி, நீடாமங்கலம் *S. I. R.*

கும்பகோணம் ஆனரயில் திவான்பகதூர் மகாகனம் பொருந்திய R. ரெகுநாதராயர் அவர்கள் C. S. I. சொல்லுகிறதாவது,

I have used this tooth powder. I found it usefull.

(Sd.) R. RAGUNATHA RAO.



## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

28. **பிரஹத் சந்திரோதய மகாத்வஜம்** :—தாது நஷ்டம், பலஹீனம், புருஷத்தன்மை இல்லாமை, இந்திரிய நஷ்டம், சொப்பனஸ்கலிதம், புத்தி பிரமை, மறதி, விந்துக்ஷீணம், சீக்கிர ஸ்கலிதம் முதலிய பற்பல ரோகங்களை வேருடன் கொன்று அபரிமிதமான புருஷத்தன்மையைத்தரும். சந்தேகமில்லை. இம்மருந்து சாப்பிடத் தொடங்கின நாள்முதல் நாளுக்கு நாள் இதன் சிறந்த குணத்தைக்காட்டும். பாலியத்தில் சிற்றின்பத்தில் நுழைந்து புருஷத்தன்மையை சீங்கிரத்திலிழந்து பரிதவிப்போர்கள் இம்மருந்து சாப்பிட்டுவந்தால் வெகு சீக்கிரம் பூரண புருஷத்தன்மையை திரும்பப்பெற்று சுகிக்கலாம் என்பது நிச்சயம். ஏழு வேளை ஔஷதம் ரூபா. 3. வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

29. **சவன பிராசனம்** :—இம்மருந்தினால் ஈளை, இருமல், சுவாசகாசம், க்ஷயம், தொண்டை ரணம், கபம், இன்னும் நுரை ஈரலைப்பற்றிய எல்லாவித வியாதிகளும் வெகு சீக்கிரத்தில் தடையின்றி தீரும். இம்மருந்து பலஹீனத்தைப்போக்கி தேகத்திற்கு வலுவையும், தேஜஸையும், காந்தியையும் தரும். சவன மகாரிஷியவர்களுக்கு இம்மருந்து தேவர்களால் செய்து கொடுக்கப்பட்டு ரிஷி பாலிய திசையடைந்ததாக ஆயுர்வேத சாஸ்திரத்தில் கொண்டாடப்பட்ட சவன பிருசனம் என்னும் சிறந்த ஔஷதம். டப்பா 1-க்கு ரூபா. 2. வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

30. **மகாத்துவஜம்** :—இம்மருந்திற்கு ஒப்பான ஔஷதம் ஆயுர்வேதத்தைத் தவிர வேறெந்தவகை மருந்து சாஸ்திரத்திலேயும் கிடையாது, இம்மருந்தினால் தீராத வியாதியாவது குணமடையாத வியாதியாவது கிடையாது. அநேக வியாதிகளுக்கு இது கைகண்ட ஔஷதம். எக்காரணத்தினாலுண்டாகும் தாது நஷ்டம், பலஹீனம், மதுமூத்திரம், அதிமூத்திரம், மூத்திர அடைப்பு, பிரமேகம் முதலிய இன்னும் அநேக மூத்திர நோய்களும் எல்லாவித சுரங்களையும், ஜலுப்பு, இருமல், க்ஷயம், சாசம், அஜீரணம், நீர்க்கோர்வை, பாண்டு, சோகை, காமாலை, மயக்கம், சித்த பிரமை, காலரா, பிளேக், ஆண்குறி துவளல், ஸ்திரீகளுக்கு கர்ப்பமாயிருக்கும்பொழுதும் பிரசவித்த பின்பும் காணும் சகல நோய்களையும், நரம்புகளின் பலஹீனம் முதலிய இன்னும் அநேகவித வியாதிகளையும் குணமாக்கும். மூளையைப்பலப்படுத்தும். இம்மருந்து தங்கம் முதலியதுகள் சேர்த்து செய்யப்பட்டிருக்கின்றது. விலை தோலா 1-க்கு ரூபா. 24. ஏழு வேளை ஔஷதம் ரூபா. ஒன்று. வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

31. **வசந்த குசுமாகரம்** :—சர்க்கரையோடு கூடியதும் அதாவது மதுமேகம், சர்க்கரையில்லாததுமாகிய நீரிழிவு, பிரமேகம், மூத்திரகிருச்சிரம், தாது நஷ்டம், பலஹீனம், உடல் வெளுப்பு, இந்திரிய நஷ்டம், அதி தாகம், இருமல், நாக்கு வரண்டு போகுதல், களைப்பு, மய

பி. சுப்பறாயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

க்கம், அசதி, கைகால்கள் எரிச்சல் முதலிய அநேக வியாதிகள் சீக்கிரம் அடியோடு குணமாகும். மிகவும் விலையுயர்ந்த ஔஷதம். இது செய்வதில் முத்து, தங்கம், கஸ்தூரி முதலிய இன்னும் விலைபெற்ற சாமான்கள் சேருகின்றன. ஏழு வேளை ஔஷதம் விலை ரூபா. 5. வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

32. இரத்த சுத்தி:—தேகத்தில் இரத்தம் கெட்டு போகுதலால் உண்டாகும் வாய்ப்புண், கண்ணோய், புண்புரைகள், மேஹரணங்கள், மேகதடிப்பு, அரிப்பு, படை, குஷ்டம் முதலிய சரும வியாதிகள், பலஹீனம், அசதி, வாதப்பிடிப்பு, தலைவலி, அக்கினி மாந்தம், அரோசிகம், வாய்கசப்பு, தேகத்தில் நாற்றம், மகோதரம், தோல்நிறம் மாறுதல் தோலில் சொரணையற்றுப்போகுதல், புத்தி மந்தம் முதலிய பற்பல வியாதிகள் குணமாகும். ரத்தத்திலுள்ள நஞ்சைப்போக்கி, சுத்தப்படுத்தி, தேகவலிவு, தேஜஸ், நல்ல பசி, தாதுபுஷ்டி யுண்டாக்கும். 20 நாளைக்குப்போதுமான மருந்து டப்பா 1-க்கு ரூபா. 2, வி. பி. செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

33. சித்த மகரத்துவஜம்:—இது மகரத்துவஜத்தை விட சிறந்த ஔஷதம். இதனால் தீராத வியாதி ஒன்றுமில்லை. சர்வ சுரங்கள், காசம், இருமல், க்ஷயம், அக்கினி மாந்தம், காலரா, சீதபேதி, ரத்த பேதி, சகல வாயுவு, இன்னும் எல்லா வியாதிகளும் தீரும். இம்மருந்து உபயோகித்தவருக்கு ஆயுசு 100 வருஷமானாலும் பூரண புருஷத்தன்மை குறையாமலிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தோலா 1-க்கு ரூபா 80. ஏழு வேளைக்குள்ள மருந்து ரூபா. 3. வி. பி. செலவு பிரத்தியேகம்.

34. வாயு சம்ஹாரி:—கை. கால், கணுக்களின் பிடிப்பு, வீக்கம், கடுப்பு, கால் முடக்கு, தேகத்தில் உளைச்சல், குற்றல், குடைதல், தலைநோய், பக்கசூலை, பார்சவாய்வு, திமிர்வாய்வு, அஜீர்ணம், குன்மம், அண்டவாய்வு, சூலை வாதம், மல சலக்கட்டு முதலிய அநேகவித வாய்வு ரோகங்களும் தீரும். டப்பா 1-க்கு விலை ரூபா. 1. வி. பி. செலவு 1 முதல் 3 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

35. காலறா என்னும் வாந்தி பேதிக்கு மருந்து:—இக்கொடிய நோய்க்கு இது கைகண்ட ஔஷதம். டப்பா 1-க்கு ரூபா ஒன்று. வி. பி. செலவு 1-முதல் 3 டப்பாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

36. மலபந்த நிவாரணி:—மலஜலக்கட்டு, அக்கினி மாந்தம், வாயுவு, குடல் புரட்டல், மூலச்சூடு, காந்தல், இளைப்பு, மூலம், செரியாமை, புளித்தயேப்பம் தீரும். தினம் தப்பாமல் காலாகாலங்களில் மலம் உதயமாகும். டப்பா 1-க்கு விலை அணா 10. வி. பி. செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

பி. சுப்பறாய், பாங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
20 JAN 1911
MADRAS.

# வைத்திய போதினி.

162396

சித்திரப் படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

புத் 2. } 1911-ஷு ஜனவரிமீ 1௳ { ... 1.

## சூரிய கிரணமும் அதன் உபயோகமும்.

இப்பூவுலகில் புராதனமாக ஏற்பட்டுள்ள வியாதிகளோடு தற்கால நாகரீகத்திற்கேற்றவாறு நவீனவியாதிகளும், ஏற்பட்டு மனித சமுகத்தை மாய்த்து வருகிறதென்பதை ஒருவராலும் மறுக்கக்கூடாத விஷயமேயாகும். ஆனால் நவீனமாக பல வியாதிகள் ஏற்பட்டுவருவதுபோலவே அந்நோய்களுக்கு சிகிச்சைமுறைகளும் பற்பலவிதமாய் நாளுக்குநாள் புதிது புதிதாகவே ஏற்பட்டு வருகிறது. அவற்றுள், ஆலோபாதி, ஹோமியோபாதி, எலக்ட்ரோ ஹோமியோபாதி, க்ரோமோபாதி முதலிய நவீன வைத்திய சாஸ்திரங்கள் வெளிவந்தும், இவைபோன்ற இன்னும் அநேக சிறிய பெரிய நூல்களும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. ஆனால் இந்நவீன முறைகளடங்கிய புத்தகங்களை இயற்றியவர்களின் அபிப்பிராயங்கள் ஒன்றேயாகும். ஆனாலும் அன்னவர்களால் எழுதப்பட்டிருக்கும் அவுஷதங்களும் அவற்றினைப்பக்குவம் செய்து பாவிக்கும் வழிகளும் வேறுபட்டிருக்கிறது. இவ்விதமாகவே சிலர் இயந்திர சகாயத்தினாலும் வியாதிகளை சுவஸ்தப்படுத்தி வருகிறார்கள். சிலர் தண்ணீரையே உபயோகித்தும், இன்னும் சிலர் சூரிய கிரணத்தினாலும் உபாதிகளை சுவஸ்தம் செய்துவருகிறார்கள். நாட்பட்ட முடக்குவாதம், மூட்டுவீக்கம், மார்வலி, வயிற்றுவலி, முதலிய வாதரோகங்களை இயந்திரத்தினுதவியைக்கொண்டு குணப்படுத்த அமெரிக்காவிலுள்ள டாக்டர்கள் சில இயந்திரங்கள் கண்டுபிடித்திரு

க்கிறார்கள். ஐரோப்பாவிலுள்ள சில டாக்டர்மார்கள் சூரியகிரணத்தைக்கொண்டு சர்வரோகங்களையும் சுலபமாய் சுவஸ்தம் செய்துவிடக்கூடுமென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அதைப்பற்றி இதனடியில் சற்று விவரிப்போம்.

சிறிது நாட்களுக்குமுன் மேல்நாட்டிலுள்ள "கோபன்ஹேகன்" என்ற பட்டிணத்திலுள்ள டாக்டர் ஒருவர் சூரியக்கிரணத்தினும் மின்சாரவெளிச்சத்தினாலும், வியாதிகளை வரவொட்டாமல் தடுக்கும் விதத்தைக் கண்டுபிடித்தார். ஆனால் எவ்வித அசாத்தியமான ரோகங்களாயிருப்பினும் தவறாது சுவஸ்தம் செய்யக்கூடுமென்றும், இது விஷயத்தில் தனக்குப்போதிய அனுபோகமிருப்பதாகவும் சொல்லுகிறார். லண்டன்மாநகரத்திலுள்ள இளவரசியாரவர்களுக்கு இவ்விதப்பிரயோகத்தினிடத்து ஓர்விதப் பிரீதி ஜனித்து அதைப் பரவச்செய்வதற்காக அவ்விடத்திய வோயிட் சாபில் (White chapel) என்னும் இடத்திலுள்ள லண்டன் அஸ்பத்திரியில் இவ்விதப் பிரயோகங்களைச்செய்யுமாறு ஓர் பிரிவை ஸ்தாபிதம்செய்து அதற்காகத்தன் சொந்தத்தில் 5000 பவுன் செலவுசெய்து அது சம்பந்தமான கருவிகளை வரவழைத்துக்கொடுத்திருக்கிறார். அவ்வகைப்பிரயோகமானது இற்றைக்கும் இங்கிலாந்திலுள்ள மேற்கூறிய அவுஷதாலயத்தில் நடைபெற்று வருகிறது.

இவ்வகைக் கிரணத்தினால் பிணியுற்றோர்களைச் சுவஸ்தம் செய்வது மிக்க ஆச்சர்யகரமாயிருக்கிறது. இவ்வாஸ்பத்திரியில் பிரதி தினமும் மாலை 2 மணி முதல் 5 மணிவரையில் ரவிகிரண சிகிச்சைகள் செய்யப்பட்டுவருகிறது. அது எப்படியெனில் பிணியாளர்களை ஓர் ஊஞ்சலாடும் நாற்காலியில் வீற்றிருக்கச்செய்து ஷை பிணியாளியின் முன் அணியில் ஓர் மின்சார விளக்கைத் (Electric light) தொங்கவிட்டு வைத்திருப்பதுடன் ஆங்காங்கு தூரதிருஷ்டிக்கண்ணாடி (Microscope) களும், பல அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்ஙனமமைக்கப்பட்டுள்ள தூரதிருஷ்டிக்கண்ணாடிகளின் வழியாய் சூரியக்கிரணம் ஊடுருவிச்சென்று நோயாளியின் தேகத்தில் தாக்குகின்றது. தவிரவும் பிரதி நோயாளியினிடத்தும் ஓர் தாதி (Nurse) நின்று கொண்டிருப்பாள் அவள், சமயோஜிதம் போல் ஷை தூரதிருஷ்டிக்கண்ணாடிகளை நோயாளியின் பேரில் சூரியக்கிரணம் படும்படியாய் ஏற்பாடு செய்துகொண்டிருப்பாள் இதைப்பற்றி இன்னமும் தெளிவாய் வரையவேண்டுமென்பது எமது அபிப்பிராயம். நமது பத்திரிகாநேயர்கள் ஒவ்வொருவரும், சூரியக்கிரண



மென்பது என்ன? மின்சாரவிளக்கின் வெளிச்சமென்பதென்ன என்பதை அறிந்தே இருப்பார்கள். இவ்வகை வெளிச்சங்கள் ஸ்பஷ்டமான வெண்ணிறமாகக்காணப்படினும் உண்மையிலேயே அவை நாமெண்ணுகிறபடி வெண்மை நிறமல்லாது பலவர்ணங்கள் கலந்து காணப்படுகிறது. இதனை அறியவேண்டுமாயின், ஸ்படிகமணி, கண்ணாடி முதலியவைகளை கண்ணெதிரில்வைத்து சூரியக்கிரணத்தை உற்றுப்பார்த்தால் ஒருபக்கம் சிவப்புக்கலந்த மஞ்சள் நிறமும், மற்றொரு பக்கம் கறுப்புடன் கலந்த ஊதா நிறமுள்ளதாகவும் காணப்படும். இதிற்கண்ட நான்குவித வர்ணங்களின் தன்மையாவது, சிவப்பு மஞ்சள் இவ்விரண்டு வர்ணமும் உஷ்ணகரமென்றும் மற்ற இரண்டும், ரசாயனக் கிரணமென்றும் கொள்ளப்படுகிறது: அதாவது உஷ்ணமில்லாது நோய்களைப்பரிகரிக்கக்கூடிய சக்தியோடுகூடியதாயும் இருக்கிறது. உதாரணமாக ஹைட்ரோஜின் (Hydrogen) குளோரயின் (Chlorine) என்னும் இருவிதவாயுவை ஓர் புட்டியில் (Bottle) கலந்துவைத்து அந்த புட்டியின் பேரில் சிவப்பு நிறமான கிரணம் படும்படி வைத்திடில் அச்சீசாவினுள்ளிருக்கும் இருவித வாயுக்களும் ஒருவிதமான மாறுதலும் அடைவதில்லை, ஆனால் நீலநிறமான கிரணம் படும்படி செய்திடில் அச்சீசாவினுள்ளிருக்கும் இருவகை வாயுக்களும் மாறுதலடையும். இந்த விஷயத்தைப்பற்றிப் புகைப்படம் பிடிப்பவர்களுக்குத் (Photographer) தெளிவாய்த்தெரியும். அன்னவர்கள் புகைப்படம் பிடிப்பதற்காக தயார்செய்து வைத்திருக்கும் காகிதத்திற்கு வெண்ணிறமான வெளிச்சம் படும்படிசெய்தால் அக்காகிதம் கறுத்துப் போய்விடும். ஆனால் அக்காகிதத்தையே சிவப்பு நிறமான விளக்கின் வெளிச்சத்தில் படும்படிசெய்தால் அதன் இயற்கை மாறாதிருக்கும். ஏனெனில் சிவப்புக்கண்ணாடியின் ஜோதியானது நீல்வர்ணத்தின் கிரணத்தை வெளியில்விடாது காக்கிறது. மேற்கூறிய சூரியக்கிரணமானது மானிட சரீரத்தை ஊடுருவிச் செல்ல வல்லதா என்பதை அறியும் பொருட்டு ஓர் பண்டிதர் இரண்டு உயிருள்ள நாய்களின் தோலினுட்புறத்தில் மேற்கூறிய புகைப்படம் பிடிக்கும் காகிதத்தைத் தனிதனியே உட்செலுத்தி ஒரு நாயின் மேல் சூரியக்கிரணம் படும்படிசெய்து பார்த்ததில் ஷை நாயின் உட்புறத்திலிருந்த காகிதத்தின் தன்மைமாறி கறுப்பு நிறத்தையடைந்திருந்ததாகவும், மற்றொரு நாயை இருட்டில் வைத்திருந்ததினால் அந்நாயின் உட்புறத்திருந்த காகிதத்தின் தன்மை சிறிதும் மாறாதிருந்ததாகவும் சொல்லுகிறார். இதனால் பிரகாசகிரணம், ரசாயனகிரணம் இவ்விரண்டும் சர்மத்தின் வழியாய் ஊடுருவிச்செல்லவல்லதென்று கண்டுபிடிக்கப்ப

ட்டது. பிரகாசக்கிரண சம்பந்தமாய் இன்னமொரு பிரயோகம் செய்து பரிசோதிக்கப்பட்டது. அது எங்ஙனமெனில், வயது, சக்தி இவ்விரண்டும் ஒத்திருக்கப்பட்ட இரண்டு மனிதர்களின் பேரில் சூரியக்கிரணம் படும்படி செய்யப்பட்டதில் ஒருவன் பேரில் ஷை கிரணத்தை பிரயோகிக்கும்போது, சிவப்புக்கண்ணாடிக்குழல் வழியாயும், மற்றொருவன் பேரில் பிரயோகிக்கும்போது நீலவர்ணக் கண்ணாடிக்குழல் வழியாயும் பிரயோகம் செய்யப்பட்டது. இங்ஙனமான சூரியக்கிரணமிரண்டினுள் சிவப்புக்கண்ணாடி வழியாய்ச்சென்ற கிரணமானது திரும்பவும் வெளிவந்துவிட்டது. மற்றொரு நீலக்கண்ணாடி வழியாய் உட்சென்ற கிரணம் மீண்டும் வெளிவராததும் தவிர, சிவப்புக்கண்ணாடியின் வழியாய் கிரணத்தை கிரகித்துக்கொண்ட மனிதனின் சரீரமானது உஷ்ணத்தினால் பொசுக்குண்டதுபோல் காணப்பட்டாலும், அவன் தேகத்தில் யாதொருவிதமான கரும்புள்ளிகளும் காணப்படவில்லை. ஆனால் மற்றொரு மனிதனின் தேகத்திலோ சிறிய கரும்புள்ளிகள் காணப்பட்டதாம். இவ்வித ஆராய்ச்சிகளினால் சூரியகிரணத்தை மனித தேகத்தில் செலுத்தக்கூடுமென்றும், எவ்விதமான சர்மரோகங்களையும் சுவஸ்தப்படுத்தக்கூடுமென்றும், ரோகங்களுக்கெல்லாம் ஆஸ்பதமாயுள்ள கிருமியங்குரங்களைக் கொல்லக்கூடுமென்றும் தெரிந்துகொண்டார். இன்னும், விஷபேதி, மலைஜுரம், முதலியவைகளை உண்டுபண்ணக்கூடிய மஹாவல்லமையுள்ள கிருமியங்குரங்கள் சூரியக்கிரணத்தினால் முக்கால் மணி நேரத்திலும், மின்சார வெளிச்சத்தினால் நான்கு மணி நேரத்திலும், நீலக்கண்ணாடியின் வழியாய் சூரியக்கிரணத்தை பிரயோகித்ததில் இரண்டுவிநாடிக்குள் மரித்துப்போவதாகவும் கண்டுபிடித்தார். மேற்கூறிய ஆராய்ச்சிகளினால் எவ்வித ரோகங்களையும் சுவஸ்தம் செய்யக்கூடுமென்று திடமாக அறிந்துகொண்டார். எவ்வகையான மஹா ரோகங்களையும் இவ்வகைக் கிரணத்தைக்கொண்டு சுகுணம் செய்யக்கூடுமென்று ஐரோப்பாவிலுள்ள மஹாமேதாவிகளான டாக்டர்மார்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இவ்வித சிகிச்சையினால் நோயாளிகளுக்கு யாதொரு விதமான உபத்திரவமாவது அல்லது அபாயமாவது ஒரு பொழுதும் சம்பவிக்க ஏதுவில்லை. ஆனால் இவ்விதசிகிச்சையை நீண்டகாலம் செய்யவேண்டியிருப்பதால் நோயாளிகள் சிலசமயத்தில் இதை வெறுக்கநேரிடுகிறது. இதுவரையிலும் இவ்வித ரவிகிரண சிகிச்சை உலகமெங்கும் பரவியாவருக்கும் சுகத்தையளிக்காதிருப்பினும் லண்டனில் முற்கூறிய அவுஷதாலயத்தில் மட்டும் இவ்விதப்பிரயோகம் செய்யப்பட்டு வருவதினால் அநேக வியாதியஸ்தர்கள் சுகுணமடைந்



திருக்கிறார்களென ஷை வியாதியஸ்தர்களாலேயே விளம்பரம் செய்யப்பட்டிருக்கும் வியாசங்களினாலறிந்து சந்தோஷப்பட வேண்டியதாய் இருக்கிறது. ஆகவே மனிதர்களின் ஆராய்ச்சியின் புத்திக் கூர்மைக்கு யார்தான் என்ன நிகர் சொல்லக்கூடும்.

---

## BITING FLIES. கடிக்கும் மசகங்கள்.

கடிக்கிற ஒவ்வொரு பூச்சியும் ஒவ்வொருவிதமான வியாதியைப் பரவச்செய்யக்கூடுமென்று சிற்றுயிரிலக்கண நூலறிந்தவர்கள் (Entomologists) அபிப்ராயப்படுகிறார்கள். ரக்தத்தை உறுஞ்சும் பூச்சிகள் எவை? அவை எங்கே உண்டாகின்றன? அவைகளுடைய ஆயுள் நாட்கள் எவ்வளவு? அவைகளுடைய அப்பியாசங்கள் என்ன? எவ்விதகாலத்தில் ஜீவித்திருக்கின்றன? எப்பொழுது அபிவிருத்தியாகின்றன? என்னும் ப்ரச்னங்களை வெகு ஊக்கத்துடன் செய்து ஆராய்ச்சி செய்கிறார்கள். 'ட்ஸி-ட்ஸி' (Tse-Tse) என்னும் ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள மசகங்கள் இந்தியாவிலும் உண்டாகலாமாம். ஆபிரிக்காவிலிருக்கிற 'தூங்கு வியாதி' (Sleeping Sickness) அங்கிருந்து திரும்பி வருகிறவர்களின் ரத்தத்திலிருப்பது ஸம்பாவிதமானதால், இந்தியாவிலிருக்கும் பூச்சிகள் இந்த வியாதியை ஒருவரிடத்திருந்து மற்றொருவரிடத்துக்குப் பரவச்செய்யும் என்பது ஒரு உண்மையான ஹேஷ்யமெனத் தோற்றுகிறது. ஆகையால் வைத்திய இலாகாவைச் சேர்ந்தவர்களும், ஆரோக்கியாபிவிருத்தியைக் கோருவோரும் வைத்திய சாஸ்திரிகளும் சேர்ந்து இந்த விஷயத்தைப்பற்றி கவனித்து வருகிறார்களாம். முதலில், கடிக்கும் மசகங்கள் யாவை? என்று ஆரம்பிக்கிறார்கள். அவைகள் பேன், தென்றுப்பூச்சி, மசகம், மூட்டைப்பூச்சி முதலியன. உண்ணிகளும் இவைகளில் ஒன்றும். மற்றவைகளைப்போலல்லாமல் மசகங்களுக்கு அடியில கண்ட அம்சங்களுண்டாம்: இவைகளுக்கு ஒரு ஜோடி ரக்கைகளும், ஒரு ஜோடி சிறு கும்மிழிகளும் உண்டாம. இந்த ஜாதியில் ரத்தத்தை உறுஞ்சி வசித்துக்கொண்டு 7 விதங்கள் ஜீவித்திருக்கின்றனவாம். இவைகளில் ஒரு பூச்சிகள் மிருகங்களை மாத்திரம் கடிக்கின்றனவாம். ஆகையால் மனிதரைக்கடித்து ஜீவிக்கும் பூச்சிகள் 6 தான் இருக்கின்றன.

"இம்மசகங்கள், கொசுக்களைப்போல மாலையில் புறப்படுகின்றன. ஸ்வேச்சையாய் கடிக்கின்றன. இரவு முழுவதும்

வெகு பரபரப்பாய் வேலை நடக்கிறது. பொழுதுவிடிந்தால் நிழலிடங்களில் ஒளிந்துகொண்டு விடுகின்றன. பெண் பூச்சிதான கடிக்கிறது. ஆண்பூச்சி செடிகளின் சாற்றைக்குடித்து ஜீவிக்கிறதென்று அனுமானம். சிலருக்கு இந்தக்கடியைத் தாங்க முடிவதில்லை. கடித்த இடத்தில் வீங்குகிறது. இவை வீட்டுக்குள் அவ்வளவாகக்காணப்படுவதில்லை. வெளியில் காணப்படுகின்றன. காற்றில்லாத மாலையில் கூட்டங் கூட்டமாக இரங்கி, ஆடுமாடுகளின் மயிரில் புகுந்து ரத்தத்தை உருஞ்சுகின்றன. பெண்பூச்சிகள் இம்மாதிரி ரத்தத்தை உருஞ்சிக்கொண்டிருக்கும்போது ஆண்பூச்சிகள் அவைகளின் மேலாகவந்து பரக்கின்றன. உடனே இணையும்பொருட்டு இரண்டும் பரந்துபோகின்றன. இப்படிமாலைகளின் ஸம்பவம். கோழிகளும் வாத்துகளும் குதிரைகளும் ஆடுமாடுகளும் இம்மாதிரியே கடிக்கப்படுகின்றன. வெளியிலாவது தாழ்வாரங்களிலாவது படுத்துத்தூங்கும்போது மனிதர்கள் ஜாஸ்தியாகக் கடிபடுகிறார்கள். வீட்டுக்குள் அவலிங்கமாயிருக்குமிடங்களிலும் இவைகள் ஜாஸ்திபாய்க் காணப்படுகின்றன. இந்தப் பூச்சிகள் மூக்கை உள்ளேவிட்டு மூன்று தடவை உருஞ்சுகின்றன. இந்த மசகங்களின் உள்பிரிவான வகைக்கொசுவொன்று. இந்த மசகக் கடிக்கெல்லாம் மருந்திருக்கிறது. சிட்ரோ நேல் எண்ணெய் ஒரு மருந்து. இந்த எண்ணெயை நன்றாய் குழைத்து முகத்திலும் கழுத்திலும் உள்ளங்காலிலும் தடவிக்கொண்டு படுத்தால் இவை கடிக்கவே மாட்டா. தசாங்கப் பொடியை எரித்தால் இவை வாராவாம்.

---

## நவீன நடை.

பண்டைக்காலத்து வழக்கப் பழக்கங்கள் அறிவுடைய மேதாவிகளால் அநுசரிக்கப்பட்டு, இகபர சுகங்களுக்கேதுவானதும், சர்வோத்கிருஷ்டமானதுமே என்பது யாவரும் அறிந்த விஷயம். ஆயினும் "பழயன கழிதலும் புதியன புகுதலும், வழுவலகால வகையினானே" என்றபடி தருமசாஸ்திரத்திற் சொல்லப்பட்ட ஒழுக்கங்கள் பலவேயெனினும் காலதேச வர்த்தமானங்களை அநுசரித்து நடக்கவேண்டியது அவசியமே. அதாவது அவ்வொழுக்கங்களில் ஏற்பனகொண்டும், ஏற்காதன விண்டுமே. ஏனெனில் தற்கால மாந்தர் பலரும் பெரும்பான்மையும் நவீனநடையே கைக்கொள்ளுதலால் "நிர்வாணதேசத்தில் உடை கட்டினவன் பயித்தியகாரன்" என்பதுபோல பண்டைய முறைகளில் நோக்கமும் பூரண நம்பிக்கையுமுடையோர் ஏனையோருக்குப் புதிய நோக்கமுடையோரென்றும், பிரபஞ்ச



விரோதிகளென்றும் இகழ்ந்து பரிகாசம் செய்வதனாலென்க. உதாரணமாக தத்துவசாஸ்திரத்தில் பழகிவரும் ஒருவனை அவனது இனத்தாரே பரிகசித்துக் கெடுத்துவிடுகிறார்கள். ஆதலால் உலகம் முரணான நோக்கத்திலும் கொள்கையிலும்பற்றி நிற்கும்போது காலநடையை அநுசரித்து நடக்கவேண்டியதவசியம் என்று நாம் ஒத்துக்கொள்ளுகிறோம். திருஷ்டாந்தமாக முற்காலம் ஓலைகளில் எழுதுவதும் வாசிப்பதும் வழக்கமாயிருந்தது. தற்காலம் [Paper] கடுதாசில் எழுதுவதும் வாசிப்பதும் வழக்கமாயிற்று. ஆலயங்களில் [Light] விளக்கேற்றும் வழக்கம் நவீனமாய் ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறே அநேக வழக்கங்கள் மாறிவந்தும் அவற்றைச் சௌகரியமானவை என்று அறிவாளிகள் இகழாமல் அநுசரிக்கப்பட்டதனால் குற்றமன்றே. ஆயினும் "ஆரியக்கூத்தாடினும் காரியத்திலே கண்" எவை எவைகளை அநுசரிக்கத்தக்கதோ அவை யவைகளுள் எவ்வளவோ அவ்வளவும் அநுசரிக்கவேண்டுமேயன்றி நம் ஆரியர்களிற் பலர் தலைகால் தெரியாமல் அநுசரிப்பதெல்லாம் ஒழுக்கமாமா? அந்தோ! என்ன விபரீதம்! உயர்குடிப்பிறந்தோரும் வேதபாராயணரும் வேதோக்தப்படி நடப்பவர்களுமான பிராமணரும் தற்காலம் தத்தமக்குறிய புண்ணிய நெறிகளை முற்றும் மறந்து பெரும்பாலும் நவீன நடையிலேயே பழக ஆரம்பித்துவிட்டார்கள். இவர்களுள் உத்தியோகமில்லாத சாமான்யரும் வயது முதிர்ந்தோரும் காலையில் [Coffee] [Cocoa] முதலியபானம், மாலையில் [Tee] [Soda Water] முதலிய பானம் செய்கிறார்கள். (இதனால் உண்டாகும் கெடுதிகளைப்பற்றி பத்திராதிபர் ஸ்ரீமாந் "சந்திரசேகர் அவர்கள்" எழுதிய வியாசத்தைச் சென்ற மாத "வைத்திய போதினி"யில் 163-வது பக்கம் பார்க்கவும்.) நிற்க தலைமயிர்களைக் கத்தரித்துச் சீவிக்கொள்ளுதல், எப்போதும் உடுப்பு மாறுமை, வேஷ்டிகளை மடியின்றி நிலத்திற்படும்படி கட்டிக்கொள்ளுதல், முதிலிய துர்அப்பியாசங்களிற் பழக ஆரம்பித்துவிட்டார்கள். இவர்களது நடையே இவ்விதமிருப்பின் பிராமணீகமற்ற ஏனை ஜாதியளைக்கேட்கவும் வேண்டுமோ? நாம் [Europe] தேசவாசிகள் முதலிய அன்னியர்கள் அநுசரிக்கும் முழுநடத்தையும் கைக்கொள்ளுவதற்கு ஜாதியாசாரமும் மதாசாரமும் பெண்கல்வி, மறுவிவாகம், ஜாதிக்கலப்பு, கடல்யாத்திரை முதலிய அரிதான சட்டங்கள் இருக்கின்றன. இப்படியிருந்தும் "பூனையிருக்கிற வீட்டில் எலி பேரன் பேத்தி எடுப்பது" போல இவற்றிற்கு நேர்விரோதமான பலகாரியங்களையும் ஜனங்கள் பகிரங்கமாய்ச் செய்துகொண்டிருப்பதையும் நமது முதிர்ந்த வைதிகர்கள் நாள்தோறும் பார்த்

துக்கொண்டும் தாமே ஒத்துக்கொண்டும் வருகிறார்கள். அதற்கு சமாதானமோ? வெகுஜனங்கள் இப்படிச்செய்வதாலும் அது வழக்கத்திற்கு வந்துவிட்டபடியாலும் அதைத்தடுக்க இயலாதென்று சொல்லுகிறார்கள். இன்னுஞ் சில நடக்கைகளை ஏககாலத்தில் பலபேர் தைரியமாய்ச் செய்துவிட்டால் அதுவும் வழக்கத்திற்கு வந்துவிட்டதாயும் இனிக்குற்றமில்லையென்றும் ஏற்றுக்கொள்ள இந்தப்போலி வைதீகர்கள் தயாராயிருக்கிறார்கள். நாளடைவில் இவ்வித இழிய பழக்கத்திலிருந்தமையினாலேயே நம் ஆரியர்களிற் பலர் மனம்போல் நடக்க இடந்தரும் அன்னிய மதத்திற் பிரவேசிக்க முயலுகிறார்கள். அப்படியே இதுவரையும் அநேக இந்து சகோதரர்கள் அன்னிய மதத்தற்குச்சென்று பதிதத்துவத்தையடைந்து பின்பு "ஏன் வந்து சேர்ந்தோம்" என்று தம்மைத்தாமே நொந்து மறுபடியும் நாம் சேர்த்துக்கொள்ளாதமையால் நமக்கு நேர்விரோதிகளாகிறார்கள். நாகரீகத்திற்கும் சுகாதாரத்திற்கும் நிரதிசயானந்தஆன்மலாபத்திற்கும் சாலப்பொருந்தியது "இந்துமத"க்கோட்பாடே என்று ஆங்கிலேயரான அன்னியரும் அருமையாகப் பேசுவதைப் பார்த்தாவது இனி நடவுங்கள்.

இங்ஙனம்,
**M. S.** சுந்தரம் ஆசாரி,
மார்க்கயன்கோட்டை.

---

## SANITARY SCIENCE. சுகாதார சாஸ்திர ஞானம்.

உடுப்பை அடிக்கடி மாற்ற யோக்கியதையுள்ளவர்களும், இரவும், பகலும் ஒரு துணியைக்கட்டிக்கொண்டே காலங்கழிப்பதும் கஷ்டம். ஏழைகளும் தங்கள் வஸ்திரங்களை யடிக்கடி சுத்தஞ்செய்வது அருமையல்ல. லோபிகளுக்கும், மூடர்களுக்கும், சோம்பர் கட்கும் எவ்வளவு சொல்லித் தாலென்ன? செவிடன் காதில் சங்கூதினதுபோலாம்.

போதுமான காலம் ஒவ்வொருவரும் உறங்க வேண்டுமென்பதும், இடமறிந்து உறங்கவேண்டுமென்பதும், தரையில் கிடக்கப்போகாதென்பதும், அதிலும் ஈரத்தரை கூடவே கூடாதென்பதும், வழியற்றவர்கள் வைக்கோலாவது பரப்பி உறங்குவது புத்தியாமென்பதும், படுக்கையும் தலையணையும் சுத்தமாயிருக்க வேண்டுமென்பதும், இதுபோன்ற பலவும் நம்மவர் பலரால் இன்னுங் கவனிக்கப்படாதிருக்கின்றனவே வாரத்தில் நான்கு நாளைக்குக் குறையாமல கூத்துப்பார்த்து சாலங்கடத்தும் நம்மக்கட்கு யாரே அறிவுகொளுத்த வல்லார்?



மரம் செடி, பூண்டு முதலிய தாவர ஜந்துக்களும் இருட்டில் வளர மாட்டாமல் வெளிச்சத்தையே யபேக்ஷிக்குமானால் மக்களைப்பற்றிச் சொல்லவேண்டியதென்ன? இருட்டறையிற் பிறந்து இருட்டிலே கிடந்து, இருட்டிலேயொழியும் அசேதனர் நல்லறிவும் பூர்ணாயுசும் அடைவது கூடுமோ?

தேக உழைப்பு இன்னதென்றுணராமலே வாழ்பவர்கள் தொகையும் அபாரம். ஐரோப்பியர்கள் பிரபுக்களாயினும் தேக உழைப்பை மறந்தவர்களல்லர். அதனாற்றான் அவர்கள் விசேஷ சம்பத்தையும் சுகத்தையும் அடைந்தார்கள். கணக்கற்ற நம்மவர்கள் இருந்த விடத்திலே யிருந்துவிடுகிறார்கள். கிடந்த விடத்திலே கிடந்துவிடுகின்றனர். ஐந்துவேளையும் உண்கின்றனர், இவர்கட்கு சாப்பாடு ஜீரணிப்பதெப்படியோ? உறக்கந்தான் இவர்களைத் தேடி யடையுமோ? கடவுளே யறிவார். இத்தகையப் பேதையர் சர்வதா நோயால் வருந்துவதும் அதிசயமோ? கீழே ஒருவாறு செய்த விசாரணையால் நம்மவருள் தேசாபிமானிகளாயுள்ள நல்லோர் சுகாதார விஷயமாய்ப் பலவழியாலும், நந்தேசத்து ஜனங்கட்குப் போதிப்பதையே தங்கடப்பாடாக நினைப்பார்களாக. நம்மவர் ராஜாங்க விஷயங்களிற் புகுந்து தேச நன்மையை நாடி பல சபைகளை யலங்கரிப்பது நன்மையேயாயினும், தங்களது மற்றைய கடமைகளை மறத்தல் நலமன்று. எனவே ஜனங்கட்கு அவர்கள் போதிக்கவேண்டிய பல விஷயங்களில் கீழே பேசிய விஷயத்தையும் முக்கியமானதாக கருதுவாராக. நாமும் சமயம் நேர்ந்தபோது இது சம்பந்தமாய் விரிவாய் எழுதுவோம். இனிமேல் வருங்காலத்திலாவது நந்தேசம் பூரண க்ஷேமமடைய பகவான் அநுக்கிரகிப்பாராக.

---

### நேத்திர ஸம்ரக்ஷணம்

(டிஸம்பர்மாத வைத்தியபோதினி 163-வது பக்கத்தொடர்ச்சி.)



நிர்மலவாயு ஸஞ்சாரமில்லாத அறைகளிலும் ஆகாரமில்லாமலும் அதிக போஜனத்தாலும் கண்களுக்கு நோயுண்டாகும். மேற்கண்ட விஷயங்களை நன்றாய் கவனித்து ஒவ்வொருவரும் மனதில் மறக்காமல் வைத்துக்கொண்டு கண்களை ஜாக்கிரதையாய்க் காப்பாற்றிக்கொள்வது அவசியம். கண்களில்லாதவன் மரணமடைந்தவனாகவே இருக்கிறான். தன் நேத்திரங்களால் ஸகல சிருஷ்டி வஸ்துக்களையும் பார்த்து ஆனந்தமடைந்து அநுபவிப்பவன் கோர நரகத்தில் விழுந்து கரைபேற முடியாமல் தவிப்பவனை ஒப்பாவான். நாம்

வெகு தூரத்திலிருக்கும்போது அநேகர் கூவிப்பேசும் சப்தம் ஹோ! ஹோ! வென்று கேட்குமேயொழிய இன்னது பேசுகிறார்களென்று ஸ்பஷ்டமாய் அறியமுடியாது. அவ்விடத்தைத் தேடிச்சென்றால் அங்குள்ளவர்கள் பேசும் வார்த்தை வசனங்களை நன்றாய் அறிந்துகொள்ளலாம்.. இதைப்போலவே உண்மையறியும் முன் விதண்டவாதங்களால் சம்சயத்துக்குள்ளாகிறோம். நிச்சயம் அறியும்போது ஸமஸ்த தத்துவ ரகசியமெல்லாம் பிரத்யக்ஷானுபவங்களாகும். வெகு காலமாய் இருள் சூழ்ந்த அறைக்குள் விளக்கைக் கொண்டுவந்தால் இருள் நிற்குமா? பறந்தோடும் அதுபோல் அக்ஞானத்தை துவசம் செய்து விக்ஞானத்தை இருதயத்தில் நாட்டவேண்டும். சர்வ சக்தனான பரமாத்மாவின் கிருபாகடாக்ஷத்தை அறிய ஒவ்வொருவரும் பிரயத்தனப்படவேண்டும். எந்த வஸ்துவிலும் ஆசையை வைக்கக்கூடாது, ஸத்விருத்தியால் ஜீவிப்பதும் கிடைத்தமட்டில் திருப்தி விஷய வஸ்துவின் அநித்தியத்தையும் அறியும்படி வைராக்கியம் போதிக்கிறது. இவ்வைராக்யத்தைவிட வேறொரு மார்க்கமுண்டா? லோகயாத்திரைக்கு இவ்வித அனுகூலங்களை கற்பித்த வைராக்யம் முக்திமார்க்க சாதனத்துக்கென்ன சொல்லுகிறது நம்மைக் கரிக்கு ஒப்பிடலாம். கரி எந்த வஸ்துவில் பட்டாலும் கருப்பைத்தரும். இதனால் சுப்ர வஸ்திரங்கள் அழுக்கடைகின்றன. அக்கினி சேர்ந்தவுடன் தன் கருநிறத்தை விட்டு ஜ்வாலா முகத்தை தரிக்கிறது. இதைப்போலவே பாவமெனுமாத்மனுக்கு ஆலயமாகிறான் வைராக்கியம் வந்த க்ஷணம் நூதன தேகத்தைத் தரிக்கிறான்.

பூ. ப. செல்லக்குமாரக் கவுண்டர்,
கணக்கன்பட்டி,

## தஞ்சாவூரில் பிளேக்.

பிளேக் என்ற கொடியநோயானது மேல்நாட்டிலிருந்து இந்தியாவுக்குள் நுழைந்து பம்பாய் மாகாணத்தை அமளிப்படுத்திப் பின் வடபாகத்திலேயே பல விடங்களில் பரவிக்கொண்டிருந்தபோதிலும், நமது ராஜதானிக்கு வாராதென்று திடங்கொண்டிருக்க, இங்கும் பிரவேசித்து கோயமுத்தூரில் தலைகாட்டிப் பலரைக்கொள்ளை கொண்டுவிட்டு சேலத்தில் வெகு மும்முரமாய்த் தாக்கியிருப்பதாகத் தெரியவருகிறது. சேலத்தில் பிளேக் ஆரம்பமுதல் டிசம்பர்மீ 22-உ வரை இந்நகரில் பீடிக்கப்பட்டவர்கள் மொத்தம் 1835-பேர்; மரித்தவர்கள் 1491-பேர். வியாதியில்லாத பாகங்களில் ஊரைவிட்டு குடிபோனவர்கள் திரும்ப வந்து சேருகின்றனர். இனாக்குலேஷன் செய்துகொள்ள வேண்டுமென்று கட்டாயமான உத்தரவாகயிருப்பதால் குடிவருவோர் அனைவரும் அம்மை குத்திக்கொள்ளுகிறார்கள். துவக்கத்திலே இனாக்குலேஷன் பண்ணிக்கொள்வதின் பயனை அநேகர் கவனியாது, இவ்வுத்தரவு எடுபட்டுப் போகாதாவென்று பலர் வருத்தங்களுடன் வெளியூர்களிலிருந்து தவிக்கின்றனர். இந்நகர் வாசிகள் மட்டுமல்ல, ஆத்தூர், திருச்செங்கோடு, ஓமலூர் தாலூகாக்களிலுமுள்ள யாவருமே தத்தளிக்கின்றனர். வியாதி ஏறக்குறைய ஜில்லா முழுவதுமே சேலம்வாசிகளால் பரவி விட்டது. இதுவரை திருப்பத்தூரில் ஸ்தல உற்பத்திக்கேஸ் இல்லாதிருந்தது. சென்ற வாரத்தில் அங்கும் உண்டாகிவிட்டது. இனி அத்தாலூகாவுக்கும் சங்கடந்தான். அடுத்த மார்ச்சுமீ வந்தால் தான் இச்சில்லா வாசிகள் இந்நோயின்றி சுபிக்ஷமடையக்கூடுமெனக் கருதப்படுகிறது.



JAN 1911 MADRAS.

சேலத்தைச்சேர்ந்த செவ்வாய்ப்பேட்டை வியாபாரி பாலகுருநாத செட்டியார் பிளேக்குக்குப்பயந்து தஞ்சாவூர் ஜில்லாவைச்சேர்ந்த திருவாரூருக்குத் தன் மனைவிமக்களுடன் வந்தார். அங்கு தன் மனைவிக்கு பிளேக்நோய்காண தஞ்சாவூருக்கு வந்து கீழவாசல் கிராச்சாவடி சத்திரத்தில் இறங்கியிருந்தார். மனைவியும் மூத்தபிள்ளையும் அந்நோயால் இறந்தனர். செட்டியாரும் மற்றொரு பிள்ளையும் பிளேக் கொட்டகைக்குக்கொண்டு போகப்பட்டார்கள். அங்கு அவரும் இறந்துபோய்விட்டார். பிள்ளைமட்டும் வாதைப்பட்டுக்கொண்டிருக்கிறான். இதனால் சேலத்திலிருந்து வெளியேறும் ஜனங்களால் மற்ற ஜில்லாக்களிலும் இந்நோய் ஒட்டிக்கொண்டு அனர்த்தம் விளைவிக்குமோவென்றஞ்சுகிறோம்.

பௌரிங்பேட்டையிலேயிருந்து ஒரு மாது சென்னைக்கு பாஸ்போர்ட்டுடன் வந்தாளாம். பிளேக் பிசாசு 2-தினத்திற்கு பிறகு கொன்றுபோட்டதாம். புரசவாக்கம் வேளாளத்தெருவிலே குடிபுகுந்தாளாம். வீட்டைச்சுத்திகரித்து பிளேக் பரவாதிருக்க அதிகாரிகள் ஏற்பாடுசெய்தார்கள், பிளேக்நோயினால் சேலம் படும்பாடு போதாதா? நெருக்கடி மிகுந்த ஆபாஸ வீதிகள் பெருத்த சென்னையிலுமா தோன்றவேணும், வந்தால் வெகு திண்டாட்டம்தான்.

பெங்களூரிலிருந்து சென்னைக்கு வந்த ஒரு முஜாம்தாருக்கு பிளேக்கின் குறி காணப்பட்டது. அதிகாரிகள் உடனே அவரை எழும்பூர் பிளேக் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றார்கள். அங்கு அவர் அதிக அபாயஸ்திதியிலிருக்கிறாராம்.

திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் இதுவரையில் பிளேக் பயம் யாதொன்றும் இல்லாதிருந்தது. இப்போது கரூர், நாமக்கல், தாலூக்காக்கள் சேர்ந்தவுடன் அந்தப்பயம் ஏற்பட்டுவிட்டது. முசிரிடிவிஷன் நாமக்கல் டிவிஷனாகி, நாமக்கல்லில் கச்சேரி செய்யப்போன டிப்டிகலெக்டரின் முதல் வேலை பிளேக் ரிப்போர்ட் செய்வதுதான் யென்பது போலாயிற்று நாமக்கல்லுக்குச் சமீபத்திலுள்ள கிராமத்தில் இரண்டு கேஸ்கள் கண்டதாகத் தந்தி வந்தவுடன், கலெக்டர் மிஸ்டர் யங், டிஸ்டிரிக்ட் மெடிக்கல் சானிட்டேரி ஆபீஸருடன் அவ்விடம் சென்று டிப்டிகலெக்டரை வைத்துக்கொண்டு அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்துவிட்டு உடனே திரும்பிவிட்டார்.

மேலே சொல்லப்பட்ட இரண்டு கேஸ்களும் அவ்வூரிலேயே உண்டானதாகவும், மரணமாய் விட்டதாகவும், தெரியவருகிறது. இம்மா

திலேயே இதேகாலத்தில் முசிரி தாலூக்கா வரதராஜபுரத்தில் ஒரு கேசும், கரூர் தாலுக்கா பள்ளப்பட்டியில் ஒரு கேசும் ஏற்பட்டு மரணமாய் விட்டதாகத் தெரியவருகிறது. ஆனால் ஷை இரண்டு கேஸ்களும் பிளேக் நடமாடுமிடத்திலிருந்து வந்தவர்களுக்குக் கண்டதெனச் சொல்லப்படுகிறது.

சென்னை கவர்னர் ஸர் ஆர்தர் லாலி அவர்கள் சேலத்திற்குச்சென்று சேலத்தில் நடமாடும் பிளேக் நோயின் உபத்திரவம் எந்தமட்டிலிருக்கிறதென்று பார்த்துவிட்டுத் திரும்பினார்.

பெங்களூரில் பிளேக் தினேதினே அதிகரித்து வருகிறது. அரசகிரி டவுனில் ரெயில்வே உத்தியோகஸ்தர் அனைவரும் இறந்துபோயினர். ஆகையால், அந்த ஸ்டேஷன் உத்தியோகஸ்தரெல்லாரும் ரெயில் வண்டியில் வசித்து வருகிறார்கள். இவர்களுக்குக் குடிசைகள் போட ஏற்பாடு செய்யப்படுகிறது.

ஸ்ரீரங்கம் தெற்கு ராயகோபுரத்துக்குச் சமீபமாக வெளியில் குடியிருந்துவரும் வீட்டுக்காரர்களின் ஒரு வீட்டுக்காரர் சென்ற சில தினங்களுக்குமுன் சேலத்திலுள்ள தங்களுடைய உற்றார் வீட்டிற்குச்சென்று திரும்பி வந்ததில் அவர்களின் 6 வயதுள்ள சிறு பையனொருவனுக்குப் பிளேக்கு கண்டு சென்ற மாதம் 30-ந்தேதி இறந்துபோய்விட்டான். அது சங்கதி மறுநாள் காலை தெரிந்தவுடன் அந்தப்பிணத்தை ஸ்ரீரங்கம் நகரபரிபாலனச் சபையின் சுகாதாரத் தலைவர் மிஸ்டர் ரெங்கசாமிநாயுடு பார்த்து அதைச் சந்தேகமற்ற பிளேக்குத்தானென்று கண்டு பிளேக்கு விதிகளின்படி அதை புதைக்கச் செய்துவிட்டார்.

இறந்துபோன பையனின் சகோதரனுக்கும் விடுதியில் பிளேக்கு கண்டு தகுந்த சிகிச்சை செய்யப்பட்டு குணமடைந்து வருகிறான். பிளேக்கு கண்டு இறந்த பையனின் வீடும் அதைச் சுற்றியுள்ள விடங்களும் நன்றாகச் சுத்தீகரிக்கப்பட்டன.

ஈஸ்வரா காப்பாற்று ஜனங்களை இன்னும் சில நாள் இந்த உலகத்தில் வாழப்பண்ணு! பஞ்சத்தினாலாவது கொன்றுபோடு பாதகமில்லை. ஆனால் பிளேக் தேவதையைக் கொண்டுமட்டும் கொல்லாதீர், கடவுளே கார்க்க.

## பிளேக்கு சிகிச்சைகள்.

1. இபிகாக் பவுடர் உகயோகம்—பிணியாளியின் சரீரக்கூறை அநுசரித்து 16-முதல் 22-தானிய இடை கொடுக்கவும். இப்பவுடரை மாவுபோல் தூளாக்கி பாலில் அல்லது ஜலத்தில் கலக்கி மூன்றுபாகமாக வகுத்து கால்மணிநேரத்துக் கொருமுறை கொடுக்கவும். இது வேலூர் **மிஸ்டர் பால்ஸ்** என்பவரது முறை, முக்கால்பாகம் குணம்.

2 எப்ஸம் ஸால்ட் உப்பு உபயோகம்—100-க்கு 98-பேருக்கு குணம். ஒரு பெரியகரண்டி உப்பை 2-தேக்கரண்டி நல்ல பிராந்தியில் கலந்து தரவும். அத்துடன் சுடு தண்ணீர் கொஞ்சம் கொடுக்கவும், குழந்தைகளுக்கு $1\frac{1}{4}$-அவுன்ஸ் உப்பை ஒரு தேக்கரண்டி நல்ல பிராந்தியில் கலந்து கொடுக்கவும் சுடுஜலமும் உடன் சாப்பிடுக. இது **டைம்ஸ் ஆப் இந்தியா** பத்திரிகை நிரூபரது முறை.



3. ஒலி எண்ணெயை தேக முழுமையும் பூசிக்கொள்ளல். எண்ணெய் பிளேக்குச் சத்துருவென்று அநுபவத்தில் தெரிகிறதாம்.

4. ஷை எண்ணெய் உள்ளுக்கருந்தலாம். 200-க்கு 10-கேசுகள் தான் தப்பிப்போக மற்றது குணம் பெற்றுவிட்டதாம்.

5. இன்னொருமுறை போர்ட் வைன். இதைச் சாப்பிட்டால் கட்டாயம் குணம் காணலாமாம். பிளேக்கால் இறக்கும் தருவாயிலிருந்த ஒரு சோல்ஜர் அந்தியகாலத்தில் போர்ட்வைன் குடிக்க ஆசைப்பட்டான். அதுவே பிளேக்கைத் தொலைக்கவும் காரணமாகி அவனும் பிழைத்தானும். அதுமுதற்கொண்டு இந்த சிகிச்சை வெளிப்பட்டதாம்.

6. கடைசியாக ஒருமுறை நாமே சொல்லுகிறோம். பிளேக் கண்டதும் எலிகளைக் கொல்வதைவிட்டு எலிகளே இல்லாதிருக்கப் பார்க்கவேண்டும். காலிலும் ஏதோ ஒன்று செருப்போ எதுவோ இருக்கவேண்டும். அம்மை குத்திக்கொள்ளவேண்டும். குடியிருக்கும் வீட்டை அடிக்கடி டிஸ்வின் பெக்ஷன் செய்துவரவேண்டும். நல்லெண்ணையுடன் அதிகப் பழக்கமும் வேண்டும். எல்லாவற்றிலும் பெரிது சுத்தமான ஆகாயமுள்ள இடங்கட்குச் சென்றுவிடல். பயமே முக்கால் பாகம் வியாதி விருத்திக்குக் காரணம். (திராவிடாபிமானி.)

## விசித்திர விஷயங்கள்.

ஒரு கோடீஸ்வரருக்குத் தேக க்ஷீணிப்பு நிவர்த்தியாக சாராயத்தில் அடிக்கடி ஸ்நானம் செய்யும்படியாக வைத்தியயோசனை சொல்லப்பட்டதாம். விரலுக்குத்தக்க வீக்கம், பணம் செலவாக வேண்டியதொன்று.

சிறியராவணன் பத்துதலை ராவணன்கதை பொய்யென்பவர்கள் இங்கே 2-தலை ராவணனைக் கவனிக்கட்டும். பாட்னா நகரத்தில் இப்படிப்பட்ட ஒரு குழந்தைபிறந்து செத்துப்போயிற்று. ஒரே உடலும், 2-கழுத்தும் 2-தலையும் கூடியிருந்தது.

விபரீத ஜெனனம்—மலையாளத்திலுள்ள காப்டன் வில்லகஸ் என்பவரிடத்தில் மூன்று கால், மூன்றுகண், மூன்று அல்குல்களுடைய ஓர் பறவை இருக்கின்றதாம். இதனை மேற்படியார் சென்னையிலுள்ள புதினச்சாலைக்கு அனுப்பப்போகின்றாராம்.

கண்ணாடியால் ஐரோப்பாவில் துணிகள் போன்ற அவ்வளவு சுகமான கண்ணாடித்துணிகள் நெய்கிறார்களாம், தொப்பிகளின் மேல் இது உபயோகப்படுகிறதாம்; மழைக்கு நனையாதிருப்பதால் அதிக சுகமாயுள்ளதாம்.

ஸ்பெயின் தேசத்திலே ஒரு சுந்தர மாளிகை உண்டு. வெள்ளைச் சலவைக்கற்கள் 470-அடி நீளம் வரை தள வரிசையாகப் போடப்பட்டுளது. 240-சதுர அடியுள்ள கண்ணாடியால் தாள்வாரத்தின் மேலே மூடப்பட்டுள்ளது.

சீனதேசத்தில் 116-வயதுள்ள ஒரு கிழவனிருக்கிறான். அவனுக்கு 83-வயதுள்ள மனைவியும் உண்டு. அவன் வாணாளில் விபசாரம், குடி, சுருட்டு, அபின் மாமிசம் எதுவும் உபயோகப்படுத்தவில்லை; சாகபக்ஷணியாயிருந்தான். சரீரத்தில் யௌவனம் இன்னும் பூரணமாயிருக்கிறது.

---

ஒன்பது உப்பரிக்கைகளுக்கு மேல் வீடு கட்ட ஐரோப்பாவில் விடுவதில்லை. அமெரிக்காவில் ஆகாயத்தை தொட்டுக்கொண்டிருக்கும்படியான உயரம் வரை வீட்டை எழுப்புவர். நியூயார்க்கில் 62-அடுக்கு கொண்ட மாளிகை ஒன்றுண்டு. பூமியிலிருந்து 900-அடி உயரத்துக்கு எழுப்பியிருக்கிறது. ஒரு பட்டணத்து ஜனங்கள் அதில் வாஸம் செய்யலாம்.

---

**புது மூக்கு அம்மா வந்தாங்கோ**—லண்டனிலே ஒரு அம்மாளுக்கு பாவம் மூக்கு மேலே புண்ணு வந்துவிட்டதாம். அவ்விடத்திய டாக்டர்கள் மேலே இருந்த சதையை அறுத்து குணப்படுத்திவிட்டு வேறொரு சதையைவைத்து தைத்து சரிப்படுத்தி பழயபடி மூக்கைக் கொண்டுவந்து விட்டார்களாம். அம்மாளும் புதுமூக்கு வாங்கிக்கொண்டு வெளிவரலானாள். இந்த ஆஸ்பத்திரி அந்த நாளிலே இருந்தால், மூக்கும் ஸ்தனமும் பறிகொடுத்த ராவணன் தங்கை சூர்ப்பனகைக்குங்கூட வைத்தியம்செய்திருக்கலாமே. அப்போது இல்லாமற்போனது துரதிஷ்டம்.

---

**இலையில்லாத மரம்:**—பசிபிக் சமுத்திரத்திலுள்ள அநேகம் தீவுகளில் இலையில்லாத மரங்கள் வளர்கின்றனவாம். இவை விரிந்த குடைமாதிரி பல கிளைகள் விட்டு சுமார் 30-அடி உயரம் வளர்கின்றனவாம். இதற்கு இலையாகிலும், பூவாகிலும், கிடையாதாம். இதன் ரசம் பல ரோகங்களுக்கு பயன்படுகிறதாம். ஆனால் மரம் இரும்பைவிடக் கடினமாகயிருப்பதால் மற்றபடி விறகுக்குக் கூட உபயோகமாவதில்லையாம்.

---

**நூதன வைத்தியம்:** நோயாளரின் இருதயத்துடிப்பை தற்கால வைத்தியர் குழாயொன்றை Stiethoscope) நெஞ்சில் வைத்துத் தங்கள் செவிகொண்டு அறிவது வழக்கமாயிருக்கின்றது. இப்பொழுது ஒரு வைத்திய சங்கத்தார் 100-மைலுக்கப்பாலுள்ள ஓர் நோயாளியின் இருதயத்துடிப்பைத் டெலிபோன் தந்திவழியால் அறிந்துகொள்ளும் வழியைப்பூர்த்தியாகக் கண்டிருக்கிறார்கள்.

---

**மருந்தின்றி நோய் நீங்குவது:**—பம்பாயில் ஒரு டாக்டர் மருந்தின்றி நோயைத் தீர்க்கும் புதிய சாஸ்திரக் கொள்கையைப்பற்றி பிரசங்கிக்கிறார். மனிதனுடைய உடம்பில் பற்பல நோய்களுண்டாவதற்கு காரணம் ஒரு வித உணர்ச்சியேயாம். இதைச் சரிப்படுத்துவதற்கு மனதை நேர் நிலையில் நிறுத்தினால் போதுமானதாம். இதற்காக நோயாளியின் மனதை ஒரே இடத்தில் சிறிது நேரம் நிலைநிற்கும்படி செய்வது அவசியமென்கிறார். இவ்வித சங்கற்பத்தாலே இதுவரை 100-ல் 75-நோயாளிகள் குணமடைந்திருக்கின்றனராம். மனோ பக்தியினால் "**மெஸ்மரிஸம்**" முதலியவைகள் செய்யப்படுவதை கவனிக்கும்போது இவருடைய முயற்சிக்கும் ஒருக்கால் பலன் கிடைக்கலாமென்றே தோன்றுகிறது.



**பூமியைத் துளைத்தல்:**—அமெரிக்கா சாஸ்திரிகளுள் ஒருவரான **கமிலே பிளம் மர்ரியன்** என்பவர் பூமியை ஒரு அந்தத்திலிருந்து மறு அந்தத்துக்குத் துவாரஞ்செய்துவிடலாமென்று அதற்கான யோஜனையும் சொல்லுகிறாராம்: அதனால் ஒரு கோளார்த்தத்திலிருந்து மறு கோளார்த்தத்துக்குப் போகச் சுருக்கமான வழியும் ஏற்படும் என்கிறாராம். பூமியைத் தோண்ட வரும் கல் மண் முதலியவற்றைப் பிரத்தியேகமாய் ஏற்படுத்த புகைரத மூலமாய்ச் சமுத்திரத்திற் கொட்டிவிடலாமென்றும், ஊறுஞ் ஜலத்தைப் பனிக்கட்டிபோல் உறையச் செய்து அப்புறப்படுத்திவிடலாமென்றும், தொழிற்பயிற்சியுள்ள சிலருக்கு மாத்திரம் சம்பளங்கொடுத்து இராணுவ சேவகர்களை வேலையைச் செய்யும்படி விடலாமென்றுஞ் சொல்லுகிறாராம். இவ்வாறு வேலை நடத்தினால் அதிசயமான பலநூதனங்கள் வெளிக்கு வருமென்பதிற் சந்தேகமில்லை, தற்காலம் நடக்கும் நவீன கிரியைகளைப் பார்த்தால் இதுவும் ஒருகாலம் நிறைவேறக்கூடுமென்றேவனுமானிக்க வேண்டியிருக்கிறது.

---

## வர்த்தமானங்கள்.

---

**ஸ்திரீ சானிடேரி இன்ஸ்பெக்டர்**—கல்கத்தா முனிசிபாலிட்டியில் இந்த விதமாக ஏற்பாடாகி இருக்கிறதாம். பெண்கள் இன்ஸ்பெக்டரானால் கோஷா முதலிய எந்த இடத்துக்கும் போகலாமல்லவா? நல்ல ஏற்பாடுதான்.

---

**தருமபுருடர்**—அமெரிக்காவில் ரொக்பலர் என்னும் பிரபு ஏழைகட்கு உதவிபுரிவதில் பெருங்கீர்த்தி வாய்ந்தவர், இவர் தமதுபெயருடன் பெரிய பாடசாலை ஒன்றை முன்னரே நிறைவேற்றியதுமன்றி தற்போது ஏழைகளுக்காக ஒரு மருந்துசாலை ஏற்படுத்துவதற்கு நாற்பது லக்ஷம் பவுன் கொடுத்திருக்கின்றாராம். பணம்படைத்தற்குப் பயன் இதுதானே.

---

**மூன்று தர்மிஷ்டர்கள்**—உலகத்திலே பெருந்தருமச்செயல்களைச் செய்தவர்கள் மூன்றுபேர்கள், இவர்களில் **ஆண்ட்ரூ கார்னீகி** முதல்வர். இவர் இதுவரையில் 4,86,00,00,000 ரூபாய் பரோபகாரச் செயல்களுக்கு தானஞ் செய்திருக்கிறார். **ஜான் ஆர். ராக்பெல்லர்** அடுத்தவர் இவர் 35,79'12,000 ரூபாய் தானஞ்செய்திருக்கிறார்: **மிஸ்ஸஸ் ரஸ்ஸல்ஸேஜ்** என்னும் துரைசாணியே அடுத்தவர். இவர் கொடுத்த தருமக்கொடை 5,43,85,845 ரூபாய்.

---

**அமெரிக்கர் திறமை**—குருடர் செவிடர்களுக்கென்று 41 ஸ்டேட் பள்ளிக்கூடங்களிருக்கின்றன. அவைகளில் 534 உபாத்திமார்களும், 4,413 குருடர்களும், 12,721 செவிடர்களும் படிக்கிறார்கள். குருடர்களுக்கும் செவிடர்களுக்கும் கிண்டர் கார்ட்டன் எலிமெண்டரி ஹைஸ்கூல்கள் ஏற்பட்டிருக்கின்றன. பல்லுகட்டும் கலாசாலைகள் அந்த ஸ்டேட்டில் 55 அதில் படிக்கும் மாணவர்களின் தொகை 6178. வைத்தியசாஸ்திர கலாசாலைகள் 78. அதில் வாசிக்கும் மாணவர்கள் 5999. விலங்கு நோயாற்றற்குரிய கலாசாலைகள் 19. அதில் வாசிப்பவர்கள் 2,677. என கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

**இந்தியாவில் தங்கமெடுக்கப்படுமிடங்கள்** :—முக்கியமாக வெட்டியெடுக்கப்படு மிடங்கள் மைசூரிலுள்ள கோலார், கோயம்புத்தூரிலுள்ள வைநாடு, அனந்தப்பூர், டார்வார், முதலிய இடங்களே, சென்ற வருஷம் 5615 அவுன்ஸ் தங்கம் எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன் வருஷம் 7242 அவுன்ஸ் எடுக்கப்பட்டதாம்.

---

**பிரான்ஸ் தேசத்தில் பெருவெள்ளம்** :—பிறாஞ்சு தேசத்திலே பெரும் பிரவாக முண்டாகி 7000-ஜனங்கள் பிழைப்பின்றி கஷ்டப்படுகிறார்கள், அநேக வீடுகளுள் வெள்ளம் புகுந்து நூற்றுக்கணக்கான குடும்பங்கள் குடியிருக்க இடமின்றித் தவிக்கின்றனர், பல இருப்புப் பாதைகள் இருந்தவிடமே தெரியாது போனதுபற்றி போக்குவரவுகளும் தபாற் கடிதங்களும் நின்றிருக்கிறதாம், பிறாஞ்சில் 2-வருஷத்திற்கு முன்னுமோர் வெள்ளமுண்டாகி பெரும் மோசம் விளைத்தது.

---

**ஓர் புதுவிதமான சிகிச்சை** :—இத்தாலியா தேசத்தில் ரோகிகளையும், புத்தி பிரமையடைந்தவர்களையும், வர்ணங்களால் சிகிச்சை செய்து குணப்படுத்துகின்றனர். இதற்காக நீலம் செகப்பு வர்ணங்கள் பொருந்திய கண்ணாடிக் கதவுகளுள்ள ஒரு வைத்திய சாலையைக் கட்டியிருக்கிறார்கள். அறைக்குள் அநேக இடங்களில் வர்ணங்களைப் பூசி இருக்கின்றன. வியாதியுடையவர்களின் சரீரத்துக்குத்தகுந்தாப்போல் ஒவ்வொரு அறை கொடுக்கப்படும். இவ்வித பிரயத்தனத்தால் அநேகர் ஆரோக்கியமடைந்து வருகின்றார்களாம்.

---

சென்னையில் மூன்று சோல்ஜர்கள் ஸமுத்திர ஸ்நானம் செய்து கொண்டிருக்கையில் ஒருவன், என்னவோ என் காலைப் பிடித்திழுக்கிறதென்று கத்தினான். அவனுக்கு உதவி செய்ய மற்ற இருவரும் வருவதன் முன்னர் அவன் மறைந்துபோனான். "ஷார்க்" என்ற மீன் வாயிற் சிக்கிக்கொண்டு அதற்கு ஆகாரமாயிருக்கவேண்டுமென் றெண்ணப்படுகிறது. மனிதன் தன் புத்திபலத்தினால் பெரியவனாகிறானேயன்றி ஒரு நாயை எதிர்த்து நிற்கக்கூட அவனுக்கு சக்தி ஏது? மனிதனை ஒரு புலி கொன்றுவிடப் பழகி அவன் மாமிச ருசி தெரிந்து கொள்ளுமாயின் மீண்டும் அது மனிதரையே நாடிவந்து கொல்லுமென்கிறார்கள். நர மாமிசம் அதிக ருசியாக இருக்கும்போலும்.

---

**கங்கா ஜலத்தின் மகிமை** :—நம் நாட்டார் கங்கையின் மகிமையையுணர்ந்து உயிர்துறப்பதற்குமுன் ஒரு முறையேனும் போய் அதில் ஸ்நானம்பண்ண முயல்வார்களென்பது உலகப்பிரசித்தம். மேனாட்டுச் சாஸ்திர நிபுணர்களும் இதன் மகிமையை அறிய ஆரம்பித்திருக்கிறார்கள், மிஸ்டர், E. H. ஹேன்கின் என்பவர் கங்கா ஜலமானது விஷபேதிப் பூச்சிகளின் அபிவிருத்தியைத் தடுக்கக்கூடியதென்றும், அதிலிருக்கிற ஒருவகைப்பதார்த்தம், அப்பூச்சிகளைக் கொன்றுவிடுகிறதென்றும் கூறுகிறார்; சில வருஷங்களுக்குமுன் ஓர் ஜர்மன் டாக்டர் இப்புனித நீரின் மகிமையைப் பரீக்ஷித்து இதுபோலவே எழுதியிருப்பதை எவருமறிந்த விஷயமேயாகும்.



**மரம் வெட்டுங் காலம்** :—கிருஷ்ணபக்ஷத்திலும் சுக்ல பக்ஷத்திலும் மரத்திலுள்ள சாரம் இறங்கி ஏறுகிறபடியால் கிருஷ்ண பக்ஷத்தில் வெட்டின மரமானது சுக்கில பக்ஷத்தில் வெட்டின மரங்களைப் பார்க்கிலும் ஜாஸ்தி நாள் நிற்கிறதென்று அமெரிகாவிலுள்ள மெக்ஸிகோவிலும், அங்குள்ளவேறு சில நாடுகளிலும் மரம் வெட்டுவோரின் கொள்கை, இந்தியாவில் சிலவிடங்களிலும் அதே கொள்கையுண்டு. இதன் ருஜூ சுலபமானது. மூங்கில், தேக்கு, மா, பலா முதலிய இன்னும் சிலமரங்கள் கிருஷ்ண பக்ஷத்தில் வெட்டாமல் சுக்கிலபக்ஷத்தில் வெட்டினால் சத்து ஜாஸ்தியாயிருப்பதால் உளுத்துப்போகுமாம்.

---

**பிரின்ஸ்ஆப்வேல்ஸ்** :—9 வயது காலத்தில் ஒரு நாள் இரவில் படுக்கைக்குப் போகும் போது தனது தாதியாகிய மிஸெஸ் லேலி என்பவளிடத்தில் அடியில் வருமாறு பிரின்ஸ் எட்வர்டு ஆப் வேல்ஸ் சொன்னாராம்: நான் ஒருநாள் அரசனாகப்போகிறேன் யென்பது உனக்குத் தெரிந்த விஷயம். நான் அரசனாயிருக்கும்போது 3 சட்டங்கள் செய்யப்போகிறேன். ஒருவரும் நாயின்வாலை அறுக்கக்கூடாது அதுமிகவும் கொடூரமானது. குதிரைகளுக்கு கடிவாளம் போடக்கூடாது. அது மிகவும் கொடூரமானது. நான் ஒருபாவங் கூடசெய்யமாட்டேன். இவ்வளவு இளகின குழந்தையை ஒரு நாள் உலகம் வாழ்த்தும். இவ்வரசருக்கு சவாரிபண்ணுவதில் பிரியம், நீந்துகிறார், படகு தள்ளுகிறார். கிரிகட்டு பந்தாடுவார். இதன்பிறகு இவர் ஒரு சண்டைக் கப்பலின் வணக்கத்தையும் கற்றுக் கொண்டிருக்கிறார்.

---

## விடுகதை வினா.

### ஆசிரியம்.

சந்ரசேகர்தரும் பொக்கிஷப்பேராம——<br>
தன்னெழுத் தாறிரண்டாம்<br>
தகுமுதலினொடுநான் கவையுடையதின்பெயர<br>
தாகுமுத லெட்டுகடையும்<br>
விந்தை சேரெட்டு பதினொன்று கடைபார்க்கிலது<br>
விலக்குவதி வினையதாகும்<br>
விளங்கிரண்டொன்றுலகிலவை பரப்புவதாகு<br>
மேவுமூன்றேழு கடைதான்<br>
இந்த வுலகினிலவை பெற்றதின் பேராகு<br>
மினிமைசேர் மூன்று நான்கும்<br>
இவை வாழுமிடமாகு மூன்று பதினொன்றுகடை<br>
இதை யேந்துவோர்கள் நாமம்<br>
அந்தமிக வுறுமிரண்டொடுமூன்று கடையெழுத்<br>
தவைதிரியு மிடமதாகும்<br>
அன்றியு மிரண்டினொடு நான்கெழுத்ததைநோக்கி<br>
யவனியோர் சொல்லுமொழியே.

நிலமகட் கெழில்வதன மென்னச்சிறந்தவோர்
 நிகரில் நகரொன்றஃதினில்
நிறையெழுத்தாறுகு முன்மூன்று கடைதனை
 நிறுவிடக்குடமதாகும்
நலமிக்க முதலிரண்டைந்து கடைகுணமென்ன
 நவிலலாங் கடையின் மூன்றும்
நன்காய விளைவாகு மூன்றிரண்டைந்துகடை
 நற்செல்வ மதையுணர்த்தும்
கலகமறு நான்கிரெண்டு மூன்றுகடை சினமெனக்
 கழறலாம் நான்கு மட்டும்
கண்பெயரினைக்காட்டு மிந்த விடுகதையின்
 கருத்தினைக் கழறுதிரென
உலகமெல்லாஞ்சென்று நற்பெரும் புகழ்நிறீஇ
 யுலவு வைத்திய போதினி!
யுன்நண்பரனைவர்க்குரைத்தவர்கள் தருவிடையி
 னோடுவர வேண்டுவலரோ.

இதில் முற்கவிக்கு விடைபகர நேயர்கள் மலைக்கக்கூடுமென்று சாதாரணமான பொருளை வைத்தேயமைக்கப்பட்டுள்ளன. ஏனெனில் இதின் வழியைக்கண்டவர்கள் அடுத்த பத்திரிகையில் எழுதப்படும் இவைபோன்ற கவிகளுக்கு எளிதில் விடை காணும் பொருட்டென்க.

1—1—1911.
மார்க்கயன்கோட்டை.

இங்ஙனம்,
**M. S.** சுந்தரம் ஆசாரி.

## புத்தக வரவு.

பிரம ஸ்ரீ வா. முத்துகிருஷ்ணய்யரவர்களால் இயற்றப்பட்டுள்ள ஆரிய ஜன போதினி எனப் பேர் புனைந்த அறிய புத்தகத்தின் பிரதியொன்றை வந்தனத்தோடு வரப்பெற்றோம். இப்புத்தகத்தில் வரையப்பட்டிருக்கும், ஒவ்வொரு விஷயமும் விலையேறப்பெற்றதாயும், பாரத மக்களுக்கு பயனளிக்கத்தக்கதாயும், ஆரியர்களின் முற்கால தற்கால நிலைமைகளும், நம்மவர்கள் இதற நாட்டார்களைப்போல் விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றைக் கைப்பற்றவேண்டிய நவீன வியாசங்களுடனும், சாஸ்திரோக்தமாயும், உபமான உபமேயங்களுடனும், பாமரர்களுக்கும் பயனளிக்கக்கூடிய விதமாய் இனிய செந்தமிழ் நடையில் வரையப்பட்டுள்ள இப்புத்தகத்தின் விலை தபால் சார்ஜ் உள்பட அணா 10—தான்.

இந்து சாஸ்திராபிமானி:—ஸ்ரீ வா. முத்துகிருஷ்ணய்யரவர்களால் இயற்றப்பட்டது. இப்புத்தகத்தில் பிரம்மை ஸத்தியம், ஸம்ஸாரபந்தம், கோள ரகஸ்யம், சைவ வைஷ்ணவ ஸம்வாதம், தர்மசிந்தை, கல்வி, முயற்சி, ஈஸ்வரபக்தி, இராஜபக்தி, பெண்கல்வி, பிராசீனசாரம், ஆரியமதாந்தம் முதலிய அரிய பெரிய விஷயங்களும், அடங்கப்பெற்று, வசன நடையில் வரையப்பட்டுள்ள இச்சிறந்த செந்தமிழ் நூல் தமிழ் மக்கட்கு பெரிதும் பயனளிக்கத்தக்கது என்னலாம். இதன் விலை அணா 6 தான். மேற்கூறிய இவ்விரு புத்தகங்களையும் நம்மீதன்புகூர்ந்தனுப்பிய ஐய்யரவர்களுக்கு நமது மனப்பூர்வமான வந்தனமளிக்கின்றோம். இப்புத்தகம் வேண்டியவர்கள் கல்லிடைக்குறிச்சி, இந்து சாஸ்திராபிமானி ஆபீஸருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளவும்.




# ARYAN INITIATION!
OF THE
# SPIRITUAL BROTHERHOOD !!
OF THE
# INDIAN ACADEMY OF SCIENCE. !!!

Under the guidence of an Adept Master of the Brotherhood, a special Course of Lessons is now ready to initiate you into all the mysteries of LAYA and MANTRA YOGA of the Aryans giving practical methods for HINDU-HYPNOTISM, MESMERISM, TELE-PSYCHY, WILL-CULTURE, SPIRITUAL, HEALING, CLAIR-VOYANCE CALIR AUDIENCE CLAIR-SENTIENCE, SPIRIT-COMMUNATION MEDIUMSHIP and other wonderful secrets for attracting, SUCCESS, HEALTH, SPIRITUAL POWER and Soul-Bliss, as practised by the ancient Aryan Adepts.

This Course is the first of its kind in the world and anybody knowing to READ and WRITE ENGLISH can master it and practice its teachings to a wonderful degree.

With a complete outfit and fine Diploma of Membership of the 1st degree.

Price, Rs. 10 for the first 500 enrolments. The price will be raised to Rs. 15 shortly. Persons ordering the course should send a copy of their photos along with money in ADVANCE, No. V. P. System. Look sharp!

SELF-CULTURE is a Monthly Magazine and Review issued as the official organ of the Indian Academy of Science. It is a Journal of Inspiration devoted to Mental, Moral, Psychic, and Spiritual Culture of Man.

The subjects dealtwith therein include Mental, Psychic, Spiritual and Occult Sciences: Phrenology, Physiognomy, Practical Psychology, Spiritualism, Yoga, Theosophy, New-Thought, Vedanta Philosophy and other Esoteric Cults.

A special feature of this Journal is that we issue every month seris of Practical studies and Instructions for the devolopment of the latent powers of the Body, Brain, Mind, Soul and Spirit of Man; which are much appreciated by the public at-large.

The Journal is edited & published by the far-famed Author, Writer, and Thinker—Dr. K. T. Ramasami, D. SC: PH. D; C. L. D; President The Indian Academy of Science.

The Editor has secured the assistance of an able corps of Contributors from all parts of the Civilized world. The Journal is highly spoken of by the Press and the Public atlarge and it circulates all round the world. You want it! You will do well to subscribe for it now! The Annual Subscription is only Rs. 3; to India; Sh. 4 or Dol. 1; Foreign.

**THE INDIAN ACADEMY OF SCIENCE,**
KIZHNTTM, Tinnevlley, Dist. S. India.

## இந்து சாஸ்திராபிமானி

இத்தலைப் பெயரிட்ட புஸ்தகமொன்று அடியில் கையொப்பமிட்டவரால் இனிய செந்தமிழ் நடையில் நவீனமாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இதில் இந்துமதக் கோட்பாடுகளையும் பொதுநன்மைகளையும் தழுவிப் பேசுகிற அநேக உபந்நியாசங்களும், திருவாங்கூரை அரசாக்ஷி செய்த பூர்வீக அரசர்களுடைய சரித்திரங்களும் இவர்களிடம் மந்திரி வேலையில் அமர்ந்திருந்த தேர்ந்த புத்திசாலிகளாகிய மிஸ்டர் தளவாய் ராமய்யர், ஸர். டி. மாதவராவ், ஆனரபிள், ராமய்யங்கார் முதலிய மேதாவிகளின் சரித்திரங்களும் அடங்கி இருக்கின்றன. குறித்த புஸ்கம் விலை உயர்ந்த நல்ல கிலேஸ் கடிதத்தில் முத்துக்களைப் போன்ற அக்ஷரங்களாக பொருக்கி யெடுத்து 8 பேஜுள்ள 16 பாரத்தில் 128 பக்கம் வரை அச்சிடப்பட்டிருப்பதுமன்றி, மதராஸ் லோகோபகாரி பத்திராதிப ரவர்களுடைய படமொன்று வைத்து அழகாக பயிண்டு செய்யப்பட்டு மிருக்கின்றது. வேண்டுவோர் தங்கள் பெயர், ஊர், போஸ்டு முதலிய பூரா விலாசங்களையும் எனக்குத்தெளிவாக எழுதும்பக்ஷத்தில் போஸ்டேஜூ உள்பட 6 அணா விலைக்கு கல்லிடைக்குறிச்சி ஸஹிதம் வி. பி. மூலம் அனுப்புவேன்.

## ஆரிய ஜன போதினி

இந்நூதனமான தமிழ்ப் புஸ்தகத்தில் இந்தியாவின் முற்கால தற்கால நிலைமைகளும், அக்காலங்களிலுள்ள அரசர்களின் ஆக்ஷி முறைகளும், கைத்தொழில் விஷயங்களும், பிராசீன மகரிஷிகளால் விதிக்கப்பட்டிருக்கின்ற தர்ம சூட்சுமங்களும், அந்நிபெஸாண்டு அம்மையவர்களின் அருமையான உபன்னியாசங்களும், தாதாபாய் நௌரோஜீ இந்தியாவுக்கு உழைத்து வருகின்ற சிறந்த பெரும் முயற்சிகளும், அவரது சரித்திரமும், ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியின் ஸத்கிருத்ய மஹிமைகளும், விவேகானந்த ஸ்வாமிகளால் உபதேசிக்கப்பட்ட வேதாந்தத்தின் கருத்துக்களும், ஸநாதன தர்மம் நிலைத்திருக்கும் பொருட்டு கர்னல், ஆல்காட் துரையவர்களால் செய்யப்பட்டிருக்கின்ற காரியங்களும், பாஞ்சாலி யென்னும் பதிவிரதா சிரோன்மணியை மானபங்கம் செய்ய முயன்ற துச்சாஸனன் அவமானமடைந்ததும், ராஜஸூய யாகத்தில் தர்மபுத்திரருக்கும் சிசுபாலனுக்கும் நேரிட்டவாக்கு வாதங்களும் பஞ்சாப், வங்காளம், டில்லி, பாட்னா, முதலியவைகளை யொத்த பிற விடங்களில் நவீன வியவஸாய சாஸ்திரத்தை யனுசரித்து செய்யப்படுகின்ற வியவஸாய முறைகளும், இதுபோல் இன்னும் அனேக அற்புத விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. குறித்த புஸ்தகம் விலை யுயர்ந்த கிலேஸ் பேபரில் பாரம் 8 பேஜு அளைவில் 120 பக்கங்கள் வரை நல்ல செந்தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. இது, ஸ்ரீராம, கிருஷ்ண மூர்த்திகளின் படங்கள் ஸஹிதம் பிறமத தூஷணையின்றி பல மேல் விலாசங்களுடன் ஸகல மதஸ்தர்களுக்கும் பொதுவாக இயற்றப்பட்டிருக்கின்றது. இதற்கு வி. பி. சார்ச்சுடன் விலை அணா 10. ஸிலோன் முதலிய வெளிநாடுகளுக்கு ஒரு அணா ஜாஸ்தியாகச் சார்ச்சு செய்யப்படும். வேண்டுவோர் இப்பத்திரிகையின் பெயரைக்குறிப்பிட்டு எனக்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

வா. முத்துகிருஷ்ண ஐயர்,

இந்துசாஸ்திராபிமானி, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலிஜில்லா.





## ரோமசங்காரி சோப்.

தேகத்தின் எந்தப்பாகத்திலும் இந்த ஸோப்பை உபயோகித்தால் யாதொரு கெடுதியுமின்றி ரோமங்களைச் சங்காரஞ்செய்துவிடும். 6-மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய கட்டி 1-க்கு விலை 6-அணா; டெஜன் ரூ. 4, வி. பி. சார்ஜ 1-முதல் 3-க்கு 4-அணா.

## ரோமப்பிசின்.

இப்பிசின் நரைத்த மயிரை இரண்டு நிமிஷத்திற்குள் பழயபடி கறுப்பாக்கிவிடும். கெடுதிசெய்யக்கூடியது ஒன்றும் இதில்கிடையாது 1-புட்டி 3-மாதத்துக்கு போதுமானது. டைரக்ஷன் மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு விலை 12-அணா; டெஜன் 1-க்கு ரூ. 8. 1-முதல் 3-புட்டிக்கு வி. பி. சார்ஜ் 4-அணா.

## கார்பாலிக் டூத்பவுடர்

இந்தபற்பொடி, வாயிலுண்டாகும் துற்நாற்றத்தைபோக்கி பல்லைச் சேர்ந்த எல்லா வியாதிகளைப்போக்கி பற்களை கெட்டிப்படுத்தும். டின் 1-க்கு $1\frac{1}{2}$-அணா டெஜன் 14-அணா 1-டெஜனுக்கு வி. பி. சார்ஜ் 4-அணா,

Apyly to Messrs—J. SUR & Co.,
Patent Medecine Sellers & General order suppliers,
South Sinthee Road, P. O. (V) Cossipore, Calcutta.
Agent, Lakshmivilasa Provident Institution Ld. Kumbakonam

## பற்பொடியும் பவளச்சுன்னமும்.

இந்த சஞ்சீவி யெனும் பற்பொடியானது தஞ்சைமாநகரத்தில் பரம்பரையாய் கையாண்டு வந்தது. நீடித்து அனுபோகத்திற்குவராமல் புதைபட்டிருந்தது. இது ஓர் மஹான்களால் வெளியாகி ஜனங்களுக்கு உபகாரமாகும் பொருட்டாகவும், அனுபோகத்திற்கு ஒத்திருப்பதையும் பல பேர்கள் வேண்டுகோளின்படி வெளியிடத்துணிந்தோம். ஷை பற்பொடியை ஓர் சிட்டிகை யெடுத்து காலையிலும் மாலையிலும் பற்துலக்கி வருவதுடன் இந்த பவள புற்றினால் செய்த சுன்னத்தையும் தாம்பூலத்துடன் 12 நாள் தரித்துக்கொண்டு வந்தால் பல்லசைவு, இரத்தம் வருதல், சீழ்வருதல், புருவெட்டு, ஜீலிஜிலிப்பு, கூச்சம், நடுக்கம், எகிரில் ஏற்படும் துர்நாற்றம், எகிர்கரைதல், பல்லரணை முதலான நோயை கண்டிப்பாய் நீக்கி சுவஸ்தம் செய்வதோடு ஆயுள்பரியந்திரம் பல்விளாமல் காக்கச்செய்யும்.

| | | | |
|---|---|---|---|
| ஓர் அவுன்ஸ் கொண்ட பற்பொடி டப்பா 1-க்கு விலை | 0 | 6 | 0 |
| ஓர் பலம் கொண்ட சுன்னப டப்பா 1-க்கு விலை | 0 | 2 | 0 |

வி. பி. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

பி. ஸாம்பமூர்த்தி ஐய்யர்,
ஆயுள்வேத பண்டிதசாலை, ஆய்குடி போஸ்டு,
திண்டுக்கல் மார்க்கம்.

## பூரணசந்த்ரோதயம்.

பிரதி ஆங்கிலமீ 15உ மதுரையில் பிரசுரமாகிவரும் தமிழ் பத்திரிகை. சந்தா வருஷம் 1-க்கு ரூ. 2. தனிப்பிரதி அணா 4.

ப. நாராயண அய்யர், B.A., B.L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி அய்யர், B.A., B.L., F. T. S.
} பத்திராதிபர்கள்.

# COMPLETE LETTER WRITER.

***2nd Edition Revised and Enlarged***

BY

HARI CHARAN DAS

***Price Re. 1*** *(Full cloth Gilt 320 pages.)*

A universal Guide to the Art of Letter writing for all positions of life.

IT CONTAINS CHAPTERS ON :—1. Private correspondences, 2. News paper, 3. Doctors, 4. School correspondences, 5. Government & Commercial, 6. Collector's office, 7. Attorneys, Vakils and muktears, 8. Steamer, 9. Police, 10. Municipality, 11. Income-tax, 12. Railways, 13. Tramways, 14. Medical department, 15. Postal department, 16. Telegraph department, 17. Precis writing, 18. Drafting, 19. Docketing, 20. Book keeping, 21. Miscellanious forms, 22. Miscellaneous applications forms, 23. Forms of Address, 24. Paper currency, Abbreviations and daily wages.

A copy of the valuable book will dispense with the necessity of seeking the help of others for writing letters or applications, etc.

**ENGLISH ETIQUETTE & PROVERBS**

A very useful book for those who have to come in contact with Englishmen Price 5 annas only.

**M. L. DAS & Co.,**

Book-sellers & Publishers,

*122, Baitakkhana Road, Calcutta.*



ஓம்: வந்தேமாதரம்.

## பாலசந்திர பற்பொடி.

கல்நார் பஸ்பம் முதலிய சுதேச அவுஷத முறையையும், கார்பாலிக் ஆசிட் முதலிய இங்கிலீஷ் முறையையும் அனுசரித்து தயார் செய்யப்பட்டிருக்கிறது. எவ்விதமான பல்நோயையும் தவராது தீர்த்து உறுதியாய் இருக்கும்படி செய்யக்கூடிய குணமுடையது. அநேக கனதனவான்களால் நற்சாக்ஷிபத்தி மளிக்கப்பட்டிருக்கிறது. சகல மாணவர்களும் உபயோகிக்கவேண்டியதற்காக 1-அவுன்ஸ் அடங்கிய சீசா 1-க்கு அணா 2. டிஜன் 1-க்கு ரூபா 1—2—0.

ஆலங்குடி முதல்தரமான இருவாளிப்பு பாக்குவெட்டிகள் 0—3—6 முதல் கிடைக்கும். வியாபாரிகளுக்கு தகுந்தகமிஷன் கொடுக்கப்படும்.

N. A. S. Iyer F. T. S.

புரோப்ரைட்டர், பாலசந்திர டிரேடிங் ஹால்,

ஆலங்குடி, நீடாமங்கலம் *S. I. R.*

கும்பகோணம் ஆனரயின் திவான்பகதூர் மகாகனம் பொருந்திய R. ரெகுநாதராயர் அவர்கள் C. S. I. சொல்லுகிறதாவது,

I have used this tooth powder. *I found it usefull.*

(Sd.) R. RAGUNATHA RAO.





## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

37. சந்திராமிருதரஸ் :—அசாத்தியமான காசம், இருமல், க்ஷயம் லிய நுரையீரலைப்பற்றிய வியாதிகளை குணப்படுத்தும். நல்ல பசியும், தேகபலமும் உண்டாக்கும், டப்பா 1-க்கு ரூபா 1. வி. பி. செலவு 1 முதல் 3 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

38. சீதபேதி ரத்தபேதிக்கு மருந்து :—எத்தனை நாள்பட்டதாலும் இம்மருந்தினாலும் வயிற்று கழிச்சல், சீதபேதி, ரத்தபேதி, கிருணி, வயிறு கடுப்பு, முதலியவைகள், அடியோடு தீரும். டப்பா 1-க்கு விலை ரூபா 1. வி. பி. செலவு 1 முதல் 3 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

39. விஷ்ணுதிலா :—எப்பேர்க்கொத்த தலை வலிக்கும் நெற்றியின் இரண்டு பொட்டுகளிலும் இம்மருந்து கொஞ்சம் தடவி நன்றாகத் தேய்க்கவேண்டும். இடுப்புநோய், கழுத்து நோய், பக்கசூலை, கைகால் பிடிப்பு முதலியவும் இன்னும்தேகத்தில் காணும் மற்றுமுள்ள சகல வலிகளுக்கும் இம்மருந்தில் கொஞ்சமெடுத்து நோயுள்ளவிடத்தில் நன்றாக தேய்க்க சுகமாகும். தேள், நட்டுவாக்கிளி, பூரான் இதுகள் கொட்டின அல்லது கடித்த விடத்தில் இம்மருந்தைத்தடவி நன்றாய்த் தேய்த்தால் சௌக்கியமாகும். சீசா 1-க்கு அணா 8, வி. பி. செலவு 1-முதல் 6-சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

40. சுகுமாரதிலா:—இதை பிரதி தினமும் ஆண்குறியின் மேல் பூசிவந்தால் லிங்கத்தின் சோர்வு, ஆண்குறி துவளல், கோணல், நரம்புகளின் தளர்ச்சி நீங்கி, நீண்டு கெட்டிப்பட்டு, மிகுந்த வலிவுகொள்ளும். இழந்துபோன போகசக்தி முற்றிலும் பெற்று சுகிக்கலாம். விலை சீசா 1-க்கு ரூபா 1. வி. பி. செலவு 1-முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

அதி உன்னத வாசனை திரவ்யங்கள் முதலானவைகளின்
விலை விபர ஜாபிதா.

உயர்ந்த கோரோஜனை தோலா 1-க்கு ரூபா 6 உயர்ந்த பச்சை கற்பூரம் தோலா 1-க்கு ரூபா 2, உயர்ந்த குங்குமப்பூ தோலா 1-க்கு ரூபா 1 வி. பி. செலவுகள் பிரத்தியேகம்.

உசிதமான அத்தர் தினுசுகள்:—ரோஜாப்பூ, மல்லிகைப்பூ, ஜாதிப்பூ, மகிழம்பூ, விளாமிச்சம்வேர், மரிக்கொழுந்து. தாழம்பூ, மருதாணிப்பூ, சிவாக் முதலிய புஷ்பங்களின் முதல்தரமான அத்தர் வகைக்கு தோலா 1-க்கு கிரயம் ரூபா 1—8—0, வி. பி. செலவு பிரத்தியேகம்.

தாம்பூல விஹாரம்:—தாம்பூலம் தரிப்பவர்களுக்கு அதி அவசியமான மனம் களிப்புண்டாக்கக்கூடிய வாசனைக் கலவை விலை டப்பா 1-க்கு அணா 4, வி. பி. செலவு 1-முதல் 12-டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

## பி. சுப்பறாயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

**சோடா வாட்டர் பவுடர்:**—இச்சூரணத்தில் கொஞ்சமெடுத்து குளிர்ந்த ஜலத்துடன் கலந்துகொண்டால் அதிஉசிதமான சரியான சோடா வாட்டர் உண்டாகும். ஒரு சீசாவிலுள்ள பவுடர் சுமார் 8-சீசா சோடா வாட்டர் செய்யப்போதுமானது. விலை சீசா 1-க்கு அணு 6, வி. பி. சிலவு 1-முதல் 4-சீசாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

**லெமனேட் பவுடர்:**—இச்சூர்ணத்தில் கொஞ்சம் எடுத்து குளிர்ந்த ஜலத்துடன் கலந்தால் அதிஉத்தமமான லெமனெட் தயாராகிவிடும். ஒரு சீசாவிலுள்ள சூர்ணம் சுமார் 8 பெரிய சீசா லெமனெட் செய்யப் போதுமானது. விலை சீசா 1-க்கு அணு 6, வி. பி. சிலவு 1-முதல் 4-சீசாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

**பன்னீர் :**—இப் பன்னீர் ½-அவுன்ஸ் சீசாவில் விற்கப்படுகிறது. இச்சிறு சீசாவிலுள்ள பன்னீரை 3 பெரிய சீசா வெந்நீருடன் கலந்தால் முதல்தரமான 3-சீசா பன்னீராகும். மேன்மையான பன்னீர். விலை சீசா 1-க்கு அணு 8, வி. பி. சிலவு 1-முதல் 3-சீசாக்கள் வரையில் அணு 5, பிரத்தியேகம்.

**உயர்ந்த வாசனை பில்லைகள் :**—உரைந்த குலாப், உரைந்த மோதியா, உரைந்த லவண்டர்களாகிய 3-தினுசுகள். உடுப்புகளுக்கு போடக்கூடிய உசிதமான வாசனை தினுசுக்கு டப்பா 1-க்கு அணு 8, வி. பி. சிலவு 1-முதல் 6-டப்பாகக்ள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

**உடுப்புகளுக்குப் போடும் சுவாசனைத் திரவியங்கள் :**—மனமோகினி, மனோரஞ்சன், ஜெகமோஹினி, மதனவிலாசம், அக்பர்சிருய் ஷாஜிஹான்சிருய் என ஆறுவகையான வாசனைகளிருக்கின்றன. இவைகளில் ஒவ்வொன்றும் இப்பொழுதே மலர்ந்த புஷ்பங்களின் சுவாசனையுடையவைகள். வகை 1-க்கு சீசா 1-க்கு அணு 8, வி. பி. சிலவு 1-முதல் 3-சீசாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

**கேசர் பவுடர்:**—இது ஓர் விதமான விலைபெற்ற சுகந்த கலவை. இதில் கொஞ்சமெடுத்து தண்ணீரிற் கலந்தாவது அல்லது கொஞ்சம் சந்தனத்திற்கலந்தாவது தேகத்திற் பூசினால் எல்லாராலும் புகழத்தக்க பரிமளத்தைத்தரும். கலியாணம் முதலிய சுபகாரியங்களுக்கு இதை அவசியமாக உபயோகிக்கவேண்டியது. இதன் இன்பமான சுகந்தம் அனுபோகித்தவர்களுக்குத்தான் தெரியும். சந்தனத்துடன் மனோரம்யமான இச்சிரேஷ்டமான கலவையைச் சேர்த்துக்கொண்டால் சந்தனத்தில் அத்தர், பன்னீர், குங்குமப்பூ முதலிய வாசனைகள் சேர்க்கவேண்டிய தனுவசியம். சீசா 1-க்கு விலை அணு 8. ஒன்று முதல் 6-சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய சிலவுகள் அணு 5 பிரத்தியேகம்.

பி. சுப்பறாப், பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

OFFICE OF ... BOOKS. REGISTERED 1-MAR 1911 MADRAS.


# வைத்திய போதினி.

சித்திரப் படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

புத் 2. } 1911-ஞு பிப்ரவரி௴ 1௳ { நெ. 2.


## ஜீரணமும், ஜீரண உருப்புகளும்.

தேகபோஷணைக்காகப்புசிக்கப்பட்ட பதார்த்தங்களை பக்குவப்படுத்தி, அதிலிருக்கிற ரஸம் ரத்தத்திற் போய்ச்சேரும்படி செய்கிற தொழிலுக்கு ஜீரணம் என்று பேர். ஜீரண உறுப்புகளாவன, வாய், பல், உமிழ்நீர்க்கோளம், மிடறு, இரைக்குழல், இரைப்பை, தூணைக்குக்கி, குடல்கள், இரசாயனி, இரசதாரை, ஈரல், கணையம், பீலிகம், இவைகள் ஜீரண உறுப்புகளாம். இவைகளில் வாய் என்பது பற்களும் சுவைக்குரிய கருவிகளுமிருக்கும ஓர் உறுப்பாம். நாவுக்கு அடியிலும் தாடையுள்ளும் காதுக்கு அடுக்கவும் பக்கத்துக்கு இரண்டாக இருக்கும் உமிழ்நீர்க்கோளங்கள் (6) ஆம். மிடறு என்பது அடிநாவிலிருந்து இரைக்குழல்மட்டும் ஓடியிருக்கிற ஓர் குழல். அது சவ்வு இழைகளாலுண்டாக்கப்பட்டதாய் மூன்று அங்குல நீளமுள்ளதாய் விசாலமுள்ளதாயிருக்கிறது. இரைக்குழல் என்பது ஒரு அடி நீளமுள்ள தடித்த ஜவ்வுக்குழலாம். அதின் வழியாய்ப் போஜனபானங்கள் இரைப்பையினுட்செல்லும். இரைப்பை (The Stomach—ஸ்டமக்) என்பது மெல்லிய இசிவுள்ள மூன்று சவ்வுப்படலங்களால் ஆகியது. அது நெஞ்சுக்கு கீழே அடிவயிற்றிலே உடம்புக்கு நடுவாய்ச்சற்று இடப்பாகத்தில் இருக்கிறது. அம்மூன்று படலங்களில் வெளிப்படலம் சமமுள்ளதாய் மிகவும் அழுத்தமுள்ளதாயிருக்கிறது. நடுப்படலம் நுண்ணிய இழைகளால் ஆகிய இரண்டு அடுக்குள்ளது. உட்படலம் அதிக விசாலமுள்ளதாய் மெதுவானதாய் அதிக மடிப்புகளுள்ளதாய் இருக்கிறது. அம்மடிப்புகளில் சளிபாவியிருக்கிறது. அந்த மடிப்பு சிறுகுடல் பெருங்குடல்களுக்கு உள்ளுறையாய் அவைகளின் தொடர்முழுதும் ஏகமாய்ப் பரந்திருக்கிறது. மற்றொரு ஜலப்பை குண்டிக்காய் முதலியவைகளுக்கு உள்ளுறையாயிருக்கிறது.

இரசாயனி—என்பது சிறுகுடலின் உள்பக்கத்திலிருந்து கிளம்பிய சிறுகுழல்களாம். அவைகள் மணிக்குடலுக்கு ஊடாகச்சென்று இரசதாரையிலே பொருந்துகின்றது.

குடல்கள்—சிறுகுடல் பெருங்குடல் என இருவகைப்படும். அவைகள் துவாரமுள்ளது. சிறுகுடல் (Small—Intestines—இன்டெஸ்டைன்ஸ்) ஏறக்குறைய 25-அடி நீளமுள்ளதாயும், தேகத்துக்கு 6 பங்கு நீண்டிருக்கும். இதில் 3 பிரிவுகளுண்டு, அவையாவன:—டியோடினம் ஜிஜூனம், இலியம் (Duodenum) துணைக்குக்ஷி. இது இரைப்பையைத்தொடர்ந்திருக்கும். 8 அல்லது 10 அங்குல நீளமுள்ளது; தீனிப்பைக்குப்பின்னுக இருக்கும்; இதில் ஏகோபித்த பித்தப்பைக்குழலும் (Common Bile duct—காமன் பயில் டக்ட்,) கணையக்குழலும், (Pancreatieduct—பான்கிரியாடிக்ட் டக்ட்) சேர்ந்துமுடிகின்றன. ஜிஜூனக்குடல் (Jejunum). இது துணைக்குக்ஷியைத் தொடர்ந்திருக்கும்; பிரேதங்களில் எப்போது மிதில்ஒன்றுமிராது. இலியக்குடல் (Ileum) இது ஜிஜூனக்குடலைத் தொடர்ந்து பெருங்குடலில் போய்முடியும், உந்திஸ்தானத்திலும், அடிவயிற்றிலும், இடைக்குழியிலும் நிறைந்திருக்கும். சிறுகுடல்களுக்குள் விருத்தமாகவும் பிறைபோலவும் இருக்கிற ஜவ்வுமடிப்புகளுக்கு (Valvulae Conniventes—வால்வியுலிகானிவென்டிஸ்) அவைகளில் ரசாயனிகள் (Lacteals—லாக்டியல்ஸ்) பரவியிருக்கும்.

பெருங்குடல்—(Large intestines—லார்ஜ் இன்டேஸ்டைன்ஸ்) இது நீளத்தில் 5—6 அடி நீளமுள்ளதாயிருக்கும். அடிவயிறு வலது பக்கத்துப் பள்ளத்திலிருந்து (Right Iliacfossa—ரயிட் இலியக்பாஸா,) ஆரம்பித்து (Cæcum—ஸிக்கம்,) மேலுக்கேறி உந்திஸ்தானத்தில் குறுக்காய்ச்சென்று பிறகு இடதுபக்கமாய்க் கீழுக்கிறங்கி, இடது அடிவயிற்றுப்பள்ளத்தில் வளைந்து, திரிகஸ்தான எலும்புக்கு முன்பாக கீழுக்கிறங்கி, குதத்தில் போய்முடிகின்றது. வலது பக்கம் ஊர்த்த முகமாய் போவதற்கு, (Ascending colon—அஸ்ஸென்டிங் கோலன்) என்றும், குறுக்காக ஓடுகிறதற்கு (Transverse colon—ட்ரான்ஸ்வர்ஸ் கோலன்,) என்றும், கீழுக்கிறங்குகிற பாகத்திற்கு (Descending colon—டிஸென்டிங்கோலன்) என்றும், வளைவிற்கு (Sigmoid flexure—ஸிக்மாயிட் பிளக்ச்சர்) என்றும் திரிகஸ்தான எலும்புக்குமுன் இருப்பதற்கு மலக்குடல் (Rectum—ரெக்டம்) என்றும் முடிவுக்கு குதம், மலத்துவாரம், பவனவாய், ஆஸனம், அல்லது அபானம் என்றும், ஆங்கிலத்தில் (Anus—ஏனஸ்) என்றும் பேர். சிறு குடலும் பெருங் குடலும் சேருகிற விடத்தில் இரண்டு ஏவா



டங்களுண்டு அவைகளுக்கு (Ileocæcal Valves—இலியோஸிக்கல் வால்வஸ்) என்றும், வலக்கத்தில் நாக்குப்பூச்சிபோல் சுருண்டிருப்பதற்கு (Appendix Vermiformis—அப்பென்டிக்ஸ் வெர்மிபார்மிஸ்) யென்றும் பேர்.

ஈரல்—மேல்வயிற்றுல் வலதுபக்கத்திலிருக்கிற உறுப்புக்கு ஈரல் என்றும் ஆங்கிலத்தில் (Liver—லிவர்) என்றும் பேர். இது ஈரல் குழியிலும் சென்றிருக்கும். தேகத்திலுள்ள உறுப்புகளுக்குள் இது பெரிது. மேற்புறம் உப்பலாயும், அடிகுடைவாயுமிருக்கும் ஏறக்குறைய 6 சேர் நிரையுண்டு, நீளத்தில் 12 அங்குலமிருக்கும், முன்ஓரம் கூர்மையாயும் பின் உருண்டுமிருக்கும். இது பு…ந்து உறுப்புகளோடு ஜவ்வால் கட்டப்பட்டிருக்கும். ஈரலுக்கடியில் பார்வையிட்டால் 5 வெடிப்புகள் காணப்படும். (Fissures—பிஷ்ஷர்ஸ்) ஒன்றில் பித்தப்பை (Gall Bladder—கால்பிளாடர்) ஒட்டிக்கொண்டிருக்கும். ஈரலுக்கு பித்தநீரைச் சுரப்பிக்கிற குணமும் கெட்ட ரக்தங்களிலிருக்கிற தோஷங்களை நீக்குகிற சக்தியும் இருக்கின்றன. பித்தநீரைக்கொண்டு போகிற குழலுக்கு யகிர்தகண்டக்குழல் (Hepatic duct—ஹிப்பாடிக்ட் டக்ட்) யென்று பேர்.

கணையம்—(Pancreas—பான்கிரியஸ்) இது தட்டையாய் 6 அங்குல நீளமுள்ளதாய் ஏறக்குறைய 4 அவுன்ஸ் பளுவுள்ளதாய் அன்னசயத்திற்குப் பின்புறத்தில் குறுக்காக அமைந்திருக்கும். இதன் குழல் பித்தக்குழலுடன் தொடர்ந்து, துணைகுக்ஷியில் முடியும். இந்த உறுப்பானது உமிழ்நீரைப்போன்ற ஓர் பதார்த்தத்தைச் சுரப்பிக்கின்றது. இதிலிருந்து சுறக்கப்படுகிறநீரே கொழுப்பாக மாறுகிறதென்று சிலருடைய சித்தாந்தம்.

பீலிகம்—செவுரொட்டி, அல்லது மண்ணீரல் (Spleen—ஸ்பிளீன்) இந்த உறுப்பானது சிவப்பும் நீலமும் கலந்த நிறமாய், 5 அங்குல நீளமுள்ளதாய் 6 அவுன்ஸ் பளுவுள்ளதாய் பீலிகஸ்தானத்திலிருக்கும் ஓர் உறுப்பு. இந்த உறுப்பானது ரக்தநரம்புகளால் ஏற்பட்டு, கடற்பாசியைப்போல் மிருதுவாயிருக்கும்; அழுத்தித்தொட்டால் உடைந்து போகும்; வெளிப்புறம் உப்பலாயும், உட்புறம் கொஞ்சம் குடைவாயும் தீனிப்பையோடிணைந்திருக்கும். இதின் பிரயோஜனம் இன்னும் செவ்வையாகத் தெரியவில்லை. இதிலிருந்து ஓர்வித நீரும் சுரக்கிறதில்லை. தேகம் குளிர்ந்திருக்கும்போது சருமத்திலிருக்கிற இரக்தம் இவ்வுறுப்பில் தங்கியிருக்குமென்று எண்ணப்படுகிறது. சீதஜுரத்தில் பீலிகம் பருத்துப்போனால் அதற்கு ஜுரக்கட்டி என்று சொல்வது வழக்கம்.

(தொடரும்.)

A. பெரியமூளை, berebrum. B. சிறியமூளை, cerebellum. C. முள்ளந் தண்டுக் கொடியின் சிகரம், Medella oblongata. D. முள்ளந் தண்டுக் கொடி, Spinal Marrow. E. கண்ணு Eye-Ball. 1, மேல் வாய் Upper Jaw. 2, கீழ்வாய் Lewer Jaw. 3, நாக்கு Tongue, 4, மூக்குத்துவாரங்கள், Nostrils. 5, அன்னவாகி தொண்டைக்கடியிலிருந்து இரைப்பைக்குப்போகிற குழல், Esephagus. 6. குரல்வளை, The Laryux, இதற்கு அடியிலிருப்பது சுவாஸக்குழல், Wind pipe. 7, உமிழ்நீர்க்கோளம், Partoid Gland. 8, நாக்குக்கடியிலிருக்கிற உமிழ்நீர்க்கோளம், Sublingual gland. 9, அன்னாசயம், இதுவே ஆமாசயம், தீனிப்பை, இரைப்பை, The Stomach இதில் உண்ணுகிற பதார்த்தங்கள் வந்து விழுகின்றன. 10, 10 யகிர்தகண்டம், இதுவே ஈரல் அல்லது கல்லீரல், The liver பித்தத்தைச் சுரப்பிக்கிற ஓர் உறுப்பு. 11, பித்தாசயம் இதுவே பித்தப்பை The gall Bladder, இதில் பித்தநீர் இருக்கும். 13, அக்கினியாசயம் இதுவே துணைக்குக்ஷி, Duodenum. 14 சுணையம், Pancreas. 15, 15, 15, 15, மலாசயம், பெருங்குடல், The Large intestines, இந்தக்குடல் மத்தியில் பாம்புபோல் வளைந்திருக்கிறது சிறுகுடல், இதுவே பக்குவாஸயம், பாசாஸயம். The small intestines. 16, சிறு குடல் பெருங்குடலோடு சேருமிடம், Gæcum. 17, பெருங் குடல் ஊர்த்த முகம் Ascending colon. 18, பெருங்குடல் குறுக்கு, Transverse colon. 19, பெருங்குடல் அதோமுகம், Descending colon. 20, குதம், Rectum. 21, பீலிகம், இதுவே மண்ணீரல், கறப்பீரல், செவுரொட்டி, Spleen. 22, கழுத்து முள்ளெலும்புகள், Cervical Vertebræ.




அங்க அமைப்பின் அதிசயம்.



## § பக்தியும் சங்கீதமும்.

பாரந்த கடலுக்குள் பாய் விரித்தோடும் கப்பலுக்கு சுக்கான் என்னும் கருவி எப்படி வழிகாட்டியாயிருக்கிறதோ அப்படியே பக்தியின் வளர்ச்சிக்கு சங்கீதம் முக்கியமானது. சர்வசமயசமரசத்தைப்போன்ற சர்வ மனோரஞ்சிதமாய் சங்கீதமும் பக்திக்கு இன்றி யமையாததாகிறது. அனேகர் சங்கீதத்தை அற்பமாய் எண்ணுகிறார்கள். இது சுத்தப்பிசகென அபிப்பிராயம். பஜனை கீர்த்தனவழிகளில் பகவானைத் துதிப்பது பலன் அதிகமாய்த்தருவதென்று பாகவதர் கொண்டாடுவதை நாம் அறிந்திருக்கிறோம். சங்கீதத்தை விரும்பாது நல்லோராயிருப்பார் சிலராயினும், சங்கீதத்தை விரும்பாதவன் மனம் பெரும்பாலும் பக்தியாகிய உணர்வுகட்குப் பண்படவில்லை என்று திடமாய்க்கூறலாம். சங்கீதத்திற்கு உருகாத மனம் கல்மனம், அஃது இரும்பாமேதவிர எளிதில் வளையும் பொன்னாகாது. இதை நோக்கியே, ஜகதலம்புகழும் ஷேக்ஸ்பியர் (Shakespere) என்னும் ஆங்கில நாடகக்கவிஞர், சங்கீதத்தில் லயிக்காதவன் கொலைத்தொழிலுக்கேற்றவன் யென்று கூறுகிறார். ("The Man that hath no Music in himself, Nor is not moved with concord of Sweet Sounds, Is fit for Treasons, Stratagems and Spoils")

சங்கீதமானது, மனிதர்களுடைய சுகானுபவங்களுக்கு இயைந்தது என்று மில்டன் (Milton) கௌபர் (Couper) என்பவரும், சித்த பரிபாகம் செய்வதற்குச் சிறந்தது என்று ரோஜர்ஸ் (Rogers) என்பவரும் ஞானாபிவிர்த்திக்கு மேன்மையான கருவியென்று ஷெல்லி (Shelly) என்பவரும், பக்திக்குப் பரமசாதனமாகுமென்று ட்ரைடன் (Dryden) என்பவரும், வெகுவாய்ப் புகழ்ந்திருக்கிறார்கள். சங்கீதம் நமக்குக்கடவுள் கொடுத்த வெகு உன்னதமான சன்மானமென்றும் அதைத்தாம் கைவிடாரென்றும் லூதர் (Luther) கூறுகிறார். சங்கீதம் பிரபஞ்சத்திற்கு ஆன்மாவைத்தந்து மனதிற்குச்சிறகு கொடுத்து, கற்பனாசக்தி விர்த்தியடையச் செய்கிறதென்றும், அது எல்லாவித நீதிகளுக்கும், நன்மைகளுக்கும், வனப்புகளுக்கும் நம்மைக்கொண்டு போய்விடுகிறதென்றும் ப்ளேடோ (Plato) புகழ்ந்து பேசுகிறார். சங்கீதம் ஒவ்வோர் வேளைகளில் நாம் பாப்ரம்ஹத்தில் லயிக்கச்செய்கிறதென்று கார்லைல் (Carlyle) சொல்லுகிறார். சப்தஸ்வரங்களினின்றும், சங்கீதத்தில் சமர்த்தனாயிருப்பான் ஒரு புதிய உலகத்தை உண்டா

§ See The Sri Krishna Chaitanya His life and Teachings, By The T. Bhathavatsalam B.A. Page 74-75.

க்கிவிடுகின்றது என்ன விநோதம். அப்போதைக்கப்போது தோன்றி இறந்துபோகும் நாகரீகக்கோலமும், உலக ஆசாரமும் என்று அதை நினைப்பது பிசகு; ஆயின் கடவுளிடமிருந்து நமக்கு நேர்ந்த கருணையே அஃதாகுமென்று அனுமானிக்கலாம் என்று நியூமன் (Newman) கூறுகிறார். ஹெல்ம்ஹோல்ட்ஸ் (Helmholtz) என்பவரும் அவ்விதமே அபிப்பிராயப்படுகிறார். சங்கீதத்தினால் இதுவரையில் உண்டான நன்மைகளைவிட இனிமேல் அதிகம் உண்டாகும் என்கிற கோரிக்கை நாம் வகிக்கக்கூடும் என்று லப்பக் என்பவர் வெகு நன்றாக விவரித்திருக்கிறார். (See The Pleasures of life, By the Right Hon, Sir John Lublock, Bart, M. P., F. R. S., D, C. L., L. L. D. Part II, PP. 121—141).

மேற்கூறியவையல்லாமலும் சங்கீதத்தினால் பாஷாபிவிர்த்தியும் உண்டாக இடமிருக்கிறது. நாம் எழுதும் வாக்கியங்களில் இன்னோசைகாணவும், ஒன்றுக்கொன்று சந்த நெறிவழுவாது ஆரோகண அவரோகணக்கிரமங்கள் அழகாய்ப்பொருந்தவும், அலங்கார விசேஷங்கள் அமைந்திருக்கவும், நமக்குச்சங்கீதமே ஒப்புயர்வற்ற உன்னதத்துணையாகும். குறுகிய வாக்கியங்களிருக்கவேண்டிய இடத்தில் குறுகிய வாக்கியங்களும், நீண்டவசனங்களிருக்கவேண்டிய இடத்தில் நீண்ட வசனங்களும், ஒவ்வொரு வாக்கியத்தின் ஒவ்வொரு பாகமும் மற்றொவ்வொரு பாகத்திற்கும் சாகசமாய்ச் சமப்படுத்தப்பட்டதாகவும், எழுதவேண்டியதாயின் சங்கீதத்திற்குச் சத்துருவால் அஃதொரு போதும் ஆகாது. வெகு உற்சாகமாய் இறகு கட்டிப்பறந்து, நாலுபக்கங்களிலும் விலாசமாயுலாவி, மஹத்தான வாக்கியக்கோவைகளை மாயாதமாரியாய்ப் பொழிய அவசியமான காலங்களிலும், சங்கீத ரஸிகராயில்லாதிருந்த குறையினாலே, வெகு புத்திசாலியான சார்லஸ்லாம்ப் (Charles lamb) என்பாரும், காலில் விலங்குபூண்டார் போன்று, குறுகிய வசனங்களையே வரைந்து மடங்கி அடங்கிப்போனாரென்று டிக்வின்ஸிப் புலவர் கூறுகிறார். (*Vide* Thomas Dequincey's essay on Charles lamb).

சங்கீதம் இவ்வித சக்தியுள்ளதாயிருப்பதால், இது எல்லாச்சுப சடங்குகளிலும் பக்திக் கொண்டாட்டத்திலும் இன்றியமையாததாகிறது. பக்திக்கு ஊன்றுகோலாய் நாமசங்கீர்த்தனம் ஏற்பட்ட காரணம் இதுவே! முக்தியடைய பக்தியே பரமசாதனமென்றும், சமரசமும் சங்கீதமும் அதற்கு முக்கியமாய் வேண்டியவையென்றும் நாம் இதுவரையில் சொல்லிவந்ததால் விளங்கும். இந்த பக்தியே, விசேஷிக்கும்போது கிருஷ்ணனிடம் ராதைக்குண்டான ப்ரேமை போல ஒப்பற்று உயர்வடையுமென்பதற்குச் சந்தேகமில்லை.



## ஓர் பசு மரம்.

இப்பூவுலகில் நாம் பார்த்து வருகிற செடி, கொடி, புல், பூ முதலிய தாவரவர்க்கங்களுள் அமைந்திருக்கிற ஏற்பாட்டின் அழகும், கண்ணுக்குமெட்டாத வெகு சிறிய இடத்திற்குள் அவைகளின் அங்கவுறுப்புகள் சன்னல் பின்னலாய்க் கலப்புற்று ஒவ்வொன்றும் ஒவ்வொரு தொழிலை இடையறாதும் குறித்த குறிப்பில் சாதாரணமாய் குறையாதும், நடாத்திவருவதும் பார்ப்பதற்கு எவ்வளவு அற்புதகரமாய் இருக்கிறது, கேட்கிறதற்கு எவ்வளவு விநோதந்தருகிறது, அறிவிற்கு எவ்வளவு அலுவல் கொடுக்கிறது. மேற்சொன்ன தாவரவர்க்கங்களைப்பற்றி தக்கபடி விவரணமாய்ப்பேச இங்கு முடியாதாயினும் கிருபைக்களஞ்சியமான கடவுள் தம் திருவருள்வழியாக இப்பூவுலகத்திலோர் பக்கல் உண்டாக்கியிருக்கும் ஒப்பற்ற விருக்ஷமொன்றைப்பற்றிச்சிறிது பேசிச்செல்வது, அத்தியாவசியகரமாயிருக்கிறது, தென்அமெரிகா (S. America) தேசத்தில் பாழாயுள்ள பாறையொன்றின் பக்கத்தில் உலர்ந்த இலைகளுடனும், பருத்த வேர்களுடனும், ஒரு மரம் ஓங்கிவளர்கின்றதாம். வருஷம் முன்னூற்றறுபது நாளாயினும், ஒரு நாளாவது அதற்கு மழைத்துளி காணுவது மஹா துர்லபமாம். வயிற்றிற்குக் கஞ்சியில்லாத வறியர் உடுக்கும் உடையும் பொத்தல் பொதிந்தவைகளும் அழுக்குக்கு அரசிடமுமாயிருப்பதுபோல், பானத்திற்கென்று வானத்திலிருந்து நீர்த்துளி காணாததால் அந்த மரம் மெத்த வருந்தி செத்துப்போன கிளைகளாலும் வாடிவதங்கிய இலைகளாலும் மூடப்பெற்றிருக்கின்றது. இஃதிவ்வாறாயினும், அந்த மரத்தின் அடிப்பாகத்தை பீறிடச்செய்தால், மூவாமருந்தாகிய தேவாமிர்தம் போன்று தேகத்தைப் போஷிக்கத்தக்கதும் நாவிற்கு நல்ல ருசிகொடுப்பதும் ஆகிய திவ்யமானபால் அதினின்றும் பொழிகிறதாம். சூரியோதய காலத்தில் இந்தப்பால் வெகு அபரிமிதமாகக் கிடைக்கிறதென்றும், அவ்வூர்ச் சுதேசிகள் இதைக்கொண்டுபோக கிண்ணங்களை யேந்தி நாலு மூலைகளிலிருந்தும் கூட்டமாய் ஒவ்வொரு காலையிலும் அந்த மரத்தண்டை சேருகிறார்களென்றும் ஹம்போல்ட் (Humbolt) எழுதுகிறாரென்று ஆர்கானா ஆவ்நேச்சர் என்னும் கிரந்தமெழுதிய தாமஸ் கேரன்ஸ் எம். டி, எம், ஆர். ஸி. எஸ், எல், (Arcana of Nature by Thomas Kerns, M. D, M. R. C. S, L, P. 181) தெரிவிக்கிறார். இந்த மரத்தின் பெயரே 'பசுமரம்' என்பதாம் பச்சைமரமாயில்லாததால் அதற்குப் பசுமரமென்று பெயர் வருவதற்கு நியாயமில்லாவிடினும், பசுவைப்போன்று அது பால் தருவதால் 'பசுமரம்' என்று சொல்வதில் யாதொரு தடையுமில்லை, உலகத்

திற்கெல்லாம் மிருக ரூபமாகிய பசுவின் பால் கொடுத்துவரும் கடவுள் தம் அதியுன்னத சக்தியை விளக்கஞ்செய்வதற்கே போலும் விருக்ஷ ரூபத்தாலும் ஓரே இடத்தில் பாலளிக்கின்றனர். ஹா! ஹா! இவ்வித இயற்கை வனப்புகளின் இயல்பை யாமென்னென்று கூறுவோம்! தான் வருந்தினும் தருமஞ் செய்தல் தலைமை என்னும் உதாரகுணம் வகித்து, தனக்குப்பருக நீரில்லாவிடினும் உடுக்க நல்ல உடையில்லாவிடினும், இந்த மரமானது தினந்தோறும் பால்தானம் செய்யும் பண்பு எவ்வளவு விநோதந்தருகின்றது! எவ்வளவு பாடங்கள் கற்பிக்கின்றது. வருவாய் நீங்கிய விருக்ஷமொன்று இவ்வளவு அசாதாரணப்பலன் தருவதாயமைத்த கடவுள் பெருமை அதனினும் எவ்வளவு மேன்மையாய் நமக்குப்புலப்படுகின்றது! மேலும் சூரியோதய காலத்தில் மாத்திரம் அவ்வளவு அபரிமிதமான பால் கொடுக்க நேருவது எங்ஙனம்! உயிர்களுக்கு வன்மைதரும் உத்தமனான சூரியனுக்கு கைம்மாறு செய்வது கடமை யெனக்கருதியோ, இவ்வோரறிவுயிரான தாவரம் பாலமுது படைப்பது! இவ்விநோதம் யாதெனக்கூறுவோம்!

# சுகாதார விளக்கம்.

BY

M. S. சுந்தரம் ஆசாரியார்.

(All Rights Reserved)

## சுத்த ஆகாயம்.

தேக சௌக்கியம் என்பது பெறுதற்கரிய அருமையான பேறு, "நிழலினருமை வெயிலிற்றெரியும்" என்பதுபோல நோயினால் அல்லது; வேறொன்றினால் தேகசுகத்தை இழந்தோர்க்கன்றி, ஏனையோர்க்கு அதன் அருமை நன்கு விளங்காது. இப் பூவுலகில் நாமெல்லோரும் தீர்க்காயுளுடனிருந்து சகல புவனபோகங்களை அநுபவித்தற்கும் சரீராரோக்கியமின்றி நிகழாதென்பது தேற்றமே. ஆதலின் யாவரும் தேகாரோக்கிய செல்வத்தை பெறுதற்கும், பெற்றபின் பேணுதற்கும் வேண்டிய சாதனங்களைக் கைக்கொள்ளுவது அவசியம். இவ்வித குறைவுகளெல்லாம் நீங்கும் பொருட்டே "ஸ்ரீமாந் சந்திரசேகர்" அவர்கள் "வைத்தியபோதினி" என்னும் பத்திரிகை வாயிலாய் சுகாதார சாஸ்திர ஞானத்தை நமது தேயத்தினருக்கு ஊட்டும் இம்மகோபகாரத்தை நாமெல்லோரும் எக்காலத்திலும் மறவாது முழுநன்றி பாராட்டக் கடமைப் பட்டவர்களேயன்றி வேறல்லவே. இத்துடன் யாமும்



எமது அநுபவத்திற்கெட்டிய சுகாதார சம்பந்தமான சில விதிகளை இப்பத்திரிகை வாயிலாய் வெளியிட வந்துள்ளோம். ஆதலின் யாவரும் இவற்றினை நன்கு கவனித்து நடக்கக் கடவார்கள்.

தேக சுகத்திற்கு முக்கியமாய்க் கவனிக்க வேண்டியவற்றுள் முதன்மையானது சுத்த ஆகாயம், சுத்த ஜலம், ஆரோக்கியமான சாப்பாடு, மிதமான சரீரப் பயிற்சி ஆகிய இந்நான்குமேயாகும். இவைகளுள் சாப்பாடில்லாவிட்டாலும் தண்ணீரில்லாவிட்டாலும் நாம் சில தினங்களேனும் உயிரோடிருக்கக்கூடும். சுவாசமான காற்று கணப்போதேனும் இல்லாவிட்டால் இறந்துவிடுவோம். ஆதலால் வாயுவே மற்றையவற்றிற்கெல்லாம் பிரதானமானது. இவ்வாயுவு பிராண வாயு, இலவண வாயு, கரிவாயு, ஜல வாயு என நான்கு வகையுண்டு. உயிருக்கு மிகவும் அவசிய ஆதாரமான வாயுவே பிராண வாயு. இப்பிராண வாயு இல்லையேல் உயிருமில்லை. ஆயினும் இவ்வாயு அதிக காரமானதால் மிகுதியாயிருப்பினுங் கெடுதியே. இவ்வாயுவின் பலத்தைக் குறைக்கச் செய்வதும் மேல் இரண்டாவது கூறிய உப்பு வாயு. இவ்வாயு பிராணவாயுவிற்கு நேர் விரோதமானது. பிராண வாயு அதிகக் காரமுடையதால் இவையொரு பங்கும் உப்புவாயு நான்கு பங்கும் கலந்திருந்தாலன்றி உயிருக்குக் கெடுதி. இனிப் பாழுங் கிணறுகளிலும், குழிகளிலும் அடைக்கப்பட்டிருந்து காற்றோட்டமில்லாத இருட்டு வீடுகளிலும், நாம் மூச்சுவிடுவதினால் உள்ளே இருந்து வெளிவருவதில் உண்டாகக்கூடிய காற்றே கரிவாயு. இவ்வாயு பிராண வாயுவின் காரத்தைக் குறைக்கும். ஆயினும் புல் பூண்டு முதலிய தாவர வஸ்துக்களுக்குப் பிரயோஜனமுண்டு. இவ்வாயு ஆகாயத்தில் 2000-த்தில் ஒரு பங்கு கலந்திருந்தால் நன்று. மிகுதியாயிருப்பிற் கெடுதியே. இனி சூரிய வெப்பத்தாலும் நெருப்பின் வெப்பத்தாலும் ஜலம் ஆவி ரூபமாகிறது. இதுவே ஜல வாயு என்பது. இதற்கு தேகம் வறட்சி யடையாமலும் தாவரங்கள் காயாமலுஞ் செய்யுங்குணமுண்டு. ஜலவாயு ஆகாயத்தில் 200-பங்கில் ஒரு பங்கு கலந்திருந்தால் பிரயோஜனமுண்டு. மிகுதியாயிருப்பிற் கெடுதியே. ஆகவே சுத்த ஆகாயத்தில் பிராண வாயு 1-பங்கும் உப்பு வாயு 4-பங்கும், கரிவாயு மிகச் சிறிய பங்காய் அதாவது 2000-த்தில் 1-பங்கும், ஜல வாயு சிறிய பங்காய் அதாவது 200-ல் 1-பங்கும் கலந்திருக்கவேண்டும். அப்படி நான்கு காற்றும் சுத்த ஆகாயத்தில் அளவளவாய்க் கலந்தில்லாமல் ஏறத்தாழ இருப்பதே அசுத்த ஆகாயம் அல்லது விஷக்காற்று என்னப்படும். இவ்வசுத்தக் காற்றானது மனிதரும் பிராணிகளும் மூச்சுவிடுவதாலும், நெருப்பு எரிதலாலும், பதார்த்தப் பொருள்கள் அழுகிக்

கெட்டுப்போவதாலும் மிகுதியாய் உண்டாகும். இவ்வசுத்த வாயு நமக்குண்டாகும் சர்வ ரோகங்களுக்கும் காரணம். இவ்வாயுவினாலேயே சுத்த ஆகாயம் கெடுகிறது. எப்படியெனில் மூச்சுவிடும் சுவாசத்தில் அசுத்தமான கரிவாயு, ஜலவாயு, அழுக்கான ஊத்தை இவைகள் உண்டாகின்றன. தீயெரிவதால் கரிய மலவாயு உண்டாகின்றன. ஈரமுள்ள நிலத்திற் குப்பை கூளங்கள் சம்பந்தப்படுவதால் அவை அழுகிப் பதங் கெடும்போது விஷ வாயு உண்டாகின்றன. இன்னும் சாயக்காரர்கள், கசாப்புக்கடைக்காரர்கள், தோல் பதமிடுகிறவர்களிடத்திலும், சுடுகாட்டிலும், பிணங்கள் புதைக்கும் இடத்திலும், கெட்டவாயுக்கள் உண்டாகின்றன. இவற்றினால் சுத்த ஆகாயம் கெடும் இந்த வாயுவை உட்கொண்டால் சுரநோய் உண்டாகும். இன்னும் ஜன நெருக்கத்தினால் உண்டாகும் காற்றும் விஷக்காற்றேயாகும். இதை உட்கொண்டால் மயக்கம் தலைவலி, மூர்ச்சித்தல், பேதி, வாந்தி இவைகள் உடனே காணும். எப்போதும் சுவாசிப்பவர்களுக்கு பசியின்மை, மதி மயக்கம், தூக்கமின்மை, சரீர பலவீனம் ஆகிய ரோகங்கள் பீடிக்கும். இதனாலேயே (Census) என்னும் ஜனன மரணக் கணக்கில் பெரிய நகரங்களில் மரணம் மிகுதியென்றும் கிராமங்களில் மரணம் குறைவென்றும் அறிகிறோம். காரணம் நகரங்களில் ஜனங்கள் மிகுதியாதலால் ஆகாயம் அசுத்தமாகிவிடுகின்றது நிமித்தம் பல வியாதிகளுமுண்டாகின்றன. கிராமங்களில் ஜனக் குறைவாதலால் ஆகாயம் அசுத்தமாவதில்லை அதனால் வியாதியும் அவ்வளவதிகம் கிடையாது.

சுத்த ஆகாயத்தைக் கெடுக்கக்கூடியதும் மேல் எழுதிய காரணங்களால் உண்டாகக்கூடியதுமான கொடிய விஷக்காற்றானது சர்வவியாபகமாகி சர்வ சேதனங்களுக்கும் கெடுதியுண்டுபண்ணக் கூடுமென்றே எண்ணி எல்லாம் வல்ல இறைவன் தமது கருணையினால் நான்கு இயற்கைப் பிரமாணங்கள் அமைத்து இவற்றால் அவற்றை அழிக்கும்படி செய்திருக்கிறார். அவை முதலாவது விஷவாயுக்கள் உண்டாகிற இடத்தில் அதன் வேகத்தைச் சுத்த ஆகாயம் கலந்து குறைத்தல்; இரண்டாவது காற்றுகள் விஷவாயுக்களை அதிகரிக்காதபடி நீக்கி விடுதல்; மூன்றாவது தாவர வஸ்துக்கள் விஷக் காற்றை ஆகாரமாக இழுத்துக்கொள்ளுதல்; நான்காவது மழை விஷவாயுக்களைக்கொண்டு சுத்த ஆகாயத்தைக் கொடுத்தல் ஆகிய இவைகளால் அசுத்த ஆகாயம் சுத்தமாகிறது. சுத்த ஆகாயத்தினால் நாம் தேக சுகத்தையும் நோயற்ற வாழ்வையும் அடையலாம். அசுத்த ஆகாயத்தை உட்கொண்டால் பல நோய்கள் பீடிக்கும். ஆதலால் நாம் வசிக்கும் இடத்திற்கு அருகான்மையில் விஷவாயுவை



உண்டுபண்ணும் குப்பை கூளங்களைப் போடலாகாது. மாடாடுகளைச் சமீபத்திற் கட்டக்கூடாது. சிறிய வீட்டில் அநேகர் வாழக்கூடாது. நோயாளிகள் பக்கத்திற் தூங்கக்கூடாது. வசிக்கும் வீட்டில் சுத்த ஆகாயம் புகவும் அசுத்த ஆகாயம் வெளிச் செல்லவும் சாளரங்களைப் பெரிதாகவும் மிகுதியாகவும் வைக்கவேண்டும். வீட்டையும் உடம்பையும் உடைகளையும் அசுத்தமாக்கக்கூடாது. இசகு பிசகாய் உட்கார்ந்து கொண்டும், தலை தரையில்விழக் குனிந்துகொண்டும் சுவாசிக்கக்கூடாது எப்போதும் நிமிர்ந்துகொண்டே சுவாசிக்கவேண்டும். சில (தொடரும்)

# நேத்திர ஸம்ரக்ஷணம்.

(ஜனவரி மாத வைத்தியபோதினி 9-வது பக்கத் தொடர்ச்சி)



படுத்துக்கொண்டு வாசித்தல் வெளிச்சங் குறைவான நேரங்களில் வாசித்தல், வெண்மையானவும் பிரகாசமானவுமான வஸ்துக்களைப் பார்த்தல், மிதமிஞ்சின சம்ஸர்க்கம்செய்தல், மழையில் மொட்டைத் தலையுடன் நனைதல், லாகிரி வஸ்துக்களைக் கையாடல், முதநாளிற் சமைத்த பதார்த்தங்கள், தாமதமாய்ச் சீரணமாகிற வஸ்துக்கள் ஆகியவைகளை அதிகமாய் சாப்பிடல், மாலை நேரங்களில் வாசித்தல், எழுதுதல் கவிழ்ந்து வயிற்றின்மீது பாரத்தைப் போட்டுக்கொண்டு தூங்குதல், மூக்கிலுள்ள உரோமங்களைக் கையால் பிடுங்கல், பழுக்காதவைகள் அல்லது சமைக்கப்படாதவைகளான பச்சைக் காய்கறி வகைகளைப் புசித்தல், புளிப்பு வஸ்துக்கள் மிளகாய் எண்ணெய் சம்பந்த பதார்த்தங்கள் ஆகியவைகளை அதிகங் கையாடிவருதல், எட்டுமணிக்கதிகமாகவும் ஆறுமணிக்குக் குறைவாகவும் நித்திரை செய்தல் இருட்டிலிருந்து வெளிச்சத்திலும் வெளிச்சத்திலிருந்து இருட்டிலும் திடீரெனச் செல்லுதல், அவசியமில்லாமலும் தக்க வைத்தியர் உத்திரவின்றியும் அழகிற்காக் கண்ணாடி போட்டுக்கொள்ளுதல், எக்காரணத்திலேனும் களைத்திருக்கும்போது வாசித்தல், ஒருவஸ்துவையே வெகுநேரம் ஊன்றியுற்றுப் பார்த்தல், புகை தூசு தும்பு முதலியவைகளிற்போதல் நெருப்புக்கெதிரில் அடிக்கடி அதிகநேரமிருத்தல் புகையிலையை அதிகமாய்ப் பாவித்தல், அடிக்கடி பேதிக்குச்சாப்பிடுதல் அடிக்கடி இரத்தங்குத்தி வாங்கிக்கொள்ளுதல், சூரியன் பக்கமாய்ப்பார்த்தல், அதிகப் பொடியான எழுத்துக்களைப் பார்த்து அடிக்கடி வாசித்தல், அதிகம் சாப்பிடுதல், அதிகம் அழுதல் அடிக்கடி பட்டினியாயிருத்தல் நோயுற்றிருக்கும்போது வாசித்தல், வாசிக்கும்போதும் எழுதும்போதும் வெளிச்சமானது எதிரில் விழுதல் இக்காலங்களில் வெளிச்சம் பின்பக்கமிருந்து விழவேண்டும். புத்தகத்தை வெய்யலில் வைத்து வாசித்தல் அல்லது தான் வெய்யலிலிருந்துகொண்டு புத்தகத்தை நிழலில் வைத்து வாசித்தல், சிறு எழுத்து பெரு எழுத்தாகவும் பெரு எழுத்துகள் சிறு எழுத்தாகவும் விகற்ப பார்வையைக்கொடுக்கும் கண்ணாடிகளைப் போட்டுகொள்ளுதல், மந்தப் பிரகாசப் பார்வையைக் கொடுக்கும் கண்ணாடிகள்

நன்றாய்த் தெரியாத கண்ணாடிகள் இவைகளைப் போட்டுக்கொள்ளுதல் கண்ணிற்குக் கெடுதியை யுண்டாக்கு மாகையால் இவ்விஷயங்களைக் கூடிய வரையில் நீக்க முயலவேண்டும். இதையனுசரிப்பவர்களுக்கு கண் வியாதி யணுகாமல் கண்ணொளி முதலியவை விர்த்தியாம்.

பூ. ப. செல்லக்குமாரக் கவுண்டர்,
கணக்கன்பட்டி

---

## நித்திரை.

1. நித்திரையினால் உண்டாகும் நன்மைகள் :—சோர்வடைந்த ஒவ்வொரு அவயவங்களும் நித்திரை காலத்தில் அதிக பலத்தை அடைகின்றது. தூக்கத்தில் ஜீரணம் அதிக வேகமாய் நடக்கின்றது. தூங்கும்பொழுது தேகத்திலுள்ள விஷக் கழிவுகள் வியர்வை ரூபமாய் வெளிப்படுகின்றன. இன்னும் நித்திரையினால் கண்களுக்கும் உடம்புக்கும் உண்டாகும் சுகத்தைச் சொல்லவொண்ணாது.

2. நித்திரையின் அளவு:—போஜனத்தை போலவே அவனவன் செய்யும் தேக உழைப்புக்கும், மனோ முயற்சிக்கும் தக்கதாய் இருக்க வேண்டும். கடின உழைப்புள்ள கூலியாட்களுக்கும் படிப்பு முதலிய மனோ முயற்சியுள்ளவர்களுக்கும் சிறுபிள்ளைகளுக்கும் அதிக நித்திரை வேண்டும்.

3. நித்திரைக்குத்தகுந்த காலம் :—நித்திரை செய்யத் தகுந்தது இராக்காலமே. பகலில் தூங்குகிற வழக்கத்தை நீக்கிவிடல்வேண்டும். தூங்கச்செல்லும் நேரம் இரவு ஒன்பது மணிக்கு மேற்பட்டிருக்கலாம். இரவில் நன்றாய்த் தூங்கிவிட்டு வைகறையில் எழுந்திருப்பது தேகத்துக்குச் சௌக்கியமளிப்பதோடு புத்தியையும் சீர் திருத்தும். நீடித்த சுக வாழ்நாளையும் கொடுக்கும்,

4. நித்திரையின் அவசியம்: எவ்வகைப்பிராணிகளும் இருபத்து நான்கு மணிக்கு ஒருதடவை தூங்கியே தீரவேண்டும். பகலும் இரவும் அறுபது நாழிகைக்கு ஒருவன் மனத்துணிவோடு விழித்திருக்கலாம், அதன்பின் அவனாய் கண்விழிக்கமுடியாது. தூங்கியே தீரவேண்டும். தூங்காவிட்டால் சுகமில்லை. இங்ஙனம்,

மா. வே. சோணைமுத்து ஆசாரி,
மார்க்கயன்கோட்டை.

---

## வைத்தியக் குறிப்புகள்.

சூலைக்கட்டுக்கு:—சந்தனம் பலம் 1, வாழை ரசம் பலம் 5, இவற்றைக் கலுவத்திற்போட்டு சீனி பலம் 1, கூட்டி 1-விராகனிடைவீதம் இரண்டு வேளையும் 3-நாளைக்கு சாப்பிடவும், வெந்நீருஞ்சாதம் பத்தியமாயிருக்க சூலைக்கட்டு நீங்கும்.

உஷ்ண வாயுவுக்கு :—நிலாவாரை பலம் 1, பிரண்டை சூரணம் பலம 1, கரிசாரங்கண்ணி பலம் 1, மிளகு பலம் 5, இவற்றை 1-நாள் தண்ணீரில் ஊறப்போட்டு மறுநாள் தேய்த்துக்கழுவி ஷை வெள்ளைமிளகை சூரணம்செய்து வேளைக்கு விராகனிடை 1 வீதம் எலுமிச்சம்பழம் வெந்நீர் மோர் தேன் இவைகளில் அநுபானித்துச் சாப்பிடவும். பருப்பு பசுவின் மோர், பொரிச்ச ரசம், வெந்நீர் இவை ஆகும்

ஜாதிக்காய் லேகியம்—ஜாதிக்காய் கிராம்பு விராகனிடை 1, அபினி விராகனிடை 5, சடைக்கஞ்சா பலம் 1, சீரகம் பலம் 1, சுக்கு பலம் 1, கடுக்காய்ப்பூ பலம் 5, திப்பிலி பலம் 5, மிளகு பலம் 5, இவற்றை வறுத்து பொடி செய்யவும். கஞ்சாவை சுத்திசெய்துகொள்ளவும் எல்லாவற்றிற்கும் இரட்டிப்புச் சர்க்கரைப் பாகு பண்ணி நெய் தேன் விட்டு லேகியஞ் செய்து விராகனெடை 5, சாப்பிடவும். மூலம், கிராணி, அதிசாரங்கள், செறியாமை, அக்னிமந்தம், சலிதோஷம், சூடு இவைகள் தீரும்.

சகல கபால சூலைக்கும்:—மிளகு சேர் $\frac{1}{4}$, இதனை கோமூத்திரத்தில் 60-நாழிகை ஊறவைத்து, அம்மூத்திரத்தினாலேயே அதனை நன்றாக அரைத்து தலைக்குத் தடவிக்கொண்டு சற்று வெய்யலில் நின்று இப்படி மூன்று நாட்கள் ஸ்நானஞ்செய்யவும்.

சொரி சிரங்கு கரப்பானுக்கு :—சிற்றாமணக் கெண்ணெய் சேர் 1, பனங்கற்கண்டு சேர் $\frac{1}{4}$, பொடிசெய்துபோட்டு, மொந்தன் வாழைப் பழம் 2-உரித்து வில்லையாய் நறுக்கிப் போட்டுச் சூரிய புடம் வைத்து இரண்டு வேளையும் சிறு கரண்டி வீதம் சாப்பிடவும், இப்படிச் செய்ய சொரி சிரங்கு தினவுகள் தீரும்.

நூதன மருந்து :— பர்மா தேசத்தில் விஷசுரத்தினாற் பீடிக்கப்படாது குயினின் என்னும் ஔடதத்துக்குப் பதிலாக மிளகாய் சாப்பிட்டுத் தப்பித்துக்கொண்டார்களாம்.

---

## வர்த்தமானங்கள்.

---

கற்பூரம்:—இப்பொழுது கற்பூரத்தின் விலை உயர்ந்திருக்கிறது. கற்பூரம் வைத்திருப்பவர்களுக்கு கற்பூரம் இறக்கும் வழி தெரிவது அதிருஷ்டமே! இதைப்பற்றி சென்ற மார்ச்சு மாத இந்தியன் இகானமிஸ்ட் என்னும் பத்திரிகையின் 117-ம் பக்கத்தில் ஒரு வியாசம் வந்திருக்கிறது.

---

சென்னை இந்திய தென் ஆப்பிரிக்கன் லீக் :—இந்த லீக்கின் ஜாயிண்டு காரியதரிசியாகிய மிஸ்டர் G. A. நடேசன் ஹைதராபாத் நைஜாமை இந்நிதிக்குப் பணஉதவி செய்யவேணுமென்று கேட்டுக்கொண்டதின்பேரில் அவருடைய ராஜாங்க காரியதரிசி ஷை நிதிக்கு ரூ. 2500 அளித்திருப்பதாய் நிஜாம் பதில் தந்தி யடித்திருக்கிறார்.

**இந்துமதத்திற்கு திரும்பிவிட்டார்கள்:**—மிஸ்டர் குலாபாய் நிச்சாபாய் என்பவரும் அவர் மனைவியாரும் ஐந்து வருஷங்களுக்கு முன்னர் கிறிஸ்தவ மதத்தைச்சேர்ந்து, இப்போது இந்துமதத்திற்கு திரும்பிவர விருப்பங்கொண்டதால், புரோ என்னுமிடத்திலுள்ள ஆரிய சமாஜத்தார் அவர்களுக்குப் பிராயச்சித்தம் செய்துவைத்தார்கள்.

---

நியூயார்க்கில் ஒருரோகி எவ்வித ஆகாரமும் புசியாமல் நோயால் வருந்தி அநேக மருந்துகளைத்தின்றான். அவனுக்கு எதனாலும் குணம் காணவில்லை. கடைசியில் உலர்ந்த புல்லையும் ஜலத்தையும் ஆகாரமாக உட்கொண்டதில் நோய் பறந்தோடிற்று. இப்போது ஸுகதிசையிலிருக்கிறான் நல்ல வேளைவந்தால் எல்லா வியாதியும் தீரும்.

---

அமெரிக்காவில் வெள்ளை ராக்ஷதர்கள் இருப்பதாகக் கர்ண பரம்பரையாகச் சொல்லப்பட்டது. இது உண்மையேதான் என்று ஒருவர் ஆராய்ச்சி செய்து தெரிவிக்கிறார். அவர்களைக் கண்டுபிடிக்க யத்தனிக்கிறார்கள், கண்டுபிடிக்கப்பட்டால் அதன் மூலமாக அமெரிக்காவின் பூர்வ நாகரீகமும் சரித்திரமும் வெளிப்படக்கூடும். அது அதிக வியப்பு கொடுப்பதாக இருக்கக்கூடும்.

---

**ஸ்ரீ சங்கராசாரியர் பிறந்த நாள்:**—கொச்சி ராஜ்யத்தில் ஜோஸ்யரான வித்வான் சி. வி. பிச்சுவையர் ஸ்ரீ சங்கராசாரியார் பிறந்த காலத்தைத்திட்டமாய்க் குறித்திருக்கிறார். கலியில் செல்லாநின்ற 3007 அல்லது கி. பி. 805-ல் மேஷமாதம் 18-ந்தேதி திங்கட்கிழமை நாழிகை 17-25 அல்லது மணி 12-58-ல், காலடி என்னுமிடத்தில் ஜனனமாயினாரென்று நிச்சயித்திருக்கிறார்.

---

சில தேசத்து ஸ்திரீகள் மூக்கில் பெரிய துளைகளைச்செய்து குண்டலம் போன்ற ஆபரணங்களை யணிந்து கொள்வது வழக்கம். அவ்வாபரணம் பெரியதாய்த் தொங்குவதை நோக்குங்கால் ஐயோ மூக்கு அறுந்துபோமேயென்று நாம் பரிதாபப்படும்படியிருக்கும். இங்ஙனமாக, சென்ற மாதம் 14-உயன்று காராச்சியில் ஒரு ஸ்திரீ இருட்டு வேளையிற் போய்க்கொண்டிருக்கும்போது ஒரு கள்ளன் எதிரே வந்து மூக்கில் தொங்கும் நகையை வெடுக்கென்று பிடுங்கினான். நகையும் களவுபோய் மூக்கும் அறுந்து அதிலிருந்து இரத்தமும் வடிந்ததாம். வாய்த்தவிடும்போய் அடுப்பு நெருப்பும் போனதுபோலாயிற்று ஐயோ பாவம்!

---

**இந்தியாவில் பிளேக்:**—இந்தியாவில் பரவி யிருக்கின்ற பிளேக்கைப்பற்றி இங்கிலாண்டில் ஒரு உபந்நியாசம் புரிந்த மிஸ்டர் ஹாப்கின் என்பவர் இந்தியாவில் எலிகளைக் கொல்வதனால் பிளேக் நின்றுவிடாதெனவும், ஜனங்களுக்குப் பிளேக் அம்மை குத்துவதனால் மிகுந்த நன்மை உண்டாகுமென்று அபிப்பிராயப்படுவதாயும் சொன்னார்.

---



**சீன பஞ்சாங்கம்:**—உலகத்தில் புஸ்தகங்களிலெல்லாம் அதிகமாக விலையாவது சீன பஞ்சாங்கங்களாகும், எண்பது லக்ஷம் காப்பிகள் வருஷாவருஷம் அச்சடிக்கப்பட்டு ஒரு காப்பியாவது மீதியாகாமல் எல்லாம் வாங்கப்படுகின்றனவாம். அந்தப் பஞ்சாங்கத்தில் சொல்லப்பட்டவற்றிலெல்லாம் சீனர்களுக்கு அவ்வளவு பக்தி சிரத்தையும் நம்பிக்கையுமுண்டாம்.

---

அமெரிக்காவைக் கண்டுபிடிக்க கொலம்பசுக்கு நேர்ந்த செலவு 14,000-பவுனுக்கு சற்றே அதிகமானதாம் அதாவது கொலம்பஸ் கொண்டுசென்ற சைன்னிய செலவு 600-பவுன். அச்சைன்னியத்தை நடத்திய அட்மிரலுக்கு வருஷ சம்பளம் 60-பவுன். 2-கப்பல் தலைவருக்குச் சம்பளம் 40-பவுன். கூட்டத்தாருக்கு தனித்தனி மாதம் 10-ஷிலிங்கு. ஆகக்கூடி அவ்வளவு சொற்பத்தில் அமெரிக்காவாகிய ஓர் பிரமாண்ட கண்டம் வெள்ளைக்காரர்களுக்கு கிடைக்கப்பட்டுவிட்டது. தற்காலத்திலோ சொற்ப பூமிக்கு கோடி கோடியான பணச் செலவோடு நரபலிகளெத்தனை.

---

**ஒரு லெட்சப் பிரபு:**—சைராக்கியூஸைச் சேர்ந்த ஜான் டன்டி என்பவர் யாதொரு கல்வித்திறமையுமில்லாமல் செருப்பு தைக்கும் வேலையிலிருந்து குதிரை வியாபாரம் செய்ய முயன்று அதில் பெருஞ்சீமானாய் வாழ்ந்து வந்தார். அவர் அமெரிக்காவில் ஒரு பெரிய தரகராம் இவர் கொஞ்ச காலங்களுக்கு முன்னர்தான் பரலோகத்தை அடைந்தாரென அறிகிறோம். இவர் மரணத்தின் பின்னர் இவருடைய ஆஸ்திதிகளை கணக்கிடுங்கால் இவருக்கு 2,000,000-பவுன் ஆஸ்தியிருந்ததாம். இவ்வாஸ்திக்கு ஆஸ்பதம் வியாபாரமென்றே புலப்படுகின்றமையால் வியாபாரத்தை நந்தேசவாசிகள் கையாடி தங்களது வறுமையினின்று மீண்டு முன்னுக்கு வருவார்களென நம்புகிறோம்.

---

## விசித்திர விஷயங்கள்.

---

**ஒரு சிறிய ராக்ஷஸன்:**—பாரிஸ் நகரத்தில் ஒரு ராக்ஷஸப பையனிருக்கிறான். அவனது வயது 10, அவன் தலை 22-அங்குல அகலமுள்ளது. சரீரம் 150-பவுண்டு நிறையுள்ளது. கைகால்களில் 6-விரல்களிருக்கின்றனவாம்.

---

பைஸைகிள் :—ஜெர்மனி ராஜ்யத்திலுள்ள பிரஜைகள் 31-லக்ஷத்து 20-ஆயிரம் வண்டிகளை வைத்துக்கொண்டிருக்கின்றனர். கவர்ன்மெண்டார் வருஷமொன்றுக்கு ரூபா 1—10—0 வீதம் வரி வசூலிக்கின்றனர்களாம். இந்தியாவில் மட்டும் சைகிள் 1-க்கு ரூபா 6-வீதம் வசூலிப்பது ஓர் விந்தையே.

---

**109**-வயது :—சில தினங்களுக்கு முன் இரங்கூனில் ஒரு பர்மிய மாது காலஞ்சென்றார். அவர் இறக்கும்பொழுது அவருக்கு வயது 109 என்று தெரிகின்றது. இவருக்கு ஐந்து பிள்ளைகளிருக்கின்றார்கள். இந்த ஐவருள் எல்லாருக்கும் இளையவருக்கு இப்பொழுது வயது 78.

---

ரயில் வண்டிகளுக்குத்தான் கணக்கில்லையே :—உலகத்துக்குள் ஏற்பட்டிருக்கிற ரெயில்வே ஸ்டேஷன்களிலெல்லாம் அதிக அலுவலுள்ளது இங்கிலாந்தில் கிளாப்ஹாம் என்னும் ஜங்ஷன் ஸ்டேஷனும், தினமொன்றுக்கு ஆயிரத்துநானூறு ரெயில் வண்டித்தொடர்கள் வந்து போகின்றனவாம்.

---

ஒரு தேனீக் கூடு :—தென் அமெரிகாவிலுள்ள கெண்டகியென்னும் மாகாணத்தில் ஒரு தேனீக்கூடு இருக்கிறதாம். அதிலிருக்கும் ஒரு அறை மாத்திரம் நூற்றைம்பதடி உயரமும் பத்து ஏக்கரா அகலமும் உள்ளதாம். அத்தேன் கூடானது கற்பாறையினால் செய்யப்பட்டிருக்கிறது. கற்பாறையின் 4-பாகங்களிலும் சட்டை போட்டாற்போல் தேனீக்கள் கூடு கட்டிக்கொண்டிருக்கிறதாம்.

---

புழுதி பெருக்கும் இயந்திரம் :—லண்டன் நகரத்து வீதிகளில் புழுதி பெருக்கும்படி ஓர் மோட்டார் வண்டி இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த இயந்திர வண்டி ஒரு மணி நேரத்திற்குள்ளே 8 மைல் தூரம் புழுதியைப் பெருக்கி வீதிக்குத் தண்ணீர் தெளித்துச் சுத்தஞ் செய்துவிடுகின்றதாம். இப்படியே 500-பேர் நின்று ஒரு நாள் முழுதும் செய்யக்கூடிய வேலையை இந்த இயந்திர வண்டி ஒற்றையாகவே ஒரு நாளில் செய்து முடித்துவிடுகின்றதாம்.

---

விநோதமான இரும்புப் பெட்டி :—அமெரிக்கா தொழிற்சாலை யொன்றில் விநோதமான இரும்புப் பெட்டி யொன்று செய்யப்படுகிறது. இதன் உயரம் 10-அடியும், அகலம் 8-அடியுமாம். திருடர் அதையணுகித் தீண்டும்போது அவர்களது படம் அதிலமையும். தீண்டிய கையையும் பிடித்துக்கொள்ள



வும் ஒருவகையான காந்தசக்தியதில் அமைக்கப்பட்டிருக்கிறது. பிறகு இச்சங்கதியைக் குறைத்து பெட்டியைத் திறக்கவும். பிடித்துக்கொண்ட கையை விடுவித்துக்கொள்ளவும் அப்பெட்டியின் சாவியில் சூத்திரம் வைக்கப்பட்டிருக்கிறது. இப்பெட்டியைச் செய்ய நேர்ந்த சிலவு 2800-பவுனும்.

உலகத்தில் பெரிய பாலம் :—இவ்வுலகத்திலுள்ள பாலங்களுக்குள் மிகப்பெரிது சீன தேசத்திலிருக்கின்றதாம். இது 23,000-அடி நீளமும், 70-அடி அகலமும், 70-அடி உயரமும், தனித்தனி 75-அடி. விஸ்தாரத்துக் கிடையிலுள்ள 300-தூண்களால் தாங்கப்பட்டதுமாயிருக்கின்றது. இதற்கு அடுத்தது "மோன்றீல்" என்னுமூரில் 3701 அடியும் "புஜாகலி" னில் 5,989, அடியும் நீளமுள்ள பாலங்களிருக்கின்றனவாம்.

வாயு ரோகம் :—வாயுரோகத்தை வெகு சுலபாய் போக்கும் வழியை ஓர் டாக்டர் கண்டுபிடித்திருக்கிறார். ரோகிகள் அவ்வுபத்தைப்பொறுக்க முடியாமல் தவிக்கும் வேளையில் அந்த டாக்டர் நரம்புகளில் தேனீக்களைக் கொண்டுவந்து விடுகிறார். அவைகள் ரோகியின் இரத்தத்தைக் குடிக்கின்றன. ரோகிக்கு வலி தோன்றுகிறதில்லையாம். அதன் பிறகு ஏதோ ஒரு மருந்தினால் சுவஸ்தப்படுத்துகிறாராம். இவருடைய கியாதி எல்லோராலும் கொண்டாடப்படுகிறது.

## அரோரூட்.

அரோரூட்மாக்கிழங்கு :—(Arrowroot) இதில் கீழ் இந்தியா கிழங்கு (East Indian) என்றும், மேல் இந்தியாக் கிழங்கு (West Indian) என்றும் இரண்டு தினுசுண்டு. இந்திய மாதிரியில் கிழங்கு பெரிதாயும் ஜாஸ்தி நாருடையதாயு மிருக்கும். மத்திய இந்தியாவிலும், பம்பாய், சென்னை, பங்காளங்களின் மலைப்பக்கங்களிலும், வனாந்தரமாயிருக்கின்ற மத்தியமாகாணங்களிலும், தென்கன்னடத்திலும், மலையாளத்திலும், கோதாவரி ஜில்லாவின் மேல் பாகத்திலும் ஏராளமாய்ச் சாகுபடி பண்ணப்படுகின்றது. மலையாளப் பக்கங்களிலும், தென்கன்னடத்திலும் பாசனமண்ணியில் சாகுபடி பண்ணலாம். நன்றாய்ச் சாகுபடி செய்தால் கிழங்கில் அரிசிமா (Starch) யதேஷ்டமாயிருக்கும். விஷ வஸ்துக்கள் ஒன்றுமிராது, மணல்சாரி பூமிதான் சிலாக்கியம். 1879-ம்வருஷம் சைதாபேட்டை பண்ணையின் பூந்தோட்டத்தில் ¼-ஏகர் நிலம் பொறுக்கி எடுக்கப்பட்டு, நன்றாய் உழப்பட்டு, முகடுகள் இரண்டடிக்கு ஒருதரம் உண்டாக்கப்பட்டு, ஆகஸ்டு மாதத்தில் விதைக்கிழங்குகள் முகடுகளில் 1 அடி 1½-அடி வித்தியாசத்தில் புதைக்கப்பட்டு பயிர்செய்யப்பட்டன,

ஜனவரி மாதத்தில் அறுவடை ஆயிற்று. ஆகையால் இது ௰-மாதப் பயிர் என்று சொல்லலாம். இந்தக் கால் ஏகர் 986-பவுண்டு கிழங்கு கொடுத்ததாம். அதாவது ஏகர் 1-க்கு 3944 பவுண்டு ஆகிறது. இன்னுமொரு சமயத்தில் ஒரு துண்டு நிலம் ஏக்கர் 1-க்கு 7500-பவுண்டு கிழங்கு கொடுத்ததாம். 100-பவுண்டு கிழங்கு 12½-பவுண்டு அரோ ரூட்மா கொடுத்ததாம். முதல் துண்டில் ஏகர் 1-க்கு 493-பவுண்டு மாவும், இரண்டாவது துண்டில் 937-பவுண்டுமாகிறது. கிழங்குகளை வெட்டி எடுக்கத்தான் வேண்டும். அரோரூட்மா பவுண்டு ஒன்றுக்கு காலணா விலை ஆகிறது. மா உண்டாக்குதல்:—கிழங்கைக் கழுவி, துருவி, தாள்களோடு ஜலத்தைச் சேர்த்துக் கலக்கி ஒரு துணியினால் வடிகட்டினால் வடிகட்டின ஜலத்தில் மாவும் நீருமாயிருக்கும். மா நீரைத் தங்கவைத்தால், மா அடியில் படிந்துவிடும். இதை நன்றாய் ஜலத்தில் சுத்தப் படுத்திக் காயவைத்தால் விலைக்குத் தயாராய்விடும். இம் மாவானது சரீர போஷணைக்குரியது. ஜுரம், இருமல், சீதபேதி முதலிய நோய்க்கும் கஞ்சி காய்ச்சி கொடுக்க பத்தியத்திற்கு உதவும்

## புத்தக வரவு.

கலைமகள் அவதாரமாகிய ஔவைப்பிராட்டி அருளிச்செய்த ஆத்திச்சூடி என்னும் அருமை நூலிற்கு பாகியார்த்தமும், ஆந்தரார்த்தமும், திருக்குறள் பேற்கோள்களுடனும், தாயுமானவர் போதாமிர்தம், பிரமகீதை, உபநிடதம், ஞானவாசிஸ்டம், ரிபுக்கீதை, சிவஞான தீபம், பெருந்திரட்டு, விவேக சூடாமணி, பகவத்கீதை, சூத சங்கிதை, வைராக்கிய தீபம், மகாராஜா துறவு முதலிய இன்னுமனேக ஞான நூற்களின் ஆதாரங்களுடனும, இன்றியமையாத இடங்கட்கு கீழ்க் குறிப்புகளும் வரையப்பட்டுள்ளதானது, ஒரு பெருஞ் சிறப்பைத் தருகின்றது இச்சிறந்த செந்தமிழ் நூல தயமுலகத்திற்குப் பெரிதும் பயனளிக்கத்தக்கது என்னலாம். இவ்வாறு நந்தமிழ் மக்கட்குப் பெரிதும் பயன்படவெண்ணி இந்நூலை வெளியிட்ட நூலாசிரியரவர்கட்கு தமிழுலகம் மிகவும் சடமைப்பட்டுள்ளது. இப்புத்தகத்தை நம்மீதன்புகூர்ந்தனுப்பிய ஸ்ரீமத் முதலியார் அவர்களுக்கு நமது மனப் பூர்வமான வந்தனமளிக்கின்றோம். இப்புத்தகம் வேண்டியவர்கள், சென்னை பெரியண்ண முதலி வீதி 56-நெ. V. வடிவேலு முதலியார் அவர்களிடம் பெற்றுக்கொள்ளவும். புத்தகம் விலை அணா 6 தான்

---

விடுகதை விடை:—சென்ற மாதப்பத்திரிகையின் 17-வது பக்கத்தில் வெளிவந்த இரண்டாவது விடுகதைக்கு விடை.—
கும்பகோணம். G. S. ஞானவடிவேலு.



# ADVERTISEMENTS.


## "பாலசந்திரன்"

வாராந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

ப்ரும்மஸ்ரீ மகோமகோபாத்தியாயர் வே. சாமிநாதையர் அவர்கள் முதலிய கல்விமான்களால் வியந்து கூறப்பட்டது. கொழும்பு நகரில் இதுவொன்றே ஏராளமாகச் செலவிடப்படும் சைவத் தமிழ் பத்திரிகை.

வருடக்கிரயம்.

| | | |
|---|---|---|
| உள்ளூர் | ... ... ... | 3—0—0 |
| இலங்கையின் பிறவிடங்கள், இந்தியா | ... | 4—0—0 |
| தொடுவாய்ப் பகுதி | ... ... ... | 5—0—0 |

☞ முற்பணம் கொடுக்கவேண்டியது.

M. V. PONNAMPALA PILLAI,
*No. 103, Checku Street,*
**COLOMBO.**

---

## 1890-வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது.

மருந்து குணமில்லாவிடில் பணம் வாப்சு.

யானைக் காலுக்கும் நீர்ச் சூலை முதலானவைகளுக்கும் டாக்டர் கோவின் கைகண்ட மருந்து. எவ்விதமான வியாதியையும் சொஸ்தம் பண்ண உத்தரவாதம். ஸர்டிபிகேட்டுகள் ஏராளம். ஒரு அவுன்ஸ் கொண்ட புட்டி 1-க்கு விலை ரூபா 2—8—0. 6-அவுன்ஸ் விலை ரூ 12.

Apply to:—G. BROTHERS,
*No. 218, Cornwallis Street, Calcutta.*

---

ஓம்: வந்தேமாதரம்.

## பாலசந்திர பற்பொடி.

கல்நார் பஸ்பம் முதலிய சுதேச அவுஷத முறையையும், கார்பாலிக் ஆசிட் முதலிய இங்கிலீஷ் முறையையும் அனுசரித்து தயார் செய்யப்பட்டிருக்கிறது. எவ்விதமான பல் நோயையும் தவறாது தீர்த்து உறுதியாய் இருக்கும்படி செய்யக்கூடிய குணமுடையது. அநேக கனதனவான்களால் நற்சாக்ஷிபத்தி மளிக்கப்பட்டிருக்கிறது. சகல மானவர்களும் உபயோகிக்கவேண்டியதற்காக 1-அவுன்ஸ் அடங்கிய சீசா 1-க்கு அணா 2. டஜன் 1-க்கு ரூபா 1—2—0.

ஆலங்குடி முதல்தரமான இருவாளிப்பு பாக்குவெட்டிகள் 0—3—6 முதல் கிடக்கும். வியாபாரிகளுக்கு தகுந்தகமிஷன் கொடுக்கப்படும்.

N. A. S. Iyer F. T. S,
புரொப்ரைட்டர், பாலசந்திர டிரேடிங் ஹால்,
ஆலங்குடி, நீடாமங்கலம் *S. I. R.*

கும்பகோணம் ஆனரபிள் திவான்பகதூர் மகாகனம் பொருந்திய R. ரெகுநாதராயர் அவர்கள் C. S. I. சொல்லுகிறதாவது,

I have used this tooth powder. I found it usefull.
(Sd.) R. RAGUNATHA RAO.

## இந்து சாஸ்திராபிமானி.

இத்தலைப் பெயரிட்ட புஸ்தகமொன்று அடியில் கையொப்பமிட்டவரால் இனிய செந்தமிழ் நடையில் நவீனமாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இதில் இந்துமதக் கோட்பாடுகளையும் பொது நன்மைகளையும் தழுவிப் பேசுகிற அநேக உபந்நியாசங்களும் திருவாங்கூரை அரசாக்ஷி செய்த பூர்வீக அரசர்களுடைய சரித்திரங்களும் இவர்களிடம் மந்திரி வேலையில் அமர்ந்திருந்த தேர்ந்த புத்திசாலிகளாகிய மிஸ்டர் தளவாய் ராமய்யர், ஸர். டி. மாதவராவ், ஆனரபிள், ராமய்யங்கார் முதலிய மேதாவிகளின் சரித்திரங்களும் அடங்கியிருக்கின்றன. குறித்த புஸ்தகம் விலை உயர்ந்த நல்ல கிளேஸ் கடிதத்தில் முத்துக்களைப் போன்ற அக்ஷரங்களாகப் பொறுக்கி யெடுத்து 8 பேஜுள்ள 16-பாரத்தில் 128 பக்கம் வரை அச்சிடப்பட்டிருப்பதுமின்றி, மதரூஸ் லோகோபகாரி பத்திராதிபரவர்களுடைய படமொன்று வைத்து அழகாக பைண்டு செய்யப்பட்டு மிருக்கின்றது. வேண்டுவோர் தங்கள் பெயர், ஊர், போஸ்டு முதலிய பூராவிலாசங்களையும் எனக்குத் தெளிவாக எழுதும் பக்ஷத்தில் போஸ்டேஜுஉள்பட 6 அணா விலைக்கு கல்லிடைக் குறிச்சி ஸகிதம் வி. பி. மூலம் அனுப்புவேன்.

## ஆரியஜன போதினி.

இந்நூதனமான தமிழ்ப் புத்தகத்தில் இந்தியாவின் முற்கால தற்கால நிலைமைகளும், அக்காலங்களிலுள்ள அரசர்களின் ஆக்ஷி முறைகளும், கைத்தொழில் விஷயங்களும், பிராசீன மகரிஷிகளால் விதிக்கப்பட்டிருக்கின்ற தர்ம சூட்சுமங்களும், அந்நி பெஸாண்டு அம்மையவர்களின் அருமையான உபந்நியாசங்களும், தாதாபாய் நௌரோஜி இந்தியாவுக்கு உழைத்து வருகின்ற சிறந்த பெரும் முயற்சிகளும், அவரது சலத்திரமும், ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியின் ஸத்கிருத்ய மஹிமைகளும், விவேகானந்த ஸ்வாமிகளால் உபதேசிக்கப்பட்ட வேதாந்தத்தின் கருத்துக்களும், ஸநாதன தர்மம் நிலைத்திருக்கும் பொருட்டு கர்னல், ஆல்காட் துரையவர்களால் செய்யப்பட்டிருக்கின்ற காரியங்களும், பாஞ்சாலி யென்னும் பதிவிரதா சிரோண்மணியை மானபங்கம் செய்ய முயன்ற துச்சாஸனன் அவமானமடைந்ததும், ராஜஸூய யாகத்தில் தர்மபுத்திரருக்கும் சிசுபாலனுக்கும் நேரிட்டவாக்கு வாதங்களும் பஞ்சாப், வங்காளம், டில்லி, பாட்னா, முதலியவைகளை யொத்த பிற விடங்களில் நவீன வியவஸாய சாஸ்திரத்தை யனுசரித்து செய்யப்படுகின்ற வியவஸாய முறைகளும், இதுபோல் இன்னும் அனேக அற்புத விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. குறித்த புஸ்தகம் விலை யுயர்ந்த கிளேஸ் பேபரில் பாரம் 8 பேஜுஸைஸில் 120 பக்கங்கள் வரை நல்ல செந்தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. இது, ஸ்ரீராம, கிருஷ்ண மூர்த்திகளின் படங்கள் ஸகிதம் பிறமத தூஷணையின்றி பல மேல் விலாசங்களுடன் ஸகல மதஸ்தர்களுக்கும் பொதுவாக இயற்றப்பட்டிருக்கின்றது. இதற்கு வி. பி. சார்ச்சுடன் விலை அணா 10. ஸிலோன் முதலிய வெளிநாடுகளுக்கு ஒரு அணா ஜாஸ்தியாகச் சார்ச்சு செய்யப்படும். வேண்டுவோர் இப்பத்திரிகையின் பெயரைக்குறிப்பிட்டு எனக்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

வா முத்துகிருஷ்ண ஐயர்,
இந்துசாஸ்திராபிமானி, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி ஜில்லா.



## ரோமசங்காரி சோப்.

தேகத்தின் எந்தப்பாகத்திலும் இந்த ஸோப்பை உபயோகித்தால் யாதொரு கெடுதியுமின்றி ரோமங்களைச் சங்காரஞ்செய்துவிடும். 6-மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய கட்டி 1-க்கு விலை 6-அணா; டெஜன் ரூ 4, வி. பி. சார்ஜ 1-முதல் 3-க்கு 4-அணா.

## ரோமப்பிசின்.

இப்பிசின் நரைத்த மயிரை இரண்டு நிமிஷத்திற்குள் பழயபடி கறுப்பாக்கிவிடும். கெடுதிசெய்யக்கூடியது ஒன்றும் இதில்கிடையாது 1-புட்டி 3-மாதத்துக்கு போதுமானது. டைரக்ஷன் மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு விலை 12-அணா; டெஜன் 1-க்கு ரூ 8. 1-முதல் 3-புட்டிக்கு வி. பி. சார்ஜ் 4-அணா.

## கார்பாலிக் டூத்பவுடர்.

இந்தபற்பொடி, வாயிலுண்டாகும் துற்நாற்றத்தைபோக்கி பல்லைச் சேர்ந்த எல்லா வியாதிகளைப்போக்கி பற்களை கெட்டிப்படுத்தும். டின் 1-க்கு 1½-அணா டெஜன் 14-அணா 1-டெஜனுக்கு வி. பி. சார்ஜ் 4-அணா,

Apyly to Messrs—J. SUR & Co.,
Patent Medecine Sellers & General order suppliers,
South Sinthee Road, P. O. (V) Cossipore, Calcutta.
Agent, Lakshmivilasa Provident Institution Ld. Kumbakonam

## பற்பொடியும் பவளச்சுன்னமும்.

இந்த சஞ்சீவி யெனும் பற்பொடியானது தஞ்சைமாநகரத்தில் பரம்பரையாய் கையாண்டு வந்தது. நீடித்து அனுபோகத்திற்குவாமல் புதைபட்டிருந்தது. இது ஓர் மஹான்களால் வெளியாகி ஜனங்களுக்கு உபகாரமாகும் பொருட்டாகவும், அனுபோகத்திற்கு ஒத்திருப்பதையும் பல பேர்கள் வேண்டுகோளின்படி வெளியிடத்துணிந்தோம். ஷை பற்பொடியை ஓர் சிட்டிகை யெடுத்து காலையிலும் மாலையிலும் பற்துலக்கி வருவதுடன் இந்த பவள புற்றினால் செய்த சுன்னத்தையும் தாம்பூலத்துடன் 12 நாள் தரித்துக்கொண்டு வந்தால் பல்லசைவு, இரத்தம் வருதல், சீழ்வருதல், புழுவெட்டு, ஜீலிஜிலிப்பு, கூச்சம், நடுக்கம், எகிறில் எற்படும் துர்நாற்றம், எகிர்கரைதல், பல்லரணை முதலான நோயை கண்டிப்பாய் நீக்கி சுவஸ்தம் செய்வதோடு ஆயுள்பரியந்திரம் பல்விளாமல் காக்கச்செய்யும்.

| | | | |
|---|---|---|---|
| ஓர் அவுன்ஸ் கொண்ட பற்பொடி டப்பா 1-க்கு விலை | 0 | 6 | 0 |
| ஓர் பலம் கொண்ட சுன்ன டப்பா 1-க்கு விலை | 0 | 2 | 0 |

வி. பி. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

பி. ஸாம்பமூர்த்தி ஐய்யர்,
ஆயுள்வேத பண்டிதசாலை, ஆய்குடி போஸ்டு,
திண்டுக்கல் மார்க்கம்.

---

## பூரணசந்திரோதயம்.

பிரதி ஆங்கிலமீ 15ௗ மதுரையில் பிரசுரமாகிவரும் தமிழ் பத்திரிகை. சந்தா வருஷம் 1-க்கு ரூ 2. தனிப்பிரதி அணா 4.

ப. நாராயண அய்யர், B.A., B.L., F. T. S. }
அ. ரங்கவாமி அய்யர், B.A., B.L., F. T. S. } பத்திராதிபர்கள்.

OF THE

## SPIRITUAL BROTHERHOOD!!

OF THE

## INDIAN ACADEMY OF SCIENCE. !!!

Under the guidence of an Adept Master of the Brotherhood, a special Course of Lessons is now ready to initiate you into all the mysteries of LAYA and MANTRA YOGA of the Aryans giving practical methods for HINDU-HYPNOTISM, MESMERISM, TELE-PSYCHY, WILL-CULTURE, SPIRITUAL, HEALING, CLAIR-VOYANCE CALIR AUDIENCE CLAIR-SENTIENCE, SPIRIT-COMMUNATION, MEDIUMSHIP and other wonderful secrets for attracting, SUCCESS, HEALTH, SPIRITUAL POWER and Soul-Bliss, as practised by the ancient Aryan Adepts.

This Course is the first of its kind in the world and anybody knowing to READ and WRITE ENGLISH can master it and practice its teachings to a wonderful degree.

With a complete outfit and fine Diploma of Membership of the 1st degree.

Price, Rs. 10 for the first 500 enrolments. The price will be raised to Rs. 15 shortly. Persons ordering the course should send a copy of their photos along with money in ADVANCE. No V. P. System. Look sharp!

SELF-CULTURE is a Monthly Magazine and Review Issued as the official organ of the Indian Academy of Science. it is a Journal of Inspiration devoted to Mental, Moral, Psychic, and Spiritual Culture of Man.

The subjects dealtwith therein include Mental, Psychic, Spiritual and Occult Sciences: Phrenology, Physiognomy, Practical Psychology, Spiritualism, Yoga, Theosophy, New-Thought, Vedanta Philosophy and other Esoteric Cults.

A special feature of this Journal is that we issue every month series of Practical studies and Instructions for the devolopment of the latent powers of the Body, Brain, Mind, Soul and Spirit of Man; which are much appreciated by the public at-large.

The Journal is edited & published by the far-famed Author, Writer, and Thinker—Dr. K. T. Ramasami, D. SC: PH. D; C. L. D; President The Indian Academy of Science.

The Editor has secured the assistance of an able corps of Contributors from all parts of the Civilized world. The Journal is highly spoken of by the Press and the Public at large and it circulates all round the world. You want it! You will do well to subscribe for it now! The Annual Subscription is only Rs. 3; to India; Sh. 4 or Dol. 1; Foreign.

**THE INDIAN ACADEMY OF SCIENCE,**
**KIZHANATTAM, Tinnevlley, Dist. S. India.**



## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

அரகஜா:—இது மற்றொரு விதமான திவ்ய சுகந்த கலவை. இதைத் தனியாகவாவது சந்தனத்துடனாவது உபயோகிக்கலாம். தேகத்தில் பூசிக்கொள்ளலாம். உடுப்புகளுக்குப் போடலாம். அதி உன்னதமான சுவாசனை. இதன் திவ்யமான பரிமளத்தை சுகித்தரிந்தவர்களால் மிகவும் புகழப்படுகிறது. ஒரு தடவை பூசின பிறகு பிரதிதினம் ஸ்நானம் செய்தாலும் 3-நாள் பரியந்தம் இதன் இன்பமான பரிமளம் தேகத்திற்றங்கிநிற்கும். விலை டப்பா 1-க்கு அணா 8. ஒன்று முதல் 12 டப்பாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய சிலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

அம்பர்:—இந்த சுகந்தத்தில் கொஞ்சமெடுத்து உடுப்புகளுக்குப் போடலாம், தேகத்திற் பூசலாம். முகத்தில் தடவி வந்தால் பருக்கள் கருப்பு புள்ளிகள், மேகப்படர், மாசு, அறிப்பு முதலியதுகள் நீங்கி முகத்திற்கு வசீகரத்தைத்தரும். வெற்றிலையில் தடவி தாம்பூலத்துடன் உபயோகித்தால் மிக்க மனோ உற்சாகத்தைத் தரும். கொஞ்சமெடுத்து வெந்நீரில் கலந்து ஸ்நானம் செய்தால் வெந்நீரெல்லாம் சுகந்த பன்னீர் வாசனையுள்ளதாகும். மனக்களிப்பையுண்டாக்கி தேக சிரமத்தையாற்றும். விலை டப்பா ஒன்றுக்கு அணா 8. ஒன்று முதல் 12-டப்பாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய சிலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

இந்தியன் பேட்டல் டஸ்டு:—அதி மனோரம்மியமான சுகந்த கலவை பொட்டலம். உடுப்பு பெட்டிகளில் வைத்திருந்தால் உடைகளுக்கு மிகவும் உன்னதமான சுவாசனை ஏற்றுவதுமன்னியில், வண்டு முதலிய பூச்சிகள் துணிகளில் அணுகாமல் காக்கும். இதன் இன்பமான சுகந்தம் நெடுநாள் நிற்கும் பொட்டலம் 1-க்கு விலை அணா 4. ஒன்று முதல் 12 பொட்டலங்கள் வரையில் அனுப்ப வி. பி. சிலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

குறிப்பு:—இந்த இடங்களில் மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகள் தெரியாததால் ஆர்டர்செய்கிறவர்கள் தயவுசெய்து தமிழிலாவது இங்கிலீஷிலாவது அடியிற்குறித்த விலாசத்துக்கு விவரமாக எழுதிப் பெற்றுக்கொள்ளக் கோருகிறேன்.

1. தாதுபுஷ்டி மருந்து:—அதன் குணத்தை எழுதி முடியாது. அனுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். தாது நஷ்டம், பலஹீனம், ஆண்குறி துவளல், பசியின்மை, கண், கால் எரிவு, தேகவரகூஷி, சீக்கிரத்தில் ஸ்கலிதம், சொப்பன ஸ்கலிதம், கை, கால், இடுப்பு முதலிய அவயவங்களில் சோர்வு, வலி, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேக வெள்ளை, வெட்டை, நீரிழிவு, மதுமேகம், சதையடைப்பு, இன்னும் பற்பல மூத்திர ரோகங்களை போக்கும். சரீர புஷ்டி, புருஷத்தன்மை, போக சக்தி, ஜீரண சக்தி, அபரிமிதமான தாது விருத்தியையுண்டாக்கும். நீத்திருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போக சக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்கு விலை ரூபா 2. வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

---

**பி. சுப்பறய், பாங்கிப்பேட்டை, தென்ஹுங்காடு ஜில்லா.**

### பி. சுப்பறாயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

2. **அக்கினி மாந்யத்திற்கு மருந்து:**—பசியின்மை, புளித்த ஏப்பம் நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய் நாற்றம், அஜீரணம், வயிற்றுப்பிசம், நித்திரையில்லாமை, பித்த உபத்திரவங்களை சொஸ்தப்படுத்தும். பசி தீபனமும், தேக ஆரோக்கியமும் தரும். டப்பா 1-க்கு அணு 8. வி. பி. சிலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

3. **பிரமேக நிவாரணி:**—எந்த காரணத்தினுல் உண்டாயிருக்கும் மேக வெள்ளை, வெட்டை, நீர்குத்தல், நீர் தாரை எரிவு, சீழ், ரெத்தம் வடிதல், முதலிய வியாதிகளை ஆண் பெண் இருதாரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1. வி. பி. சிலவு ஒன்று முதல் 6-சீசாக்கள் வரையில் அனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

4. **லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரைகள்:**—தாம்பூலம் தரிப்பவர்கள் கையிருப்பில் எப்பொழுதும் வைத்துக்கொள்ளவேண்டிய விலையுயர்ந்த வஸ்து. தந்த நோய்; வாய் நாற்றம், அஜீரணம், பித்த வாய்வு இதுகள் தீரும். தாம்பூலத்துடனுவது, தனியாகவாவது சாப்பிட்டபின் 2-மாத்திரை உபயோகித்தால் எப்பேர்க்கொத்த கனத்த சாப்பாட்டையும் உடனே ஜீரணம் செய்வதுடன் வாயில் அநேக மணி நேரம் சுகந்த வாசனை யிருக்கும். பிரதிதினம் காலையில் இரண்டு மாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்த அக்கினி மந்தம், மலச்சிக்கல், அஜீரணத்தினுலுண்டாகும் வயற்றிழிவு, வயிற்றுநோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள் தீரும். பிரசவ காலத்தில் தாம்பூலத்துடன் உபயோகித்து வந்தால் ஜன்னி கிட்ட நாடாது; ஜன்னியில் கொடுக்க ஜன்னி தீரும். இதில் லாகிரி முதலான யாதொரு அபாயகரமான வஸ்து சேரவில்லை. காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்க ரேக், பச்சை கற்பூரம் முதலிய அநேக விலைபெற்ற மருந்து சாமான்களும் வாசனை திரவியங்களும் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. தாம்பூலத்துடன் உபயோகித்தால் பச்சை கற்பூரம் முதலாகிய வாசனை வஸ்துக்கள் உபயோகிக்கவேண்டியது அனுவசியம். அறை குழந்தைகள் முதல் வயது சென்றவர்களுக்கு சளி, இருமல், காசம், காலரு, பிளேக், சுரம் முதலானவைகளுக்கு வயதுக்கும் தேகத்துக்கும் தகுந்தபடி 1-முதல் 4-மாத்திரைகள் வரையில் வெற்றிலைச் சாற்றில் கொடுக்க சுகமாகும். சீசா 1-க்கு விலை அணு 4. இந்தியாவில் 1-முதல் 12-சீசாக்கள் வரையில் அனுப்ப பாக்கிங்கு தபால் சார்சு அணு 5-ம் சிலோனுக்கு அணு 7-ம் பிரத்தியேகம்.

5. **சர்வநோய் சம்ஹாரன்:**—இத்தைலம் கொஞ்சம் தேய்த்தால் கை, கால், கணுக்களின் பிடிப்பு, வீக்கம், முடக்கம், மார்பு நோய், தலை நோய், கழுத்து நோய், பக்க சூலை, இடுப்பு நோய், குதக வலி, பார்சுவாயு, மேக வாயு முதலான இன்னும் தேகத்தில் உண்டாகும் எல்லா நோய்களையும் சீக்கிரத்தில் குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1. வி. பி. சிலவு ஒன்று முதல் 3-சீசாக்கள் வரையில் அனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

---

பி. சுப்பறாய், பரங்கிப்பேட்டை, தென்னூற்காடு ஜில்லா.

# வைத்திய போதினி.

சித்திரப்படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

புத் 2. } 1911-ஞு மார்ச்சுமீ 1உ { லக் 3.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
13 MAR 1911
MADRAS.

## ஜீரணமும் ஜீரண உருப்புகளும்.

[பிப்ரவரி மாதத்திய வைத்தியபோதினி 27-ம் பக்கத் தொடர்ச்சி.]

**குண்டிக்காய்**—மூத்திரக் குண்டிக்காய்கள், மூத்திர பிண்டங்கள் அல்லது பிருக்கங்கள் என்றும், ஆங்கிலத்தில் (Kidneys—கிட்னீஸ்) என்றும் சொல்லப்படும். குண்டிக்காய் என்பது முள்ளந்தண்டுக்கருகே இருபக்கத்திலும் 4–5 அங்குல நீளமுள்ளதாயும், 1-அங்குலம் தளமுள்ளதாயுமிருக்கும். இதில் எப்போதும் கொழுப்பு ஒட்டிக்கொண்டிருக்கும் இது பார்வைக்கு மாம்பருப்பைப்போலவிருக்கும். 3 முதல் 5-அவுன்ஸ் எடை இருக்கும். இதை அறுத்துப்பார்த்தால் உட்பக்கத்தில் இரண்டு வித பதார்த்தங்கள் காணப்படும், ஒன்று இரத்த நரம்புகளால் ஏற்பட்டு சிவந்தும், மற்றொன்று குழல்களால் ஏற்பட்டு மொக்குகள்போலவுமிருக்கும். அந்த மொக்குள் முனைகள் உள்நோக்கி, சிறிய பள்ளங்களில் பிதுங்கி யிருக்கும். அம்மொக்குகளுக்கு ஆங்கிலத்தில் (Cones—கோன்ஸ்) என்றும், முனைகளுக்கு (Papillæ—பாபில்லி) என்றும் பேர். இம்முனைகளில் சிறிய துவாரங்கள் காணப்படும். அத்துவாரங்களிலிருந்து சதா மூத்திரம் சுரந்துகொண்டேயிருக்கும். இப்படியாக ஏற்பட்டுள்ள குண்டிக்காயானது மூத்திரத்திலுள்ள அமுரியைப்பிரித்துவிடுவதினுலே இரத்தம் சுத்தியாகின்றது. இன்னும் ஒவ்வொரு குண்டிக்காயினின்றும் ஒவ்வொரு குழலாய் இரண்டு குழல்கள் கிளம்பி அடிவயிற்றின் நடுவே கிடக்கும் ஜலப்பையை நாடியோடி அதினுடனே பொருந்துகின்றன. அக்குழல்களின் வழியாய் அமுரி சொட்டுச்சொட்டாய் இறங்கி ஜலப்பையை நிரப்பும், அதற்கு மூத்திரகுண்டிக்காய்க் குழல் (Uriter—யூரிடர்) என்று பேர். இது சற்றேறக்குறைய $1\frac{1}{2}$-அடி நீளமுள்ளது.

மேலேசொல்லிய ஜீரண உருப்புகளின் தொழிலாவது, உடலை வளர்ப்பதற்குப்புசிக்கப்படும் போஜன பதார்த்தங்கள் பல்லுகளால் மெல்லப்பட்டு உமிழ்நீருடன் கலந்துவிழுங்க அப்போது மிடற்றுக்குழல் வழியாய் இரப்பைக்குட்செல்லும், அந்தப்பையில் அவைகள் நசுக்கப்பட்டு திரண்டு வரவர அந்தப்பையின் உட்பக்கத்திலிருந்துண்டாகும், புளிப்புள்ள நீருடன் கலந்து, நரைநிறமான பாகமாகச்சமைந்து, துணைக்குக்கிக்குட்சென்று, பித்தநீருடனேயும் கணயநீருடனேயும் கலந்து, பால் நிறமாகவும் மலமாகவும் மாறுதல் அடைந்து சிறுகுடலுக்குள் செல்லும், அதிலுண்டாகின்ற சிறுகுழல்கள் அந்தரசத்தைமட்டும் உருஞ்சி, இதைக் காறைஎன்புக்குப்பின்னுலிருக்கிற ஒரு நாளத்துட்செலுத்தும். அந்த நாளத்தின் வழி சுவாசப்பை நாளத்துட்செல்லும். இங்ஙனம் சுவாசக் காற்றுப்பட்டு இரத்தமாக மாறிவிடும். மலமானது பெருங்குடலுக்குட் சென்று மலவாயில் வழியாகவெளியிற்கழிந்துவிடும்.

A. பெரியமூளை, berebrum. B. சிறியமூளை, cerebellum. C. முள்ளந் தண்டுக் கொடியின் சிகரம், Medella oblongata. D. முள்ளந் தண்டுக் கொடி, Spinal Marrow. E. கண்ணு Eye-Ball. 1, மேல்வாய் Upper Jaw. 2, கீழ்வாய் Lewer Jaw. 3, நாக்கு Tongue, 4, மூக்குத்துவாரங்கள், Nostrils. 5, அன்னவாகி தொண்டைக்கடியிலிருந்து இரைப்பைக்குப்போகிற குழல், Esephagus. 6. குரல்வளை, The Laryux, இதற்கு அடியிலிருப்பது சுவாஸக்குழல், Wind pipe. 7, உமிழ்நீர்க்கோளம், Partoid Gland. 8. நாக்குக்கடியிலிருக்கிற உமிழ்நீர்க்கோளம், Sublingual gland. 9, அன்னுசயம், இதுவே ஆமாசயம், தீனிப்பை, இரைப்பை, The Stomach இதில் உண்ணுகிற பதார்த்தங்கள் வந்து விழுகின்றன. 10, 10 யகிர்தகண்டம், இதுவே ஈரல் அல்லது கல்லீரல், The liver பித்தத்தைச் சுரப்பிக்கிற ஓர் உறுப்பு. 11, பித்தாசயம் இதுவே பித்தப்பை The gall Bladder, இதில் பித்தநீர் இருக்கும். 13, அக்கினியாசயம் இதுவே துணைக்குக்ஷி, Duodenum. 14 கணையம், Pancreas. 15, 15, 15, 15, மலாசயம், பெருங்குடல், The Large intestines, இந்தக்குடல் மத்தியில் பாம்புபோல் வளைந்திருக்கிறது சிறுகுடல், இதுவே பக்குவாஸ்யம், பாகாஸயம். The small intestines. 16, சிறு குடல் பெருங்குடலோடு சேருமிடம், Gæcum. 17, பெருங் குடல் ஊர்த்த முகம் Ascending colon. 18,



அங்க அமைப்பின் அதிசயம்.

பெருங்குடல் குறுக்கு, Transverse colon. 19, பெருங்குடல் அதோமுகம், Descending colon. 20, குதம், Rectum. 21, பீலிகம், இதுவே மண்ணீரல், கறுப்பீரல், செவுரொட்டி, Spleen. 22, கழுத்து முள்ளெலும்புகள், Cervical Vertebræ."





# பிள்ளைகளுக்குப் பாலூட்டுங்கிரமம்.

தாய்மார்களின் மார்பில் சுறக்கும் பாலில் என்னென்ன வஸ்துக்களிருக்கின்றன என்பதை தெரிந்துகொள்வோம்—

தாய்மார்களே நீங்கள் தத்தம் பாலர்களுக்கு ஊட்டும் பாலானது கடவுளால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சஞ்சீவிக்கொப்பாயிருக்கிறது. தேக வளர்ச்சிக்கு அவசியமான சர்க்கரை, நெய், ஜலம், சொற்பஉவர்ப்பு, சொற்பஅயம் ஆகிய இவைகளே அப்பாலிலிருக்கின்றன. தேகத்திலுள்ள ஒவ்வொரு அவயமும் வளரவும், ஜீவாக்கினி நிலைபெற்றிருக்கவும் மேற்சண்ட அற்புத அவுஷதத்தையுண்டாக்கின கடவுளின் கிருபா கடாக்ஷத்தின் பெருமையையும், அருமையையும் நாமென்னென்று சொல்லலாம். எவ்வகையாக துதிசெலுத்தி நன்றிகூறலாம். தங்கள் அருமைப்பாலர்களுக்காக அதிக கிருபையுடன் தங்கள் இரத்தத்தினின்றேயிப்பாலானது சித்தப்படுத்தப்படுகின்றது.

இன்னும் அந்தப்பாலானதுதாங்கள் நினைத்த தக்ஷணமே தங்கள் பாலகருக்குக் குடிப்பாட்டும்படியாக தங்களிடத்திலேயே தடை தவக்க முதலியவைகளின்றிச்சர்வசித்தமாய் வைக்கப்பட்டிருக்கிறது. தங்கள் பாலகர்கள் தினேதினே வளர்ந்து செழித்துப்புஷ்டியாகி சுகமாயிருப்பதற்காகவே இராப்பகலென்னும் விகற்பமின்றித்தாங்கள் பால்கொடுத்து வருகின்றீர்கள், சுருக்கிச்சொல்லில் தங்கள் குழந்தைகள் சரீரசௌக்கியத்துடன் வளரவேண்டுமென்பதே தங்கள் பூரணகோரிக்கையும் நம்பிக்கையுமாம், ஆகையால் பால் குடிப்பாட்டுங்காலங்களில் தாங்கள் கவனிக்கவேண்டிய சிலவிதிகள் பின்னெழுதப்படுமாகையால் அவைகளைச்சற்றுகவனித்து நடந்துகொள்வீர்களென்பதே நமது பிரார்த்தனை. தாய்மார்கள் பிள்ளைக்குப்பாலூட்டும்போது எவ்வித விசனம், கவலை, பயம், திகில் முதலியவையில்லாதவர்களாய்க்கூடிய வரையில் மனக்களிப்பு, திருப்தி முதலியவையுள்ளவர்களாக இருக்கவேண்டும், ஏனென்னில் மனதிலுண்டாகும் விசனம், கவலை, பயம், திடுக்கம் முதலியவைகளால் அச்சமயங்களிலூட்டும் பாலில் தோஷமுண்டாகி அப்பால் குழந்தைக்கு அஜீரணம், மந்தம், பேதி, சுரம், வலிப்பு முதலிய ரோகங்களையுண்டாக்கி அபாயத்துக்கேதுவாக்கிவிடும் என்பதே காரணம். (இன்னும் வரும்.)

பூ. ப. செல்லக்குமார கவுண்டர்,
கணக்கன்பட்டி.

## பிராணிகளின் போஷணை.

வியாதிப்பட்ட பிராணிகளுக்கு வியாதியின் இயல்புக்குத் தகுந்தபடி ஆறுமணி நேரத்திற்கு ஒரு முறையாவது கஞ்சி கொடுக்க வேண்டும். அப்பிராணிக்கு வைத்த ஆகாரத்தை அது உண்ணாமலிருந்தால் ஆகாரத்தை உடனே எடுத்துவிடவேண்டும். தளர்ச்சியும், ஆயாசமும், உண்டாகக் கூடிய சில வியாதிகளில் அதிசீக்கிரத்தில் ஜீரணமடைந்து சரீரத்தில் சேரக்கூடிய மேன்மையான ஆகாரத்தை கொடுக்க வேண்டும். சிலவேளைகளில் வியாதி சொஸ்தமடையும்போது பசியதிகமாயிருக்கும். அப்பொழுது கால் நடைகளுக்குச் சரியான ஆகாரத்தைக் கொடுத்து அஜீரணமாகாமல் பாதுகாக்கவேண்டும். கால்நடைகளைக் கட்டிவைக்கும் கொட்டங்களில் சரியானபடி காற்றோட்டம் இருக்க வேண்டும். கொட்டங்களில் சாணிமுதலான அசுத்தங்களை அப்புறப் படுத்தி விடவேண்டும். வியாதிப்பட்ட பிராணிகளிருக்கும் இடத்தில் அரைமணி நேரமாவது வெய்யில் படவேண்டும். சூரிய ஒளியினால் ரத்தம் விருத்தியடைகிறது. துர்க்கந்தம் பறந்துபோய்விடுகிறது. சுகமான மல ஜல விஸர்ஜனங்களுக்கு அனுகூலமான ஹேது உண்டாகிறது. விஷக் கிருமிகள் நாசமடைகின்றன. படுக்கை விஷயத்தில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். பிராணிகள் படுத்துப் புரளுவதற்கு தகுந்த விதமாய் வைக்கோல்படுக்கை அமைக்கவேண்டும். குளிர்ந்த காற்று அடிக்கும் போதும், மழை பனி பெய்யும் போதும், வியாதிப் பட்ட பிராணிகளிக்கு கம்பளிப்போர்வை அவசியம். சில வியாதிகளில் கால் நடைகள் ஒரு பக்கமாகவே படுக்கும். அவைகளுக்கு சௌகரியமானபோது எழுந்திருக்கக் கூடிய சக்தியிருந்தால் அப்படிப்படுப்பதைத் தடுக்கக்கூடாது. (கிருஷிகன்.)

## பிதாமார்களுக்கோர் விண்ணப்பம்.

பிள்ளைகளைப்பெற்ற பாக்கியவான்களே! தாங்கள் ஒவ்வொருவரும் புண்ணியவசத்தால் தத்தமக்கு இகபர சௌக்கியங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஹேதுவாகிய புத்திரர்களை அடையப்பெற்றது ஜென்மாந்திர புண்ணியவசமே, அப்படிக்காகிய புத்திரர்களை யௌவனப்பருவம் வரையில் "குப்பைப் பயிரைக் கூரையிலேற்றுவதுபோல" உயிர்க்கு ஊன்றுகோலாகிய கல்வியை நன்குபயிலச் செய்வித்து, அக்கல்விக்கேற்ற நல்லொழுக்கங்களிலும் நடைபெறும்படிக்குச் செய்விக்கவேண்டியதானது பெற்றோர்களின் கடமையதாகும், இந்த அஸ்திவாரக் கல்வியைக் கைவிட்டுச் சிலர் தத்தம் பிள்ளைகளுக்குக் கல்வியினதிலை ஊட்டாது, பாலும் பழத்தையுமூட்டி, ஆபரணாதிகளைப் பூட்டி, புஷ்ப



OFFICE OF THE REGIS... BOOKS, REGISTERED 13 MAR 1911 MADRAS

மாலைகளைச்சூட்டி, பற்பல வேடிக்கை விநோதங்களைக்காட்டி, காமவலைக்குள் மாட்டி, அழகிய வடிவத்தை வாட்டிப் புத்திரர்களையும் தங்களையும் நரகத்திற்கு ஆளாக்குகின்றார்கள். அந்தோ! அது மட்டோ? புத்திரர்களுக்கு ஆதாரமென்று தேடிவைத்த செல்வத்தையும் தமது துன்மார்க்கச் செய்கையால் போக்கிக் கையினில் ஓட்டைத் தூக்கி கோவணம் ஒன்றுதான் பாக்கியென்று திரியும்படியும் செய்கின்றார்கள். இவ்விதம் செய்வித்தல் புத்திமான்களின் தன்மையல்ல பின்னர் யாது செய்வித்தல் வேண்டுமென்றால் "தந்தைமகற்காற்று நன்றியவையத்து முந்தியிருப்பச் செயல்" என்னும் திருக்குறள்வாக்கியப்படி தம் புத்திரர்களை ஒவ்வொரு கல்விச்சங்கத்திலும் நாயகமணியாக அங்கீகரிக்கும் படியாயுள்ள கல்வி, அறிவு, நல்லொழுக்கமுதலிய சற்குணங்களை உடையவர்களாக்குவிக்க வேண்டும் அங்ஙனம் செய்விக்கும் பிதாவே பிதா மற்றவர்களெல்லாம் விர்தா, புத்திமான்களே! "கல்வியினூ உங்கில்லைச் சிற்றுயிர்க்குற்ற துணை," "ஒழுக்க முயர் குலத்து நன்று," என்னும் ஆப்த வாக்கியங்களைக்கொண்டு தங்கள் தங்கள் புத்திரர்களுக்கு நிரம்பிய கல்வியையும் நல்லொழுக்கத்தையும் பரவச் செய்வீர்களென்று கேட்டுக்கொள்ளுகிறேன்,

சிறுபிள்ளைகளுடைய மனம் இளக்கமாயும் மிருதுவாயுமிருப்பதால் இளமைப்பருவத்தில் அவர்களுக்குப்போதிக்கும் கல்வியும் சுகுணங்களும் அவர்களுடைய புத்தியில் பதிந்து நன்றாய் வேரூன்றிக்கொள்ளும், பெரியவர்களானபின்பு போதிப்பதினால் பிரயோசனமில்லை. பொன் வெள்ளி முதலிய பஞ்ச லோகங்களையும், மெழுகு, ஸ்படிகம் முதலியவைகளையும் உருக்கி இளகி இருக்கும்பொழுது வேண்டிய விக்கிரகங்களையும் நகைகளையும் பாத்திரங்களையும் செய்துகொள்வதுபோலவும், பச்சைமண்ணைக் கொண்டு பலகடாதிகள் செய்வதுபோலவும், உழுது திருத்தி இளக்கமாயிருக்கிற நிலத்தில் வேண்டியதானியங்களை விதைப்பதுபோலவும், இளமைப் பருவத்திலேயே வித்தையையும் நல்லொழுக்கத்தையும் கற்பிக்கவேண்டும். நற்குணமும் துர்க்குணமும் சிறுபிராயத்திலேயுண்டாகித் தேகத்துடன் வளருகிறபடியால் பயிரிட்டவன் அடிக்கடி களைபிடுங்கிச் சர்வஜாக்கிரதையாகப் பயிரைக் காப்பாற்றுவதுபோல் சிறுவர்களுடைய புத்தியில் துர்க்குணமாகிய களைகள் வளராதபடி தாய் தந்தையர்கள் எப்போதும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். சிறுபிள்ளைகளுடைய ஒவ்வொருவார்த்தையையும் செய்கைகளையும் நடைகளையும் கவனித்து அவர்களிடத்தில் நன்மையைக்காணும்பொழுது பிரியத்தைக் காட்டியும் தீமையைக்காணும்பொழுது தகுந்தபுத்திசொல்லியும் பயமும்

பயமுமாய்ப் பிள்ளைகளை வளர்க்கவேண்டும். பிள்ளைகளை அதிகமாய்க் கண்டிப்பதனால் அவர்கள் பெற்றோர்களுக்குப் பயந்து பலபொய்களைச் சொல்லவும், கபடம் வஞ்சகம் முதலான துர்க்குணங்களைக் கற்றுக்கொள்ளவும் ஆஸ்பத முண்டாவதுந் தவிர பெற்றோர்களிடத்தில் வெறுப்பு முண்டாகுமானதால் பிள்ளைகளை அதிகக்கண்டிப்பு செய்வது தகுதியல்ல. பிள்ளைகள் குற்றஞ்செய்தாலும் அதைப்பொய்சொல்லி மறுக்காமல் உண்மையை ஒப்புக்கொள்ளுவார்களானால் மெய்சொன்னதற்காக அவர்களிடத்திற் பிரியத்தைக் காட்டவேண்டுமேதவிர அவர்கள் செய்த குற்றத்தைப் பாராட்டக்கூடாது. தாய் தகப்பன்மார்கள் நல்வழியில் நடந்துகாட்டாத பிள்ளைகளும் துன்மார்க்கத்தில் நடப்பார்களானதால் தாய் தந்தைகள் எப்போதும் புண்ணிய வழியிலேயே நடக்கவேண்டும், இனி விரிக்கிற் பெருகும் சமயம் நேரும்போது விரித்துக் கூறுவாம்.

---

## SHAH JEHAN. ஷாஜிஹான்.

ஷாஜிஹான் என்பவர் பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியாவை அரசாட்சி செய்த ஒரு மொகலாய சக்ரவர்த்தி. இவர் "டாஜ்மஹால்" என்னும் ஒரு சிறந்த கட்டிடத்தைக் கட்டினவர் என்பதைத்தான் அநேகர் அறிந்திருப்பார்கள். ஆனால், அவருடைய ஜீவியசரித்திரத்தையும், குணாதிசயங்களையும் ஊன்றிப்படித்தால், அவருடைய காலத்தில் பிரஜைகள் அவரை அன்புடன் கொண்டாடியதற்கும், பிற்காலத்தார் அவரைச் சிலாகிப்பதற்கும், காரணமான சிறந்த பல குணங்கள் ஷாஜிஹானிடமிருந்தன என்பது தெளிவாகும். இந்திய சரித்திர நூலாசிரியர்களும், ஐரோப்பிய சரித்திர நூலாசிரியர்களும், ஷாஜிஹானைப்பற்றி வேறு விஷயங்களில் அபிப்பிராய பேதங் கொண்டவர்களாயிருந்தாலும், அவர் நடுவுநிலைமையோடும் நீதியோடும் கூடியவர் என்பதைமட்டும் எல்லாரும் ஒரேமனதுடன் அங்கீகரிக்கிறார்கள். மனிதர்களுடைய இயல்பையும், அந்தஸ்தையும் கவனியாமல், எல்லாருக்கும் ஒரேவிதமான நீதியைச் செலுத்துவதில் ஷாஜிஹான் மிகவும் கவனம் செலுத்தும் இயல்புடையவர். இதனால் அவருடைய கீழ் உத்தியோகஸ்தர்கள் மிகுந்த ஜாக்கிரதையுடன் நீதி செலுத்துவதில் கவலை கொண்டவர்களாகவே இருப்பார்கள். ஏனெனில் நீதி தவறி ஒரு காரியத்தைச் செய்துவிட்டால் தங்களுடைய வேலையும்போய், சக்ரவர்த்தியின் கோபத்திற்கும் பாத்திரமாக வேண்டும் என்பதை அவர்கள் நன்றாய் உணர்ந்தவர்கள். இதனால் ஷாஜிஹானுடைய ராஜ்யம் பெரி



தாயிருந்தாலும், வாரத்தில் இருபது வியாஜ்யங்களுக்குமேல் அவரிடத்தில் விசாரணைக்கு வருவதில்லை. அதுவும் மதசம்பந்தமானதும், வெட்டு, கொலை முதலியவை சம்பந்தமானது மாகவே பெரும்பாலுமிருக்கும். அப்படிப்பட்ட வியாஜ்யங்களை உள்நுழைந்துபார்த்து சாமர்த்தியமாகவே ஷாஜிஹான் முடிவு செய்வார். லஞ்சம், சிபார்சு, முதலியவைகளை ஏற்றுக்கொள்ளும் ஜட்ஜிகளிடம் ஷாஜிஹானுக்கு அருவருப்பு அதிகம். டெல்லி நகரத்துக் கொத்தவால் ஒரு ஸமயத்தில் ஒரு வியாபாரியிடமிருந்து லஞ்சம் வாங்கி விட்டானாம். இந்த ஸங்கதியை அறிந்த ஷாஜிஹான் ஒரு உத்தியோகஸ்தன் மூலமாய் நல்லபாம்பை உயிருடன் அனுப்பி அந்தக்கொத்தவாலைக் கடிக்கும் படிச்செய்வித்தாராம். பாம்புகடித்து அந்தக் கொத்தவால் சிறிது நேரத்திற்குள் இறந்துபோனானாம்.

ஷாஜிஹான் அவருடைய காலத்தில் கொள்ளைக்காரர்களை வேரோடழித்தார். இவருடைய காலத்துக்குமுன்பு கொள்ளையும் வழிப்பறியும் ஸர்வ சாதாரணமாயிருந்தன. இவர் அந்தந்த ஜில்லாக்களில் நடக்கும் கொள்ளை, வழிப்பறி முதலியவைகளுக்கு, அந்தந்த ஜில்லாவிலிருக்கும் உத்தியோகஸ்தர்களே உத்தரவாதிகளாக வேண்டுமென்று கட்டளையிட்டார். இதனால் கீழ் உத்தியோகஸ்தர்கள் அவைகள் நடவாதிருக்கும்படியான முயற்சியைச் செய்தார்கள். ஸூரத்து நகரத்தில் வந்திருந்து வியாபாரம் செய்த உலாந்தக்காரர்களுடைய பொருள்கள் ஒரு இரவில் கொள்ளை போய்விடவே, ஸூரத்து கவர்னர் அந்த வியாபாரிகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று ஷாஜிஹான் அவரைக்கட்டாயப்படுத்திக் கொடுக்கும்படிச்செய்தார். போர்த்துகல் தேசத்துக் கொள்ளைக்காரர்கள் வெகு காலமாக வங்காள நாட்டைக் கொள்ளையடித்தும், ஜனங்களை ஹிம்ஸித்தும்வந்தார்கள். ஷாஜிஹான் அவர்களுக்குக் கொடுத்த கடுந்தண்டனையால் கடைசியில் அவர்கள் வங்காளத்தைவிட்டு ஓடிப்போனார்கள். டேவிட் ஸின்க்லேர், டெயிலர் போன்ற பாரபட்சமுள்ள சில சரித்திர நூலாசிரியர்கள், ஷாஜிஹானுடைய மதப்பற்றும், அவருக்கு கிறிஸ்தவ மதத்திலிருந்த ஒருவித வெறுப்பும், அவர் தமது தகப்பனுக்கு விரோதமாய்க் கலகம் செய்தபோது, போர்த்துகல் தேசத்தார் தமக்கு உதவி செய்ய மறுத்ததால் ஏற்பட்ட கோபமுமே, அவர்களை அடித்துத் துரத்தும்படி சக்ரவர்த்தியைச் செய்தன என்று சொல்லுகிறார்கள். ஆனால் பாரபட்சமில்லாத யெல்பின்ஸ்டன், கீன், பெர்னியர், போன்ற சரித்திர நூலாசிரியர்களின் கருத்து வேறுவிதமானது.—பிறைக்தம்வழி.

(இன்னும் வரும்).

## சுகாதார மார்க்கங்கள்.

(1) வெளிச்சமும் காற்றோட்டமுமில்லாத வீடுகளையிடித்துப் பெருப்பித்தும் இருட்டறை போலவிருக்கும் வாசஸ்தானங்களையெல்லாம் விசாலப்படுத்தி, தாராளமாய் வெளிச்சமும் காற்றும் உலாவும்படி நிருமாணிக்கவேண்டும். (2) பிரதி தினமும் கழிக்கப்படுகிற குப்பை கூளங்களைக் கொண்டுபோய்ச் சுட்டெரித்துப் போடும்படி நகர்ப் புறத்தில் பெரிய காளவாய்களை யுண்டாக்கவேண்டும். வீடுகளும் தெருக்களும் எப்போதும் சுத்தமாயிருக்கும்படி பார்க்கப் பரிசிலர்களை ஏற்படுத்தவேண்டும். சாலகங்களைச் சுத்திசெய்யவும், துர்நீர்களைத் தங்காதபடி கழுவி விடவும் ஓட்டர்களை அமைக்கவேண்டும். (3) வீடுகளில் ஜன நெருக்கஞ் சேராதபடி இந்திந்த வீட்டில் இத்தனைபேர் தான் வசிக்கவேண்டுமென்று விதி யுண்டாக்கவேண்டும். (4) அசுத்தமும், பூச்சிகளு மலிந்த குளத்துநீரை அப்போதைக்கப்போது சுத்தம் செய்யவேணும். பானத்துக்குதவும் குளங்களை யெல்லாம் சுத்திசெய்து அக்குளங்களை வேலி யடைத்துக் காவல் போடுவது, பானம் பண்ணும் குளங்களில் வஸ்திரம் தோய்த்தலாவது, ஸ்நானம் பண்ணுதலாவது கூடாதென்று சட்டஞ் செய்தல், கிணறுகளைச் சுற்றி ஜனங்கள் சேறாக்கி யசுசி செய்யாதபடி கற்களைப் பாவுதல். (5) நகரவாசிகளில் பெரும்பாலார் சோம்பேறிகளாகவும், தேகாப்பியாசமில்லாமல் திண்ணைகளின்பேரி லுட்கார்ந்து கிழக்கதைகளைத் தொனப்பிக்கொண்டிருக்கிறவர்களாகவு மிருக்கிறதைக் கவனித்து, சில சிலம்ப அரங்கங்களையும், தேகாப்பியாசத்திற்கேற்ற விடுதிகளையும் அமைத்து, சகலரையும் தேகாப்பியாசஞ் செய்ய உற்சாகப்படுத்தவேண்டும். (6) பெரும்பாலார் பட்டணத்தில் ஜன நெருக்கமான விடங்களிலேயே இருந்துகொண்டு அசுத்த காற்றையே சுவாசித்துக் கொண்டிருக்கிறபடியால், அவர்கள் காலையிலும் மாலையிலும் போயுலாவத்தக்கதாக ரமணீயமான சிங்காரத் தோட்டங்களை யுண்டாக்குதல், அவைகளில் விதவிதமான புஷ்பச் செடிகளையும், மரங்களையும் கொண்டு வந்து நாட்டுதல். (7) இவைகளன்றி நகர வாசிகளுக்குப் பொதுப்பட அநேக சுகாதார விதி விலக்குகளைச் சாஸ்திர ரீதியாய் எடுத்துப் பிரசித்தப்படுத்தி, ஒவ்வொருவரும் அவ்விதி விலக்குகளை யனுசரித்து நடக்கும்படி யேற்பாடு செய்தல் அவைகளாவன:—



“விருக்ஷங்களி லநேகம் அநேக நூறுவருஷ காலம் ஜீவன் பெற்றிருக்கின்றன. இத்தேசத்திலும், பிறதேசங்களிலும் ஐந்நூறு, அறுநூறு, ஆயிரம் இரண்டாயிரம் வருஷங்களாய் சாகாமலிருக்கிற அநேக மரங்களிருக்கின்றன. இந்நாட்டில் ஆலவிருக்ஷம் மூவாயிர வருஷமிருப்பதாக அறிவாளிகள் கருதுகிறார்கள். மேலை நாடுகளில கர்வாலி, சிமையிலந்தை யிவைகள் ஆயிரம், ஆயிரத்தைந்நூறு வருஷங்களாய் நிலைத்திருப்பனவாய்ச் சொல்லப்படுகின்றன.”

“பக்ஷிகளும் மிருகங்களு மவ்விதமே அநேக வருஷகாலம் ஜீவித்திருக்கின்றன. நமது நாட்டில் அஞ்சுகமென்னப்பட்ட கிளிப்பிள்ளைகள் ஐந்நூறு வருஷகாலம் சுகமாயிருப்பதாய்த் தெரியவருகிறது. இதனால் தான் அதற்கு சுகம், அஞ்சுகம், என்னும் பெயர்கள் வந்தன போலும். அம்சமென்கிற அன்னப்பறவைகளும் முந்நூறு வருஷமிருக்கிறது. கழுகுகள் ஐந்நூறு வருஷகால மிருக்கின்றன. காகங்களும் பல வருஷங்கள் ஜீவித்திருப்பதாய்க் கேள்விப்படுகிறோம்.”

“மிருகங்களில் சிங்கம் நூறு வருஷத்துக்கதிகமாய் ஜீவிக்கின்றது. ஒட்டகங்கள் நூற்றுக்கு மேற்பட்ட வருஷம் ஜீவனோடிருக்கின்றன. இலங்கைப் பிரதேசத்திலுள்ள யானைகள் ஐந்நூறு வருஷங்களிருக்கின்றன. அமெரிக்காவில் அன்னிபால் என்கிற யானை எழுநூறு வருஷமிருப்பதாய் சாஸ்திரிகள் கூறுகிறார்கள். ஜலத்தில் வசிக்கும் ஆமை இருநூற்றிருபது வருஷ மிருந்ததாய் ஒரு ஆங்கிலப் புலவர் சொல்லுகிறார்.”

“இப்படி மனுஷனுக்குக் கீழ்ப்பட்ட தாவரங்களும், மிருகங்களும் அநேக நூறுவருஷ காலம் ஜீவனோடிருக்க எண்ணரிய பிறவிகளி லியாதினு மேலான இந்த மானிடப்பிறவிமட்டும் ஒரு நூறுவருஷ காலம் ஜீவனோடிருப்பதும் துர்லபமாய் முடிந்து, காயாயிருக்கும்போதே யுதிர்ந்து போகக் காரணமென்ன? உலகத்திலே நூறு வயதுக்கு வந்தெட்டின புண்ணிய புருஷர் எத்தனை பேருண்டு? மனுஷர்களில் அரைவாசி பேர் பத்து வயதுக்குள் இறந்து போவதாகவே ஆயுள்வேத பண்டிதர் கூறுகிறார்கள்.”

“முகாந்தரமென்ன? தங்கள் சுகத்தைத் தக்கபடி பேணாததும், பலவித துராசாரங்களினாலே தங்களைக் கெடுத்துக்கொள்வதுமேயாம். அறியாமையும், அவாவும், சோம்பலும் மனுஷனைக் கொல்லுகிறதென்று பெரியோர் கூறுகிறார்கள். தேகமும், மனமும் சுத்தமாயிருந்து அவைகளுக்குரிய விதி விலக்குகளைக் கிரமமாய்க் கையாடிவந்தால் அதுவே மானிட ஜீவன்

நிலைத்திருக்க மருந்தாம். "காய கற்பந்தேடி நெஞ்சம் புண்ணாவோரெல்லாம்" கையாடவேண்டிய காய கற்பமிது தான்."

"ஆகவே மனுஷனே! நீ யிவ்விடத்தில் கூறப்படுகிற விதிகளைக் கைக்கொள். விலக்குகளை நிவர்த்தி செய். நீ உலகத்தில் நீடிய ஆயுளைப் பெற்றிருப்பாய். அறிவும், விவேகமும் அடைந்திருப்பாய். நல்ல சந்தானங்களைப் பெற்றுச் சந்தோஷமாய் வாழ்நாளைச் செல்விடுவாய். நீடிய ஆயுளுக்கும், சந்தோஷ ஜீவியத்துக்கும் இவைகளே ஏற்ற யுத்திமதிகள்."

(இன்னும் வரும்)

## திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரஸ்வாமி மகோத்ஸவச் சிறப்பும் ஷை ஆதீன குருபூஜை வைபவமும்.

தீர்த்தம் க்ஷேத்ரம் மூர்த்தி இம்மூன்றும் ஒருங்கே அமையப்பெற்றுள்ளதும், சைவசமயாசிரியர்களால் பாடல் பெற்றுள்ளதுமான திவ்யக்ஷேத்திரமாகிய பிப்பிலாரண்ணியமென்னும் திருவாவடுதுறையில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அதுல்யகுச நாயகி சமேத ஸ்ரீ கோமுக்தீஸ்வரஸ்வாமிக்கு பிரதி வருடமும் பிரமோத்ஸவம் நடைபெறுவது இயல்பேயாகினும் இவ்வருடத்தில் நடைபெற்ற இம்மஹோத்ஸவத்தின் சிறப்பை ஆதிசேஷனாலும் எடுத்துச் சொல்ல ஏலாதெனின் எம்மால் எங்ஙனம் எழுதக்கூடும். இவ்வருடம் இவ்வுத்ஸவத்தை இத்தனை சிறப்புடன், சரீரசிரமத்தையும், பொருட்செலவையும் பொருட்படுத்தாது நடப்பிவித்ததானது திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ பண்டார சன்னதியவர்களின் பக்தி சிரத்தையே காரணமெனப் பகருவோம். பிறகு, ஸ்ரீகைலாச பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் 18-வது பட்டம் வகித்து வரும் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக பண்டார சன்னதியவர்கள் ஷை ஆதீன குருபூஜையை (5–2–11-ல்) வெகு பக்தி சிரத்தையோடு செய்துமுடித்து பிராமணர்களுக்கு தக்ஷிணையுடன் அன்னமளித்தும், இரவு ஸ்ரீ கோமுக்தீஸ்வரரை தரிசனம் செய்துகொண்டு ஸ்ரீ ஆதி நமசிவாய மூர்த்திக்கு பூஜை முதலானதும் செய்துமுடிந்தபின் பந்திபோஜனம் செய்விக்கப்பட்டது. அதன் பிறகு, எண்ணற்ற எடுபிடி சாமான்களுடனும், யானை, குதிரை, ஒட்டக முதலியவற்றுடனும், பலவிதமான வாணவேடிக்கைகளுடனும், எண்ணற்ற வாஷிங்டன் விளக்குகளுடனும், பல ஜோடி



மேளக்கச்சேரிகளுடனும், அரண்மனை பாண்டு வாத்தியங்களுடனும், பஜனைகோஷ்டிகளுடனும், அழகிய கார்ச்சிப்பட்டு விரித்த தந்தப் பல்லக்கின் மீது ஸ்ரீ பண்டாரசன்னதியவர்கள் பவனி வந்த சிறப்பும், அப்பல்லக்கின் இருமருங்கிலும் இராமநாதபுரம் ராஜா ஸ்ரீ ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜய ரகுநாத ராஜ சேதுபதி மகாராஜா அவர்களும், அவர்கள் சகோதரரும், ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களும், சுதேச கனதனவான்களும், மற்ற எண்ணற்ற ஜனங்களும், பின் தொடர்ந்து சென்ற காக்ஷி கண்டோர்க்கன்றி காணாதார் கனவிலும் கண்டிரார். ஸ்ரீ பண்டார சன்னதியவர்கள் கொலுமண்டபம் வந்து சேர்ந்ததும் அவருக்கு அலங்கார முதலியன செய்வித்து சோடச உபசாரங்கள் நடைபெற்றபோது, அருகிலிருந்தோர் கண்டு ஆனந்திப்பதைப் போல் தானும் கண்டு களிக்கக் கருதியே போலும் வான முகட்டில் சூரியன் எழுந்தான். ஆதவன் உதயம் அணுகினதால் தாமரையும் மலர்ந்தது. காலை, ஸ்ரீ சன்னிதானம் அவர்கள், அவரவர்கள் அபேக்ஷைப்படி சன்மானம் செய்ததைப் பார்த்தால் §பாரியே மீண்டும் பாரினில் இவ்வடிவந்தாங்கி வந்துற்றானோவென பார்த்தோர் பிரமிக்கும்படியாய் இருந்தது. கொடையும் தயையும் பக்தியும் ஒருங்கே அமையப்பெற்ற ஸ்ரீ மஹா சன்னிதானம் அவர்கள் நீடிய ஆயுளும் பூரண சுகமும் பெற்று வாழுமாறு எல்லாம் வல்ல சிவபிரான் திருவருள் புரிவாராக.

## விகடக் கோத்து. (JOLLY BITS.)

ஆல்ரயிட், ஆதாபரஸ், குட்மார்னிங், ஜெயசீதாராம், என் அன்பர்களே கேளுங்கள், நான் என் அன்னை வயிற்றிலிருந்து சென்னையிலுதித்த நாளாய் என் மென்னையில் என்னமோ மாட்டிக்கொண்டதென்ற ஓர் நம்பிக்கையின்பேரில், வைத்தியனிடம் சென்று கண்ட ஔஷதங்களை அருந்தி பார்த்தும் சௌக்கியமாகாது கைலாயம் சென்று அகஸ்தியரைக் கண்டு அருமாமுனிவரையுண்டுபட்ட அவஸ்தையிலிருந்து விண்டு, சிறிது நேரம் வார்த்தையாடிவிட்டு அகவிலையின் அனியாயங்களை அவரிடம் கூறினேன். அவர், ஐயா விகடனாரே! உம்முடைய பெயரின் முதலெழுத்தை எடுத்து விடுவதாலுண்டாகும் அவஸ்தையில் நீரிப்போது வாதைப்படுவதால் அகவிலையின் பாரம் வெகுவாய்த்

§ பாரி தமிழ் வள்ளல்களிலே இவனையே முதல்வனாகச் சொல்லல் தகும். எத்தனையோ வள்ளல்கள் முன்னாளில் விளங்கியிருப்பினும், ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் தாம் பாடிய திருப்புகலூர் திருப்பதிகத்தில் "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரிலை" என்று தம் அருளமைத் திருவாக்கால் சுட்டப்பட்டவன் இவனே.

தோன்றுவது இயல்புதான், உமக்கு திருப்தியுண்டாகும் பொருட்டு நீர் உலகத்தைச்சுற்றி உத்தமப் பொருள்களையும் குறித்துக்கொண்டு உலகெல்லாம் உலாவிவரும் உண்மை சமாச்சாரங்களடங்கிய உன்னத பத்திரிகையாகிய "வைத்திய போதினி"க்கு எழுதும் உலகோர் அறியட்டும், துணை வேண்டுமாயின் நாரத மாமுனியைக்கூட அனுப்புகிறேன் என்றார். ஆல்ரயிட் தேட்ஸ் வெல் அண் குட் என்றேன். தற்காலத்தில் உலகத்து சமாசாரங்களை ஒரு நொடியில் பாக் பண்ணி ஊருராயனுப்பும் ராய்டர் துரைகூட இவருக்கு நிகராகமாட்டார். ஏதொன்றையும் ஆராய்ந்து ஆலோசித்து உண்மையையே உரைப்பார். அது அப்படியிருக்கட்டும் இது இப்படியிருக்கட்டும் நான் கண்ட விசேஷங்களை கூறுகிறேன் கேளுங்கள்:—

நிவாடாவில் ஆல்பைன் சுரங்கத்தில் சென்றவருஷம் டிசம்பர்மீ வேலைசெய்துகொண்டிருந்த 3-ஆள்கள் 1000-அடி ஆழத்தில் திடீரென மலை பெயர்ந்ததால் புதைவுண்டார்கள்; அவர்களை ரக்ஷிக்கும் பொருட்டு வேலை செய்தார்கள். அவர்கள் வெளியில் வருவதற்கு இன்னும் சுமார் 4-வாரங்கள் செல்லுமென்க் கருதப்பட்டபின் இதன் மத்தியில் டெலிபோன் மூலமாய் யிவர்கள் க்ஷேமத்தையறிய முயற்சித்தபோது நாங்கள் சௌக்கியமாய் இருக்கிறோம் என்னும் பதில் கிட்டிற்றாம். இவர்களுக்கு அளவில்லாத அன்னபானாதிகள் பம்புகளின் வழியாய் அனுப்பினார்களாம். வெளியிலிருப்பவர்கள் புதைபட்டவர்களுக்கு பாட்டுகளும் உல்லாச வாக்கியங்களும் கம்பிகளின்—(wire)வழியாய் அனுப்புவதுமன்றி யிவர்கள் யிரண்டு கக்ஷியாருக்கும் சரசப் பேச்சுகளும் நடமாடிக்கொண்டிருந்தனவாம். கலியுக ராஜனின் திருவிளையாடலோ மற்றென்னவோ கடவுளுக்கே வெளிச்சம்.

மிஸ்டர் விட்னி என்னும் பேர்போன கோடீசுவரப் பிரபு நியுயார்க் என்னும் பட்டணத்தில் தன் படுக்கையில் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு தற்கொலை புரிந்துகொண்டாராம். இவர் அமெரிக்காவில் கண்டவர்கள் கண்ணியம் செய்யும்படி உதித்த உத்தமப் பிரபுவாம். செல்வமகிமையால் இந்தியா சக்கிரவர்த்தியும் இவருக்கு நட்பினர்களாம். வியாபாரத் துறையிலுண்டான நஷ்டம் துரையவாளை வைகுண்டத்திற்கு அனுப்பிற்றாம். ஐயோ பாவம்! அந்தோ பரிதாபம்!

புகை ரதம்:—ஆசியா கண்டத்துக்கும் ஐரோப்பாவுக்கும் பெர்ஷியா ஆப்கானிஸ்தான் வழியாக புகைரத பாதை ஏற்படுத்த எண்ணியிருக்கிறார்களாம். இதுமுடிந்தால் இங்கிலாந்திலிருந்து பம்பாய்க்கு 9-நாளிற் சேரலாம். இப்போது கப்பல் மூலமாய் 14-நாட்கள் செல்லுகிறது. இதுவும் ஓர் விந்தையே!



## வைத்தியக் குறிப்புகள்.

காதில் சீழ் வடிதலுக்கு:—சுக்கு, திப்பிலி, கோஷ்டம், சயிந்தியலவணம், முத்தக்காசு, உள்ளி, கடுக்காய், வசம்பு, வகைக்கு ஒரு உழுந்திடை எருக்கிலைச்சாற்றாலரைத்து வேப்பெண்ணெயிற் கலந்து காய்ச்சி காதில் விட்டுப் பஞ்சடைக்கத் தீரும்.

---

மற்றொரு விதம்:—முருங்கை வேர், முத்தெருக்கஞ்செவி யிலை, பூண்டு, வசம்பு இவைகளை யோர்நிறையாய்க் கள்ளிப்பழுப்புச் சாற்றாலரைத்து நல்லெண்ணெயிற் கூட்டி எரித்து காதிலடைக்க மாறும்.

---

காதில் ஈ புகுந்தால்:—குப்பைமேனியிலையிற் சிறுநீர் (மூத்திரம்) விட்டுக் கசக்கிக் காதிற் பிழிய ஈ செத்து விழும். குப்பைமேனிச்சாறும், கோழியவரைச்சாறும் சமனாய்க் கூட்டி காதில் விட்டிடில் ஈ சாகும்.

---

காதில் சீழ்வடிதலுக்கும், குத்துவலிக்கும் இங்கிலீஷ் முறை:—க்ளிஸிரைன் 4 டிராம், (Glycerine, 4 Dram) டிஞ்சர், ஓப்பியம் 4-டிராம், (Tinct opii, 4 Dram) இவ்விரண்டையும் ஒன்று கூட்டி சவுக்காரம் (Soap) கூட்டிய வென்னீரினால் காதை சுத்தம் செய்து ஷெ மருந்தில் 10, 12, துளி காதில்விட்டு பஞ்சடைக்கவும்.

---

கருஞ்செம்பை:—இந்த இலையை வதக்கி வீக்கங்களுக்கு வைத்துக் கட்டலாம். கருஞ்செம்பைரசம், வெள்ளைப்பூண்டுரசம், நல்லெண்ணெய் இவைகளை சமனாய்க்கூட்டி, எரித்து தைல பதத்தில் வடித்து வாத ரோகங்களுக்கு மேற்பூச்சாக பூசிவர சுகுணமுண்டாகும்.

---

கருவேலம்பிசின்:—இதை வஸ்திரகாயம் செய்து வெள்ளைச்சருக்கரை சமனிடை கூட்டி வேளை ஒன்றுக்கு 10, 12, உளுந்து நிறை கொடுக்க. இருமல், ரக்த பித்த ரோகங்கள், சீதபேதி, அதிசாரம், வயிற்றிலுள்ள விரணம் இவைகள் தீரும்.

---

கருவேப்பிலை:—இந்த இலை உலகப் பிரசித்தமானது. போஜன பதார்த்தங்களுடன் சேர்ப்பது வீட்டு வழக்கம். இதை தாகம், பித்த தோஷம், வாந்தி அரோசகம், சுரம், வயிற்றுவலி, அஜீரணபேதி இவை முதலியவைகளுக்கு 2-வராகநிறை கருவேப்பிலையை அரைப்படி வெந்நீரிலிட்டு மூடி 4-மணி நேரம் ஊறவைத்து வடிகட்டி, வேளை ஒன்றுக்கு $\frac{1}{8}$ அல்லது $\frac{1}{4}$ ஆழாக்கு வீதம் கொடுத்துவரவும்.

---

சர்க்கரை:—பலத்தையூட்டுவதிற் சர்க்கரை சிறந்த பண்டமென்று இப்போது ரூபகாரமாயிருக்கின்றது, யுத்தகளத்திலிருக்கிற கர்மன் போர்வீரர்களுக்குரிய ஆகாரத்திற் சர்க்கரையுமொன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது, மேலும் அதிகமாய்ச் சர்க்கரை சேர்ந்த பண்டத்தைச் சாப்பிடும்போது மஸ்துண்டாக்கும் படியான வஸ்துக்களின்மேல் விருப்பங் குறைந்து போகிறதென்றுஞ் சொல்லப்படுகிறது.

பானம்:—வெந்நீருற்றி மூன்று நிமிஷத்தில் தேயிலையை எடுத்து விடுதல்வேண்டும், அடிக்கடி தேத் தண்ணீர் குடிப்பது மிகவுங் கேடு. ஐயர்லாந்தில் அநேகர் பயித்தியம் கொள்வது அடிக்கடி தேத்தண்ணீர் குடிப்பதினுலென்று ஒரு பத்திரிகை கூறுகின்றது. மனுஷருடைய ஆயுளைக் குறையச் செய்து ஜனப்பெருக்கத்தைக் குறைப்பதற்குக் கடவுளாற் கொடுக்கப் பட்ட அமைதியான பிளேக் வியாதியைப்போன்றது தேத் தண்ணீர், காப்பி இரண்டுமெனப், பேர்வாய்ந்த டாக்டர் லிஸ்டர் கூறுகின்றார்.

## வர்த்தமானங்கள்.

யானையின் தோல்:—யானையின் தோலை வேலைகளுக்கு உபயோக படுத்துகிறார்களாம். இத்தோலானது இரண்டங்குலம் கனமுள்ளதா யிருக்கிறதாம்.

தங்கச் சுரங்கம்:—ஆஸ்திரேலிய நாட்டு தங்கச் சுரங்கத்தில் கடந்த டிஸம்பரில் கிடைத்த தங்கத்தின் நிறை 475-அவுன்ஸ் நிறையுள்ளதாம்.

கப்பற்சேதம்:—சென்ற டிசம்பர்மாதம் காய்பியன் கடலில் உண்டான புயலினுல் 26-கப்பல்கள் நாசமாயினதுடன் 314 ஜனங்களும் பிராணனை இழந்தார்கள்.

சுரங்க விபத்து:—லங்காஷயரில் சுரங்கமொன்று வெடித்த தினுல் 300-வேலைக்காரர் உள்ளே அகப்பட்டார்களாம். தீயும் பற்றியதால் அவர்கள் இறந்திருக்கலாமென் றெண்ணப்படுகிற தாம் 40-பிரேதங்கள் வெளியாக்கப்பட்டனவாம். அநதோ பரிதாபம்!

பிளேக்:—சேலத்தில் இந்நோயின் கடுமை சற்று தணிந்து வருகிறது. ஜனங்கள் இப்போது குடியேறுகிறார்கள். இன் னும் இரண்டொரு வாரத்தில் இந்நோய் தொலைந்துவிடக்கூடு மென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரையில் இந்நோயினுல் 1574-பேர் மாண்டனர்.

உக்கிரமான பூகம்பம்:—துருக்கிஸ்தான் தேசத்தில் வயர்னில் என்னும் பகுதியில் இம்மாதம் 4-ம் தேதி 5 நிமிஷ அளவில் பூமி யதி ர்ச்சியுண்டானது. பயங்கரமான விபத்துக்கள் நேர்ந்தன. கல்லினுற் கட்டப்பட்ட வீடுகள் கிட்டங்கிகள் குலுங்குதலில் சாய்ந்தன 22½ டிகி ரீக்கு உறைந்த பனி வீழ்ந்து மூடியது உயிர்ச்சேதங்களைப்பற்றி நிச்சய மாக இன்னும் அறியப்படவில்லையாம்.



பறங்கிப்பேட்டையில் பல ஆண்டுகளாக ஆயுர்வேத அவுஷத வியா பாரம் செய்துவரும் மிஸ்டர் பி. சுப்பராய் அவர்களுடைய உத்கிருஷ்ட மான அவுஷதங்களுக்காகவும் உத்தமமான வாசனைத் திரவியங்களுக் காகவும், கொட்டக்கல் என்னுமிடத்தில் நடந்தேறிய பொருட்காட்சியில் ஓர் வெள்ளிப் பதக்கமும் நற்சாக்ஷி பத்திரமும் அளிக்கப்பட்டிருப்பது மன்றி, ஒசூர என்னுமிடத்தில் நடந்தேறிய பொருட்காக்ஷியிலும் மற் ருெரு வெள்ளிப் பதக்கமும் பணமும் பரிசளிக்கப்பட்டதாம்.

## விசித்திர விஷயங்கள்.

நடக்கிற மீன்கள்:—சில மீன்கள் நடக்கிறதாக ஒரு சாஸ்திரி சொல்லுகிறுர். அவைகள் ஜலத்தில் நாற்கால் ஜீவன்போல் நடந்து மற்ற மீன்களைப் பிடித்துத் தின்கிறது. இவற்றிற்கு தொட்டி மீன் என்று பெயராம்.

லண்டன்நகரிலுள்ள அநேகம் ஷாப்புகளில் ஒருவிதமாய் அலுமாரி கள் செய்துவைத்திருக்கிறார்கள். கள்வர்போய்க் கதவுகளைத்திறந்தால் உடனே அக்கள்வரின் சாயல் கதவுகளில் அமைந்துவிடுமாம். அப் பிரதிமைப் படத்தைக்கொண்டு கள்வர்களைப் பிடிக்கக்கூடுமாம்.

புகைவண்டியை வெற்றிகொள்ளல்:—ஜர்மன் தேசத்தில் ஒருவர் பைசிக்கல் வழியாக புகைவண்டியோடு எதிர்த்து ஓடி 10-நிமிஷத்துக்கு முந்தி குறித்த இடத்தைச் சேர்ந்து புகைவண்டியை வெற்றிகொண்டார். பைசிக்கல் 11¼-மைலை 15-நிமிஷத்துள் தாண்டியது.

ஆமை:—இதன் சிரசைத் துணித்த பின்னரும் அது 24-மணி நேரத்தில் 200-கெஜ தூரம் நகர்ந்து போகுமாம். அதன் ஈரலை யெடுத்து வெளியில் தூக்கி வைத்தால் அது பல நாட்களுக்குத் துடித் துக்கொண்டிருக்குமாம். இதனுல் மூளையே உயிர்க்கிருப்பிடம் என் பது அறியவேண்டியது.

ஆகாயக் கப்பல்:—பெங்களூரில் நடந்தேறிய ஆகாய விமானக் காக்ஷியை 25,000 ஜனங்கள் பார்த்துச் சந்தோஷித்தார்கள். மாலை 5-மணிக்குப் பிறகு சூரியாஸ்தமனமாகும் சமயத்தில் பாரான்டிகேடர்சு அவர்கள் தமது ஆகாய விமானத்திலேறி விட வடமேற்குப் புறமாய்க் கிளம்பினுர். வட்டமாய் 200-கஜ தூரம் போய்த் திரும்பித் தரைக்கு வந்து மறுபடியும் எழும்பினுர். பிறகு மிஸ்டர் லோகன், மிஸ்டர் வில்லிஸ் இவ்விருவரையும் ஏற்றிக்கொண்டு பாரன் அவர்கள் திரும்ப வும் மேலே வட்டமாய்ச் சுற்றிவந்தது நிரம்ப ஆச்சரியமாயிருந்தது.

மனிதருபமும் நாய்முகமும்:—ஆஷ்டிரேலியாவின் மேற்கு மாகா ணத்தில் ஒரு தனவான் ஒரு நாடகப்பெண்மீது வெகு காலம் காதல் கொண்டிருந்து பின்னர் தன் மனோரதம் முற்றுப்பெறவே, இருவருங் கூடியிருக்குங்காலத்துத் தமக்கெதிரில் தங்கள் நாய்களுங் கூடிக் களிப் பதாயின, அந்த நாய்களின் லீலையைப் பார்த்தவாறு தாமுங் காமமீறி உற்சாகமாயிருந்தனர், அது தொடங்கி அப்பெண் கற்பவதியாகி உச்சி முதல் நாபிவரை நாயுருவமும், தேகமுழுவதும் மயிர் அடர்ந்துமுள்ள ஒரு குழந்தையை வெகு வேதனையோடு பெற்றனள் அது இறந்து போயிற்று.

**நாய்கள்:**—பிரான்ஸில் பட்டாளப்பகுதியில் நாய்கள் வளர்க்கப்படுகின்றன. போர்க்களத்திற் காயமடைந்து பிரக்ஞையற்றுக்கிடக்கும் போர்வீரரை அந்நாயிகள் தேடிச்சென்று, அவர்களைத் தொந்திரவு செய்யாமல், அவர்களிடத்திலுள்ள ஏதும்பொருள்களைச் சின்னமாகக்கருதிக் கவ்விச் சென்று, படைவகுப்புத் தலைவரிடம் கொடுக்கும்போது, அப்பொருள் எந்தப் படைவீரனது என்பதையும், அவன் போர்க்களத்தில் உதவியின்றிக் கிடக்கிறானென்பதையு மறிந்து, அவர், உடனே அவ்வாபத்திலகப்பட்டோர்க்கு வேண்டிய உதவி செய்வாராம். நாய்கள் மனுஷருக்குப் பலநன்மைகளைச் செய்கின்றன.

---

**கப்பலோ சிற்றூரோ:**—இதற்குமேல் பெரியதும் சமானமானதுமில்லையெனச் சொல்லத்தக்க ஓர் பெரியமரக்கலம் புதிதாய்ச் சீமையில் அமைக்கப்பட்டிருக்கிறதாம்: இதைச் சமுத்திரத்தில் நினைத்தவிடத்திக்கு ஊர்ந்துசெல்லும் ஓர் சிறிய தீவென்றே சொல்லலாம்: இம்மரக்கலத்தில் 650 முதல் வகுப்புப் பிரயாணிகளும் 740, 2-ம் வகுப்புப் பிரயாணிகளும், 2400, 3-ம் வகுப்புப் பிரயாணிகளுமாக 3790 ஜனங்கள் குடியிருக்கத்தக்க வசதிகளும், நீந்தும் குளமொன்றும், குளிப்பதற்கு ஸ்நானக்கட்டிடமொன்றும், நாடகசாலையொன்றும் இருக்கின்றனவாம்: அதன் கிரயம் இருபது லட்சம் பவுன், அதாவது மூன்று கோடி ரூபாயெனச் சொல்லப்படுகிறது.

---

**சிசுவை விழுங்கிய மீன்:**—மலையாளத்திலுள்ள பள்ளிபுரம் என்னும் ஊரில் சில வலைஞர் ஒன்று சேர்ந்து வலைபோட்டு மீன் பிடித்தபோது ஒரு பெருத்த மீன் அகப்பட்டது அதை வெகு சிரமப்பட்டு வெளியில் இழுத்து அறுத்தார்கள். ஆ! ஆ!! அவர்கள் ஆச்சரியத்தை என்னவென்று சொல்வது!!! அந்த மீனின் வயிற்றில் யாதொரு காயமும் இல்லாமல் ஒரு பெண்சிசு காணப்பட்டது. அதற்கு 3-வயதிருக்குமாம். சிசு தண்ணீரண்டைபோய் இருக்கும்போது அந்த மீன் அந்தச் சிசுவை விழுங்கியிருக்கவேண்டுமென்று ஊகிக்கப்பட்டது. 3-வயது காலம் வளர்த்த புத்திரியை, கேவலம் மீனுக்குப் பறிகொடுத்த பெற்றோர் இன்னாரென்பது புலப்படவில்லையாம்.

---

**ஜெந்துஉற்பவம்:**—டிலீச் என்னும் பெயரையுடைய சாஸ்திரியாரொருவர் முட்டையிலிருந்து குஞ்சுகளுண்டாகும் விதத்தை மிகுநுட்பமாயாராய்ந்து, அத்தொழிலை யியற்றற்கேற்றவோர் இயந்திரத்தையமைத்து, சிருஷ்டிகர் தொழிலை நடத்தத்தொடங்கி யிருக்கின்றாராம். தற்போது இவர் பிரயாசத்தின் பெறுபேறாய் நான்கு சமுத்திர ஜந்துக்கள் சிருட்டிக்கப்பட்டிருக்கின்றனவென்று சில பத்திரிகைகள் கூறுகின்றன, அவை மற்றும் பிராணிகளைப்போற் சீததத்துவ முடையவைகளாய் நகரக் கூடியவைகளாயும் சுவாசிக்கக் கூடியவைகளாயும் இருக்கின்றனவாம், ஆயினும் ஆகாரமேற்குந் திறமில்லையாம். இதன் காரணத்தைச் சாஸ்திரியார் பூதக்கண்ணாடி கொண்டு ஆராய்ந்து அவற்றிற்குச் சீரண வுறுப்புகளில்லையெனக்கண்டு, அக்குறை நிவர்த்திக்க அதிக பிரயாசமெடுக்கின்றனராம்.



## புத்தக வரவு.

**ஸ்ரீகிருஷ்ண சைதன்யஸ்வாமிகள் சரித்திரம்:**—இவ்வரியபுத்தகமானது உலகமெங்கும் பிரக்யாதியடைந்த அமிர்தபஜார் பத்திராதிபராகிய ஸ்ரீஜத்பாபு சிஷிர்குமார கோஷ் அவர்கள் ஆங்கிலத்தில் வரைந்து உலகமெங்கும் பரவச்செய்த இவ்வுத்தமநூலை ஆங்கிலமறியாத நந்தமிழ்நாட்டுச் சகோதரர்களும் அறிந்தானந்திக்குமாறு சென்னையிலுள்ள ஸ்ரீபக்தவத்ஸலம், பி. ஏ. ஸ்ரீவேங்கட ஸ்ரீனிவாஸன் என்ற இவ்விரு கல்விமான்களும் ஒருங்குசேர்ந்து செந்தமிழ் நடையில் தமிழர் சுவைக்கேற்ப ஆங்கில நூலை அக்கித்தந்தமையால் மிகுதியும் ருசிக்கின்றது. இந்நூலில் நிரம்பித்ததும்பும், பக்திரசமும், நடைப்போக்கும் நடையழகும் மனத்தைக்கவர்கின்றது. இவ்வருமை வாய்ந்த பக்திநூலை நந்தமிழ்நாட்டில் சிறுவர் முதற பலரும் வாங்கிப் படித்தால் விரித்துப் பரந்த ஸ்ரீகிருஷ்ண சைதன்ய ஸ்வாமிகளின் உண்மைப்பெருமைகள் எளிதில் விளங்கும், இந்நூலின் பெருமைக்கேற்க இதன் வெளியழகும் கண்ணைக்கவர்கின்றது. இப்புத்தகத்தின் பிரதி ஒன்றை எம்மீதன்புகூர்ந்தனுப்பிய நூலாசிரியரவர்களிடத்து நன்றியறிதலுடையேம். இதன் விலை ரூபா 2, வேண்டியவர்கள் சென்னை விவேகானந்த பிரசுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

---

**பறக்கை பிரம்ம ஞானமடத்தின் அறிக்கைப் பத்திரம்:**—திருவிதாங்கூரைச் சேர்ந்த பறக்கை என்னும் கிராமத்தில் ஸ்ரீமத், எஸ், பி, பெருமாள் பிள்ளை அவர்களால் பிரம்ம ஞான மடம் என்னும் நன்னாமத்தோடு ஓர் மடம் ஸ்தாபிதஞ் செய்யப்பட்டுள்ளது. இம்மடத்தின் நோக்கமாவது, வேதாந்த விசாரஞ் செய்தல், சாதுக்களுக்கும் ஏழைகளுக்குமன்னமளித்தல், இந்து மதவுண்மை பிறருமறியும்படி துண்டுப் பத்திரிகைகள் பிரசுரித்தல், ஆயுர்வேதவிதிப்படி வியாதிகளைத் தீர்த்தல், இத்தகைய தருமங்கட்கும், மற்றுமுள்ள சிலவுகட்கும், தருமசிந்தை கொண்ட கனதனவான்களின் பேருதவியைக்கொண்டே நடைபெற்றுவருகின்றது. இம்மடமானது மென்மேலுமபிவிருத்தியாகி, நம்மவர்கள் ஞானரகசியங்களை அறிந்தானந்திக்குமாறு தர்மசிந்தையுள்ள கனவான்களின் ஆதரணையு மெதிர்பார்க்கப்படுகிறது, இம்மடத்தின் அபிவிருத்தியைக் கருதிய பத்திராதிபர்கள் தாம் தாம் இயற்றிவரும் பத்திரிகையின் பிரதி ஒன்றை இலவசமாய் இம்மடத்திற்கனுப்பி உதவி புரிவது உத்தமமாகும்.

**கோஹு சாஸ்திரம்:**—இப்புத்தகம் சிற்றடக்கமுள்ளதாயிருப்பினும் இதில் தெய்வ வணக்கம், ஸ்திரீ புருஷ வருண நிர்ணயம், ருதுகால பலன், விவாக சம்பந்த விதிகள், மருத்துவ சாஸ்திரம், ஸ்திரீ புருஷ மலட்டு விபரம், நபுஞ்சகத் தன்மை முதலிய எழு அத்தியாயங்களுடன் பாமரர்களுக்கும் பயனளிக்கக் கூடியதாய் அநேக உபமான உபமேயங்களுடன் ஸ்ரீஜத் கெங்கா பிரசாத் பண்டிதரவர்களால், வடமொழியிலிருந்து தென் மொழியில் வரையப்பட்டுள்ளதானது ஒரு பெருஞ் சிறப்பைத் தருகின்றது. இப்புத்தகம் தமிழறிந்த ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களிடத்தும் இருந்து பயனளிக்கத் தக்கது என்னலாம். இப் புத்தகத்தின் பிரதி ஒன்றை நம்மீ தன்புகூர்ந் தனுப்பிய பண்டிதரவர்களுக்கு நமது மனப்பூர்வமான வந்தன மளிக்கின்றோம். இதன் விலை ரூபா 3—0—0 தான். இப்புத்தகம் வேண்டியவர்கள், கொழும்பு புதிய சோனகத்தெரு, ஸ்ரீஜத் கெங்கா பிரசாத் பண்டிதரவர்களிடம் பெற்றுக் கொள்ளவும்.

---

## விடுகதை வினா.

### ஆசிரியப்பா.

இருமைகொண் டிலகு சந்திர சேகரப் பெயர்கொள்
  இப்பத்தி ராசிரியரால்
இசையுமிவ் வுலகிலுள மானவ ரெவர்க்குமிங்கு
  இனிதாயளிக்கு மியல்சேர்
ஒருமை திகழொன்பா னெழுத்தினைக் கொண்டபதம்
  ஒன்றிரண் டுயர்மழைப் பேர்
ஓதவரு மூன்றுட னிரண்டுவிண் டுவினுமம்
  உற்றவைந் தெட்டொன்பதும்
கருமைநிற முறுபறவை யாமைந்து மேழும்
  கதித்த வித்தாகுமைந்துங்
கணிகொளு மிரண்டு முற்காலத்து வள்ளலார்
  களிலொருவர் பெயர் மூன்றுடன்
அருமையுறு நான்கு சிறுதுகளாகு மாறிரண்டு
  அலைகடற் பெயராகுமால்
அன்புடன் கண்டிதற் கான விடைபகருவீர்
  அமுதகவி நாவலீரே!

---

## கணித வினா.

ஒரு பிரபுவானவர், தனது வேலைக்காரனிடம் நூறு ரூபாய் கொடுத்து பழவர்க்கங்கள் வாங்கிவரும்படி அனுப்பினர். அவன் அவ்வூர்ப்பழக்கடையடைந்து நோக்க அவ்விடத்தில் மாம்பழம், மாதுளம் பழம், கொய்யாப் பழம் ஆகிய இம் மூன்றுவிதப் பழங்களே இருந்தன. வேலைக்காரன் ஒவ்வொரு பழங்களின் விலை என்னை யென்க, பழக்காரன் ஒரு மாம்பழம் நான்கு ரூபாயாகவும்; ஒரு மாதுளம் பழம் ஒரு



ரூபாயாகவும்; ஒரு கொய்யாப் பழம் நான்கணாவாகவும்; தெரிவித்தான் உடனே வேலைக்காரன் நூறு ரூபாயையும் கொடுத்து அம்மூன்று விதப் பழங்களும் சேர்ந்து நூறு பழம் வாங்கினான். மேற்கூறிய விலைப்படி கணித்துப் பார்க்க நூறு ரூபாய்க்கும் நூறு பழத்திற்கும் சரியாய் இருந்தது. இப்படியானால் மேற்கூறிய மூன்றுவிதப் பழங்களில் ஒவ்வொரு விதத்திலும் எத்தனை பழம் வாங்கியிருப்பான் என்பதை உன் நண்பரிடம் உணர்ந்து விடை யுரைப்பாய். உயர்வுமிகு வைத்தியபோதினிப் பெயர் கொள் ஒயிலான பெண்மயிலே!

இங்ஙனம்,

மா. வே. சோணைமுத்து ஆசாரி,

மார்க்கயன்கோட்டை.

---


## ADVERTISEMENTS.



**MOTO REVE.**

$1\frac{1}{2}$—H. P. உள்ள மோடார் சையிகிள்களுக்குள் மோடோ ரீவ் தகுந்த மேன்மையுள்ளது. என்னவென்றால், இதின்கனம் பவுண்டு 78-தான். அதாவது சாதாரண மோடார்சையிகிளுடைய கனத்தில்பாதிதான் ரோட்டில் போகும்பொழுது சப்தமில்லாமலும் ஒரு காலன் எண்ணெய்க்கு சுமார் 140 மயில் போகிறதாயும், அதாவது சாதாரண வண்டிக்கு வரும் எண்ணெயில் பாதியிருந்தால் போதும். வண்டியை ஸ்டார்டு (Start) செய்கிறதில் பிரயாசம் இல்லாமலுமிருக்கிறது.

இதர விபரங்களுக்கு எழுதிக்கொள்ளவும்.

**K. S. ராஜ் & Co.,**

கும்பகோணம்.

---

**1890-வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது.**

மருந்து குணமில்லாவிடில் பணம் வாபசு.

யானைக் காலுக்கும் நீர்ச் சூலை முதலானவைகளுக்கும் டாக்டர் கோவின் கைகண்ட மருந்து. எவ்விதமான வியாதியையும் சொஸ்தம் பண்ண உத்தரவாதம். ஸர்டிபிகேட்டுகள் ஏராளம். ஒரு அவுன்ஸ் கொண்ட புட்டி 1-க்கு விலை ரூபா 2—8—0. 6-அவுன்ஸ் விலை ரூ. 12.

Apply to:—G. BROTHERS,
*No. 218, Cornwallis Street, Calcutta.*

## ரோமசங்காரி சோப்.

தேகத்தின் எந்தப்பாகத்திலும் இந்த ஸோப்பை உபயோகித்தால் யாதொரு கெடுதியுமின்றி ரோமங்களைச் சங்காரஞ்செய்துவிடும். 6-மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய கட்டி 1-க்கு விலை 6-அணா; டெஜன் ரூ. 4, வி. பி. சார்ஜ 1-முதல் 3-க்கு 4-அணா.

## ரோமப்பிசின்.

இப்பிசின் நரைத்த மயிரை இரண்டு நிமிஷத்திற்குள் பழயபடி கறுப்பாக்கிவிடும். கெடுதிசெய்யக்கூடியது ஒன்றும் இதில்கிடையாது 1-புட்டி 3-மாதத்துக்கு போதுமானது. டைரக்ஷன் மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு விலை 12-அணா; டெஜன் 1-க்கு ரூ. 8. 1-முதல் 3-புட்டிக்கு வி. பி. சார்ஜ் 4-அணா.

## கார்பாலிக் டூத்பவுடர்.

இந்த பற்பொடி, வாயிலுண்டாகும் துற்நாற்றத்தைபோக்கி பல்லைச் சேர்ந்த எல்லா வியாதிகளைப்போக்கி பற்களை கெட்டிப்படுத்தும். டின் 1-க்கு 1½-அணா டெஜன் 14-அணா 1-டெஜனுக்கு வி. பி. சார்ஜ் 4-அணா,

Apyly to Messrs—J. SUR & Co,
Patent Medecine Sellers & General order suppliers,
South Sinthee Road, P. O. (V) Cossipore, Calcutta.
**Agent, Lakshmivilasa Provident Institution Ld. Kumbakonam**



## பற்பொடியும் பவளச்சுன்னமும்.

இந்த சஞ்சீவி யெனும் பற்பொடியானது தஞ்சைமாநகரத்தில் பாம்பரையாய் கையாண்டு வந்தது. நீடித்து அனுபோகத்திற்குவாாமல் புதைபட்டிருந்தது. இது ஓர் மஹான்களால் வெளியாகி ஜனங்களுக்கு உபகாரமாகும் பொருட்டாகவும், அனுபோகத்திற்கு ஒத்திருப்பதையும் பல பேர்கள் வேண்டுகோளின்படி வெளியிடத்துணிந்தோம். ஷெ பற்பொடியை ஓர் சிட்டிகை யெடுத்து காலையிலும் மாலையிலும் பற்துலக்கி வருவதுடன் இந்த பவள புற்றினுல் செய்த சுன்னத்தையும் தாம்பூலத்துடன் 12 நாள் தரித்துக்கொண்டு வந்தால் பல்லசைவு, இரத்தம் வருதல், சீழ்வருதல், புழுவெட்டு, ஜீலிஜிலிப்பு, கூச்சம், நடுக்கம், எகிரில் ஏற்படும் துர்நாற்றம், எகிர்கரைதல். பல்லரணை முதலான நோயை கண்டிப்பாய் நீக்கி சுவஸ்தம் செய்வதோடு ஆயுள்பரியந்திரம் பல்விளாமல் காக்கச்செய்யும்.

| | | | |
|---|---|---|---|
| ஓர் அவுன்ஸ் கொண்ட பற்பொடி டப்பா 1-க்கு விலை | 0 | 6 | 0 |
| ஓர் பலம் கொண்ட சுன்ன டப்பா 1-க்கு விலை | 0 | 2 | 0 |

வி. பி. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

பி. ஸாம்பமூர்த்தி ஐய்யர்,
ஆயுள்வேத பண்டிதசாலை, அய்சடி போஸ்டு,
திண்டுக்கல் மார்க்கம்.



## புரணசந்திரோதயம்.

பிரதி ஆங்கிலமீ 15உ மதுரையில் பிரசுரமாகிவரும் தமிழ் பத்திரிகை. சந்தா வருஷம் 1-க்கு ரூ 2. தனிப்பிரதி அணா 4.

ப. நாராயண அய்யர், B.A., B.L., F. T. S.
அ. ரங்கஸாமி அய்யர், B.A., F.L., F. T. S. } பத்திராதிபர்கள்.





# ARYAN INITIATION!
OF THE
# SPIRITUAL BROTHERHOOD!!
OF THE
# INDIAN ACADEMY OF SCIENCE.!!!

Under the guidence of an Adept Master of the Brotherhood, a special Course of Lessons is now ready to initiate you into all the mysteries of LAYA and MANTRA YOGA of the Aryans giving practical methods for HINDU-HYPNOTISM, MESMERISM, TELE-PSYCHY, WILL-CULTURE, SPIRITUAL, HEALING, CLAIR-VOYANCE CALIR AUDIENCE CLAIR-SENTIENCE, SPIRIT-COMMUNATION, MEDIUMSHIP and other wonderful secrets for attracting, SUCCESS, HEALTH, SPIRITUAL POWER and Soul-Bliss, as practised by the ancient Aryan Adepts.

This Course is the first of its kind in the world and anybody knowing to READ and WRITE ENGLISH can master it and practice its teachings to a wonderful degree.

With a complete outfit and fine Diploma of Membership of the 1st degree.

Price, Rs. 10 for the first 500 enrolments. The price will be raised to Rs. 15 shortly. Persons ordering the course should send a copy of their photos along with money in ADVANCE. No V. P. System. Look sharp!

SELF-CULTURE is a Monthly Magazine and Review Issued as the official organ of the Indian Academy of Science. it is a Journal of Inspiration devoted to Mental, Moral, Psychic, and Spiritual Culture of Man.

The subjects dealtwith therein include Mental, Psychic, Spiritual and Occult Sciences: Phrenology, Physiognomy, Practical Psychology, Spiritualism, Yoga, Theosophy, New-Thought, Vedanta Philosophy and other Esoteric Cults.

A special feature of this Journal is that we issue every month series of Practical studies and Instructions for the devolopment of the latent powers of the Body, Brain, Mind, Soul and Spirit of Man; which are much appreciated by the public at-large.

The Journal is edited & published by the far-famed Author, Writer, and Thinker—Dr. K. T. Ramasami, D. SC: PH. D; C. L. D; President The Indian Academy of Science.

The Editor has secured the assistance of an able corps of Contributors from all parts of the Civilized world. The Journal is highly spoken of by the Press and the Public at large and it circulates all round the world. You want it! You will do well to subscribe for it now! The Annual Subscription is only Rs. 3; to India; Sh. 4 or Dol. 1; Foreign.

**THE INDIAN ACADEMY OF SCIENCE,**
**KIZHANATTAM, Tinnevlley, Dist. S. India.**

## இந்து சாஸ்திராபிமானி.

இத்தலைப் பெயரிட்ட புஸ்தகமொன்று அடியில் கையொப்பமிட்டவரால் இனிய செந்தமிழ் நடையில் நவீனமாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இதில் இந்துமதக் கோட்பாடுகளையும் பொது நன்மைகளையும் தழுவிப் பேசுகிற அநேக உபந்நியாசங்களும் திருவாங்கூரை அரசாக்ஷி செய்த பூர்வீக அரசர்களுடைய சரித்திரங்களும் இவர்களிடம் மந்திரி வேலையில் அமர்ந்திருந்த தேர்ந்த புத்திசாலிகளாகிய மிஸ்டர் தளவாய் ராமய்யர், ஸர். டி. மாதவராவ், ஆனரபிள், ராமய்யங்கார் முதலிய மேதாவிகளின் சரித்திரங்களும் அடங்கியிருக்கின்றன. குறித்த புஸ்தகம் விலை உயர்ந்த நல்ல கிளேஸ் கடிதத்தில் முத்துக்களைப் போன்ற அக்ஷரங்களாக பொறுக்கி யெடுத்து 8 பேஜுள்ள 16-பாரத்தில் 128 பக்கம் வரை அச்சிடப்பட்டிருப்பதுமின்றி, மதுரூஸ் லோகோபகாரி பத்திராதிப ரவர்களுடைய படமொன்று வைத்து அழகாக பைண்டு செய்யப்பட்டு மிருக்கின்றது. வேண்டுவோர் தங்கள் பெயர், ஊர், போஸ்டு முதலிய பூராவிலாசங்களையும் எனக்குத் தெளிவாக எழுதும் பக்ஷத்தில் போஸ்டேஜு உள்பட 6 அணா விலைக்கு கல்லிடைக் கும்மி ஸகிதம் வி. பி. மூலம் அனுப்புவேன்.

## ஆரியஜன போதினி.

இந்நூதனமான தமிழ்ப் புத்தகத்தில் இந்தியாவின் முற்கால தற்கால நிலைமைகளும், அக்காலங்களிலுள்ள அரசர்களின் ஆக்ஷி முறைகளும், கைத்தொழில் விஷயங்களும், பிராசீன மகரிஷிகளால் விதிக்கப்பட்டிருக்கின்ற தர்ம சூட்சுமங்களும், அந்நி பெஸாண்டு அம்மையவர்களின் அருமையான உபன்னியாசங்களும், தாதாபாய் நௌரோஜி இந்தியாவுக்கு உழைத்து வருகின்ற சிறந்த பெரும் முயற்சிகளும், அவரது சலத்திரமும், ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியின் ஸத்கிருத்ய மஹிமைகளும், விவேகானந்த ஸ்வாமிகளால் உபதேசிக்கப்பட்ட வேதாந்தத்தின் கருத்துக்களும், ஸநாதன தர்மம் நிலைத்திருக்கும் பொருட்டு கர்னல், ஆல்காட் துரையவர்களால் செய்யப்பட்டிருக்கின்ற காரியங்களும், பாஞ்சாலி யென்னும் பதிவிரதா சிரோண்மணியை மானபங்கம் செய்ய முயன்ற துச்சாஸனன் அவமானமடைந்ததும், ராஜஸூய யாகத்தில் தர்மபுத்திரருக்கும் சிசுபாலனுக்கும் நேரிட்டவாக்கு வாதங்களும் பஞ்சாப், வங்காளம், டில்லி, பாட்ணா, முதலியவைகளை யொத்த பிற விடங்களில் நவீன வியவஸாய சாஸ்திரத்தை யனுசரித்து செய்யப்படுகின்ற வியவஸாய முறைகளும், இதுபோல் இன்னும் அநேக அற்புத விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. குறித்த புஸ்தகம் விலை யுயர்ந்த கிளேஸ் பேபரில் பாரம் 8 பேஜுள்ள சைஸில் 120 பக்கங்கள் வரை நல்ல செந்தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. இது, ஸ்ரீராம, கிருஷ்ண மூர்த்திகளின் படங்கள் ஸகிதம் பிறமத தூஷணையின்றி பல மேல் விலாசங்களுடன் ஸகல மதஸ்தர்களுக்கும் பொதுவாக இயற்றப்பட்டிருக்கின்றது. இதற்கு வி. பி. சார்ச்சுடன் விலை அணா 10. ஸிலோன் முதலிய வெளிநாடுகளுக்கு ஒரு அணா ஜாஸ்தியாகச் சார்ச்சு செய்யப்படும். வேண்டுவோர் இப்பத்திரிகையின் பெயரைக்குறிப்பிட்டு எனக்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**வா. முத்துகிருஷ்ண ஐயர்,**
**இந்துசாஸ்திராபிமானி, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி ஜில்லா**



## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

6. **சுகந்த கூந்தல் தைலம்:**—இத்தைலத்தால் தலைமயிர், மீசை கண் இமை, வெகு செழிப்பாகவும், நெருக்கமாகவும், கறுப்பாகவும், வளரும். கண்களைக் குளிரச் செய்யும். சகல கண் நோய்களும், தலை நோய்களும் நீங்கும். செம்மட்டை மயிர் கறுக்கும். மயிர் உதிராமல் கார்க்கும் கண்களுக்கு பிரகாசத்தைத்தரும். விலை புட்டி 1-க்கு அணா 8 வி. பி. சிலவு 1 அல்லது இரண்டு சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

7. **நேத்திர பிந்து:**—கண்ணோய், கண்குற்றல், கூசல், நீர்வடிதல், மங்கல், அந்திமாலை, பீளைக்கட்டல், மாமிசம் வளர்ந்திருத்தல், பூ விழுந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளின் வலி, கண் புகைச்சல் இவைகளை குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும், ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும், வெகு சிறந்த ஔஷதம். மருந்து உபயோகித்தால் கண்ணாடி போடவேண்டியது அனாவசியம். சீசா 1-க்கு விலை அணா 8 வி. பி. சிலவு 1-முதல் 6-சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

8. **கர்ணபிந்து:**—காதில் சீழ் வடிதல் வலி, குத்தல், குடைச்சல், காதடைப்பு, இரைச்சல், செவிடு இவைகளை குணமாக்கும். செவி நன்றாய் கேட்கும். சீசா 1-க்கு விலை அணா 8. வி. பி. சிலவு 1-முதல் 6-சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

9. **சர்வபடை சம்ஹாரன்:**—இடுப்பு, துடையின் இடுக்கு முதலிய இடங்களில் உண்டாகி ஓயாத நமைச்சலைத்தந்து வெகு சீக்கிரத்தில் மற்ற இடங்களில் படரும் மேகப்படை, சொரி சிரங்கு, தடிப்புப் படை, தேமல் முதலியவைகளை அடியோடு குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை அணா 4. வி. பி. சிலவு 1-முதல் 6-சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

10. **பேதி மாத்திரைகள்:**—வயிற்றில் வலி, ஆயாசமில்லாமல் சுகமாய் பேதியாகும். அஜீரணம், பித்த உபத்திரவங்கள் சகல வாயு, மலச்சிக்கல், அக்கினிமாந்தம், வாதம், கைகால் முதலிய அவயவங்களின் குடைச்சல், வலி, சகல சுரங்கள் முதலியதுகளை சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு அணா 8, வி. பி. சிலவு 1-முதல் 6-சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

11. **ஜுவர சம்ஹாரி:**—தீராத நாள்பட்ட சகல சுரங்கள், குளிர் சுரம், முறை சுரம், வாத சுரம், பித்த சுரம், அஸ்தி சுரம், மலை சுரம், மார்வலி, காமாலை, பிடரிவலி, இடுப்புவலி, விலாவலி, முழங்கால்வலி, உடம்பு வெளுப்பு, மயக்கம், தாகம், இருமுறை சுரம், நாலாமுறை சுரம், முதலிய சகல சுரங்களை அடியோடு போக்கும். டப்பா 1-க்கு ரூபா 1. வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

12. **உரோம சம்ஹாரி:**—இந்த சூரணத்தை மயிருள்ள விடத்தில் தடவினால் வெகு எளிதில் மயிர் நீங்கிவிடும். சீசா 1-க்கு அணா 4. 1 முதல் 6-சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 5, பிரத்தியேகம்.

**பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.**

## பி. சுப்பறயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

13. சுகந்த பல்பொடி :—நல்ல ஜீரண சக்தியைத் தரும். பல் வலி எக்காலத்திலும் வராது. பல் எக்காலத்திலும் விழாது. சீசா 1-க்கு விலை அணா 3. வி. பி. சிலவு 1-முதல் 5-சீசாக்கள் வரையில் அணா 5-பிரத்தியேகம்.

14. ஸ்கலிதரக்ஷிணி:—பல ஹீனத்தாலும், உஷ்ணத்தினாலும், பாலியத்தில் சிற்றின்பத்தில் நுழைந்து மூழ்கியிருந்த காரணத்தாலும், தூக்கத்திலும், சொப்பனத்திலும், இந்திரியம் தானாக வெளிப்படுவதை நிற்பாட்டி, தேக திடத்தைத் தரும். சீசா 1-க்கு அணா 8. வி. பி. சிலவு 1-முதல் 6-சீசாக்கள் வரையிலும் அணா 5, பிரத்தியேகம்.

உயர்ந்த கஸ்தூரி:—மிகவும் நேர்த்தியானதும், முதல்தரமானதும் காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி நம்மிடத்தில் எப்பொழுதும் கிடைக்கும். தோலா 1-க்கு ரூபா 48. 1-ரூபாய்க்கு குறையாமல் சில்லரையிலும் விற்கப்படும். வி. பி. சிலவு பிரத்தியேகம்.

16. தேள்கொட்டின் மருந்து :—இம்மருந்தை விஷம் தீண்டிய இடத்தில் தடவினால் தக்ஷணமே விஷமிறங்கி, வருத்தப்பட்டு சகிக்க முடியாத வேதனையில் நின்று நீங்கி யாவரும் ஆச்சரியப்படத்தக்க விதமாய் ஆனந்திக்கும்படியான அனுகூலத்தைத்தரும். கிரயம் சீசா 1-க்கு அணா 4. இந்தியாவிலும் பர்மாவிலும் 1-முதல் 12-சீசாக்கள் வரையிலும் வி. பி. சிலவு அணா 5, பிரத்தியேகம்.

முக்கிய குறிப்பு:—ஒரே தடவையில் 12 சீசா தேள்கொட்டின் மருந்துக்குக் குறையாமல் வாங்கினால் டஜன் 1-க்கு 2—8—0 வீதம் கொடுக்கப்படும். வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம். இக்குறிப்பு தேள் மருந்து தவிர மற்றெந்த மருந்திற்கும் சம்மந்தப்படமாட்டாது.

17. மேகரண மருந்து:—இதை வெள்ளைத்துணியில்தடவி ரணங்களின் மேல் போட, அரையாப்பு, கண்டமாலை, விப்புருதி, தொடைவாழை, செவ்வாப்பு, ஆசனப் பவுத்திரம், அழுகுளியன், பிளவை, கிரந்தி, மேக வெடிப்பு, இலிங்கபுற்று, யோனிப்புற்று முதலிய இரணங்கள் ஆறி சொஸ்தமாகும். விலை சீசா 1-க்கு அணா 8, இந்தியாவிலும் பர்மாவிலும் 1-முதல் 3-சீசாக்கள் வரை வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

18. கண்ட சுத்தி மாத்திரைகள் :—டைரக்ஷனில் சொல்லியபடி இதை சாப்பிட்டுவந்தால் தொண்டை கட்டு, தொண்டை கம்மலை நீக்குவதன்னியில், இன்பமாய் பாடுவதற்கு இசைந்த குரலைத் தரும். சங்கீத வித்வான்களுக்கும், பிரசங்கஞ் செய்யப்பட்டவர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் இது ஓர் அருமையான ஔஷதம். எத்தனை நேரம் பாடினாலும், பிரசங்கித்தாலும் குரல் கம்மாது. இனிமையான ஓசையைத் தரும். கிரயம் சீசா 1-க்கு அணா 8. இந்தியாவிலும், பர்மாவிலும் 1-முதல் 6 சீசாக்கள் வரையில் பாக்கிங்கு தபால் முதலிய சிலவு அணா 5 பிரத்தியேகம்.

பி. சுப்பறய், பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
11 APR 1911
MADRAS.

# வைத்திய போதினி.

சித்திரப்படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

புத். 2. 1911-ஹு ஏப்ரல்மீ 1உ நெ. 4.

## பத்திராதிபர் குறிப்பு.

நமது பிரிய சந்தாநேயர்களே!

நமது பத்திரிகை சென்றவருஷம் மேமாதம் ஆரம்பமாகி இறைவன் திருவருளாலும், உங்கள் அனைவருடைய ஆதரணையினாலும், ஹானரபில் திவான்பகதூர் ஸ்ரீமத் R. இரகுநாதராவ், C. S. I. அவர்களுடையவும், போஸ்டல் சூப்பிரின்டெண்டெண்ட் மிஸ்டர் K. அமுர்தலிங்கம்பிள்ளை அவர்களுடைய அபிமானத்தினாலும், அண்டினார்க்காக்கும் அருண்மிக்குடையரும், என்னுள்ளிடங்காணு அன்பிற்குரியரும் வரையாதளிக்கும் வள்ளலுமாகிய திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ, அம்பலவாணதேசிக பண்டார சன்னதியவர்களின் உபகாரத்தாலும், நாளது ஏப்ரல் மாதத்தோடு நமது பத்திரிகைக்குமுதலாவது வருஷம்முடிவாகிவிட்டது, இந்த ஒருவருஷகாலமாக நமக்கிருக்கும் பலவித அலுவல்களுடன் பத்திரிகையையும் பிரதி மாதமும் வெளியாக்கி நமது பத்திரிகாபிமானிகளுடைய பட்சத்திற்குப் பாத்திரமானோம்.

இப்பத்திரிகையை பார்த்தவர்களுக்கு இதன் வருஷ சந்தாவாகிய ரூபாய் ஒன்று மிக்கசொற்பமென்பது கரதலாமலகம் போல் விளங்கும். மேலும் பத்திரிகையை நடத்துவதின் கஷ்டமும், அதனாலேற்படும் சிரமமும், சிலவும் எம்போலொத்த பத்திராதிபர்களே அறிவர். இவ்வித கஷ்ட நஷ்டங்களுக்கெல்லாம் காரணம் சில போலிப்பத்திரிகாபிமானிகளே! இவர்கள் பத்திரிகையை இலவசமாய் அனுப்புந்தோறும் பெற்றுக்கொள்வதும், V.P.யில் அனுப்பும்போது அப்பொழுதேதிருப்பி விட்டுவிடுவதுமேயாம். இப்பூவுலகில் 1,45,00,000 தமிழ்மக்களிருந்தும் இவர்களுக்குள் பெரும்பாலார்க்கு படிப்பும் பத்திரிகாபிமானமுமின்மையால் எத்தனையோ தமிழ்பத்திரிகைகள் தினேதினே தோன்றுவதும், கிருஷ்ணபக்ஷத்து சந்திரன்போல் மங்குவதுமாய் இருக்கிறது. மேல்நாட்டினர்களுக்கிருக்கும் பத்திரிகாபிமானத்தைப்போல் பாரதநாட்டிலும் பத்திரிகாபிமானம் உண்டாகும் காலம் என்று வருமோ! இதை ஈசனேயன்றி எவரறிவர்.

நமது பத்திரிகாபிமானிகள் ஒவ்வொருவரும், தங்கள் தங்கள் இஷ்டமித்திரர்களுக்கும் இப்பத்திரிகையைக்காட்டி அவர்களையும் கையொப்பம் செய்யும்படி செய்யவேணுமாய் நம்பத்திரிகையின் மூலமாய் பன்முறைவேண்டியும், நம்பத்திரிகாபிமானிகளில் அநேகர் அங்ஙனம் செய்ய முற்படாதிருப்பதும் நம்பத்திரிகையின் துர் அதிஷ்டமேயன்றி வேறல்ல! நம்பத்திரிகாபிவிருத்தியைக் கருதியவரும், நமது உத்தம நண்பர்களில் ஒருவருமான இலங்கையிலுள்ள மிஸ்டர் J. ஜான் அவர்கள் தமக்கிருக்கும் அபார அலுவல்களுடன், நம்பத்திரிகை அபிவிருத்தியடையவேண்டி தமது அருமை மித்திரர்களையும் கையொப்பக்காரர்களாக சேர்த்து உதவினதற்காக அன்னவர்க்கு தீர்க்க ஆயுளும், திடசரீரமும் தந்தருளும்படி எல்லாம் வல்ல இறைவனை எமது முழுமனதுடன் போற்றுகிறோம். இது போலவே நமது பத்திரிகாபிமானிகளாகிய, **ஜோகன்ஸ்பார்க்கிலிருக்கும் மிஸ்டர் V. நாறயணசாமி படையாக்ஷியவர்களுக்கும், நாஸாத் ஸெத்லூக்ஸ் ஆஸ்பிட்டல் கம்பவுண்டராகிய மிஸ்டர் E. V. பொன்னுசாமி பிள்ளையவர்களுக்கும்** நமது மனப்பூர்வமான வந்தனமளிக்கின்றோம்.

சென்ற ஒரு வருஷகாலமாக நமது பத்திரிகைக்கு மாற்று பத்திரிகைகளாக அனுப்பிவந்த, பத்திராதிபர்கள் எல்லோருக்கும் நமது மனப்பூரணமான நன்றிசெலுத்துகிறோம். உள்ளூரிலும் அயலூரிலுமுள்ள சிலசந்தாநேயர்கள், தாம் கொடுக்கவேண்டிய சொற்ப சந்தாவாகிய ஒரு ரூபாயையும் இவ்வளவு காலமாக கொடுத்தாதரிக்காதது மிகவும் விசனிக்கத்தக்கது. பாக்கி வைத்துக்கொண்டிருக்கும் நேயர்கள் இனிமேலும் காலதாமதம்செய்யாது தாங்கள் கொடுக்கவேண்டிய சந்தா தொகையை விரைவில் அனுப்பி உதவிபுரிவார்களென்று எதிர்ப்பார்க்கிறோம்.

நமது சந்தா நேயர்களனைவருக்கும் அறிவிப்பதென்னவென்றால் நாளது எப்பிரல் மாதத்தோடு நமது பத்திரிகைக்கு முதலாவது ஆண்டு முடிவாகி இரண்டாவது வயது ஆரம்பமாவதால் அடுத்த மே மாதத்திய பத்திரிகையை வி. பி. யிலனுப்புவோம். நாலைந்து மாதங்களுக்கு முன் சந்தாதாரர்களாகச் சேர்ந்தவர்களுக்கும், முதலாவது சஞ்சிகையிலிருந்து அனுப்பி வந்திருக்கிறோமாதலால் அவர்களுக்கும் அடுத்த மேமாதத்திய பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவோம். மூன்று நான்கு மாதங்களுக்குமுன் தானே பணம் கட்டினோமென்று, வி. பி. யைத்திருப்பிவிடாமல் பெற்றுக்கொள்ளும்படி பிரார்த்திக்கிறோம். பத்திரிகைபெற அபிப்பிராயமில்லாதவர்கள், தயவு செய்து உடனே தெரிவித்துவிடுதல் நலமாகும். பத்திரிகாநேயர்கள் ஒவ்வொருவரும் சமூகம் நாடிவரும் பாலபருவமுடைய நமது பத்திரிகையின் ஒருவருஷ சந்தாவாகிய ஒரு ரூபாயையும் செலுத்தி பத்திரிகையை ஆதரிப்பதுடன் தங்கள் தங்கள் மித்திரர்களையும் பாலப்பருவமுடைய நம்பத்திரிகைக்கு கையொப்பம் செய்யும்படி செய்யவேணுமாய் மிகவும் வினயமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS. REGISTERED 11 APR 1911 MADRAS.

# THE OPEN-AIR SCHOOL

## வெளியிடத்திற் பாடசாலை.

லண்டன் நகரத்துப் பாடசாலைகளின் சிறப்பை பலமுறை கேட்டிருப்பீர்கள். இப்போது இங்கு விவரிக்கும் பாடசாலை வெகு நூதனமானது. இதன் விஷயத்தை உபாத்தியாயர்களும், வித்தியாதிகாரிகளும் கவனிப்பார்கள் என்று நம்புகின்றோம்.

லண்டன் நகரத்திற்குத் தென்புறத்தில் ஒரு காடு உண்டு. அங்குள்ள ஒரு குன்றின்மீது ஒரு பாடசாலை ஏற்பட்டிருக்கின்றது. அதற்கு வெளியிடத்துப் பாடசாலை (The Open-Air School) என்று பெயர். இந்தப் பாடசாலையின் முன்புறத்தில் ஒரு சிறிய தோட்டமும், பின்புறத்தில் மிகப் பெரிய தோட்டமும் உண்டு. நாட்டில் உள்ள பிள்ளைகளுக்குக் காட்டில் உள்ள பாடசாலை என்ன பயனைத்தரும் என்றுபெரும்பாலோர் எண்ண இடமுண்டு. அதன் உபயோகத்தைக் கேட்டால் அதிக ஆச்சரியப்படுவீர்கள் என்பதில் சற்றும் ஐயமில்லை.

இப்பாடசாலை நோயாளிகளாய்மெலிந்துள்ள பிள்ளைகளுக்கென்றே ஏற்பட்டதாம். இதில் வாசிக்கும் பிள்ளைகள் க்ஷயம், காசம், இரைப்பு முதலிய நோய்களால் பீடிக்கப்படுகிறவர்களாம். மனோபலம் அதிகமில்லாமலிருக்கும் பிள்ளைகளும் இதில் சேர இடமுண்டாம். இப்படிப்பட்ட பிள்ளைகள் இந்த பாடசாலையில் எப்படிச் சேருகின்றார்கள்— லண்டன்நகரத்தில் அநேக எலிமெண்டரிப் பாடசாலைகள் உண்டல்லவா? அப்பாடசாலைகளில் உள்ள நோயாளிகளான பிள்ளைகளை அப்பாடசாலையின் தலைமை உபாத்தியாயர்கள் தேர்ந்து அனுப்புகிறார்கள். வைத்தியர்களும் இத்தகைய பிள்ளைகளைத்தேர்ந்து அனுப்புவதுண்டாம். அதனால் பட்டணத்தின் பல இடக்களிலிருந்தும் பிள்ளைகள் அங்கு வருவார்கள் என்று ஏற்படுகின்றது. நமது நாட்டிலும் இரைப்பு முதலிய நோய்களை அடைந்தோர் சிலர் சீதோஷ்ணஸ்திதிக்குத் தக்கபடி வேறு வேறு இடங்களுக்குச் செல்வதனால் அந்நோய்களால் அதிக உபத்திரவப்படாமல் இருக்கிறார்கள் அல்லவா? இவ்வகைய உதவியை அப்பாடசாலை, நோயாளிகளான அப்பிள்ளைகளுக்குச் செய்கின்றது.

இப்பாடசாலையை எப்பிரல்மீ முதல் அக்டோபர்மீ வரையில் அங்கு ஏற்படுத்துகின்றனர். தினந்தோறும் காலை 9–30 மணிமுதல் 12–30 மணி வரையிலும், மாலை 3–30 மணிமுதல் 5–30 மணிவரையி

லும் பாடசாலை உண்டு. இப்போது அப்பாடசாலையில் 90 பிள்ளைகள் வாசிக்கிறார்களாம். அவர்கள் அனைவரும் அதிக ஏழைப் பிள்ளைகள். அவர்கள் முதலில் பாடசாலைக்கு வரும்போது அதிகமும் இளைத்து நோயினால் மெலிந்து, உண்ணவுணவுக்கும் உடுக்க உடைக்கும் வழியின்றி வந்து சேர்வார்களாம். சிலர் மேஜோடுமின்றிப் பரிதாபக் கோலத்தோடு இருப்பார்களாம். இவர்களுக்கெல்லாம் இப்பாடசாலை எவ்வளவு நன்மை செய்கிறதென்பதைக் கவனியுங்கள்.

பிள்ளைகளெல்லாம் 9-மணிக்கே பாடசாலைக்கு வரவேண்டும். வந்ததே பாடசாலையில் காலைபோஜனம் செய்கிறார்கள். பிறகு 9–30 மணிக்கு கல்வி கற்க ஆரம்பிக்கிறார்கள். கையில் புஸ்தகம் என்பது கிடையாது. எல்லாம் இயற்கைப் பொருள்களைக் கண்டு கற்கும் கல்வியே. 'பூமியே புஸ்தகம்—புந்தியே போதகன்' என்னும் மூதுரை இவர்களுக்கே பொருந்தியது என்னலாம். உபாத்தியாயர் பிள்ளைகளை வெளியிடத்தில் கொண்டுவந்து இயற்கைப் பொருள்களைக் காட்டிப் போதிக்கிறார். அப்போது அவர் தம் எதிரில் படும் பக்ஷி, மிருகம் முதலிய ஜந்துக்களைப்பற்றி இனிமையுறப் போதிப்பார். அது பிள்ளைகளுக்கு அத்யந்த சந்தோஷத்தை உண்டாக்கும் என்பதில் ஓர் ஐயப்பாடும் உண்டோ!

பிள்ளைகள் அனைவரும் தம் கண்ணையும் கையையும் கருத்தையும் உபயோகித்துக் கற்கும் கல்வியேயன்றி, புஸ்தகத்தைப் படித்துக் குருட்டுப் பாடஞ் செய்வது சிறிதும் இல்லை. அங்குள்ள செடிகளை எண்ணுவதாலும், அளவிடுவதாலும், தாங்கள் பயிரிடும் தானியங்களை அளப்பதாலும், காய்கனிகளை நிறுப்பதாலும் அவர்கள் கணிதத்தில் வல்லவர்களாகின்றார்கள். இயற்கைப் பொருள்களைப் பார்த்துச் சித்திரம் எழுதுவதும், களிமண் முதலியவற்றால் உருக்கள் செய்வதும் அப்பிள்ளைகளுக்கு எவ்வளவு உள்ளக் கிளர்ச்சியை யுண்டாக்கும்!

சரித்திரம், பூகோளம் முதலிய பாடங்களுக்கும் புஸ்தகங்கள் உபயோகிப்பதில்லை. சென்ற வருஷத்தில் அவர்கள் சரித்திரம் பூகோளம் ஆகிய பாடங்களுக்காக அவர்கள் செய்த தொழில்களில் சிலவற்றைக் கேளுங்கள். சரித்திர சம்பந்தமாய் சிறுசிறு குடிசைகள் கட்டினார்களாம். அதில் லண்டன் நகரத்துப் பூர்வ குடிகள் வசித்தமாதிரியாய் எல்லாம் அமைத்துவைத்தார்களாம். பிறகு ரஷியருக்கும் ஜப்பானியருக்கும் நடந்த யுத்தத்திற்காக யுத்தகளத்தில் கட்டுவதுபோல் வைத்திய சாலைகள் கட்டினார்களாம். இவைபோல் இன்னும் பல, பூகோள சம்



பந்தமாய் பூமியிலேயே பெரிய படங்கள் வரைந்து ஆங்காங்கு உண்டாகும் பொருள்களைப் பயிரிட்டார்கள். அப்படங்களில் நமது இந்தியாவையும் செய்தார்களாம். பெரிய இமயமலையைக் காட்டி அங்கு பயிராகும் பொருள்களையும் பயிரிட்டிருந்தார்கள். இவர்கள் முன்னுக்கு வருவார்களா! காகிதப் படந்தானும் இல்லாமல் புஸ்தகத்தைக் கரைத்துக் குடித்து உருப்போடும் நமது பிள்ளைகள் முன்னுக்கு வருவார்களா!

பிள்ளைகள் தாங்களே நிலத்தைப் பண்படுத்தி விதைத்து அதது வளரும் தன்மையைக் கண்டு புத்தகத்தில் பதிவு செய்வார்கள். ஒரோவொருகாலத்துப் பாடசாலைக்குள் பாடம் நடந்தாலும் அது பிள்ளைகள் கண்ணாரக்கண்டு கையாறச் செய்த விஷயமாக இருக்குமேயன்றி மற்றொன்றுமிராது.

இந்தப் பாடசாலையின் தலைமை உபாத்தியாயராகிய மிஸ்டர் கிரீன் என்பவர் சிறந்த பாலபோத ஆசிரியர். அவர் தம் பிள்ளைகளைக்கொண்டு ஒருவகைச் செடியை ஓர் இடத்தில் அடர்த்தியாக விதைக்கச் சொன்னார் அவர்கள் அப்படியே செய்தார்கள். செடி அடர்த்தியாய் முளைத்தது. ஆனால் செழிப்பாய் வளரவில்லை. பிறகு அவர் அந்தச் செடிகளைப் பிடுங்கி வெவ்வேறு இடங்களில் நடச்செய்தார். சில நாட்களில் அச்செடிகளில் ஒவ்வொன்றும் செழித்து வளர்ந்ததாம். அவர் அதைப் பிள்ளைகளுக்குக் காட்டி அரிய விஷயம் ஒன்று போதித்தார். பிள்ளைகளே! இந்தச் செடிகள் அடர்த்தியாய் இருந்தபோது நன்றாய் வளரவில்லை, தூரத்திற் சென்றபிறகு செழித்து வளர்ந்தன. அது போலவே மனிதரும் ஒரே இடத்தில் கும்பல் கூடிக்கொண்டிருந்தால் விருத்தியாகமாட்டார்கள். புதுப்புது இடங்களுக்குப் போய் புதுப் புது விஷயங்களைக்கண்டு உழைத்தால் செழித்து வாழக்கூடும் என்றார். ஆசிரிய நண்பர்காள்! இதனால் அப்பிள்ளைகளுக்கு எத்தகைய உணர்ச்சி உண்டாகும் என்று ஊகித்துப் பாருங்கள்.

இது நிற்க, இவ்வருஷத்தில் ஒருகாரியம் செய்கிறார்கள். உபாத்தியாயர் ஐந்துகாணி சதுரம் ஒன்று பிள்ளைகளுக்குக் கொடுத்து, பிள்ளைகளே! இந்த நிலம் புதிதாகக் கண்டுபிடித்த ஒரு தேசமாக எண்ணிக் கொள்ளுங்கள். நீங்கள் எல்லோரும் அந்த தேசத்தில் குடியேறினால் என்னென்ன செய்வீர்களோ அவற்றைச் செய்யுங்கள் என்று உத்திரவு அளித்திருக்கின்றார். இதுவேயன்றி கூர்ந்த மதியுள்ள, அவ்வுபாத்தியாயர், பிள்ளைகள் அறியாவண்ணம் அந்த நிலத்தில் ஆங்காங்கு இரும்பு நிலக்கரி முதலிய உலோகங்களைப் புதைத்து வைத்திருக்கின்றார்.

பிள்ளைகள் அவற்றைக் கண்டு பிடிக்கிறார்களா—கண்டுபிடித்தால் என்ன செய்கிறார்கள்—என்று தெரிந்துகொள்வதற்கன்றோ இப்படிச் செய்திருப்பார்.

பிள்ளைகள் படிப்பு முடிந்து தம் வீட்டிற்குப் போகும்போது நோயற்றவர்களாய் மிகவும் சௌக்கியத்துடன் போவார்கள். வரும்போது அவர்களைக்கண்டவர்கள், போகும்போது கண்டால், அடையாளமே தெரியாதாம். மனோ பலமும் தேக பலமும் அடைந்திருப்பார்கள். வேளை தப்பாத உணவும் சுத்த ஆகாயமும் மனோற்சாகமும் அவர்களை அப்படி மாற்றிவருகின்றன. ஒவ்வொரு நாளும் அவர்களுக்கு களிப்பையுண்டாக்கக்கூடிய பலவித விளையாட்டுகளும் கற்பிப்பதால், அவர்கட்கு அளவிறந்த சந்தோஷமுண்டாகின்றது. குற்றம்செய்த பிள்ளைகளுக்கு அவ்வுபாத்தியாயர் கொடுக்கும் தண்டனை யென்ன—அப்பிள்ளைகளுக்கு அன்று பாடசாலையில் ஒரு வேலையும் கொடுப்பதில்லை. இதுவே அவர்களுக்கு பெருந் தண்டனையாம். இந்தப் பிள்ளைகள் காட்டை விரும்புவார்களா—வீட்டை விரும்புவார்களா எண்ணிப்பாருங்கள்.

காருண்யம் நிறைந்த நமது கவர்ன்மெண்டார் இத்தகைய பாடசாலைகளை நமது நாட்டிலும் ஏற்படுத்துவார்களாயின் நாம் பெறவேண்டிய பேறு வேறு யாது. ஒவ்வொரு ஜில்லாவிலும் சுகாநுகூலத்திற்கு ஏற்ற ஓர் இடத்தில் ஒவ்வொரு பாடசாலை ஏற்படுத்தி அந்த ஜில்லாவிலுள்ள ஏழைப் பிள்ளைகளை ஆதரிப்பார்களாயின் எவ்வளவு நன்றாயிருக்கும். வித்தியாதிகாரிகள் பாடசாலையில் பரீக்ஷிக்கும்போது அப் பாடசாலைகளுக்கு ஏற்ற பிள்ளைகளைத் தேர்ந்தனுப்புதல் கூடும். எலிமெண்டரி வித்தை விஷயமாய் எவ்வளவோ செலவிட்டு எவ்வளவோ முயற்சி செய்துவரும் துரைத்தனத்தார் இதுவிஷயமாய் கவனிப்பார்கள் என்று நம்புகிறோம். (நல்லாசிரியன்.)

---

## சினம். ANGER.

'ஆறுவது சினம்' என்றாள் ஔவை. இதில் 'தணிக்கத் தகுந்தவைகளுள் முக்கியமானது கோபம்; அது தணிய மற்றையக் குற்றங்கள் தாமே அடங்கும்' என்றபொருள் மறைந்து கிடக்கும்படி கூறியிருக்கிறாள். கோபமே ஸகல பாபங்களுக்கும் காரணமாகும். கோபத்தால் மனம் சஞ்சலப்பட்டுக் கலங்குங் காலத்தில் மனிதன் புத்தி மழுங்கிப்போக அவனுக்குப் பாபபுண்யப் பகுத்தறிவு இல்லாமல் போய்விடுகிறது. அப்பொழுது முன்பின் யோசிக்காது, பின்னர் யோசிக்



குங்கால் மிகுந்த துக்கத்தை உண்டாக்கக்கூடிய தொழில்களை அவன் செய்துவிடுவான். இதுபற்றியே, 'கோபம் சண்டாளம்' என்னப்பட்டது. ஆதலால் ஒருவனுக்குவரும் முன்கோபத்தை அவன் முதலில் அவசியம் அடக்கவேண்டும். கோபம் வருங்கால் அடக்கி ஒன்றும் செய்யாதிருக்கும் பழக்கத்தை ஒருவன் பண்ணிவந்தால் வர வர கோபத்தின் குணங்களும் அதுவரும் தருணங்களும் அவனுக்கு வெளியாகி அதை அடக்கும் முயற்சிகளை அவன் நன்றாகச் செய்யும்படி நேரிடும்.

மனதில் இருக்கும் எண்ணங்கள் மாறினால் தான் ஒழுக்கமும் மாறும். ஒழுக்கத்தை மாற்றினால் மாத்திரம் மனம் மாறிவிடும் என்றெண்ணுவது, பாம்புப்புற்றை அடித்துத் தள்ளிவிட்டவுடன் பாம்பை அடித்தாகிவிட்டது என்று எண்ணுவதற்கு ஸமம். ஆதலால் கோபத்தை முற்றிலும் தணிக்க முற்கூறிய பிரதம கோபநிவாரணமாகிய நல்லொழுக்கம் மாத்திரம் போதாது. நமது மனதில் கோபத்தைத் தடுப்பதற்கு வேண்டிய எண்ணங்கள் நிறையும்படி செய்யவேண்டும்.

வித்யாரண்ய ஸ்வாமிகள் ஜீவன் முக்திப் பிரகரணத்தில் கோபத்தை வேரறுப்பதற்காகப் பின்வருமாறு முமுக்ஷுவுக்குப் புத்திமதி கூறுகிறார். "கோபம் வருவதற்குமுன் ஒருவன் 'மனமே! உனக்குத் தீமை விளைப்பவர்களிடம் கோபம் வருவதானால், உனக்குப் பெருங் கேடுவிளைக்கும் சினத்தினிடம் ஏன் கோபம் வருவதேயில்லை? கோபத்தால் அறம், பொருள், இன்பம், வீடு என்ற புருஷார்த்தங்கள் கைகூடாமல் போய்விட நரகமே ஸித்திக்கும். ஆதலால் கோபத்தைப் போல நமக்கு விரோதி ஒருவரும் இல்லை' என்று அடிக்கடி மனனம் செய்து கோபத்தின்மேல் கோபங் கொள்ள வேண்டும். கோபமானது திட்டு, அடி முதலியவைகள் ரூபமாக வெளிவந்து விட்டால் ஒருவனது தர்மம், கீர்த்தி முதலியவைகளைக் கெடுத்துவிடும். இவ்வாறு வர இடமில்லாது தடைபட்டால் அவன் மனதையாவது கஷ்டப்படுத்தாமல் போகாது. ஆதலால் அறிவுடையோர் சினத்திற்கு ஒருநாளும் இடம் கொடுக்கவே மாட்டார்கள், என்று இம்மாதிரி எண்ணினால் பிறரிடம் நமக்குவரும் கோபம் அடங்க முத்திவழி திறந்திடும். பிறர் நம்மேல் கோபித்துக் கொள்ளுங்கால் 'யான் நிரபராதியாக விருக்க என்மேல் அவன் ஏன் வீணாகக் கோபிக்கவேண்டும்?' என்று எண்ணிக் கோபம் கொள்ளாது பின்வருமாறு யோசிக்கவேண்டும்: 'நாமோ தேஹஸம்பந்தம் நீங்கி எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு எங்கும் நிறைந்த பரம்பொருளையுணரவில்லை. இவ்வாறு செய்தால் தான் நாம் நிரபராதியாவோம். அதுவரையில் நம்மை அறியாது செய்கையாலாவது செய்யாமையாலா

வது கோபிப்பவனுக்கு அபராதம் செய்திருப்போம்' என்றும் 'கோபிப்பவர்கள் நமக்கு பரம உபகாரிகள்; அவர்கள் நமது குற்றங்களை உள்ளபடி ஒளிக்காது எடுத்துக்காட்டி நமக்கு வைராக்யம் வரும்படிசெய்கிறார்கள். மேலும் இவ்வாறு செய்வதில் அவர்கள் தமக்குக் கோபத்தால் விளையும் மனக்கஷ்டத்தைக்கூடக் கவனியாது நமக்கு இந்தப்பேருதவி புரிகின்றனரல்லவா?' என்றும் எண்ணி வெகுநாள் பழக்கத்தின்பேரில் இவ்வித கோபத்தின் வேரை அறுக்கவேண்டும்.

இம்மாதிரி பழகி மனம் சுத்தப்பட்டால் முன்னர் கூறியுள்ள ஸந்மார்க்கஸாதனங்கள் ஒருவன் மனதில் வேரூன்றி நிலைபெறும். (வி, போ)

---

[மார்ச்சு மாதத்திய வைத்தியபோதினி 58-ம் பக்கத் தொடர்ச்சி]

## சுகாதார மார்க்கங்கள்.

### சுத்தமான காற்றைச்சுவாசி.

"காற்று ஜீவனுக் காதாரமானது. ஜீவன் தோன்றின போது அதோடு தோன்றி, அது மாயும்போது அதோடுமாய்வதும் காற்றுதான். இந்தக் காற்று அல்லது பிராணாதாரவாயு சிறந்த பண்டிதர்கள் கணித்திருக்கிறபடி அறுபதுகோடி சிறு ரந்திரங்களுள்ள நுரையீரல் வழியாய் மனிதனுடைய இரத்தத்துக்குள் பிராணவாயுவைப் பாய்ச்சுகிறது. அப்படிப் பாய்ச்சப்படும் பிராண வாயு தேகத்திலுள்ள அசுத்தங்களோடு கலந்து துர்வாயுவாக வெளிப்படும். அந்த வாயு நாம் வசிக்கும் வீடுகளிலும், இருட்டு அறைகளிலும், கழிவு பதார்த்தங்கள் சேருமிடங்களிலும், பள்ளங்களிலும் தங்கியிருக்கும். அந்தத் துர்வாயுவை மீண்டும் உட்கொள்ளக்கூடாது. மனுஷன் உட்கொள்ளும்படியான பிராணவாயுவிலும், அவன் வெளிவிடுவதான துர்வாயு அதிக கனமுள்ளது. ஆனதாலது இப்படிப்பட்ட இடங்களில் தங்கிவிடுகிறது. அதை நீக்கும்படி குப்பைக் கூளங்களை வீட்டில் சேர்த்துவைக்கத் தகாது. வசிக்கிற ஒவ்வொரு அறையிலும் சூரியவெளிச்சம் பிரவேசிக்கவேண்டும். மனுஷன் வெளிவிடும் துர்வாயு செடிமரங்களுக்கு ஆகாரமாயிருப்பதால், கூடுமானால் இத்துர்வாயுவைப் போக்கச் செடிகளை வைத்து வளர்ப்பதுத்தமம்."

"நீ வசிக்கும் வீட்டில் உன்னைச்சூழத் தரையில் அசுத்தவாயு இருக்கிறதென்றும் நினைத்துக்கொள். அதனால் தரையைச் சுத்தமாய்ப் பெருக்கிச் சூரிய வெளிச்சத்தால் தலைமேலிருக்கும் சுத்த ஆகாயம் வீடெங்கும் பரவச்செய்."



"ஒவ்வொருவனுக்கும் ஒரு நாளொன்றுக்கு இரண்டாயிரம் மரக்கால் சுத்த ஆகாயம் வேண்டியது. அவனவன் சாப்பிடும் சாப்பாட்டையும் ஜலத்தையும் விட மும்மடங்கு சுத்த ஆகாயம் வேண்டும். ஆகையால் சுத்த ஆகாயம் விசேஷமாய் நிறைந்திருக்கக்கூடிய தோட்டங்களுக்கும், சமுத்திர தீரங்களுக்கும், வயல் வெளிகளுக்கும் போயுலாவி வரவேண்டும். எப்போதும் ஜன நெருக்கமான இடத்திலேயே இருப்பது சுகத்துக்குக்கேடு."

"வெளி ஆகாயங்களில் உலாவலோடு, தேகாப்பியாசமு மிருக்க வேண்டும். தேகாப்பியாசத்தின்போது பலமாய் மூச்சு வாங்குகிறபடியால் மனுஷனுக்கு அதிக சுகமுண்டு. சுவாசிக்கும்போது பலமாய்ச் சுவாசிக்க வேண்டும். சுவாசிக்குந் தோறும் இரத்தம் சுத்தமாகிறது. இரத்தம் ஜீவனுக்காதாரம்."

"வெளிகளில் பிரயாணஞ் செய்வதும், படுத்துறங்குவதும் சுகத்துக்கேதுவானது. வனசஞ்சாரிகளுக்குத் தலைநோய், அஜீரணம், வாத நோய், காண்கிறதில்லை யென்பது ஆயுள்வேதியரின் கொள்கை."

"படுக்கையறை எப்போதும் வீட்டிற்குத் தென்பாகத்திலிருக்க வேண்டும், படுக்கையறையில் சூரிய வெளிச்சம் புகவேண்டும். கூடுமானால் படுக்கையறையில் சில பூச்செடிகளை வைத்துக் கொள்ளுவதுத்தமம். படுக்கையறையில் விளக்கை எரியவிடாதே. அது பிராணவாயுவை பக்ஷித்துப் போடுவதோடு துர் வாயுவையும் பிறப்பிக்கும். வியாதியுள்ளோர் படுக்கை யறையிலும் விளக்கிருக்கக்கூடாது. விளக்கெரிதல் சுகமான தூக்கத்தையும் கெடுக்கும்."

"இரவில் வீட்டின் ஜன்னல்களைச் சாத்துதல் பிசகு ஜனநெருக்கமான பட்டணங்களில் விசேஷமாய் இரவில் வீசும்காற்றுதான் சுகத்துக்கேதுவானது. படுக்கையறை எப்போதும் சூடாகவேயிருக்க வேண்டும். குளிர்ந்த காற்று சிலபோது அசுத்த காற்றாயிருக்கும். ஆகையால் படுக்கையறை அதிக குளிர்ச்சியும் அதிக சூடுமில்லாதிருக்க வேண்டும். காற்றுமுழுவது முலாவவேண்டும்."

"படுக்கும்போது தலையை வடக்குப்பாரிசமாய் வைத்துத்தூங்கு. வடக்கில் காந்தமிருக்கிறது. மனிததேகமும் காந்தத்தை யொத்ததானதால் வடக்குத் தெற்காகவே யிருக்கவேண்டும். உலகத்தில் சிலபாகத்தாருக்குக் காந்தவூசி மாறிநிற்கும். ஆனால் ஆசியாகண்டத்தவர்களுக்கும், ஆங்கிலேயருக்கும் வடக்குப்புறமாகவே நிற்பதால் வடக்குப்புறம் தலையைவைக்கவேண்டும். வாயைந்திறந்துகொண்டு தூங்காதே."

"தூக்கத்துக்கு இரவையும். வேலைக்குப்பகலையும் கடவுள் கொடுத்திருக்கிறபடியால் இரவைப்பகலாக்கி வேலைசெய்யாதே. அர்த்தசாமமட்டும் விழித்திராதே, இரவில் கண்விழித்துப் பகலில் உறங்குவது வியாதியை உண்டாக்கும். அதிக தூக்கம் உதவாது. தூக்கம் தரித்திரத்தை யுண்டாக்கும். அப்படியே அற்பதூக்கமும் தேகத்துக்குத் தீமையைவிளைக்கும். சோம்பலும், தூக்கமும் தரித்திரத்துக்குச் சகோதரிகள் என்று பெரியோர் கூறுவர்."

"ஒருவன் ஆறுமணிநேரம் தூங்கினால் போதாது. குறைந்தது எழு அல்லது எட்டுமணிநேரம் நித்திரை செய்யவேண்டும். எட்டு ஒன்பது பத்து மணிநேரம் நித்திரை செய்தாலும் முன்னேரமே படுக்கைக்குப்போய் வைகறையி லெழுந்திருக்க வேண்டும்.

"பசியோடு நித்திரைசெய்யாதே. மிருகங்கள் உண்டு திருப்தியடைந்தபின் நித்திரை செய்கின்றன. குழந்தைகள் வயிறுறப் பால் குடித்துத் தாயின்மடியிலுறங்குகின்றன. அதேபோல சாப்பிட்டுப் பசியாறிப் படுக்கைக்குப்போ.

"படுத்தவுடன் முன்னேரத்தில் அயர்ந்து தூங்கி விடியற்காலத்தில் தூக்க அளவைக் குறைக்கவேண்டும். மூளை வேலையாயிருப்பதால் கனவுகள் வருகிறது. கனவில்லாத நித்திரையே நல்லது. மூளைக்கு அதிகவேலை கொடுப்பவர்கள் அதிகநேரம் நித்திரைசெய்யவேண்டும்.

நித்திரைக்குப் போகுமுன் மனிதன் இருக்கும்நிறை எழுந்தபின்னிராது. காரணம் வியர்வையாகவும், நிசுவாசமாகவும் தேகத்திலிருந்து கழிவுகள் உண்டாவதாம். ஆகையால் நித்திரைக் குபயோகித்த ஆடைகளை வெயிலிலுலர்த்தி மறுபடியு முபயோகிக்கவேண்டும். வீடுகளை வருஷத்துக் கிருமுறையாவது வெள்ளையடித்துச் சுத்தம்பண்ணவேண்டும்.

"நித்திரை செய்யும்போது அவரவருக்கும் தனித்தனி படுக்குமிடமிருக்கவேண்டும் சில தேசங்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அறையுண்டு. பிள்ளைகளையும் தாய்மார் அருகில் கிடத்தி நித்திரை செய்தல் கூடாது. புருஷன் மனைவி ஒரே படுக்கையிலிருக்கத்தகாது ஒருவருக்கொருவர் உசுவாசிக்கும் துர்வாயு மனுஷனின் ஆயுளைக்குறைக்கும். வயோதிபரும் பிள்ளைகளும் ஒரேயிடத்தில் நித்திரைசெய்தால், பிள்ளைகளின் பலம் வயோதிபருக்குப்போய், வயோதிபரின் பலக்ஷயம் பிள்ளைகளுக்கு வருகிறதென்று வைத்திய நிபுணர்கள் கூறுகிறார்கள்."

(தொடரும்.)




நமது சிறிய சத்துருக்கள்.

1. க்ஷயரோகிகள் உமிழ்ந்தசளியில் காணப்படும் கிருமிகள். (2) Pneumonia-வென்னும் சுவாசப்பை அழற்சியை உண்டாக்கும் கிருமிகள். (3) அழுகிய நாற்றமெடுக்கும் வஸ்துக்களில் காணப்படும் கிருமிகள். (4) அழுகிய தானியங்களிலும் எருக்கூட்டத்திலும் உற்பத்தியாகும் கிருமிகள். (5) கிணற்றுத்தண்ணீரிலும், கட்டுக்கடை ஜலத்திலும் அழுகிய கிழங்குகளிலும் தோன்றும் கிருமிகள். (6) Typhoid fever-என்னும் விஷமச்சுரக்கிருமிகள். (7) மலைச்சுரத்தி லழுந்தியவனின் ரத்தத்தில் காணப்படும் கிருமிகள் (Malaria bacillus). (8) க்ஷயரோக கிருமிகள். (9) குஷ்டநோய் கிருமிகள். (10) ஊறவைத்த சாமான்களில் அசைந்துகொண்டு திரியும் கிருமிகள். (11) விஷபேதிக் கிருமிகள். (12) சேற்று நிலத்திலுள்ள ஜலத்தில் (Marshv water) காணப்படும் சவுக்குநுனியுள்ள கிருமிகள். (13) அழுகிய தாவரவஸ்துக்களிலுள்ள (Vegetable matter) கிருமிகள்) (14) அழுகிய மாம்சம் அல்லது செடிகளுள்ள தண்ணீரில் சாதாரணமாய்க் காணப்படும் கிருமிகள். (15) குளம் குட்டைகளில் சிவப்பு நிறப்பாசிபோல் படர்ந்திருக்கும் கிருமிகள். (16) அதேயிடத்தில் சுற்றிதுமங்கிய சிவப்பு நிறமுள்ள கிருமிகள். (17) முதிர்ந்த விஷபேதிக் கிருமிகள். (18) காடிமுதலிய வஸ்துகளில் புளிப்புண்டாக்கும் கிருமிகள். (19) கட்டிக்கிடக்கும் ஜலத்தில் கிருமிகள் விர்த்தி யாகிவளரும் விதம்.

## ரஞ்சிதபோதினியின் முதல் வருடோற்சவத்தில் டாக்டர் **Y.** சுப்பரமணிய ஐய்யர், **L. M. S, D. P. H.** (லண்டன்) அவர்கள் செய்த ஓர் அறிய உபன்யாசம்.

கனவான்களே !

நானின்றெடுத் துரைக்கப்புகும் விஷயமானது சிறிது வியப்பைக் கொடுக்கலாம். தம்மினும் வலிய சத்துருகளுக்கஞ்சுவது உலகத்தவர்க்கியற்கையாயிருக்க, நானிங்கெழுந்து நிற்பது நமது சிறிய சத்துருக்களை அசட்டை செய்யாவண்ணம் உங்களை எச்சரிப்பதற்கே. ஏனெனில் இது நம் உயிரையே அடுத்தவிஷயமாகும். நமது சிறிய சத்துருக்களென்றாலென்ன? நமக்கு சுகயீனத்தையுண்டாக்கக்கூடிய மிகவும் அற்பப் பிராணிகளேயாம். இவை மகா நுண்ணியவை. யாதாமோர் கருவியின் உதவியில்லாமல் நமது கண்களால் காணக்கூடாதவை மகா அற்புதக் கருவியாகிய தூரதிருஷ்டிக் கண்ணாடியை உற்பத்தி செய்த பின்பு தான் இவ்விதக்கிருமிகளு மிருக்கின்றனவென்று மனுஷருக்குத்தெரியும். ஓர் குழாயில் சிறிய கண்ணாடித் துண்டுகளை ஓர் விதமாய் அடுக்கிவைத்துக்கொண்டு, அதன் மூலமாய் சிறிய வஸ்துக்களைப் பார்வையிடின், அவை பெரியனவாகத்தோன்றும்.

இச்சிறிய கிருமிகள் எங்கும் வியாபித்து, தத்தம் தொழிலை நடத்திக்கொண்டு வருகின்றன இவைகளைப் பலுகிப் பெருகச் செய்வது மிக்க எளிது. இவைப் பெருகியிருக்குமிடத்தில் ஓர் சுத்தமான ஊசியின் நுனியை வைக்கின், அவைகள் அதில் ஒட்டிக்கொள்ளும். பின்பு அதை எடுத்துச் சிறிது பால் அல்லது இறைச்சி ரசத்தில் விட்டுவைத்து அவை ஒவ்வொரு நாளும் பலுகிப் பெருகும் விதத்தைப் பரீக்ஷித்துப் பார்க்கலாம். இக்கிருமிகளைத் தனித்தனியே நமது கண்களால் பார்க்க முடியாவிட்டாலும், அவற்றில் அநேகம திரண்டிருக்கும் பொழுது நமது கண்ணுக்கு எளிதில் தென்படும். அவைகளிற் சில உருண்டை வடிவமாகவும், வேறு சில திண்ணமாகவுமிருந்த போதிலும், அவைகள் ஒவ்வொன்றிலும் ஜீவன் உண்டு. ஆகவே அவைகள் ஒவ்வொன்றும் அசையவும் வளரவும் கூடும். சிறிது பருமனைவுடன் ஒவ்வொரு கிருமியும் இரண்டாக விண்டுபோகின்றது. இவைகள் பலுகும் விதத்தைக்கவனித்துப்பார்க்கின் நமக்கே மிக ஆச்சரியத்தைக் கொடுக்கும். ஓர் சிறு கிருமியை எடுத்து அதை ஓரிடத்தில் வைத்து அதற்கு வேண்டிய போஷிப்புக்கொடுப்போமாயின், பன்னிரண்டு மணிநேரத்தில் அது ஒருகோடியே எண்பது லக்ஷம் கிருமிகளாகப் பெருகிவிடும்.



இவை பெருகுவதற்கான சந்தர்ப்பங்களெல்லாம் அனுகூலமாய் சேர்ந்திருந்தால் மட்டுமே, அவை மேற்சொல்லிய கணக்கின்படி அபிவிர்த்தியாகும். ஆனால் அவை பெருகுவதற்கான சந்தர்ப்பங்கள் எப்பொழுதுமே அனுகூலமாய் அமைவதில்லை.

கிருமிகள் இருவகைப்படும். பாதகக்கிருமிகளுமுண்டு. சாதகக் கிருமிகளுமுண்டு. பாதகக் கிருமிகளென்பன நமது சரீரத்தினுட் புகுந்து அங்கே தாம் பலுகுவதற்கனுகூலமான சந்தர்ப்பங்களெல்லாம் அமைந்திருக்குமாயின், நான் முன் சொல்லிய பிரகாரம் அவை பலுகிப்பெருகி விர்த்தியாகி, நமது சரீரத்தினுள் ஏராளமான விஷத்தைப் பிறப்பித்து, சரீரமுழுவதுமே பரவச் செய்கின்றன. சுருக்கிச் சொல்லின், நம்மை ரோகிகளாக்குவன இவைகளே. மானிட தேகத்துக்கு நேரிடக்கூடிய பிணிகளில் அநேகம் இவ்வித விஷக்கிருமிகளாலேயே உண்டாகின்றன. இப்பாதகக் கிருமிகளால் ஒவ்வொரு நாளும் மடிகின்ற மானிடர் எத்தனையோ ஆயிரம். ஆதலால் இவைகளுக்கு நாம் அஞ்சுவது ஆச்சரியமா! நமதுகண்களுக்குப் புலப்படாத சிறிய சத்துருக்களாகிய இவ்விஷக்கிருமிகளால் உற்பத்தியாகும் வியாதிகளுள் வாந்திபேதி, சன்னி பாதசுரம், க்ஷய ரோகம், கொள்ளைநோய், பிளவை, கருங்குஷ்டம், அம்மைகள் முதலியன சிலவாம். அவற்றில் சிலவற்றைப் பற்றிச் சிறிது விளக்குகின்றேன். கவனமாய்க் கேளுங்கள் :—

நாம் குடிக்கும் ஜலத்தில் விஷபேதிக் கிருமிகளும், சன்னிபாதசுரக்கிருமியும் இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். இக்கிருமிகள் பெருகுவதற்கனுசரணையான சரீரமுள்ள ஒருவன் அந்த ஜலத்தைக்குடித்தால் இவைகளிலனந்தம் அவன் குடலுக்குள் சென்று அங்குவிர்த்தியாகி, வாந்திபேதி அல்லது சன்னிபாதசுரத்தை யுண்டாக்குகின்றன. இவ்விதமாக ஓரிடத்தில் நோய் ஆரம்பித்தபின், நோயாளியின் மலம், மூத்திரம, வாந்தி முதலியவற்றின் மூலமாய் இக்கிருமிகள் வெளியேறுகின்றன. நோயாளியின் சமீபத்திலுள்ள வஸ்திரங்கள், படுக்கை, பாத்திரங்கள் ஆகிய இவைகளில் அவனுடைய மல மூத்திர அழுக்குகள் தெறித்து அவை அசுத்தமாகின்றன. அவற்றைத் தண்ணீரில் சுத்திசெய்யும்போது அவைகளிலுள்ள கிருமிகள் தண்ணீரில் சேருகின்றன. நோயாளியின் வீட்டில் பழகும் பந்துக்கள் வேலைக்காரர்கள் முதலானவர்கள் அவனுடைய படுக்கையையும், பாத்திரங்களையும் வஸ்திரங்களையுந் தொட்டிருத்தல் கூடும். அவர்கள் குளம், நதி, கிணறு முதலியவற்றிற்குப் போகும்போது அந்த ஜலங்களில் அவர்கள் மூலமாய்க் கிருமிகள் வந்து சேரக்கூடும். அவ்விதம் அசுத்தமான ஜலத்தை அல்லது போஜ

னத்தை உட்கொள்ளுகிறவர்களுக்கு அந்நோய்கள் தொற்றிக்கொள்ளும். இவ்வித நோயாளியின் மலம், மூத்திரம் வாந்தி முதலியன தரையில் சிந்தி பூமிக்குள் செல்லக்கூடும். அந்தப் பூமியில் மழை பெய்தாலும், வேறுவிதமாய் ஜலம் சொரிந்தாலும், அந்த பூமியின் கீழுள்ள ஊற்றுநீர் கெட்டு, அதன் பக்கத்திலுள்ள கிணறுகளையும் குட்டைகளையுங் கெடுக்கக்கூடும். அந்த ஜலத்தைக் குடிப்பவர்களுக்கு அந்தந்த நோயுண்டாகுமென்பது நிச்சயம்.

க்ஷயரோகத்தை எடுத்துக்கொள்வோம். ஒரு க்ஷயரோகி தானிருக்கும் அறையில் எச்சிலை உமிழ்கிறான். அது காய்ந்துவிடுகிறது. காற்று அதை அறைமுழுவதும் வியாபிக்கச்செய்கிறது. விஷக்கிருமிகள் வியாபிக்கக்கூடிய சரீரத்தையுடைய ஒருவன் அந்தவிஷக் காற்றைச் சுவாசிக்கிறான். அது அவனுடைய நுரையீரலில் க்ஷயரோகக் கிருமிகளைக் கொண்டு சேர்க்கிறது. அவை அங்கே பலுகிப் பெருகி, க்ஷயரோகத்தையுண்டாக்குகின்றன.

இப்பொழுது விஸ்தரித்துச் சொல்ல சமயம் வாய்க்காததால், வேறொருவகைச் சிறிய சத்துருக்களைப் பற்றிச் சுருக்கிச் சொல்லுகிறேன். அவைகள் முன் சொல்லியவைகளினும் மிகப் பெரியவை. நமது கண்களுக்கு புலப்படக்கூடியவை. அவைகள்தான் நாம் கொசுக்களென்றும் ஈக்களென்றும், சொல்பவை. கொசுவுக்கு மனுஷரின் இரத்தம் மிக ருசியான ஆகாரமாதலால் அவைகள் மனுஷரின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்க வெகு ஆத்திரத்துடன் திரிகின்றன. ஓர்விதக் கொசு சன்னிபாதரோகியின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும்பொழுது, அதனுள் சேர்ந்திருக்கும் விஷக்கிருமிகளையும் உட்கொள்ளுகின்றது. சிறிது நேரத்திற்குள் அதேகொசுவானது ஓர் சுகதேகியின் சரீரத்தினுட்கார்ந்து அவனுடைய இரத்தத்தைக் குடிக்கிறதுமல்லாமல், அவனுக்கும் சன்னிபாதசுரத்தைக் கொடுத்து விடுகின்றது. இந்த விஷக்கிருமி, அவன் இரத்தத்தில் விர்த்தியாகவே அவனுக்குச் சுரம் உண்டாகின்றது.

இவற்றிலும் பெரிய ஓர்வித ஈ, எலியின் இரத்தத்தை உண்டு ஜீவிக்கின்றது. ஒரு எலிக்கு பிளேக் தநோய் கண்டிருந்தால், அதன் இரத்தத்தைக் குடிக்கும் ஈ யானது அதிலுள்ள பிளேக் விஷக்கிருமியையும் உட்கொள்ளுகிறது. சிறிது நேரத்திற்குப்பின், இதே ஈ யானது அகஸ்மாத்தாய் பிளேக் நோயணுகக்கூடிய ஒருவனின் சரீரத்தில் இரத்தங்குடிக்க உட்கார்ந்தால் அவனுக்கும் பிளேக் நோயுண்டாகி அவன் மடிந்து போகின்றான்.



நண்பர்காள்! நான் அடிக்கடி விஷக்கிருமிகள் விர்த்தியாகக்கூடிய சரீரமுடைய ஒருவன் என்று சொல்லுவதைக் கவனித்திருப்பீர்கள். அதிலிருந்து நம்மில் சிலருக்கு விஷக்கிருமிகள் அணுகக்கூடாத சரீரங்களுண்டென்று நினைப்பதற்கிடமுண்டு. ஆம்! இயற்கையாகவே விஷக்கிருமிகள் விர்த்தியாகக்கூடாத சரீரத்தையே ஜெகதீசன் நமக்குக் கொடுத்திருக்கிறார். நமது சரீரத்தினுள் விஷக்கிருமிகள் நுழைந்தவுடன் அவற்றோடு எதிர்த்துப் போர்செய்து கொன்றுவிட்டு, நமது சரீரத்தைப் பாதுகாக்கும் வல்லமையுள்ள கோடா கோடி இராணுவவீரர்களை அளவற்ற ஞானமுள்ள அற்புத ஜோதி நமக்குள் அமைத்துவைத்திருக்கிறார். அவைகள்தான் நமது இரத்தத்திலுள்ள வெண்குறுகடங்கள். அவைகள் உயிரோடு அங்குமிங்கும் ஓடித்திரிந்து, நமது சரீரத்திலுள்ள அசுத்தங்களை நீக்கும் தோட்டிவேலை செய்வதுடன் நமது சரீரத்தில் விஷக்கிருமிகள் எந்தசமயத்தில் உட்புகுந்தாலும் அவற்றோடு போர்புரிந்து அவற்றைக் கொன்று நமது சரீரத்தைப் பாதுகாக்கின்றன. நாம் சுசமும் பெலனுமுள்ளவர்களாயிருப்போமாயின், நமது சரீரத்திலுள்ள வெண்குறுகடங்களும் சுகமும் பெலனுமாயிருந்து, விஷக்கிருமிகள் நமது சரீரத்தினுட்புகுந்தவுடன் அவற்றைப் பக்ஷித்து ஜீரணஞ்செய்து, நம்மை சுகதேகிகளாகக் காக்கின்றன. ஆனால் நாம் பெலவீனர்களாயிருந்தால், அல்லது மீதமிஞ்சிய பழக்கங்களால் நமது சரீரத்தைப் பெலவீனப்படுத்திக்கொண்டால், நமது வெண்குறுகடங்களும் பெலவீனமடைகின்றன. ஆகவே விஷக்கிருமிகள் சரீரத்தினுட் சென்றவுடன் அவற்றோடு வந்தெதிர்க்கும் வெண்குறுகடங்களை ஜீரணித்துவிட்டு, தாங்கள் பலுகிப் பெருகி, நோயையும் மரணத்தையும் உண்டாக்குகின்றன. ஆதலால் நம்மைச்சுற்றி கோடாகோடி சிறிய சத்துருக்கள் அணுகியிருந்தபோதிலும் சிறிது ஜாக்ரதையாயிருப்போமாயின் அவற்றை நம்மைவிட்டுத் துரத்திவிடலாம். வந்தபின் நோயைத் தீர்த்துக்கொள்வதைவிட வருமுன் ஜாக்ரதையாயிருப்பது மிக்க நன்றென்பது நீங்கள் அறிந்ததே. ஆதலால் நாம் சாப்பிடும் உணவுகளிலாவது, சுவாசிக்கும் ஆகாயத்திலாவது, இல்லது ஈ, கொசு முதலிய வற்றிலாவது இந்த சிறிய சத்துருக்களை நமது சரீரத்தினுட்புகவிடாமல் தடுத்துக்கொள்வது அத்யாவசியம். நீங்கள் உட்கொள்ளும் தண்ணீரை அல்லது பாலை எப்பொழுதும் கொதிக்கவைத்துப் பருகுவதால் விஷபேதி, சன்னிபாதசுரம் முதலியவை வராமல் தடுத்துக்கொள்ளலாம். ஏனெனில், கொதிக்கவைப்பதால் விஷக்கிருமிகள் செத்துப்போகும் நீங்கள் சுத்த ஆகாயத்தைச் சுவாசிப்பீர்களாயின் க்ஷயரோகம் அணுகவேமாட்டாது. இரவில் தூங்

கும்போது படுக்கையைச்சுற்றிக் கொசுவலை போட்டுக்கொள்வதால், கொசுக்கடியில்லாமல் விஷசுரத்தினின்றும் நீங்கியிருக்கலாம். உங்கள் வீடுகளில் எலிகள் நடமாட விடாதிருப்பதினாலும், சூரிய வெளிச்சம் செல்லவிடுவதினாலும், சுத்தமாக வைத்துக்கொள்வதாலும் எலி, கொசு முதலியவற்றிற் கிடங்கொடாமலும், பிளேக்நோய் வரவொட்டாமலும் தடுக்கலாம். எல்லாவற்றினும் முக்கியமாய் உங்கள் சுகத்தையும் பெலனையும் பேணுவதால் அகஸ்மாத்தாய் உங்களை அணுகக்கூடிய விஷக்கிருமிகள் உங்கள் சரீரத்தினுட் புகுந்தவுடன், வெண்குறுகடங்கள் அங்கே சென்று, அங்கேயே அவற்றை நாசமாக்கிவிடும் நீங்கள் இந்த சுகிர்த ஜீவஒழுக்கங்களைக் கைக்கொள்ளத்தவறி, அவ்வித நோய்களுக்காளாயின், தற்கால ஆயுள்வேத சாஸ்திரங்கற்ற டாக்டர்களாகிய நாங்கள் உங்களிலுள்ள வெண்குறுகடங்களுக்குச் சக்தியையும் பெலனையும் கொடுக்கக்கூடும். சிலசமயம் தவறிப்போவதுமுண்டு. ஆனால் அவ்வித ஜீவ சக்தியை எப்படி கொடுப்பதென்பதை நான் இப்பொழுது சொன்னால் உங்களுக்கு விளங்காது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம் ஆயுள்வேத சாஸ்திரம் எவ்வளவுக்கு விர்த்தியடைந்திருந்தபோதிலும், ஔஷதங்களால் உண்டாகக்கூடிய பிரயோஜனங்களெல்லாம் சமயோசிதமானவைகளேயன்றி, நெடுங்காலம் நிலைக்கக்கூடியவைகளல்ல. உங்களை சுகமாக்கக்கூடிய டாக்டர் இயற்கையொன்றே ஆதலால் இயற்கைப் பிரமாணத்தை மீறாது எப்பொழுதும் கைக்கொண்டு வருவீர்களாயின் நீங்கள் சுக செல்வ நன்மையைப் பெற்று வாழ்வீர்கள்.

## பிரமேகரோகம்.

பிரமேகரோகமானது சீழ்மேகம், வெள்ளை, வெட்டை, பிரமியம், மேககாங்கை, அல்லது மேகச்சூடு என்றும், ஆங்கிலத்தில் (Gonarahae-கனேரியா) என்றும் சொல்லப்படும். புருஷனில் நீர்த்தாரையிலும், ஸ்திரீயில் அல்குலிலு மிருந்து சீழ்போல் வெளுத்த மேக நீர்வடிதலுக்கு வெள்ளையென்று பெயர். வியாதி ஆரம்பத்தில் நீர்த்துவாரத்தில் நமைச்சலெடுத்து ஜலம்வடியும், அதை உடனே கண்டிக்காவிட்டால் சீழாகிவிடும், அந்தச்சீழானது மூத்திரப்பை, சளிச்சவ்வு, ஆண்குறி முதலிய பாகங்களிலுண்டாகும் புண்ணினால் உண்டாகின்றது. அது வெள்ளை, பச்சை, மஞ்சள், சிவப்பு ஆகிய இந்நிறங்களில் ஒன்றாயிருக்கும். ஆண்குறியும் மூத்திர துவாரத்தின் சளிச்சவ்வும் வீங்கி நீரானது சன்னதாரையாய் (சிலருக்கு இரண்டு பிரிவுகளாய்) முக்கலுடன் அதிக வேதனையோடிறங்கும். நீர்த்துவாரத்தில் எரிச்சலுமிருக்கும்; இராத்திரியில் கோசம் விம்மலுற்று வளைந்து அதிகநோவெடுத்து நித்திராபங்கமுண்டாகும்; ரோகம் நாட்பட்டுவிட்டால் குறிகளெல்லாந்தணிந்து வடிகிற நீர் மூக்குச்சளிபோல் மாறிவிடும்; அதற்குத்தந்தி மேகமென்று



பெயர். இந்த வியாதியில் மூத்திரத்துவாரத்திலிருந்து ரத்தம் வடிந்தால் அதற்கு ரத்தப்பிரமேகமென்றும், முழங்கால் முதலிய மூட்டுகள் வீங்கினால் அதற்குப் பிரமேகவாத ரோகமென்றும், அரையில் வீங்கி நெறிகட்டினால் அதற்குப்பிரமேகத் திரட்சி அல்லது அரையாப்பென்றும் பெயர். இதில் சிலருக்கு கோசத்தின்தோல் சுருங்கிவிடுவதும் சிலருக்கு பீஜம் வீங்கிவிடுவதுமுண்டு; இந்த ரோகம் சிலருக்குக் கண்டால் சீழ் வடியாமல் மூத்திரம் விடும்போது எரிவும் கடுப்பும் மூத்திரதுவாரம் வீங்கி சிவந்துமிருக்கும், அதற்கு வரக்ஷிமேகம் அல்லது நாளாவர்த்தி வாதரோகம் என்று பெயர். வெள்ளை அடிக்கடி கண்டால் நீரடைப்புகாணும் ஸ்திரீகளில் நிதம்பங்கள், யோனி, கருப்பையின்வாய் ஆகிய இவ்விடங்களிலிருந்து மேகநீர் ஜனிக்கும் அவர்களுக்கு மெத்த உபத்திரவமிராது. நீரெரிச்சலும், நடந்தால் வேதனையும், உட்கார வருத்தமாயும், அரையில் நெறிகட்டியும் சன்ன உறுப்புகள் வீங்கியுமிருக்கும். சீழுஞ்சளியுங்கலந்த மேக நீர்வடியும்.

அதிக போகத்தினாலும், வீடு தூரமான ஸ்திரீகளோடும் பிரசவித்து ரத்த ஒழுக்காயிருக்கிற ஸ்திரீகளோடும் போகிப்பதினாலும், வெறும் வயிற்றில் சாராயங்குடிப்பதினாலும், வெப்பமுள்ள ஆகாரங்கள், மருந்துகள் சாப்பிடுவதினாலும், வெயிலில் அதிகமாய் நடத்தலினாலும் சுண்ணம்பில், சிறு நீருக்கிருப்பதினாலும், புணர்ச்சியில் விந்துஸ்கலிதத்திற்கு முன்ஸ்திரீயைவிட்டு நீங்கிவிடுவதினாலும், சிறுநீரை அடிக்கடி அடக்குவதினாலும், மோகத்துடன் பட்டினியாயிருப்பதினாலும், தம்பனச்சூட்டினாலும் வெள்ளைகாண்பதுண்டு, அது பிரமேகரோகமல்ல, ரோகஸ்திரீயைப்புணர்ந்து சுமார் நாலைந்து நாளில் வெளிப்படுவதே பிரமேக ரோகமாம். சிலருக்கு இரண்டொரு வாரங்களுக்குப் பின்பும் வெளிகாண்பதுண்டு. ஆகையால் புணர்ந்த மூன்றாம் நாளிலிருந்து பதினைந்து நாளைக்குள் வெள்ளை காணுமென்று பொதுவாய்ச்சொல்லலாம்.

ஸ்திரீயைப்புணர்ந்தவுடனே லிங்கத்தை ஜலம் விட்டுக்கழுவி நீர்த்தாரையையும் பீச்சாங்குழலால் (Syringe) நீரடித்துக்கழுவி விட்டால் பெரும்பாலும் ரோகமணுகாது. பிரமேகத்திற்குச் சிகிச்சை மூன்று விதப்படும், முதலாவது ஆண்குறியிலிருக்கிற வெப்பகுணத்தை நீக்கவேண்டியது; இரண்டாவது நீர்த்தாரையில் போய்பற்றிப் பிடிக்கிற மருந்துகள் கொடுக்கவேண்டியது; மூன்றாவது வடிகிற சீழ்நிற்கும்படி நீர்த்தாரையில் துவர்ப்பான மருந்துகள் பீச்சி (Injection) தகுந்த சாக்கிரதையெடுத்துக்கொள்ளவேண்டியது.

## புத்தக வரவு.

மோஹனசுந்தரம்:—நம் நாட்டவரில் ஆங்கில மறியாதார் ஆங்கிலத்திற்போல தமிழிலும் துப்பறியும் (Detective Novels) நாவல்கள் இலவாயினவே என்று ஏக்கமுற்றிருக்கும் காலத்தில், அக்குறைபாட்டினை நீக்கக் கருதியேபோலும், ஸ்ரீமத் J. R. ரங்கராஜு அவர்கள், நம்முன் வந்திருக்கும் "மோஹன சுந்தர"மென்னும் இவ்வற்புத நாவலை வெளியிட்டிருக்கிறார்கள். இப்புத்தகத்திலடங்கியிருக்கும் லீலாவதியின் ஸாகஸங்களோ இளையாளை வரிக்கும் வயோதிகர்களுக்கு ஓர் படிப்பினையாகும். துப்பறியும் கோவிந்தனின் சாமர்த்தியமோ செப்பத்தரமல்ல. மோஹன

முதலியார் செய்த மோசங்களுக்காக தன்னைத்தானேகவே தற்கொலைசெய்துகொண்டதானது "கெடுவான் கேடு நினைப்பான்" என்னும் பழமொழிக்கோர் இலக்கியமாக விருக்கிறது. கொலையுண்ட சுந்தர முதலியார் திரும்பவும் உயிருடன் வருவது, இப்புத்தகத்தை வாசிப்போர்க்கு நிரம்பவும் ஆச்சரியத்தைக் கொடுக்குமென்பதிலையமில்லை. இந்நாலின் நடைப்போக்கும், நடையழகும் படிப்போரை இடர்படாது இழுத்துச் செல்ல வல்லன. இப்புத்தகத்தில்ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கும் ஆவ்டோன் படங்கள் பார்ப்போர்க்கு ஆனந்தத்தை அளிக்கக்கூடியது. இப்புத்தகமானது கார்டியன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளதென்றால் இதன் வெளியழகும் வேலைப்பாடுகளையும்பற்றி எழுதவும் வேண்டுமோ. இவ்வறிய நாவலின் விலை அணா 12 தான். வேண்டியவர்கள் சென்னை மௌண்ட்ரோட் மெஸர்ஸ் ரங்கராஜு பிரதர்ஸ், அவர்களுக்கெழுதிக்கொள்ளவும். இப்புத்தகத்தை நம்மிதன்புகூர்ந்தனுப்பிய மெஸர்ஸ், ரங்கராஜு பிரதர்ஸ் அவர்களுக்கு நமது மனப்பூர்வமான வந்தனமளிக்கின்றோம்.

---

பிரசிநோத்தர ரத்னமாலை:—இவ்வரிய புத்தகத்தில் ஈரேழு பதினான்கு உலகங்களின் மகிமைகளும், அவை இருக்குமிடங்களும் அவ்வவ்வுலகங்களில் நடைபெறும் ஒவ்வொரு விஷயங்களும், ஸப்தஸாகர விவரணமும், அவற்றின் பெருமையும், நவக்கிரகங்கள், நவகண்டங்கள், யோகமார்க்கங்கள், அந்தஹ்ரணம் அவ்வந்தகரணத்தின் இலக்ஷணங்களும், இன்னுமனேக இன்றியமையாத விஷயங்களும் பலநூல்களின் சாராம்ஸங்களும் ஒருங்கு சேரத்திரட்டி தமிழ்மக்களுக்குப் பெரிதும் பயன்படவெண்ணி இவ்வரிய வேதாந்தநூலை வெளியிட்ட பிரம்மஸ்ரீ, வா. முத்துகிருஷ்ணய்யரவர்களுக்குத் தமிழுலகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது. சுருங்கச்சொல்லில் தமிழில் இதுபோன்ற நூல் இதுகாறும் வெளிவந்ததில்லை என்றும், இதுவே முதல் நூலென்றும் சொல்லலாம், சிஷ்யனது பிரசினங்களும், அப்பிரசினங்களுக்கு, குருமூர்த்தியினுடைய உத்கிருஷ்டமான உத்தரங்களும் படிப்போர் மனதைப் பரவசமாக்குமென்பதிலையமில்லை. இவ்வருமையான புத்தகத்தை தமிழறிந்த இருபாலரும் வாங்கி வாசித்து ஞானரகஸ்யங்களைப் பருகி, கீதாபநிஷத்துக்களின் மர்மங்களை அறிந்து ஆனந்திப்பது நிரம்ப அவசியம். இப்புத்தகத்தின் விலை வி. பி. சார்ஜ உள்பட அணா 10 தான். வேண்டியவர்கள் கல்லிடைக்குறிச்சி இந்துசாஸ்திராபிமானி ஆபீஸிற்கு எழுதிக்கொள்ளவும். இந்நாலினை எமது பார்வைக்கனுப்பிவைத்த ஸ்ரீ ஐயரவர்களுக்கு நமது மனப்பூர்வமானநன்றி செலுத்துகிறோம்.



## வர்த்தமானங்கள்.

1910-ம் ஆண்டில் சேதமான கப்பல்களால் நேர்ந்த நஷ்டம் 60-இலக்ஷம் பவுனும், இது பிரிட்டிஷ் கப்பல்களால் மாத்திரம் நேர்ந்த நஷ்டமென அறியவேண்டியது. பிரான்சு பட்டணத்து ஆகாயக்கமனி லியேத்னன் கோமேர் சேங்கீரில் 60-அடி உயரத்திலிருந்து விழுந்து செத்தார். போர்த்துகல் தேசத்தில் ஒருவன் தன் எஜமானனைக் கொல்ல வெடிகுண்டு பிரயோகித்தான் ஆனால் தவறிப்போயிற்று. மேல்நாட்டு நாகரீகம் செய்கிற கூத்தைப் பாருங்கள்! மிஸ் ஜிஞோடா என்ற ஒரு பெயர்பெற்ற நாடகப் பெண் ஒரு பிரபுவின் குமாரனை விவாகஞ் செய்துகொண்டாளாம். ஸ்பெயினுக்கு சமீபத்தில் ரெயில் வண்டிகள் பனியால் மூடப்பட்டு போயின, வண்டியிலுள்ள ஜனங்களின் நிலைமை நிச்சயமில்லை. ரோமாபுரியில் ஸெண்ட் பேதுரு ஆலயத்திற்காகச் செய்த கின்னரப் பெட்டிக்கு 35-ஆயிரம் பவுன் பிடித்ததாம், இவ்வளவு செலவு எதற்கோ? இங்கிலீஷ் மெயில் கப்பல் மால்வா வழியாய் 1,00,000 பவுன் பொன் இந்தியாவுக்கு வந்து இறக்குமதியாக்கப்பட்டது.

## விடுகதை வினா.

காணுமெட்டைந்தே நெளிந்தகாலொன்றே பூச்சியத்தை
பூணுமூவெட்டு மூவெட்டடனே - மாணுமொரு
மூன்றிலிரண்டைக்கூட்ட முன்னெழும்பேயிங்குவந்து
தோன்றியலைவதென்ன சொல்.

பூ. ப. செல்லக்குமாரக்கவுண்டர்,
கனக்கன்பட்டி.

மார்ச்சு மாதத்திய "வைத்திய போதினி" பத்திரிகையின்
66-வது பக்கத்தின் கணித வினாவுக்கு விடை.

| | | |
|---|---|---|
| மாம்பழம் | 10-க்கு | ரூ. 40—0—0 |
| மாதுளம்பழம் | 50-க்கு | ரூ. 50—0—0 |
| கொய்யாப்பழம் | 40-க்கு | ரூ. 10—0—0 |
| ஆக பழங்கள் | 100-க்கு | ரூபா 100—0—0 |

D. V. K. கோவிந்தருஜ ஐயங்கார்.
சைதாபேட்டை, (சென்னை.)

மேற்படி கணித வினாவிற்கு மற்றொரு விடை.

### கணித விபரம்.

| | | | |
|---|---|---|---|
| மாம்பழம் | 1-க்கு விலை | ... | ரூ. 4—0—0 |
| மாதுளம்பழம் | 95-க்கு விலை | ... | ரூ. 95—0—0 |
| கொய்யாப்பழம் | 4-க்கு விலை | ... | ரூ. 1—0—0 |
| ஆக பழம் ... | 100-க்கு | | ரூபா ... 100—0—0 |

ப்பிரம்மஸ்ரீ ம. கெங்காப்பிரசாத் பண்டிதர்.
*Colamboo.*

# ADVERTISEMENTS.

## தேவை.

அச்சாபீஸ் மானேஜ்மெண்டில் நீண்டகால அனுபோகமுள்ள ஒருவருக்கு வேலைவேண்டும். வேதன முதலிய விபரங்களுக்கு அடியிற் கண்ட விலாஸத்திற்கு எழுதித்தெரிந்துகொள்ளவும்.

K. G. ராவ்,
c/o எடிடர் வைத்தியபோதினி, கும்பகோணம்.

---

## பிரசினோத்தரரத்நமாலை என்னும் ஓர் வேதாந்த சாஸ்திரம்.

இது யாவருக்கும் புலப்படும்படியாக செந்தமிழ்நடையில் வினாவிடை ரூபமாய் விரிவான 1000 பிரசினோத்திரங்கள் வரை நல்ல வெண்மையான கிளேஸ் பேபரில் தெளிவான அக்ஷிரங்களால் பாரம் 8 பேஜு ஸைஸில் ஏறக்குறைய 150 பக்கங்கள் வரை அச்சிடப்பட்டுள்ளது. இதில் அகண்ட பரிபூரண ஸச்சிதானந்த ஸ்வரூபத்தின் மூன்று லக்ஷணங்களும், உள், வெளி, என்ற இருவகைப்பிரபஞ்ச விஷயங்களும், அதாவது இந்த உலகத்தைப்போல் நம்சரீரத்தினுள்ளிருக்கும் உலக விசித்திரங்களும், கர்மம், பக்தி, ஞானமாகிய மூன்று யோகவிஷயங்களும; பிர்மம், சக்தி, திருமூர்த்தி என்பவைகளின் வரலாறுகளும், ஈசுவர நிரணயத்தைப்பற்றிய ஒவ்வொரு மதஸ்தரின் அபிப்பிராயமும், கங்கா நதியின் உற்பத்தியும், மகாமேருவின் சிறப்பும், சூரியனுடைய லோக யாத்திரையின் சூக்ஷுமமும், இன்னும் இதுபோல் பல சிறந்த விஷயங்களும, அடங்கியிருக்கின்றன. தேவையுள்ளவர்கள் இதனடியில் கையொப்ப மிட்டவருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். வி. பி. மூலம் இதன் விலை அணா **10**.

வா. முத்துகிருஷ்ணய்யர்,
இந்துசாஸ்திராபிமானி, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி ஜில்லா.

---

## MOTO REVE.

$1\frac{1}{2}$—H. P. உள்ள மோடார் சைகிள்களுக்குள் மோடோ ரீவ் ஈடுசுந்த மேன்மையுள்ளது. என்னவென்றால், இதின்கனம் பவுண்டு 78-தான். அதாவது சாதாரண மோடார்சைகிளுடைய கனத்தில்பாதிதான் ரோட்டில் போகும்பொழுது சப்தமில்லாமலும் ஒரு காலன் எண்ணெய்க்கு சுமார் 140 மயில் போகிறதாயும், அதாவது சாதாரண வண்டிக்கு வரும் எண்ணெயில் பாதியிருந்தால் போதும். வண்டியை ஸ்டார்டு (Start) செய்கிறதில் பிரயாசம் இல்லாமலுமிருக்கிறது.

இதர விபரங்களுக்கு எழுதிக்கொள்ளவும்.

**K. S.** ராஜ் **& Co.,**
கும்பகோணம்.



## ரோமசங்காரி சோப்.

தேகத்தின் எந்தப்பாகத்திலும் இந்த ஸோப்பை உபயோகித்தால் யாதொரு கெடுதியுமின்றி ரோமங்களைச் சங்காரஞ்செய்துவிடும். 6-மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய கட்டி 1-க்கு விலை 6-அணா; டெஜன் ரூ. 4, வி. பி. சார்ஜ 1-முதல் 3-க்கு 4-அணா.

## ரோமப்பிசின்.

இப்பிசின் நரைத்த மயிரை இரண்டு நிமிஷத்திற்குள் பழயபடி கறுப்பாக்கிவிடும். கெடுதிசெய்யக்கூடியது ஒன்றும் இதில்கிடையாது 1-புட்டி 3-மாதத்துக்கு போதுமானது. டைரக்ஷன் மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு விலை 12-அணா; டெஜன் 1-க்கு ரூ. 8. 1-முதல் 3-புட்டிக்கு வி. பி. சார்ஜ் 4-அணா.

## கார்பாலிக் டூத்பவுடர்.

இந்தபற்பொடி, வாயிலுண்டாகும் துற்நாற்றத்தைபோக்கி பல்லைச் சேர்ந்த எல்லா வியாதிகளைப்போக்கி பற்களை கெட்டிப்படுத்தும். டின் 1-க்கு $1\frac{1}{2}$-அணா டெஜன் 14-அணா 1-டெஜனுக்கு வி. பி. சார்ஜ் 4-அணா,

Apyly to Messrs—J. SUR & Co.,
Patent Medecine Sellers & General order suppliers,
South Sinthee Road, P. O. (V) Cossipore, Calcutta.
Agent. Lakshmivilasa Provident Institution Ld. Kumbakonam

---

## பற்பொடியும் பவளச்சுன்னமும்.

இந்த சஞ்சீவி யெனும் பற்பொடியானது தஞ்சைமாநகரத்தில் பரம்பரையாய் கையாண்டு வந்தது. நீடித்து அனுபோகத்திற்குவாராமல் புதைபட்டிருந்தது. இது ஓர் மஹான்களால் வெளியாகி ஜனங்களுக்கு உபகாரமாகும் பொருட்டாகவும், அனுபோகத்திற்கு ஒத்திருப்பதையும் பல பேர்கள் வேண்டுகோளின்படி வெளியிடத்துணிந்தோம். ஷை பற்பொடியை ஓர் சிட்டிகை யெடுத்து காலையிலும் மாலையிலும் பற்துலக்கி வருவதுடன் இந்த பவள புற்றினால் செய்த சுன்னத்தையும் தாம்பூலத்துடன் 12 நாள் தரித்துக்கொண்டு வந்தால் பல்லசைவு, இரத்தம் வருதல், சீழ்வருதல், புழுவெட்டு, ஜிலிஜிலிப்பு, கூச்சம், நடுக்கம், எகிறில் ஏற்படும் துர்நாற்றம், எகிர்கரைதல், பல்லரணை முதலான நோயை கண்டிப்பாய் நீக்கி சுவஸ்தம் செய்வதோடு ஆயுள்பரியந்திரம் பல்விளாமல் காக்கச்செய்யும்.

| | | | |
|---|---|---|---|
| ஓர் அவுன்ஸ கொண்ட பற்பொடி டப்பா 1-க்கு விலை | 0 | 6 | 0 |
| ஓர் பலம் கொண்ட சுன்ன டப்பா 1-க்கு விலை | 0 | 2 | 0 |

வி. பி. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

பி. ஸாம்பமூர்த்தி ஐய்யர்,
ஆயுள்வேத பண்டிதசாலை, ஆய்குடி போஸ்டு,
திண்டுக்கல் மார்க்கம்.

---

## பூரணசந்திரோதயம்.

பிரதி ஆங்கிலமீ 15உ மதுரையில் பிரசுரமாகிவரும் தமிழ் பத்திரிகை. சந்தா வருஷம் 1-க்கு ரூ. 2. தனிப்பிரதி அணா 4.

ப. நாராயண அய்யர், B.A., B.L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி அய்யர், B.A., B.L., F. T. S. } பத்திராதிபர்கள்.

## இந்து சாஸ்திராபிமானி.

இத்தலைப் பெயரிட்ட புஸ்தகமொன்று அடியில் கையொப்பமிட்டவரால் இனிய செந்தமிழ் நடையில் நவீனமாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இதில் இந்துமதக் கோட்பாடுகளையும் பொது நன்மைகளையும் தழுவிப் பேசுகிற அநேக உபந்நியாசங்களும் திருவாங்கூரை அரசாக்ஷி செய்த பூர்வீக அரசர்களுடைய சரித்திரங்களும் இவர்களிடம் மந்திரி வேலையில் அமர்ந்திருந்த தேர்ந்த புத்திசாலிகளாகிய மிஸ்டர் தளவாய் ராமய்யர், ஸர். டி. மாதவராவ், ஆனரபிள், ராமய்யங்கார் முதலிய மேதாவிகளின் சரித்திரங்களும் அடங்கியிருக்கின்றன. குறித்த புஸ்தகம் விலை உயர்ந்த நல்ல கிளேஸ் கடிதத்தில் முத்துக்களைப் போன்ற அக்ஷரங்களாக பொறுக்கி யெடுத்து 8 பேஜுள்ள 16-பாரத்தில் 128 பக்கம் வரை அச்சிடப்பட்டிருப்பதுமின்றி, மதரூஸ் லோகோபகாரி பத்திராதிப ரவர்களுடைய படமொன்று வைத்து அழகாக பைண்டு செய்யப்பட்டு மிருக்கின்றது. வேண்டுவோர் தங்கள் பெயர், ஊர், போஸ்டு முதலிய பூராவிலாசங்களையும் எனக்குத் தெளிவாக எழுதும் பக்ஷத்தில் போஸ்டேஜு உள்பட 6 அணா விலைக்கு கல்லிடைக் கும்மி ஸகிதம் வி. பி. மூலம் அனுப்புவேன்.

## ஆரியஜன போதினி.

இந்நூதனமான தமிழ்ப் புத்தகத்தில் இந்தியாவின் முற்கால தற்கால நிலைமைகளும், அக்காலங்களிலுள்ள அரசர்களின் ஆக்ஷி முறைகளும், கைத்தொழில் விஷயங்களும், பிராசீன மகரிஷிகளால் விதிக்கப்பட்டிருக்கின்ற தர்ம சூட்சுமங்களும், அந்நி பெஸாண்டு அம்மையவர்களின் அருமையான உபன்னியாசங்களும், தாதாபாய் நௌரோஜி இந்தியாவுக்கு உழைத்து வருகின்ற சிறந்த பெரும் முயற்சிகளும், அவரது சலத்திரமும், ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியின் ஸத்கிருத்ய மஹிமைகளும், விவேகானந்த ஸ்வாமிகளால் உபதேசிக்கப்பட்ட வேதாந்தத்தின் கருத்துக்களும், ஸநாதன தர்மம் நிலைத்திருக்கும் பொருட்டு கர்னல், ஆல்காட் துரையவர்களால் செய்யப்பட்டிருக்கின்ற காரியங்களும், பாஞ்சாலி யென்னும் பதிவிரதா சிரோண்மணியை மானபங்கம் செய்ய முயன்ற துச்சாஸனன் அவமானமடைந்ததும், ராஜஸூய யாகத்தில் தர்மபுத்திரருக்கும் சிசுபாலனுக்கும் நேரிட்டவாக்கு வாதங்களும் பஞ்சாப், வங்காளம், டில்லி, பாட்ணா, முதலியவைகளை யொத்த பிற விடங்களில் நவீன வியவஸாய சாஸ்திரத்தை யனுசரித்து செய்யப்படுகின்ற வியவஸாய முறைகளும், இதுபோல் இன்னும் அனேக அற்புத விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. குறித்த புஸ்தகம் விலை யுயர்ந்த கிளேஸ் பேபரில் பாரம் 8 பேஜு ஸைஸில் 120 பக்கங்கள் வரை நல்ல செந்தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. இது, ஸ்ரீராம, கிருஷ்ண மூர்த்திகளின் படங்கள் ஸகிதம் பிறமத தூஷணையின்றி பல மேல் விலாசங்களுடன் ஸகல மதஸ்தர்களுக்கும் பொதுவாக இயற்றப்பட்டிருக்கின்றது. இதற்கு வி. பி. சார்ச்சுடன் விலை அணா 10. ஸிலோன் முதலிய வெளிநாடுகளுக்கு ஒரு அணா ஜாஸ்தியாகச் சார்ச்சு செய்யப்படும். வேண்டுவோர் இப்பத்திரிகையின் பெயரைக்குறிப்பிட்டு எனக்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**வா. முத்துகிருஷ்ண ஐயர்,**

**இந்துசாஸ்திராபிமானி, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி ஜில்லா.**



## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்

19. **சுகந்த ஸ்நாநப் போடி:**—இந்த வாசனைப்பொடியை தினந்தோறும் தேகத்தில் தேய்த்து ஸ்நானம் செய்துவந்தால் தேகத்திற்கு சுகந்த பரிமளத்தைத் தந்து தேமல், அறிப்பு, சொறி, சிரங்கு, கற்றாழை நாற்றம், கைகால் எரிச்சல், மேககாங்கை, சரீரவரக்ஷி, கணைச்சூடு, வெடிப்பு, கரப்பான், தலைவலி, சொறிமேகம், படர்தாமரை, மேக ஊரல், கிரந்தி முதலிய இன்னும் அநேகவித தோலைப்பற்றிய வியாதிகள் தீரும் நல்லவாசனையும் காந்தியும் லக்ஷ்மீகரமும் ஆரோக்கியமுமுண்டாகும். அறைக்குழந்தை முதல் யாவரும் உபயோகிக்கலாம். டப்பா 1-க்கு விலை அணா 8, வி. பி. சிலவு அணா 3 பிரத்தியேகம்.

20. **சஞ்சீவி மாத்திரைகள்:**—இம்மாத்திரைகளினால் தலைவலி தலைபாரம், சளி, இருமல், சுரம், மயக்கம், வாந்தி, விஷசுரம், வயிற்றுப் பிசம், வயிற்றுவலி, தெற்குத்திக்கணை முதலியநோய்கள் தீரும். அறைக்குழந்தைமுதல் யாவரும் உபயோகிக்கலாம். விலை சிசா 1-ச்கு அணா 0—10—0. இந்தியாவிலும் பர்மாவிலும் 1-முதல் 6-சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய சிலவு அணா 5 பிரத்தியேகம்.

21. **மஹா கோரோஜனை மாத்திரைகள்:**—இம்மாத்திரையினால் இருமல், சளி, சுரம், வயிற்றுப்பிசம், இளைப்பு, வலி, மயக்கம், தெற்குத்திக்கணை, ஜன்னி, வயிற்றுப்போக்கு, தோஷம், மூக்குமாந்தம், ஊதுகணம், செவ்வாப்பு, கடுவன், கரப்பான், பால்மாந்தம் முதலிய எல்லா மாந்தங்களும், கருங்கிரந்தி, செங்கிரந்தி, மலஜலக்கட்டு முதலியதுகளும் மலை சுரம், முறை சுரம், முதலான பலவித சுரங்களும் அடியோடு நீங்கும். சீசா 1-க்கு விலை அணா 10. 1-முதல் 6-சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்

22. **கரப்பானுக்கும் சொரிசிரங்குக்கும் மருந்து:**—இம்மருந்தை டைரக்ஷனில் சொல்லியபடி மேலுக்குமட்டும் உபயோகித்துவந்தால் வெகு சீக்கிரத்தில் எவ்வித நமைச்சல்களும், சொரி, சிறங்கு, வரட்டுச் சொரி, அநேக குழந்தைகளுக்கு தேகமெங்கும் அல்லது சிலபாகங்களில் கண்டு அதிக நமைச்சலையும் தொந்தரவையும் தருகின்ற எவ்வித கரப்பான்களையும் வெகு சீக்கிரத்தில் ஆற்றிவிடும். விலை சீசா 1-க்கு அணா 0—8—0. இந்தியாவிலும். பர்மாவிலும் அனுப்ப வி. பி. சிலவு 1 அல்லது 2-சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

23. **கேசஸஞ்சீவாசனி:**—உசிதமான சீமைவாசனை சாமான்கள் சேர்த்து செய்யப்பட்ட இத்தைலத்தால் கூந்தல் செழிப்பாகவும், நெருக்கமாகவும், கருப்பாகவும் வளரும். கண்கள் குளிரும், தலைநோய் போகும் மூளையைப் பலப்படுத்தும், மிகவும் வாசனையுள்ள தைலம். சீசா 1-க்கு ரூபா 1. வி. பி. சிலவு 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

24. **இரக்ஷாமிர்தம்,**—தாவரவர்க்கத்தைச்சார்ந்த அநேக அபூர்வ மூலிகைகளால் செய்யப்பட்ட இச்சூர்ணம் காபி, தேயிலைக்குப்பதிலாக உபயோகப்படுத்துவதற்காகவே தயார் செய்யப்பட்டிருக்கிறது. காபி தேயிலைக்குள்ள துர்குணங்கள் இதற்கில்லை. காபி பொடியை எவ்வி

**பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.**

## பி. சுப்பறயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

தம் உபயோகிக்கிறோமோ அவ்விதமாகவே இதையும் உபயோகிக்க மிகவும் ருசியான பானமாகும். அறைக்குழந்தை முதல் விருத்தாப்பியர்கள் வரையில் எல்லோரும் உபயோகிக்கலாம். சுரம், ஜன்னி, கர்ப்பம், பிரசவம், காலரா முதலிய காலங்களில் ஷை சூரணத்தின் கஷாயத்தை பாலுடன் அல்லது பாலை சேர்க்காமல் சமயத்திற்கு தக்கபடி உபயோகிக்க ஜனங்களை நோய்களிலிருந்து குணப்படுத்துவதுமன்னியில் நோய் வராமல் காக்கும். பித்தவாயு, காசம் க்ஷயம், அஜீரணம், மலச்சிக்கல், தலைவலி முதலியவைகளை போக்கும். இரத்தத்தை சுத்தி செய்து தாதுவிர்த்தியையும், தேக ஆரோக்கியத்தையும் தரும். அக்கினி மாந்தமுள்ளவர்களுக்கும், மது மூத்திரம், அதி மூத்திர ரோகிகளுக்கும் அருமையான வஸ்து. இதை வழக்கமாய் உபயோகித்து வந்தால் மது மூத்திர ரோகிகளின் நீரிலுள்ள தித்திப்பையும், நீரின் அளவையும் குறைத்து மூத்திர ரோகத்தை அடியோடு குணமாக்கும். தேகத்தின் உஷ்ணத்தை சாந்தி செய்யும். மூளையை பலப்படுத்தி ஞாபக சக்தியை அதிகப்படுத்தும். மாணாக்கர்கள், வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள் பகைக்கத்தக்க குணமுள்ள காபி தேயிலையை விட்டு விட்டு இதை உபயோகிக்க அருமையான சூர்ணம். டப்பா 1-க்கு விலை அணா 6, வி. பி. சிலவு அணா 3 பிரத்தியேகமாகும்.

25. **சர்பத்துகள்:**—திராக்ஷைப் பழம், நன்னாரி வேர், ரோஜா புஷ்பம், வாழைப்பழம், எலுமிச்சம்பழம், மாதளைப்பழம், கிச்சிலிப்பழம், பாதம், அன்னாசிப்பழம், துருஞ்சிப்பழம், கொமட்டிப்பழம், சீமை இலந்தைப்பழம், தாமரை புஷ்பம், இஞ்சி சர்பத்துகள். ஷை சர்பத்துகள் பழவகைகளின் சத்துக்களால் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் துளிகள் கணக்காகவே உபயோகிக்கவேண்டும். ஒரு சேர் குளிர்ந்த ஜலத்திலாவது சோடாவாட்டரிலாவது சுமார் 5-துளிகள் சேர்த்தால் மிகவும் இனிப்பாகவும் எந்த பழ சர்பத்து உபயோகிக்கப்பட்டதோ அந்தப் பழத்தின் மதுரமான வாசனையோடுங் கூடிய சர்பத்தாகும். ½ அவுன்சு சீசாக்களில் விற்கப்படும். இச்சிறு சீசாவிலுள்ள சர்பத்து 50 சேர் குளிர்ந்த ஜலத்துடனாவது சோடா வாட்டரோடாவது சேர்த்தால் 50 சேர் உசிதமான சர்பத்தாகும். அறை அவுன்சுள்ள சீசா 1-க்கு விலை அணா 8, வி. பி. சிலவுகள் 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

---

**பி. சுப்பறய், பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.**

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
10 MAY 1911
MADRAS.

# வைத்திய போதினி.

சித்திரப்படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

புத் 2. | 1911-ஹு மேமீ 1௳ | நே. 5.

## சுகாதார மார்க்கங்கள்.

### ஜலமும் அதன் உபயோகமும்.

"ஜலம் மனுஷஜீவன் நிலைபெற ஆகாயத்திற்கு இரண்டாவதானது உலகத்தில் நாலில் மூன்று பாகத்தை ஜலம் மூடிக்கொண்டிருக்கிறது. மானிட சரீரம் நூற்றுக்குத் தொண்ணூறு பாகம் ஜலமாகவே யிருக்கிறதென்பது சாஸ்திரிகளின் துணிவு. சமுத்திரமானது கப்பல்களைத் தாங்கிச்செல்வதுபோல தேகத்திலுள்ள ஜலம் ஜடமாகிய நாவாயைத் தாங்கிச் செல்லுகிறது. விசும்பினின்று விழும் சுத்த மழைஜலமானது பூமியைச் செழிப்பித்து எங்கும் பசுமைதோன்ற தாவரங்களை வளர்க்கின்றது. புஷ்பங்களுக்கு அழகான வருணங்களை யுண்டாக்கிச் சுகந்த வாசனை யூட்டுகிறது. அதே போல மனுஷனுட்கொள்ளும் ஜலமும் ஆகாரத்தை ஜீரணப்படுத்தி ஜலமயமாக மாற்றிப்போஷிப்பின் நுண்ணிய சத்தைத் தேகத்தின் சர்வபாகத்துக்கும் கொண்டுபோய் வளர்க்கிறது. தேக வஜ்ரகாத்தை யுண்டாக்குகிறது.

"இந்த ஜலத்தை மூன்று விதமாக மனிதனடைகிறான். ஒருவிதம் மழையாகவும் பனியாகவும் ஆகாயத்தினின் றடைதல்; இன்னொரு விதம் பூமியினின்று ஊற்றுக்கண்களின் வழியாய்ச் சுரந்து அடைதல்; மற்றொருவிதம் வானத்தினின்றழிந்த ஜலமும், பூமியினின்று சுரந்த ஜலமும் பூமியின் மட்டத்துக்கு வந்த பிறகு ஆறு, குளம், கேணி, இவ்வகை ஜலாசயங்களிலிருந்தடைதல்.

"இம்மூன்று வகையான நீரில் முதலிரண்டும் பரிசுத்தமாம். பின்னது அசுத்த ஜலமாம். அசுத்த ஜலத்தை நீக்கிப் பரிசுத்த ஜலத்தைப் பானம்பண்ணவேண்டியது ஒவ்வொருவருடைய கடமை. அசுத்தஜலத்

தில் சுண்ணாம்பு முதலிய கெடு பதார்த்தங்களும், கிருமிகளுமிருப்பதால் அது சுகத்திற்கு மிகவும் பிரதிகூலமானது. ஆறுகளில் பிரவாகித்து வரும் ஜலம் மேகத்தால் சுத்தப்படுத்தப்பட்ட சுத்த ஜலமேயாயினும் அது பூமியில் விழுந்தபின் பல அழுக்குகளையும், அசுத்தங்களையு மடித்துக்கொண்டு வருகிறபடியால் அதிலும் அசுத்தமிருக்கிறது. அப்படி ஊற்றுக்களிலும் ஊறும்ஜலம் மற்ற அழுக்குகள் கலவாததாயிருந்தால் மட்டும் சுத்தஜலமாகும். அசைவற்ற ஜலாசயங்களிலுள்ள நீர் பொதுவாகவே அசுத்தமானது. ஆகையால் இவைகளையெல்லாம் காய்ச்சி அசுத்தங்களை வடித்த பின்னரே சாப்பிடவேண்டும். மேனாட்டுப் பண்டிதரெல்லாரும் எந்த ஜலத்தையும் காய்ச்சின பிறகே அருந்தச்சொல்லுகிறார்கள்.

"முற்காலத்திலே இத்தேசத்தார் தாங்கள் அதிக காலம் ஜீவனோடிருக்கும் நோக்கமாய் நீர்நிலைகளிலிருந்து எந்தநீரையு மருந்தாமல் மலைகளின்மேலும், குன்றுகளின்மேலும் பாத்திரங்களைவைத்துப் பனிநீரையும், மழை நீரையும் அசுத்தம் சேராமல் பிடித்துப் பருகிவந்தார்கள். இப்படிப் பருகப்படும் ஜலமானது தேகத்திற் சென்று இரத்தத்தோடு கலந்து, இரத்தத்திலுள்ள உவர்பதார்த்தத்தைக் கலைத்துப்பலபாகத்தும் செலுத்திச்சகல உறுப்புக்கும் சத்துவம் கொடுக்கிறதாயிருக்கிறது.

"எப்போதும் காய்ச்சின ஜலமே சாப்பிடு. அதிக குளிர்ச்சியாகவாவது; அதிக சூடாகவாவது சாப்பிடாதே. சாப்பாட்டுக்கிடையிடையே ஜலமருந்தாதே. இரத்தத்தின் சூட்டுக்கு அதிகமாய் வெந்நீர் பானம் செய்யற்க. தாகத்தைத் தணிக்கத் தண்ணீரை யன்றி வேறு ஜலபதார்த்தம் அவசியமில்லை. லாகிரிதரும் எதையும் சாப்பிடாதே. லாகிரி பானமொன்றும் தாகத்தைத் தணிக்காது. லாகிரி வஸ்துக்குத் தேகத்தைப்போஷிக்கும் சத்து கிடையாது.

"பசும்பால் சாப்பிடுதல் மிகவும் நல்லது. பலஹீனர் பசுவின் பாலைப் பானமாகக் கொள்ளலாம். கஷாய பானங்களொன்றும் மனுஷனுக்கவசியமில்லை. அவை சுகமுள்ளதல்லவென்றும் கற்றோர் கருதுகிறார்கள்.

"தினந்தோறும் ஸ்நானம் செய்ய மறக்கலாகாது. சுகாதார வசதிக்குச்சிரேஷ்டமாக எண்ணப்படும் முறைகளில் ஸ்நானமே மகா அவசியமானதாகக் கருதப்படுகிறது. ஆயுள் வேதியரின் முறைப்படி பிராதகாலத்தில் குளிர்ந்த ஜல ஸ்நானமும், மத்தியானத்தில் சூரிய உஷ்ண ஸ்நானமும், அஸ்தமனத்தில் அதிக குளிர்ச்சியும் சூடுமில்லாதபடி தேகத்தை வைத்திருப்பதும் உத்தம முறையாக எண்ணப்படுகிறது. ஸ்நானம் செய்வதினால் இரத்தம் பரவி நரம்புகளுக்கு வலுவேற்படுகிறது.



மேலை நாடுகளாகிய குளிர்ச்சியுள்ள அயல் நாடுகளிலெல்லாம் ஸ்நான அறைகளை யுண்டாக்கிக்கொண்டு அவர்கள் ஸ்நானம் செய்வார்களானால், உஷ்ணமிகுந்த இந்நாட்டில் ஸ்நானம் செய்யத் தடையென்ன? இத்தேசத்தில் தினந்தோறும் ஸ்நானம் செய்து வருகிற சிலபிரஜைகள் தேஜஸும், புத்தி சாதுரியமு முள்ளவர்களாயிருப்பதே ஸ்நானத்தின் அவசியத்தை விளக்குகிறதல்லவா? ஆகையால் ஸ்நானம் ஒவ்வொருவருக்கும் அவசியம். அதிலும் ஸ்நானம் என்றால் முறைமைக்கு ஸ்நான கட்டத்திற்குப் போய் ஜலத்தில் விழுந்தெழுந்து வருதலன்று. தேகத்தை நன்றாய்த் தேய்த்து ஸ்நானம் செய்து உடனே தடித்த வஸ்திரத்தால் துடைக்கவேண்டும்.

## மணிமறைய முத்துத்தோன்றி.

1911-௵ ஜனவரி௴ 26உ வெளிவந்த கௌரவம் பொருந்திய சுநசந்திரோதயப் பத்திரிகையில் கெங்காப்பிரசாத் பண்டிதருடைய கேழ்விக்கு விடையென முகவுரையிட்டுக் கூறியிருக்கிறதைக் கண்ணுற்றேன்.

இவ்வித அசத்தி வசனங்களைக் கூறியிருக்கிறார். அஃதெவ்வாறெனில் ஆகாயத்தில் கோட்டை கட்டுவது போலாம். அதனால் நமக்கு வீண்வசனங்களை எழுத அவசியமில்லாததினால் சாஸ்திரப் பிரமாணத்தோடு நீர் எழுதிய விடைக்குக்கண்டனம். கீழ்ச்சுட்டும் வசனத்தால் நன்குவிளங்கும். நீர்கூறுகிறீர் வியாதிகளிற் பிரதானமுடையது குருநோயென்று சொல்லப்பட்ட வைசூரியேயாமென்றும் வியாதிகளிற் பிரதானமுடையதாயிருக்கிறதற்குக் காரணம் அதிமேகமேயாம். இவற்றிற்குக் கண்டனம் கீழ்க்காண்க சர்வரோகங்கட்கும் சுரமேராஜன்

ஸ்லோகம்.

சிவன் சொல்லுகிறார்.

தேயெந்திர மானஸ்தா பிசபேரோ
ரூவலி சுரூ-ஆ-ஆ-பிரதானங்
முத்தோ பகவ தாபுரூ சன மாதனநித
னே ரங்சங் பகதிஅரனசஞ்
சயா—அந்தோசா வேஷிகாரணங்சுரூ
ஜாபிரகிருதிதா.

(இதன் பொருள்) சுரம் சர்வரோகங்கட்கும் அரசன் சர்வபிராணிகளின் பிராணன்களும் அரனேவாலா அதாவது சர்வபிராணிகளின் உயிரைக்கவர்தெடுக்கக்கூடியவன் அத்திந்தபயானக அதாவது, மெத்தப் பயங்கரமுடையவர் அவற்றிற்காய அனேக இந்திரியங்களோடு சுரத்திற்குச்சாந்தி செய்வதற்காய் சிட்சைகள் செய்தல்வேண்டும்.

சுரமானது சரீரம், இந்திரியம், மனம் இவைகளைப் பொங்கப்பண்ணுகின்றன சர்வவியாதிகட்டும் சுரம்அரசனாயும் பலவானாயும் சிரேஷ்டமுடையதாய்மிருக்கிறது.

சாக்ஷாத்பகவானாகிய சிவன் பூர்வமாய் இவ்வாறு திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார். இஃது மாத்திரமல்ல விஷ்ணு அவதாரமாகிய காசி மகாராஜன், தன்வந்தரி பகவான் சொல்லியிருக்கிறார்கள். சர்வவியாதிகட்கும் சுரமேராஜனெனவும் மகாமுனிவர், சரக்முனிவர், பிறதபாக பட்டர், மகாராஜாபவோமாஸ்றமுனிவர் முதலானோர் கூறியிருக்கிறார்கள் சர்வவியாதிகட்கும் சுரமே பிரதானம்.

பிராணிகளின் ஜென்மத்திற்கு முன்னரும் மரணிக்கும் தருணமும் ஆவசியகமாய்ச் சுரமுண்டாகின்றன. அதினாலன்றோ சர்வவியாதிகட்கும் சுரத்தை அரசனாயும், பலவானாயும், சிரேஷ்டமுடைய்தாயும் கூறியிருக்கிறார். சுரம் சர்வரோகங்கட்குமுன் உற்பத்தியாகின்றன, மரணமடையும் சமயத்திலும் சுரமிருக்கின்றன சுரமிருக்கும் சமயத்தில்மாத்திரம் வைத்தியர்கள் ஔஷதப்பிரயோகம் செய்கிறார்கள்.

சுரமில்லாதிருந்தால் யாவரும் மனத்தைரியம் விட்டு வியாகூலப்பட்டு சிகிச்சைகள் செய்யாது கைவிட்டுவிடுகிறார்களன்றோ, அதுமாத்திரமல்ல பிராணனும் தனது வீட்டைவிட்டுப் பயணப்பட்டுவிடுகிறது.

அரசனில்லாது நகரத்திலுள்ள ஜனங்கள் எவ்வாறு நிராசையற்றுப்போகிறார்களோ அதுபோல், வியாதியுடையவர்கட்கு சுரம் கைவிட்டால் ஜனங்கள் நிராசையற்றுப்போகிறார்கள். இதுயாவருக்கும் தெரிந்தவிஷயம் (வைத்திய) நீர் கூறிய வைசூரி வியாதி உற்பத்தியாகுமுன் சுரமுண்டாகிப் பின்பு வைசூரியுண்டாகின்றது. பிரதான வியாதி வைசூரியேயென ஆயுர்வேத வைத்திய சாஸ்திர புத்தகங்களில் சொல்லப்பட்டுள்ளனவாய்க் காணப்படவில்லை. மகாராஜா தன்வந்திரியும் பரமசிவனும் வைசூரி வியாதிக்குச் ஜ—த்திரரோகமெனச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது மெத்தச்சிறுவியாதி யென்பது பொருள். வைசூரி வியாதிக்குச் சுரமுண்டானால் வருத்தமபாரமாயிருக்கும் சுரம் கோரமில்லாவிட்டால் யாதொரு தீங்கும் செய்யமாட்டா. அப்பொழுதும் இரண்டையும் சீர்தூக்கிப் பார்க்கில் சுரமே பிரதானம்.

சுரம் மானிடர்கட்கு மாத்திரமல்ல, தேவர்கட்கும், சடாத்துமாக்களுக்கும் சுரமிருக்கின்றன தேவர்கள் தமது மகாதத்துவத்தால் சுரத்தைத்தாங்கிக்கொள்ளுகிறார்கள். மக்களும் தமது கனம்தேவதத்துவங்களைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள் அதனாலன்றோ மக்களும் சுரத்தைத் தாங்கிக்கொள்ளுகிறார்கள்.



மற்றாத்துமாக்களுக்குச் சுரமுண்டானால் அவர்கள் சகிக்கேலாமல் பிராணனை இழந்துவிடுகிறார்கள். அதனால் பெரியோர்களிலிருந்து சிறியோர்கள் வரையிலும் சுரமே பிரதானமென்று தெரிந்தவிஷயம்.

மேற்சுட்டிய சங்கதி நமதபிப்பிராயமன்று சாஸ்திரப்பிரமாணத்தோடு கூறப்பட்டிருக்கின்றன. இச்சங்கதி பெரியவர்களும் பிரதான வைத்தியர்களும் பட்சபாதகமற்றுச் சுரமே பிரதானமென கூறுவார்களெனச்சிந்திக்கின்றேன். இதில் யாருக்காவது சமுசயமிருந்தால் பெருமாச்சரியமாயிருக்கும். ஆச்சரியம் மாத்திரமல்ல, மரக்கொம்பின் நுனியில் நின்று அடிக்கொம்பை வெட்டும் தன்மைபோன்றாம். இக்காரணங்கள் யாவருக்கும் பிரயோசனமுள்ளதாய் காணப்பட்டால், யாழ்ப்பாணத்திலுள்ள பிரதான வைத்தியர்களும், பெரும்வித்துவான்களும் இந்தியாவிலுள்ள வைத்தியர்களும், பெரும்வித்துவான்களும், மற்றவர்களும், பட்சபாதகமற்றுச் சுரமோபிரதானமென்றும், அல்லது வைசூரி நோயோபிரதானமென்றும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைப் பத்திரிகைவாயிலாய் தெரிவித்தால் ஜனங்கள் நன்மையை அடைவார்களென நினைக்கிறேன்.

வைத்திய இன்னுமொரு சிறுவசனம் புகட்டுகிறேன் கவனித்துப் பார். உமது பெரியவராகிய ஆயுள்வேத பாஸ்கர சுப்பிரமணிய பண்டிதர் செய்த திராவிட பாஷையாகிய ஜீவரக்ஷாமிர்தம் இரண்டாவது சுரரோகபடலத்தில் சுரமே பிரதானமெனச் சொல்லுகிறார். அப்புத்தகத்திற்குச் சாத்துகவிகள் கூறிய அறிஞர்களு மொத்துக்கொண்டார்கள்.

இவ்வளவு சாஸ்திரப் பிரமாணத்தோடு அறிவைப்புகட்டியும் நீர் ஒத்துக்கொள்ளாவிடில் எவ்வாறிருக்குமெனில் குரங்கின் கரத்தில் மாணிக்கத்தைக் கொடுத்ததன்மை போலாம்.

ஆங்கில டாக்டர்மாரும் யூனானி அஹீம்களும் சுரமே பிரதானம் என்று கூறுகிறார்கள். சுரம் சர்வரோகங்கட்கு அரசன் மாத்திரமல்ல சரீரத்திற்கும் ஒரு தேவதை போலாம், சுரம் பரமசிவனாலுண்டாக்கப்பட்டபடியால் பூசித்தும் நிவர்த்தியாக்கிக்கொள்ளக்கூடியவர் யாவெடுத்துக்காட்டிய பிரமாணங்கள், பரமசிவன், சரக்முனி, மகாராஜா தன்வந்தர், பிறதபாகபட்டர், பவுமிஸ்ற முதலானோர் செய்த நூல்களிலாராய்ந்தெடுத்துப் பிரமாணம் காண்பித்திருக்கிறேன்.

அவர்களியற்றிய நூல்களினால் இரான்ஹீக், ஆங்கிலம், ஜர்மனி, அமரிக்கன் முதலானோரும் வைத்திய சாஸ்ரம் கற்றிருக்கிறார்கள். இதற்கு யாராயினும் பிரமாணங்கேட்டால் எம்மாலுத்திரவழிக்கக்கூடும் ஏனெனில், தற்காலமுள்ள ஐரோப்பிய வித்துவான்கள் இந்து வைத்தியசாஸ்திரத்தை புகழ்ந்து கூறியிருக்கிறார்கள்.

162396.

புகழ்ந்துபேசிய ஐரோப்பியர் சாதாரண மனிதர்களன்று, போர்வேசா, பெரிய டாக்டர்கள் முதலியவர்களே மேற்சுட்டிய மகான்களால் சொல்லப்பட்ட புஸ்தகங்கள் இவ்வுலகத்தில் பிரமாணத்தோடு பிரதான புஸ்தகம். இதில் யாவருக்காயினும் சமுசயமிருந்தால் மாமரத்தின் கொம்பைவெட்டி நட்டுத்தண்ணீர் ஊற்றினால் தழைத்துப்பூத்துகாய்த்து பழுக்குமென்று நினைத்தவன் போலாம். யானெடுத்துக்காட்டிய பிரமாணங்களுக்கு குட்டிவைத்தியர்கள் பேசவேண்டியதில்லை யான் வினவும் வினாக்கள் மெத்தகம்பீரமாயிருக்கும் கட்டுக்கதையால் வெற்றிப்பெறுவது அபூர்வம். ஆயர்வேத சாஸ்திரப்பிரமாணத்தோடு நியாயம் காட்டுதல்வேண்டும். பத்திரிகையிடம் பெருதாகையால் இன்னும் தொடரும்.

இங்ஙனம்,

ம. கேங்காப்பிறசாத் பண்டிதர், கோளும்பு.

---

## மூங்கிலும் அதன் உபயோகமும்.

மூங்கிலும் அதன் உபயோகமும் என்பதைப்பற்றி மார்ச்சு மாதத்திய "பிழைக்கும் வழி" பத்திரிகையில் T. S. கிருஷ்ணமூர்த்தி என்பவர் அடியில் வருமாறு எழுதுகிறார். இந்தியாவைப் போன்ற உஷ்ணப் பிரதேசங்களில் மிகுதியாய்க்காணப்படும் மூங்கில், மனிதர்களுக்கு எவ்வளவு பிரயோசனமானதென்று எவரும் சொல்லாமலே அறிந்துகொள்ளலாம். அதன் ஒவ்வொருபகுதியும் ஜனங்களுக்குப் பலவிதங்களில் உபயோகப்படுகிறது. மூங்கிலை இந்தியா முதலிய தேசத்தவர்கள் கூடைகள் முடையவும், தட்டுகள் பின்னவும், வீடுகளின் கூரைகளுக்கும் உபயோகப்படுத்துகிறார்கள். சீனா முதலிய தேசங்களிலே ஜனங்கள் மூங்கிலினால் விளக்குக் கூண்டுகளும், தேயிலை, காப்பி, இவைகள் பானம் பண்ண உபயோகமான பாத்திரங்களும், கடுமழையிலும் தாங்கக்கூடிய உரப்பான குடைகளும், உடைகளும், சிப்பம் முதலியன கட்டுங்கயிறுகளும், செருப்புகளும், செய்ய உபயோகப்படுத்துவதுடன் மற்ற வீட்டுக்கு உபயோகமான ஸாமான்களும் செய்ய மூங்கிலை உபயோகப்படுத்துகிறார்கள்.

சீனாவில் மூங்கிலின் உதிர்ந்த இலையைக்கூட விடுவதில்லையாம். அதையும் எடுத்துக்குவித்து, தேயிலை முதலியவைகளைக் கட்டிப் பிறதேசங்களுக்கனுப்ப உபயோகிக்கிறார்கள். அந்த தேசத்தில் மூங்கிலைப் பிளந்து அதனுள்ளிருக்கும் சோற்றை எடுத்துப் பக்வப்படுத்தி மெல்லியதும் வழவழப்புமான காகிதங்கள் செய்து அதை சீனிவெடிக்கட்டு முதலியவைகள் செய்வதிலும், விளக்குக் கூண்டுகள் செய்வதிலும், உபயோகப்படுத்துகிறார்கள். * மூங்கிலின் இளங்குருத்துக்களை சீனர் ஜப்பானியர் தின்கிறார்கள்.



முந்நாட்களில் இந்தியாவின் காடு மலை ப்ராந்தங்களிலிருந்த ஜனங்கள் மூங்கிலையே யெல்லாவற்றிற்கும் உபயோகித்தார்கள். "மூங்கிலில் முத்துப்பிறக்கும்" என்பதும் அதன் உயர்வைக் கருதியேபோலும், மூங்கில்களிலிருந்து உதிரும் பூவைக் குத்தி யெடுத்த அரிசியும், உட்குடைவுள்ள மூங்கில் துண்டும், அவர்களுக்கு முறையே உணவு பதார்த்தமாயும், போஜன பாத்திரங்களாயும் பயன்பட்டன. இதரமரங்களிலும் இம்மாதிரிக் காகிதஞ்செய்ய உபயோகமாகும் ஸத்து இருக்கிறதானாலும், மூங்கில் உஷ்ணதேசத்தில் மிகுதியாயும் செழிப்பாயும் வளருவதால் அதையே பலரும் உபயோகிக்கிறார்கள்.

அம்மாதிரி மூங்கில் காகிதம் நம்நாட்டிலும் செய்யப்படவேண்டுமென்னும் கவலை நம் இந்தியர்க்கில்லை. சிலருக்கு இருந்தாலும் இன்னும் அவர்கள் அவ்வாறு செய்ய முன்வந்த பாடில்லை என்றே நாம் வருந்துகிறோம். ஜப்பானில் வீடுகள் மூங்கிற் காகிதத்தினாலேயே கட்டப் படுகின்றன வென்றால், அந்நாட்டில் மூங்கிலின் உயர்வை என்னென்று சொல்வது? இவ்வாறு எல்லாப்பயனுக்கும் உதவும் இம்மூங்கிலை "பூவுலக கற்பகம்" என்றாலும் ஏற்காதோ? அதன் உபயோகம் தெரியாமல் மயங்குபவர்கள் அதை அலக்ஷியம் செய்வார்களேயன்றி மற்றெவரும் அதை அலக்ஷியம் செய்யமாட்டார்கள். ஆற்று நிறையப் பாலோடினும் அத்தனையும் அருந்த எவர்க்கும் இயலுமோ" என்பதொப்ப, இம்மூங்கிலின் உயர்த்தியான உபயோகங்களை அறியாத மனிதர்கள் அதனை அலக்ஷியம் செய்து அதனால் வெகுநஷ்டமடைகிறார்கள். பிறதேசத்தவர் தமக்குக் கடவுள் கொடுத்திருக்கும் பொருள்களைக் கொண்டு கையால் உழைத்துப் பாடுபட்டு லாபம் அடைந்து மேன்மை பெற்றிருக்க, நாம் மாத்திரம் உண்டுறங்கி, இருந்தவிடம் விட்டெழாமலிருத்தல் தகுமோ? என்பதை மனதிற்கொள்ளும் இந்தியரே நாட்டின் நலங்கருதுபவராவர்.

---

## பொருட்காக்ஷிகளும் அவைகளின் பிரயோஜனங்களும்.

பொருட்காக்ஷிகளும் அவைகளின் பிரயோஜனங்களும், என்பதைப்பற்றி 1910-ம் வருஷம் ஆகஸ்டு மாசத்திய விவேக போதினி பத்திரிகையில் மிஸ்டர் D நடேசய்யர் அடியில்வருமாறு எழுதுகிறார்.

* இந்தியாவில் மைசூர் பிரதேசத்திலுள்ள சிலர்கள்கூட மூங்கிலின் இளங்குருத்துக்களை தின்கிறார்கள். பத்திராதிபர்.

சென்ற சில நூற்றாண்டுகளாக. பிரான்ஸ், அமெரிக்கா, ஜர்மனி, இங்கிலாந்து முதலிய அன்னிய நாடுகள், கைத்தொழில், கிருஷித்தொழில் முதலான தொழில்களில் மிதமிஞ்சின சாமர்த்தியமுள்ளவர்களெனப்பெயர் வாங்கிவிட்டார்கள். உதாரணமாய் பிரான்ஸ்தேசத்தவர்கள், அவர்களுடைய வாசனை சாமான்களிலும், நவீன உடைகளிலும், சித்திரவேலைகளிலும், பார்ப்போர் கண்களைக் கவரச் செய்யும் சில்லரை சாமான்களிலும் அவர்களைப்போல் எவர்களாலும் செய்யமுடியாதெனப் பெயர் வாங்கிவிட்டார்கள், அமெரிக்கர்களோ தையல்வேலைகளையோ, எழுத்துவேலைகளையோ லக்ஷணமாயும் சீக்கிரத்திலும் செய்துமுடிக்க சிறு இயந்திரங்களை உற்பத்தி செய்து வருவதிலும், உடுப்புகளுக்கு அபூர்வமான புள்ளிபோட்ட துணிகளை இயந்திரங்களால் செய்து வருவதிலும், கிருஷித்தொழிலை நவீன முறைகளால் நடத்துவதிலும், நோய்களுக்கு மருந்துகள் செய்வதிலும் அதிசாமர்த்தியர்கள் என்று பெயர் வாங்கி விட்டார்கள். ஜர்மானியர்களோ வெடிகுண்டுகள் பீரங்கிகள் முதலான யுத்தாயுதங்களைச் செய்வதிலும், பற்பல இடங்களுக்கு வேண்டுமான வேடிக்கையான தட்டுமுட்டு சாமான்கள் செய்வதிலும், உடுப்புகளுக்கு வேண்டிய பலதினுஸ் செக்குகள் உற்பத்திசெய்து வருவதிலும் அவர்களுக்கு ஈடு எவர்களுமில்லை யென்று பெயர் வாங்கிவிட்டார்கள். ஆங்கிலேயர்களோ பலதினுஸ் கச்சை துணிகள், மல்கள், மஸ்லின்கள், உரோமங்களால் செய்யப்படும் பலதினுஸ் ட்வீட்கள் செய்வதிலும் படங்கள் எழுதுவதிலும், ரணவைத்தியர்களுக்கு வேண்டிய ஆயுதங்கள் செய்வதிலும், நெசவு இயந்திரம் முதலான இயந்திரங்கள் செய்வதிலும், பலநோய்களுக்கான மருந்துகள் செய்வதிலும், போர்க்கப்பல்கள் செய்வதிலும் அதிசாமர்த்தியர்களென்று பெயர் வாங்கி விட்டார்கள்.

மேற்சொல்லியவாறு அந்தந்தத் தேசத்தியவர்கள் அவரவர்கள் புத்தி, யுக்தி, சாதுர்யங்களால் செய்துமுடித்த சாமான்களை, பிரதமமாக அவரவர்கள் தேசங்களின் பிரபல ஸ்தலங்களில் காக்ஷிசாலைகளை எற்படுத்தி, தேசத்திலுள்ள கைத்தொழிலாளிகளுடையவும் இதரர்களுடையவும் புகழ்ப்பெற்றுப் பலதேசங்கள் அறிய பிரஸித்திசெய்து வருவதுடன், தாங்களும் விருத்தியடைந்து வருகிறார்கள். அன்றி மேற்படி தேசங்கள் நாகரீகத்தில் விசேஷ விருத்தி பெற்றவைகளானதால், பல தேசத்தியவர்கள் சாமார்த்தியங்களை ஒப்பிட்டுப் பார்க்க பலதேசத்தியவர்கள் ஒன்றுகூடி, பொதுப் பொருட்காக்ஷிகள் அந்தந்தத் தேச தலைநகரங்களில் நடத்தி, சரிபார்த்து, ஒருவரையொருவர் போட்டி போட்டு,



விருத்தியடைந்து வருகிறார்கள். இவ்வாறாக அந்நிய நாட்டார்கள் கைத்தொழில்களிலும் கிருஷித் தொழில்களிலும் ஒருவரோடொருவர் போட்டி போட்டு, விசேஷ விருத்திபெற்று, அளவற்ற புகழையும் செல்வத்தையும் பெற்றுவிட்டார்கள்.

நமது இந்தியாதேசமோ, ஒரு காலத்தில்; மேற்கண்ட எல்லா அந்நியநாட்டாரும் மஹா நாகரீகம் பெற்ற தேசமென்று கருதி, நம்மவர்களின் அபூர்வ கைத்தொழில் வேலைகளைக்கண்டு மெச்சி, நம்மவர்களால் செய்யப்பட்ட வஸ்துக்களை அபார பொன் நாணயங்கள் கொடுத்துவாங்கியவர்களென்றாலும், நாம் பல நூற்றாண்டுகளாக அவ்விதமான புகழ்களை இழந்து, நமது கைத்தொழில்களை மறந்து, நாசமடைந்துவிட்டோம். ஆனால் இப்பொழுது சில வருஷங்களாக நூதன எழுச்சி தோன்றி, நமது தேசத்தில் கைத்தொழில் அபிவிருத்தி விஷயமாய் பல்மான பிரஸ்தாபங்கள் நடந்து வருகின்றன. அன்றி ஆங்காங்கு சில கைத்தொழிற்சாலைகள், நூல் நெசவு இயந்திர ஸ்தாபனங்கள் முதலியவைகள் ஸ்தாபனமாகி வருகின்றன. மேலும் சென்னப்பட்டணத்தில் ஓர் கண்ணாடி தொழிற்சாலையும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

அந்நிய நாட்டார்களை அனுசரித்து கைத்தொழில் அபிவிருத்தி விஷயமான பிரஸ்தாபங்கள் நடத்திவர வருஷா வருஷம் கூட்டங்கள் கூடி வருவதுடன், கூட்டங்களை அனுசரித்து அவ்வவ்விடங்களில் செய்துவரும் கைத்தொழில் பொருள்களையும் சேகரித்து பொருட்காக்ஷிகளை நடத்திவருகிறார்கள். அவ்விதப் பொருட்காக்ஷிகளை தொழிலாளிகளும் இதரர்களும் உற்சாகத்தோடு நடத்திவர ஆவேசிகளாய் ஆகிறார்களென்று நாம் பார்த்து வருகிறோம். ஆகவே நம்மவர்கள் ஒருகாலத்தில் கைத்தொழில் வேலைகளிலும், கிருஷி வேலைகளிலும், வைத்திய வாகடங்களிலும், அஸ்திர சாஸ்திர வேலைகளிலும், உலோஹங்களை சேகரிக்கும் சுரங்க வேலைகளிலும், சித்திரமெழுதும் வேலைகளிலும் மஹா நிபுணர்களென்று அந்யர்களால் மெச்சப்பட்டவர்களாயிருந்தாலும், இப்பொழுது நாமடைந்திருக்கும் மஹாபரிதாபமான ஹீனஸ்திதியையுணர்ந்து, நாம் மேலும் மேலும் விருத்திக்கு வரும் வழிகளை நாடி தகுந்த முயற்சியெடுத்து, மேற்சொல்லியவாறு நவீன நாகரீக வழிகளை அனுசரித்து, அவ்வவ்விடங்களில் கூடிப்பேசும் வழக்கங்களையும் பொருட்காக்ஷி நடத்தும் முறைகளையும் கைவிடாது நடத்திவரவேண்டியது அத்தியாவசியமாகும்.

## தனக்குத்தானே தீங்கு சம்பாதித்துக்கொள்வது.

இவ்வுலகின் கண் வசிக்காநின்ற மானிடர்களில் அநேகர் தத்தம் வேலைகளைச்செய்து காலங்கழிப்பதாக நினைப்பதில்லை யானை தன் தலையில் மண்ணைவாரிப் போட்டுக்கொள்வது போல் நாய், குரங்கு, பூனை, கிள்ளை, புரு முதலிய ஜீவஜெந்துக்களை வளர்க்கிறார்கள், அதனால் வரும் பாவமின்னதென்று அறிகிறதுமில்லை. கிள்ளையை வேஷாக்காக மடியிலாவது கைகளிலாவது வைத்துக்கொண்டிருக்கிறது, நாய் பூனை அதை ஒரே கௌவாகக்கௌவிக்கொண்டு போகிறது, நாயோ வருகிற மனிதர்களைக் கடிக்கிறது அவர்கள் துஷ்டஜெந்துவென்று பிரியாது செய்கிறது அதற்குடையவர்கள் விசாரணைக்குப்போயும் வக்கீல்களை நேமித்தும் தப்பித்துக்கொள்ளவேண்டிய மார்க்கங்களை ஊர் ஊராய் போய்த்தேடுகிறது சமய ஊர்ச்சிதமாக சிலர் அபராதமும் செலுத்துகிறார்கள், கோரட்டார அப்படிப்பட்ட நாயைக் கொன்றுபோடவும் சொல்கிறார்கள். சில நாய்கள் வீட்டுக்கூறை ஏறினால் அதைக்கொல்கிறார்கள், அது கூறை ஏறினலிவர்களுக்கென்ன விட்டைப் பந்தோபஸ்து செய்யவேண்டியது தானே நாயை அடிப்பானேன் அதைச்சுமப்பானேன் உங்களை யாரப்பா இவைகளை வளர்க்கச்சொல்கிறது ஐயோ பரிதாபம் தனக்குத்தானே தீங்குசெய்வாருண்டா இதை யறியாதல்லவா சிலர்கள் புலாலை உபயோகிக்கிறார்கள். அந்த புலாலை யுண்ணாவிட்டால் பொழுதுபோகாதா! அல்லது சோறு செல்லாதா! வயறு நிறையாதா! வாயிருக்காதா! ஒருயிரைக்கொன்று இந்த அநித்தியமான தேகத்தை பெருக்கவேண்டும். கொல்லாமையைக் கைக்கொள்ள வேண்டியதாக எத்தனையோ சாஸ்திரங்கள் முறையிடுகிறது. அவைகளையாவது சிலவிவேகிகளாயிருப்பவர்கள் கவனித்துக் கொள்ளக்கூடாதா, சிலதனவான்கள் மறந்திருக்கிறார்களல்லவா இனியாவது கொல்லாமை என்ற விரதத்தைக் கைக்கொள்வீர்களாக அடியிற்கண்ட நாயனார் வாக்கியத்தையும் கவனிக்கற்பாலது, "கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண் பேற செல்லா துயிருண்ணுங்கூற்று" "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி யெல்லாவுயிருந் தொழும்" "தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூ னுண்பா னெங்ஙனமாளு மருள்" படைகொண்டார் நெஞ்சம்போனன் றூக்கா தொன்றனுடல்சுவையுண்டார் மனம்" "முக்குத்தைத்தரியாரே பிறர் தேகத்தட்குத்தி யூன்றின்பவர்" எனக்கூறுகின்றனர். "கொல்லா விரதங்குவலயமெல் லாமோங்க, வெல்லார்க்குஞ் சொல்வதென்னிச்சை பராபரமே" "கொல்லாவிரதங்கைக் கொண்டவரே நல்லோர்மற், றல்லாதார் யாரோ வறியேன் பராபரமே" எனத் தாயுமானவர் கூறுகின்றனர்.



## பழனித்தாலூகாவில் பிளேக் விஷயங்கள்.

பழனி:—சென்ற ஆறுமாத காலமாக இந்நகரைப்பிடித்திருந்த பிளேக்கென்னும் கொடிய வியாதி அநேகம் அருமுயிர்களைக்கவர்ந்துகொண்டு தற்சமயம் ஒன்றுமில்லாமல் நின்றுபோனதால் சர்க்காரார் ஜனங்களை குடியேரும்படி சொல்வதாகத் தெரியவருகிறது. தண்டபாணிக் கடவுளுடைய சந்நிதிக்கும் பயங்கரத்தால் யாத்திரிகள் ஒருவரும் வருகிறதில்லை.

ஆய்க்குடி:—இது பழனியின் கிளக்கில் திண்டுக்கல் ரஸ்தாவில் 5-வது மைலிலுள்ள யூனியன் கிராமம் இதிலும் இதன் சுற்றுப்பட்டிகளிலும் மஹாமாரி பரவி 500 ஜனங்களைக்கொள்ளைக்கொண்டு ஊர்கள் காலியாகிவிட்டது.

கணக்கன்பட்டி:—இந்த கிராமத்திலும் அநேகம் வீடுகளில் எலிகள விழுந்து 7 கேஸ்கள் ஏற்பட்டு ஊர் காலியாகி காடுகளில் ஜனங்கள வாசம்புரிகிறதுடன், இந்த தாலூகாவின் சுற்றுக்கிராமங்களான பாலசமுத்திரம், நெய்க்காரபட்டி, அமறம்பூண்டி, மேலக்கோட்டை, பூலாம்பட்டி, எரமனுபக்கன்பட்டி, கோம்பைபட்டி, பஞ்சநாயக்கன்பட்டி, சத்திரப்பட்டி, விருப்பாக்ஷி முதலான கிராமங்களிலும் கேஸ்கள் ஏற்பட்டு ஊர் காலியாகிவிட்டது. அநேக ஜனங்களும் இனாக்குயூலேஷன் செய்துகொண்டும் இன்னம் செய்தும் வருகிறார்கள். அந்த தாலூகாவில் பேரில்மட்டும் கடவுளுடைய கோபம் இவ்விதம் ஏற்பட்டதானது அதிக ஆச்சரியமாயிருக்கிறதும் ஜெகதீசன்தான் காப்பாற்றவேண்டும்.

பூ. ப. செல்லக்குமாரக்கவுண்டர்,
கணக்கன்பட்டி.

---

## சுத்தமனமும் ஒருமைப்பட்ட சிந்தையும்.

உலகப்பற்றுகளினின்று ஒருவன் வெளியேறிப்பறக்க இரண்டு இறக்கைகள் வேண்டும். கபடமின்மையும் தூய்மையுமாம். தன்நோக்கமெல்லாம கபடமின்மை யென்ற இசைபற்றியதாக இருக்கவேண்டும். தன் அன்பெல்லாம் தூய்மையென்ற இசைபற்றியதாக இருக்கவேண்டும். அவன் நோக்கம் இறைவனிடம் செல்லவேண்டும். அவன் அன்பு இறைவனைத்தழுவவேண்டும். அவரையே சுகிக்கவேண்டும், மனச்சஞ்சலமின்றிச்சமாதானம் உள்ளானகில் பிறர் நற்கருமங்கள் உனக்குத் தடைசெய்யாவாம். உன்நோக்கமும் எண்ணமும் கடவுள் கைங்கிரியத்திலும் அயலான் க்ஷேமத்திலுமிருப்பின் உன்னுள்ளத்தில், ஆத்மசுகம் அனுபவிப்பாய் ["கெடுக்கவல்லதுங்கெட்டவர்

தங்களை—எடுக்கவல்லது மிம்மனை மென்றதை—யடக்கவல்லவனை பவக்கடல்—கடக்க வல்லவனுவன் கடிதமோ" பிரபுலிங்க லீலை] உன்னெஞ்சம் நேர்மையாக இருப்பின், பார்க்குமிடமெல்லாம் சத்தியதர்சனமும், படிக்கும சாஸ்திரங்களெல்லாம் நல்ல ஆதேசமுமாகத் தோன்றுவதாகும். எவ்வளவு அற்பமான வஸ்துவாயிருப்பினும், எவ்வளவு கேவலமானதாகவிருப்பினும், அது அது அததன்கண் அமைந்துள்ள ஈசன் அருளை அறிவிப்பதாகும். மனத்துக்கண் மாசிலனாக இருக்கப்பெறின் எல்லாம் தெளிவாய் ஸ்படிகம் போலத்தோன்றும் களங்கம் ஒன்றுமிராது. ஈசனை மெய்யாய் உணர்வாய். சுத்தமனத்துக்கு வானமும் பாதாளமும் உள்ளபடி வெளியாகும். ஒவ்வொருவனும் தன்னுள்ளத்தில் நீதிக்குத்தக்கவாறு தனக்குப் புறம்பாயுள்ளவைகளைப் பற்றி எண்ணுகிறான். சந்தோஷம் உலகில் உண்டானால் நல்ல சிந்தனையுள்ளவன் உடனேயனுபவிக்கிறான். துக்கம் உலகில் நேர்ந்தால் தீயசிந்தையுள்ளவன் உடனே உணருகிறான். தீயிற் பொகட்ட இரும்பு துருநீங்கிச் சுத்தமாகிறது. அதுபோல்க் கடவுளை நோக்குகிறவன் தன்மோகங்கள் நீங்கிப்புது மனிதனாக் ஆகிறான் கொஞ்சம சோம்பலாற் சோர்ந்தால் சொற்ப அனுஷ்டானத்துக்கும் பயப்படுகிறான் பிறர் சகாயம் நாடுகிறான். தம்மை ஜயித்துத்தீரனாகக் கடவுளை வழிபடின், பாரமானதாக முன்னெண்ணிய விஷயங்கள் இலகுவாம்.

## CONVERSATION WITH THE DEAD.

### இறந்த ஆவிகளுடன் சம்பாஷணை.

இவ்வுலகத்தேயுள்ள மனிதர்கள் இறந்தவர்களோடு சம்பாஷணை செய்தல் கூடுமென்று "ரிவியு ஆப் ரிவியூஸ்" என்ற ஆங்கிலப் பத்திரிகைக்கு அதிபரான ஸ்றேட் (Stead) என்பவர் பின்வரும் சமாசாரத்தினால் வெளியிடுகின்றார்.

மறித்த ஆவிகளுடன் சம்பாஷிப்பது ஆச்சரியமும் பொய்மையும் போல் தோன்றினாலும் சாதன் முறையில் அஃது உண்மை என்று திருஷ்டாந்தப்படுத்தப்படுகின்றது. உலகத்திலேயுள்ள சமயங்கள் எல்லாம், மறு உலகத்தைப்பற்றிய நிர்ணயம் உடையன. எல்லா மதங்களும் ஆத்ம தத்துவ ஞான சாஸ்திரங்களும், மனிதனுடைய இயற்கை அறிவுமாகிய எல்லாம் மனிதன் உடம்பைவிட்டு நீங்கிய பின்னும் ஜீவிக்கின்றான் என்று சாதிக்கின்றன. இந்த உண்மையைக்குறித்து ஆராய்ச்சி செய்வதற்காக வெகு பிரயாசை எடுக்கப்பட்டது. ஆவிகளோடு சம்பாஷிப்பதற்காய் ஆயத்தப்படுத்தப்பட்ட (Julia Burean) மண்டபத்திலே இப்பயிற்சி நடைபெறலாயிற்று. தாம் இவ்வுலக வாழ்வை ஒருவியபின் குறித்த மண்டபத்திலே வந்து சம்பாஷிப்பதாய் அநேகர் வாக்குப்பண்ணியிருந்தார்கள் என்றாலும் அவர்களில் அரைவாசிப்பேர் மாத்திரம் கொடுத்த வாக்கை நிறைவேற்றினர். முன்னமே இறந்துபோனவர்கள் தம் உறவினர்களை மறந்துபோவதில்லை என்று தெரிவித்திருக்கின்றார்கள்.



கடந்த புரட்டாசி மாதம் 16உ மேற்படி மண்டபத்தில் நடந்தவோர் சம்பாஷணை வருமாறு:—

ஆவி:—நீ காலன்ஸ் நகரத்துக்குப் போவாயானால் யான் உன்னைப் பின் தொடருவேன்.

ஸ்றேட்:—நீ யார்?

ஆவி:—யான் சிறிது காலத்துக்குமுன் ஆகாய விமானத்தால் மரித்துப்போன "டெல்பவர்"

(இப்பெயருள்ள மனிதனை அவ்விடத்தில் யாரும் அறிந்திலர்.)

ஸ்றேட்:—பறக்கும் யந்திர சாரதியாகிய "புலோரவ்" என்பவரை உனக்குத் தெரியுமா?

ஆவி:—ஆம் அந்த இளைஞனை அறிவேன். அவனை எச்சரிக்கின்றேன், அவனுடைய யந்திரத்தில் பழுதிருக்கின்றமையால், பிரயோகிப்பதைக் குறித்துக் கவனமாயிருக்கும்படி சொல்லுகின்றேன்.

ஸ்றேட்:—நீ அவ்வகை யந்திரப்பிசகினாலே அவமிருத்தடைந்தாயா

ஆவி:—ஆம், அஃது நமக்குத் தெரிந்திருக்குமென்று எண்ணினேன்.

ஸ்றேட்:—நீ அவமிருத்தடைந்த வகை யாது?

ஆவி:—என்ன வகையென்று சொல்லமாட்டேன், அது தெரியவில்லை.

ஸ்றேட்:—நீ விழுந்தபோது உனக்கு அறிவு இருந்ததா?

ஆவி:—சொல்லுகிறேன் கேளும். நான் விழுகின்றேன் என்று தெரிந்தது. ஆனால் நிலத்தை சமீபதற்கு முன்னமே என் அறிவு கெட்டுப்போயிற்று. என் சரீரத்தில் யாவும் நோவு உணர்ந்திலேன் என் ஆவி மேலெழும்புவதுபோ லிருந்தது. அந்தரத்திலே மிகுந்த வேகமாய்ச் சுழன்றுகொண்டிருந்தேன். அப்பொழுது ஏதோ ஸ்நாப் என்று சத்தங்கேட்டது. அப்பால், யான் ஆகாயத்தில் என் பிராணத்திற்கு மேலே பறந்துகொண்டிருந்தேன். அதைக் குறித்து யாதும் வெறுப்படையவில்லை. மகா வல்லமை பொருந்திய ஒரு உருவைக் கண்டு திகில்டைந்தேன் அஃது என்னை ஆறுதற்படுத்திற்று.

ஸ்றேட் என்பவர் அந்த ஆவியின் எச்சரிப்பைப் புலோரவ் என்பவருக்கு அறிவித்தபடியால் அதிக மோசத்திலிருந்து தப்பினர்.

### ஹாஸ்யத் துணுக்குகள்.

சந்தாதாரன்:—பத்திராதிபரைப் பார்த்து ஐயா பத்திராதிபரே! சென்ற 4-வாரங்களாக்த் தாங்கள் பத்திரிகையில் வெளியிடும் விஷயங்கள் மிகவும் நன்றாயிருக்கின்றன.

பத்திராதிபர்:—நான் ஒருமாத லீவிலிருந்து இப்போதுதான் வந்தேன். பத்திரிகை விசேஷங்களென்ன!

ஜெயில் வேடிக்கை பார்ப்பவர்:—நீ இங்கு இருப்பதற்கு என்ன காரணம்?

கைதி:—விருப்பந்தான் காரணம்.

வேடிக்கை பார்ப்பவர்:—எவ்விதம் விவரமாய்ச் சொல்?

கைதி: நான் ஒருவனுடைய கடியாரத்தில் விருப்பங்கொண்டேன் அதை நான் வைத்துக்கொண்டிருப்பதில் அவனுக்கு விருப்பமில்லை. நியாயாதிபதி நான் இந்த இடத்தில் 5-வருஷம் வரை இருக்கும்படி விருப்பங்கொண்டுவிட்டார்.

## ஓர் கடிதம்.

அன்பிற்சிறந்த அண்ணலே! நீவிர் எம்முழி அன்பால் இனிதுடன் அனுப்பிய "சுதேச வைத்திய ரத்தினம்" எனனும் அரும்புகழடைந்த ஆயுர்வேத சாஸ்திரம் வந்தன கண்டு வகையுளங்கொண்டு வாசித்துணர்ந்து அளவிலா ஆனந்தமடைந்தோம்!

குரைகடலுடுத்த விக்குவலயத்திற்கு குறைவிலா நன்மை நல்கும்! என்பதற்கு அணுவளவேனும் ஐயமில்லை! ஆ! ஆ!! நம் "சுதேச வைத்திய ரத்தினத்தின்" நனியை எம்நாவொன்றில் நவிலற்பாலதோ! நோய்களையும், நோயின் குணங்களையும், நோயை நிவர்த்திக்கும் சிறந்த மூலிகைப் பிரயோகங்களையும், மற்றுமுள்ள பற்பல ஔஷதங்களையும் யாவரும் எளிதில் கொள்ளைக்கொண்டுணரும்படி தெள்ளிதின் விளக்கியிருக்கும் இந்நூலின் மாண்புசாலவும் பெரிதே! இதனால் விளங்கும் தங்களின் தகைமையின் பெருமையையும் கருணையும யாமென்றும் மறக்கற்பாலதன்றும்

இத்தகை இனிதாகிய தங்களின் "சுதேச வைத்திய ரத்தினமாகிய" ஆயுர்வேத சாஸ்திரத்தை ஆரியநாட்டு அன்பர்கள் அன்புடன் ஆதரித்து அரும்பயன் பெருவார்களாக இவைநிற்க.

இப்பூவுலகிற்கு இன்றியமையாச் சிறப்புடையதாகிய "சுதேச வைத்திய ரத்தினம்" எனும் இவ்வித அரிய நூலும் இயற்றி தற்காலமும் "வைத்திய போதினி" என்னும் பெருமையான்ற பத்திரிகையும் வெளியிட்டு நம்தமிழ் நாட்டிற்கு நவிலவொண்ணு! நலம் விளைத்த தாங்கள் நீடித்த ஆயுளுமநித்திய சுகமும் பெற்று வாழ்வுறுமாறு! ஆதியாகிய பெருமான் அருள்புரிய அஞ்சலிக்கிறோம். மங்களம்! தங்குக!!

இங்ஙனம்,
மா. வே. சோணைமுத்து ஆசாரி, மார்க்கயன்கோட்டை.

---

## ஜப்பானிய வைத்தியர்கள்.

ஜப்பானில் வைத்தியர்கள் (Bill) சீட்டனுப்புகிறதில்லை. ஜப்பானில் வறியவனொருவனுக்கு வைத்தியஞ் செய்தால் வேதனங் கேட்பதில்லை. தரித்திரம், நோய் என்னும் இரு சத்துருக்களும் ஒரு வீட்டுள் பிரவேசிக்கின், கொடுத்தாலும் அந்த வீட்டிலிருந்து எதையும், வைத்திய சகாயத்துக்காய்ப் பெறுபவர்கள் திருடர்களென்பதாய் வைத்திய குழாத்தினருளொரு பழமொழியிருக்கின்றது. ஜப்பான் ஜீவிய காலத்தைக் குறித்து ஒரு வைத்தியர் உபந்நியாசித்தபோது, வைத்தியர்கள் நோயாளர்களுக்காய்த் தங்காலத்தையும், மருந்தையும் பரித்தியாகஞ் செய்வதோடு நோயாளிகட்குத் தேவைப்படுவனவற்றைப் பெற்றுக்கொள்ளப் பணமில்லாவிடின் பணங்கொடுத்து முதவிபுரிகின்றார்களென்பதாய்ப் பலமுறை கூறியிருக்கின்றார். ஜப்பானில் ஒவ்வொரு வைத்தியரும் தமது வைத்தியசாலையில் தாமே மருந்து கலப்பவராக விருக்கின்றார். ஜப்பான் இராஜியத்தில் மிகச்சொற்ப மருந்துஷாப்புகளேயிருக்கின்றன.

தனவந்தர் ஒருவர் ஒரு வைத்தியரை வைத்தியஞ் செய்வதற்காய்த் தம்மிடத்துக் கழைப்பாராயின், வைத்தியத்துக்காய் வேதனம் பெறச் சீட்டனுப்புவாரென ஒருபோதுங் காத்திருப்பதே கிடையாது. உள்ளபடி பார்ப்பின் ஜப்பானில் வைத்தியர் பில் கிடைக்கவே கிடையாது. தற்கால நடவடிக்கைகளங்கு விழலானவையாய்க் கவனிக்கப்படுகின்றன ஜப்பானிலுள்ளவர்கள் யதார்த்தவான்களாதலால் வைத்தியர் பில்லனுப்புவது ஆவசியகமற்ற செய்கைளாகும். வைத்தியர் நோயாளியை சௌக்கியப்படுத்திய பின்னர் நோயாளி தன்னால் கூடியவளவாய் ஒரு வெகுமதியைக் கொடுக்கின்றார். வைத்தியர் மனம் பூரிக்கப் பெற்றவராய் முகமலர்ச்சி காட்டி நோயிலிருந்தும சொஸ்தமடைந்தவருக்குவந்தனஞ் செய்து அவருக்கு நன்றி கூறிச் செல்கின்றார். இத்துடன் கொடுக்கல் வாங்கல் முற்றுப்பெறுகின்றது.



## வைத்தியக் குறிப்புகள்.

வெந்நீர்:—ஒழுங்குப்படி சுடவைத்து ஆரினஜலத்தை குழந்தைகளுக்குப் பால் கொடுக்கிறதற்கு இடையில் கொடுத்தால் ஜீரண சக்தியை அதிகப்படுத்தி தேகாரோக்கியத்தை யுண்டு பண்ணும்

கண்கட்டிக்கு:—ஒரு மேஜைக்கரண்டி அளவு சோடாப் பவுடரை வெள்ளைத்துணியில் முடிந்து அது நனையும்படி வெந்நீர்வார்த்து அந்தச்சூட்டுடனே கண்ணில் வைத்துகட்டி இரவு முழுதும் வைத்துகாலையில் எடுத்துவிடவும் உடனே கண்கட்டி சௌக்கியமாய்விடும். இன்னும் கொஞ்சமிருந்தால் மறுபடியும் அதுபோலவே வைத்துக்கட்டவும். அல்லது கோழிமுட்டையின் வெள்ளைக்கருவை இறகினால் எடுத்து இரவு படுக்கைக்குப் போகுமுன் கண்கட்டிக்குப்போட்டுக்கொண்டாலும்குணமாகும்

வெயர்வை நீங்க.—க்ஷயரோகக்காரர்களுக்கு இரவில் காணும் அபிரிமிதமான வெயர்வையை நீக்க, உப்புக்கரைத்த ஜலத்தை மெல்லிய துணியில் நனைத்து தேகத்தில் தடவவேண்டியது.

குழந்தைகள் பருகுத அல்லது பால்போட்டுவதற்கு குழந்தைகளை நித்திரையிலிருந்தெழுப்பாதே. குழந்தைகளின் இராத்தூக்கம் ஆகாரம் கொடுப்பதை விடமேல்.

ஆகாரம்:—அழும்போதெல்லாம் பால் கொடாதே, மெல்லிய ஜீரணக்கருவி கெட்டுப்போய் பல தொல்லைக்குட்படுத்தும், தலைநோய் வயிற்றுநோய் அல்லது வேறு பாதைகளால் குழந்தைகள் அழக்கூடும். ஆனால் பசியினால் அழுகிறதென்ற குறிப்பைசெம்மையாய்த் தெரிந்துகொண்டால் பால்குடுக்கலாம்.

## விசித்திர விஷயங்கள்.

**கம்பி யில்லாத் தந்தி:**—இனி ஒவ்வொரு பெரிய ஸ்டீமரிலும் கம்பியில்லாத தந்திப்பிரயோகம் நடத்தும்படி ஒரு ஏற்பாடு உண்டாகப் போகிறது. இதனால் நடுச்சமுத்திரத்தி லோடிக்கொண்டிருக்கும் மரக்கலததுக்குச் செய்தியனுப்பமுடியுமாம்.

---

போப்பரசரிருக்கும்படியான வாட்டிக்கன் புத்தகசாலையில் கையெழுத்து பிரதியின் சுருளொன்றிருக்கிறது. இதனுடைய நீளம் 300 அடியும் அகலம் ஒரு அடியுமாம். இப்பிரதி ஒரு சர்ப்பத்தின் தோல் என்றும் இதை பதனிட்டு அதிலேயே அது எழுதப்பட்டிருக்கிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஆதிசேஷனென்றழைக்கப்படும் பாதாள உலகத்துப் பாம்பின் தோல் போலும்.

---

**பாடுகிற மரம்:**—நியூபியாவில் "சோபார்" என்கிற ஒருவகை நூதன மரமிருக்கிறது. காற்றடிக்கும்போது குழல் இசையை விட இனிமையான விதமாய் அம்மரம் பாடுகிறதாம். அதன் கிளைகளில் பூச்சிகளாலுண்டான துவாரங்களால் இவ்வித தொனி பிறக்கிறதெனக் கருதப்படுகிறது. செத்தவர்களின் ஆவிகள் வந்து மரத்திலிருந்து பாடுகின்றனவென்று அவ்விடத்து ஜனங்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

---

காதழ்தீவிலுள்ள பூனைகள்யாவும் கருப்பு நிறமுடையன. வேறு நிறமுள்ள பூனைகள் அங்கே ஒரு போதும் காணப்படமாட்டா இவை கடலோரத்தில் வசிக்கின்றன. எலிகளுக்குப்பதிலாக நண்டுகளையும் மீன்களையும் பிடித்துத் தின்று வளருகின்றன. குதிரை, மாடு, நாய், ஆடு, கோழி முதலிய மிருகங்களும் பக்ஷிகளுமுண்டு. அவையாவும் காட்டுமிருகங்களாயும் பட்சிகளாயுமிருக்கின்றன யாவும் கருப்பு நிறமுடையவாம்.

---

கானடாவில் ஒரு மாது 120 வருஷங்களாகச் சீவிக்கின்றாள், இவளுக்கு விவாகமாகி 18 வயதில் புருஷனிறந்து போயினன் பின்பு இவள் விவாகஞ் செய்து கொள்ளவில்லை. அவளுக்கு குழந்தைகளுமில்லையாம். இவள் தனிமையாக வேலைக்காரர்கள் யாருமின்றித் தனக்கு வேண்டியவற்றைத் தானே செய்து சீவித்து வருகின்றாள். இவளிடம் 1 லட்சம் பவுன் உள்ளது. இதை அனுபவிக்கும் உரிமையுடையார் எவரோ தெரியாதென ஓர் அமெரிக்கப் பத்திரிகை கூறுகின்றது.

---

**ஸ்ரீ. சீமானின் தருமசாதனம்**—லீஸ்ட் என்ற இடத்திலுள்ள ஆர். திம்டன் என்னும் பிறபு இறந்தபோது, அவர், 1,119,8ஃ5 பவுனைத் தருமசாதனஞ் செய்தனர். இத்தொகையில் பப்டிஸட்மிஷன் சபையாருக்கு 46/000 பவுனும், லண்டன் மிஷனரிச் சபைக்கு 2/4000 பவுனும் விடப்பட்டது. இத்தொகை முழுதும் அடுத்த இருபது வருடத்துட் செலவழிக்கப்படல் வேண்டுமென்பதும், அதுவும் பெரிய பிரித்தானியாவிலும் முகம்மதியர் வசிக்கும் நாடுகளிலும் செலவழிக்கப்படாதென்பதும் அச்சீமானின் கட்டுப்பாடாம்.



## விடுகதை வினா.

விரிகடல்வளைந்த விப்புவிதனி லுள்ளதோர்
விருக்கத்தின் பெயரொன்று
விருப்புறு மாந்தர்க்குயர்வு தருமங்கமொன்று
விலங்கிற்பெரு மிருகமொன்று
வரிசையுடனிவைகளை வழுத்திடில் மூன்றெழுத்தை
வளமையாய்க் கொண்டுநின்ற
வார்த்தையாகு மிவ்வாக்கியத்தை முறையதாய்
வரையநேருங் குருக்குபமூன்று
வரிசனிலுயப்பெயர்களை வகையாயுரைக்குமிதனை
வலமைமிகு கவிவாணர்
வழுவறவுணர்ந்தனுப்ப வழங்குலவு கும்பகோணமா
வாழ்க்கையில்வாழு "சந்திரசேகரின்"
அரிவரிய கருணையினண்ணலாலில்வ வனியிலென்றும்
அறியாப்புகழ்நிறீஇ யுலவுகின்ற
அதிமேச்சமுறும் "வைத்திய போதினி" அணங்கே!
அடைபுடன்கொண்டென்பால் வருகுவாயே!

இங்ஙனம்,
**மா. வே. சோலைமுத்து ஆசாரி, மார்க்கயன்கோட்டை.**

## வர்த்தமானங்கள்.

**மஞ்சூரியாவில் கொள்ளை நோய்:**—மஞ்சூறியா தேசத்தில் கொள்ளைநோயுண்டாகி தினம் 100-பேரிறக்கின்றனர். 'பட்சியேசன்' என்னுமிடத்தில் நாலாயிரம் பிரேதங்கள் தகனம் செய்யப்படாது கிடக்கின்றன. ஹூலன் என்னுமிடத்தில் உறைபனியில், பனியுருகி ஆறு ஓடும்போது அள்ளப்பட்டுப் போகும்படி குவியல் குவியலாகப் பிரேதங்கள் போடப்பட்டிருக்கின்றனவாம்.

---

**அந்துப்பூச்சியினால் உண்டாகும் நாசத்தை விலக்க ஓர் உபாயம்.**—நெல், துவரை இவைகளைப் போலுள்ள மற்ற தானியங்களைச் சேகரித்து சிலகாலம் ஓரிடத்திலேயே வைத்திருந்தால் அவைகளுக்கு அந்துப்பூச்சியினால் உண்டாகும் நாசம் எவ்வளவென்று எல்லோரும் அறிவார்கள், இதைத்தடுப்பதற்கு ஓர் நண்டைக்கொன்று நெல், துவரை முதலிய குவியல்களின் நேரே தொங்கவிடவும். இதைச சிலர் செய்துயுந்து பலனை அடைந்திருக்கிறார்களாம்.

---

**தாரம்பூர் க்ஷயரோகிகள் சாலை**—பம்பாய்க் கனவான் மிஸ்டர் மலபாரியால் தாரம்பூரில் க்ஷயரோகிகளுக்குக் கட்டி விடப்பட்டிருக்கும் சுகவாசச்சாலையைத் தமது தகப்பனார் எட்வர்ட் சக்கரவர்த்தியின் பேரிட்டழைக்க ஜார்ஜ சக்கரவர்த்தி உத்தரவு கொடுத்துவிட்டாரென்று சொல்லப்படுகிறது. ஜார்ஜ் சக்கரவர்த்தி தாமும் மேரிராணியாரும் மிஸ்டர் மலபாரி அந்தச்சாலையை ஸ்தாபிக்கப்பட்டிருக்கக்கூடிய சிரமத்தையும் அவருடைய தயாளச் சிந்தையையும் மிகுதியும் பாராட்டுவதாய் அவருக்கு உறுதி கூறியிருக்கிறார்.

"கிளேமெண்டு மேயர்ட்"—என்னும் ஆகாயக்கப்பலை பிரிட்டிஷ் அரசாங்கத்தில் வாங்கியிருக்கிறார்கள். அதன் விலை சொந்தக்காரரால் 25000 பவுனாகக் கூறப்பட்டு 18000 பவுனென வாங்கப்பட்டதாம். இதில் பிரிட்டிஷ் போர்ச்சங்கத்தில் 12500 பவுன் கொடுபட்டு மிகுதி பார்லிமெண்டரி எரியல்கமிட்டி என்னும் சங்கத்தாரால் கொடுக்கப் பட்டதாம்.

---

பற்கள்—இளமைப் பருவத்திலேயே அநேகருக்கு பற்கள் தளர்ந்து விழுந்துபோய் விடுகின்றன. இதற்குக்காரணம் அவர்கள் அதிகமாக இனிப்புள்ள வஸ்துக்களை சாப்பிடுவதினால்த் தானென்று தெரியப்படுகிறது. ஒரு பல்லை, சர்க்கரைகலந்த தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து சிலநாள் வைத்திருந்து பிறகு அதை எடுத்து நசுக்க அது பொடியாகப்போகுமாம். இதினால்தான் நாம் சாப்பிடும் சர்க்கரையும் நமது உமிழ்நீர், நமது தேகச்சூடு, முதலியவைகளோடு சேர்ந்து சீக்கிரத்தில் கெட்டுப்போகின்றனவென்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

---

பட்சிகளைக் காப்பாற்றல்:—இங்கிலாந்து, பிரான்சு முதலிய ஐரோப்பிய தேசங்களில் பட்சிகளின் இறகுகளால் பெண்களணிந்து கொள்ளும் தொப்பிகள் செய்யப்படுகின்றன. பட்சிகளின் இறகுகள் வைத்துச் செய்யப்படும் தொப்பிகள் மிகவு மலங்காரமுடையனவாகக் காணப்படுகின்றன. ஆகவே பட்சிகளின் இறகுக்கு மேலைத் தேசங்களில்திக விலையுண்டு இது காரணமாக அனேக அழகுள்ள பட்சிகளை பலவிதங்களிலும் சுட்டுக் கொன்று வந்தார்கள். இங்ஙனம் செய்துவரின் உலகத்திலுள்ள பட்சிகளெல்லாம் நிர்மூலமாய்விடுமெனக் கண்ட புண்ணிய சீலர் பலர் சபை கூட்டிப் பட்சிகள் அதம் பண்ணப்படாதபடி காலத்துக்குக் காலம் பலமுயற்சிகள் செய்துவந்தார்கள். இவர்களது முயற்சியால் இந்தியாவிலிப்பொழுது பட்சிகள் கொல்லப்படுவதுமில்லை இறகுகளிந்தியாவிலிருந் தேற்றுமதியாவதுமில்லை. ஆனாற்சிலர் திருட்டுத்தனமாக இவ்வியாபாரத்தை இன்னும் நடத்திக்கொண்டு வருவதையறிந்து அதையும் தடைப்பண்ண முயற்சி செய்யப்படுகின்றது.


## ADVERTISEMENTS.

பிரச்னோத்திர ரெத்னமாலை என்னும் ஓர் வேதாந்த சாஸ்திரம்.

இது யாவருக்கும் புலப்படும்படியாக வினாவிடை ரூபமாய் 1000 பிரசினோத்திரங்கள் வரை இதில் அகண்ட பரிபூரண சச்சிதானந்த ஸ்வரூபத்தின் மூன்று லக்ஷணங்களும், உள், வெளி, என்ற இருவகைப்பிரபஞ்ச விஷயங்களும், அதாவது இந்த உலகத்தைப்போல் நமசரீரத்தினுள்ளிருக்கும் உகை விசித்திரங்களும், கர்மம், பக்தி, ஞானமாகிய மூன்று யோகவிஷயங்களும்; பிரம்ம, சக்தி, திருமூர்த்தி என்பவைகளின் வரலாறுகளும், ஈசுவர நிர்ணயத்தைப்பற்றிய ஒவ்வொரு மதஸ்தரின் அபிப்பிராயமும்; கங்கா நதியின் உற்பத்தியும், மகாமேருவின் சிறப்பும், சூரியனுடைய லோக யாத்திரையின் சூக்ஷ்மமும், இன்னும் இதுபோல் பல சிறந்த விஷயங்களும், அடங்கியிருக்கின்றன வி. பி. சார்ஜ் உள்பட இதன்விலை அணா 10 தான். விலாசம்:—

மானேஜர் வைத்தியபோதினி ஆபீஸ், கும்பகோணம்.





"பாலசந்திரன்"

வாராந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

ப்ருமஸ்ரீ மகோமகோபாத்தியாயர் வே. சாமிநாதையர் அவர்கள் முதலிய கல்விமான்களால் வியந்து கூறப்பட்டது. கொழும்பு நகரில் இதுவொன்றே ஏராளமாகச் செலவிடப்படும் சைவத் தமிழ் பத்திரிகை.

வருடக்கிரயம்.

| | |
|---|---|
| உள்ளூர் ... ... ... | 3—0—0 |
| இலங்கையின் பிறவிடங்கள், இந்தியா ... | 4—0—0 |
| தொடுவாய்ப் பகுதி ... ... ... | 5—0—0 |

☞ முற்பணம் கொடுக்கவேண்டியது.

M. V. PONNAMPALA PILLAI,
*No. 103, Checku Street,*
**COLOMBO.**

---

## MOTO REVE.

1½—H. P. உள்ள மோடார் சைகிள்களுக்குள் மோடோ ரீவ் சிறந்த மேன்மையுள்ளது. என்னவென்றால், இதின்கனம் பவுண்டு 78-தான். அதாவது சாதாரண மோடார்சைகிளுடைய கனத்தில்பாதிதான் ரோட்டில் போகும்பொழுது சப்தமில்லாமலும் ஒரு காலன் எண்ணெய்க்கு சுமார் 140 மயில் போகிறதாயும், அதாவது சாதாரண வண்டிக்கு வரும் எண்ணெயில் பாதியிருந்தால் போதும். வண்டியை ஸ்டார்டு (Start) செய்கிறதில் பிரயாசம் இல்லாமலுமிருக்கிறது.

இதர விபரங்களுக்கு எழுதிக்கொள்ளவும்.

**K. S.** ராஜ் **& Co.,** கும்பகோணம்.

---

## அசாத்ரோகங்களுக்கு பிரதிக்ஷ அவுஷதம்.

கஸ்தூரி திராவகம்—இந்தத்திராவகத்தில் ஒருநேரத்துக்கு மூன்று சொட்டு வீதம் ஒரு ஒயின்கிளாஸ் தண்ணீரில்விட்டு காலை, மாலை இரவு படுக்கும்நேரம் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட நீர்அழிவினால் தாங்கமுடியாத வருத்தத்தை மூன்றுநாளையில் சுகமாக்கும். 40 நாள் மருந்து சாப்பிட்டால் வியாதிநன்றாய்ச் சொஸ்தமாகும். தருணவயசுள்ளவர்களுக்கு உண்டான பக்கவாய்வு துர்நடத்தையால் ஆண்மைப்பலமற்ற சையோகம் செய்ய இயலாதவர்களுக்கு உள்ளுக்குச்சாப்பிட மேற்படி திராவகமும் ஆணுடம்பில்பூச துஜ்ஜிபங்கதைலமும் எடுத்து உபயோகிக்க வேண்டியது. இன்னும் மேற்படி திராவகமானது இருமல், மூலச்சூடு, காசரோகம், அதிகநாள்ச்சென்ற வாதரோகம், தலைச்சுற்று, மூளை பலவீனம் ஞாபகசக்திக்குறைவு, கண்புகைச்சல், பார்வைக்குறைவு, நாட்சென்ற பிரமேகம், இவைகளுக்குக் கைகண்ட ஔஷதம். இந்த மருந்திலே கஸ்தூரி, தங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், சாம்பிராணிப்பதங்கம், வேறு மூலிவகைகளும், சேர்த்து திராவகம் வடித்துவைத்திருக்கின்றேன். இந்த மருந்துகளெல்லாம் சேர்க்கப்பட்டிருப்பதனால்தான் இது சீக்கிரம் சுகமடைவிக்குமெனக் கூறுகின்றேன் இந்த மருந்தைக்கொடுத்து அனேக பிரயாணிகளைச் சுகப்படுத்தி விலைஉயர்ந்த வெகுமதிகளும் பெற்றிருக்கின்றேன். இப்போது எல்லாருடைய பிரயோசனத்திற்காக சொற்பசெலவெடுக்க வெளியே பிரசித்தம் பண்ணிவருகின்றேன் பித்தபாண்டு, மகோதரம், காச்சல்கட்டி, வயிற்றிலிருக்கும் துர்நீர்

களுக்கு கை கண்ட ஔஷதம். விலை அரை அவுன்சுக்கு ரூ. 10. இதற்குக்குறைந்து அனுப்பப்படமாட்டாது. தபாற்செலவுபிரத்தியேகம்

**துஜ்ஜிபங்கதைலம்**—சிலர் தம் இளம்பிராயத்தில் புத்தியீனமாய் இந்திரியத்தை தம்கையால் பழுதாக்கிக்கொள்வதால் சிலநாளைக்குப்பின் நரம்புகள்பழுது பட்டு ஆணுடம்பு பலனற்றுச் சுருண்டு சிறிதாய்ப்போய் இந்திரியம் குறைந்தும் துர் ஸ்திரி சையோகத்தால் அனேக உஷ்ண மான மருந்துகள் சாப்பிட்டு பெலனற்றுப்போகின்றார்கள். இவ்விரு வகையுள்ளவர்கள் மனக்கவலையுடன் வியாதியை ஒருவருக்கும் சொல் லாமல் வெட்கப்பட்டு இருப்பார்கள். அவர்கள் இத்தைலத்தை ஆண் உடம்பில்பூசி உள்ளுக்குக் கஸ்தூரி திராவகமும் சாப்பிட்டால் ஆண் உடம்பு சரியான நிலைமைக்குவந்து பலப்பட்டு இந்திரியம் விர்த்தியாகி 44 தினத்துக்குள் வியாதி சுகப்படும். 21 நாள் தைலம்பூசி மேற்படி திராவகம் சாப்பிடுவரேல் வியாதியின் சுகந்தெரியும். ஒரு அவுன்ஸ் தைலத்தின் விலை ரூ. 2—8—0. தபாற்செலவு பிரத்தியேகம்.

**வீரிய ஸ்தம்பனக் குளிகை**—ஆச்சரியம்! மிக்க ஆச்சரியம்!! ரோகமற்றவர்களுக்கு ஒரே குளிகையில் தெரியும். இந்தக்குளிகை (இந்திராசனம்) ஒருநாளில் ஆயிரம் ஸ்திரீகளைச் சம்போகிக்கிறதற்காக உண்டாக்கப்பட்டது. இதைச்சிலர் சாஸ்திரத்திற்சொல்லிய பிரகாரம் செய்யாமல் சொற்பகிரயத்துக்கு விற்பனை செய்கிறார்கள். அதைச் சனங்கள் பெற்று அதிலே சொல்லிய காரியங்கள் முழுதும் வித்தியா சப்பட்டு எமாந்துபோகிறார்கள். ஆனால் சாஸ்திரப்படி அதிகபொருள் செலவழித்துச் செய்கிறவர்களிடம் பெறப்பின்னடைகிறார்கள். இது உலகவியல்பே, இதில் முக்கியமாயறிய வேண்டிய காரியம் யாதெனில், இதின் முழுக்கிரயமுங்கொடுத்து எடுத்து ஒரு குளிகையாற் சுகமறிய லாம். காரியமும் விளங்கும் இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. 12 குளிகைக்குக்குறைய அனுப்படமாட்டா. பரீட் சித்தவர்களே இதன் சுகத்தை அனுபவிப்பார்கள். 12 குளிகையின் விலை ரூ. 2. தபாற்செலவு அணா 4.

சாப்பிடும் விதம் சையோகஞ்செய்ய அரைமணித் தியாலதிற்கு முன் ஒருமாத்திரையைச் சாப்பிட்டவுடன் காச்சியபசுப்பாலில் கற்கண் டுபோட்டுக் குடித்தால் இந்திரியம் இளகாது. இளகவேணுமானல் எலுமிச்சம்பழம் சாப்பிடவும்.

கெங்காதார் தைலம்—அண்டவாய்வுக்குக்கைகண்ட உண்மையான மருந்து இதன் விலை 1 அவுன்சு ரூ. 5.

மகாநாராயண தைலம்—வாய்வுகள் கபாலபீனிசம் முதலானதுக்கு கை கண்டது. 1 அவுன்சுக்கு 1 ரூ. (மேற்கண்ட மருந்துகளுக்கு தபாற்செலவு பிரத்தியேகம்.

**மிருத்துசீவன அல்லது கஸ்தூரிமாத்திரை**—எட்டுவிதமான சுரத் திற்கும், அசுத்தசலத்தினால் கொசு முதலான விஷசெந்துகளினாலுண் டாகும் மலேரியா ஆகியவிஷக்காச்சல்களுக்கும், 18 விதமான சன் னிக்கும் இதில் ஒருமாத்திரையை இஞ்சிச்சாற்றில் உரைத்துச்சாப்பிட் டால் எப்பேர்ப்பட்ட சன்னியும் ஒரு அல்லது இரு வேளைமருந்திற் சுகப்படும். ஏழுவேளை சாப்பிட்டால் சன்னி, காச்சல், சுரம், முதலியன சுத்தமாய்ச்சுகமாகும். 12 குளிகையின் விலை ரூ. 2.



காமனிமது பஞ்சனி மாத்திரை—இது தங்கம், அபாக்பஸ்பம், கஸ்தூரி, குங்குமப்பூ, லிங்கசெந்தூரம், முதலிய விலையுயர்ந்த மருந்து கள் சேர்த்துச்செய்யப்பட்டுத் தயாராயிருக்கிறது. இதன் சொற்ப குணத்தை மட்டும் காட்டுகிறேன். நீரிழிவு, காசம், இருமல், ஈழை, தீராத வாதரோகம், பிரமேகம், மூலச்சூடு புதிதாய்க்காணும் அண்ட வாதம், வெள்ளைமுதலிய வியாதிகள் தீந்து தாதுபுஷ்டி உண்டாகும், மூன்றுநாளில் நல்ல குணம்தெரியும். 44 நாளில் வியாதி பூரண சுத்த மாகும். காலை மாலை 14 நாள் சாப்பிடக்கூடிய 28 மாத்திரைகளின் விலை ரூபா 5. 44 நாள் சாப்பிடக்கூடிய 88 மாத்திரைகள் எடுத்தால் ரூபா 13-க்கு கொடுக்கப்படும். தபாற்செலவு பிரத்தியேகம்.

**சந்திரிகா பிரதம மாத்திரை**—இந்த மாத்திரை காசம், பவுத்திரம், அண்டவாய்வு, பக்கவாய்வு, பித்தபாண்டு, வெள்ளை, நீர்க்கடுப்பு, நீர டைப்பு, பீனசக்கபாலம், துர்ஸ்திரீ கமனத்தாலுண்டான நோய்கள், வெண்குட்டம், நீரழிவு போகத்தாலுண்டான நோய்களை எல்லாந்தீர்க் கும். இம்மாத்திரையை 21 நாள் சாப்பிட்டால் பூரணசுகமுண்டாகும். மருந்தெடுக்கும்போது வியாதிக்கேற்ற அனுமானம் தெரிவிப்போம். 44 குளிகையின் விலை ரூபா மூன்றரை.

**புத்தகங்கள்**—பின்னாற் காட்டப்பட்டிருக்கும் அருமையான புத்த கங்கள் மானுடர் எவரும் இகபர நன்மைகளைக்கருதி அவைகளைக் கைப் பற்றிக்கொள்ளக் கடமைப்பட்டிருப்பதால் இவ்விருவிஷயங்களுக்கும் குருவைப்போல் போதிக்கக்கூடிய மெத்த அருமையான புத்தகங்களான தால் ஒவ்வொருவரும் இவைகளைக்கட்டாயம் வாங்கிவாசிக்கவேண்டியது.

இவைகள் செந்தமிழ் அலங்கார நடையில் எவரும் வாசித்தறியக் கூடிய வெள்ளைமொழிகளாலியற்றப்பட்டு வாசிப்போருக்கின்பத்தையும் மனோஉற்சாகத்தையும் கொடுக்கக்கூடியவைகள், சொற்ப பிரதிகள்தான் இருக்கின்றன.

காலகரணஞ்செய்யவேண்டாம்.

கோகசாஸ்திரம் மாபிள்க்கட்டு ஒரு பிரதி ரூபா 3. கலிக்கோ ரூ. 4

கைத்தொழில் போதினி—மாபிள்கட்டு ரூபா 1. கலிக்கோகட்டு 2

பூலோகௌஷகோபகாரி வாணவேடிக்கைகள் அடங்கிய பத்தாம் சங்கியை ஒன்றுக்கு அணா 10.

அனேக இங்கிலீஷ் சாமான்களடங்கிய ஒன்பதாம் சங்கியை ஒன்று க்கு அணா 12.

சோகன்லால் சரித்திரம் ஒன்றுக்கு அணா 8.

இன்சுபெக்றர்சீபுசாய்பு சரித்திரம் அணா 12.

மேற்படி சரித்திரமும் சோகன்லால் சரித்திரமும் ஒரேகட்டிடம் ஒன்றுக்கு ரூபா 1 4—0.

ருஷிய ஜப்பானிய யுத்தம் இருபகுதிகள் ஒரு ரூபா.

இரசமணிசெய்யும் புஸ்தகம் (8 பக்கம்) ரூ. 1—4—0.

மேற்காட்டிய புத்தகங்கள் வேண்டுவோர்க்கு தாமதமின்றி சாக்கிர தையோடு அனுப்பப்படும். தபாலில் வேண்டுவோர்க்கு தபாற்செலவு பிரத்தியேகம். மற்ற விபரங்களுக்கு காட்லாக்கை எடுப்பித்துப்பார்க்க வும் இனமாக அனுப்பலாம். ஒருமுறை இப்பொருட்களை வாங்கி தின மும் மகிழ்வடையுங்கள். எமது விலாசம்

மகாராஜ கெங்காபிரசாத் பண்டிதர்.

மருதானை முதலாம் டிவிஷன் No. 74, கொழும்பு.

## ரோமசங்காரி சோப்.

தேகத்தின் எந்தப்பாகத்திலும் இந்த ஸோப்பை உபயோகித்தால் யாதொரு கெடுதியுமின்றி ரோமங்களைச் சங்காரஞ்செய்துவிடும். 6-மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய கட்டி 1-க்கு விலை 6-அணா; டெஜன் ரூ 4, வி. பி. சார்ஜ 1-முதல் 3-க்கு 4-அணா.

## ரோமப்பிசின்.

இப்பிசின் நரைத்த மயிரை இரண்டு நிமிஷத்திற்குள் பழயபடி கறுப்பாக்கிவிடும். கெடுதிசெய்யக்கூடியது ஒன்றும் இதில்கிடையாது 1-புட்டி 3-மாதத்துக்கு போதுமானது. டைரக்ஷன் மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு விலை 12-அணா; டெஜன் 1-க்கு ரூ 8. 1-முதல் 3-புட்டிக்கு வி. பி. சார்ஜ் 4-அணா.

## கார்பாலிக் டூத்பவுடர்.

இந்தபற்பொடி, வாயிலுண்டாகும் துற்நாற்றத்தைபோக்கி பல்லைச் சேர்ந்த எல்லா வியாதிகளைப்போக்கி பற்களை கெட்டிப்படுத்தும். டின் 1-க்கு 1½-அணா டெஜன் 14-அணா 1-டெஜனுக்கு வி. பி. சார்ஜ் 4-அணா,

Apyly to Messrs—J. SUR & Co,
Patent Medecine Sellers & General order suppliers,
South Sinthee Road, P. O. (V) Cossipore, Calcutta.
**Agent, Lakshmivilasa Provident Institution Ld. Kumbakonam**

## பற்பொடியும் பவளச்சுண்ணமும்.

இந்த சஞ்சீவி யெனும் பற்பொடியானது தஞ்சைமாநகரத்தில் பரம்பரையாய் கையாண்டு வந்தது. நீடித்து அனுபோகத்திற்குவாமல் புதைபட்டிருந்தது. இது ஓர் மஹான்களால் வெளியாகி ஜனங்களுக்கு உபகாரமாகும் பொருட்டாகவும், அனுபோகத்திற்கு ஒத்திருப்பதையும் பல பேர்கள் வேண்டுகோளின்படி வெளியிடத்துணிந்தோம். ஷை பற்பொடியை ஓர் சிட்டிகை யெடுத்து காலையிலும் மாலையிலும் பற்துலக்கி வருவதுடன் இந்த பவள புற்றினுல் செய்த சுன்னத்தையும் தாம்பூலத்துடன் 12 நாள் தரித்துக்கொண்டு வந்தால் பல்லசைவு, இரத்தம் வருதல், சீழ்வருதல், புழுவெட்டு, ஜீலிஜிலிப்பு, கூச்சம், நடுக்கம், எகிறில் ஏற்படும் துர்நாற்றம், எகிர்கரைதல், பல்லரணை முதலான நோயை கண்டிப்பாய் நீக்கி சுவஸ்தம் செய்வதோடு ஆயுள்பரியந்திரம் பல்விளாமல் காக்கச்செய்யும்.

| | | | |
|---|---|---|---|
| ஓர் அவுன்ஸ கொண்ட பற்பொடி டப்பா 1-க்கு விலை | 0 | 6 | 0 |
| ஓர் பலம் கொண்ட சுன்ன டப்பா 1-க்கு விலை | 0 | 2 | 0 |

வி. பி. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

பி. ஸாம்பமூர்த்தி ஐய்யர்,
ஆயுள்வேத பண்டிதசாலை, ஆய்குடி போஸ்டு,
திண்டுக்கல் மார்க்கம்.

## பூரணசந்த்ரோதயம்.

பிரதி ஆங்கிலமீ 15உ மதுரையில் பிரசுரமாகிவரும் தமிழ் பத்திரிகை. சந்தா வருஷம் 1-க்கு ரூ 2. தனிப்பிரதி அணா 4.

ப. நாராயண அய்யர், B.A., B.L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி அய்யர், B.A., B.L., F. T. S. } பத்திராதிபர்கள்.



## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

26. **சுகந்தமூக்குத்தூள்:**—இந்த மூக்குத்தூள் மிகவும் நேர்த்தியான முறையால் செய்யப்பட்டிருக்கிறது. வெகு இன்பமான வாசனையுடையது. ஒரு நாளைக்கு ஒரு மனிதன் எவ்வளவு மூக்குத்தூள் உபயோகிப்பானே அவ்வளவு சாதாரண புகையிலை மூக்குத்தூளுடன் நம்முடைய சுகந்த மூக்குத்தூளில் ஒரு சிட்டிகை எடுத்து நன்றாய்க்கலந்து கொண்டால் அந்தத்தூள் முழுவதும் அதிக மனோரம்மியமான வாசனையுள்ள மூக்குத்தூளாகிவிடும். கடைகளில் விற்கும் சாதாரண மூக்குத்தூளுடன் ஒரு சிட்டிகை சேர்த்தாலே போதுமானது. தனிமையாக உபயோகப்படுத்துவது அனுவசியம் இத்தூள் சேர்ந்த மூக்குத்தூள் கெடாமல் நெடுநாள் சுகந்த பரிமளத்துடன் காரம் போகாமலிருக்கும். தலைவலி, பீனிசம். சலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், மண்டைக்குற்று, நீர்பீனிசம், நாசியில் துர்நாற்றம், மயக்கம் முதலியது நீரும். இதில் நவச்சாரம் சேர்வில்லை, வழக்கமாக மூக்குத்தூள் உபயோகிப்பவர்களிடத்திலுள்ள துர்நாற்றத்தை நீக்கி சதா கமகமவென்று பரிமளத்தை வீசிக்கொண்டேயிருக்கும். இத்தூள் உபயோகித்தால் அடிக்கடி நசியம்போடுகிற வழக்கத்தை நாளுக்குநாள் குறைத்து கடைசியில் சிலர் தூள்போடும் அப்பியாசத்தையே விட்டுவிடும்படிக்கு செய்யும். ஒரு சீசாவிலுள்ள சுகந்த மூக்குத்தூள் சுமார் ஒரு மாதத்திற்குப் போதுமானது. சீசா 1-க்கு விலை அணா 4. வி. பி. சிலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அணா 3 பிரத்தியேகம், 4 முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம், 7 முதல் 12 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 7 பிரத்தியேகம்.

27. **அசோக கிருதம்:**—ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் பகிஷ்டை சரிவர உண்டாகாதிருத்தல், அகாலங்களில் பகிஷ்டையாகுதல், பகிஷ்டை காலங்களில் வெகு கடினமான சூலைநோயுண்டாகுதல், பகிஷ்டையாகும் சமயத்தில் வயிற்றுவலி, காலெறிவு, தேகங்கனத்தல், வாந்தியாகுதல், பகிஷ்டையாகும் சமயத்தில் ரஜஸ் அதிகமாகப்போகுதல் முதலிய ரஜஸ்தோஷங்களும், யோனி சுருக்கம், கருப்பையிலிருந்து சீயொழுகுதல், எப்போதும் கருப்பையிலிருந்து வெண்மையான நீர் ஒழுகுதல், யோனி ரணங்கள் இவை முதலிய ஸ்திரீ சம்பந்தமான சகல ரோகங்களையும் போக்குவதில் இது நிகரற்ற அவுஷதம். சூதக சூலை ரோகங்களுக்கும் மற்றும் அநேக யோனிசம்பந்த ரோகங்களுக்கும் அற்புதமாய் நன்மைசெய்யும். விலை சீசா 1-க்கு ரூ ஒன்று. 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

28. **பிராஹத் சந்திரோதய மகரத்வஜம்:**—தாது நஷ்டம், பலஹீனம், புருஷத்தன்மை யிலாமை, இந்திரிய நஷ்டம், சொப்பன ஸ்கலிதம், புத்தி பிரமை, மறதி, விந்துக்ஷீணம், சிக்கிர ஸ்கலிதம் முதலிய பற்பல ரோகங்களை வேருடன் கொன்று அபரிமிதமான புருஷத்தன்மையைத்தரும். சந்தேகமில்லை இம்மருந்து சாப்பிட தொடங்கின நாள்முதல் நாளுக்கு நாள் இதன் சிறந்த குணத்தைக்காட்டும். பாலியத்தில் சிற்றின்பத்தில் நுழைந்து புருஷத்தன்மையை சீக்கிரத்திலிழந்து பரிதவிப்போர்கள் இம்மருந்து சாப்பிட்டுவந்தால், வெகு சீக்கிரம் பூரண

பி. சுப்பறுப், பரங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா.

## பி. சுப்பறாயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

புருஷத்தன்மையை திரும்பப்பெற்று சுகிக்கலாம் என்பது நிச்சயம். ஏழு வேளைய ஔஷதம் ரூபாய் 3, வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்

29. சவன பிராசனம்:—இம்மருந்தினால் ஈளை, இருமல், சுவாச காசம், க்ஷயம் தொண்டை ரணம், கபம், இன்னும் நரை ஈரலைப்பற்றிய எல்லாவித வியாதிகளும் வெகு சீக்கிரத்தில் தடையின்றி தீரும். இம்மருந்து பலஹீனத்தைப் போக்கி தேகத்திற்கு வலுவையும், தேஜஸையும், காந்தியையும் தரும். சவனமஹாரிஷியவர்களுக்கு இம்மருந்து தேவர்களால் செய்துகொடுக்கப்பட்டு ரிஷி பாலிய திசை யடைந்ததாக ஆயுர்வேத சாஸ்திரத்தில் கொண்டாடப்பட்ட சவனபிராசனம் என்னும் சிறந்த ஔஷதம். டப்பா 1-க்கு ரூபா 2, வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

30. மகரத்துவஜம்:—இம்மருந்திற்கு ஒப்பான ஔஷதம் ஆயுர்வேதத்தைத் தவிர வேறெந்தவகை மருந்து சாஸ்திரத்திலேயும் கிடையாது. இம்மருந்தினால் தீராத வியாதியாவது குணமடையாத வியாதியாவது கிடையாது. அநேக வியாதிகளுக்கு இது கைகண்ட ஔஷதம் எக்காரணத்தினாலுண்டாகும் தாது நஷ்டம், பலஹீனம், மதுமூத்திரம், அதிமூத்திரம், மூத்திர அடைப்பு, பிரமேகம் முதலிய இன்னும் அநேக மூத்திர நோய்களும் எல்லாவித சுரங்களையும், ஜலுப்பு, இருமல், க்ஷயம் காசம், அஜீரணம், நீர்க்கோர்வை, பாண்டு, சோகை, காமாலை, மயக்கம், சித்த பிரமை, காலரா, பிளேக், ஆண்குறி துவளல், ஸ்திரீகளுக்கு கர்ப்பமாயிருக்கும்பொழுதும் பிரசவித்தபின்பும் காணும் சகல நோய்களையும், நரம்புகளின் பலஹீனம் முதலிய இன்னும் அநேகவித வியாதிகளையும் குணமாக்கும் மூளையைப்பலப்படுத்தும் இம்மருந்து தங்கம்முதலியதுகள் சேர்த்து செய்யப்பட்டிருக்கின்றது. விலை தோலா 1-க்கு ரூபா 2½. ஏழு வேளைய ஔஷதம் ரூபா ஒன்று. வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

31. வசந்த குசுமாகரம்:—சர்க்கரையோடு கூடியதும் அதாவது மதுமேகம், சர்க்கரையில்லாததுமாகிய நீரிழிவு, பிரமேகம், மூத்திர கிருச்சிரம், தாது நஷ்டம், பலஹீனம், உடல்வெளுப்பு, இந்திரியநஷ்டம், அதி தாகம், இருமல், நாக்கு வரண்டு போகுதல், களைப்பு, மயக்கம் அசதி, கைகால்கள் எரிச்சல் முதலிய அநேக வியாதிகள் சீக்கிரம் அடியோடு குணமாகும். மிகவும் விலையுயர்ந்த ஔஷதம். இது செய்வதில் முத்து, தங்கம், கஸ்தூரி முதலிய இன்னும் விலைபெற்ற சாமான்கள் சேருகின்றன. ஏழுவேளைய ஔஷதம் விலை ரூபா 5. வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

32. இரத்த சுத்தி:—தேகத்தில் இரத்தம்கெட்டு போகுதலால் உண்டாகும் வாய்ப்புண், கண்ணோய், புண்புரைகள், மேஹரணங்கள், மேகதடிப்பு, அரிப்பு, படை குஷ்டம் முதலிய சருமவியாதிகள், பலஹீனம், அசதி, வாதப்பிடிப்பு, தலைவலி, அக்கினிமாந்தம், அரோசிகம், வாய் கசப்பு, தேகத்தில் நாற்றம், மகோதரம், தோல்நிறம் மாறுதல், தோலில் சொறணை யற்றுப்போகுதல், புத்திமந்தம் முதலிய பற்பல வியாதிகள் குணமாகும். ரத்தத்திலுள்ள நஞ்சைப்போக்கி, சுத்தப்படுத்தி தேகவலிவு, தேஜஸ், நல்ல பசி, தாதுபுஷ்டி யுண்டாக்கும். 20 நாளைக்குப்போதுமான மருந்து டப்பா 1-க்கு ரூபாய் 2, வி. பி. சிலவு 1 அல்லது 2 டப்பாக்கள் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
11 AUG 1911
MADRAS

உ

# வைத்திய போதினி.

சித்திரப்படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான
ஓர் மாதாந்த தமிழ்பத்திரிகை.

புத். 2. } 1911-ஹு ஜூன், ஜூலை { நெ. 6, 7.

## மலையாளமும் மச்சநெய்யும்.

மச்சங்கள் இன்னதென்பதும், அது இன்னவிதமாய் இருக்குமென்பதும் யாவரும் அறிந்துகொண்டிருப்பார்களே தவிர அது இன்னவிதமாக விர்த்தியாகிறதென்பதை பெரும்பாலார் அறிந்திருக்கமாட்டார்களாகையால் அதைப்பற்றி சிறிது இதனடியில் கூறுவாம். மச்சங்கள் ஆணும் பெண்ணுமாக சிருஷ்டிக்கப்பட்டன, பெண்மீன்கள் வயிற்றிலுள்ள சினைப்பையில் எண்ணிக்கைக்கடங்காத முட்டைகளிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். சில மீன்கள் வயிற்றில் இரண்டு கோடி முட்டைகளிருப்பதாக கண்டுபிடித்திருக்கிறார்கள். இம்முட்டைகளெல்லாம் உயிர் பெற்றிடும்படி கடவுள் ஏற்படுத்தியிருக்கும் அதியற்புத காரியைக் கவனிப்போம், வருஷத்தின் சில மாதங்களில் மச்சங்கள் திரள் திரளாய்க் கரையோரத்தில் வந்து தண்ணீர் ஆழமில்லாத விடங்களில் பெண்மீன்கள் தம்வயிற்றில் வருஷமுழுவதுமிருந்து முதிர்ச்சிபெற்ற முட்டைகளை உதிர்த்து விடுகின்றன. அம்முட்டைகளோடு பிசின் (Gum) போன்ற ஓர்வித வஸ்து வெளியாகி கோழிமுட்டையை உடைத்து ஓர் பாத்திரத்திலுள்ள தண்ணீரில் விட்டால் வெள்ளைக்கருவானது மெல்லியதாய்ப் பரவினபோதிலும் மஞ்சள் கருவை விடாது பிடித்துக்கொள்ளும் வண்ணமாய், அம்முட்டைகள் சிதறிப் போகாதபடி அவற்றின் மேல் பாசிபோல் படர்ந்து பிடித்துக் கொள்ளுகின்றது. இவ்விதமாய்க் கோடாகோடி முட்டைகள் விசாலமாய்ப் பரவியிருந்தபோதிலும் இப்பிசின் போன்ற வஸ்து அவற்றைச் சிதறவிடாமல் காத்துக்கொள்ளுகிறது. முட்டைகளெல்லாமிப்படிப் பரவியிருக்குஞ் சமயத்தில் ஆண்மீன்கள்

அவ்வழி செல்லவே அவைகளுக்கோர்விதக் கிளர்ச்சியுண்டாகி பெண்மீனுதிர்த்த நீரைப்போன்ற ஓர்விதப் பாலைப்பீச்சி விடுகின்றன. ஆனால் ஆண்மீன்களுடைய சுக்கிலத்தில் கோடிக் கணக்கான சுக்கிலக்கிருமிகளிருக்கின்றன. அவைவெளியேறினவுடன் அங்கு பரவியிருக்கும் முட்டையினுட்பாய்ந்து, அவற்றோடொன்றாகி அவற்றிற்கு உயிர் கொடுக்கின்றன. அதற்குப் பின் சூரிய வெப்பத்தினால் நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாய் விர்த்தியடைந்து சிறிது நாட்களுக்குள் கோடா கோடி மச்சங்களாய் வெளியாகின்றன. இவற்றில் நாம் கவனிக்கவேண்டிய மூன்று விஷயங்கள் என்னவெனில் (1) மீன்கள் கருவுயிர்ப்பது தாயின் அவயவத்திற்குள்ளல்ல (2) கருவுயிர்க்கும் பொருட்டு மீன்களில் ஆணும் பெண்ணும் ஒன்றாய்ச் சேருகிறதில்லை. (3) மீன் சினையும் மீன் குஞ்சுகளும் பெற்றோரின் பராமரிப்புக்குள் அமைந்திராமல் அனாதமாய் வளர்ந்து விருத்தியாகின்றன. நீர்வாழ்வனவாகிய இம்மச்சங்களின் உற்பத்தி எவ்வளவு ஆச்சரியமானதோ அது போலவே தவளை, ஆமை, ஊறும் பிராணியாகிய பாம்பு முதலிய பிராணிகளின் உற்பத்தியானது மனிதர்களுக்கு மிக்க ஆச்சரியத்தைக்கொடுக்குமென்பதிலையமில்லை. இவ்விதமாக உற்பத்தியாகும் மீனினங்கள் மனித சமூகத்திற்கு ஏதேனும் பயனளிக்கவல்லதோவெனில் அவை அனந்தம்.

உலகத்தில் மாம்ச பக்ஷணம் செய்பவர்களிற் பெரும்பாலோர் மச்சங்களைப் பலவிதமாகப் பக்குவம் செய்து பாவிக்கிறார்கள், உலரவைத்த மச்சங்களோ கழனிகளுக்கு உரமாகவும் உபயோகப்படுகிறது. காடுமூனை நாட்டிலுள்ள மாடுகள் மீன் கழிவுகளை புசிக்கின்றது. சாகபக்ஷணிகளாகிய மாடுகள் மீன் கழிவுகளைப்புசிப்பது வாஸ்தவமாய் இருக்குமோவென இவ்வியாசத்தை வாசிப்போர் சந்தேகிக்கலாம். உதாரணமாக சில ம்லேச்சர்களுக்கு காட்டுமிருகவுணவு வேண்டியமட்டும், கிடைக்காத பொழுது நரமாமிச பட்சகராய் விடுகின்றார்கள். ஆஸ்திரேலியா நாட்டுப் பழயகுடிகள் அருவருக்கத்தகும், புழுக்களையும், ஊர்வனவற்றையும் தின்கின்றனர். இந்தியாவில் மலைகளிலுள்ள ஓர்வகை சாதியார் விஷப்பாம்புகளை அதிக ஆசையுடன் புசிக்கின்றார்கள். அரேபியாவிலுள்ள குதிரைகள் மாட்டிறைச்சியைத்தினகின்றன. குரங்குள் காபி, டீ, சாராயமிவைகளைப் பருகுவதை அநேகர் பார்த்திருக்கலாம். இவை யெல்லாம் இயற்கையுணவாகுமோ! அல்ல! இவற்றிற்கெல்லாம் பழக்கமே காரணமாகும். இதைப்பற்றி எழுதுவதென்றால் இன்னும் எவ்வளவோ உதாரணங்கள் இருக்கின்றதாயினும், இச்சிறு



வியாசம் இடந்தராதாகையால் இதை இம்மட்டோடு நிறுத்தி பிரகிருதத்தை ஆரம்பிப்போம். மச்சங்களோவெனில் உலகத்தில் அவ்வவ்விடங்களிலுள்ள சீதோஷ்ணங்களுக்குத்தக்கபடி அவற்றின் நிறங்களும், உருவங்களும் வேறுபட்டிருக்கும். மனித சமூகத்திற்கு உணவுப்பொருளாகவும், உழவர்களுக்கு எருவாகவும் உபயோகப்படுவது போலவே, மானிடர்களுக்கு இன்றியமையாத மருந்துப்பொருளாகவும் உபயோகப்படுகிறதென்பதும் உலகப்பிரசித்தமானது. அவையாவன.

நார்வே, பிரான்ஸ், பிரிட்டன் இந்தப்பிரதேச சமுத்திரங்களில் வசிக்கிற காட் (Cod) என்னும் ஓர்வித மீனின் யகிர்த கண்டத்தைச் சூடேற்றி ஓர்வித நெய் எடுக்கப்படுகிறது. இந்நெய்யானது, மாமிச வாசனையுடையதாயும், ஓர்வித வெகுட்டலாயுமிருக்கும். இதில் ஐயோடின் (Iodin) ப்ரோமைன் (Bromin) குளோரைன் (Chlorine) பாஸ்பரஸ் (Phasphars) முதலிய பாதார்த்தங்களும் ஐக்கப்பட்டிருக்கிறது. இந்நெய்யை லத்தீன் பாஷையில் ஓலம் மோர்ஹூயா (Oleum Morrhue) என்றும், ஆங்கிலத்தில் காட்லிவர் ஆயில் (Cod Liver oil) என்றும், தமிழில் மீன்எண்ணெய் என்றும சொல்லப்படும் இந்த எண்ணெயானது, கண்டமாலை, க்ஷயம், கணை, கண்ஞறுய் பாண்டு, சர்மரோகங்கள், நாட்பட்ட கீல்வாதம், பழமையான மார்ச்சளி, மதுமூத்திரம், காக்கைவலி, அக்கினிமந்தம் முதலிய நோய்களுக்குக்கொடுக்க உதவும்.

மீன் கொழுப்பு—இது ஸ்பர்ம்வேல் (Sperm whale) என்னும் ஓர்வகை மீனிலிருந்து எடுக்கப்படுகிற இந்த பதார்த்தம் பார்வைக்கு வெண்மையாயும் முத்தைப்போல் பளபளப்பாயுமிருக்கும் ஆங்கில வைத்தியர்களால் இதனைப்பெரும்பாலும் களிம்புகள் (ointment) செய்ய உபயோகிக்கப்படுகிறது.

மீன்தலைக்கல்—பிஷ்பெஜோர் (Fish Bezoar) இந்தக்கல் மச்சங்களின் சிரசில் உண்டாகிறது இது கெட்டியாயும், மற்றொருபக்கத்தில் பள்ளமாயும், பார்வைக்கு வெண்மை நிறமாயுமிருக்கும், இதை ஜலத்தில் கரைத்துக்குடித்தால் நீரடைப்பு, கல்லடைப்பு முதலியன நீங்கும்.

மீன்வச்சிரம்—பிஷ்க்ளூ (fish glue) சில மீன்களின் பையிலிருந்து சேகரிக்கப்படுகிற இந்தப்பதார்த்தம், நார் நாராய் வெளுத்து வாசனையும் ருசியுமில்லாமலிருக்கும். கொதிக்கிற ஜலத்தில் போட்டால் கூழ்போலாகிவிடும். இதை ரோகிகளுக்குக் சஞ்சி செய்துகொடுக்கலாம்.

இவ்விதமாக மனிதசமுகத்திற்கு பலவிதத்திலும் பயனைத் தரத்தக்கதாகிய இம்மச்சக் கைத்தொழிற் சாலைகள் மேனாட்டிற் பற்பலவிடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதுபோல் மூன்று பக்கங்களிலும் சமுத்திரத்தினால் சூழப்பட்டுள்ளதும், நானாவித மச்சங்கள் கிடைக்கக்கூடியதுமான இவ்விந்திய நாட்டில் இவ்வகை தொழிற்சாலை ஒன்றேனும் இதுகாறும் இல்லாக்குறையை நீக்கக்கருதியே போலும், மலையாள ராச்சியத்தின் தென்பாகத்திலுள்ள தலைச்சேரி என்னுமிடத்தில் மீனெண்ணெய்ச் சாலை ஒன்று ஸ்தாபிதஞ்செய்திருக்கிறார்கள். அப்பக்கங்களுக்கருகில் நானாவித மச்சங்களுண்டு, அங்குள்ள சில ஜாதி மச்சங்கள் கொழுப்புடையதாம், அவற்றின் மாமிசம் நெய்ப்பற்றுடையது. இப்போது மலையாளத்தில் செய்யப்படும் இப்புதிய முயற்சி அத்தேச வாசிகட்குமட்டுமல்ல, ஏனையோருக்கும் பிரயோஜனத்தை விளைவிக்கக்கூடியதே, இனி மலையாள மீன் பிடிக்காரர்களுக்கு நல்ல வேட்டைதான் போலும், இக்கைத்தொழிற்சாலையானது நீடூழிகாலம் நிலைநின்று பாரதமக்களுக்கு பயனளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

---

## ஜனாபிவிர்த்தி தடை எவை.

சர்ப்ப சத்துருபக்ஷி புதிது
சானிடேரி வெட்டர்னேரி டிபார்ட்டுமெண்ட்
சத்துருபக்ஷி விர்த்தியாகுமா.

இந்தியாவில் ஜனாபிவிர்த்தி க்ஷயகதியாதெனில் பஞ்சத்தாலும் பால்யவிவாகத்தாலும், மகாமாரி முதலிய தொற்றுவியாதியாலும் சர்ப்ப பாதைகளினாலும் விர்த்தி நசிப்பதாக ஆன்றோர்கொள்கை அவைகளுக்கு பரிகாரமுண்டாவென சிந்தித்து ஒவ்வொன்றையுந் தனித்தனியே பரியாலோசிக்கக்கடவோம்.

1. பஞ்சம் விலக்கல்:—ஜனங்களுக்கு வேண்டிய தானியம் விளைவு தேசத்தில் குறைவு. விளைவாவதும் அந்நிய தேசத்துக்கேற்றுமதியாவதாலும், விளைவாகும் முன் விபசாயிகள் வாங்கிய கடனை தீர்ப்பதிலும் தானியம் மட்டாய தேசத்தில் பஞ்சம் ஒருபக்கமில்லாவிடில் மற்றோர் பக்கம் பஞ்சம் ஸ்திரமாய் குடிகொண்டிருக்கின்றன. இத்தொல்லையை கவனியாதிருந்தால் தேசவாட்கை பாழாகி ஜனங்கள் நசிக்குமென்று ஐக்ய நாணய சங்கம் ஸ்தாபிக்கும்படி கவர்ன்மெண்டார் கருணைகூர்ந்தனுமதி தந்தார்கள், ஐக்யநாணய சங்கத்தால் தேசஞ்செல்வமலியும் செல்வமலியும்போது விபசாய திருத்தமோ வர்த்தகாபிவிர்த்தியோ



தொழிலபிவிர்த்தியோ செய்வது சுலபமாகும். இப்போது கிராமங்களில் விளைவாகுந் தானியத்தை வட்டிக்கி முதலிட்ட சௌகார்களும், செட்டிகளும், வியாபாரிகளுமாகச் சேர்ந்து, பல்வாறு அட்டை ரத்தத்தை யுருஞ்சுவதுபோல் கொள்ளையிட்டு விபசாயிகளை மேலெழும்பவிடாது குருக்கை முரித்துவிடுகிறார்கள். விபசாயிகள் செழித்தால் மட்டும் தேசம் சிறப்புறுமென்று ஐக்ய நாணய சட்டம் சாரிசெய்த கவர்ன்மெண்டாருக்கு நன்றிகூற ஜனங்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள் தேசத்திலெங்கு செழிப்போ அந்த தேசம் ஐக்ய நாணய சங்கம் ஸ்தாபகமாயுள்ளன வென்பது திண்ணம். முக்கியமாய் அமேரிக்கா ஐக்ய மாகாணம், ஹாலண்டு, டென்மார்க்கு, ஜப்பான் இந்த தேசங்களில் ஐக்ய நாணய சங்கம் இல்லாத கிராமமே இல்லை. அவைகளின் பெருமை எல்லாம் ஐக்யநாணய சங்கங்களாலேயே. விபசாயிகள் தேவைக்கு வேண்டிய பணமெல்லாம் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்குவதும் கிராமங்களில் பரஸ்பர ஒற்றுமையுண்டாகி கக்ஷிப்பிரதி கக்ஷியில்லாது காப்பதும் ஐக்ய நாணய சங்கத்தைத் தவிரவேறில்லை. இந்தியாவிற்கூட ஐக்ய நாணய சங்க ஸ்தாபனமுறை ஏற்பட்ட கிராமமெல்லாம் போதிய பலனளித்திருக்கிறது, தெய்வங்காட்டும் ஊட்டவா செய்யும் என்றபடி ஜனாபிவிர்த்திக்கு சட்டம் கவர்ன்மெண்டார் சாரி செய்யலாமேதவிர எல்லா உதவியும் புரிய கவர்ன்மெண்டாரால் சாத்தியப்படவா செய்யும். நமது கடமை நாம் பார்த்தலவசியம் ஒவ்வோர் கிராமமும் ஐக்ய நாணய சங்கம் ஏற்படுத்தும்படி தேசாபிமானிகள் முயல்வதவசியம் அப்போது தேசத்தில் பஞ்சம் பஞ்சாய்ப்பறந்தோடிவிடும். நாடுசெழிப்பது திண்ணம் ஐக்யநாணய சங்கமுறையறியவிரும்புவோர் மதிராஸ் சேப்பாக்கம் ஐக்யநாணய சங்கம் ரிஜிஸ்தராரவர்களுக்கு $1\frac{1}{2}$-ரூபாய் மணியார்டர் செய்தால் கோவாப்பரேட் சொஸைட்டி பேப்பர் 1 வருட சஞ்சிகை 4 வரும், பின்னும் ஐக்யநாணய சட்டமும் ரூல்ஸ்களும் இனாமாகவும் அனுப்புவார்கள்.

2. பாலவிவாக மறுப்பு:—அதிபால்ய விவாகத்தால் ஸ்திரீ புருஷர் தேகம் பலனடையும் முன் ஜெனிக்குஞ் சிசுக்கள் அகால மரணமடைவதாச்சரியமா! நமது முன்னோர் 120 வயதுவரை இருந்து திடகாத்திர திரோகியாய் வாழ்ந்து எவ்வளவு மயில் தூரமாயினும் கால் நடையாகவே போவார்கள் அன்னோர் 30 வயதுவரை விவாகஞ்செய்ததில்லை நாள்சென்று தேகஅங்கம் பூர்ணவளர்ச்சியடைந்தபின் விவாகமாகி சந்ததி விர்த்தி செய்ததாலன்றோ இன்னும் அபூர்வமாய் சிலபேர் திடகாத்திர சுகதேகியுடையோராயிருப்பதை காணலாம். ஒத்த உருவம் அதே உருவம் ஜனிக்கச்செய்யுமென்பதை கேட்கவுமாவேண்டும். இப்போ

துள்ள பாலவிவாகமே ஜனுபிவிர்த்திக்கு பலவித தடையுண்டாக்குகிறது காத்திர திரேகமும் நீடித்த ஆயுசுடையோருன ஆங்கிலேயர் புருஷருக்கு 25 வயதும் ஸ்திரீகளுக்கு 20 வயதும் விவாக காலமேற்படுத்தி சட்ட பூர்வமாய் நிர்ப்பந்தமிருப்பதால் அன்னூர் வாழ்க்கை மேம்பாடுறுகின்றது. அவ்வாறே இந்தியாவிலுமனுசரிக்கபடுமாகில் ஸ்திரீபுருஷர் அங்கம் பலமுறவும் சிசுக்கள் சிரேஸ்டமாயுற்பவிக்கவும் மாதா சுகதேகியாய்வார்த்தீபதசைவரு திருக்கவும் ஏதுவாகும். பாலவிவாகதடுப்பு மைசூர் பரோடா முதலிய ருஜாங்கத்தில் சட்டம் மூலியம் ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவ்விதசட்டமும் இங்குபாஸ்செய்ய பிரீட்டிஷ்துரைத்தனத்தார் தயங்குகிருர்கள், தேசாபிமானிகள்விடாது முயன்ருல் சித்தி பெறுவது திண்ணம், சில தானியங்கள் சலிசாய் விளையும் சிலதானியங்கள் நாள்சென்று விளைவாகும் அவ்வாறுதான் உலகானுபவமனைத்துமே.

3. **தோற்று வியாதி தடுப்பு**:—மகமாரி (பிளேக்) தோன்றிய காலமுதல் வியாதிகளெல்லாம் தொற்றுவியாதி கிருமிகள் பலதினிசு பாவி வியாதியை உற்பத்தி செய்வதாகவும் அவைகளை தடுக்க சுத்தீகரிப்பும் இனுக்குலேஷன் முறையனுசரிக்கும்படியும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் செய்வதர்க்கு நன்றிகூறவேண்டும், நன்றிகூறுவதற்கு பதில் ஜனங்கள் வீணுக கவர்ன்மெண்டார் மனநோவும்படிசெய்வது பரிதாபம் ஜனங்களின் கொள்கை தெரியாமல் கவர்ன்மெண்டார் அவசரப்படவும் படாது, சில பாமரர் ஞானவான்களென்றும் தங்களுக்கு தெரியாத தொன்றுமில்லை என்றும், அனேகவிசாரணைசெய்ததாகவும் கோதாவரி அணைகட்டவும், பிரீட்டிஷ் அரசாட்சி பூமண்டலம் பூருகட்டியாளவும் அனேக மனிதரை பலியிடவேண்டியதற்காக மகாமாரியை யேவிவிட்டு இனுக்குலேஷன் முறையில் விஷமூட்டி கொல்வதாக பிரஸ்தாபித்து விடுவார்கள். எது வாஸ்தவம், எது பிசகென்று தெரியும் புத்தி விசாலம் ஜனங்களிடமில்லாததால் எதையும் நம்பி வீண்காபுரு செய்வார்கள். தேசத்தில் ஜனுபிவிர்த்தி குறையின் ஏருளமான நிலங்கள் சாகுபடி செய்வதெவ்வாறு நிலம்பயிருகாது தருசாயிருந்தால் சர்க்கார் தீர்வை வசூலாகவா செய்யும். ஜனங்குறைந்ததேசவாழ்வும் வாழ்வாகா ருஜாங்கத்தார் அடையும் பயனென்னவென்று ஜனங்கள் தீர்க்காலோசனை செய்யின் அனுவசியமான கலபையேயிரு, ஜனங்களின் மடமையே கலபேயுண்டாகிறது. காலரு, வைசூரி முதலிய நோயுள்ள மனிதர்கள் மலம் முதலிய அசுத்தமேனும், சுவாசமேனும் மற்றவர்மேல் தொடும்படியால் அந்த நோவுண்டாகும். இளைப்பு, காளை, முதலியநோயுற்ற மாடுகளின் பால் அருந்தும் மனிதர் க்ஷயநோவுண்டாவதியல்பு. அந்த நோவுள்ள பாலினை சிலகாலம் நாய்க்கு உணவாக்குவதில் அந்த நோவுகள் நாய் பெறு



REGISTERED MADRAS

வதை பிரத்தியக்ஷமாய் காணலாம். இவ்வாறேதான் தொற்றுவியாதிகளெல்லாம் மனிதரை பாதிக்கின்றனவென்பதையும் தொற்று வியாதி கிருமிகள் அணுகவொட்டாமல் விலகிநிற்ப தவசியமென்பதை காரணகாரியங்களுடன் விளக்கி துண்டு பத்திரிகை பிரசுரித்து ஜனங்களுக்கு சப்ளையாகவேண்டும். பிரசங்கத்தால் கிறிஸ்து மதம் பாவுவதும் பிரசங்க குறைவால் இந்துமத விர்த்தி யோங்காதிருப்பது தெரியாதார் யாவர்? ஆகவே போதனை மூல்யம் தொற்று வியாதி போதனை செய்வதவசியம். தொற்று வியாதி பாவும் பாடம் ஸ்கூல்களில் கட்டாய பாடமாகவும் ஏற்படவேண்டும். இவ்வாறு பலவகை முயன்ருல் தொற்று வியாதி தடுக்கவும் ஜனுபிவிர்த்தி தனக்குத் தானே உண்டாய்விடும். ஜலத்தை நன்ருய்க் கொதிக்கவைத்து அருந்திவந்தால் எந்த தொற்று வியாதியும் மனிதனையணுகா. குளிர்ந்தஜல மூலியமே தொற்று வியாதி பாவ முக்கியவேதுகாமாயிருக்கிறது.

4. **ஸர்ப்பபாதை விலக்கலும் சத்துரு பக்ஷீ விர்த்தியும்** :—மலை சுரம், பிளேக் முதலிய நோவுகளால் இந்தியா ஜனங்களழிவு போதாவென்று வருடந்தோறும் 20000-ஜனங்கள் பாம்புகடியாலிறப்பதாக சொல்லப்படுகிறது. நோவுகளின்பாதை போதாவென்ரு, சர்ப்ப பாதையும் நமக்கு வினையாயேற்படவேண்டும்? சர்ப்ப பாதைக்கு நாளுனும் பல வாருய்ச்சிசெய்தும் செய்யப்பட்டும் வருகின்றன. பேர்போன டாக்டர், றேகேர்ஸ் ஐ. எம். எஸ். சொல்லுகிருர்:—கடிவாயின்மேல் கயருல் கட்டுப்போட்டு பாம்பு கடிவாயை கத்தியால் கீறி 'பெர்மாங்கனேட் பொட்டாஷ்' என்னும் மருந்து சிலநோம் தேய்த்துவா, விஷபாதை விலகி பிராணி சொஸ்தமடைய ஏதுவாகிறதாம். இது பலமுறை சித்தியாய்விட்டனவென்று மதருஸ் ஸிமித் கம்பெனி மருந்து ஷாப்பில் 1 டப்பிகளில் மருந்தும் சிறு கத்தியும் வைத்து விற்கப்படுகிறது. ஒவ்வொருவரும் மடியில் வைத்துக்கொண்டுபோனல் வேண்டியபோது உபயோகிக்கலாம். சிலோன் காபித்தோட்ட கூலிகளின் கண்டிருக்டர் அனைவரும் 'பெர்மாங்கனேட் பொட்டாஷ்' டப்பிவைத்து சமயம் நேர்ந்துளி கூலிகளுக்குபயோகிக்கிருர்கள். 1-டப்பி ரூ. 0—8—0 விலையாம்.

பம்பாயில் பர்ரேல்லா போடேரியில் விஷமெடுக்க பாம்புவளர்க்கப்படுகிறது பாம்பு விஷமெடுக்குமாறு பாம்பு வெளிவிட்டவுடன் ஒரு கோலால் தலைப்பக்கம் அழுத்திப் பிடித்துக்கொள்வார்கள். ரப்பர் மூடியிட்ட ஒயின் கிளாஸ் ஒன்றை பாம்பின் வாய்கிட்ட நீட்ட ரப்பரைக் கடித்து 2.டிராம் விஷம் கக்குகிறது. விஷத்தை தரிமாலயத்திலுள்ள

காஸெலிலாபொரெட்ரிக்கு அனுப்பப்படுகிறது. அங்கே அந்த விஷப்பால்* சாந்தமாக்கி விஷக்கடிக்கு அனுப்பிவிடுகிறார்கள். இது ஏராளமாய் அமைந்துவிடுமென்று சொல்லப்படாது அபூர்வமாகவே மருந்து கிட்டும் விஷமெடுத்த பாம்பு சிறிது நாள் ஆகாரம் கொள்ளாதிருக்கிறது. பாலில் கோழிமுட்டை கலந்து கொடுக்கப்படுகிறது விஷமிழந்த வீரியம் உண்டாக சிறிது நாள் பாம்புக்கு பசிதாகம் இருப்பதில்லை போலும்.

இந்தியாவில் மந்திரங்களாலும் மருந்துகளாலும் சர்ப்ப விஷங் குணமடையச் செய்விப்பதாக கூறுவதுண்டு. சித்தியான முறைதான் வெளியாக காணவில்லை. பன்றி, கீரி, கெருடன், மயில், முதலிய பக்ஷிகளால் பாம்பழிவதாகவும் சொல்வதுண்டு. ஏராளமான பக்ஷிகள் விர்த்தியாய்க்கொண்டிருந்தும் பாம்பழியாதிருப்பதேன்? பாம்பின் ஸங்கியை எடுக்கப்படுமானால் முன்னுக்கிப்போ 10-மடங்கதிகமாகவேயிருக்கும் வருடந்தோறும் ¾-லட்சம் பாம்பு கொல்வதாக ராஜாங்கத்தார் கூறுகிறார்கள். க்ஷயத்திலும் சர்ப்பவிர்த்தி பதிகரிப்பதாக கொள்ள வேண்டும், சர்ப்பங் கொல்வதற்காக கவர்ண்மெண்டார் வருடந்தோறும் 2500-ரூபா வரை வெகுமதிகூட கொடுக்கிறார்கள். மயில், கீரி, கருடன், கழுடன் பாம்பு சந்திக்கும்போதழிவாகிறதே தவிர, உண்மையில் மயில் முதலியவைகளால் எதிர்த்துசேதப்படுத்துவது குறைவென்றே சொல்லலாம். ஆகவே பாம்பின் பாதை நீக்க போதிய ஏற்பாடாவதத்தியாவசியம். செய்யும் ஏற்பாடு பிரத்தியக்ஷ ருசு விளக்குவதாயுமிருக்கவேண்டும் பாம்புகளை நிர்மூலமாக்குவது தேசத்துக் கெவ்வளவோ பெருந்தலாபமாகும்.

---

* பாம்புவிஷம் மட்டுப்படுத்தும் முறையாவன:—சர்ப்ப விஷத்தை முயலுக்கு வாக்ஸினேஷன் செய்ய மரணமாய்விடும். அந்த முயலின் மூளை ரெத்தத்தை பிரிதோர் முயலுக்கும் வாக்ஸினேஷனாக இறந்துவிடுகிறது. அதன் ரத்தத்தை முறையே 5-வது முயல்வரை வாக்ஷேன் செய்து கொண்டேவர கடைசி 5-வது முயலிறப்பதில்லை. அந்த முயலுக்கு புதிதாய் சர்ப்ப விஷம் எடுத்து வாக்ஸினேஷன் செய்ய சர்ப்ப விஷத்தை தாங்குஞ் சக்தி யுண்டாய்விடுகிறது. அந்த முயல் ரத்தமே இஞ்க்குஷேன் முறைக்கனுப்பியா யுபயோகப்படுகிறன. தேவையான மருந்து கிட்டுமா வென்பதுதான் கவனித்தற்குரியன.

இஞக்குலேஷன் செய்வதானது, காசம், க்ஷயம், மலேரியா, டைபாய்ட், நிமோனியா, வைசூரி, காலரா, மகாமாரி முதலிய சகல வியாதிக்கும் பிரயோகிக்க பயன்படுமென்று தேர்ந்த மெடிகலாபீசர் கொள்கை.

ஒரு நிலத்தில் தொடர்ந்தும் அடுத்தடுத்தும் வேறு தினிசு பயிரின்றி ஒரே தினிசு பயிர்செய்தவரின் பின்பு அதே தினிசு பயிர் பிடியாது. சோளம், அவுரி, நிலக்கடலை இதுகளில் ஏதேனும் ஒன்றை தொடுத்து பயிரான இடங்களை விசாரித்தால் உண்மை புலப்படும். பயிருண தினிசுக்குரிய உணவு பூமி இழந்ததே காரணமாம். அதே மாதிரி ஒரு நோவுக்கு இஞக்குலேஷன் செய்துவிடின் பின்னால் அந்த நோவுக்குரிய கருக்களோ, கிருமிகளோ திரும்பாதிருப்பதில்லை அநேக டாக்டர்களால் சோதனையில் ருசுவாயிருக்கிறது.





விகித பக்ஷி.

தென்னாபிரிக்கா உஷ்ணமைதானங்களில் விகித பக்ஷி காணலாம். அவை பாம்பு முதலிய ஊர்வன ஜந்துக்களை பிரியமாயருந்துகின்றன. அங்கு ஆதியில் ஆங்கிலேயர் விகித பக்ஷி இரகை உபயோகித்ததால் விகிதபக்ஷி என்று பேர்வழங்கலாயிற்று. விகிதபக்ஷி பாம்பைக் காண்பதே தாமதம் ஒருசிரகை பாம்புக்கு நேரே நீட்டுவதும் மற்றோர் சிரகாலடித்து பாம்பை மயங்கவைத்து கொன்று பக்ஷித்து விடுகிறது. விகிதபக்ஷியிடம் ஆப்பிரிக்காவாசிகளுக்கு வெகுபிரியம் அன்னார் விகிதபக்ஷியைப்பிடித்து பழக்கி எலிகளாலும் பாம்புகளாலும் வரும் பாதையொழித்துக் கொள்ளுகிறார்கள். பழகிய விகிதபக்ஷிகள் கோழிகள் சண்டையிடும்போது விலக்கிவிடுகிறது, விகிதபக்ஷி பாம்பையடிக்கும் மாதிரி மேல்குறித்த படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

ஆப்பிரிக்கர் நிலஞ்சுற்றப் போகும்போது விகித பக்ஷி பின்னால் தொடர்ந்துபோய் புலங்களிலுள்ள எலி பாம்புகளை நிர்மூலமாக்கிறதாம் இவ்வளவு உபகாரமான பக்ஷி நமது தேசத்தில் விர்த்தியாகவேண்டியது அவசியம். சானிடேரி கமிஷனர் தொற்று வியாதியையழிக்க எவ்வளவு சிரமமெடுக்கிறார்? அது போலவே பாம்பும் எலியும் தொலைய விகித பக்ஷி விருத்திசெய்யும்படி கருதுவாரானால் தேசத்துக் கெவ்வளவோ உபகாரமாகும். தென்னாபிரிகாவிலிருந்து சில ஜதை தருவித்து வெட்டர்னேரி காலேஜில் விருத்திசெய்யவேண்டும் பிரதமத்தில் உயிர்ப் பிராணி சாஸ்திரிகள் பார்வையில்லாதிருந்தால் விர்த்தியாகா. விகிதபக்ஷி விர்த்திக்ஷயம் மற்றடிபார்ட்டுமெண்டுகளால் அறிந்துகொள்ள இயலா. விர்த்தியானதின்மேல் கோயமுத்தூர் கிருஷி காலேஜுக்கு சிலஜதை அனுப்பி விர்த்தி பரவச்செய்யலாம். பின் ஒவ்வொரு ஜில்லா

வுக்குந் தேவையானவர்களுக்கு சப்ளை செய்யலாம். தேசாபிமானிகள் கவர்ன்மெண்டாரிடங் கேட்கவேண்டிய விஷயங்களிலொன்றேயாம். தஞ்சாவூர் ஜில்லா நஞ்செய்களில் எலிகளால் நெல்லழிவாவதற்கு லிகித பக்ஷிகளால் தடுக்கலாம். விவசாயத்தில் பிரியமுள்ள தஞ்சை விவசாயிகள் கிருஷி இலாக மூல்யம் தருவித்து பலனடைவது சிலாக்யமானது.

கரிசற் புஞ்செய்களில் கமர் வெடிப்பும் அதிகம் கமரில் சர்ப்பமும் ஜாஸ்தி. திருநெல்வேலி ஜில்லா எட்டய்யாபுரம் ஜமீன் கழுகுமலை மிக சிறு கிராமம் கரிசல் புஞ்செய்யுள்ள கிராமமே. அங்கு வருஷந்தோறும் 20-பேர் சர்ப்பக்கடியால் மாள்கிறார்கள். எட்டய்யாபுரம் ஜமீன்தார் லிகித பக்ஷி விர்த்திசெய்ய முயல்வது வெகுஜனோபகாரமாகும். லிகித பக்ஷியால் சர்ப்ப பாதை நீக்குவது நலம்.

தென்னாபிரிக்கா லிகித பக்ஷி போலவே அமேரிக்காவில் பரியாசப் பக்ஷி சாதாரணமானது. காடுகளில் எத்தனைவகை பக்ஷிகளிருக்கிறதோ அத்தனை வகை சப்தத்தையும் பரியாச பக்ஷி சப்தித்து மற்ற பக்ஷிகளை திக்பிரமையடையச் செய்யும். இஃதோர் காட்டு சங்கீத வித்வான் என்று கூறலாம். பழகிய பக்ஷி மனுஷர்போல் தாளம், லயம், சுருதி, பிசகின்றி பாடுமாம். பழகியபக்ஷி இருக்குங் கிரகத்தில் எலிபாதையிரா. பரியாச பக்ஷியும் பாம்பையழிப்பதில் வெகு தீவரங்காட்டுமாம். முட்டையை அடைகாக்கும்போது மனிதர், பாம்பு, கீறி, நாய் எதிர்படில் அச்சமின்றி பரியாச பக்ஷி எதிர்க்குமாம். இந்தப் பக்ஷியும் தேசத்தில் விர்த்தியாகவேண்டிய தவசியமே. போனகிராப் எந்த வித்வான் சங்கீதம் போலவும் பாடுகிறதல்லவா அவ்வித வல்லமையும் பாம்பு எலியை துலைக்கும் சக்தி பரியாச பக்ஷிக்கு சாதுரியமுண்டு யாரும் விரும்பக்கூடியதே. கிளி, பூனை முதலிய ஜெந்துக்கள்வளர்ப்பதிலும் பரியாச பக்ஷிபலனுண்டு சாதுக்கின்பமான ராகமும் பாடும்.

பறவை முதலிய ஜந்துக்களுக்கடங்காத மலைப்பாம்பிருக்கிறதே, அவைகளுக்குப் பரிகாரமில்லையாவென்று வினவக்கூடும். ஈசன் சத்துரு ஒவ்வொன்றுக்கும் ஏற்படுத்தாதிருந்தால் கடவுளை ஸ்துதிப்பதார்? நாஸ்திகயன்றோ குடிகொண்டாய்விடும். ஆகவே மலைப் பாம்புக்கு சத்துரு ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றே கூறலாம். கொச்சி சமஸ்தானம் வடக்காஞ்சேரி பக்கம் மச்சாடுகாடு என்று விஸ்தாரமான மலைப் பிரதேசம் இருக்கிறது. அங்கு அணலி விருக்ஷமிருக்கிறது. அந்த மரத்தையணுகிய பாம்புகள் இறந்து கிடப்பதை இன்றும் மிகுதியாய்க் காணலாம். அந்த மரத்துப் பட்டை விஷகடிக் கவிழ்தமாகக் கொடுக்கப் பயன்படுகிறது.



ராமநாதபுரம் ஜில்லா, ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா ராசபாளையம் பக்கம் பாலாறு உடங்காடு மலையில், பேய்த் தேத்தமரமிருக்கிறது. அந்த மரத்தடியில் ஏராளமாய் பக்ஷிகள் வண்டுகள் மடிந்து கிடக்கிறது. மனிதர் தாம்பூலம் தரித்துக்கொண்டு அந்த மரத்தடியிலிருந்தால் மயங்கி பின் தெழியச் செய்கிறது.

மேல் குறித்த 2-தினிசு மர விரைகளை கிருஷி இலாகா மூல்யம் வருத்தி மனிதர் வாசத்துக் கெட்டாத காடுகளில் வைத்து விருத்தி செய்யலாம் காடுகளில் பாம்பு தொல்லை யகலும்.

வே. ப. திருமலையப்ப முதலியார்,
இளம் வெள்ளகால்.

---

## கால்நடைகளுக்கு சப்பாத்துக்கள்ளி ஆகாரம்.

*இது விஷயமாய் மார்ச்சு மாதத்திய "கிருஷிகனில்" அடியில் வருமாறு வரையப்பட்டிருக்கிறது.*

ஸமீபத்தில் தென்னிந்தியாவில் நேர்ந்த பஞ்சத்தில் கால்நடைகளுக்குச் சப்பாத்துக் கள்ளியை ஆகாரமாக உபயோகப்படுத்துவதைப் பற்றி சென்னை இராஜதானியிலும், இன்னும் மற்ற இடங்களிலும் கவனிக்கப்பட்டது.

டெக்கான் ஜில்லாக்களிலும், பம்பாயிலும் ஸமீபத்தில் அஸ்ஸாம் மாகாணத்திலும் இதைப் பரீட்சித்தார்கள். ஆனால் அதன் பிரயோஜனம் இன்னதென்று தீர்மானமாய் நிச்சயிக்கக் கூடாமலிருக்கிறது. சப்பாத்துக்கள்ளி அபரிமிதமாகவும் செழிப்பாகவும் விருத்தியடைந்துவருகிற இந்தியாவிலும் அஸ்ஸாமிலும் கெடுதியுண்டாக்கும் களையாகவும் விஷப்பூண்டாகவும் மதிக்கப்படுகிறது. விவசாய சம்மந்தப்பட்டமட்டில் மற்ற எல்லாத் தேசங்களைக் காட்டிலும் ஜாஸ்தி விருத்தியடைந்து கியாதி பெற்றிருக்கிற அமெரிக்கா தேசத்திலிருந்து அநேக நூதன ஸங்கதிகள் தெரிந்துகொள்ளத்தக்க பிரயத்தனங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. முக்கியமாய் இந்த ஸங்கதி தெரிந்துகொள்வதற்காகவே அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மகாணங்களுக்கு ஆஸ்டேரிலியா கவர்ன்மெண்டாரால் ஸ்பெஷலாய் ஒரு நிபுணர் அனுப்பப்பட்டிருந்ததில் அவர் வெளியிட்டிருக்கும் ரிப்போர்ட்டினால் சப்பாத்துக்கள்ளி கால்நடைத் தீனிக்கு மிகவும் பிரயோஜனமாயிருப்பதாக தெரிந்துகொள்ளக் கூடவில்லை. விக்டோரியா தேசத்து இராஜாங்கத் தாவர சாஸ்திரியும், மெல்போர்ன் ஸர்வகலாசாலைத் தாவர சாஸ்திரியும், விக்டோரியா தேசத்தில் பிரசுரம் செய்யப்படும் விவசாய ஸம்பந்தமான பத்திரிகாசிரியருமான டாக்டர் ஏ. ஜீ. இவார்ட் என்பவர் எந்தவகையான சப்பாத்துக் கள்ளியும் கால்

நடைகளுக்கு ஆகாரமாக உபயோகப்படுத்தக்கூடிய தல்லவென்றும், தன் சொந்த நிலத்தில் சப்பாத்துக் கள்ளியை வளரச் செய்யும் எந்தக் குடியானவனும் புத்தி யற்றவனென்றே மதிக்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார். இப்படிச் சப்பாத்துக்கள்ளியை இவர் இகழ்ந்து பேசியிருக்கும் அபிப்பிராயத்தை உத்தேசிக்க விவஸாய காரியங்களில் அதிக பாண்டித்யமுள்ள ஐக்ய மாகாணத்தில் வஸிக்கிற மிஸ்டர் டீக்ரிப்பித் என்பவர் கொடும்பஞ்சம் நேர்ந்த வருஷங்களில் சப்பாத்துக் கள்ளி ஒன்றுதான் கால்நடைகளின் உயிரைக் காப்பாற்றும் ஆகாரமாயிருந்திருக்கிறதென்று டெக்ஸாஸில் "Old Timer" (ஓல்டு டைமர்) பத்திரிகையில் எழுதியிருப்பது வியக்கத்தக்கதாக இருக்கிறது. அந்தக் கனவான் சப்பாத்துக்கள்ளி கால்நடைகளுக்கு ஆகாரமாய் உபயோகப்பட்டிருக்கிறது என்று தன் அனுபோகத்தில் தீர்மானமாய் கண்டுபிடித்திருக்கிறதாகவும், அநேகம் பிரஸக்திகளில் லட்சக்கணக்கான கால்நடைகள் அதையே உணவாகக்கொண்டு காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்றனவென்றும், எல்லாப் பிரதேசங்களிலும் சப்பாத்துக்கள்ளி இல்லாத போது எத்தனை கால்நடைகள் காப்பாற்றிவரக்கூடுமோ அதைக்காட்டிலும் இரண்டு மடங்கு சப்பாத்துக்கள்ளியுள்ள நாடுகளில் வளர்க்கப்பட்டு வரக்கூடும் என்றும் தீர்மானமாய் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார். இப்படி எங்கும் தானாய் உண்டாகும் சப்பாத்துக்கள்ளி பிரயோஜனமுள்ளது என்பதிருக்க, சப்பாத்துக்கள்ளியை மற்றப் பயிர்களைப் போல் ஸாகுபடி செய்து விருத்திசெய்யவேண்டும் என்னும் விஷயம் நூதனமாயிருக்கிறது.

Griffith (கிரிப்பித்) என்பவர் சப்பாத்துக் கள்ளி அபிவிருத்தி செய்யும் விதத்தைப்பற்றிப் பின்வருமாறு வர்ணித்திருக்கிறார். முள்ளில்லாத சீமைச் சப்பாத்திக் கள்ளிக்கும் இத்தேசத்தில் சாதாரணமாய் உண்டாகும் முள்ளுள்ள கள்ளிக்கும் அதிக வித்தியாஸமிருக்கிறது. இத்தேசத்தில் உண்டாகும் கள்ளிதான் எந்த மண்ணிலும் செழிப்பாய் வளர்ந்து ஏக்கர் ஒன்றுக்கு 50 டன் வரை உண்டாகிறது. அயல் நாடுகளிலிருந்து முள்ளில்லாத சில ஜாதிக் கள்ளிகளைத் தருவித்துப் பயிர் செய்து விருத்தி செய்வதுதான் மிகவும் சரியான வழி என்று முதலில் எல்லாரும் எண்ணினார்கள். இதைப் பரீட்சிக்க முள்ளில்லாத கள்ளியுடன் சிலவிடங்களில் முள்ளுக் கள்ளியும் பயிரிடப்பட்டது. அப்படிச் செய்ததில் மாரிகாலம் வந்தவுடன் முள்ளில்லாத சீமைக்கள்ளி அழிந்து போய் அது முன்னிருந்த இடத்திலெல்லாம் முள்ளிக்கள்ளி அதிகமாய் பரவி விருத்தியடைந்துவிட்டது. இதனாலேயே ஜாஸ்தியாகப் புகழப்



படுகிற முள்ளில்லாத கள்ளி முற்றிலும் உபயோகமற்றது என்பது தெளிவாய் வெளியாயிற்று. முள்ளுள்ள சப்பாத்துக்கள்ளி வயல்களிலும் தோட்டங்களிலும் வைத்துப்பரிபாலித்தால் ஏராளமான பிரயோஜனத்தைக்கொடுக்கும் என்று அவர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார். அவைகளை நட்டு இரண்டு வருஷத்துக்கெல்லாம் ஸுலபமாய் அறுவடை செய்யலாம். நடுவதை விட அறுவடை செய்வது சுலபமான காரியம் என்று அவர் தெரிவிக்கிறார். Gasolene (காஸொலீன்) என்னும் வஸ்துவினால் எரிக்கப்பட்ட பந்தங்களைக்கொண்டு பொசுக்கினால் கள்ளியின் இலைகளிலிருக்கும் முட்கள் கருகிப்போகின்றனவாம். அதன் பின் அந்த இலைகளை எளிதில் கையாடலாம் என்று தெரிவிக்கிறார். அவைகள் மறுபடியும் வளரும்பொருட்டு அடித்தாளை விட்டு விட்டு மேல் கிளைகளை மட்டும் கத்தரித்து வண்டியில் ஏற்றித் துண்டு துண்டாய் வெட்டி ஆடு மாடுகளுக்குப் போடுகிறார்களாம். கள்ளி எப்போதும் பச்சையாகவே உபயோகப்படுத்தவேண்டியிருத்தலால் வைக்கோல் முதலிய கால் நடைத் தீவனங்களுக்கு அதை ஒப்பிட முடியாது. என்பது உண்மைதான். என்றாலும், மாடுகள் கள்ளியைத் தின்று விருத்தியடைந்திருக்கின்றன என்பதற்கு அநேகம் ஸாட்சியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. புஞ்சைத் தரையில் மாடு ஒன்றுக்கு புல்மேய 20 ஏக்கர் வேண்டியிருக்கிறது. ஆனால் கள்ளி உண்டாகிற இடங்களில் ஒரு ஏக்கர் போதுமானது என்று அவருடைய தீர்மானமான அபிப்பிராயம். மழை சுத்தமாய் இல்லாமற்போனபோதிலும் கள்ளியானது வருஷம் முழுவதும் பச்சையாகவே உபயோகப்படுத்தக் கூடியது. அதற்குப் பூச்சிகளால் யாதொரு கெடுதியுமில்லை. மற்றப் பயிர்களுக்கு நோய் நொடிகள் விழுவதுபோல் இதற்கு உண்டாவதில்லை. நெடுங் காலம் மழையில்லாமல் போகும் காலங்களில் ஆடுமாடுகள் இறந்துபோய் விவஸாயிகள் நஷ்டமடைய நேரிடுகிறது. அப்படிப்பட்ட காலங்களில் சப்பாத்துக்கள்ளி குடிகளுக்கு மிகவும் ஸந்துஷ்டியை உண்டாக்குகிறது அமெரிக்கா முதலிய தேசங்களில் மாடுகள் சப்பாத்துக் கள்ளியைத் தின்று ஜீவிக்கக்கூடுமானால், காலக்கிரமத்தில் இந்தியாவிலும் ஆடுமாடுகளுக்கு அதை உணவாக ஏன் உபயோகிக்கக்கூடாது? மதராஸ் விவஸாய சங்கத்தார் சில நிலஸ்வாந்தார்களுடைய ஒத்தாசையைக்கொண்டு சப்பாத்துக்கள்ளியை அமெரிக்கா தேசத்தில் உபயோகப்படுத்துவது போலவே நமது தேசத்திலும் உபயோகத்துக்குக் கொண்டுவர முயற்சி செய்யவும், அதே ஆவலோடு இந்திய தேசத்துக் கால்நடைகள் அதைத் தின்னும்படி பழக்கவும் பரீட்சார்த்தமாய் அநேகம் பிரயத்தனங்கள்

செய்யவேண்டும் என்றும் அப்படிச் செய்து சித்தியடையும் பக்ஷத்தில் இந்தியாவில் பஞ்சத்தின் கொடுமை பாதியளவுக்குக் குறையும் என்பதில் ஐயமில்லை என்றும் சென்னை மெயில் பத்திராசிரியர் அபிப்பிராயப்படுகிறார்.

---

## ஆறுவது சினம்.

நம்முடைய மனதிற்கு விசனம் உண்டாக்குகிற எதுவும் கோபத்தையாவது வன்மத்தையாவது எழுப்பத்தக்கதான விதமாயும் நம்முடைய மனதிற்கு சந்தோஷத்தை யுண்டாக்குகிற எதுவும் உபகாரத்தையும், பட்சத்தையும், எழுப்பத்தக்கதான விதமாயும் நாம் சர்வவல்லவரான நம்முடைய சிருஷ்டிகரால் உண்டாக்கப்பட்டிருக்கிறோம். திருஷ்டாந்தமாக நீதியாயாவது யோக்கியமாயாவது இருக்கிற ஒரு செய்கையை நாம் கண்டால் நீதியைப்பற்றிய நம்முடைய எண்ணத்திற்கு பிரியமுண்டாகி இதனால் பட்சமான ஓர் எண்ணம் பிறக்கிறது. ஆனால் மிகவும் அநீதியான ஒரு செய்கையை நாம் பார்த்தால் நீதியைப்பற்றிய நம்முடைய உணர்ச்சி நிட்சயமாகவே விசனமடைகிறது அப்போது நாம் கோபப்படுகிறோம் இவ்விதமாய்க் கோபமானது நம்முடைய சுபாவத்தில் ஒரு உபயோகத்தை யுண்டுபண்ணவேண்டுமென்ற கருத்தாய்ச் செய்யப்பட்டிருக்கிற ஓர் உணர்ச்சியாயிருக்கிறதென்று காணலாம். அது தப்பிதமாயாவது விசனமாயாவது இருக்கிற எதையும் தடுக்கும்படியாய் உண்டாக்கப்பட்டிருக்கிற உணர்வாயிருக்கிறது நாம் மரியாதையாக எண்ணுகிற ஆட்களுக்காவது பொருட்களுக்காவது செய்யப்படும் குரூரத்தை அல்லது கெடுதியை அல்லது நிந்தையைப்பார்த்து நாம் கோபப்படாமலிருந்தால் நாம் மிகவும் பரிதபிக்கப்படத்தக்க சிருஷ்டிகளாகவே இருக்கவேண்டும். தகுந்த சமயங்களில் கோபப்படுவது சரியென்றாலும் நமது கோபத்தை புத்தியின் எல்லைக்குள் காத்துக்கொள்ளவும் அது வெடுவெடுப்பும் பதில் தீமையுண்டுபண்ணுவதுமான செய்கைகளுக்கு நம்மை ஏவாதபடி கவலையாயிருக்கவும் பலமாய்க் கட்டுப்பட்டிருக்கிறோம். (நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள்.) சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்பாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது என்று ஒரு மகான் சொல்லுகிறார். அதன் கருத்தென்னவென்றால் நீங்கள் தகுந்த சமயத்தில் கோபப்படலாமென்றாலும் நீங்களதன் வல்லமையால் ஒரு அக்கிரமமும் செய்யக்கூடாது அந்தச் சமயம் கழிந்ததற்கு அப்புறம் சீக்கிரமாய் அதை உங்கள் மனதைவிட்டு அகற்றிப்போடவேண்டுமென்பதே. யாராகிலும் ஒருவனுக்கு கோபமான எண்ணங்களை வளர்த்திவருவது சாதாரணமாய் தப்பிதமென்று கண்டிக்கப்பட்டிருக்கிறது.



அறிவில்லாதமட்டி தன் கோபத்தை விசனமுங்கூப்பாடுமான சண்டையினாலாவது அடிபிடியினாலாவது வெளிப்படுத்துகிறான் நாகரீகமுள்ள துரை மகன் அடிபிடியையும் கூப்பாட்டையும் விட்டு மிருதுவான கண்டனைகளை உபயோகிப்பான், அல்லது விசனப்படுத்தினவனை மரண ஆயுதங்களால் சண்டை போடும்படி கூப்பிடுவான். கோபத்தை வெளிப்படுத்துகிற இவ்விரண்டு விதங்களில் எதாவது சரியாயில்லை அவ்விரண்டும் ஒன்றுபோலவே பிசகு தான் திட்டுவதும் தூஷிப்பதும் சண்டைபோடுதும் நன்மை உண்டுபண்ணமாட்டாது. நிட்சயமாகவே சங்கதிகளை முன்னைவிட அதிக கெட்டதாக்கும் நியாயமான கோபத்தை வெளியிடுஞ் சரியான விதம் என்னவென்றால் அந்தச்சமயத்தில் உன் மனதிலிருக்கும் உன் எண்ணங்களை பின்னும் தீமைக்குட்படுத்தாமல் சீர்படுதல் உண்டாக்கத்தக்கதான அமைதியான பேச்சினால் விபரிக்கவேண்டும். நாம் வெடுவெடுப்பும் கோபமும் பிரதிகேடு செய்வதுமான குணத்தையல்ல, சாந்தமும் பொருமையுமான குணத்தை அதிகப்படுத்துவது நம்முடைய சௌக்கியத்துக்கு முக்கியமானதாயிருக்கிறது. நமக்கு விசனமான அநேக சங்கதிகள் நம்முடைய ஜீவகாலத்தில் தினந்தோறும் கட்டாயமாகவே நேரிடத்தக்கதாக இருக்கிறது. இவைகளில் ஒவ்வொன்றையும் பார்த்து நாம் பொடுபொடுத்து புகைந்துகொண்டே இருக்கிறதாயிருந்தால் மெய்யாகவே நாம் நம்மிலே நிர்ப்பாக்கியராயும் நம்மைச் சுற்றியிருக்கிற எல்லாருக்கும் சங்கடம் உண்டுபண்ணுகிறவர்களாயுமிருக்கிறோம். நல்லகுணம் அதாவது இடையூறுகளை சாந்தமாயும் பொறுமையாயும் சகித்துக்கொள்ளும் வல்லபம் சகல குணங்களிலும் அருமையானவைகளில் ஒன்றாயிருக்கிறது. ஒரு கெடுதியை உடனே கவனியாமலிருந்து மன்னித்துப்போடக் கூடியதாயிருப்பது நேசிக்கப்படத்தக்க குணத்துக்கு அடையாளமாயிருக்கிறது. நாம் எல்லாரும் உட்பட்டிருக்கிற தவறுதலுக்கிடமான தன்மையினாலேயே நாம் ஒருவரிலொருவர் காணுங் குற்றங்களை மன்னிக்க ஆயுத்தமாயிருக்கும்படி பலமாய்க் கற்பிக்கப்படுகிறோம். பழிவாங்கும் குணமானது முதல் தீமையை அதிகப்படுத்துகிறது மன்னிக்குங் குணமோ அதை நீக்குகிறதற்கு மிகுதியாய் அநுகூலம் பண்ணுகிறது. மற்றவர்களும் நமது திருஷ்டாந்தத்தால் நடத்தப்பட்டு இரக்கமுள்ளவர்களும் லேசாய் ராசியாய்ப் போகத்தக்கவர்களுமாயிருக்க ஏவப்படுகிறார்கள். இவ்விதமாய் நல்மனதும் சமாதானமும் பூமியில் பரவும்.

பூ. ப. செல்லக்குமார கவுண்டர்,

கணக்கன்பட்டி.

## சரீராப்பியாஸம்.

சரீரத்திலுள்ள சகலவித யந்திரங்களும் அதனதன் முயற்சியைச் சரியாய் நிறைவேற்றிப் பலன் எய்தும் பொருட்டுச் செய்யவேண்டிய ஒருவகைத் தேகத்தின் தொழிலுக்கு சரீராப்பியாஸம் என்று பெயர். தேகமும் புத்தியும் நாம் பெற்ற பெருஞ்செல்வம். ஆதலின் அவைகளைக் கூடுமானவளவு பயிற்சித்தல் நமது கடமை. மனித தர்மங்களில் தேக போஷணை முக்கியமானது. ஏனெனில் சரீர சுகமின்றி இப்பூவுலகில் எவ்விதச் செயலும் இயலாதென்பது சாதமன்றோ? ஆதலின் அவ்வித அரிய தேக சுகத்தைப் பெருதற்குறிய சாதனங்களில் மிதமான சரீராப்பியாஸமும் ஒன்றாகும்.

### சரீராப்பியாஸத்தினாலுண்டாகும் நன்மைகள்.

இரத்தம் வேகமாயோடி தேகமெங்கும் வியாபிக்கின்றது. சுவாசாசயம் அதிக ஆகாயத்தை உட்கொள்வதினால் இரத்தம் அதிகமாய்ச் சுத்திகரிக்கப்பட்டு சரீரத்திற்கு சுகத்தையும் பலத்தையும் கொடுக்கின்றது. தேகத்திலுள்ள விஷக் கழிவுகள் சரியாய்க் கழிந்துபோகின்றன. சரீரத்திலுள்ள தசைநார்கள் பெருகுவதுடன் தசைகள் நன்றாய் வளர்ந்து அதிகபலமும் உறுதியுமுள்ளவைகளாகின்றது. புத்திக்கு ஆதாரமான மூளையானது அதிக பலம் பெற்று கடினமான தொழில்களையும் கடினமனோ முயற்சிகளையும் செய்யும் சக்தியுள்ளதாகின்றது. மனதில் உற்சாகமும் புத்தி கூர்மையும் திடச்சித்தமும் உண்டாகின்றன. சாப்பிடும் போஜனம் சரியாய் ஜீரணமாகி அதிலுள்ள சத்துக்கள் தேகத்தில் சாருகின்றன. நல்ல பசியுண்டாகும். சரீரமானது ஸ்தூலித்தாவது மெலிந்தாவது அவலக்ஷணமாய்த் தோன்றாமல் பலமும், உறுதியும், சுந்தரமுமுள்ளதாயிருக்கும்.

### சரீராப்பியாஸத்தின் அவசியம்.

போதுமான சரீரமுயற்சி இன்மையால் தேகத்திலுள்ள அநேகவித யந்திரங்களும் அதனதன் வேலைகளைச் சரிவர நடத்தாமல் மேற்கூறிய நன்மைகளுக்கு மாறுபாடான கெடுதிகள் சம்பவிப்பதுடன் சரீரம் குன்றி வளர்ச்சியுள்ளதாய்க் கடினமான உழைப்புகளையும் கடினமனோவியாபாரங்களையும் செய்யச் சக்தியற்றுப்போகும். உண்ணும் உணவு சரியாய் ஜீரணமாகமாட்டாது. ஆகையால் ஒவ்வொருவருக்கும் மிதமான சரீரப் பயிற்சி இன்றியமையாததாகும்.

### சரீராப்பியாஸத்தைப்பற்றி கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும். உழைப்பில்லாத உடல் உரங்கொள்ளமாட்டா. ஆகையால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் இருப்பிற்கும் வயதிற்கும் தேகத்தின் கூறுபாட்டிற்கும் சாப்பிடும் போஜனத்திற்கும் தக்கவாறு கஸரத் செய்தல், சிலம்பப்பயிற்சி, வேகமாய் நடத்தல் நந்தவன முதலியவை பயிரிடுதல் முதலியவற்றில் எதையாவது தினக்கிரமமாக இரண்டு மூன்று நாழிகை நேரம் அனுசரிப்பது அத்தியாவசியம்! தேக முயற்சிக்கு காலைப்பொழுதே உத்தம காலம். சரீரப் பயிற்சியைப்பற்றிக் கவனித்தலவசியம். அதிகமான உழைப்பு உடம்பிற்கிளைப்பு. எவற்றிலும் மிதம் பாராட்டவேண்டும். தேக முயற்சி செய்து உடம்பில் வியர்வை உண்டாயிருக்கையில் குளிர்ந்த காற்றாவது குளிர்ந்த ஜலமாவது படும்படி விடக்கூடாது அச்சமயம் தேகமெங்கும் ஒருவஸ்திரத்தால் அழுத்தித் தேய்க்கவேண்டும் ஆரம்பத்தில் சரீராப்பியாஸம் சிறிது வருத்தமாய்த் தோன்றுமெனினும் கல்வியைப்போல் தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயப்பவற்றுள் இதுவும் ஒன்றே?

மா. வே. சோணைமுத்து ஆசாரி,
மார்க்கயன்கோட்டை.



## பேரீச்சம்பழமும் அதன் பிரயோஜனங்களும்.

பேரீச்சை மரமானது ஆப்பிரிக்கா கண்டத்தின் வடபாகத்திலும், ஆசியா கண்டத்தின் தென்மேற்கிலும் உள்ளது. அதை அரேபியா தேசத்தில் ஏராளமாய்ப் பயிர் செய்கிறார்கள். ஐரோப்பாக் கண்டத்தில் பிரான்சு தேசத்திலும், அமெரிக்காவில் தலிபோர்ணியாவிலும், ஐக்கிய மாகாணங்களின் தென்பாகத்திலும், பேரீச்சையைப் பயிர்செய்கிறார்கள் இந்த மரம் முப்பது அடி முதல் அறுபது அடி உயரம் வரையில் வளர்கின்றது. இதன் அடி பாகத்தில் இலைகளடர்ந்த மட்டைகள் அடுக்கடுக்காய் நிறைந்திருக்கும்; இவைகள் எட்டு அடி முதல் பத்து அடி நீளம் வரையில் இருக்கும். வெப்பம் மிகுதியாயிருக்கும் தேசங்களிலும், சூரிய கிரணங்கள் தாராளமாய்ப் படுமிடங்களிலும், இந்த மரம் செழித்து வளர்கின்றது. இதில் இரண்டு மாதிரி மரங்களுண்டு. சில மரங்கள் காய்க்கும். சில காய்க்காது ஆனால் காய்க்காத மரத்தின் பூவானது, காய்க்கிற மரத்தின் பூவோடு சம்பந்தப்பட்டு, அது கனி தர்வேண்டும். இந்த மரத்தின் வேரானது நேரே தரையில் நெடுந்தூரம் இறங்கும். இதனால் அது காய்ந்த தரைகளிலும் வளர்கின்றது; ஏனெனில், வேர்கள் பூமியின்கீழ் வெகுதூரம் ஆழமாய் இறங்கிப் பூமிக்குள் நீர்மட்டத்தை எட்டுகின்றன. இதன் காய்களைப் பச்சையாயும் காய்ந்தபின்னும் எடுக்கிறார்கள், எகிப்து, பெர்ஷியா, அரேபியா என்னும் தேசங்களில் ஜனங்களுக்கு இதன் காயே முக்கியமான ஆஹாரவஸ்து; நமது தேசத்தில் இதை அதிகப்படியான செல்வப்பண்டமாய் உபயோகிக்கிறோம்.

இதனில் புஷ்டி தரத்தக்க ஸத்து அதிகமாயிருக்கின்றது. இதில் நூற்றுக்கு ஐம்பது பங்கு சர்க்கரையும், கொஞ்சம் கோந்துப்பசையும், தாது புஷ்டியை கொடுக்கக்கூடிய சத்துகளும் இதில் ஏராளமாய் இருக்கின்றன. பேரீச்சம் பழத்தை இப்பொழுது நாம் உபயோகித்து வருவதைவிட இன்னும் அதிகமாய் உபயோகிப்பதினால் நமக்கு அனேகவித நன்மைகளுண்டு. அதைப் பலவிதமாயும் உபயோகிக்கலாம்.

1. பேரீச்சம் பழத்தைக் கொட்டையெடுத்துவிட்டு, அது மிருதுவாகும் வரையில், நீரில் வேகவைத்து பிறகு, அதை ஒரு சல்லடையின் மீது போட்டுத் தேய்த்துக் கீழே விழுகிற மெதுவான ஸத்தையெடுத்துக்கொண்டு பாலை நன்றாய்க் காய்ச்சி யெடுத்து அதில் பழத்தின் ஸத்தைப் போட்டு நன்றாய்க் கலந்து சாப்பிட்டுவர உடம்புக்கு மெத்தவும் சவுக்கியத்தைக் கொடுக்கும்.

2. பாலைக் காய்ச்சி, அதில் சோளமாவைப் போட்டுக் கிளறி, நன்றாய் ஒரு மணி நேரம் சமைத்தெடுத்துக்கொண்டு, சர்க்கரை, அரைத்த பேரீச்சம்பழம், அரிந்த எலுமிச்சந் தோலின் தூள் இவைகளுடன் கொஞ்சம் உப்பு ஆகிய இவைகளைச் சேர்த்து வேறு பாத்திரத்திற் போட்டு ஒருமணி நேரம் வரையிலும் வைத்திருந்து சாப்பிட இதுவும் திரேகத்துக்கு சௌக்கியத்தைக் கொடுக்கும்.

3. மரவள்ளிக் கிழங்கென்னும் ஒருவகைக் கிழங்கின் மாவை ஒரு மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து, பிறகு அதைக் கொதிக்கிற வெந்நீரில் நல்ல பதமாய்க் காய்ச்சிவைத்து, கொஞ்சம் உப்பு, சர்க்கரை எலுமிச்சம்பழ ரஸம், பேரீச்சம்பழத் துண்டுகள் ஆகிய இவைகளைச் சேர்த்துக் கிளறி ஆறவைத்து எடுத்து உபயோகித்து வந்தால் திரேகத்துக்கு யாதொரு கெடுதியுமின்றி சவுக்கியத்தைக் கொடுக்கும்.

இளவேனிற் காலத்தில், பேரீச்சம்பழத்தினால் செய்து உபயோகப்படுத்தும், ஒவ்வொரு பானமும், திரேகத்துக்கு யாதொரு கெடுதியும் விளைவிக்காது என்று நாம் உறுதியாய்ச் சொல்லுகிறோம்.

## டாடா வமிசத்தாரின் பெரும் முயற்சி.

காலஞ்சென்ற பம்பாய் தர்மவான் மிஸ்டர் ஜே. என் டாடாவின் குமாரர் தங்கள் தகப்பனைப்போல் தொழில் சம்பந்தமாய்ப் பெரும் முயற்சிகள் செய்து வருகிறார்கள். மிஸ்டர் ஜே. என். டாடா செய்த தருமங்களையும் தொழில் முயற்சிகளையும் விடாமல் நடத்திவருகிறதுமன்றி, இப்போது எவரும் பிரமிக்கத்தக்க புது முயற்சியொன்று ஆரம்பித்திருக்கிறார்கள். பம்பாய்ப் பட்டணத்திலும் அதை அடுத்த இடங்களிலும் அநேக பஞ்சசாலைகளும் வேறு தொழிற்சாலைகளுமிருப்



பதால் அவைகளில் யந்திரங்களை ஓட்டுதற்கு இப்போது உபயோகப்படுத்தப்படும் நீராவி விசைக்குப் பதிலாய் ஜலமின்ஸார விசை (Hydro Electric Power) யை உபயோகப்படுத்தக் கூடுமென்று நிச்சயித்து, அந்த ஜல மின்ஸார விசையையுண்டு பண்ணி மேற்கண்ட இடங்களில் உபயோகப்படும்படி செய்ய ஒரு பெரிய கம்பெனி ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தக் கம்பெனிக்கு முதல் 175-லக்ஷம் ரூபாய். மேற்கு கடலோரமாயுள்ள மலைப்பிரதேசங்களில் ஏராளமாய் மழை பெய்வதால் அந்த மழைஜலத்தைத் தேக்கி அதைக் கால்வாய்கள் வழியாய் லநோளலி, வல்வான் என்ற இடங்களுக்குக் கொண்டுவந்து அங்கிருந்து பெரிய குழாய்கள்வழியாய் கண்டாலாவுக்குச் செலுத்தி அங்கிருந்து கோபோலி என்ற இடத்திற்குப்போய் அங்கே மின்சார விசை யுண்டுபண்ணப்படும். அங்கிருந்து இந்த விசையானது 40-மைல் தூரமுள்ள பம்பாய்க்குக் கொண்டுபோகப்படும். பம்பாயிலுள்ள பஞ்சாலைகளைத்தவிர ரெயில்வே கம்பெனியாரும் அந்த மின்சார விசையைப்பெற்று உபயோகிக்கக்கூடுமென்று சொல்லப்படுகிறது. பரோடா, பௌனகர், மைசூர், குவாலியர் மகாராஜாக்களும் இதில் அக்கரை காட்டி வருகிறார்களாம். வேண்டுமானால் மூலதனம் 250-லக்ஷம் ரூ. வரையில் அதிகப்படுத்தப்படும். சோபோலி என்ற இடத்தில் தேக்கப்படும் ஜலமானது பூமிக்குமேல் 1732 அடி உயர்ந்திருக்கும். அதாவது மைசூர் சிவசமுத்திரத்தின் ஜலமட்டத்துக்குமேல் 4-பங்கு அதிக உயரமாயிருக்கும். தற்காலம் மைசூர் கவர்ன்மெண்டுக்கு எலெக்ட்ரிக் எஞ்ஜினீராயிருக்கும் மிஸ்டர் எச். பி. கிப்ஸன் இந்த மகா முயற்சியைத் தலைவராயிருந்து நடத்துவார். இந்தியாவில் இப்படிப்பட்ட விஸ்தாரமான பெரும் முயற்சி இதுவரை இல்லவேயில்லை. இந்த டாடா சகோதரர்கள் இந்தியாவின் தொழில் அபிவிருத்திக்குச் செய்யும் அதிசயமான முயற்சிகளுக்கு அவர்களை முற்றிலும் புகழ்வது சாத்தியமல்ல.

## ஒழுக்க முறை.

நெருப்பினால் இரும்பு சுத்தமாகும்; துன்பத்தினால் நல்லார் விளங்குவாராவார். பெரும்பாலும் நம்முடைய சக்தி நமக்கே தெரியாமல் இருக்கும். துன்பமும் துயரமும் நம்முடைய சக்தியை வெளிப்படுத்தும். ஆயினும் துன்பம் அணுகுகையில் எச்சரிக்கையாயிரு. அப்போது அதை இலகுவாய் ஜயிக்கலாம். அது அணுகுகையில் நம்மனம் சலிக்காமலிருப்பின் அது மனதுக்குள் பிரவேசிக்குமுன் அதை வெல்லலாம். வருவாயிலேயே வியாதியைத் தொலைத்துவிடு. பின்னீடுசெய்வோம் எனவேண்டாம். இது ஞானியின் துணிபு. அன்றேல் ஒரு

தீய சிந்தை மனதில் படும். பின்பு அது விஸ்தரிக்கும். பின்பு மனம் அதை நினைத்து நினைத்துத் தீய பாவத்தைச் சித்திரிக்கும்; பின்பு அதில் ருசி தட்டும்; பின்பு அதன் வசமாகும். இவ்வண்ணம் மெல்ல மெல்ல, அது பலப்பட்டு நம்மை அடிமைப்படுத்தும். அத்தீய பாவம் வரும்போழ்தே கண்ணுயிராமல் சோர்வு உற்று இருப்பினும், வந்த பிறகு பார்ப்போம் என்று நினைப்பினும், அத் தீய பாவம் மேன்மேலும் விருத்தியாக விருத்தியாக நம்முடைய தைரியம் வரவரத் தளர்வதாகும்.

ஒவ்வொரு சோதனையிலும் ஒவ்வொரு துன்பத்திலும் ஈசன் அருள் இருக்கிறதென்று உன்னி, மனத்தைத் தாழ்மைப் படுத்திக்கொள். பணிந்த மனமுடையவரை, இறைவன் கை தூக்கிவிடுவர் ரட்சிப்பர். சோதனைகளாலும், துன்பங்களாலும், ஒவ்வொருவனுடைய மனோநிலையின் விருத்தி விளங்கும். அப்போதுதான் அவனுடைய மனவொழுக்கமும், மனோதர்மமும், அதிகமாகத் துலங்கும். நாம் மனத்தின்கண் மாசிலனாக இருப்பினும், அன்பினால் மனம் உருகினும், என்ன துன்பம் வந்தாலும் அவை நம்முடைய மனத்தைச் சலுப்பிக்காவாம்; எத்துன்பம் வரினும் அதைப் பொருத்தால் நிவர்த்தி மார்க்கத்தில், மேம்பாடு அடைவார்களென்பதற்கு நம்பிக்கை உண்டு. பெரிய சோதனைகளில் சிலர் சாவதானமாய் நீந்தித் தப்புகிறார்கள். அவர்கள் அற்பத் துன்பங்கள் நேரிடில் அடிக்கடி அமிழ்ந்து போகிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால்—கொடிய துன்பம் வருங்கால் தம்மை நம்பாமல் இறைவனை நம்பிக் கரையேறுகிறார்கள். சிறிய துன்பங்கள் வரில் அவரை நினையாமல் தம்மை நம்பித் தடுமாறுகிறார்கள்.

## புத்தக வரவு.

**ஸ்ரீகாசியாத்திராதீபம்:**—இப்புத்தகமானது காசியாத்திரைசெய்யும் தமிழ் மக்களுக்கு பெரிதும் பிரயோஜனப்படுமாறு ஸ்ரீகாசியில் பீதாம்பர வர்த்தகம் செய்யும், மெஸர்ஸ். K. S. முத்தையா கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 6 தான்.

**ஸ்ரீகாசிகேதார மான்மியம்:**—இச்சிறு புத்தகத்தில் ஸ்ரீகாசி க்ஷேத்திர மான்மியமும், ஸ்ரீகாசி க்ஷேத்திரத்தை யடைந்து முக்தி யடைந்தவர்களின் சரித்திர விபரங்களுடனும், இன்னும் பல அறிய விஷயங்களுடனும், அநேக உபமான உபமேயங்களுடனும் வரையப்பட்டுள்ளதானது மிகவும் ருசிக்கின்றது. தமிழறிந்த ஒவ்வொருவர் கையிலும் இப்புத்தகத்தின் பிரதிஒன்று இருத்தல் மிக்க அவஸ்யமாகும். இதன் விலை அணா 6 தான். வேண்டியவர்கள் ஸ்ரீகாசி K. S. முத்தையா கம்பெனியாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.



**சந்திரகாந்தா:**—மிஸ்டர், ஜெ. ஆர். ரெங்கராஜு அவர்களால் இயற்றப்பட்ட சந்திரகாந்தா என்னும் ஓர் துப்பறியும் நாவல் வரப்பெற்றோம். இக்கதையின் அமைப்பு நிரம்பவும் அற்புதமாயிருக்கின்றது. பாதிரிப்பூம் பட்டணத்து போலீஸ் இன்ஸ்பெக்டரும், மேஜிஸ்டிரேட்டும் அண்ணாசாமியால் கொள்ளையடிக்கப்படுவதும், முனிசாமி என்னும் அம்பட்டன் சுபேதார் அண்ணாசாமியிடம் அகப்பட்டுக்கொண்டு அவதிப்படுவதும் படிப்பதற்கு வெகு வேடிக்கையாயிருக்கிறது. திருக்கள்ளூர் பண்டார சன்னதிகளின் திருவிளையாடல்களும் யோகாப்பியாசங்களும் செப்புத்தரமல்ல. சுந்திரகாந்தா வென்னும் பேதை சுண்டூர் மஹாராஜாவின் மோஹத்தில் மூழ்கி மோசம்போனதானது பகுத்தறிவு இல்லாத பாலிகைகளுக்கு ஓர் படிப்பினையாகும். சந்திரவதனாவின் சத்குணமானது அறிவுடையோர்களால் சிந்திக்கத்தக்கது, தூயமனமே துன்பத்தைப் போக்கி சுகத்தைக் கொடுக்குமென்பதற்கு ராகவரெட்டியாரின் மாசற்ற மனமே போதிய சாக்ஷியாகும். கோவிந்தனின் துப்பறியும் சாமர்த்தியமோ வரைவதற்கேலாது. லக்ஷ்மிகாந்த நாயுடு அவர்களின் விமரிசையான தோட்டக்கச்சேரியும், விட்டல்தாஸ் அவர்களின் நவரத்ன கண்டி களவுபோனதும் சுண்டூர் பெரிய ராஜாவின் சதியாலோசனைகள் எல்லாம் சஞ்சலத்தில் முடிந்து முடிசூட்டுக் கோலமெல்லாம், பிணக்கோலமானதும், ராகவ ரெட்டியாருக்கு ராஜ்ய பாரம் கிடைத்ததும், நாராயண ரெட்டியாரின் மனோதைரியங்களும் இந்நூலினை வாசிப்போர்களுக்கு அளவற்ற ஆச்சர்யத்தைக் கொடுக்குமென்பதிலையமில்லை, இந்நாவலானது நடந்தவாறாகவே வரையப்பட்டிருப்பதானது ஸ்ரீ ராஜு அவர்களின் நாவல் எழுதும் வன்மையைக் காட்டுகிறது. இந்நூலில் ஆங்காங்கு சமயோஜிதமாக ஆவ்டோன் படங்கள் மூன்று அமைத்திருப்பதானது நிரம்ப அழகாய் இருக்கிறது. இவ்வளவு அருமையான நவீன நாவலின் விலை அணா 12 தான். தமிழறிந்த இருபாலர்களும் இதனை வாங்கி வாசித்து இன்புறுவார்களாக. இதனை நம்மீ தன்புகூர்ந் தனுப்பிய ஆசிரியரவர்களுக்கு நமது மனப்பூர்வமான வந்தன மளிக்கின்றோம். இப்புத்தகம் வேண்டியவர்கள் மௌண்ட் ரோட் ஜெ. ஆர். ரெங்கராஜு அவர்களிடம் பெற்றுக் கொள்ளவும்.

## வைத்தியக் குறிப்புகள்.

**சொறிசிரங்குகளுக்கு:**—கந்தகத்தைப்பன்றிநெய்யிலாவது, தேங்காயெண்ணெயிலாவது கூட்டிக்கொண்டு அதன் துர்க்கந்தம் நீங்குவதற்கு சிறிது அத்தர் சேர்த்துக்கொள்ளவும் இதனை சொறி சிரங்குகளுக்குப் பூச சுகுணமுண்டாகும்.

**துத்தியிலை:**—இதை எண்ணெய்விட்டு வதக்கி ஒற்றிடமிட்டால் மூலவேதனை தணியும்.

**வாந்தியும் வயிற்றுநோயும்:**—ஆகாரம் சாப்பிடுவதற்குமுன் ஒரு கோப்பை வெந்நீர் சாப்பிட்டு அப்பியாசப்படுத்திவரின் மேற்கூறிய பாதை நீங்கும்.

**கடினமான சூடு:**—ஜுரத்தில் தேகம் கடுமையான சூடாயிருந்தால் சோடா வாட்டரை மெல்லிய துணியில் நனைத்து தேகத்தில் தடவினால் சூடு தணிந்து நோயாளிக்கு ஆரோக்கியமுண்டாகும்.

**விக்கலுக்கு:**—தேன், வெல்லம், புளி, எலுமிச்சம்பழத் துண்டு' புளிப்பு மாதுளம்பழ விரை இவைகளில் ஏதேனும் ஒன்றை வாயிலிட்டு ரசத்தை விழுங்கிக்கொண்டிருந்தால் விக்கல் நிற்கும்.

**தலைப் பேனுக்கு:**—வெங்காரத்தைத் தூள் செய்து ஜலத்தில் போட்டு காய்ச்சிய ஜலத்தை 3-நாள் தலையில் தேய்த்து நான்காம் நாள் காலை வெந்நீரில் ஸ்நானம்செய்ய, பேன், பொடுகு, சொறி முதலியன நீங்கும்.

**உண்ணாக்கு வளர்த்திக்கு:**—மெழுகினால் ஒரு சிறிய காண்டி செய்து, ஈர்க்குசொருகி காம்புபோல் செய்துகொண்டு பிறகு வெள்ளைப் பூண்டு ரசத்தை காண்டியிலிட்டு காம்பைப் பிடித்துக்கொண்டு ஷெ வெள்ளைப்பூண்டு ரசம் உண்ணாக்கில் படும்படி 2, 3 தடவை நிதானமாய் வைத்தால் சுகுணமுண்டாகும்.

---

## விடுகதை விடை.

வாரிலகு கும்பகோ ணத்தினிற் றோற்றிடு
    வைத்(தி)யபோ தினியி னதிபர்
வாசித் தறிந்திடுக நும் மார்ச்சு மாதத்து
    வாய்ந்தபத் திரிகை யொன்றை
நேரிலே கண்டன மதிற்றோற்று விடுகதையை
    நெடிதுமா ராய்ந்த வறிஞர்
நேர்ந்தவேப் பிறல்மேயி லார்ந்த பத்திரிகைகளி
    னோராய் விளக்காவிடில்
சீரிலக விந்தமறு மொழியை வெளிவிடுகுவீர்
    செப்புவிடு கதைமறுமொழி
சீலயாழ்ப்பாண "சன் மார்க்கபோதினி" யதிபர்
    தீட்டினு ரஃதேதெனில்
"மாரிஅனுகாவாழ்க்கை" யென்னலா மிப்பதம்
    வரைந்துவரு விடைகண்டிடீர்.
"வைத்(தி)யபோ தினி" யதிப ரோடுபத் திரிகையும்
    வாழிநீ டூழிமன்னோ.

இங்ஙனம்,
**ச. தம்பிமுத்துப் பிள்ளை.**



## ஓர் நவீன விடுகதை வினா.

[ த ரு. ]

தந்தனத் தானேனே—தனதன
தந்தனத் தானேனே.

1. பெண்பெய ரெட்டெழுத்தில்—ஒன்றிரண்டு
    பேசுமூன் றோர்வருடம்
  வண்மைசே ரொன்றுமூன்றும்—ஓர்வருடம்
    வல்லவொன் றுநான்கும் (தந்த)
2. மாவரு டத்திலொன்றும்—ஒன்றைந்தாறு
    வாய்மையெட் டோர்மலையாம்
  பாவல ரொன்றாறு—அஷ்டமத்தால்
    பாரினில் மாதிரியாம் (தந்த)
3. தாலத்தி லொன்றேழு—ஆறெட்டினால்
    தக்க தவமாகும்
  கோலவி ரண்டுமூன்று—எட்டால் வெற்றி
    கூறும்நான் கைந்தினுடன் (தந்த)
4. தாமவா றேழெட்டு—அழகென்பர்
    சதுருடனேழெட்டினால்
  காமவிசை யென்பார்—ஆறொன்றுடன்
    தண்யநால் மெத்தையென்பார் (தந்த)
5. மங்கள வாறேழு—எட்டுந்தெப்பம்
    வளர்நான்கொன்று துளசி
  பங்கமில் லொன்றிரண்டு—மூன்றெட்டினால்
    பாரில டைக்கலமாம் (தந்த)
6. இத்தக யபொருளைப்—புவிமீதி
    லின்பமு டன்தெரிந்து
  முத்தமிழ் வாணர்விடை—சொல்வீரென
    முற்றும்நா னம்பினேனே. (தந்த)

V. மௌனகுருருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
லேட் முனிசிபல் கௌன்சிலர், பழனி ஸ்தலம்.

## வர்த்தமானங்கள்.

**அதிகவிலை பெற்ற வைரக்கல்:**—அமெரிக்காவிலுள்ள மகலீன் என்னும் பிரபு மூன்று லக்ஷம் பவுனுக ஒருவைரக் கல்லைவாங்கியிருக்கின்றாராம்.

**டிரிஸ்டன்டான்குன்ஹா:**—மேற்படி நாமமுள்ள சிறு தீவில் 14 ஆண்களும், 20-பெண்களும், 43-சிறுவர்களுமே வசிக்கின்றபடியால் இதுவே ஜனத்தொகை குறைந்த தீவாம்.

**தேனீக்களின் தொகை:**—உலகத்தில் சுமார் 1,200,000,000,000 தேனீக்களிருக்கின்றன வென்றும் அவை ஒரு வருடத்தில் 24,000,000 பவுண்டு மதிப்புள்ள தேனை யுண்டுபண்ணுகின்றன வென்றும் ஒரு ஜர்மானிய கணித சாஸ்திரி கணித்திருக்கின்றனர்.

**11000-ஆடுகளின் துர்மரணம்:**—அமெரிக்காவில் காஸ்கேடு மலை ஒருமிகப் பெரிய ஆட்டுமந்தை நாசமாய்ப் போயிற்று. இருட்டு தெரியாமல் முன்போன இடையன் ஒருமலைச் சிகரத்திலிருந்து திடீரென்று விழுந்தான். ஆடுகளும் தெரியாமல் விழுந்துவிட்டனவாம்.

**பிரமாண்டமான தேகி** —கானடா தேசத்தில் முப்பது வயதுள்ள பிராஞ்சியனொருவன் 11-அடி உயரமும் 587-ருத்தல் நிறையும் 18 இஞ்சி அகலமுமுள்ள கைகளும், 24-இஞ்சு நீளமும், 12-இஞ்சு அகலமுமுள்ள பாதங்களுமுடையவனு யிருக்கின்றானும். இவனணியுமுடுப்பை சாதாரண மனிதர்கள் 10-பேர்வரையி லணியலாமாம்.

அமெரிக்காவைச் சார்ந்த ஐக்ய மாகாணத்திலிருக்கும் நியுயார்க்கு பட்டணத்தில் 750-அடி உயரமுள்ள ஒரு வீடு இருக்கிறதாம்; அதில் 40-அடுக்கு மெத்தைகளிருக்கின்றதாம்; இதற்குமேல் இன்னும் 25 அடுக்கு மெத்தை கட்டி வருகின்றனராம்; செல்வத்தின் மகிமை என்னே! பூர்வம் முடியாதுபோன பாபிலோன் கோபுரமும் இக்காலத்தில் முடியும்போலும்.

**கறையான்** வீடுகளிலும், மரங்களிலும் பற்றிவிட்டால் மண்ணெண்ணெயிலிருந்து உண்டாகும் பினயில் என்கிற எண்ணெயைப் போட்டால் கறையான் பிடிக்காதென்று ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். ஆனால், கறையானுள்ளவிடங்களில் பொட்டாசியம் ஸயனைடு என்னும் வஸ்துவைக் கரைத்து ஊற்றினால் அவை அடியோடு அழிந்துபோகுமென்று வேறொருவர் எழுதுகிறார்.

பேர்லின் நகரத்தைச் சார்ந்த பிரஸ்லா கலாசாலையின் பிரதம வைத்திய பண்டிதராகிய கட்னர் என்பவர், ஆறாத இரணமுள்ள ஒருவன் காலைத் தறித்தெறிந்துவிட்டு, செத்துப்போன வேறொருவனுடைய காலை வெட்டி அதை மேற்படி நோயாளியினுடைய காலுக்குப் பதிலாய் வைத்துப் பொருத்திச் சிகிச்சை செய்து சவுக்கியப்படுத்திவிட்டாராம். அம்மனிதன் செத்தவன் காலோடு சுகமாய் நடந்து திரிகின்றானும்.

**சீமை மானிடச் சங்கத்தார்:**—8-வயதுள்ள நம் பெங்காளச் சிறுவனுக்கு கிணற்றில் விழுந்த 5-வயதுள்ள தங்கையை கிணற்றிலிரங்கி அவளைத் தூக்கி கரைதீர்த்த தீரச்செய்கைக்காக எங்கும் புகழ்பெற்ற வீரசூரமணிகள் தாங்கும் தங்கமெடலொன்றும் ஒரு நற்சாக்ஷிப் பத்திரமுங் கொடுக்கப்போகிறார்களாம். ஆகா! இதல்லவா தீரம், வீரம். இன்னொரு பெங்காளியருக்கும் மூழ்கும் பெண்ணை கரைசேர்த்ததற்காக ஒரு மெடல் பரிசளிக்கப்போகிறார்களாம்.

**பருந்துகளும் புகைக் கூண்டுகளும்:**—மனிதரை முதுகில் வைத்துக்கொண்டு பறக்கும் கழுகுகள் இருக்கின்றன. இவைகளை வாகனமாகச் சிலர் உபயோகப்படுத்துகிறார்கள். இவைகள் சேனைகளுக்கு முக்கிய அங்கமாவதைக் குறித்து பேடன்பௌல் என்கிற ஆங்கில கதாசிரியர்—"பலத்த காற்றடித்தால் ஒருபுகைக் கூண்டு போகாது; இக்கழுகுகள் பயமில்லாமல் போகும். அவைகளைப் பறக்க விடுவதற்கு புகை வேண்டுவதில்லை. அன்றியும் பகைவர் கண்களுக்கு இவை சடுதியில் புலப்படா. ஒரு மயில் உயரத்திலிருந்தால் அவை காணப்படுவதேயில்லை அனுபவத்தில் அவைகளைக் காயப்படுத்த முடியாது.

Office of the Registrar of Books
REGISTERED
8 - SEP 1911
MADRAS.

உ

# வைத்திய போதினி.

சித்திரப்படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்த தமிழ்ப்பத்திரிகை.

புத். 2. } 1911-ஆகஸ்டு மீ } நெ. 8.

## தென்னைமரம்.



தென்னைமரம் (Cocoanut tree) இது சர்வ சாதாரணமாய் எல்லோருக்கும் தெரிந்த வஸ்துவாகையால் இதன் உற்பத்தி விபரம் முதலியவைகளைப்பற்றி அதிகம் எழுதவேண்டியதில்லை. இப்பூவுலகில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட எண்ணறிய தாவரங்களிருப்பினும் தென்னைமரத்தைப்போல மனித சமுகத்திற்கு பயனளிக்ககூடியது வேறொன்றும் இல்லை என்றே சொல்லலாம். தென்னைமரத்தில் பலஜாதி மரங்களுண்டு. தேங்காயை போஜன பதார்த்தங்களோடு சேர்ப்பதால் பதார்த்தங்களுக்கு உருசியுண்டாகும். தேங்காயை யாட்டி யெடுக்கிற தேங்காயெண்ணையானது (Cocoanut oil) புதிதாயிருந்தால், தெளிவாயும், இளமஞ்சள் நிறமாயும், வாசனை இல்லாமலிருக்கும். நாட்சென்ற எண்ணையானது காரலெடுத்து பழுப்பு நிறமாயிருக்கும். தேங்காயெண்ணையானது சீதளகாலத்தில் உரைந்துகெட்டியாய்விடும், மலையாள ராஜ்யத்திலுள்ள பிரஜைகள் யாவரும் தேங்காயெண்ணையைத்தேய்த்து ஸ்நானம் செய்வதுடன் பெரும்பாலும்போஜனங்களுடனும கூட்டிவருகிறார்கள். ஆனால் பழக்கமில்லாதவர்கள் உபயோகித்தால் பித்தத்தை

அதிகரிக்கும், இவ்வெண்ணெயைக்கொண்டு யெரியும் விளக்கானது, மற்ற எண்ணெய்களைக்காட்டிலும் பிரகாசம் தரக்கூடியது, ஆங்கில வைத்தியர்கள் களிம்புகளுக்கும், ரணசிகிச்சைகளுக்கும் இதனை உபயோகித்து வருகிறார்கள். இதற்கு ரோமத்தை வளர்க்கிறகுணமுமுண்டு, மேனாட்டார் செய்யும் ஸோப் (Soap) மெழுகுவத்தி (Candle) முதலியவைகளுடன் சேர்க்கப்படுகிறது. இங்கிலீஷ் வைத்தியர்கள் மீன் எண்ணெய்க்கு பதில் இதை க்ஷயரோகத்திற்கு கொடுத்து பரிக்ஷித்ததுண்டு. 53 ரோகிகளுக்குக் கொடுத்துப்பார்த்ததில் 34 பேருக்கு மெத்த சௌக்கியமுண்டானதாயும் 8 பேருக்கு அந்த வியாதி ஏற்றக்குறைச்சலில்லாமல் ஒரே ஸ்திதியிலிருந்ததாயும், மற்ற 11 பேருக்கு அதிக்கிரமித்ததாயும் கண்டிருக்கிறது, மீனெண்ணெயைப்போல் இதுவும் தேகத்தைபோஷிக்கின்றதாம் ஆனால் வயிற்றின் சுகத்தைக்கெடுத்து பேதியை உண்டுபண்ணுகிற ஓர் துர்க்குணமே இதிலிருப்பது. தேங்காய் புண்ணாக்கை கீழ்நாட்டார் கழனிகளுக்கு உரமாகவுபயோகிக்கிறார்கள், மேனாட்டாரோ தேங்காய் புண்ணாக்கினால் பலவித தின்பண்டங்களும் பிஸ்கோத்து (Biscuits) களும் செய்கிறார்கள். இன்னும் லண்டன், ஜெர்மனி, பாரிஸ் முதலிய தேசங்களில் தேங்காயிலிருந்து ஒருவிதமான வெண்ணெ எடுக்கிறார்களாம். இது மாடு, ஆடு முதலிய வெண்ணெகளைக்காட்டிலும், வெண்மையாயும், சாப்பிடுவதற்கு ருசியாயும் இருக்கின்றதாம், தேங்காய்ப்பாலில் 4 அல்லது 8 அவுன்ஸ் பிரமாணம் தினம் 2—3 ஆவர்த்தி துர்ப்பலம், க்ஷயரோக ஆரம்பம், மேகவாங்கை, வயிற்றுப்புண், முதலிய ரோகங்களுக்குக்கொடுத்து சௌக்கியம் கண்டதுண்டு, காபிகஷாயத்தில் விடும் பாலுக்குப்பதிலாய் தேங்காய்ப்பாலைவிட்டு சாப்பிடலாம். குழந்தைகளுக்குக்கொடுக்க இது நல்ல முறை, தேங்காய்ப்பாலை அதிகமாய்ச்சாப்பிட்டால் மலம் இளகும். அல்லது பேதியாகும், ஆமணக்கெண்ணெய்க்குப்பதில் இதைக்கொடுக்கலாமென்றும் சொல்லுகிறார்கள். வாய் இரணத்திற்கு தேங்காய்ப்பாலை வாய்கொப்புளிக்க சௌக்கியமுண்டாகும். தேங்காய் மது இதுவே, தென்னங்கள்ளு (Toddy) டாடி, இதை அதிகாலையில் சாப்பிட்டால் மலமிளகும். தேக ஆரோக்கியமுண்டாகும். அதிக அளவில் சாப்பிட்டால் அறிவுகெட்டு, அதிசாரம், பாண்டுரோகம், ரத்தக்கழிச்சல், வாதபித்ததொந்தம், பிரமேகம் கரப்பான், வீக்கம், ஆனந்தக்களிப்பு, மதிமயக்கம், ஆகிய இவைகளுண்டாகும். புளித்த கள்ளை அரிசிமாவில் விட்டு வேகவைத்துக்களி கிண்டி ரணங்களுக்குக்கட்டினால் இரணத்திலுள்ள துர்வாசனைபோம். கள்ளை வடித்துச் சாராயம் காய்ச்சலதும் உண்டு. புளித்த கள்ளினால்



காடி செய்வதுடன், இன்னும் புளித்தக்கள்ளினால் வெல்லமும் காய்ச்சுகிறார்கள். இளநீருக்கு குளிர்ச்சி, நேத்திரப்பிரகாசம் உண்டாகும், பித்தசூடுந்தீரும். ஆகாரத்திற்குப்பின் இளநீர்குடித்தல் உத்தமம் இளநீரில் கொத்தமல்லியை ஊரவைத்துக்குடித்தால் நீர்த்தாரையில் உதிரம் ஒழுகுவதை நிறுத்தும், மூத்திர வர்த்தனி செய்கையுண்டு. அதிதாகம், பயித்தியகோபம், தேகஉஷ்ணம் அகலும். இளநீரின் இளசானவழுக்கையுடன் கற்கண்டு சேர்த்து அருந்திவர, மூலச்சூடுதீரும், தாதுபுஷ்டியுண்டாகும். கோழிமுட்டை வெள்ளைக்கருவுடன் தேங்காய்ப்பால் கூட்டி பாவித்தால் மேகவெள்ளை தீரும். தேங்காய்ப்பாலுடன் பிரமிச்சாறும் பொடுதலைச்சாறும் சமன்கூட்டி சாப்பிட பிரமியம், நீர்க்கடுப்பு, மூத்திரக்கிரிச்சரம் முதலியன நீங்கும். தென்னம்பூவை இடித்துச்சாறுபிழிந்து எருமைத்தயிருடன் கூட்டி பெரும்பாட்டுக்குக்கொடுப்பது நாட்டு வழக்கம். ரக்தபித்தம், சீதபேதி, மேகம் முதலியவைகளுக்கு தென்னம்பூவை உபயோகிக்கலாமென்று ஆயுர்வேத நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. தென்னம் பஞ்சை வெட்டுக்காயம், அட்டைக்கடி முதலியவைகளுக்கு ரக்தஸ்தம்பனகாரியாகவும் உபயோகிக்கலாம், இவ்வாறு பலவித மருந்துப்பொருளாக உபயோகமாவதுடன், இன்னும் பலவிதமாகவும் மனிதசமூகத்திற்குப்பயனை தருவதைக்கருதியே இத்தென்னைமரத்திற்கு பூலோக கற்பக விருக்ஷம் என்று சான்றோர் பேர்கொடுத்திருக்கிறார்கள் போலும்.

## அகாலப் பிரஸவம். (ABORTION)

இதுவே கருவழிவு, அழிகர்ப்பம், கர்ப்பஸ்ராவம், கர்ப்பவிச்யுதி அல்லது கர்ப்பங்கரைந்து போகுதல் என்று சொல்லப்படும்

**ரோகவிபரம்:**—அந்த ரோகமானது விசேஷமாய்க் கருத்தரித்த 3 முதல் 6 மாதத்திற்குள் நேரிடுவது வழக்கம். இதில் 2 ஜாதிகளுண்டு 6 மாதத்திற்குள் கருப்பையிலிருக்கும் பிண்டம் வெளிப்படுவதற்கு கருவழிவு (Abortion—எபார்ஷன்) என்றும், 6 மாதத்திற்கு மேற்பட்டு பூரண காலத்துக்கு முன் பிண்டம் வெளிப்படுமானால் அகாலப்பிரஸவம் (Premature labour பிரிமேடியூர் லேபர்) என்றும் சொல்லப்படும்.

**ரோகலக்ஷணம்:**—பிண்டம் வெளிப்படும்போது பிரமிக்கும்படியாய் இரக்தம் வடியும். முதுகு, இடுப்பு, தொடை முதலியவிடங்களில் நோய்காணும் நோய் விட்டு விட்டுக்காணும். ஆயாசமும், அசௌக்கியமும் அனத்தலுமிருக்கும். ஒக்காளம், வாந்தி, ஜ்வரம் முதலியவை காணும் நாடி தீவிரமாய் நடக்கும். பிரதமகர்ப்பத்தில் கருவழிவு வந்த சில ஸ்திரீகளுக்கு பிரதி கர்ப்பமும், அழிந்துவிடுவது

முண்டு ஆனால் அப்படிப்பட்டவர்களுக்கு அதிக வேதனையிராது. சீக்கிரத்தில் சுகுணமாய்விடும். ஆனால் சரீரப்பிரகிருதிகளுக்குத் தகுந்தாப்போல் சிலர்களுக்கு அற்பமாயும் சிலருக்கு பிரபலமாயுமிருக்கும்.

**காரணங்கள்:**—கஷ்டமானவேலை, ஒட்டம், அதிர்ச்சியுண்டாகும்படியானமுயற்சிகள் அலறிசப்தமிடுதல், கைகளைதலைக்குமேல் உயர்த்துதல், பாரமான சுமைகளைச் சுமத்தல், மாடிப்படிகளில் அடிக்கடி ஏறி இறங்குதல், இராக்காலங்களில் அதிக நேரம் விழித்திருத்தல், பகலில் நித்திரை செய்தல், சுத்தமான காற்றோட்டமில்லாத விடங்களில் வசித்தல், வண்டி முதலிய வாகனங்களில் ஏறி வழிப்பிரயாணஞ்செய்தல், தையல்தைக்கும் இயந்திரத்தில் (Sewing Machine) கைகால் ஆட்டங்கொடுக்கும்படி வேலைசெய்தல், தூர்ப்பலம், கருப்பைவியாதி, மேகரோகம், பயம், திடுக்கம் மனக்கவலை, கோபம், அதிகசந்தோஷம், அதிக புணர்ச்சி, விசனம், வாளம், கரியபோளம் முதலிய உஷ்ணமான விரேசன மருந்துகளை உட்கொள்ளுதல், ஜ்வரம், பேதி, சீதபேதி முதலிய காரணங்களால் கருவழிவு உண்டாகும். இவ்வகைக் காரணங்களால் ஏற்படும் கர்ப்பவிச்சியுதியை, பேய் பிசாசுகள் அறைந்துவிட்டதாகவும் நம்நாட்டிற் கூறுவதுண்டு இதனால் பேய்பிசாசுகள் இல்லை யென்பது எமது கருத்தல்ல.

**சிகிச்சை:**—இரத்தப்பிரவாகத்தோடு கூடிய கருவழிவிற்கு காடியை சுத்த ஜலத்தில் கூட்டி கந்தைத்துணியை நனைத்து ஓயாமல் மர்மஸ்தானத்தின் மேல் விடுவதினால் இரக்தம் நிற்கும். குணம் காணாவிட்டால் 2 அவுன்ஸ் காடியுடன் 1 பைன்ட் சுத்த ஜலம் கூட்டிக் கொஞ்சம் சர்க்கரை சேர்த்து, வேளை ஒன்றுக்கு $1\frac{1}{2}$-முதல் 2 அவுன்ஸ் வீதம் தினம் ஒன்றுக்கு 3—4 தரமாகிலும் அல்லது பலதடவையாகிலும் கொடுக்கலாம்.

---

# பொதினா.

பூமியின் மீதுண்டாகும் விருக்ஷவகைகளிலும், செடி கொடி வகைகளிலும் பொதினாச்செடியும் செடி வர்க்கத்தில் சேர்ந்ததாயிருக்கின்றது. இப்பொதினாச் செடியைப் புதினா வென்றும் பல்லோர் பகர்வாராகின்றனர். பல செடி கொடிகளின் உற்பத்தியைக் காட்டிலும் இப்பொதினா உற்பத்தியாகும் வகை மிக்க ஆச்சரியகரமானதும் நமது பத்திரிகாபிமானிகள் பலரும் தம்மிருதயத்தில் அமைத்து இன்புற வேண்டியதுமாம். இப்பொதினாச் செடியின் இலை மிக்க உபயோகமுள்ளதெனப் பல்லோராலுங் கருதப்படுகின்றது. ஐரோப்பியர் மகம்



மதியர் முதலாயினோர் இவ்விலையின் உபயோகத்தினைப் பெரிதும் போற்றிக்கொண்டாடி, இவ்விலையைத் தினந்தோறும் தம்முணவுகளிற் றக்கபடி பக்குவஞ் செய்து கலந்துபயோகிப்பதனால் தேகாரோக்கியமுடையவராயும் மனச்சந்துஷ்டியுடையவராயு மிருப்பதாகவும் தெரிய வருகிறது. இப்போது இதன் பயன்றரும் வல்லமையினையும் பரிசோதித்தறிந்த இந்துக்களிற் பல்லோரும், இதனைத் தம்முணவுடன் உட்கொள்ளுவாராகின்றனர். இச்செடிகள் எக்காலத்திலும் எங்கும் தண்ணீர் மிகுதியாயுள்ள விடத்தும், தக்க பாதுகாப்பு முதலியன பொருந்திய விடத்தும், பெரிதும் செழித்துக்கொழுத்துத் தளிர்த்து வருவதாகத் தெரிகிறது.

**செடியின் உற்பத்தி:**—இச்செடி உற்பத்தியாகும் விதத்தைப்பற்றி பல்லோர் பலவாறு சொல்லிக் கொள்ளுவாராகின்றனர். சில்லோர் இச்செடிகளுக்கு விதைகள் இல்லையெனவே சாதிப்பாராகின்றனர். சில்லோர் இச்செடிகளுக்கு விதைகள் உள்ளனவென்றும், அவைகள் செடிகளுற்பத்தியாக்க விதைக்கப்படுவன வில்லையெனவும் அப்படி அவ்விதைகள் பூமியின் மீது விதைக்கப்படினும், செடிகள் அவ்விதைகளினின்றும் முளைத்துக் கிளம்புவதில்லை யெனவும் கூறுவாராகின்றனர். சிலர் அவ்விதைகளினின்றும் செடிகள் கிளம்புகின்றன வென்றும், எப்போது செடி என்னும் பெயர் கொண்டு பூமியில் உற்பத்தியாயதோ, அப்பொழுதே அச்செடிக்குப்புஷ்பமும் விதைகளும் உண்டென்று சாதிப்பினும், அவர்கள் அவ்விதைகளைத் தாம் பூமியிலிட்டுப் பார்த்த அநுபோகத்தினைப்பற்றிக் கூறா தொழிகின்றனர். ஆனால் ஒரு சாரர் செடி, விதை விதைத்துப் பூமியினின்று கிளம்பிச் செடியாகும் விதத்தினைத் தவிர்த்து வேறு விதமாயுரைப்பாராகின்றனர்.

1. சாகு நார்க்கயிற்றிலேனும், உலர்ந்த வைக்கோற்கயிற்றிலேனும் வெல்லத்தைக் கரைத்து நன்றாகக்கயிறு முழுவதும் தடவி, சுவரிலோ மற்றெவ்விடத்திலோ, வஸ்திரமுலர்த்துதற்கு கட்டுங்கொடி போன்று கட்டிவைத்தால், வெல்லத்தின் இனிப்புக்காக பலஈக்கள் அக்கயிற்றிலுள்ள வெல்லப்பாகை உறிஞ்சுமாறு அக்கொடியில் மொய்ப்பனவாகின்றன. அவ்வாறு மொய்த்த சில நாட்கள் சென்ற பின்பு நல்ல பழைய எரு அல்லது உரங்கலந்து, பக்குவப்படுத்தப்பட்ட புழுதியாயுள்ள நிலத்தில் ஈக்கள் மொய்த்துள்ள அத்தகைய கயிற்றினைக் கொண்டுவந்து பரப்பி மேலே மண்ணினால் மூடிச் சின்னாட்கள் வரையில் தண்ணீர் தெளித்துவரப் பொதினாச் செடியின் முளைகள் மண மகிழுமாறு கிளம்புவனவாகின்றன.

2. பதரில்லாமல் வைக்கோலை ஆராய்ந் தெடுத்து, அதில் ஒரு பன்னை (ஒரு சிறு வைக்கோற்கற்றை) எடுத்து வட்டம்போற் செய்து கொண்டு அக்கற்றையில் அரிசியிலிருந்த வடிந்த கஞ்சியைக் காலை தொட்டு இரண்டு நாழிகைக் கொருதரம் அப்பன்னை வைக்கோலின் மேல் நாள் முழுவதுமாவது அல்லது அந்நாளில் நான்கு அல்லது ஐந்து தடவைகளாவது தெளித்துக்கொண்டிருக்க, இயல்பிலேயே மொய்க்குங்குணமுள்ள ஈக்கள் அப்பன்னை வைக்கோலின்மீது மொய்த்த பின்னர், அப்பன்னை வைக்கோலில் ஈக்களால் இடப்பட்ட எச்சத்துடன் அவ்வைக்கோற் கற்றையை இரண்டு மூன்று நாட்கள் முன்னரே அதற்கென்றே தோண்டப்பட்டுள்ள பழைய எருக்கலந்த ஒரு அடி ஆழமுள்ள பள்ளத்தில் அன்று சாயந்திரம் வைத்து மூடி மேலே இரண்டு மூன்று ஜலந்தெளிக்க இருபத்தொரு நாட்களில் பொதினாச்செடியின் முளைகள் கிளம்புவனவாகச் சொல்லப்படுகின்றன. அத்தகைய செடிகள் ஒன்றரையடி உயரம் வளர்வனவாகவுஞ் சொல்லப்படுகின்றது.

3. புதுவையிலுள்ள செயிண்டுலேன் என்னும் மறுபெயர் வாய்ந்த இராஜா தோட்டத்தின் மேலதிகாரியினிடத்து நாம் சம்பாஷித்ததில் இப்பொதினாச் செடியின் மூலோற்பத்தி ஈ என்னும் சிறு பறவையின் எச்சத்தினாலுண்டாவதென்றும் வெல்லங்கட்டி வந்ததோர் சாக்கைச் சுமார் ஆறுமாத காலவளவு, அதன்மேல் சிறிதேனுங் கவனம்வைக்காது ஓர் மூலையிற்போட்டுவைக்க, ஆறாவது மாதவிறுதியில் அச்சாக்கு அம்மூலையில் மண் சுவரூபமான தூள்களாக மாறுவதாகின்றதாகவும், பின்னர் தக்க எருவுடன் கலந்த ஓர் சதுரமண்ணில் அத்தூள்களைத் தூவி மூடி, மண்ணைக்கிளறிக் கலக்கி மூன்று நாட்கள் வரை தண்ணீர் தெளித்துவர மூன்றாவது நாட்காலையில் பொதினாச் செடியின் முளைகள் அந்நிலச் சதுரப்பரப்பில் தோன்றுவதாகின்றன வெனவும் இது தாம் அனுபவத்திற் கண்டறிந்ததென்றும் சந்தேகமறக் கூறுகின்றார்.

இஃதிப்படி யிருக்கச் சிலர் இப்பொதினாச்செடியின் மூலகாரணம் **வெளவால் புழுக்கை** யென்று கூறுவாராகின்றனர். இது விஷயம் எது வரையில் உண்மையோ சொல்லுதலரிது.

இப்பொதினாச் செடி சில அங்குலவளவு பூமியின் மட்டத்திலிருந்து உயர்ந்த பிறகு இன்னுஞ் செடிகள் உற்பத்தி செய்யவேண்டி அச்செடிகளைக்கிள்ளி கிள்ளி நடுவதனால் அவைகள் **நொச்சி, சீமைப்பொன்னாங்காணி** முதலிய செடிகள் போன்று வேரூன்றித் தளிர்க்கின்றன. இச்செடிகள் பூத்துக் காய்ப்பதுண்டு. விரைகளை யெடுத்து விதைத்தலினால், இவ்விதமாயும் செடிகள் முளைப்பதாகக் கூறுகின்றனர். இப்



பொதினாச் செடியின் மற்றுமுள்ள அதிசயமான விதமாய் உற்பத்தியாகும் விதங்களை நன்குணர்ந்த நம்பத்திரிகை நேயர்கள் பலரும், அச்செடியின் மீது தாம் வைத்திருக்கும் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பரேல் யாம் அவர் பால் வந்தனமுள்ளவராவேம்.

**மணம்:**—இப்பொதினாயிலை நுகர்தற்கு இனிமையான வாசனையையே வீசுவதாகின்றது. சிலர் அவ்வாசனையை விரும்புவாராகின்றனர். சிலர் அவ்வாசனையை வெறுப்பாராகின்றனர்.

**உபயோகம்:**—இப்பொதினா இலையைப் பெரிதும் போற்றிக் கொண்டாடுவார் மகமதியவமிசத்தினரே. தினந்தோறும் அவர்கள் இப்பொதினா இலையைத்தம் முணவுடன் பக்குவஞ்செய்து உட்கொள்வாராகின்றனர். மகம்மதியர் கிச்சிலிச்சோறு என்னும் பெருந்தவுண்டியைப் பாகஞ்செய்யுங்காலை இப்பொதினா இலையை அதிற்பெரிதும் உபயோகிப்பாராகின்றனர். ஐரோபியர், மகமதியருக்கு இரண்டாவதாக இப்பொதினா இலையைத்தம் முணவுடன் கலந்துட்கொள்ளுவாராகின்றனர். மூன்றாவதாக இந்துக்களும் மற்றையோரும் இவ்விலையைப் பலமாதிரியாக பக்குவஞ்செய்து உபயோகிப்பாராகின்றனர்.

இப்பொதினாயிலையைச் சாப்பிடுவதனால் மனிதர் அடையும் நன்மை அநந்தம். இப்பொதினா இலை தேகாரோக்கியத்திற்கு இன்றியமையாததாயிருக்கின்றது. வைத்திய முறையில் இத்தகைய இலை வெகுவாகப் போற்றப்படுகின்றது. வாய் அரோசிகம், காய்ச்சல், பித்தஅரோசிகம், முதலியவைகளுக்குப் பொதினாயிலை சிறந்ததோர் ஔடதமாகப் பிரயோகிக்கப்படுகின்றது. பொதினாயிலையை உபயோகிப்பதனால் இரத்தவிருத்தியும் பித்தசாந்தியும் ஜீரணசக்தியும், புத்திவிசாலமும் இவைபோல்வனபிறவும் உண்டாவதாகப் பெரிதும் மதிக்கப்படுகின்றது. ஆகவே ஐரோப்பியர் இவ்விலையை மிகுதியும்போற்றி உபயோகப்படுத்துவாராகின்றனர். சுலபத்தில் ஜீரணமாகாத தன்மை பொருந்திய மாமிசாதிகளை மேற்கூறியவர் உபயோகப்படுத்துகையில் இவ்விலையின் உபயோகம் அவர்களுக்கு வேண்டுவதாகின்றது.

இந்துக்கள் இவ்விலையை நெய்யில் வதக்கிச்சிறிது புளி, இஞ்சி, மிளகாய், உப்பு, கருவேப்பிலை, முதலியன சேர்த்து அரைத்துத்துகைத்துத் துவையலாக்கிப் பித்த சாந்தத்திற்காகவும், ஜீரணசத்தி யுண்டாவதற்காகவும் சிற்சில வேளைகளில் உணவுடன் கலந்துட்கொள்வாராகின்றனர்.

வைத்தியர்கள் இப்பொதினாயிலையை இடித்துப்பிழிந்து வைத்திய முறைக்கேற்ற சில மருந்துக் கடைச் சரக்குகளை உடன் சேர்த்து ஓர் விதமான கிருதம் (நெய்) காய்ச்சுகிறார்கள். இந்நெய் வியாதிஸ்தர்களுக்கு மிகுதியும் உபயோகப்படுவதாகின்றது. இதனால் அவர்கள் தேகாரோக்கியமுடையவராயும் மனச்சந்துஷ்டியுடையவராயும் திடகாத்திரராயும் ஆகிறார்கள். இத்தகைய கிருதத்தை வைத்தியர் தேகத்தின் உஷ்ணத்திற்கும் ஜ்வரத்திற்குங் கொடுத்து வியாதிஸ்தர்களைச் சொஸ்தப் படுத்துவாராகின்றனர்.

ஐரோப்பியரும் இத்தகைய அருமையான இலையின் மகத்துவங்களை நன்குணர்ந்தவராகி இவ்விலையினின்றும் சாறு எடுத்து பெப்பர் மெண்டு (Pepper mint) என்னும் மிட்டாய் வகைகளாகச் செய்வித்து உலகினர்க்குப் பயன் படச்செய்திருப்பதை நாம் இன்றுங்காண்கிறோம். ஆனால் இவ்விலையைப் பிழிந்து சாறுக்கும் ஐரோப்பியர் பெப்பர்மெண்டு மிக்ஸ்ச்சர் (Pepper mint mixture) என்று ஜலரூபமாகப் பலவிதமான வைத்தியச் சரக்குகளை உடன்சேர்த்துச் செய்து, பித்த சாந்திக்கும் இன்னும் பல பலவித வியாதிகளுக்கும் உபயோகிக்க வைத்தியசாலையில் (Hospital) ஏற்பாடு செய்திருக்கின்றனர். இத்தகைய அரிய செடியின் மகத்துவத்தைப் பற்றி பத்திரிகாபிமானிகள் பலரும் தத்தம் கவனத்தைச் செலுத்தி தமது அபிப்பிராயங்களையும் இப்பத்திரிகை வாயிலாய் வெளியிடுவாரென்று நம்புகின்றோம்.

வீ. சுப்பிரமணிய ஐயர்.

## தூக்கத்தில் மனத்தெளிவு

விளங்காதவிஷயத்தை நினைத்து நினைத்து அல்லற்படாமல் படுக்கைக்குச் சென்று தூங்கு."— இதுவோர் நல்லபுத்திமதியே.! ஏனெனில் சரீரம் தூங்கிக்கொண்டிருக்கும்போது மனது சும்மாவிடுகிறதில்லை. அது வேலைசெய்துகொண்டேயிருக்கிறது. சிலவேளைகளில் பொழுதுவிடிந்ததும் நமதுமனது ஒருவிஷயத்தைப் பற்றித் தெளிவாய் யோசிக்கக் கூடியதாயிருக்கிறது. இரவு எத்தனை மணிநேரம் அதையே நினைத்துக் கொண்டிருந்தாலும் பயனொன்றுங் காண்கிறதில்லை.

இதற்கோர்திருஷ்டாந்தம் :—லூயி அகாஸிஸ் (Louis Agassiz) என்பவர் ஒரு பெரிய தாபர ஜங்கமசாஸ்திரி. வெகு காலங்களுக்கு முன் பூமியிற் புதைந்து கிடைந்த மீன்களின் அங்கக்கட்டுகளைத் தெரிவித்து "பாஸில்விஷஷஸ்" என்ற ஒரு பிரசித்த நூலையும் மற்ற வேறு நூல்களையும் செய்தார். இவர் ஒரு சமயத்தில் புராதன காலத்து மீனொன்றின் உருவத்தை ஒரு கற்பலகையில் எழுதவேண்டுமென்று



நினைத்து ஓயாமல் பதினான்குநாள் பிரயாசப்பட்டுத் தான் நினைத்த உருவம் ஒன்றாயிருக்கக்கற்பலகையில் விழுவது மற்றொன்றாக மனம் வெறுத்து விட்டுவிட்டார். பிறகு இரண்டுநாள் இரவுதோறும் மீனின் உண்மையான உருவத்தைக்கண்டதாகச் சொப்பனங்கண்டார். மூன்றாம்நாள் இரவில் தான்படுக்கப்போகும்போது ஒரு காகிதத்தையும் ஒரு எழுதுகோலையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு படுத்தார். சற்று நித்திரைபுரிந்து பாதி தூக்கத்திலும் பாதிசொப்பனத்திலும் இருட்டறையிலெழுந்து தனது சொப்பனத்தில் தோற்றிய உருவத்தை எழுதினார். மறுநாட்காலையில் எழுந்து தான் தீட்டிய உருவத்தைப்பார்த்து "ஏது ! இதுவா நாம் நினைத்த உருவம்?" என்று ஆலோசனை பண்ணிக்கொண்டே கற்பலகையை யெடுத்து இரவு தான் காகிதத்தில் எழுதிய உருவைப்போலவே பலகையிற் செதுக்கிப்பார்த்தார். ஆச்சரியம் கற்பலகையிற்செதுக்கப்பட்ட உருவம் இவர் சொப்பனத்திற்கண்ட உண்மை உருவைப்போலவே இருந்தது.

## ஞா ன ர த் ன ம்.

(1) வேடர் மானைக் காட்டி மானைப்பிடிப்பது போல ஈஸ்வரன் நம்மைப்போல் ஒருதேகமெடுத்து நம்மைவசப்படுத்துவான். (2) ஈசன் மானிட தேகத்தோடு வந்து அருள் புரியவில்லையானால் நாம் கண்ணாடி வீட்டில் அடைபட்ட நாய்போலாவோம். (3) ஆமை நினைத்தலால் ஜலக்கரையிலிட்ட முட்டைகளைத் தன்னுருவாக்கல் போலக் குருவாகிய சிவனும் நினைத்தலினால் பக்குவ ஆன்மாக்களைத் தன்னுருவாக்குவான். (4) கோழி தன் பரிசத்தால் முட்டையினின்றும் தன்னைப்போன்ற குஞ்சுகளைப் பொறிப்பது போல ஈசனும் பக்குவ ஆன்மாக்களைப் பரிசித்துத் தன்னைப் போலாக்குவான். (5) மீன் பார்வையால் தான் ஈன்ற முட்டைகளினின்று குஞ்சுகளைத் தோற்றுவித்தல் போலக் குருவும் அருட்பார்வையாற் பக்குவ ஆன்மாக்களைத் தன்னுருவாக்குவான். (6) தொட்டால் வாடியென்னும் செடி பரிசத்தால் வாடுதல் போல, குரு பக்குவ ஆன்மாவைப் பரிசித்தால் அவன் வினைத்தொகுதி வாடும். (7) குரங்குக்குட்டி தன் தாயைப் பற்றிக்கொள்வது போலப் பக்குவ சீடர்கள் ஞானகுருவைத் தாங்களே பற்றிக்கொள்ளுவார்கள். (8) குரு லட்சணமில்லாப் பொய்க்குருவை நீ சார்ந்து நில்லாதே நின்றால் குருடனும் குருடனும் கோல் பிடித்துக் குழியில் விழுந்த கதையாய் முடியும். (9) பொய்க் குருவை நம்புதல் வெயிலால் தகிக்கப்பட்ட ஒருவன் பனைமரத்து நிழலை நம்பித்தாபந்தீர இருப்பதை ஒக்கும். (10) ஒரு ஊருக்குப் போகும் வழியைக் கைகாட்டி மரம் காட்டுவது போலக்குருவும் முத்திக்

குப்போகும் வழியைக்காட்டுவோர். (11) ஒரு செம்படவன் வலையில் மீன் சிக்குவதுபோல ஈசனும் ஆன்மாவின் பத்திவலையிலகப்படுவான். (12) சண்டாளன் என்னும் காகம் தன்னை கா, கா என்று ஈசனை நோக்கிக்கரைந்து நிற்கமனிதனாய்ப்பிறந்தும் அவ்வாறு சொல்லத்துணியாதவன் அதமசண்டாளனும். (13) அன்றில் பக்ஷி தனதுபேடையை விட்டு நீங்காததுபோல நீ ஈசனுருறவை விட்டு ஒருபொழுதும் நில்லாதே. (14) அசுணப்புள் இனியகீதங்கேட்டவுடன் மயங்குவதுபோல நீ ஈசனுருடைய திருநாமங்கேட்டவுடனே உள்ளங்குழைந்துநில். (15) மயிலானது மேகத்தைக்கண்டு ஆடுதல்போல் நீ கருணைமேகமாகிய கடவுளைக்கண்டு ஆடல் பாடல்செய். (16) ஜலக்கரைக்கொக்கானது எப்போது மீன் கிடைக்குமோவென்று வேசற்றிருக்குமாறுபோல் நீ ஈசனருள் எப்போது கிடைக்குமோவென்று எண்ணியிரு. (17) கள்ளர்கள் கன்னக்கோலால் பொருளை அபகரிக்கப் பிரயாசைப்படுவதுபோல் நீ சிவஞான பொக்கிஷத்தை பக்தி என்கிற கோலால் அபகரிக்க முயல். (18) ஒரு உடும்பானது பற்றினதை விடாததுபோல் பதிப்பற்றைப்பற்றியபின் விட்டுவிடாதே. (19) எறும்பு ஊற ஊறக்கல் தேயுமாறுபோல் நாம் ஈசனை தியானிக்கத்தியானிக்க ஆணவவலிதேயும். (20) சூட்டின் அளவுகாட்டுங் கருவியின் (Thermomter) சூடு அதிகரித்தால் மேல்நோக்கியும் அதுகுறைந்தால் கீழ்நோக்கியுஞ் செல்லுமாறுபோல் தியானுக்கினி அதிகரித்தால் ஈசனுடைய தோற்றம் அதிகமாயும் அதுகுறைந்தால் அவன் தோற்றமும் குறைந்து நிகழும்.

---

ஜுலை மாதத்திய சஞ்சிகையில் வெளியான விடுகதை விடுவித்த விடை—விஜயசுந்தரம்.

K. முத்து ஐயர்,
பாலவநத்தம்.

---

## நியாயம் நிலைநிற்கும். (VIRTUE IS ETERNAL).

*இது விஷயமாய்ப் பண்டித நடேசசாஸ்திரி என்பவரால் சென்ற அக்டோபர் மாதத்திய "விவேகபோதினி" சஞ்சிகையில் அடியில் வருமாறு வரையப்பட்டிருக்கின்றது.*

நாம் என்னதான் சரியாயும் நியாயமாயும் நடந்தபோதிலும் ஏதாவது ஒரு சமயத்தில் நமக்குச் சில சங்கடங்கள் நேரிட்டு இவ்வுலகத்தில் தெய்வமென்பதும் உண்டா என்று நம்மைச் சொல்லும்படி செய்யலாம். தாளக்கூடாத துக்கத்தாலும் ஏக்கத்தாலும் நாம் அப்படிச் சொல்லி விடுகின்றோம். அவ்விதமான மனோபாவம் நம்மிடமிருக்க, நாம் இடங்கொடுக்கக்கூடாது. வெகு நியாயமாய் நடந்து வந்தவன் ஏதாவது ஒருதண்டனைக்கு உள்ளாகும் பொழுது இவ்வுலகத்தில் நியாயம் என்பது உண்டாவென்றும் தீமையே செய்கின்றவன் வாழ்ந்து வருவதை நாம் பார்க்கும்பொழுது தெய்வத்துக்குக் கண்ணுண்டாவென்றும் சொல்லி, நாம் நல்லவர்களாய் இருப்பதில் ஏதாவது பயனுண்டா என்று சந்தேகப்படத் துடங்குகின்றோம்.



சூக்ஷமமாய்ப் பார்க்கும்போது எல்லாங்கலந்து நியாயமென்பதேயில்லாமல் தாறுமாறுமாயிருப்பதாய் நமக்குத் தென்படும். "முற்றிலும் துறந்த முனிவன்" என்ற தமிழ்ப் புஸ்தகம், ஆங்கிலேய பாஷையில் "பார்னெல்ஸ் ஹெர்மிட்" என்பவர் மொழிபெயர்ப்பாகும். அதைப் படித்தால் இவ்வாறுதான் எல்லாம் அநியாயமாயிருக்கின்றதே என்று ஒரு முனிவன் தவிப்பதையும், நல்லவர்கள் நாசமடைவதையும், கொடியவர்கள் செல்வக்குறைவின்றி இருப்பதையும், நாம் காண்போம். இவ்விதத்தோற்றத்தையே பார்த்துத் தோற்றங்களையே உண்மையாக நாம் நம்பிவிடும் குணமுள்ளவர்கள் ஆகையால், இவைகளைக் கண்டு மனம் குழம்பி ஈசுவரனுமில்லை, ஒருவனுமில்லை, என்று சொல்லிவிடுவோம். தோற்றத்தால் மயங்காமல் உட்புகுந்து பரீக்ஷிக்கும் குணம் நம்மிடம் இருக்குமாயின் நாம் "நியாயம் நிலைநிற்கும்" என்ற சாஸ்திரத்தின் உண்மையைத் திண்ணமாகக் கண்டறியலாம். இதற்கு நமக்கு உலக வழக்கம் ஏராளமாகவேண்டும். அத்துடன் நாம் ஊன்றிப்பார்க்கும் குணத்தைச் சிறுவயது முதல், அப்யாஸம் செய்திருக்க வேண்டும். நல்ல தேர்ந்த புத்தியாலும் அப்யாஸக் கண்ணாலும் நாம் ஊன்றிப்பார்ப்போமேயானால் அமாவாசையும் பர்வமும் மாறிமாறிவருவது எவ்வளவு நிச்சயமோ அவ்வாறு பாவம் பாவமாகவும், புண்யம் புண்யமாகவும் நிலைநிற்பதை நிச்சயமாய்க் கண்டறிந்துகொள்ளுவோம். எங்கள் தேசம் உங்கள் தேசம் என்று சிலர் சொல்லுவது பொய்; எல்லாக் காலங்களிலேயும் எல்லாத் தேசங்களிலேயும் மானிட இயல்பு ஒன்றே. குற்றமென்பது எங்கும் குற்றந்தான், குணமென்பது எங்கும் குணந்தான்; அவரை விதைத்தால் அவரை தான் விளையும், பாவம் செய்தால் பாவத்தின் பயன்தான் நமக்குக் கிட்டும். ஏதோ மறைவாய் வெளித்தோற்றத்தால் அவ்வாறு கிட்டவில்லையே என்று சந்தேகிக்கவே வேண்டாம். ஒவ்வொருவனையும் அவன் வாழ்நாட்களுக்குள் பரிசோதித்துப்பார்த்தால் நியாயம் நிலைநிற்கும் என்ற ஸித்தாந்தம் ஒரு பொழுதும் பொய்க்காது. நலது கண்களுக்குக் கெடுதல் போல் காணும் பல, ஊகிக்கப்போனால் நன்மையாகவே யிருக்கும். பாவத்துக்குத்தகுந்த அவஸ்தையும், புண்ணியத்துக்குத் தக்க ஸுகமும் எப்பொழுதும் தப்பாமல் நமக்குண்டு. "தன்வினை தன்னைச்சுடும், ஓட்டப்பம் வீட்டைச்சுடும்" என்பது

முற்றிலும் உண்மை. கொஞ்ச நாளைக்குள்ளோ அல்லது தாமதித்தோ பாவி, பாவத்தின் பயனையும், தர்மிஷ்டன் தர்மத்தின் போகங்களையும் நிச்சயமாக அடைவான். இதில் நாம் முற்றிலும் நம்பி நடப்போமே யானால் நமக்கு யாதொரு வித குற்றவும் விளையமாட்டாது.

இந்தப்படம் புருஷர்களின் இடைக்குழியிலிருக்கிற உறுப்புகளைக் காண்பிக்கிறது. **A Side View of the Viscera of the Male Pelvis.**



## சித்திர விளக்கம்.

2 திரிகஸ்தான எலும்பு. The Sacrum. 3—4. மூத்திரப்பை The B'adder. 6. மூத்திரக்குண்டிக்காயின் குழல். The Ureter. 13—14. மூத்திரதாரை. The Urethra. 19. இந்திரிய கமலம். The Vesicula Seminalis. 16–18–21. குதம். The Rectum. 20. இந்திரிய கமலக்குழல். The Vas Deferens.

## புத்தக வரவு.

திக்கற்ற இருகுழந்தைகள்:—இது பண்டிட் S. M. நடேசசாஸ்திரியார் அவர்களால் இயற்றப்பட்ட ஓர் இனிய செந்தமிழ் நாவல் "திக்கற்றவனுக்கு தெய்வமேதுணை" என்பதை இந்நிலவுலகில் நிரூபிப்பதற்கே அலமுவும் ராதையும் அநாதிகளானார்கள் போலும், கதாநாயகிகளான இருபாலிகைகளும் பாலியத்தில் பட்ட பாடுகள் வன்னெஞ்சர்களையும் வாடச்செய்யு மென்பதற்கையமில்லை. அமிர்தவல்லியின் அடாத செய்கைகள், "கெடுவான் கேடு நினைப்பான்" என்னும் பழமொழிக்கோர் இலக்கியமாயிற்று, பச்சையப்பமுதலியாரின் மாசற்ற மனமே அவர் துயரத்தை நீக்கி சுகத்தையளித்தது, சுருங்கச் சொல்லில் இக்கதையானது நடந்தவாறாகவேவரையப்பட்டிருப்பதானது நிரம்பவும் அழகாய் இருக்கிறது. இவ்வற்புத நாவலை தமிழறிந்த ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களும் வாங்கி வாசித்து இன்பமடையத் தவறமாட்டார்களென்று நம்புகிறோம், இதன் விலை அணா 12 தான், வேண்டியவர்கள் சென்னை மௌன்ட்ரோட், மெஸர்ஸ் G. C. லோகநாதம் பிரதர்ஸ் அவர்களுக்கு எழுதித் தருவித்துக்கொள்ளவும்.



## வர்த்தமானங்கள்.

தபால்—லண்டன் மாநகரிலுள்ள பெரிய தபால் ஆபீசிலிருந்து தினப்படி நாற்பது டன் பாரமுள்ள தபாற்கள் வெளியூருக்குப் போகின்றனவாம்.

தவளைக்குவிலை—அமெரிக்கா தேசத்திலே 25 ஏக்கர் நிலத்தில் ஒரு பெண் தவளைகளை வளர்க்கின்றாளாம். இவளுக்கு வருஷமொன்றிற்கு இவ்வியாபாரத்தில் 500 பவுன் லாபம் கிடைக்கின்றதாம்.

விவாகஞ் செய்யாதவர்களுக்கு வரி:—பல்கேரியா தேசத்திலே 30 வயதிற்குள் விவாகம் செய்துகொள்ளாதவர்கள் வருஷம் ஒன்றுக்கு 8 ஷிலிங் 4 பென்ஸ் வரி கொடுக்கவேண்டுமாம்.

சம்பளம்:—லண்டன் பார்லிமெண்டு மெம்பர்களுக்கு வருஷம் ஒன்றுக்கு நாநூறு பவுன் சம்பளம் கொடுப்படுமென்று பட்ஜட்டில் ஏற்பாடாகிவிட்டதாகத் தெரியவருகிறது.

டில்லியில் வைத்தியகாலேஜ்:—யூனானி வைத்தியகாலேஜ் ஒன்று ஸ்தாபிப்பதற்காக ராம்பூர் நவாப் ஐம்பதுனாயிரம் ரூபாய் நன்கொடையளித்திருக்கின்றனராம்.

உறுதியானகண்ணாடி:—பகாரொட்டென்னும் பட்டணத்தில் உடையாத கண்ணாடிகளும், விளக்குச் சிமினிகளும் செய்யப்பட்டுவருகின்றன. இதுவிரைவில் இங்கு கொண்டுவரப் படின், இப்போது வாரம் ஒருமுறை, இருமுறை விளக்குச்சிமினி வாங்க சிறுகச் சிறுகச் செலவாகும் பொருள் நமக்கு மிகுதியாகலாம்.

பந்தயம்:—ஆல்பஸ் மலையைக் கடந்தால் 3000 பவுன் வெகுமானமென்று அறிவிக்கப்பட்டிருந்ததை பிரைஸ்செவிஸ் என்ற நிபுணன் வெற்றியடைந்தான், இவன் உயிர் தப்பியதே அபூர்வம். ஆல்பஸ் மலையைக்கடப்பது சாமானியமல்ல என்றாலும் இவனின் இரண்டு கால்களும் முறிந்துபோயிற்றாம்.

இரண்டரை மணிநேரத்திற்குள் பச்சைமரம் பத்திரிகையாகிறது—மேலைத்தேசங்களில் மரங்களிலிருந்தே காகிதம் செய்யப்படுகின்றது. ஆஸ்திரேலியாவில் காலைஏழரை மணிக்கித் தறிக்கப்பட்டமரம் ஒன்பதரை மணிக்குக் காகிதமாகி பத்து மணிக்குப் பத்திரிகையாகி வெளிவருகின்றதாம்.

சர்க்கரை உற்பத்தி:—உலக முழுமையும் சர்க்கரை உற்பத்தி 15,000,000 டன் நிறையுள்ளதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதில் கரும்பினால் உற்பத்தி 7,500,000 டன்கள். சுமார் 5 வருஷங்களுக்குமுன் இதில் ஆறில் ஒருபங்கு கூட உற்பத்தியில்லையாம். இந்தியாவில் கரும்பினால் உற்பத்தியாகிற சர்க்கரைமட்டில் 3,000,000 டன்கள் நிறையுள்ளதாம்.

**அயர்லாந்து தேசமும் மதுவிலக்கும்:**—அயர்லாந்து தேசத்தில் மதுவிலக்கு மிகுமும்முரமாய் நடைபெறுகின்றது. லட்சக்கணக்கான பேர்கள் குடிவெறியை நீக்கிவிட்டார்கள். அநேக குடி வகைஷாப்புகள் பூட்டப்பட்டன. இக்குடிவெறியை அத்தேசத்தினின்றும் நீக்கிவிட்டு 1911-ம் வருஷத்திலோர் பண்டிகை கொண்டாட உத்தேசித்திருக்கிறார்களாம்.

---

**மாமிசவுணவை நீக்கிய மாது,**—பெல்ஜியம் என்னுந்தேசத்தில் லரஸல்ஸ் கல்லூரியில் தேகதத்துவ சாஸ்திரம் கற்பிக்கும் டோடெய்கோவென்னும் மாதுமாமிசபக்ஷணஞ் செய்பவர் செய்யாதவர் இருவருள் எவர் அதிகநாட்களுக் குணவின்றியிருத்தல் கூடுமென்று பரிசீலனை பண்ணியதில் மாமிச வுணவில்லாதவர்களே பசி பொறுத்திருப்பதால் பலசாலிகளும் ஆரோக்கியமுடையவர்களென்று கண்டு தானும் மாமிச வுணவை நீக்கிவிட்டாளாம்.

---

**தென்னாபிரிக்காவிலுள்ள இந்தியர்கள்:**—தென்னாபிரிக்காவிலுள்ள இந்தியர்களுக்கு விரோதமாய் 1907-ம் வருஷம் ஏற்படுத்தப்பட்ட சட்டம் நீக்கப்படுமென்றும், அச்சட்டத்தை மீறினதாக மறியலில் வைக்கப்பட்டிருப்பவர் விடுதலையாக்கப்படுவார்களென்றும், முன் அவர்களுக்கிருந்த சிலாக்கியங்களைப் பெறுவார்களென்றும் ஓர் உடன்படிக்கை செய்திருக்கின்றனர். இது உண்மையாக இருக்கும் பக்ஷத்தில் சந்தோஷமான காரியமே.

---

**நரமாம்ச பக்ஷணிகள்:**—ஆபிரிக்காதேசத்தை அடுத்திருக்கும் ஓர் பாறை தீவுக்கருகாமையாகவோர் கப்பல் பிரயாணமானபோது தற்செயலாய்க் கரை தட்டிவிட, அத்தீவில் வசிக்கும் ஆயிரக்கணக்கான காப்பிரிகள், அக்கப்பலிலிருப்போரைப் பக்ஷணிக்க நெருங்கிக்கொண்டார்கள். கப்பற்காரர் நீராவியையும் கொதிக்கும் நீரையும் அவர்கள் மீதில் வருஷித்து ஓட்டிவிட்டார்களாம் நாகரீகம் மலிந்த இக்காலத்திலுங்கூட நரமாமிச பக்ஷணிகள் இருப்பதானது ஓர் பெரிய ஆச்சரியமே.

---

**உதிரங்கொடுத்து உயிரை இரட்சித்தல்:**—அமெரிக்காவிலே சில நாட்களுக்குமுன் ஓர் துரைசாணிக்குச் சஸ்த்திரவைத்தியஞ் செய்யப்பட்டது. அவள்தேகத்தில் சுத்தஇரத்தம் செலுத்தப்பட்டு உடனே அது எல்லாப்பகுதிக்குஞ் செறிந்தாலன்றி அவள் உயிர் பிழைக்கமாட்டாளென்று வைத்தியர்களறிக்கையிட்டார்கள். அதை அந்தத் துரைசாணியின் கணவன் கேழ்விப்பட்டான். இவன் நல்ல சுகதேகி. தன்னுயிரைக் கொடுத்துந் தன்மனைவியை மீட்டுக்கொள்ளத் துணிந்தான். உடனே அவன் வைத்தியர்முன்வந்து என் தேகத்தினின்று தேவையான அளவு இரத்தத்தை எடுத்து என் மனவிதேகத்திற் செலுத்தும். அதற்கு யாதொரு தடையில்லையென்றான். வைத்தியர் அந்தப்படியே அவன் தேகத்தினின்று வேண்டிய அளவு சுத்த இரத்தமெடுத்துப் பெண்ணின் தேகத்திற் செறியப்பண்ண அவள் பிழைத்தனள்.




## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

**கேசர் பவுடர்:**—இது ஓர் விதமான விலைபெற்ற சுகந்த கலவை இதில் கொஞ்சமெடுத்து தண்ணீரிற் கலந்தாவது அல்லது கொஞ்சம் சந்தனத்திற் கலந்தாவது தேகத்தில் பூசினால் எல்லாராலும் புகழத்தக்க பரிமளத்தைத் தரும். கலியாணம் முதலிய சுப காரியங்களுக்கு இதை அவசியமாக உபயோகிக்கவேண்டியது. இதன் இன்பமான சுகந்தம் அனுபோகித்தவர்களுக்குத்தான் தெரியும். சந்தனத்துடன் மனோரம்மியமான இச்சிரேஷ்டமான கலவையைச் சேர்த்துக்கொண்டால் சந்தனத்தில் அத்தர், பன்னீர், குங்குமப்பூ முதலிய வாசனைகள் சேர்க்கவேண்டியதனவசியம். சீசா 1-க்கு விலை அணா 8. ஒன்றுமுதல் 6-சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய சிலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

**அரகஜா:**—இதுமற்றொரு விதமான திவ்வியமான சுகந்தகலவை. இதைத் தனியாகவாவது சந்தனத்துடனாவது உபயோகிக்கலாம். தேகத்தில் பூசிக்கொள்ளலாம். உடுப்புகளுக்கு போடலாம். அதி உன்னதமான சுவாசனை. இதன் திவ்யமான பரிமளத்தை சுகித்தறிந்தவர்களால் மிகவும் புகழப்படுகிறது. ஒரு தடவை பூசினபிறகு பிரதிதினம் ஸ்நாநம் செய்தாலும் 3-நாள் பரியந்தம் இதன் இன்பமான பரிமளம் தேகத்திற் தங்கி நிற்கும். விலை டப்பா 1-க்கு அணா 8. ஒன்றுமுதல் 12 டப்பாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய சிலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

**அம்பர்:**—இந்த சுகந்தத்தில் கொஞ்சமெடுத்து உடுப்புகளுக்கு போடலாம், தேகத்திற் பூசலாம். முகத்திற்றடவி வந்தால் பருக்கள், கருப்பு புள்ளிகள், மேகப்படர், மாசு, அறிப்பு முதலியதுகள் நீங்கி முகத்திற்கு வசீகரத்தைத்தரும். வெற்றிலையில் தடவி தாம்பூலத்துடன் உபயோகித்தால் மிக்க மனோ உற்சாகத்தைத் தரும். கொஞ்சமெடுத்து வெந்நீரில் கலந்து ஸ்நானம் செய்தால் மேனியெல்லாம் சுகந்த பன்னீர் வாசனையுள்ளதாகும். மனக்களிப்பையுண்டாக்கி தேஹசிரமத்தையாற்றும். விலை டப்பா ஒன்றுக்கு அணா 8. ஒன்று முதல் 12 டப்பாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய சிலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

**இந்தியன் பேட்டல் டஸ்டு:**—அதிமனரம்மியமான சுகந்தகலவை பெட்டல்டஸ்டு உடுப்பு பெட்டிகளில் வைத்திருந்தால் உடைகளுக்கு மிகவும் உன்னதமான சுவாசனை ஏற்றுவதுமன்னியில், வண்டு முதலிய பூச்சிகள் துணிகளில் அணுகாமல் காக்கும். இதன் இன்பமான சுகந்தம் நெடுநாள் நிற்கும் பொட்டலம் 1-க்கு விலை அணா 4 ஒன்று முதல் 12 பொட்டலங்கள் வரையில் அனுப்ப வி. பி. சிலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

(குறிப்பு) இந்த இடங்களில் மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகள் தெரியாததால் ஆர்டர் செய்கிறவர்கள் தயவுசெய்து தமிழிலாவது, இங்கிலீஷிலாவது அடியிற்குறித்த விலாசத்துக்கு விவரமாக எழுதிப் பெற்றுக்கொள்ளக் கோருகிறேன்.

**பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.**

பி. சுப்பராயின் அபூர்வ ஆயிர்வேத ஔஷதங்கள்.

1. தாதுபுஷ்டி மருந்து:—அதன் குணத்தை எழுதி முடியாது. அனுபோகத்தால் தெரிந்து கொள்ளலாம். தாது நஷ்டம், பலஹீனம், ஆண்குறி துவளல், பசியின்மை, கண், கால்எரிவு, தேகவரக்ஷி, சீக்கிரத்தில் ஸ்கலிதம்; சொப்பன ஸ்கலிதம், கை, கால், இடுப்பு முதலிய அவயவங்களில் சோர்வு, வலி, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேக வெள்ளை, வெட்டை, நீரிழிவு, மதுமேகம், சதையடைப்பு, இன்னும் பற்பல மூத்திர ரோகங்களை போக்கும். சரீர புஷ்டி, புருஷத்தன்மை, போக சக்தி, ஜீரண சக்தி, அபரிமிதமான தாதுவிருத்தியையுண்டாக்கும்: நீத்திருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போக சக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்கு விலை ரூபா 2, வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

2. அக்கினி மாந்தத்திற்கு மருந்து:—பசியின்மை, புளித்த ஏப்பம், நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய் நாற்றம், அஜீரணம், வயிற்றுப்பிசம், நித்திரை யில்லாமை, பித்த உபத்திரவங்களை சொஸ்தப்படுத்தும். பசி தீபனமும், தேக ஆரோக்கியமும் தரும். டப்பா 1-க்கு அணா 8, வி. பி. சிலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

3. பிரமேக நிவாரணி:—எந்த காரணத்தினால் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை, நீர்குற்றல், நீர் தாரை எரிவு, சீழ், ரத்தம் வடிதல், முதலிய வியாதிகளை ஆண் பெண் இருதாரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. சிலவு ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

4. லக்ஷ்மிகர கஸ்தூரி மாத்திரைகள்:—தாம்பூலம் தரிப்பவர்கள் கையிருப்பில் எப்பொழுதும் வைத்துக்கொள்ளவேண்டிய விலையுயர்ந்த வஸ்து. தந்த நோய், வாய் நாற்றம், அஜீரணம், பித்த வாய்வு இதுகளை நீக்கும். தாம்பூலத்துடனாவது, தனியாகவாவது சாப்பிட்டபின் 2 மாத்திரை உபயோகித்தால் எப்பேர்க்கொத்த கனத்த சாப்பாட்டையும் உடனே ஜீரணம் செய்வதுடன் வாயில் அநேகமணி நேரம் சுகந்த வாசனையிருக்கும். பிரதிதினம் காலையில் இரண்டு மாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்த அக்கினி மந்தம், மலச்சிக்கல், அஜீரணத்தினாலுண்டாகும் வயற்றிழிவு, வயிற்றுநோய், நெஞ்செரிசல் முதலிய பற்பல வியாதிகள் தீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன் உபயோகித்து வந்தால் ஜன்னி கிட்டநாடாது; ஜன்னியில் கொடுக்க ஜன்னி தீரும். இதில் லாகிரி முதலான யாதொரு அபாயகரமான வஸ்து சேரவில்லை. காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்கரேக், பச்சை கற்பூரம் முதலிய அநேக விலைப்பெற்ற மருந்து சாமான்களும் வாசனை திரவியங்களும் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. தாம்பூலத்துடன் உபயோகித்தால் பச்சை கற்பூரம் முதலாகிய வாசனை வஸ்துக்கள் உபயோகிக்கவேண்டியது அனாவசியம். அறை குழந்தைகள் முதல் வயது சென்றவர்களுக்கு சளி, இருமல், காசம், காலரா, பிளேக், சுரம் முதலானவைகளுக்கு வயதுக்கும் தேகத்துக்கும் தகுந்தபடி 1 முதல் 4 மாத்திரைகள் வரையில் வெற்றிலைச்சாற்றில் கொடுக்க சுகமாகும். சீசா 1-க்கு விலை அணா 4. இந்தியாவில் 1 முதல் 12 சீசாக்கள் வரையில் அனுப்ப பாக்கிங்கு, தபால் சார்ச்சு அணா 5-ம் சிலோனுக்கு அணா 7.

பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

REGISTERED

உ

# வைத்திய போதினி.

சித்திரப்படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்த தமிழ்ப்பத்திரிகை.

புத் 2. { 1911-ஞு செப்டம்பர்மீ } நெ. 9.

## இரத்தம் அல்லது உதிரம் (BLOOD—பிளட்.)

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட எண்ணரிய சராசரங்களும் ஓர் வகை திரவத்தைக்கொண்டே இந்நிலவுலகில் உயிர்வாழ்கின்றன. அவற்றுள் புற்பூண்டு மரம் முதலிய தாவரங்கள் சிலதில் ஓர்வகை திரவமும் மற்றும் சிலதில் பால்போன்ற வெண்ணிறமான திரவமும் இருந்து அவற்றைப்போஷித்து வருகின்றன. அது போலவே, மனித சரீரத்திலும் மற்றுமுள்ள ஜீவப்பிராணிகளிலும் ஓர்வகை சிவந்த திரவம் ஐக்கப்பட்டிருக்கிறது அத்திரவமே இரத்தமாம். இரத்தமானது சரீரத்திற்கு நூதன சம்பவமும் (Development) சரீரம் வளர்ச்சியடையவும், நமது தேகத்திலுள்ள பிரதி உறுப்புகளும் அதனதன் வேலையைக் கிரமமாய்ச் செய்வதற்கும் ஜீவன் நிலைநிற்பதற்கும் பிரதானமாம். இரத்தமானது நமது தேகத்தில் சுற்றிக்கொண்டிருக்கும்போது திரவரூபமாயிருக்கும். அதைத்தேகத்தினின்று வெளிப்படுத்தினால் துவைந்துவிடும். இரத்தத்தில் ஜலமும் அணுக்களுமுண்டு, இரத்த நீரில் சீரம் (Serum) என்கிற ஜலமும், பைபிரின் (Fibrin) லிமப் (Lymph) என்கிற இழைகளையொத்த பதார்த்தங்களும் ஐக்கப்பட்டிருக்கிறது. இரத்தம் உறையும் போது பசையானது ரத்த அணுக்களைச் (Globules) சேர்த்து இருக்குக்கொள்ளும்: அதற்கு கிளாட் (Clot) என்றுபேர். சீரமென்னும் ஜலத்தில் அல்பியூமன் (Albumen) என்னும் பதார்த்தமும், சில உப்புகளும், கொஞ்சம் கொழுப்பும், இருக்கின்றன, கிளாட் என்னும்

உறைந்த ரத்தத்தில் பைபிரின் (Fibrin) என்னும் பசையான பதார்த்தமும் ரத்தஅணுக்களும் அடங்கியிருக்கின்றன. நமது இரத்தத்தில் 2-விதமான அணுக்களுண்டு அவ்வணுக்களை அணுதரிசனி அதாவது பூதக்கண்ணாடியினால் (Microscope) பார்வையிட்டால் அவைகளில் ஒன்று சிறுத்து சிவப்பாய், பக்கங்கள் அழுந்தி விஸ்தாரமாய் இருக்கும். மற்றொன்று பெருத்து வெள்ளையாய் குறைந்திருக்கும். சிவந்த அணுக்களே ரத்தத்துக்கு நிறத்தைக்கொடுக்கின்றன. அவைகளில் அயம் உண்டு. அந்த அயம் குறைவதே பாண்டு ரோகம் அயம் குறைந்தால் ரத்தத்திலுள்ள பாமாணுச்சிற்றுயிர்களின் அளவு குறையும். பாண்டு ரோகத்தையுடைய ஒரு ஸ்திரீயின் ரத்தத்தைப் பரிக்ஷித்தபோது அதில் ரத்த அணுக்கள் 100-க்கு 46-பங்கு இருந்தபோது, அயஞ்சேர்ந்த அவுஷதங்களை அவளுக்கு கொடுத்து மறுபடியும் ரத்தத்தைப்பரிக்ஷித்தபோது ரத்தஅணுக்கள் 100-க்கு 96-பங்காக தொகையிலதிகப்பட்டு அவளுடைய வெளுத்ததேகமும் உதடுகளும் மாறி அவள் முகத்தில் வசீகரமுண்டானதாய்த் தெரிகிறது. இது பற்றியே சாதாரண ஜனங்களும் இளைத்தவன் இரும்பைத்தின்பான் என்று சொல்லுகிறார்கள். ஜலத்தைப்பார்க்கிலும் ரத்தம் அதிக கனமுடையது. புருஷரைவிட ஸ்திரீகளுக்கு ரத்தம் கனத்தில் குறைந்திருக்கும். ரத்தத்திலிருக்கிற ஜலமானது சீதோஷ்ணத்தினாலும் அலைச்சலினாலும் போஜனத்தினாலும் காற்றினாலும் அதன் அளவு பேதப்படும். ரத்தத்தின் பிரயோஜனமாவது சர்வாங்கத்தையும் போஷித்து ஆதரிப்பதேயாம். தேகபோஷணைக்குறிய பதார்த்தங்களெல்லாம் ரத்தத்திலிருப்பதால் அது தேகத்தில் வியாபிக்கும்போது அந்தந்த உறுப்புகள் தங்களுக்கு வேண்டிய பொருள்களைக்கிரகித்துக்கொள்ளும். அந்தந்த உறுப்புகளுக்கு வேண்டிய பதார்த்தங்களை ரத்தம் கொண்டுபோய்க் கொடுக்கிறதென்றும் சொல்லலாம். அப்படிக்கு ரத்தமானது சர்வாங்கங்களிலும் பரவி; ஒவ்வொரு உறுப்புகளும் அதனதன் தொழிலைக்கிரமமாய்ச் செய்யும்படி செய்வதினால்தான் மூளையானது புத்தியைத்தருகின்றது. இருதயமானது ரத்தத்தைத் தேகமெங்கும் பரவச்செய்கின்றது; நுரையீரலானது கெட்ட ரத்தத்தை பரிசுத்தப்படுத்துகின்றது, இரைப்பையானது நாம் புசிக்கிற அன்னபானாதிகளை ஜீரணிக்கச்செய்கின்றது. யகிர்தகண்டமானது பித்த நீரைச்சுரப்பிக்கின்றது. சிறுகுடலானது அன்னரசத்தைக் கிரகித்து அதை ரத்தத்



இந்தப்படம் ரத்தத்திலுள்ள சிவந்த அணுக்களைக் காண்பிக்கிறது.



இந்தப்படம் ரத்தத்திலுள்ள வெண்ணிறமான அணுக்களைக்காண்பிக்கிறது.



தில் சேர்க்கின்றது, மூத்திரக்குண்டிக்காய்களும் சருமமும் ரத்தத்திலிருக்கிற அப்பிரயோஜன பதார்த்தங்களை, மூத்திரம் வியர்வை ஆகிய இவைகளின் வழியாக வெளிப்படுத்திவிடுகின்றன, பீஜங்கள் இந்திரியத்தைச் சுரப்பிக்கின்றன, கருப்பையானது கருவை வளர்க்கின்றது. இவ்விதமாக ரத்தமானது சர்வாங்கத்தையும் அதனதன் தொழிலை அட்டியில்லாது செய்யும்படி தூண்டுகிறது. இரத்தஓட்டம் நின்றுவிட்டால் பிராணன்போய்விடும். இன்னும் இரத்தமானது தேகத்திலிருக்கிற பிரயோஜனமில்லாத பதார்த்தங்களைக் கிரகித்துக்கொண்டு இரத்த பரிசுத்தஸ்தானமாகிய நுரையீரலுக்குக் (Lungs) கொண்டுபோகின்றது. நாடியிலிருக்கிற இரத்தம சிவந்த நிறமானதென்றும், அதுவே பரிசுத்த இரத்தமென்றும், நாளத்திலிருக்கிற இரத்தம் கருத்திருக்குமென்றும், அதுவே அசுத்த இரத்தமென்றும் முன்னதாகவே தெரிவித்திருக்கிறோம் ஆதலால் மீண்டும் அதைப்பற்றி இவ்விடத்தில் விவரிப்பது அனாவசியமாம். நாடி அறுபட்டால் பீச்சாங்குழலிலிருந்து பீரிடுவது போல் இரத்தம் பீரிட்டோடும் நாளம் அறுபட்டால் இரத்தம் கசியும். நமது தேகத்தில் சற்றேறக்குறைய 30 பவுண்டு இரத்தமிருக்கும்.

இருதயத்தினுடைய ஒவ்வொரு அறைகளும் சுமார் 4 அவுன்ஸ் இரத்தம் கொள்ளும். சுகஸ்திதியிலிருக்கிற ஒரு புருஷனுடைய இருதயத்தில் சப்தவேணுவைக் (Stethoscope) காதில் வைத்து உற்றுக் கேட்டால் ஒருமின்னிட்டுக்குச் சராசரி 70 முதல் 80 ஆவர்த்தி அடித்துக்கொள்ளும். அதற்கு **கிரமநாடி** (Regular Pulse-ரெகுலர்பல்ஸ்) என்று பேர். இந்த அளவுக்கு அதிகமாய் அடித்துக்கொண்டால், **படபடத்தநாடி** (Frequent Pulse-ப்ரீகுவண்ட்பல்ஸ்) என்று பேர். குறைந்து அடித்துக்கொண்டால் **மந்தநாடி** (Slow Pulse-ஸ்லோபல்ஸ்) என்று பேர்; நாடியின் விசை சுருக்காயிருந்தால் அதற்கு **தீவிரநாடி** (Quick Pulse-குவிக் பல்ஸ்) என்று பேர்; இருதயத்தின் அறைகளில் இரத்தம் குறைந்திருந்தால் நாடிநடை சுஷ்கித்திருக்கும். அதற்கு **சுஷ்கநாடி** (Small Pulse-ஸ்மால்பல்ஸ்) என்று பேர்; க்ஷீணவியாதிகளில் தீவிரமாயும், ரத்தக்ஷீண ரோகங்களில் மந்தமாயும், இருதயத்தின் நடை நடப்பது வழக்கம். ஆனால் குழந்தைகளுக்கு நாடி அதிக தீவிரமாக இருக்கும். அதாவது ஒரு மின்னிட்டுக்கு 120 முதல் 140-ஆவர்த்தி அடித்துக்கொள்ளும். ஸ்திரீகளுக்கு இருதய நடை அதிகமாயிருக்கும். நடக்கும்போதும், நிற்கும்போதும், இருதயம் சீக்கிரமாயும்; படுத்துக்கொண்டிருக்கும்போதும் நித்திரை செய்யும்போதும்; மெதுவாய் நடக்கும். இருதயத்திற்கு கமலம் என்று ஒருபெயர் உண்டு. அதாவது




இந்தப்படம் இருதயத்தின் முன்பாகத்திலுள்ள வைகளைக் காணபிக்கிறது.

கமலமாகிய தாமரை புஷ்பமானது சூரியனைக் கண்டமாத்திரத்தில் விரிந்தும், சூரியனைக் காணாதபோது குவிந்தும் போவதுபோல், இருதயத்திலுள்ள மேல் அறைகள் இரண்டும் ஏககாலத்தில் குவியும், கீழறைகளும் அவ்விதமாகவே விரிந்து குவிவது பற்றியே இருதயத்தையும் இருதய கமலமென்று சொல்லப்படுகிறதுபோலும்.

இரத்த ஓட்டம் (Circulation of the blood—ஸர்குலேஷன் ஆவ்திபிளட்) இருதயத்தின் இடது பக்கமிருக்கிற சிவந்த ரத்தமானது தேகமெங்கும்பரவி, உறுப்புகளைப்போஷிக்கும். தேகத்திலிருக்கிற அப்பிரயோஜன பதார்த்தங்கள் ரத்தத்திற்கலந்து ரத்தம் கறுத்துவிடும். இவ்விதமாய்க் கறுத்துக் கெட்டுப்போன ரத்தமானது இரண்டு பெரு நாளங்கள் (Venae cavae—வீனிகேவி) வழியாய் இருதயத்தின் வலதுசிரவத்திற்கு (Right Auricle—ரயிட் ஆரிகல்) வருகிறது. அதிலிருந்து வலது சடரத்திற்கு (Right ventricle—ரயிட் வெண்டிரிகல்) இறங்கும். பிறகு அதிலிருந்து, புப்புஸ நாடி வழியாய் சுவாஸப்பைகுட் செல்லும். சுவாசப்பையில் இந்தக்கெட்ட ரத்தமானது, காற்றுவாடைப்பட்டு தோஷம் நீங்கி சிவந்து நல்ல ரத்தமாகிவிடும். இவ்வாறு பரிசுத்தப்பட்ட ரத்தமானது பிறகு புப்புஸ நாளங்கள் (Pulmonary veins—பல்மோனெரி வெயின்ஸ்) வழியாய் இடதுசிரவத்திற்கு (Left Auricle லெப்ட் ஆரிகல்) வரும். அதிலிருந்து இடது சடரத்திலிறங்கும், பிறகு அதிலிருந்து பெருநாடி (Aorta—எயார்ட) வழியாகச்சென்று தேகமெங்கும் வியாபித்து கெட்டு மறுபடியும் இருதயத்திற்கு வருகின்றது. உதாரணமாக இரத்தத்திற்கிருப்பிடமாகிய நமது இருதயத்தை ஓர் ஏரியாகவும், அந்த ஏரியிலிருந்து கிளம்பும் பெரிய குழாயை பெருநாடி (Aorta) யாகவும், அதிலிருந்து ஒரு நகரத்தின் பலபாகங்களுக்கும் போகும் குழாய்களை ஆர்ட்டரி (Arteries) களாகவும், ஒவ்வொரு பிரிவிலுள்ள வீதிகள் ஒவ்வொன்றிற்கும் செல்லும் குழாய்களைச் சிறிய ஆர்ட்



டரிகளாகவும், பிறகு ஒரு வீதிக்குச்செல்லும் ஓர் குழாயிலிருந்து அவ்வீதியிலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் கிளைகளாகப்பிரிந்து செல்லும் மிகச்சிறிய குழாய்களை காப்பில்லரிஸ் (Capillaries) களுக்கும் சமானமாய்ச்சொல்லலாம். இவ்விதமாக இருதயத்தின் இடது பக்கமிருந்து உற்பத்தியாகும் எயார்டாவில் இரத்தம் அதிகவேகமாயும், பெரிய ஆர்ட்டரிகளில் இரத்தம் அதிலும் குறைந்தவேகத்துடனும், சிறிய ஆர்ட்டரிகளில் இரத்தம் அதைவிடக்குறைவான வேகத்துடனும், காப்பில்லரிஸ்களில் இரத்தம் மிகமெதுவாகவும் ஓடுகிறது. இவ்விதமாக இரத்தமானது நமது சரீரத்தைச் சதா சுற்றிக்கொண்டே இருக்கிறதுடன் அவ்வவ்விடங்களிலுள்ள அழுக்குகளையும் கெட்ட பொருள்களையும் வெயின்ஸ் (Veins) என்னும் நாளங்கள் வழியாய்க்கிரகித்துக்கொண்டு, சிறந்த பண்டிதர்கள் கணித்திருக்கிறபடி அறுபதுகோடி ரந்திரங்களுடைய நுரையீரலில் பிரவேசித்து நாம் சுவாசிக்கும் பிராணவாயுவினால் அங்கு பரிசுத்த இரத்தமாகி திரும்பவும் இருதயத்திற்குச்சென்று அங்கிருந்து நாடிகள் வழியாய் திரேகத்தின் ஒவ்வொரு உறுப்புகளுக்கும் சென்று போஷிக்கும். இவ்விதமாக இரத்தம் இருதயத்திலிருந்து வெளியில் புறப்பட்டுச் சுற்றி வரும்போது நிமிஷமொன்றுக்கு 207 கஜம் பிரயாணஞ்செய்கிறது. அதாவது, மணியொன்றுக்கு 9-மைலும் தினமொன்றுக்கு 220-மைலும், வருஷமொன்றுக்கு 80,000-மைலுமாகிறது. ஓர் மனுஷன் 84-வயதுடையவனாயிருக்கிறானென்று வைத்துக்கொள்வோம். அவனுடைய தேகத்திலுள்ள இரத்த அணு (Globule) அவன் ஜனித்த கால முதற்கொண்டு அவன் இரத்தத்திலேயே யிருந்திருந்தால் இது வரையில் அந்த அணு 70 00,000 மைல் யாத்திரை செய்திருக்கிறது. ஆ! என்ன வியக்கத்தக்க பிரயாணமிது!

நாம் உட்கொள்ளும் உணவானது இரைப்பையிற்சென்று ஜாடராக்கினியால் தகிக்கப்பட்டு சுத்தசத்து அசுத்தசத்து என இருவகையாய்ப் பிரிந்து முற்கூறிய சுத்தசத்தே இரத்தமாயும், பிற்கூறிய அசுத்தசத்தே மலமாயும் கழிகிறது. கடியாரத்திற்குக் (Watch) குறித்த காலங்களில் சாவி (Key) கொடுக்கவேண்டியது நிரம்ப அவசியமாயிருப்பது போலவே நமது தேகமாகிய யந்திரத்திற்கும், உண்டி என்னும் சாவி கொடுக்கவேண்டியிருக்கிறது, அப்படிக்கின்றேல் சாவி கொடுக்கப்படாத கெடியாரமானது எப்படி நடைபெறுதோ அது போலவே நமது தேகமும் நடைபெறுதொழியும். இதுபற்றியே, "அன்னம் ஒடுங்கினால் ஐந்தும் ஒடுங்கும்" "அன்னமயம் பிராணமயம்" "ஊணற்றபோதே உடலற்றுப்போம்" "உண்டவன் உரஞ்செய்வான்" "உண்

டார்மேனி கண்டால் தெரியும்" "ஊணினால் யுத்தி பூணினால் ஜாதி" எனப்பலவாறாகப் பெரியோர் கூறியிருக்கிறார்கள். ஆகையால் உணவு குறைந்தால் உதிரங்குறையும், உதிரங்குறைந்தால் தேகத்தின் சக்தி குறைந்து, ஒவ்வொரு உறுப்புகளிலும் பலக்குறைவு உண்டாகும். இரத்தக்ஷீணத்தினால், அஜீரணம், சோகை, காமாலை, பாண்டு, மகோதரம், பக்ஷவாதம் சர்மரோகம் முதலிய இவைபோன்ற இன்னும் பலவியாதிகளும் உண்டாகும், இன்னும் இரத்தக்குறைவினால் இரத்தத்தின் சாரமாகிய சுக்கிலம் குறைந்து, ஆண்குறி தளர்ந்து, ஆண்மையழிந்துபோக சக்தி குறைந்துபோம், நம்மில் அநேகர் "திரைகடலோடியுந் திரவியந் தேடு," என்னும் பொய்யா மொழியைப்பின்பற்றி பல்லாயிர மைல்களுக்கப்பாலுள்ள, அன்னிய நாட்டிற்கு கப்பல் ஏறி கடல் யாத்திரை செய்து தீவாந்திரங்களை அடைந்து அங்கு அடிமைத்தொழில் செய்து செப்பவொண்ணாத சிரமப்பட்டு பணம் சம்பாதிக்கிறோம். இதற்காக உயிரை முதலாய் அத்தீவில் இழக்கிறோம். ஆனால் மதிக்கப்படாத மாணிக்கம் போன்ற இரத்தத்தை நமது சரீரமாகிய பொக்கிஷத்தில் சிறிது சிறிதாய் சேர்த்துவைக்க முயற்சியற்றவர்களாய் இருக்கிறோம். சிறிது சிறிதாய் பணம் சேர்க்க எவ்வளவு காலம் முயற்சி எடுக்கிறோம். அதுபோலவே இந்த இரத்தமாகிய இரத்தினத்தைப் பாதுகாத்து நோய் என்னும் கள்வர் கையில் சிக்கி கஷ்டமடையாதிருக்க முயற்சி எடுக்கிறோமில்லை. தாவரங்களிலுள்ள திரவப்பசை வரண்டு போனவுடன் அம்மரஞ் செடிகொடிகள் எங்ஙனம் பட்டுப்போகிறதோ அதுபோலவே இரத்த ஓட்டம் இருக்கிறவரையில் பிராணனிருக்கும் அது நின்றுவிட்டால் பிராணன் போய்விடும் உற்றுப்பார்த்தால் உதிரமே உயிர்

"That Blood is life is true and Sure
Therefore, O Man! Preserve it Pure."

---

## தேனீ. (THE BEE.)

இது விஷயமாய் மார்ச்சுமாதத்திய "விவேக போதினி" சஞ்சிகையில் மிஸ்டர் ஜி. ராஜகோபால் நாயுடு அவர்களால் அடியில் வருமாறு வரையப்பட்டிருக்கிறது:—இதை அனேகம்பேர் பார்த்திருக்கமாட்டார்கள். ஏனெனில் இது ஸாதாரணமாய் வீட்டில் இருக்கும்படியான பூச்சிகளில் ஒன்றல்ல. இது ரிஷிகளைப்போல் காட்டில் ஸஞ்சரித்து நந்தவனங்களில் வீடுகட்டிக்கொண்டு புஷ்பங்களின் தேனையுண்டு ஜீவிக்கின்றது. இது பின்னுக்கு வேண்டுமென்று சேர்த்துவைக்கும் தேனையும், விசித்ரமான கூண்டைக் கட்டுவதற்கு வேண்டிய மெழுகையும்,



மனிதன் திருடனைப்போல் அபகரித்து உபயோகித்துக்கொள்ளுகிறான். தேனை ஒவ்வொருவரும் பார்த்திருக்கலாம். நாவுக்கு அருவருப்பான மருந்துக்கு இனிப்புத்தரவேண்டுமென்று தேனில் குழைத்துச் சாப்பிடுவதுண்டு. தேன் சர்க்கரைப்பாகை ஒத்திருக்கும். தேனின் குணம் வேறுபட்டிருக்கும். சில, கசத்திருக்கும். சில புளிப்புத்தட்டும். இவ்விதமாய் வித்தியாசப்பட்டிருப்பது அந்தந்தக் காலங்களில் கிடைக்கும் வெவ்வேறு புஷ்பங்களினாலேயே. புஷ்பங்களே தேனீக்களுக்கும் ஆதாரமானதாலும் தேன் விலை அதிகமாய் விற்கிறதினாலும் ஐரோப்பா முதலிய நாட்டார், தேன் அதிகமுள்ள புஷ்பங்களைப் பயிரிட்டுத் தமது வீடுகளில் ஆடு மாடு கோழி வளர்ப்பதுபோல் தேனீக்களை வளர்த்து லாபமடைகிறார்கள். நாம் வேலியிலாவது, மலையிலாவது, தேன் கூண்டைக் கண்டால் புகைச்சல் போட்டு ஈக்களை விரட்டி கூண்டை எடுத்துவந்து தேனைப் பிழிந்துகொள்ளுகிறோம். ஈக்கள் ஏமாந்து கூண்டை இழந்து வேறு இடங்களுக்குப் போகின்றன. ஐரோப்பியர் முதலியவர்கள் ஷை ஈக்களின் குணாகுணங்களை நன்றாய்க் கவனித்து இக்கூடுகளைச் சேதப்படுத்தாமல் எடுத்து, அதற்கென்றே வைத்திருக்கும் பெட்டிகளில் நாஸூக்காய் வைத்து பெட்டிக்குள் அமைத்திருக்கும் ஸூத்திரத்தினால் கூண்டின் ஒரு அறையாவது பின்னப்படாமல், 'தோலிருக்கச் சுளைமுழுங்கி' என்றாற்போல் தேனைமாத்திரம் பிரித்துக்கொள்ளுகிறார்கள்.

தேனீக்களில் அநேக வகைகளுண்டு. சில மலைகளிலேயே இருக்கும். சில புதர்களில் கூடுகட்டிக்கொண்டும் சில கல்பொந்துகளிலும் பாழ்கிராம குட்டிச்சுவர் மத்தியிலேயும் கூண்டுகட்டும். மலைத்தேனெடுப்பதற்கு குறவர் முதலியவர்களே தகுந்தவர்கள். செங்குத்தான பாறைகளிலுள்ள, மனிதர்கள் ஏறக்கூடாத இடங்களில் கட்டிய கூண்டை அவர்கள் சில காட்டுக்கொடிகளை அங்கங்கே விட்டு முடிச்சுப்போட்டு அப்பாறைக் குறுக்கே விட்டு அவற்றின் மூலமாய் ஏறிப் புகைச்சல்போட்டு ஈக்களைத்துரத்தித் தேனெடுப்பார்கள். இது மிககஷ்டமானதும் பிராணாபாயமுண்டாக்கத் தக்கதுமான உத்யோகம். கொடிக்கயிற்றை நம்பியே ஆள் ஏறுவதால் கொடி பிடிப்பவன் ஏறுபவனுக்கு மைத்துனனாகவே ஏற்பாடு செய்வது வழக்கம். அவர்களுக்கு மற்ற உரவினரிடத்தில் நம்பிக்கை இல்லை. தேன் கூண்டுகளில் சுக்லபக்ஷத்தில் இல்லாமல் அமாவாஸை காலங்களிலேயே தேனிருப்பதாக அனுபோகம். ஆடையை வெந்நீரில் காய்ச்சி அதை உருட்டி மஞ்சள் சாயத்தோடு கலந்து சேர்க்கப்படுகிறது. மிருகங்களில் பசுமாடு எப்படியோ

பூச்சிகளில் தேனீ ஐரோப்பா முதலிய நாட்டில் வளர்க்கப்படுகின்றது. இதற்கு இருஜோடி இறகும் மூன்றுஜோடிக் கால்களும் உண்டு கால்கள் வெவ்வேறுபட்டிருக்கின்றன. இதன் தேகம் மூன்று பிரிவுகளாக இருக்கின்றது. அவையாவன, தலை, மார்பு, வயிறு.

ஸுமார் 200-வருஷங்களுக்கு முன் ஒரு இத்தாலியர் தேன் கூண்டை ஒரு கண்ணாடியில் அமைத்து ஈக்களின் குணகுணங்களைக் கவனித்து எழுதியதுபோலவே அநேகர் கவனித்து எழுதுவதில் பின் குறித்த விஷயங்கள் வெளிப்பட்டன. இவைகளுக்குப் புத்தி விசேஷப்பட்டு இருப்பதாக அனேகர் கவனித்து எழுதி யிருக்கிறார்கள். இவைகளின் இராஜ்யபரிபாலனம் முதலியவற்றைக் கவனிக்க ஆயுஸ்காலம் வெகு கொஞ்சமென்று தெரிகிறது. ஒரு தேன் கூண்டில் சுமார் 20 ஆயிரம் பூச்சிகள் இருக்கின்றனவாம். நாம் 10 பேர் ஒன்று சேர்ந்து ஒரு வேலையை நடப்பிக்க யத்தனித்தால் யாதாமொருவன் முன்னின்று இவ்விதமாய் செய்யென்று நடப்பிக்காவிட்டால் தலைக்குத்தலை பெரியதனமாக வேலை முடியாமல் வீண் பேச்சாகவே இருக்கிறது. இப்படியிருக்க ஆயிரக்கணக்கான பூச்சிகள் ஏகோபித்து ஒரு வீட்டில் இருந்து காரியத்தை நடப்பிக்கிறதைப் பார்ப்போம். இவைகளுக்கு ஆலோசனை ஸபையும் பிரதானிகள் ஒத்துவாழ்வதற்கு அவசியமான நிர்ப்பந்தங்கள் சட்டங்கள் முதலியன உண்டு. இவை அனேக வகுப்புகளாகவே இருந்து வெவ்வேறு அலுவல் செய்கின்றன. சில கூட்டங்களாகவே இருக்கும். சில தனித்து வேலை செய்யும். வேறு சில விருந்தாளிகளாக வேலை செய்யாமல் மற்றவர்களிடத்தில் ஜீவனம் செய்யும். தேன் கூண்டு ஒரு பட்டணம் போலவும் அதனுள்ளிருக்கும் ஈக்கள் அப்பட்டணத்து ஜனங்களைப்போலவும் பாவிக்கவேண்டியது. அப்பட்டணத்தாரின் க்ஷேமத்தை நாடி காரியம் எப்படி நடப்பிக்கப்படுகின்றதோ அதுபோலவே கூண்டிலும் நடக்கிறது.

ஒரு கிராமத்தில் குடி இருப்பவர்களுக்குச் சாதாரணமாய் உண்டாகும் சிநேகிதம், சமாதானம், ஒற்றுமை முதலியவற்றுடன் பொறாமை கோபம் சண்டை சச்சரவு முதலியனவும் இன்றியமையாததுபோல் தேனீக்களுக்கும் உண்டு. இக்குணங்களால் ஒருத்தருக்கொருவர் கெடுதியுண்டாகாதபடி கவர்னர் முதலிய சிப்பந்திகள் இருப்பதுபோல் தேன் கூண்டிலுமுண்டு. தேன் கூண்டுகளில் ஒரு பூச்சி மிகப்பெருத்தும் மற்றவை சிறுத்தும் இருக்கும். பெருத்திருப்பது பெண் ஈ. அது ஒன்றே முட்டையிட்டுக் குடும்ப விருத்தி செய்யத்தக்கது. இதற்குத் தாய் ஈ அல்லது இராணி (Queen) என்று பெயர். அது வெளியில்



போவதில்லை. வேறு எந்தவேலையும் செய்வதில்லை. அதனைப்போஷிப்பிக்க அனேக சிப்பந்திகளும் ஏவலாட்களும் காத்துக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கூண்டிலும் ஆண் ஈக்கள் சில உண்டு. இவை வேலை செய்வதில்லையாகையால் மற்றவைகள் இவைகளை நிந்திக்கும். இவை இராணியுடன் இருந்து காலங்கழிக்கின்றன. இது மற்றப்பூச்சிகளை விட பெரிதாயும் தேகத்தில் மயிர் நிறைந்தும் கொடுக்கில்லாமலும் இருக்கும். இவை புதுக் கூட்ட முண்டானவுடனே ஸாதாரணமாய் வேலையாட்களால் கொல்லப்படுகின்றன. கூண்டிலிருப்பவை அனேகமாய் வேலையாட்களே. அவை தேன், மகரந்தம், பசைமுதலியவற்றை சேர்ப்பதுடன் மெழுகையும் உண்டாக்குகின்றன. அவை வீடுகட்டி குஞ்சுகளைப் பாதுகாத்துப் பகையாளிகள் உள்ளே வாராதபடி காவல் செய்யும். இராணிக்கு எவ்வித ஆபத்தும் வாராமல் காப்பாற்றி எதிரிகளைக் கொன்று அவற்றின் பிரேதங்கள் கூண்டைத் தீட்டுப்படுத்துகின்றனவென்று அவைகளை வெளியே தள்ளிவிடுகின்றன. இவ்வாறு வெவ்வேறு வேலைகள் ஒவ்வொருவராலும் நடத்தப்பட்டால் யாதொரு ஒழுங்குமில்லாமல் வேலை தக்கபடி நடப்பதில்லை யென்று ஒவ்வொரு வேலைக்கும் சில ஈக்கள் நியமிக்கப்பட்டு கூண்டுகட்டும் தச்சரும் சாப்பாட்டைச் சேகரிக்கும் குடிகளும் பட்டணங்களைக் காப்பாற்றும் சிப்பாய்களும் இராணியிடம் பணிவிடை செய்யும் ஏவலாட்களும் உண்டு. இவ்வாறு வேலை செய்பவர் பேடிகள். அவற்றிற்கு முட்டையிட வாய்ப்பதில்லை. வயிற்றடியில் கொடுக்கு மறைந்திருக்கும். இராணிக்கும் பெரிய கொடுக்குண்டு. அது மற்ற இராணி ஈக்களோடு சண்டையிடும் போது மாத்திரமே தன் கொடுக்கை உபயோகப்படுத்தும். தேனீக்களுக்கு வேலை செய்யும் கருவி, வாயும் கால்களுமே. வாயானது ஒரு நீண்ட தும்பிக்கை போலிருந்தாலும் வீட்டு ஈக்களுக்கு இருப்பதுபோலல்ல. வாயில் இரண்டு ஊசிகளைப்போல் இரண்டு தாடையுண்டு. இவற்றின் முனையில் நுண்ணிய மயிர் முளைத்திருக்கும். இதுகளின் மத்தியில் ஊசிகளைவிட அதிகமாகவே நீண்டிருக்கும் நாக்குண்டு. தேன் இதனால் நக்கப்பட்டு முதலில் வயிற்றில் சேர்க்கப்படுகின்றது. இந்த வயிறு நிறைவதும் தேனீ கூண்டுக்குப் போய் தன் வயிற்றில் சேர்த்த தேனைக் கக்கும். ஊசிபோன்ற தாடை புஷ்பங்களில் வழிசெய்ய உதவுகிறது. பின்னங்கால்களைக் கவனித்தால் அகன்று ஓரங்களில் சுரசுரத்து இருக்கும். இவை கூடைபோல் உதவி மகரந்தம் கொண்டுவர உதவுகின்றன. ஓர் தேனீ, புஷ்பத்துக்குள் சென்றால் தன் தேகமுழுதும் படிந்த மகரந்தத்தைக் கால்களால் சேர்த்துப் பின்னங்கால்களிலுள்ள கூடைகளில் சேர்க்கின்றன. சில பூச்சிகள் மஞ்சள் தூசியைத்

காலில் கொண்டுபோவது இது தான். 'ஆயிரம்பேர் கூடி அழகான மண்டபம் கட்ட ஒருவன் கண்பட உடைந்ததாம் மண்டபம்' என்று சொல்லப்பட்ட சிறுவர்களின் விடுகதையாகிய தேன் கூண்டு எவ்வாறு கட்டப்படுகிறது என்று பார்ப்போம். பூவரசு, தேன்புஷ்பம் முதலிய மரங்களிலும் மற்றச்செடிகளிலுமிருந்து வரும் தேனீக்கள் மேற்படி செடி புஷ்பத்தின் அடியிலிருக்கும் ஒருவித பசையை வாயில் கொண்டு வந்து கூண்டிலுள்ள தச்சர்க்குக் கொடுக்க அவை சந்துபொந்துக்களை அடைத்து ஒவ்வொரு குழிக்கு ஒரேவாசல் இருக்கும்படி கட்டுகின்றன. தேன் கூண்டு ஒரேவிதமான அனேக குழிகள் விசித்ரமாய் கட்டப்பட்டிருக்கிறது. இப்பசையால் குழியின் உட்புறமெல்லாம் பூசப்படுகின்றது. பின்னும் யாதாமொரு பூச்சி இறந்துவிடுமானால் அதன் பிரேதம் அழுகி நாற்றமாகாதபடி இப்பசையை மேல் பூசிவைப்பது வழக்கம். இன்னும் கூண்டின் பக்கத்தில் நத்தை முதலியன இறந்துவிட்டால் ஓட்டைவிட்டு அதன் வழியை மாத்திரம் அடைக்கும்.. இவ்வாறு தன் கூண்டைச் சுத்தமாய் வைத்துக்கொண்டிருக்கும். மெழுகு என்னமாய் உண்டாகிறதென்பதை விசாரிக்கலாம். தேனீக்கள் மஞ்சள் மகரந்தத்தைக் காலில் உருட்டிப்போவது மெழுகு செய்வதற்கென்றே அனேகர் கொண்ட எண்ணம் பிசகு. கூண்டின் அறைகளைக் கட்டுவதற்கு இவைகளின் கூண்டின் கூரையிலிருந்து ஒன்றன்பின் ஒன்றாகத் தொங்கும் தேனீக்களின் காலின் முனை கொக்கிபோலிருப்பதால் அவைகள் சங்கிலிபோல் கோத்துத் தொங்க ஸாத்யமாகும். முதல் ஒரு ஈ முன்னங்கால் கொண்டு கூரையில் ஒட்டித்தொங்கும், மற்றொரு ஈ அதின் பின்னங்காலைத் தன் முன்னங்காலால் பிடிதுத்தொங்கி இவ்வாறே நீண்ட ஸரமாகும். இம்மாதிரி 24-மணிநேரம் தொங்கும் அவைகளின் வயிற்றிலிருந்து மெழுகு உண்டாகிறது. கட்டடக்காரராகிய தச்சர் மெழுகு உண்டானவுடனே எடுத்துப்போய் கூண்டைக் கட்டிக்கொள்ளும். 1-வீசை மெழுகுண்டாக்க 2-வீசை தேன் செலவழிக்க வேண்டியிருக்கிறது. இவ்வாறு உண்டாகும் மெழுகு மிக அருமையாகையால் கூடிய வரையிலும் எவ்வளவுக்குச் சிக்கனமாக உபயோகிக்கலாமோ அவ்வளவே கூண்டுகளில் உபயோகப்படுகின்றது.

இப்போது அவைகளின் புத்திசாலித்தனத்தைச் சிறிது கவனிப்போம். தேன் கூண்டு அநேக அறைகள் உருட்சியாய் யில்லாமல் ஆறு பக்கங்களுடையதாய் இருப்பதே மெழுகை வெகு கொஞ்சமாக உபயோகிக்கும் வழி. உருட்சியாய் இருந்தால் ஒன்றுக்கொன்று சந்துவிடும். அதனால் மெழுகு அதிகமாய் சேதப்படும். பின்னும் 4-பக்கங்கள் கொண்டு கட்டும்-அறைகள் 6-பக்கங்கள் உள்ள அறைகளைப்போல அவ்வளவு பலமல்லவென்பதைக் கட்டடவேலைக்காரராகிய இஞ்ஜினியர்க்குக் கண்டிதமாய்த் தெரிந்த விஷயம். கூண்டு கட்டுவது கூரையிலிருந்து கீழ்நோக்கி நடக்கும் இரண்டு வீதியில் அகப்பட்ட இரண்டு வரிசை வீடுகளும் புறக்கடையில் ஒன்றுடன் ஒன்று கலப்பதுபோல் கூண்டின் இரு பக்கமும் அறைகள் ஏற்பட்டு நடுவில் இருக்கும் இடத்தை சாத்தியமாகும் வரையில் உபயோகிக்கும் வழியாகத் தேனீக்கள் காலதாமதப்படாமல் வெகு சீக்கிரம் கூடுகட்டும். இந்த அறைகள் மூன்றுவித அளவாய்க் கட்டப்படுகின்றன. சிறியவை வேலை செய்பவர்களுக்கும், மத்திய அளவுள்ளவை ஆண் மக்களுக்கும், பெரிய அறை இராணிகளுக்குமே. வேலைக்காரருக்கோ அனேக அறைகளுண்டு. இராணி ஈயினுடைய அறை மாளிகை என்று ஆங்கிலேய பாஷையில் சொல்லப்படும். இவை சாதாரணமாய் 10, 20-உண்டு. இராணியம்மா இவ்வறைகளில் ஒவ்வொருமுட்டை இட்டு கூண்டின் வாயைக்கெட்டியாக மூடும். இவ்வேலையில் அநேக வேலைக்காரர்கள் உதவிசெய்வார்கள். தப்பிதமாய் ஒரு அறையில் இரண்டுமுட்டைக்கு அதிகமிட்டிருந்தாலோ வேலையாள்கள் அதிகமான முட்டைகளை நீக்கிக் கெடுத்துவிடுகின்றன. அறைகள் எவ்வளவு சீக்கிரம் செய்யப்படுகின்றனவோ அவ்வளவு விரைவாகவே முட்டை துளிர்க்காலம் முதல் மழைக்காலம் வரையில் ஒருநாளைக்கு 200-முட்டை விழுக்காடு ஒருமாதத்திற்கு 6000-முட்டையிடும். முட்டை யிட்டவுடனே தாதிமார் (வேலை செய்யும்படியான ஈக்கள்) அம்முட்டைகளைத் தங்கள் ஆதீனத்தில் எடுத்துக்கொள்ளுகின்றன. சிறிய ஈக்கள் மெழுகு செய்வதாயும் பெரியவை தேனை சேர்ப்பதாகவும் சொல்லப்படுகின்றன. இப்போது தாதிமார்கள் அடிக்கடிவந்து ஆகாரம் ஊட்டும். இச்சமயத்தில் மகரந்தம் தீனியாக உதவுகிறது 5-நாளில் புழுவளர்ச்சி முடிகிறது. பின்பு தீனி தின்னாமல் அறைகுள்ளேயே இருந்து தன்னைச்சுற்றிலும் ஒரு கூண்டு பின்னிக்கொள்ளும். தாதிப் பூச்சிகள் கடைசியாக வந்து அறைகளின் வாயை மெழுகால் மூடிவிடும் 8-நாள் சென்ற பின்பு உருவம்மாறி இறகுடன் வெளிவரும் ஸமயத்தில் தாதி பூச்சிகள் அதை நக்கித் தாஜாப்படுத்தி கொஞ்சம் தேனைக்கொடுக்கும். வெளியே வந்த 24-மணி நேரத்தில் மற்றவைகளோடு வேலைசெய்யச் சேர்ந்துவிடும். இவ்வாறு முட்டை, வேலைசெய்யும் ஈயாவதற்கு 20-நாளும் ஆண் ஈ ஆவதற்கு 24-நாளும் கொள்ளும். இராணி ஈ உண்டாவது சற்று வேறுபடுகிறது. மாளிகை அறைகளில் முட்டை இடும்புழு வளர அறைகளும் அகலப்படுகின்றன. ஸாதாரணப் புழுக்களுக்கு ஊட்டும் மகரந்தம் தீனியைவிட மேலான தீனி, அரசு பூச்சிகளுக்குக் கொடுக்கப்படுகின்றது. இராணியே கூண்டுக்கு அவசியமாதலால் அது இறந்துவிட வேறு குஞ்சுகளைக்

கொண்டுவந்து மாளிகையில் வைத்து அதற்குக் கொடுக்கும்படியான தீனியைக் கொடுக்க அது இராணியாகிறது. இராணி உண்டாக 13-நாள் செல்லும். இவ்வாறு விருத்தியாவதால் தினம் 100-புது ஈ கூண்டுக்குச் சேரும். புது இராணி வளர்வது பழைய இராணிக்கு மிகப்பொறாமை. ஆகையால் சிறு இராணியைக் கொல்ல யத்தனிக்கிறது. ஆனால் வேலையாட்கள் சிறு இராணியைக் காப்பாற்ற முயல்கின்றன. அவ்வாறு சிறு இராணி காப்பாற்றப்பட்டால் கிழ இராணி தன் ஸ்னேகிதரை அழைத்து, தான் மாளிகைக்கு வெளியே போக எண்ணங்கொண்ட விஷயத்தைத் தெரிவிக்கின்றது. இச்சமயத்தில் கூண்டில் ஒரு பெரிய கலவரமுண்டாய் ஈக்கள் பித்துப் பிடித்தாற்போல் இங்குமங்கும் ஓடித்திரியும். கிழ இராணி கண்ட இடத்தில் முட்டை இடுவதுடன், வெளிவரும் இளம் ஈக்களைக் கொல்ல எத்தனிக்கும். ஆனால் சிப்பந்திகள் வெகு ஜாக்கிரதையாய் சிறு பூச்சிகளைக் காப்பாற்றும். உடனே இராணி வெளியேறும். அதனோடு அனேக ஈக்கள் போய் ஒரு கூட்டமாகி யாதாமொரு கிளையில் சேரும். மறுபடியும் சாந்தமடையும். இச்சமயத்தில் பிடித்துக்கொள்ளலாம். ஈக்கள் 2, அல்லது 3-வருஷம் சாகாமல் உழல்கின்றன. ஒவ்வொரு கூண்டும் 12-அல்லது 20-ராத்தல் தேன் ஒரு வருஷத்தில் தருகின்றது. ஈக்கள் 9-மைல் தூரத்துக்குள்ளே போய் தேனைச் சேர்க்கின்றன. சிலவேளைகளில் 4 அல்லது 5-மைல் தூரம் செல்வதுமுண்டு. ஒரு நிமிஷத்திற்கு இரண்டு மைல் தூரம் போவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

## பலவித—மைகள்.

நாடு செழித்து நாமும் க்ஷேமம் பெறவேண்டுமானால் ஒற்றுமையுடன் பொறுமையையும் அநுசரித்தல் ஆவசியகமாகின்றது. ஒற்றுமை ஒன்றையே பெற்றுள்ள கூட்டத்தினராலும் பொறுமையை மட்டுமே மேற்கொண்டொழுகும் குழாத்தினராலும் அதிக நன்மைகள் ஏற்பட்டுவிடமாட்டா. ஒரு கூட்டம் எத்தனை ஒற்றுமையுற்றிருப்பினும் பொறுமைத்தன்மை இல்லாவிடில் பெரிய காரியங்கள் எதையும் சாதிக்கும் வன்மை பெற்றிராது. அப்படியே பொறுமை அநுசரித்த ஒருதிரள் ஒற்றுமையிற் கலப்புற்றிராவிடில் அதன் முயற்சிகள் கானகத்தெரித்த நிலவாகவே முடியும். இனி பொறுமையும் ஒற்றுமையும் ஒன்றுகூடி பொன்மலருக்கு நறுமணம் ஏற்பட்டது போலானால் அப்போது பெருமை இவர்களுடைய வாசற்படியை அடிக்கடி எதிர்நோக்கும். சுவர்ணத்தாலான புஷ்பஹாரத்திற்கு நறுமணம் ஏற்படினும் அதன் பெருமையைப் பாத்திரமறிந்தோர்தான் உணரவல்லார். தவறிப்போய்



குரங்குகையிற் பூமாலையாக அகப்பட்டுவிட்டால் அதன் கதியைச்சொல்லவும்கூடுமோ? ஒன்று சேரக்கூடாத ஒற்றுமையும் பொறுமையும் ஒருவழிப்பட்டு நின்றதே பெரிய காரியமாகிய நாம் கருதுவோமானால் பொறாமையினிடத்தே இவ்விரண்டையும் ஒப்பிவித்துவிடநேராதிருக்கும்படி பிரவர்த்திப்பது அதனினும் பெரியகாரியமாகக் கருதல் வேண்டும். இதில் நமது எச்சரிக்கை சற்று குறைவு படத்தொடங்கினால் தக்ஷணமே பொறாமையின் ஆப்தநண்பனாகிய சிறுமை புகுந்து கோரணிகள் விளைக்கத்தலைப்பட்டு விடுவான். இதன் முடிவு தனிமை என்பதில் கொண்டு வந்து விடுகிறது. தனிமையின் சகோதரன் யாரென்றால் வறுமை தான். இப்பெரியவரைப்பற்றி நமது ஔவையார், "கொடிது கொடிது வறுமை கொடிது" என்று பேசியுள்ளார். பாரதமணித் திருநாடு வறுமைக்குத் தாய்வீடாக மாறிப்போய் இருக்கின்றது. இதன் மீக்ஷி மார்க்கத்தையே இவ்வியாசம் குறிப்பிடுகிறது. சப்தத்தின் பெருமையை மூக்கு அறியா. வாசனையின் சிலாக்கியம் செவிக்குப் புலப்படமாட்டா. இவ்விரண்டின் பெருமைய்யும் கைகால்களறியா. இடத்திற்கேற்றபடி அருமை புலப்படும். மிளகாய் வயிற்றுக்குள் சென்றால் புசித்த ஆகாரம் ஜீரணம் பெறுகிறது. நேத்திரத்திலிட்டுக்கொண்டால் கண் குருடுபட்டுப் போகின்றது. ஸ்தலத்திற்கேற்றவாறு பெருமையும், சிறுமையும், அமையும். குடி கெடுக்கும் பொறாமை வித்தியா விஷயத்திலிருந்தால் அதனால் எவ்வளவோ உன்னதங்கள் விளைகின்றன. அவ்விதமாகவே வறுமை ஒருவனை ஐஸ்வரியவானாக்காவிடினும் ஞானவானாக்குவது உண்மையென்றறிகிறோம். சிறுமையின் பயன் தெரிந்தே இருக்கின்றது. அதனால் செட்டுத்தனம் உண்டாகிறது. இது எவ்வளவு பெரிய நன்மை! செட்டற்ற குடித்தனம் மட்டற்ற தரித்திரம் என்று பழமொழியும் உண்டு. காலசக்கிரம் மாறிக்கொண்டே வருகிறது..

ஒரு சக்கிரத்தின் மேல்பாகம் கீழேவரவும், கீழ்பாகம் மேலே போகவும் அதிகநேரம் ஆகமாட்டா. "உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா" என்று கொன்றை வேந்தனில் ஒரு வசனமும் இருக்கிறது. ஒற்றுமை, பொருமை, பொறாமை, வறுமை, சிறுமை, தனிமை என்னப்பட்ட இந்த ஆறுவித—மைகளையும் பாத்திரமறிந்து பயன்படுத்திக்கொள்பவர்கள் ஏழாவது—மையாகிய பெருமையைப் பெற்றுக்கொள்ளவும் அருகராவார்.

"தெய்வத்தானாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்."

(பி. கூ)

## ஓர் குரங்கின் அறிவு.

லண்டனிலுள்ள ராயல் போர்ட்ஸ்மௌத என்ற வைத்திய சாலையில் ஓர் குரங்குக்குத் தலையில் அடிபட்டிருந்ததை சிகிச்சைசெய்துக் கொண்டிருந்தார்கள். இங்ஙனமாக அக்குரங்கின் உடையவனுக்குச் சொல்லாமலே நாள் தவராமல் வைத்தியசாலைக்குச் (Hospital) சென்று தனது தலையிலுள்ள ரணத்தை ஆற்றிக்கொண்டது. நிற்க அவ்வைத்தியசாலையின் மாதாந்தர மீட்டிங்கு ஒன்றுகூடிற்று. அக்காலையில் இக்குரங்கும் அங்குச்சென்றிருந்தது. அக்கூட்டத்தில் சில பிரமுகர்கள் (Brittish Medical Journal) ப்ரிட்டிஷ் மெடிகல் ஜர்னல் (பத்திரிகை) ஒன்று ஆரம்பிக்கவேண்டுமென்றும், அதற்கு வேண்டிய பணம் உதவிபுரியவேண்டுமென்றும் சொன்னார்கள். அக்ஷணமே அநேக தனவந்தர்கள் சந்தாவாகச்சேர்ந்ததுமன்றி, தங்களாலியன்றளவு பணம் உதவிபுரிந்தார்கள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த குரங்கு தான் ஓர் சந்தாவாக இருக்கப்பிரியங்கொள்ளுகிறதாக எழுதிக் கொள்ளும்படி செய்கையால் அங்கிருந்த பல பிரமுகரைத் தூண்டிற்று. இச்சூக்ஷமத்தை யறியாமல் பலபேர் திகைத்தார்கள். ஒருவருடன் ஒருவர் முகத்தைப் பார்த்தவண்ணமாயிருந்தார்களே யொழிய அதன் மர்மத்தை அறியவில்லை. கடைசியில் அங்கிருந்தவர்களில் அதிநுட்பமான ஒருவர் அதன் மர்மத்தையறிந்து புஸ்தகம் பேனாவுடன் சென்று நீ இப்பேப்பருக்குச் சந்தாவாகச்சேர விரும்புகிறாயா என்று கேட்டதற்கு, வாயில்லாப்பிராணியாகிய அக்குரங்கு தன்தலையை அசைத்தது. உடனே மறுபடியும் அதன் விலாசத்தைக்கேட்க தான்வசிக்கும் எஜமானின் விலாசமே தன்விலாசமென்று தன் செய்கையால் காட்டிற்றாம். இச்சங்கதி ஓர் ஆங்கிலேயப் பத்திரிகையில் வரையப்பட்டிருக்கின்றன. இதைப் பார்ப்பவர்களுக்கு இது ஆச்சரியத்தைக் கொடுக்குமென்பதில் தினையளவேனும் ஐயமில்லை. நாம் நம்பாரதர்களைச் சந்தாவாகச்சேர்ப்பதற்கு எவ்வளவோ பிரயாசைப் படுகின்றோம். நிற்க இந்தியாவின்கண் நடைபெருகின்ற சுயபாஷைப் பத்திரிகைகளுக்குச் சந்தாவோ குறைவென்பதைப்பல்லோர் அறிந்த விஷயம். வாயிலாப்பிராணிகள் கூடப்பகுத்தறிவடைந்து நியூஸ்பேப்பர்கள் (News Paper) படிக்க ஆவல்கொண்டதானால் பகுத்தறிவுடைய மானிடருக்கு அப்புத்தியானது ஏன் கெடுகின்றதோ அறிகிலேன். ஹே! பாரதஸகோதரர்களே? இனிமேலாவது இக்குரங்கின் அறிவைப் பின்பற்றி ஒழுகுவீர்களாக!

பாண்டியன்.

---



## வைத்தியக் குறிப்புகள்.

புங்கன் வேரைப் பசும்பாலிற் கொள்ள புண் புரைகள், சூலை, அரையாப்பு, கிரந்தி, குஷ்டம், சில்விஷம் முதலியன நீங்கும்.

---

சிவனார் வேம்பின் வேரைப் பாலிற்கொள்ள தீராத சில்விஷமும், காலிற்காணும் பிளப்பு, கரப்பன் வகைகள் வாய்வுகள் முதலியன தீரும்.

---

பொன் முசுட்டை வேரைப் பசும்பாலிற் கொள்ள சுக்கில விருத்தியுண்டாகும், குஷ்டம், வாயு, விஷகடி, அதிசாரம் நீங்கும் ஷை இலை அதிமூத்திரத்தைப் போக்கும்.

---

அரசமரத்தின் வேற்பட்டையை பாலிற்கூட்டி உட்கொண்டாலும், அல்லது அந்தப்பட்டையுடன் அரிசிகூட்டி இடித்து மாவுசெய்து களிக்கிண்டித்தின்றாலும் பெரும்பாடு தீரும்.

---

ஆலின் விழுதையும் ஷை விதையையும் பசும்பாலிற் கொள்ள பாலில்லாத பெண்களுக்குப் பாலுண்டாகும். வெட்டை, மேகம், உடல் எரிவு, காந்தல் முதலியன தீரும்.

---

காட்டாமணக்குக் கொழுந்து, வெள்ளெருக்கம்பூ, மிளகு இம்மூன்றையும் ஒரு வாரகனெடை வீதம் சிதைத்துக்கொடுக்க சுரம் தீரும், இத்துடன் ஒரு கழற்சிப் பருப்பைச் சேர்த்துக்கொடுக்க அண்டவாயு தீரும்.

---

வெள்ளறுகு சமூலத்தைப் பாலிற்கொள்ள சில்லறை விஷம், சிறங்கு, சொறி, குஷ்டம், கிரந்தி, வெட்டை, வெடிசூலை, காமாலை, விஷக்கரப்பன், வீக்கம் முதலியன தீரும். ஷை சமூலத்தை தண்ணீரிவிட்டு வேகவைத்து சிறு சூட்டுடன் வாயில் விட்டுக் கொப்புளிக்கப் பல்வலி தீரும்.

---

கோரைக்கிழங்கை அரைத்து பசும்பாலிற் குழைத்துக் குடிக்க கற்றாழை நாற்றம், அதிபித்தம், பித்தத்தாலுண்டாகும் வீக்கம், சத்திஜுரம், நாவறட்சி, தாபசோபம் நீங்கும். ஷை கிழங்குடன் கொத்தமல்லி பேய்ப்புடல், சுக்கு சிற்றறத்தை முதலியவைகளை ஓர் நிறையாய் நிறுத்தெடுத்து கஷாயஞ்செய்து சாப்பிட பித்த ஜுரம் நீங்கும்,

---

## ஹாஸ்யத் துணுக்குகள்.

கைதி:—ஐயா! இந்தக்கேசுக்கு 1000 ரூபா அனியாயமாய்த் தோன்றுகிறது.

வக்கீல்:—நான் உன்னைப் பைத்தியக்காரனாக ரூபித்து, விடுதலை கிடைக்கப் பண்ணவில்லையா ?

கைதி:—ஆம் சரிதான். ஆனால் தங்களுக்கு 1000 ரூ. பீஸ் கொடுக்கத்தக்க அவ்வளவு பைத்தியகாரனாகி விட்டதாக ரூபிக்கவில்லையே!

ஒரு நியாதிபதி ஒருகட்சிக்காரனைப்பார்த்து "நீ திருடனென்று உன் முகம் கண்ணாடிபோல் காட்டுகிறது" என, கைதி ஐயா என் முகம் கண்ணாடியாதலால் அதில் உங்கள் முகம் உங்களுக்குத் தெரிகிறதுஎன்றான்.

---

துரை:—"எனக்கு சலிப்புண்டாகிற வரையில் நெடுநேரம் உன்னோடு வார்த்தையாடினேனே என்ன பிரயோஜனம்."

துரைசானி — மெய்தான் புத்திசாலிகள் நீண்டநேரம் பேசமாட்டார்கள். ஒரேவார்த்தையில் குறிப்பறிந்துகொள்வார்கள்.

---

ஒரு வழக்காளி நியாயசபையில் பேசிக்கொண்டிருக்கும்போது எதிரியின் வக்கீல் அவனைப்பார்த்து "நீ என்ன நாய்போற் குரைக்கிறாய்" என, வழக்காளி வக்கீலைப்பார்த்து "ஐயா, திருட்டுப்பயலைக் கண்டால் நாய் குரைக்காதா"! என்றான்.

---

"உனக்கு ஊர், கிராமம் உண்டோ" என, எனக்கு ஊர்—கரூர் கிராமம்—சாளிக்கிராமம், இடம்—இருப்பிடம், வேலி—திருநெல்வேலி, காணி—மாகாணி, நிலம்—நன்னிலம், கடை—சாக்கடை, பாய்—பீப்பாய் காடு—சுடுகாடு, திரம்—தரித்திரம், சேரி—புதுச்சேரி, விருத்தி—மலவிருத்தி என்றான்.

---

ஐயா, உமக்குப்பிள்ளைகள் உண்டோ? என்று ஒருபையன் ஒருமனிதனைக்கேட்டான் உண்டு என்றான். "உனக்குப்பிறந்தது எத்தனை ஊருக்குப்பிறந்தது எத்தனை!" என்று கேட்டான். "அந்தமனிதன் திடுக்கிட்டு நின்றான்" உனக்குப்பிறந்தது பிள்ளை ஊருக்குப்பிறந்தது பெண்ணல்லவா என்றான்.

---

## வர்த்தமானங்கள்.

**ஆகாய விமானப் போஸ்டு:**—லண்டனிலிருந்து தபாலுடன் ஆகாயத்திற் கிளம்பிய ஹூபர்ட்டு தம்முடைய விமானத்தின் நிலை மாற்றத்தால் 100 அடி உயரத்திலிருந்து விழுந்து துடைகளை முறித்துக்கொண்டார். அதன் பிறகு ஹேமல் என்ற ஆகாய விமானி விழுந்து விட்ட மெயிலை எடுத்துக்கொண்டு ஆகாயத்திற் கிளம்பி அதிவேகமாய்ப் பறந்து போய்ச் சேர்ந்தாராம். சில இடங்களில் மணிக்கு 105 மைல் வரையிற் கூட சென்றாரெனப்படுகிறது.

---

**கொள்ளிவாய்ப் பிசாசு என்பதின் இரகஸ்யம்**—ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஹங்கேரி நாட்டில் பூமியிலிருந்து ஓர்வித கியாஸ் ஆவி அனேக வருஷமாய் வெளிவருகிறதென்று இப்பொழுது தெரிந்தது. கவர்ன்மெண்டார் இதைக்கேட்டு அவ்விடத்தை பரீக்ஷிக்கலானார்கள். 600-அடி வெட்டினதும் பூமியிலிருந்து அதிக சப்தத்துடன் கியாஸ் புகை வந்தது. இங்கே வித்திய சக்தி எந்திரங்கள் வைக்க ஏற்பாடாகிறது. நமது தேசத்தில் இரவில் கொள்ளிப் பிசாசுகள் நடக்கின்றனவென்று ஜனங்கள் கூறுவதுண்டு. பூமியிலிருந்து கியாஸ்புகைப் புறப்படுவதே இதற்குக் காரணம். பதார்த்த விஞ்ஞான சாஸ்திரங்களைப் படித்துள்ள நமது ஜனங்களில் சிலர் இந்த விஷயத்தை அறிந்திருக்கிறார்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
1 - DEC 1911
MADRAS.

உ

# வைத்திய போதினி.

சித்திரப்படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான
ஓர் மாதாந்த தமிழ்பத்திரிகை.

புத் 2. } 1911-ஹு அக்டோபர்மீ } நே. 10.

## வேப்பமரம்.

இதற்குத்தமிழில் வேப்பமரம் அல்லது வேம்பம் என்றும் லத்தீன்பாஷையில் (Azadirahtae indica—அஜாடிராக்டா இன்டிகா) என்றும்இங்கிலீஷில் (Nim or Margosa Tree—நிம், ஆர், மர்கோஸாட்ரீ) என்றும் பேர். இம்மரமானது சர்வசாதாரணமாய் எல்லோருக்கும் தெரிந்த வஸ்துவேயாகும், விசேஷமாய் இந்தியாவின் மலைநாடுகளிலும் தோட்டங்களிலும் வீட்டுக்கொல்லைப்புறங்களிலும் காணப்படுகிற தென்பதை மாத்திரம் அநேகர் அறிந்திருப்பார்களேயன்றி அதன் செய்கை உபயோகம் முதலியவைகளைப்பற்றி அநேகர் தெரிந்துகொண்டிருக்க மாட்டார்கள் ஆகையால் அதைப்பற்றிச் சிறிதளவு கூறுவாம்.

வேப்பமரமனது வீடுகளுக்குத் தூண்களாகவும் உத்திரங்களாகவும் உபயோகப்படுவதன்றிமேஜை, நார்காலி, பெஞ்சுமுதலியவைகளுக்கும் இவைபோன்ற அநேகவிததட்டுமுட்டு சாமான்கள்செய்வதற்கும் விசேஷமாய் உபயோகப்பட்டுவந்தபோதிலும், மனிதசமுகத்திற்கு இன்றியமையாத மருந்துப் பொருளாகவும் உபயோகப்பட்டு வருகிறது. அதாவது வேப்ப்ம்பட்டையானது முறை ஜுரங்களைப் போக்கவும், ஜுரங்களுக்குப்பின் காணும் பலஹீனங்களுக்கும் ஓர் சஞ்சிவீயாய் இருக்கிறது. வேப்பமரத்தின் மேலிருக்கும் பட்டையைக் காட்டிலும் அதன் வேரின் மேலிருக்கும் பட்டையானது அதிக வீரியமுடைதாய் இருக்கிறது. இதன் வேர்ப்பட்டையை உலரவைத்து இடித்துத்தூள் செய்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு சீதஜுரம், முறைஜுரம், துர்பலம்முதலியவைகளுக்கு 1 விராகனிடைவீதம் தினம் ஒன்றுக்கு 3-4 ஆவர்த்தியாகஜுரம் விட்டிருக்கிறபோது வாயில் போட்டுக்கொண்டு வென்னீர்விட்டு முழுங்கச்செய்யவும் அல்லது 5-தோலா நன்றாய் நசுக்கிய வேப்பம்பட்டையின் உட்பாணையுடன் 3-ஆழாக்கு வடிகட்டின சுத்தஜலம்கூட்டி 15 நிமிஷம் காய்ச்சி சூடாயிருக்கும் பொழுதே வடிக்கட்டிக்கொண்டு

முறைஜ்வரங்களுக்கு வேளை ஒன்றுக்கு 2-அவுன்ஸ் வீதமாக 2-மணிக்கொருதரமும், பலக்ஷீணரோகங்களுக்கு 1-முதல் 1½ அவுன்ஸ் வீதமாகவும் தினத்துக்கு 2-தடவை கொடுக்கலாம். வெயில் காலங்களில் இக்கஷாயம் சீக்கிரம் கெட்டுப்போகு மாகையால் தேவையான அளவே அப்போதைக் கப்போது செய்து கொள்ளவேண்டியது.

ஆங்கில வைத்தியர்களோவெனில் வேப்பம்பட்டையை அடியில் வருமாறு பாவனத்திரவம் செய்து உபயோகித்து வருகிறார்கள். அதாவது நன்றாய் நசுக்கிய வேப்பம்பட்டையின் உட்பாளை 2½-அவுன்ஸ், புரூவ் ஸ்பிரிட் (Proof Spirit) 20-அவுன்ஸ் கூட்டி மூடிவைத்திருந்து 7-நாள் கிரமித்து நன்றாய்ப் பிசைந்து வடிகட்டிக்கொண்டு ½-டிராம் முதல் 2-டிராம் வரையில் சுத்த ஜலத்தில் கூட்டி மேற்கண்டரோகங்களுக்கு தினம் 2–3, தடவை கொடுத்து வருகிறார்கள். இன்னும் வேப்பம்பட்டையை வெயிலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து பற்பொடி சாமான்களுடன் கூட்டி பற்றுலக்க பற்களிலுள்ள பூச்சிகள்போம். பட்டையைக்கஷாயம் செய்து வாய்கொப்புளிக்க வாய் விரணம் ஆறும். நாட்சென்ற வேப்பமரத்தின் சமூலத்தை இடித்துப் பொடிசெய்து நீண்ட நாள் சாப்பிடக்குஷ்டம் நீங்குமென்று ஆயுர்வேத புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

வேப்பிலை:—வேப்பிலையைமைய அரைத்து துஷ்ட விரணங்களுக்கும் கிருமியுள்ள விரணங்களுக்கும் வைத்துக்கட்டலாம். எரிச்சலெடுத்தால் சிறிது அரிசிமாவு கூட்டிக் களிக்கிண்டி வைத்துக்கட்டவும். இன்னும் வேப்பிலையை வெந்நீர் விட்டு அரைத்து துஷ்டவிரணம், அம்மைவிரணம், சொறிசிறங்கு முதலியவைகளுக்குப்போடச் சுகமுண்டாகும். வேப்பங்கொழுந்துடன் ஓமம், மிளகு, வசம்பு, பூண்டு இவைகளைச்சேர்த்து அரைத்துக் கொடுத்தால், வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி முதலியனபோம்.

வேப்பம்பூ:—இத்துடன் உப்பு, மிளகாய், புளி, காயம், கடுகு, உளுத்தம்பருப்பு முதலியவைகூட்டி துவையல் செய்து சாப்பிட்டாலும், அல்லது வேப்பம்பூவை ரசஞ்செய்து சாப்பிட்டாலும், மயக்கம், கிறுகிறுப்பு, ஓக்காளம், அரோசகம், வாந்தி அதிபித்தம் முதலியனபோம். நாட்பட்ட புஷ்பத்திற்கு ஜன்னி மூர்ச்சை, வெப்பம், நீடித்தவாதம், ஜிம்மகதோஷம், மலக்கிருமி, அரோசகம் இவைகள் நீங்கும்.

ஈர்க்கு:—வேப்பிலை ஈர்க்குடன், கறிவேப்பிலை ஈர்க்கு, நுணா ஈர்க்கு, எலுமிச்சன் ஈர்க்கு, சீரகம், லவங்கம், ஏலம், மிளகு, கொத்துமல்லி, இவைகளைச் சமனிறையாக் கூட்டி இடித்து



அதில் 2-வராகனெடை 3-அவுன்ஸ் வெந்நீரிலிட்டு ஒருமணிநேரம் மூடிவைத்து வடிகட்டி முழுமையும் ஒருவேளைக்குக் கொடுக்க, வாதபித்த சிலேஷ்ம ஜ்வரங்கள் முதலியனபோம். மேற்கண்ட விதமாய் கஷாயம்செய்து தினம் 2-3 தரம் கொடுக்கவேண்டியது.

வேப்பெண்ணெய்:—இது கிருமிகளைப்போக்கும், விரணங்களை ஆற்றும், இன்னும் கரப்பான், கிரந்தி, மகாவாதம், ஜன்னி, ஜ்வரம் முதலியவைகளுக்கு வேப்பெண்ணெயுடன் கடைச்சரக்குகள் கூட்டித்தைலம்வடித்துமேலுக்குபயோகிப்பது நாட்டு வழக்கம். மனிதர்களுக்கும் மாடுகளுக்கும் வயிற்றிலுள்ள புழுக்களைப்போக்கவும் பிரசவித்த ஸ்திரீகளுக்குகாணும் ஜன்னி, ஒரு விதமான வாதரோகம் முதலியவைகளுக்கு உள்ளுக்குக் கொடுத்தும் குணம் கண்டதுண்டு. இந்தியாவிலுள்ள நாட்டுப்புறத்து ஜனங்களிற் சிலர் வேப்பெண்ணெயைத் தேய்த்து ஸ்நானம் செய்வதுமுண்டு. சிலவிடங்களில் விளக்கெண்ணெ, இலுப்ப எண்ணெகளைப் போலவே வேப்பெண்ணெயும் விளக்கெரிக்கப் படுகிறது. ஆனால் சிறிதுகாலமாக நம்நாட்டிலிருந்து ஏராளமாக ஏற்றுமதியாகும் வேர்க்கடலையைப்போலவே வேப்பங்கொட்டையும் ஏற்றுமதி செய்யப்படுவதைக் கண்ட இலங்கைக் கிருஷிச் சங்கத்தார், வேப்பங்கொட்டையை எவ்வித உபயோகஞ்செய்யலாமென்று பரிக்ஷிப்பதற்காக 3-அந்தர் கொட்டைகளை லண்டன் சாஸ்திர ஆராய்ச்சி சங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள், அச்சாஸ்திரசங்க அங்கத்தவரான, மிஸ்டர் டன்றன்ஸ் என்னும் சாஸ்திரியார், வேப்பெண்ணெயிலுள்ள துர்நாற்றத்தைப்போக்கி அதைச்சவுக்காரம் (Soap) மெழுகுவத்தி (Candle) முதலியன செய்யலாமென்று எண்ணுகிறாராம். இதன்றி இன்னும் வேறென்ன பிரயோஜனத்திற்கு உபயோகப்படுமென்று பரிக்ஷிக்கப் பட்டும் வருகிறதாம். ஜெர்மனியில் செய்யப்படும் சிவப்புச்சாயங்களுடன் வேப்பெண்ணெயையும் கூட்டிச்செய்யலாமென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆனால் எண்ணெகூட்டிய சிவப்புச் சாயமானது உறுதியும் விசேஷித்தகுணமுடையதா மென்பதையும் முதன்முதல் நம்மவர்களே கண்டுபிடித்தவராவர், இப்பொழுதும் கூட இந்தியாவில் எண்ணெச்சாயம் அனேகவிடங்களில் செய்யப் படுகிறது. இவ்வனைக்காரணங்களினால் இனி வேப்பங்கொட்டைக்கும் கிராக்கியுண்டாகும்போலும். வேப்பம் புண்ணாக்கு நிலங்களுக்கு எருவாக உபயோகப்படுகிறது. வேப்பங்கள்ளுக்கு. தீபன வர்த்தனகாரி குணமும், பலத்தை விருத்திசெய்யும் சக்தியும் உண்டு, வேப்பம்பிசினிக்கும் மேற்படி குணங்களுண்டு.

வேப்பமரமானது முக்கியமாய் விஷக்காற்றுகளையும் விஷக்கிருமிகளையும் நசிக்கச்செய்வதற்கு ஓர் அரியபெரிய சஞ்சீவி

யென்றே சொல்லலாம். இதைப்பற்றிக் காலஞ்சென்ற கான்பகதூர் டாக்டர் மோஹுத்தீன்ஷெரிப் அவர்களால் இயற்றப்பட்டுள்ள Materia Medica of Madras, என்னும் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறதாவது. தன்னுடைய ஜீவிய காலத்தில் தாம் சென்னை ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கருகிலுள்ள வீட்டில் குடியிருந்ததாயும் அக்காலத்தில் சென்னையின் பலபாகங்களிலும் விஷபேதியானது விசேஷமாய் வியாபித்திருந்தும் ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்சருகிலுள்ளவர்களை அந்நோய் பிடிக்காமலிருந்ததற்குக்காரணம் அவ்வாஸ்பத்திரிக்கருகில் விசேஷமாய் வேப்பமரங்களிருந்ததுவே காரணமென்று கூறுகிறார். ஆனால் இதன் விசேஷகுணத்தை அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே கண்டுபிடித்தவர்கள் இந்துக்களேயாவர். அதெப்படியெனில் வைசூரி, போட்டிருக்கும் வீடுகளின் முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் வேப்பிலையைத் தொங்கவிட்டுவைப்பதும் வேப்பிலையை மெத்தையைப்போற்பரப்பி அதன்மேல் நோயாளியை சயனித்துக்கொள்ளச் செய்வதும், வேப்பிலையை விசிறியைப்போல்விசிறி அதன்காற்றை நோயாளி சுவாசிக்கச்செய்வதும், வேப்பிலையை அரைத்து அம்மைத்தழும்புகளின் மேல் பூசிவைப்பதும் அறிந்தமையோ அறியாமையோ யோசித்துப்பார்க்கவும். இந்துக்கள் இப்போதும் கூட இதைக்கையாண்டு வருவதை அநேகர் அறிந்திருக்கலாம். இந்துக்கள் இவ்விலையை இப்படிச்செய்வதின் கருத்துயாதெனில் மஹாமாரி, விஷபேதிமுதலிய விஷக்கிருமிகளை வேப்பிலை நசிக்கச்செய்கிறதென்பதுவேயாம். இன்னும் இதைபற்றி 1867-ப் ௵த்திய மெட்ராஸ் மெடிகல் ஜர்னல் ஆவ்மெடிகல் சைன்ஸ் 11வது வால்யம் 105வது பக்கத்தில் டாக்டர், பழனியாண்டியவர்களால் சொல்லப்பட்டிருக்கிறதாவது, அசாத்தியமான பெரியம்மை ரோகங்களுக்கு, வேப்பங்கொழுந்துடன் சிறிது குண்டுமணிவேர்தூள் சேர்த்து 2·3 துளிஜலம் கூட்டி 5-கிரேன்ஸ் பிரமாணம் மாத்திரைசெய்து 14-பேர்களுக்குக் கொடுத்ததில் 13-பேர் சௌக்கியமடைந்தார்களென்பதுவேயாம். சிறிதுநாட்களுக்குமுன் தஞ்சையில் உயர்தர உத்தியோகம் வகிக்கும் ஓர் ஐரோப்பியருக்கு பெரியம்மை கண்டிருந்தபோது நமது இந்து சாஸ்திரத்தில் நம்பிக்கை வைத்து யாதொருமருந்தும் உட்கொள்ளாது வேப்பிலையை உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகித்துத் குணமடைந்தாரென்றால் இதைப்பற்றி அதிகம் எழுதுவானேன். ஆனால் மேனாடுகளில் இதன் அரிய சக்தியை சமீபகாலத்திலேயே கண்டுபிடித்து சாலைகளிலும், சோலைகளிலும் இம்மரத்தை விசேஷமாய்ப் பயிர்செய்ய ஆரம்பித்திருக்கிறதுடன் ஜ்வரம், முறைஜ்வரம், அதி



பித்தம், பலக்குறைவு, விஷபேதி, மகாமாரி, வைசூரி முதலிய ரோகங்களுக்கு இந்துக்களைப்போலவே இவர்களும் உபயோகிக்கமுற்பட்டு விட்டார்களென்று டாக்டர், George Watt, M. B. C. M. F. L. S. அவர்களால் இயற்றப்பட்டுள்ள Preliminary list of the Economic Products of India, என்னும் புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதனால் நாம் அறியவேண்டியது என்னவென்றால் தற்காலம் மேனாட்டார்கள் நவீனமாகக் கண்டுபிடித்ததாகச் சொல்லும் ஒவ்வொரு விஷயமும் நம்மவர்களால் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே கண்டுபிடிக்கப்பட்ட விஷமாயிருப்பது போலவே இவ்வேப்பமரமும் ஒன்றாயிருக்கிறது. ஆகையால் மனிதசமூகத்திற்கு இன்றியமையாத இவ்வரிய விருக்ஷத்தை ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் குடியிருப்பு வீடுகளுக்கருகில் பயிர் செய்து அதன் பலனை முற்றிலும் அடைவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

---

## வைகறைத்துயிலெழு.

"வைகறையாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதில்
தந்தையுந் தாயுந் தொழுதெழுக—என்பதே
முந்தையோர் கண்ட முறை."

நமது மூதாதைகள் நமக்காகச் சேமித்து வைத்துப்போன அறிவுத்திரட்டிலெல்லாம் வெகு முக்கியமானது பரிசுத்தநிலையின் அருமையையும் பெருமையையும் பற்றிய அறிவே மனத்தூய்மையைப்போலவே தேகத்தூய்மையையும் மிகவும் புகழ்ந்து பாராட்டிப் பேசியிருக்கின்றார்கள். இத்தூய்மைகளிரண்டும் மிக்கு நெருங்கிய சம்பந்த முடையவைகளென்பதும், இவைகள் மனோசலனங் குறைவுபட்டு இரம்மியம் மனதிற் குடிகொள்ளுந்தோறுமெவருக்குஞ் சித்திக்கக்கூடியதென்பதுவுமே, நம் நூல்கள் அனைத்தும் முறையிடுகின்ற உண்மை. மனத்தெளிவும் தேகமனோசுகங்களைப் பொருத்தது. ஆதலின் இவைகளைப் பயக்கக்கூடிய வழிகளே மிக்க மேம்பாடுடையன. எவராலும் ஒப்பத்தக்கன. இவ்வழிகள் அநேக முளவேயாயினும், அவற்றுட் பொருட் செலவும் சிரத்தைச் செலவும் ஏதுவும் இல்லாமல் நமக்குத் துணைபுரியக்கூடிய சாதனமாய் வைகறையிற்றுயிலெழுதலையாவது நாம் கைக்கொள்ளல் வேண்டும்.

சரீர சுகத்திற்கு நித்திரை இன்றியமையாதது. நித்திரையும் தேகநிலைமையையும் காலநிலைமையையும் பொருத்தது. பகலிற் றூங்குதல் வியாதிக்கிடமாகும். நித்திரையுஞ் சலனப்படும்

இரவு உறக்கத்தையுந் துறக்கச்செய்யும். அஃதேபோல் இரவில் ஆகாரமுட்கொண்டு ஒருமணி நேரத்திற்கெல்லாம் தானே கண்ணிமைகள் கனத்து மூடுவதையும், மனம் தன்னையறியாமலே அயர்வதையும் நாம் பன்முறையும் நம் அனுபவத்திற் கண்டிருக்கலாம். அதுவே சரியான காலமென வூகித்தறியவேண்டும். தேகமே இயற்கையின் ஒரு பாகமாகையால், இயற்கையானது தூண்டுமாறே நாம் அதனை இயக்குதல்வேண்டும். காலை நிலங்கீறும் வேளைவரவே, தானே தூக்கம் அகல, மனது கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னைப் பிணித்திருந்த நித்திரைக்கட்டு நெகிழத், தலைகாட்டிச் சுவதந்திரம்பெற ஆரம்பிக்கின்றது. அதுவே நித்திரைக்காலம்போய் விழிப்புக்காலம் வந்து விட்டதென்பதற்கோர் பெரிய அறிகுறி. அநேகர்—பொதுவாய் வேலையற்ற சோம்பேறிகள்—இத்தருணத் தினையோர்ந்தும் ஓராதார்போல் திறக்குங் கட்க படலங்களை இறுகமூடி, மனதைத்தானே தெளிவாகுங் காலத்தில் தெளிவுசெய்து கொள்ளாது, தம் சித்தந் தூண்டுமாறு, தம் படுக்கையில் அந்தமிக்கும் புரண்டும், தம் முளத்தில் தலையும் வாலுமில்லாத பல காரியங்களை அறைகுறையாய் நினைவுப்படுத்திப் பின் சடுதில் மறந்தும், சோம்பலென்னும் விஷத்தேனை மாந்தித் தேக்கிச் சுகமடைய எத்தனிக்கின்றார்கள். அந்தோ! மனமானது சதாவும் எதையாயினும் பற்றியே யிருக்குந்தன்மைத் தாதலால், ஒன்றையுஞ் செவ்வனே பற்றவொட்டாது. அதனை உழலச்செய்து, நாளடைவில் அம்மனத்தின் தீவிரத்தைக்கெடுத்துத் தம் தலையில் இங்ஙனம் மண்ணைவாரித் தாமே போட்டுக்கொள்ளுகிற விந்தைதானென்னே! காலையின் இரம்மியத்தையும், அது அளிக்கவல்ல மனோரதத்தையும் இவர்கள் சற்றேனும் அனுபவித்துச் சுகத்தை ஒருக்காலாயினும் பெற்றிருப்பரேல், இவர் இங்ஙனஞ் செய்யவும் ஒருப்படுவரோ?

“புத்தியதற்குப் பொருந்து தெளிவளிக்குஞ்
சுத்த நரம்பினற் றாய்மையுறும்—பித்தொழியுந்
தால்வழி வாதபித்தம் தத்தம் நிலைமன்றும்—அதி
காலைவிழிப் பின்குணத்தைக் காண்.”

என்னும் ஆன்றோர் வாக்கும் அனுபவ வாக்கன்றோ?

அடாடா! காலைப்பொழுதின் பெருமையை எங்ஙனம் உரைத்தல்கூடும்! எங்கும் நிசப்தம். எங்குமோங்காரம். பொங்கிடுங் கடலும் வாய்மூடும். புஷ்பமுஞ் சற்றே விரிவுறும். நறுமணந் தூக்கும். தென்றலும்—இளந்தென்றலும்—செவ்விதின், மந்தகாசமாய் வீசும். ஆகா! என்ன நற்காக்ஷி! எத்தனை உடுக்கள் இருப்பதும் மறைவதும்! ஏது இச்செவ்வான்! பக்ஷிகள் மெல்லத்தொனி செய்யும். பாடும் பறக்கும். ஆக்கள் கறையும்



அகிலமும் விழித்தது............ அந்தோ! இத்துணைப் பெருமை சாலுங் காலைப்பொழுதினைத் தேடியானந்தியாவர் ஜென்மமும் பாழேயாகும். பாந்தருட் குழந்தைப்பருவம் போன்று, இது பொழுதிற் குழந்தைப் பருவமன்றோ! இனிமையுஞ் சுகமும், இன்பமுங் கனிந்து, தாமே சுரக்குஞ் சமையம். களங்கமேயற்றுத் தீபவெண்பரப்பினை யொத்துக், கண்டதைக் கேட்டதைக் கவரும் வான்திறமை வாய்ந்து செறிவுறும் மனமும். ஐயோ! இதனையோ மறப்பது! இதனையோ ஒழிப்பது! மடமைதானென்னே!

இச்சுக மாத்திரமன்று. சாஸ்திரரீதியாக நோக்கினும் இக்காலையிலெழுதல் மிக்கு நன்மையைப் பயக்கு மென்பதில் ஐயமில்லை. ஜீரணக் கருவிகள் சுத்தியாதலும், இரத்த வோட்டங் கூடுதலும், மலஜலம் வெளிவந்து தேகஞ் சுகமடைதலும், நேத்திரங்கள் மூடியிருந்தன திறந்து மீண்டுங் குறையக்குறைய வெளிச்சத்திற் பழகுதலும், குரலினினிமை வாய்ந்தோடுதலும், வியர்வை ஒழிதலும்—இவ்வரிய காலைப்பொழுதிலேயேயன்றோ, விகாரமே தலையெடுக்காத வண்ணம், எதையும் இன்புறச்செய்யும் இவ்வேளையிலன்றோ—பாடகர் பழகுவதும், மாணவர் மனனஞ் செய்வதும்—பயன் பெறும்!

இவைகளையெல்லாம் மறந்து நித்திராதேவியை விடிந்தும் வருந்தியழைத்து அவளுக்கடிமைத் தொழில்புரியும் மாந்தரின் செயலை என்னென்று சொல்லலாம். காலவிரயமுஞ் செய்கின்றனரே. வாழ்நாளை வீண் நாளாக்கி மயங்குகின்றார்களே. அனுதினமும் காலை 7-மணிக்கு எழுந்திருப்பதற்குப் பதிலாக 5-மணிக்கு எழுவதாகக் கணக்கிட்டுப் பார்த்தாலும், வாழ்நாளானது ஆறிலொருபங்கு கூடுமென்பது தெரியரும். மேலும் பகல் முழுவதிலும், பல அவகாசக் குறைவுகளோடும், பல அசந்தர்ப்பங்கள் மத்தியிலும் தொடங்கிமுடிக்க இயலாத ஒரு கருமத்தை இவ்வதிகாலைப்பொழுதில்—எவ்வளவு சுருக்கத்திலும் எளிதிலும்—செய்து முடிக்கலாம்!

இவைகளை யறிந்துமோ, அறியாமலோ அநேகர் பெருந்தூக்கமென்னும் வியாதியிற் சிக்குண்டு நாளடைவில் நசிந்து கெடுகிறார்கள். இது மிகவும் பரிதபிக்கத்தக்கதேயாகும். அன்னோர்கள் இனியேனும் இயன்றவரை இத்துர் வழக்கத்தை ஒழிக்க முயல்வதே அறிவிற் கடுத்த விஷயம்.

“வருந்தினால் வராததொன்றுமில்லை.”

இன்னும் ஒருவிஷயமுண்டு. அதாவது, இவ்வெற்றியொருவருக்கு இலகுவிற் சித்திக்கவேண்டுமானால், சில தினங்களுக்கு,

நன்கு பழகும்வரையாகிலும், மிக்கக் காற்றோட்டமும் எவ்விதப் பக்க மறைவும் இல்லாததான இடத்தில், மிருதுவென்ற பெயருமறியாத சரசரப்புள்ள படுக்கை விரித்து, நித்திரைசெய்து வரவேண்டுமென்பது அநேக உயர்தர வைத்தியர்கள் கொள்கை இது உண்மையிற் பயனளிக்குமென்பதே எமது நம்பிக்கையும். ஆதலின் இதனை ஒவ்வொரு ஸ்திரீ புருஷரும் கைக்கொள்ள வேண்டிய தவசியமெனச் சொல்லாமலே தெரியவரும்.

மாதர் மனோரஞ்சனியில் மிஸ்டர், V. N. கல்யாணசுந்திரம் B.A.

---

## பொதினாவும் பெப்பர்மென்றும் ஒன்றல்ல பொதினா உற்பத்தியுறை பிசகு.

நாளது வருட வைத்தியபோதினி 8-வதுலக்க சஞ்சிகை 148-ம் பக்க முதல் சிலபக்கம் நிரவி பொதினா இலையுற்பவமுங் குணமுங் கூறியவியாசங் காணப்படுகிறது. அது ஆட்சேபனைக் குரியதாலதனை சங்கிரகமாய் ஆராய்வோம்.

வெல்லப்பாகேனும் அரிசிவடித்த கஞ்சியாலேனும் நனைக்கப்பட்ட வைக்கோற் கற்றை புரிகள் சிலநாள் வைத்திருந்தாலவைகளை ஈக்கள் மொய்த்துவிடும். ஈ தங்கிய வைக்கோலை பருவமான ஸ்தலத்தில் புதைத்து மண் தூவி ஜலம்பாச்சிவர பொதினா யுற்பத்தியாவதாக கூரப்பட்டன விசாரணைக்கு வரும்விஷயமெல்லாம் முண்மையாக நம்பி வெளியிடப்படாது, விஷயங்களை பன்முறை யாராய்ந்து பரீட்சை நிஸ்கரிசையான மேலுரைப்பதே நன்று சோதனைதேரியதும் கவரன்மென்று தாவர சாஸ்திரிக்கனுப்பி ஊர்ஜிதமானபின் வெளியிடுவது சாலவுஞ்சிறப்பு பின்பு யாரும் மருக்கமுடியாது. பொதினா நிருபநேயர் கூற்றோ பின் வரும் மாசங்கையையுண்டாக்குகிறது, அவைகளை பொதினா நேயர்போதிய காரணங்களுடன் கூறி வினாவுவாராகில் விடைகூறத்தடையிரா.

ஸ்தாவரசாஸ்திர கொள்கைப்படி புதினாவித்து உற்பத்தியாக்கும் வர்க்கசெடியாக சேர்க்கவில்லை வித்தில்லாவர்க்கங்களுக்கு வேர், தண்டு, கிளை, இலை, இதுகளிலேதேனும் மோர் அங்கத்தில் முளைக்கும் சக்தியுண்டு அவ்வாறு புதினாகிளைகளை பதித்து விர்த்தியாக்குஞ் செடியிலமைந்திருக்கின்றன கிளையாலுண்டாகுஞ்செடியில் வித்து எப்படியுண்டாகும் வித்தில்லாபுதினாவிரை ஈக்கள்கவருவதெவ்வாறு, வெல்லப்பாகாலமைந்த வைக்கலில் விரை சேர்ப்பதென்றால் நம்பமுடியாததே பொதினா நேயர் கூற்றுப்படி வித்துளவாகில். புட்பநிறம், புட்பவடிவங்கவமைப்பு



புட்பநிறம் வித்து உற்பத்தி வண்டினாலா, காற்றினாலா, புட்ப்புறவிதழ் அகவிதழ், ஆண்ணவயவம், பெண்ணவயவம், கெர்ப்பவரை, பட்டங்களுடன்கூறினால் வந்தனத்துடன் எற்று சாந்தமடையலாம், எப்படியும் வாஸ்தவம் தேசம்மரிய வேண்டுமென்றே கடைப்பிடி கொள்கைதானெனவைதெரியவேண்டாவா

கிருஷிசாஸ்திரிகள் வல்லமை அபாரம் அளவிட்டரிது முற்றிலுங் கூறுவதசாத்தியம் சிறு உதாரணங்காட்டி மேற்செல்வாம்.

பப்பாளிக்காய் (பப்பாய்மரம்) தேங்காய் பருமனுக்கதிகம் பார்த்ததில்லை அந்தக்காய்பூசணிக்காயளவு கனதியாக்கின்தாக தெரிவதாச்சரியமல்லவா! எலும்புத்தூளுஞ்சாம்பலுங்கலந்து 3கனஅடிமண் கொள்ளுந்தொட்டியில் மண்ணுடன்சேர்த்து 15-துளி டிஞ்சர்அயோடின் என்னும் மருந்து தெளித்து பப்பாளி விரை ஊன்றி ஜலம் வார்த்துவர 3-வாரத்தில் 8அங்குல உயரக்கன்றுண்டாகும். முன்போலவே எருவும் மருந்துஞ் சேர்த்த உரங்களை பூமியில் 6-கன அடி குளிவெட்டி வண்டல் மண்ணுடன் பரப்பி சிறிது மண்ணுள்ள வேருடன் கன்றைபரித்து நட 5-வாரத்தில் கணுக்கையளவு கனத்தில் தண்டுண்டாம். பின் பூமியிலிருந்து 6-அங்குல உயரத்தில் தண்டில் 1-அங்குல குளிவுண்டாகும்படி துவாரஞ்செய்து சிறு ரப்பர் குழாயிணைக்கப்படும். 1-புட்டியில் பாதி சீனிபோட்டு பாதி ஜலம்விட்டு நன்றாய்க்குலுக்கி ரப்பர் குழாயுடன் புட்டியைச் சேர்க்க வேண்டியது. 24-மணிநேரத்தில் புட்டிஜலம் பூராவும் மரம் உரிஞ்சிவிடும். 6-மாதத்தில் பூசணிக்காயளவு பருமன் காயுண்டாகி பழுத்துவிடுகிறதாம். வருடந்தோறும் மேற்கூரிய எருப்போட்டு அடிக்கடி ஜலம் பாச்சவேண்டும்.

இந்த பப்பாளிக்காய் பால்தான் வெஜிட்டெபில் பெப்ஸின் என்ற மருந்தாகிறது, சீரணம் விர்த்தியாக இங்கிலீஷ் வைத்தியர் உபயோகிக்கிறார்கள். இந்த மரப்பால் தொட்டு வலியுள்ள பல்லில் தடவ புண்ணாகி உடனே வலிநிற்கும். பருவுக்கு தடவ பரு மாறும், சீனியில் 2, 3-துளி பால் விட்டு சிறுவருக்குக் குடுக்க வயற்றிலிருக்கிற கிரிப்பூச்சியழிந்து வெளியாகும். வேகாததுவரம்புக்கு பப்பாளி இலை போட்டு வேககுளைந்து நன்றாய் வேகும். பப்பாளிக்காய் கறியாக சமைத்து உண்பது சீரணம் விர்த்தியாம். காயை நருக்கி ஜலத்தில் போட்டுவைக்க பால் காயினின்று பிரியும் கறியாக்க வசதியாம். பழத்துடன் சீனிசேர்த்து சாப்பிடலாம் சர்க்கரைப்பாகில் பழம்ஊரவைத்து உபயோகிக்கலாம். காய்உப்பிலிட்ட ஊருகாயாக்கலாம். இதன்முழுப்பயனை பங்காளவாசிகளவ்வளவு தென்னிந்தியாவில் ஆதரிப்பதில்லை. அங்கு மாமிசவுணவுடன் இலை காய் சேர்த்து சமைக்க மாமிசம் மிருதுவாயிருக்கிறதாகச் சொல்லப்படுது.

பப்பாளி புதிய பருவம்போன்று புதினாநிருபர்செய்து காட்டுவாராகில் புதினாவிரையுள்ள செடியாகலாம். அது வரைவித்துள்ளசெடியாக நம்பமுடியா, கரும்பு ஏகதேசமாய்ப்பூத்து விரையுண்டாகி செடியாவது போலமையக் கூடாதென்றாவிருக்கிறது?

புதினாவிரையிருந்தாலுமதை கவர்ந்துட்கொண்டு எச்சமிடும் வண்ணம் ஈயின் அங்கமமையவில்லை ஈ முற்பாகம் 2-துதிக்கை நீண்டுள்ளதல்லவா! அதுவே உதவும். வாயுமாமென்று சாஸ்திரக்கொள்கை அதனால் தேன்போன்ற ஜலவஸ்துவை நுகர்ந்து நக்கலாமே தவிர வேறு உதவிசெய்யவியலா, தேனீமாதிரி ஈயின்காலில் சுரசுரப்பாயில்லாததால் எதையுங்கௌவி சேர்த்தற்குமிடமில்லை. விரைபோன்றதெதையும் ஈ எடுக்கக்கூடாததினால் அவை புதினாவை விர்த்திசெய்யமுடியாது. ஆகில் பொதினா நேயர்கொள்கை ஆதாரமெங்கே, வித்தில்லாத சம்பிரதாயங் கீழும்மில்லை மேலும்மில்லை என்றவாறு ஈக்களால் புதினா பல்கமுடியாதென்றே சந்தேகமறக் கூறுவோம்.

புதுச்சேரி இராசாங்க தோட்டத்ததிபதி, வெல்லப்பாகு நனைத்த சாக்குமண்ணாக மாரினதை பூமியில்தூவி பொதினாவுற்பத்தி செய்ததாகவும் கூறப்பட்டன எந்தவிரையும் மண்ணாகமாரினது முளைத்ததில்லை. வேறு எந்தவிரையும் மண்ணாகமாரியவை முளைத்ததாக கிருஷிஸ்தாவர சாஸ்திரிகள் ரூபிக்கவுமில்லை. பிரகிருதபுதினாமட்டும் முளைத்ததாகக்கூறுவதை ஒப்பதக்கதன்று, பிரான்சு சித்திரத்தொழிலபிவிர்த்தியில் கீர்த்திவாய்ந்ததே, மேன்மையான கிருஷி முற்றினதாக பிரஸ்தாபமில்லை. அதன் ஆளுகைக்குள்பட்ட புதுச்சேரி முறையை மட்டும் எப்படி நம்பலாம். அமேரிக்கா ஐக்யமாகாணம், ஜெர்மன்தேசங் கிருஷி சிரேஷ்டமானது, அதன் கொள்கையாகில் சந்தேகமற ஏற்கக்கூடும்.

பெப்பர்மென்றாயில் எசன்சா பெப்பர்மென்று பொதினா இலைச்சாற்றில் தயாரிப்பதாக கூறுவதும் பெரும்பிசகு, பெப்ரமென்று செடி வேறாகவிருக்கிறது 2-தினிசையுந்தாவர சாஸ்திரிகள் ஒரேவகுப்பு செடியாய் வகுத்திருக்கிறார்கள். அங்கவமைதியிலொன்றாக வகுத்தாலும் மருந்துக்குணம் வெவ்வேறாக வமைந்துள்ளன. மதராஸ் தேனாம்பேட்டை அக்ரி ஆர்டிகல் சுரள்என்ற கம்பேனித் தோட்டத்தில் பெப்ரமென்று செடி விர்த்தியாய்க் கொண்டிருக்கின்றன, தேவையானவர்கள் அந்தத் தோட்ட சூப்பிரன்டென்றுக்கெழுதி வருத்திக்கொள்ளலாம்.

பொதினாவினுபயோகம் மறுக்கவொண்ணா சிரேஷ்டமானது சமயம் நேர்ந்துழி பின்பு வைத்தியமுறை பேசுவோம்.

அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.



என்ற நாயனார்வாக்குப்பிரகாரம் தன்போலொற்ற மனிதசீவன்களிடம் அன்பு பாவிக்கவேண்டுமென்றும்.

பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.

என்ற முதுமொழிப்பிரகாரந் தான் அனுபவிக்கும் வைத்திய இன்பம் எல்லாவுயிர்களும் அனுசரித்து வாழவேண்டுமென்ற பேருபகாரக்கருயால் வைத்தியபோதினி ஆசிரியரால் வைத்தியமுறை வெளியிடப்படுகிறது. ஆசிரியர் கொண்ட தருமநியதியரியாமல் கிருஷி, வாணிபம், ஞானம், தொழிற்பயிற்சி முதலிய பலநிருபம் வெளியாய்க்கொண்டிருக்கின்றன. நிருபநேயர்பாலுள்ள அன்பின் மிகுதியால்வரும் நிருபங்கள் பிரசுரமாகிறது.

ஆசிரியர் கருணாசாகர மலிந்தளவிடாத தாயினுமதை யானந்திப்பதுக்கும் ஓர் வரையரைவேண்டும். கரும்பு ருசியென்று வேரோடுண்பார்களா, பத்திரிகையோ மிகச்சிறிது அதில்பலவிஷயமும் நிரப்பிவிடின் ஆசிரியர்கொண்ட தருமசிந்தனை எவ்வாறு நிறைவேறும், நிருபநேயர்களே நன்றாய் ஆலோசியுங்கள், வைத்தியமுறைமட்டும் விளம்புவது சாலவும்சிறப்பு. அவரவர்கள் நித்யபடித்தரவனுபோகத்தில் எவ்வளவோ வைத்தியம் நடக்கிறது, அதுக்களை கூறுவதுகூட தேசத்துக்கு அபாரக்ஷேமமுண்டாகும், எவ்வளவோ அருமையான சுதேசவைத்தியமுறை பிரருக்குரைத்து விடப்படாதென்று மரைந்தொழிந்தது கணக்குண்டா எண்ணிலடங்காவே! நாகரீகமலிந்த இக்காலத்தில் தெரிந்ததை வெளியிட்டால் அதிலுள்ள குணதோஷம் மற்றவர்களால் எடுத்துக்காட்டவும் மேன்மையான முறையேற்படும் தேசக்ஷேமமுந்தனக்குத்தானே விர்த்தியாகுமே.

அதிக சந்தாவுள்ள பேபர்யாவராலும் வாங்கமுடியுமா! ஆகவே குறைந்தசந்தாவுடைய நமது போதினியில் தங்கள் தங்கள் அபிப்பிராயம் தெரிவிக்க கூடாதா வென்று நேயர்கள் வினாவக்கூடும். குறைந்த சந்தாவுள்ள மற்றவர்த்தமான பேப்பர்களில் கூறலாமன்றோ, பின்னும் நிருபங்களை ஏற்பதில் சந்தாதாரல்லாதவர்களிடம் பிரியமாயும் சந்தோஷமாயும் பெரிய பெரியஎல்லா பத்திரிகாசிரியர்களும் அங்கீகரிக்கிறார்கள். அன்னார் வேண்டியதெல்லாம் சமாசாரம் மின்பமாய் இருக்கவேண்டியதே, நிருபர்களோ சந்தாவீந்து பத்திரிகை பெறுவோரிடம் பேப்பர் வாங்கி ஆனந்திக்கலாம்.

இவ்வளவு தூரம் பேசும் நிருபர்மட்டும் பொதினாமறுப்புக்கூற ஏனா நியாயமென்று வினாவக்கூடும், கிருஷி சாஸ்திரத்துக்கு கிருமிபாதையுண்டாயிற்றென்ற தொப்பவே விபசாயம்மாறான நிருபந்தோன்றினதால் அதன் உண்மை கூறியதேதவிரவேறொன்று, அதிலுங்கூட வைத்தியக்

கொள்கையை மிகுதியுந்தழுவியே கூறப்பட்டன. இதன் பின்போ வைத்தியவிஷயம் தவிர வேறுவிஷயம் பிரஸ்தாபிப்பதாக சிந்தனையில்லை. நிருபநேயர்களே வந்தனம் அவ்வாறேமற்ற நிருபர்களும் வைத்தியமே பேசுங்கள், தயைபுரியுங்கள் கனவான்களேமறுமுறை சந்திக்கும் போது சம்பாஷித்து ஆனந்தங்கொள்வோம், அப்போதத்தம் அபிப்பிராயம் வெளியாகுமல்லவா.

வே. ப. திருமலையப்ப முதலியார்,
இளம் வெள்ளக்கால், திருநெல்வேலி ஜில்லா.

---

## சுகாதாரவிதிகள்.

ஆல்சென் என்பவரால் தேகசுகத்தைப்பற்றிய சிலவிதிகள் எழுதியிருப்பதை அடியில் வருமாறு எழுதுகிறேன். அவைகளாவன (1) சுத்தமுள்ளவர்களாயிருக்கவேண்டும். (2) உணவுபானாதிகளில் மிதமுள்ளவர்களாயிருக்கவேண்டும். (3) வெயில் காற்று மழை முதலியவற்றில் தேகத்தை அதிகமாக வெளிப்படுத்தக்கூடாது. (4 எப்போதும் வேலையுள்ளவர்களாயிருக்க வேண்டும். (5) இரவை மனைவிமக்களுடன் வீட்டிற் கழிக்க வேண்டும்.

(1) சுத்தமுள்ளவர்களாயிருக்கவேண்டும். தேகசுகத்துக்கு சுசியென்பது முக்கிய காரணம். சுசியில்லாத எவனும் பலவானென்று பேர்பெறமுடியாது. ஆனபடியினாலே வேலைசெய்யும் உழைப்பாளிதான், தக்கபலத்தோடுகூடி வேலைகளைச் சரிவரச் செய்துவரவேண்டுமானால் தன் உடம்பைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும் என்பது நாம் சொல்லவேண்டுவதில்லை தன் கை கால் உடம்பு உடை முதலியவற்றில் அழுக்குப்படியாமலிருக்கமுடியாதவனாகிய உழைப்பாளியானவன், அதிர்ஷ்டவசத்தால் வேலைசெய்யாமல் உட்கார்ந்த இடம்விட்டுப்பெயராமல் ஜீவனோபாயம் பெற்றிருக்கும் உயர்தரத்தாரைப்போல் எவ்விதம் சுத்தமாயிருக்கும் வழிகளைத்தேடமுடியுமென்று சிலர் ஆட்சேபிக்கலாம். ஆனால் நெற்றிவேர்வை நிலத்தில்விழ வேலைசெய்து ஜீவிக்கும் உழைப்பாளி உட்கார்ந்தபடியே சம்பாதித்து ஜீவிக்கும் பாக்கியவான்களைவிடத் தன் உடம்பையும் உட்கருவிகளையும் சுத்தமாக வைத்திருக்கிறானென்றே நாம் சொல்லவேண்டும். பாக்கியவான்களோ இருந்தபடியே இருந்து தங்கள் உடம்பிலுள்ள உட்கருவிகளிலும் அசுத்தம் நிறைந்து தங்குவதனாலே பலவிதமான நோய்களுக்கிருப்பிடமாக விளங்குகிறார்கள். மனிதனுடைய உள் அசுத்தங்களை அவ்வப்போது வெளிப்படுத்தப்



போதுமான அளவு வேர்வை இவர்களிடத்திலே உண்டாகின்றதில்லை. ஆகையினாலே உள்ளே உற்பத்தியாகும் அசுத்தவஸ்துக்கள் அவ்வப்போதே வெளியில் தள்ளப்படாமல் அங்கங்கே அவயவங்களினுட் தங்கிக்கெட ஆரம்பித்து தேகத்திற்குக் கெடுதிவிளைகின்றன. ஆகையினாலே இப்பேர்ப்பட்டவர்கள் பலமுறை வெளியே ஸ்நானஞ் செய்தபோதிலும் உள்ளே அசுத்தமுடையவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் உழைப்பாளியோவென்றால் தன்தேக உழைப்பினாலே தினந்தோறும் ஜீவிப்பவனாதலால் அபரிமிதமான வேர்வையை வெளிப்படுத்தியும் ஆழ்ந்த சுவாசங்களினால் நெஞ்சு முதலியவற்றை உரப்படுத்தியும் இன்னும் பலவிதத்திலும் தேகயந்திரத்தைச்சரியான நிலமையில் வைத்திருக்கிறான்.

ஆனாலவன் கவனிக்கவேண்டியதொன்றுள்ளது தன்உழைப்பினாலே அசுத்தங்களை வெளிப்படுத்தப்பட்ட அவ்வசுத்த வஸ்துக்கள் வெளியேவந்து தோலின் மேற்பக்கத்தே தங்கி வேர்வைக்குழாய்களை அடைத்து மேலும் வேர்வைத்தன்மைக்குகெடுதிவிளைவிக்காதபடி அவற்றை அப்போதைக்கப்போதே அகற்றும்படியாகத் தினந்தோறும் ஸ்நானம் செய்தல்வேண்டும். இது தொழிலாளிக்கு அத்யாவசியம், அல்லாமலும் நன்றாக ஸ்நானம்செய்துவிட்டு சுத்தமான உடையணிந்துக் கொள்வதே தேகத்திற்கும் மனத்திற்கும் ஆச்சரியகரமான உற்சாகத்தையும், அமைதியையும் அளிக்கின்றன (ஸ்நானத்துக்கு குளிர்ந்த ஜலமேதக்கதென்று வைத்தியநிபுணர்களின் அபிப்பிராயம்) வேறு ஒன்றுக்குமில்லாவிட்டாலும் இந்த ஒரு காரியத்திற்காகவாயினும் தொழிலசாலையில் விடுவந்ததும் ஸ்நானம் செய்துவிட்டு சுத்தமான உடைகளையணிந்துகொள்ளவேண்டும். இவ்விதம் ஒருவன் செய்துவருவானானால் இதன் பிறகு உட்கொள்ளும் இராப்போஜனத்தின் மீது பசியும் ருசியும் விருப்பமும் அவனுக்கெவ்வளவாக அதிகரிக்கின்றது. பெண்டுபிள்ளைகள் அக்காலத்தே உடனிருந்தனுபவிக்கும் இன்பமானது எவ்வளவு சுகத்திற்கும் இன்பத்திற்கும் காரணமாகின்றது பாருங்கள் ஒருகுடும்பத்தின்வாழ்நாள்கள் சுகமும் இன்பமும் பொருந்தியனவாக இருக்கவேண்டுமென்றால், சுத்தமாக இருக்கவேண்டுவதவசியம் என்பதுண்மையே.

உழைப்பாளிகள் பல்துலக்கல் என்பதுபோன்ற சிறு கருமங்களையும் செவ்வையாகக் கவனித்து வருதல்வேண்டும். ஜீரணசக்திசரியாய் இருக்கவேண்டுமென்றால் பற்கள் சரியான நிலமையிலிருக்கவேண்டியதவசியம், ஆகையினாலே பற்கொம்பு போட்டுத்தந்தங்களைக் காலைமாலை இருநேரங்களிலும் நன்றாகச்சுத்தி

செய்தவரின் அவைகள் நல்லஸ்திதியிலிருந்துவரும். கைகளையும் தினந்தோறும் தொழில் முடிந்தவுடன் நன்றாகச் சுத்திசெய்து வந்தால் அவை அழகான நிலைமையிலே இருக்கும், மேலே குறிப்பிட்டவைபோன்ற சிறு விஷயங்களையும் கவனித்து நடத்தல் தொழிலாளிக்கு மிகவும் சுகத்தையும் க்ஷேமத்தையும் விளைவிப்பதாயிருக்குமென்பதில் ஆக்ஷேபமில்லை. (இன்னும்வரும்)

பூ. ப. செல்லக்குமாரகவுண்டர்,
கணக்கன்பட்டி.

---

## ஆலயங்கள்.

நீர்வளம், நிலவளச்சிறப்புற்றோங்கிய இப்பரதகண்டத்தில் ஒவ்வொரு கிராமத்தாரும், தமது ஊரில் ஒரு ஆலயத்தைத் தமது சக்திக்கேற்றபடி கட்டி வைத்திருக்கிறார்கள். அக்கட்டடங்களில் கடவுள் வசிக்கும் பிரமாணத்தால் அவைகளை கோவில்கள் (கோ-கடவுள். இல்-வீடு) என நாமதேயமளித்திருக்கின்றார்கள். அண்ட சராசரங்களில் எள்ளுக்குள் எண்ணெய்போல் வீற்றிருக்கும் அந்தர்யாமிக்கு ஒரு அகம் ஏற்படுத்தி வைப்பது, சுத்தப்பிசகென்று கரதலாமலகம்போல விளங்கினும், அவரை உருவபயமாய்க் கண்டு தரிசித்தால்தான், நாம் போன்ற பேதையர்களுக்கு பக்தி உண்டாகும். ஒவ்வொருவர் மனதிலும், ஈசன் குடிகொண்டிருக்கிறார். அவரை அகக்கண்ணால் ஏன் உணரலாகாது எனப்பலர் பகருவர். அப்படி செய்வதற்கு, இல்லறம் பூண்டொழுகும் நம்மவர்களுக்கு ஐம்பொறிகளையும் அடக்கி ஆளுந்தன்மை கிடையாது. இக்காரணம் பற்றியே அநேக முனிசிரேஷ்டர்கள் சகலப்பற்றையுந் துறந்து நிசப்தமானக் கனஞ்சென்று, புறக்கண்ணை மூடி எங்கும் நிறைகின்ற பராபரத்தைக் காண்கின்றார்கள்.

ஆகையால் உலகப்பற்றினின்றும் நீங்காத மன்பதைகளுக்கு, உருவவிக்கிரகம் பொருந்திய ஆலயம் அத்யாவசியமே. துக்கசாகரத்தில் மூழ்கிக்கிடக்கும் நாம் இகபரசாதனங்களைப் பெறவிரும்பின், ஒழிந்தவேளையில் கோவில்சென்று ஈசனைக்கை கூப்பி வரவேண்டும். இல்லறமே நல்லறமென்று உணர்ந்த தெய்வப்புலமை திருவள்ளுவனார் சகோதரியான ஔவையும் "ஆலயந் தொழுவது சாலவுநன்று" என்று கூறியதை முற்றிலும் அநுசரிக்கவேண்டும்.

சகல மதங்களிலும் முதன்மையாகப் பூர்வகாலத்தில் பிரக்யாதி பெற்றது இந்து மதமேயன்றிவேறல்ல. இம்மதத்தின் கொள்கைகளையே இதரமதஸ்தரும் கையாடி வருகிறார்கள். இம்



மதஸ்தர்கள் கடவுளுக் கிருப்பிடமமைத்திருப்பது போலவே பிறரும் அமைத்து வெவ்வேறு பெயர் தந்திருக்கிறார்கள். இந்துக்கள் கோவிலை, ஈசனுக் கிருப்பிடமாகச் சொல்லுவர். மற்றவர்கள் அதைக்கடவுளை நினைசுருப்படியான பரிசுத்தமான இடமெனப் பகருவர்

தென் இந்தியாவில், விக்கிரகமுடைப்பவர்களான முகம்மதியர்கள், விசேஷமாய் படையெடுக்காதபடியால், வட இந்தியாவைவிட, இவ்விடத்தில் எண்ணிறந்த பிரயாண்டமான கோவில்களிருக்கின்றன. நந்தேயம் தென்தேயமாகையால் இவ்விடத்திலுள்ள ஆலயங்களின் பரிபாலனங்களைச் சற்றுவரையலானேன்.

திரிமூர்த்திகளில் பிரமனுக்குத் தனியானகோவில் கிடையாதாகையால், சந்நிதானங்களை, மற்றத் துவிதமூர்த்திகளுக்கும் அவர்கள் குடும்பஸ்தர்களுக்கும் கட்டிவைத்திருக்கிறார்கள். சாதாரணமாய் ஒவ்வொரு கோவிலுக்கும் மானியங்களோ அல்லது ரொக்கக்கையிருப்போ விருக்கின்றன. இவையுமின்றி சர்க்காரும் கொஞ்சம் பொருளுதவி செய்து வருகிறார்கள். வரவுக்கேற்றசெலவு செய்யும் பொருட்டு ஒவ்வொரு ஆதீனத்திற்குஞ் சிலகாரியஸ்தர்கள் தர்மகர்த்தர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் பலர், சாமிகாரியங்களைச்சரிவர நடத்திவருகிறார்கள். சிலர், வேலிபயிரைமேய்வது போலவே கோவில் சொத்தையே வேலையாக்கி விடுகிறார்கள் அரசன் அன்றுசொல்லும், தெய்வம் நின்றுகொல்லும் என்னும் வாங்கியத்திற்கிணங்க, பிறகு அவர்கள் பலாபலன்களை உப்புதின்றவன் தண்ணீரருந்துவதுபோல் அநுபவிக்கிறார்கள்

தெய்வந்தொழுவது போல் தொழும் சகலரும் போலிவைஷ்ணவரும் சைவருமேயன்றி, உண்மையான பக்தர்களைக் காண்பது அத்திப்பூவைக் காண்பதுபோலாகும். ஆலயஞ்செல்பவர் பலரும் முறுக்கு மீசையரும் கிருக்கு சடாயரும் ஊசிப்பொட்டருமன்றி உண்மையான மதாசார குலாச்சாரப்படி சென்று வணங்குவர் சிலரே. ஸ்திரீகளும் பிறர்நகைகளையாகிலும் இரவல் வாங்கி, பாதாதி கேசபரியந்தம், ஒட்டைக்கேற்றுவது போல் ஏற்றிக்கொண்டு வண்டியிலேறிச் செல்வர். சிலகள்வர், விபூதி உருத்திராக்ஷ மணிந்து அவ்விடஞ்சென்று எனக்கு இன்று திருடவழிகாட்டும் ஜெகதீசா வென்று, உள்ளத்திற்குள் நினைத்து வணங்குவர். அவர்களுக்கும் துணை இருப்பான் அநாதைரக்ஷகன்.

திருப்பதி முதலிய சந்நிதிகளுக்குச் செல்லும் ஜனங்கள் பிரார்த்தனைக்காக வெள்ளியிலேயோ பொன்னிலேயோ செய்த வஸ்துக்களை சாமி கைங்கரியமாகச் செலுத்துவார்கள். சகல

மும் அவருடைய சொத்துகள். அவற்றை ஜனங்களுக்கு செய்யாமல் செய்த உதவிபோல் கொடுத்தார். இவர்கள், தாங்கள் நன்றியறிதல் உள்ளவர்கள் எனக் காண்பிக்கும் பொருட்டு அவைகளைத்திருப்பி பகவானுக்குக் கொடுக்கிறார்கள். சிலர், உன்னைத்தரிசித்ததற்கடையாளம் எமக்கு அழகு வேண்டியதில்லை யென்று பொட்டையடித்துக்கொண்டு கோலுங்குடுவையுங் காங்கொண்டு கும்பலில் கோவிந்தாவென்று பகவந்நாமசங்கீர்த்தனஞ் செய்கிறார்கள். சந்நிதானங்களிலுள்ள ஸ்தானிகர்களோ வாணி ஆசைகோணி கொள்ளாது எனப் பணம்பித்து பிடித்தவர்கள், எதைக் கண்டாலுந் தக்ஷணையென்கிறார்கள் சாமிதரிசனங் கூட தக்ஷணை யில்லாமல்முடியாது. ஒருகாசு கூடக் கையில் இல்லாதகோவணாண்டிக்கு தரிசனங் கொடுக்காத சாமி மற்றவர்களுக்குக் கொடுத்தென்னபயன் இது மூலவரின் பாரபக்ஷமன்று. ஆளுக்கேற்ற வேஷம் போடும் குருக்களின் கொடுங்கோன் முறைமையே.

இப்பேர்பட்ட துர்க்குணங்களினால் இம்மதம் பிறதேசங்களில் பரவப்பட்டு பிறரால் நன்கு மதிக்கப்படவில்லை. இக்கற்ற பறையர்களை ஆலயங்களில் சேர்க்காமல் கைவிட்டபடியால் அவர்களும் பிறமதத்திற்கு இரையானார்கள் அவர்கள் நீசர்களென்று நம்மவர் சொல்லுவார்கள், நீசகுலத்தில் பிறந்து வளர்ந்த திருவள்ளுவ நாயனாரின் குறள் தமிழ் வேதமாக வில்லையா? குப்பையில் கிடந்தாலும் குன்றுமணியின் நிறங் கெடுமோ. நத்தை வயிற்றிலும் முத்து பிறக்குமல்லவா, சிதம்பரங்கோவிலில் சேர்க்கப்படாத நந்தனாரும் சிவகடாக்ஷம் பெற்று முத்தியடையவில்லையா.

ஆனால் கோவிலுக்குள் சென்று கடவுளைத்தியானிக்க அகச்சுத்தி இன்றியமையாததே யொழிய புறச்சுத்தி அநாவசியம். இரண்டுமிருந்தால் பொன்மலர்நாற்றமுடைத்து என்பதற்கொப்பாகும். பிறவிக்கடலைத் தாண்டுவதற்கு பக்திதான் ஒரு தெப்பமாகிறது. வீண்டம்பத்தைக்காட்டிலும் பக்திதான் பிரதானம். மகம்மதியனான கபீரும் விஷ்ணுத்தியானம் பெற்று கபீர்தாசாரகவில்லையா. நம்முடைய மதம் பரவவேண்டுமானால், பிறமதஸ்தர்கள் இம்மதத்தை விரும்பினால் அவர்களை நமது கோவில்களில் சேர்த்து நம்மவர்களாகக் கருதவேண்டும். இதைதப்பாய் யென்று அன்னியமதங்களை அநுசரிக்கிறவர்களை தக்கபோதனைகளால் தடுக்கவேண்டும். இஃது விழலுக்கிறைத்த நீராகப் போகாமல் பயன் படுமென்று நம்பிமுடிக்கலாயினேன்.

ஸ்ரீமதி. **S. H. D.** மனோரஞ்சிதம்.

உ

# வைத்திய போதினி.

சித்திரப்படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான
ஓர் மாதாந்தத் தமிழ்பத்திரிகை.

புத் 2. { **1911**-நவம்பர்மீ } நெ. **11**.

## வாழைப் பழத்திலிருந்து சாராயம்.

திராக்ஷைரஸத்திலிருந்து சாராயமெடுப்பது, பின்னும் அநேக விதமான பழங்களிலிருந்து சாராயமெடுத்து மனுஷசமூகம் உபயோகப்படுத்துவது சகலரும் அறிந்ததே. புதிதாய் வாழைப்பழங்களிலிருந்தும் மதுபானம் செய்பவர்களுபயோகப்படுத்துமாறு மதுரஸம் எடுப்பதாக இப்போது அறியக் கிடைக்கின்றது. வாழைமரங்கள் ஏராளமாய்ப் பயிராகிப் பழங்கள் அபரிதமாய் ஏற்றுமதி செய்யப்படுகிற தேசங்களில், ஏற்றுமதிக்கு லாயக்கில்லையென்று எண்ணிறந்த பழங்களின் தொகுதி ஏற்றப்படாமல் தள்ளப்படுகின்றன. இப்பழங்கள் கவனிப்பாரின்றியும் கேட்போரின்றியும் வீணாகக் கிடக்கின்றன. இவ்வாழை மரங்கள் ஏராளமாய் நம் நாட்டில் தஞ்சைஜில்லா முதலியவைகளில் ஏராளமாய் பயிரிட்டாலும் ஜமைக்கா. காட்டிமாலா (Jamaica—Gautemala) முதலான விடங்களில் வியாபாரம் செய்வதற்கென்றே இப்பயிர் விசேஷமாகச் செய்யப்படுகின்றது. இப்பயிரிலுண்டாகிய விளைபொருள்களாகிய பழங்களில், ஏற்றுமதிக்கு லாயக்கில்லாமல் 100-க்கு 20 பங்குவீதம் வீணாகப் போகின்றன வெனக்கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது வருஷவாரியில் பத்து இலட்சம் தார்கள் (Bunches of Bannanas) வீணாகப்போகின்றனவாம். இப்படி வீணாகப்போவதை என்செய்வது? நம்நாட்டவர் என்றால் வீணாகப்போவதை செலவுக்கணக்கில் வைத்து இளித்தவாய்த்தனமாய் வந்தமட்டும் போதுமென்ற மனத்துடன் இலாப நஷ்டங்களுக்கும் தலையைக் கொடுத்துக்கொண்டு நிற்பார்கள். மேனாட்டினர் நம்மவர்போலல்

லாது விஷயங்களில் கண்ணுயிருந்து காரியசாதனம் செய்பவர்களாதலின் வீணாய் எறியப்படும் அப்பத்து லட்சம் குலைகள் அல்லது தார்களை செவ்வைசாக உபயோகப் படுத்துவதெவ்வாறு என்று ஆராய்வாராயினர். கீழேவீழ்த்தப்பட்ட மரங்களிலிருந்து பக்குவமாய் நார் எடுத்து வஸ்திரம் நெய்ய சொல்ப சாதனங்களும் அவகாசமும் இலாபமுமிருந்துங்கூடக் கண் விழித்து அதில் தம் கவனம் சிறிதும் செலுத்தாத நம்மிந்திய நாட்டினர் போலில்லாமல் அழுகிப்போகும் அந்தஸ்தில் வேற்று நாட்டிற்கனுப்ப யோக்கியதையில்லாத அப்பத்து லக்ஷத்தார்களை நன்கு பயன்படுத்த நாலாவழிகளையும் ஆராய் வாராயினர். அதனாலும் இலாபம் எடுப்பது எவ்வாறு என்று தக்க நிபுணர்கள் கைத்தொழில் புத்திதெரிந்த யுக்திசாலிகள் இக்காரியத்தில் தம் கவனத்தை அதிகமாகச்செலுத்தினர்கள். இவ்வழிகளில் இவ்வாழைக்காய்களையும், பழங்களையும் பக்குவமாய்க் காயவைத்தாலும், அவை சொற்பநாளைக்கும் குறிப்பிட்ட நெடுநாட்கள்வரையும் பாதுகாக்கும் வழிகள் முதலியவற்றைக்கண்டு பிடித்தார்கள். இவ்வாழைக்காய்களைக் காயவைத்து பில்லை பில்லையாக நறுக்கிக் காய்ந்ததிலிருந்து மாவுஅறைத்தல் முதலான பலகைத்தொழில்களை நன்கு அறிந்து அதன்படியே செய்தார்கள். இப்படிப்பல காரியங்கள் அவர்கள் செய்ததிலிருந்து அவர்கள் தாம் எதிர்பார்த்த இலாபத்தை அடைந்தாரிலராகவே வேறுவகையாக்கிப் பத்து லக்ஷபழங்களை யுபயோகித்துப் பயன்பெற மேலும் மேலும் வழிகள் பல ஆராய்வாராயினர். காடிமாலா ஸென்டரல் அக்ரிகல்ச்சரல் (Gautemala Central Agricultural Association) மூலமாய் பூர்ட்டோ பாரலாஸ் டிஸ்டில்ரிடைரக்டருடன் (Director, Distillery at Puerto Barralos, Gautetmala) ரஸாயன முறையில் அப்பழங்களை உபயோகித்துப் பார்த்ததில் விஸ்கி (Whisky) என்ற சாராயத்திற்கு சற்றேறக்குறைய சமமுள்ளதாயிருக்கும்படியான மதுஸாரம் அகப்படும் படியாயிருந்தது. அம்மாதிரியான வீணாய்ப்போகிற வாழைப்பழத்திலிருந்து எடுக்கப்பட்ட மதுஸாரம், ஸேண்டு லூயி (St. Louis Exhibition) பொருட்காட்சி சாலைக்குப் போயிற்று யுனைடட் ஸ்டேட்ஸ் டிபார்ட்மெண்ட் (United States Department of Agriculture) ஆப் அகரிகல்ச்சர், நன்றாகப் பிரித்துப் பரிசோதித்துப் பார்த்தார்கள். இந்த ரஸம் நிரம்ப யோக்கிய முள்ளதென்று யோக்யதாபத்திரம் கொடுத்ததுடன் நில்லாமல் இவ்விரஸத்திற் கொருதங்கப் பதக்கமும் (Awarded a Gold Medal) பரிசளித்தார்கள். ஒருதார் பழத்திலிருந்து 4½-லிட்டர் (4½-Litres) அல்லது ஒரு காலன் மதுஸாரம் எடுக்கக்கூடுமென்று கணக்கெடுக்கப் பட்டிருக்



கிறது. இதனை யெடுக்கச்செலவாகும் கூலி நிரம்பவும் சொற்பமேயாகுமென்று சொன்னால் யந்திர உதவியினால் இந்தியாவில் எடுக்க இன்னும் சொற்பகூலியே பிடிக்கக்கூடும் என்னும் விஷயம வற்புறுத்திச் சொல்லவேண்டுவதில்லை. இம்மதுஸாரம் எடுப்பதற்காகவே இரண்டு வருஷகாலம் பரிசோதனார்த்தமாக இவ்வாழையைப் பயிரிட்டுப் பார்த்ததில் அதிக லாபம் வரக்கூடியதாக இருக்கக்கூடுமென்று சொல்லப்படுகிறது. கீழே வீழ்த்தப்படுகிற வாழையை நன்றாகப் பயன்படுத்த மனங்கொள்ளாமல் சோம்பேறிகளாயிருக்கிற நமது தென்னிந்திய வாசிகள் போன்றவர்கள், இப்பழங்களிலிருந்து மேனாட்டினர்போல் மதுஸாரமா எடுக்கப்போகிறார்கள்? இப்படியெல்லாம் கைதொழிலூக்கம் நம்நாட்டில் பிரபலித்துவிட ஆரம்பமாய்விட்டால் பிறகு நமக்கென்ன குறைச்சல்!

## தேகவலிமை.

என்ன காரணத்தாலோ நாளுக்குநாள் நம்மவர்கள் தேகபலம் குன்றி க்ஷீணித்துக்கொண்டு வருகிறார்கள். ஒருதேசம் எவ்வளவு சம்பத்துள்ள பூமியாயிருந்தபோதிலும் என்ன பிரயோஜனம்? அந்த சம்பத்தை யநுபவிப்பதற்குப் போதுமான தேகபலமும் ஆரோக்கிய வாழ்க்கையும் இல்லாதவிடத்தில் அது என்ன பயனைத் தரப்போகிறது? நமது தேசத்துக்கு இனி நேரவிருக்கும் பெரிய விபத்துகளுள் இதுவொன்று. ஒருமுப்பது வருஷங்களைத் தள்ளிப்பார்த்தால் அப்போதிருந்தவர்களின் தேகதிடத்திற்கும் இப்போதுள்ளவர்கள் தேகதிடத்திற்கும இருக்கும் பேதம் நன்கு விளங்கும்.

முதலாவதாக நம்மவர்கள் தேகப்பயிற்சி செய்வதையே முற்றும் ஒழித்துவிட்டார்கள். நாகரீகம் நாகரீகமென்று ஓயாமற் பேசிக்கொள்ளும் மிந்நாட்களில் பந்து விளையாட்டுகள் தேகாப்பியாசமுயற்சிகளிலே ஒன்றாக மதிக்கப்படுகிறது. பிராசீன காலத்தார் தேகப்பயிற்சிக்கென்று தனியாக ஒரு காலத்தைக் குறிப்பிட்டுவைக்கவில்லை. ஜனசமூக வாழ்க்கைக்கு அவசியகாரமாயுள்ளவைகளனைத்தையும் மதசம்பந்தமான முயற்சிகளிலே கலந்துவிட்டிருக்கின்றார்கள். பிராதக்காலத்தில் நான்குமணி நேரத்திற்கு எழுந்து ஆறு குளங்கள் நோக்கி நடந்து துணிகளை நன்றாகத் தோய்த்து ஸ்நானம் செய்து தீர்த்தமெடுத்துக்கொண்டு இல்லம்புகுந்து தேவதா பூஜைமுதலியன முடித்துப் புராண படனம்செய்து, பின்பு வெளிவிஷயங்களைக் கவனிக்கும்படி நியமித்திருக்கிறார்கள். இதனிலும் சிறந்த தேகப்பயிற்சி என்ன விருக்கிறது? மாலைநேரத்திலே சந்தியாவந்தனக் கிரியைகளும், ஆலயதரிசனமும் குறுக்கிடுகின்றன. காலை மாலை இரு

நேரங்களிலும் தேகப்பயிற்சியை நம்மையறியாமலே நாம்நடத்தி வருகிறோம். இதிலே யாதொரு அட்டகாசமுமில்லை? ஆரவாரமுங்காணோம். முற்காலங்களில் இரண்டணா தக்ஷிணைக்காகப் பத்து மைல்தூரம்கூடப் பிராமணன் நடந்துபோயிருக்கிறான். இப்போது அவனுடைய பேரன் கால்மைல்கூட நடக்கச் சக்தியின்றி டிராம்வண்டிகளின் சகாயத்தை விரும்புகின்றான்.

மேலும் அக்காலத்தவர்கள் வெகுகாலம் சுகஜீவிகளாய் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள்; சிற்றின்ப விஷயத்தை வெகுகாலம்வரையில் அறியாதவர்களாகவே காலங் கழித்திருக்கிறார்கள். பணத்தின் அருமையையும் அப்போது தெரியாது; இப்போது அழுகிற குழந்தைகள்கூட காசைக் காட்டினால் அழுகையை நிறுத்திவிடுகின்றன. ஒருவாழைக்காய் ஒருவனுக்குப் போதாது, இப்போது அதே காயைப் பத்துப்பேர் தொட்டுத் தொட்டுப் பார்த்துக்கொண்டு சாப்பிடுகிறார்கள். இதற்குக்காரணம் செட்டுத்தனமன்று; நகைப் பைத்தியமும் ஒருகாரணம். ஆடம்பரமான செலவுகள் ஏற்பட்டு அவசியமான செலவுகளைக் குறைத்து விட்டிருக்கின்றன. பால்ய விவாகத்தைப்பற்றி எத்தனையோபேர் தங்கள் வாக் சாதுர்யத்தை எல்லாம் வைத்துப் பேசியிருக்கிறார்கள். மாதர்கள் ருதுமதியானவுடனேயே இல்வாழ்க்கையிற் பிரவேசித்துவிடுவதில் உண்டாகும் கெடுதிகளைப் பற்றியும் எண்ணிக்கையில்லாத வியாசங்கள் பிரசுரமடைந்திருக்கின்றன.

நாட்டில் இப்போது எத்தனையோ விதமான நோய்களெல்லாம் உற்பத்தி பெற்றிருக்கின்றன. தேகத்திலே தக்கவலிமை இருக்குமாயின் இவை நமது சமீபத்தில் அணுகுமா? எப்போது தேகதிடங் குன்றியதோ அப்போது வியாதி தனது உக்கிரத்தைக் காட்டத் தொடங்கிவிடுகிறது.

சென்றுபோன மகாமக உத்ஸவம் எதற்காக ஏற்பட்டதென்று புராணரீதியாகவின்றி வேறுவிதமாகக் கவனிப்போமாயின் அதுவும் தேகப்பயிற்சிக்காகவே ஏற்பட்டதென்று விளங்கும். ரயில் முதலிய உபகரணங்கள் இல்லாத முற்காலங்களிலே மாசிமாதத்திலே மகாமகம் வருகிறதென்று தெரிந்த ஒருவன் கும்பகோணத்துக்குப் புறப்படுவதற்கு எத்தனை தினங்கட்கு முன்னதாகவே பயணத்தைத் தொடங்கி விட்டிருக்கவேண்டும்? இடம் விட்டு இடம் மாறுவதாலும் தேச சஞ்சாரத்தாலும் சரீர ஆரோத்தியத்திற்கும், வர்த்தகாபிவிர்த்திக்கும் எத்தனையோ சாதகங்கள் உண்டாகின்றன. காசி, ராமேச்வர யாத்திரை செய்தவன் மகா புண்ணியவான் என்னில் அவன் தேகமுயிற்சியிலே எத்தனை முதிர்ச்சி பெற்றவனாக இருக்கவேண்டும்? எத்



தனை நாடுகள் சுற்றியிருக்கவேண்டும்? அவனது சரீரம் வஜ்ஜிர காயமல்லவா? க்ஷேத்திரயாத்திரை செய்யும்படி ஏற்பட்ட பல காரணங்களுள் இதுவுமொன்றாக நாம் ஏன் பேசக்கூடாது?

காரணங்கண்டு பிடித்தற்கு முடியாத அநேக காரியங்கள் வழக்கம் என்னும் பைசாசத்திற்கு உட்பட்டுப்போயிருக்கின்றன. யாதுகாரணம்பற்றி நம்மவர்கள் கஞ்சியை வடித்து விடுகிறார்களோ அறியக்கூடவில்லை. அரிசியின் முழுச்சத்தும் கஞ்சியில் பிழியப்பட்டுப்போகின்றது. இது கரும்பிலிருந்து ரசத்தை எடுத்து எறிந்துவிட்டு சக்கையை உபயோகிப்பதையொத்திருக்கின்றது. தென் தேசத்தானும் வடதேசத்தானும் சண்டைக்கு நிற்பார்களாயின் வடதேயத்தானே வெற்றி பெறுவான். வடதேசங்களிலே கோதுமை சாப்பிடப்படுகிறது. தென் தேசத்திலோ அரியேமுக்கிய ஆகாரம்; அதிலும் சாரமாயுள்ள கஞ்சியை நீக்கிவிட்டு சக்கையைப் புசிப்பது வழக்கமாக விட்டிருக்கிறது. ஏன் ஜலத்தைக் குறைத்து புலால் முதலியன சமைப்பதையொத்து அரிசியையும் சமைத்து உண்ணக்கூடாதோ நாம் அறியோம்.

இவை எல்லாவற்றிலும் தேகப்பலத்திற்குத் தீங்குதருவது மனக்கவலையாகும். எப்பேர்ப்பட்ட திடகாத்திய தேகியாயிருப்பினும் மனக்கவலைமட்டும் உண்டாயின். அவன் வீரங்குன்றி யீனமடைகின்றான். நமது தேசாபிவிருத்திக்கு வாலிபர்களே நல்ல குருத்து. இப்படிப்பட்ட வாலிபவர்கள் பாடசாலைகளிலே நிரம்பவும் கவலைப்பட்டு வருகிறார்கள். முற்காலங்களில் சுலபமான வழிகளிலே வித்தியாப்பியாசம் செய்யப்பட்டு வந்தது. இப்போதோ பரீக்ஷைகளின் கொடுமைகளால் மனக்கவலைக்கு ஆளாகித் தேகதிடங்குன்றி மூக்குக்கண்ணாடி நேசர்களாய் இரண்டுக்கும் உதவாமல் கெட்டுப்போகிறார்கள். அந்த நாட்களிலே கல்வியானது விவேக விருத்திக்கென்று மதிக்கப்பட்டு வந்தது; ஆனால் இப்போதே ஏ, பி, ஸி, டி, ஆரம்பிக்கும் போதே அந்தப் படிப்பு உத்தியோகத்திற்காகப் படிப்பதென்ற குருட்டுத் தனமான கொள்கையை நம்மவர்கள் சிறுவர்களின் தனதிலேஉற்பத்தி செய்துவிடுகிறார்கள். மேலும் அந்நிய பாஷையிலேயே காலமுழுமையும் போராடவேண்டியிருப்பதில் அதிக கஷ்டத்தையும் மிகுந்த மனக்கவலையையும் ஏற்றுக்கொள்வதில் தேகபலம் க்ஷீணிக்கிறது. படிப்பு முடிவதற்குள் விவாகம் ஆரம்பமாய் விடுவதில் உலக இன்பத்தைச் சுவைபார்க்க முயல்வதிலிருந்தும் பிணியின் வாய்ப்பட்டு பாம்பின் வாய்த்தேரைபோலாகின்றார்கள். இதனிடையில் ஜீவனவிசாரம் சூழ்கின்றது. "என்ன விசாரம்வைத்தாய் இறைவா கச்சியே கம்பனே" என்று கலங்

குகிறான். முடிவில் முப்பது பிராயத்திற்குள் மூப்புப்பருவம் மூடிக்கொள்ள அவனது காலமும் முடிந்து வருகிறது. இப்படி மனக்கவலையிலேயே வாழ்நாள் முழுதும் மூழ்கியிருக்குமாயின் முன்னேறுவதெங்கே?

ஆபரணப் பைத்தியம் நம்நாட்டிலே அதிகப்பட்டு வருகிறது. அழகுக்கு ஆபரணம் செய்வது ஒருபுறமிருக்க பின்னாட்களில் உதவுமென்றே பெரும்பாலோர் நகைகளிலே முதலிடுகிறார்கள். ஆபரணம் செய்ய ஆரம்பித்த தினமுதற்கொண்டு தட்டானிடம் பொன் கொடுத்து நகையைப் பெறுகிற தினம் வரையில் ஒருவன்படும் அலைச்சலையும் அவஸ்தையையும் நன்றாகக் கவனித்துப் பார்ப்போமானால் ஆபரணத்திலோ முதலிடுவதில் லாபமில்லையென்று ஒரு நிர்மானத்துக்கு வந்துவிடுவோம். 70-ரூபா நகையை 60-ரூபாய்க்கு விற்க முயல்வதும் சில இடங்களில் தட்டார்கள் பொடிவைத்து மோசஞ்செய்து விடுவதில் ரூபா 40-க்குக் கேட்பதும், சொந்தக்காரன் திகைப்பதும் கண்டிருக்கிறோம். நகைகளில் முதலிடாமல் சேவிங்க்ஸ் பாங்கி (Savings-Bank) முதலியவற்றில் ஏன் சேர்த்து வைக்கக்கூடாது என்று கேட்கப்போனால், அது சீக்கிரம் வாங்கிவிடும்படியாக இருக்குமென்றும், நகையானால் அப்படி வாங்கமுடியாதென்றும் விடை பேசப்படுகிறது. இது எத்தனை மௌட்டிகமான செய்கை என்னலாம்! இதற்குக் காரணம் தேகதிடமில்லாததுதான், எப்போதும் தேகத்திற்கும் மனதிற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. தேகதிடமற்றுப்போவதிலிருந்து மனோதிடமும் மற்றுப்போய் அதன் மூலமாக நம்பிக்கையும் அத்தனை உறுதியில்லாததாகின்றது. அப்படிப் பூர்ணமான நம்பிக்கை வைக்கச் சக்தியில்லாததால் பாங்கிமுதலிய இடங்களில் போட்டுவைக்கப் பின்வாங்கிக்கொண்டு நகைகளில் முதலிடுகிறார்கள். தேகதிடமில்லாத காரணத்தாலேயே நம்மவர்கள் ஒத்துமையற்றவர்களாகவும் பரஸ்பர நம்பிக்கைபாராட்ட இயலாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

வஞ்சனை, சோம்பல், வறுமை, கோபம், பகல்நித்திரை, மோசஞ்செய்தல், சந்தேகம்—முதலிய பைசாசங்களெல்லாம் தேகதிடனில்லாததினாலேயே நம்மை நாடி வருகின்றன. உழைப்புள்ளவன் பாக்கியவான்; அவனுக்குக் கடன் என்பது இல்லை. பிறரை வஞ்சிக்கவும் மோசம் பண்ணவும் அவன் ஏன் துணிய வேண்டும்? தனது உழைப்பினால் எத்தனை அருமையான காரியமாயிருப்பினும் சுலபசாத்தியமாக்கிக்கொள்வான். உழைப்புள்ளவன் பிறர்கையை எதிர்பாராமல் தனது கையையே நம்பியிருப்பான். வறுமை அவனை எட்டியும் பாராது. இதேவித நிலைமை



யிலே அவ்வுழைப்பாளியின் குடும்பம் எவ்வளவு உன்னதத்தைப் பெற்றிருக்குமோ அதேவித ஸ்தானத்தில் நமது பாரதநாடும் இருந்தகாலமும் ஒன்றுண்டல்லவா! அப்படிப்பட்ட தேசம் பாழாய்ப்போனதற்கு உழைப்பின்மையும் ஒரு காரணம். அவ்வுழைப்புக்குத் தேகபலம் ஆவசியகம். இப்படிப் பல்விதத்திலும் அத்தியாவசியகப்படுகின்ற தேக வலிமையை அபிவிர்த்திப்பது அஸ்திவாரமில்லாமல் வீடுகட்ட எண்ணுவதுபோலாகும். எஞ்ஞான்றும் ஆரோக்கிய பாக்கியமே சர்வசிலாக்கிய மென்ப.

இராமாநுஜம்.

## கடவுளின் கருணையைக் கனவிலும் மறவாதே.

ஓ! மனமே! உனக்கேன் இச்சோர்வு! இவ்வச்சமும் கவலையும் உனக்கேன்! காரணம் என்னவென்று எண்ணிப் பார்த்தனையோ! ஈசனது அனுக்ரகம் அல்லவா? அது அவ்வாறாக: நீ துன்புற்று அல்லற் படுங்கால், “கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும் விருப்புற்று அமுது அளிக்கும் மெய்யனு”ம் வாரானோ? “அத்திமுதல் எறும்பு ஈறான உயிர் அத்தனைக்கும் சித்தம் மகிழ்ந்து அளிக்கும் தேசிகனு”க்கு நின்னைக் காத்தலும் கடன் இலையோ? உன்னிப்பார்த்துச் சஞ்சலத்தை விடுத்து, ஓ நெஞ்சமே! நாதனிடத்து நின் சலியா நன்னம்பிக்கையைச் செலுத்து!

“பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும் என்னுமாறு, இடுக்கண் உற்றுழி அல்லல் பல அடுக்கி வந்து நின்னைச் சூழ்ந்து எழுந்து நெருக்கிய காலத்து, தளர்ந்து நீ வீழாது நின்னை ஏந்தித்தாங்கி கைகொடுத்து நின்றது கடவுளின் கருணை அல்லவா? சிக்குச்சுழல்கள் உள்ள இம்மண்ணுலகில் திக்குத் திசை தெரியாது தவித்த காலத்து நின்னைச் செந்நெறிசெலுத்தி நடாத்தியது ஆதிபகவன் அருள் அல்லவா? இன்னமை மூலமுதல்வனது முறைஅறிந்தும் ஓ! மனமே! வாட்டம்உனக்கேன்?

சம்ஸாரம் என்பது துக்க ஸாகரம் அன்றோ? மலைபோல் அலைகள் அடுத்து அடுத்துப் புரண்டு எழுந்து கோஷித்துவரும் புயல் மோதப்பட்ட ஆழ்கடல் அதுவென நீ அறியாயோ? துயராழியின் ஓய்விலா உயரலைகள் பொங்கி எழுந்து கரைபுரண்டு நின்மீது உருண்டு ஓடிவந்தாலுமென்? ஊக்கமொடு காக்க ஒரு நாதன் நின்னுள் நிற்பதை நினக்கு நினைப்பூட்டவும் வேண்டுமோ?

அண்டம் புரளும்படி சண்ட மாருதத்தை வீசி மோதி அடிக்கச்செய்த எல்லாம் வல்ல ஈசனுக்கு அதை அடக்கி அமைதியாக்குவதும் அரிதாமோ? சர்வசக்தனும் இமைப்பொழுதில் நின் இடும்பைக்கு இடும்பை புரிந்து உனக்கு அமைதி எய்துவிக்கத் திருவுளம் பற்றினும் பற்றலாமன்றோ?

ஆனதுபற்றி, ஓமனமே! அந்தகாரம் நிறைந்த நள்ளிரவிலும் அப்பனது அநுக்ரகங்களை எண்ணி எண்ணி, நினைந்து நினைந்து, நெக்குவிட்டு நெகிழ்ந்து உருகி, நின்னிடத்தே அன்பு வெள்ளம் தேக்குவாயாக! கடவுளின் திருவடிகளைக் கடைப்பிடியாய்ப் பற்றிப்பிடித்து நின்னிடத்தே நாட்டிக்கொள்வாயாக! அவ்வாறு செய்யின் அல்லல் அற்று, அருள்பெற்று, பொய்யாப் புலமைத் திருவள்ளுவர்

"மலர்மிசை ஏகினான் மாணடிசேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்." (குறள்.)

என அருளியவண்ணம் நீ உவப்பிலா ஆனந்தம்பெறுவாய்! ஐயம் சற்றுமின்று! சத்தியம் என்று எண்ணித் திண்ணமாய்க்கொள்.

விவேக போதினி.

## செவ்வாய்.

இது நவக்கிரகங்களிலொன்று, இக்கிரக நிலையையுடையவனுக்கும் செவ்வாயென்றுபேர். அவன் சிவந்த மேனியன் அந்நிறம் வேறுபடின் பூமியிற் கலகம் நோய் முதலிய உற்பாதங்கள் உண்டாகுமென்பர்.

செவ்வாய் என்னும் கிரகத்தில் நாம் வசிக்கும் பூமண்டலத்திற்போலச் சீவபேதங்கள் சஞ்சரிக்கின்றனவென்பது அமெரிக்கா வானசாஸ்திரிகளால் நிச்சயம் செய்யப்பட்ட உண்மை. அங்கே பலவெட்டு வாய்க்கால்களுமுளவாம். அவைகளொவ்வொன்றும் ஆயிரம் மைலுக்குக்குறையாத நீளமுடையனவென்றும், அவைமிக்க திறமையுடைய இஞ்சினீர்மார்களாலும் தொழிலாளிகளாலும் இயற்றப்பட்டனவென்றும் அச்சாஸ்திரிகள் நிச்சயப்படுத்தியிருக்கிறார்கள். இக்கிரகத்துக்குப் பூமியிலிருந்து நிருபங்களனுப்பவும் அந்நிருபங்களுக்கு மறுமொழி பெறுதற்குமான நூதன இயந்திரமொன்றை "மிக்கறிஸ்" என்னும் வானசாஸ்திரி செய்யஎத்தனப்படுவதாகச் சிலகாலத்துக்குமுன் பத்திரிகைகள் கூறின. அவ்வியந்திரம் 20-இலட்சம் பவுனுக்குமேல் செலவிடப்பட்டு அரசினர் உதவியால் இப்பொழுது பூர்த்தியடைந்து வருவதாக அமெரிக்கா பத்திரிகைகளாலறிந்தோம். இவ்வியந்திரம் முற்றுப்பெற்று சாஸ்திரியாரின் எண்ணம் கைகூடுமானால் எத்தனையோ நூற்றாண்டுகளுக்குமுன்னதாகவுள்ள நமது புராணங்கள் கூறிய உண்மைகளுக்கு இதுவுமோர் இக்காலச் சான்றாகுமென்பதிற் சந்தேகமில்லை.

## புத்தகவரவு.

இராஜாம்பாள் என்னும் துப்பறியும் செந்தமிழ் நவீன நாவலொன்று வரப்பெற்றோம். சந்திரகாந்தா, மோகனசுந்தரம் என்னும் அற்புத நாவல்களை இயற்றிய ஸ்ரீமான் J. R. ரங்கராஜு



அவர்களே இதனாசிரியராவர். இதன் நடைப்போக்கும் நடையழகும் கதையின் அமைப்பும் நிரம்பவும் அழகாய் அமைந்திருப்பதானது ஆசிரியரவர்களின் கதையெழுதும் வன்மையை விளக்கிக் காட்டுகிறது. ஸ்ரீமான் ராஜு அவர்களால் இயற்றப்பட்டிருக்கும் ஒவ்வொரு நாவல்களும் ஒவ்வொரு இரத்தினங்களாகவே தமிழ் மக்களால் மதிக்கப்படுமென்பதிலையமில்லை. இரத்தினங்களாவன வெனில், கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியமென நவரத்தினங்களாம். ஆனால் ஸ்ரீராஜு அவர்களால் இயற்றப்பட்டுள்ள நாவல்களாகிய மூன்று ரத்தினங்களன்றி பாக்கியாயுள்ள ஆறு ரத்தினங்களையும நாவல் ரூபங்களாகவே விரைவில் வெளியிட்டு தமிழுலகை மகிழச்செய்யப்பின்னடையார்களென்பது எமது துணிபு. இதனை நமது பார்வைக்கு அனுப்பிவைத்ததற்காக நமது நன்றிபறி தலைச்செலுத்துகிறோம். மேற்கண்ட நாவலின் விலை அணா 12தான். வேண்டியவர்கள் மௌண்ட்ரோட் ரங்கராஜு பிரதர்ஸ் அவர்களுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

அலெக்ஸாண்டராஸ் பாக்கெட் டைரி:—இதில் பஞ்சாங்கம், பண்டிகைக் குறிப்புகள், தபால் தந்திக் குறிப்புகள், இன்ஷோர், இன்கம்டாக்ஸ், கவர்ன்மெண்டு விடுமுறை தினங்கள், வட்டி விபரங்கள், குடும்ப ரிஜிஸ்தர், ஞாபகக் குறிப்பு, வண்ணான் கணக்கு, தினசரி டைரி முதலியவைகளும், சுருங்கச் சொல்லிற் பிரதி மனிதர்களுக்கும் இன்றியமையாத ஒவ்வொரு விஷயங்களும் இதில் அடங்கியிருக்கிறது. இந்த டைரியானது நாணயமான காகிதத்தில் நாகரீகமாகப் பதிப்பிக்கப்பெற்றிருப்பதுடன், அதன் வெளியழகும் வேலைப்பாடும் நிரம்ப அழகாய் அமைந்திருக்கிறது. இதன் விலை கவர் வைத்தது அணா 6-ம், சாதாரணமானது அணா 4-தான். அலெக்ஸாண்டராஸ் ஜெம் டைரி இதன் விலை அணா 6- இது ஒவ்வொரு வக்கீல்களிடத்திலும், வியாபாரிகளிடத்திலும், இருக்கவேண்டியது அவசியமாகும். வேண்டுபவர்கள் அலெக்ஸாண்டரா பிரஸ், கும்பகோணம், என்றெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

## நமது புதிய கவர்னர்.

நமது புது கவர்னர் "ஸர் தாமஸ் கிப்ஸன் டேவிட் கார்மிகேல்" நவம்பர்மீ 1உ சென்னைக்கு வந்துசேர்ந்தார். 3-ம் தேதி மாலை 4-30 மணிக்கு போர்டு ஸெயிண்டு ஜார்ஜு கௌன்ஸில் சேம்பருக்குச் சென்றார். அங்கு ஆக்டிங்கு சீப் ஸெக்ரிடரி H. A. ஸ்டுவார்டு இவருக்கு மகாராஜா சக்கரவர்த்தி அவர்கள் சென்னைக் கவர்னர் வேலையைக் கொடுத்த ராயல் ஸயன் மானியுவலைப் படித்தார். உடனே 17-மரியாதைக் குண்டுகள் போடப்பட்டது. மிஸ்டர் ஸர் T. கிப்ஸன் கார்மிகேல் கவர்னர் ஸ்தானத்தை வகித்தார். இவர் 1859-ம் வருஷம் பிறந்து கேம்பிரிட்ஜிலுள்ள ஸெயிண்டு ஜான் காலேஜில் படிப்பிக்கப்பட்டார் 1881-ல் B. A. பரீக்ஷையிலும், 1884-ல் M. A. பரீக்ஷையிலும் தேறினார். 1895-ம் வருஷம் மிட்லோதியன் கவுண்டிக்கு காலஞ்சென்ற W. E. கிளாட்ஸ்டனுக்குப் பிறகு பிரதி நிதியாய்ப் பார்லிமெண்டில் மெம்பர் ஸ்தானம் வகித்தார். 1908-ல் விக்டோரியாவுக்குக் கவர்னராய் நியமனம் பெற்றார். இவர்

லிபரல் கக்ஷியினர். விக்டோரியா கவர்னராய் இவர் 3-வருஷ காலம் வேலைபார்த்ததில் மிகவும் சாமர்த்தியமாகவும் பிரஜைகளிடத்து இரக்கத்துடனும் ஆண்டுவந்ததால் இவரது சென்னைக் கவர்னாட்சி பெரிதும் குணமாக இருக்குமென்று நம்ப இடமுண்டு.

4வ சனிக்கிழமை 12-மணிக்கு நமது புதுக் கவர்னருக்குப் பல உபசாரப் பத்திரிகைகள் படிக்கப்பட்டன. சென்னைக் கார்பொரேஷனும், சென்னை ஜமீன்தார் சங்கமும், ஆங்கிலோ இந்தியன் அஸோஸியேஷனும், கஞ்சம் ஜமீன்தார் சபையும் உபசார வரவு பத்திரிகை படிக்க எல்லாவற்றிற்கும் ஒருமிக்க கவர்னர் பதில் சொன்னார். இந்த பத்திரிகைகளில் முக்கியமாய் உபசார வார்த்தைகள் சொல்லப்பட்டு இரண்டொரு முக்கியமான விஷயங்கள் மட்டும் குறிப்பிடப்பட்டிருந்தன. கவர்னர் பதில் சொன்னதில், சென்னைக் கார்பொரேஷனுக்கு வடிகால் செப்பனிடும் விஷயமாயும், குழாய்த் தண்ணீர் சுத்தப்படுத்தும் விஷயமாயும், தம்மால் கூடிய உதவி செய்வதாயும், ஸ்தல சுய ஆக்ஷியைப்பற்றி தமக்குச் சிறிது அனுபோகமிருப்பதால் இந்தியாவில் அதை முற்படுத்துவது தமது கடமையாகுமென்றும், கஞ்சம் ஜில்லா சங்கமானது வில்லேஜ் சர்விஸ் செஸ்ஸை எடுத்துவிட இந்தியா கவர்ன்மெண்ட் வாக்குறுதி கொடுத்திருப்பதால் அதை நிறைவேற்ற கவர்னர் ஒத்தாசை செய்யவேண்டுமென்று கேட்டதற்கு, அதைப்பற்றித் தனக்குத் தெரியாதென்றும் பதில் சொன்னார். மொத்தத்தில், கவர்ன்மெண்டை வகிப்பவர் நெறி தவறாது நியாயம் செலுத்தவேண்டுமென்றும், ஏகாதிபத்தியத்தில் எந்தப் பாகத்தில் வசிப்பவர்களானாலும் அங்குள்ளவர்கள் பொருளாதாரங்கள் விரியும்படி செய்யவேண்டுமென்றும், அவர்கள் நன்மையை உத்தேசித்து அவர்களுடைய சக்தியையும் திறமையையும் முற்றிலும் உபயோகிக்கும்படி செய்யவேண்டுமென்றும் சொன்னார்-விவேகபோதினி.

## வர்த்தமானங்கள்.

வாழைக்காய்:—முற்றிய காயின் தோலினை நீக்கி மூன்று நாள் வெயிலிலிட்டு உலர்த்தி வற்றலாக்கி உரலிலிடித்து மாவாக்கிப் பலகாரங்கள் செய்து விற்கப்படுகின்றனவாம். பத்துக்காயில் ஒருஇராத்தல் மா உண்டாம்.

நெருப்புக்குச்சி:—க்ளோரேட் ஆப் போடாஷ் ஆறு பங்கும், சல்பைட் ஆப் ஆண்டிமனி இரண்டிலெட்டுபங்கும், காய்ந்த வச்சிரம் ஒரு பங்கும் சேர்த்துக் குச்சியின் நுனியில் தோய்த்து உலர்த்தலே குச்சியில் மருந்து பூசும் முறையாம்.

**நூறு ஆகாய விமானி இறந்தது:**—ஸம்னீவர் டிங்கென் என்ற விடத்தில் டாக்ஸ் என்ற ஒரு ஆகாய விமானி ஆகாயத்தினின்றும் விழுந்து இறந்துபோனார். இவர் மரணத்தோடு 1908-வருஷம் முதல் இது வரையில் சம்பவித்த ஆகாய விமானிகளின் மரணம் 100-ஆகிறது.

**தேள் கொட்டுக்கு மருந்து:**—தேள் கொட்டினவிடத்தில், படிகாரத்தை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துப் பற்றுப்போட்டு அதற்குச் சமீபத்தில் நெருப்புத் தழலைப் பிடித்தால் வலி நின்றுவிடுமென்று ஒருவர் எழுதுகிறார். சென்னை மெயில் பத்திரிகை கூறுவது என்னவென்



றால், உள்ளிப்பூண்டின் தோலை யெடுத்துவிட்டுப் பருப்பை அரைத்துக் கொட்டினவிடத்தில் பற்றுப்போட்டால் 20-நிமிஷத்தில்வலி நின்று போய்விடுமாம். இரண்டாந்தரம் போட்டால் அங்கு புண்ணாய்விடுமாம். நட்டுவக்காலி கொட்டினாலும் இந்தப்பற்றினால் குணப்படுமாம்.

சீனாவிற் கலகம்:—ஊச்சாங் என்னுமிடத்திலுள்ள கலகக்காரருக்கும், அரசாங்க சேனைக்கும் போர்விளைந்தது. கலகக்காரர்கள் அநேகபட்டினங்களைக்கைப்பற்றிக்கொண்டார்கள். ராஜப் பிரதிநிதி தப்பிஓடிவிட்டார். கலகக்காரருக்கு இப்போதைய அரசரை நீக்கிவிட்டுக் குடியரசு ஏற்படுத்தவேண்டுமென்பதுதான் நோக்கம். நாளுக்குநாள், நிலையபயங்கரமாயிருக்கிறது. அந்நியநாட்டினர் தங்கள் பாதுகாப்புக்காகச், சண்டைக்கப்பல்களைத் தருவிக்கின்றனர். அரசாங்கச் சேனையில் சேதம் அதிகமாம். இக்கலகம் இலகுவில் முடியுமென்று எண்ணுவதற்கிடமில்லை.

டெல்லி முடிசூட்டில் சக்கரவர்த்தியின் கிரீடம்:—நமது மஹாராஜா சக்கிரவர்த்தியவர்கள் டெல்லி தர்பாரின்போது இதற்காகவென்றே பிரத்தியேகமாக செய்யப்பட்ட ஒருபுதுகிரீடத்தை அணிவார். சக்கரவர்த்தினி, அவர் லண்டன் முடிசூட்டின்போது அணிந்த கிரீடத்தை அணிவதோடு கோஹினூர் என்ற நமது நாட்டில் அகப்பட்ட விலையுயர்ந்த கல்லையும் அணிவார். சக்கிரவர்த்தி நமது இந்தியப் பிரஜைகளுக்கு ஒரு பிரசங்கம் செய்வார். அப்பிரசங்கம் இந்தியாவிலுள்ள சகல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு துண்டுக் கடிதங்களாக இந்தியாவில் எல்லாவிடங்களிலும் கொடுக்கப்படும். சக்கிரவர்த்தி கப்பலில் வரும்பொழுது போர்டு ஸெயிட்டில் இறங்கமாட்டார். ஈஜிப்டு அரசனை கேடிவை, மெடினாக் கப்பலில் வருவித்துப் பேட்டி தருவார்.

உலகத்தில் பெரிய ரயில்:—இங்கிலீஷ்காரருக்கும் ருஷியருக்கும் இப்போது உண்டாயிருக்கும் நேச உறவினால் இரு தேசங்களுக்கும் பல நன்மைகள் உண்டாயிருக்கின்றனவென்று பல முறைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த உறவின் பயனை இப்போது புதிதாய்ப் போடவிருக்கும் இருப்புப்பாதையை முதல் வரிசையில் வைக்கவேண்டும். இந்தப் பாதையானது லண்டனிலிருந்து இந்தியாவுக்கு ருஷியாவின் மேல் நேராய் வெகு ஜல்தியில் வரக்கூடியதாயிருக்கும். இந்த ரெயில் பாதை காஸ்பியன் கடற்கரையிலுள்ள பேக்கனிலிருந்து புதிதாய் ஆரம்பித்து பலுச்சிஸ்தானத்திலுள்ள துஸ்கி பட்டணத்தில் வந்து முடியும். அங்கிருந்து இந்திய இருப்புப்பாதை இணைக்கப்பட்டு இந்தியாவுக்கு வரும் பேக்கனிலிருந்து துஸ்கிக்குள்ள தூரம் 1600-மைல். இதற்கு ரயில்பாதை போட சிலவு இரண்டுகோடியே பத்து லக்ஷம் பவுன். இது போட்டு முடிந்த பிறகு லண்டனிலிருந்து இந்தியாவுக்கு 8-நாள் 6-மணி நேரத்தில் பிரயாணஞ் செய்யலாம். ரெயில்செலவு கப்பற் செலவு இரண்டும் தலைக்கு 40-பவுனாகும். 20 தினத்திற்குள் இங்கிலாண்டுக்குப் போய்த் திரும்பலாம்.

பிரான்ஸும் ஜெர்மனியும்:—மொராக்கோ விஷயமாய்ப் பிரான்ஸுக்கும் ஜெர்மெனிக்கும் நடக்கும் பேச்சுகளில் ஒரு பெரிய தடை நேரிட்டிருக்கிறதென்று பிரெஞ்சு பத்திரிகைகள் சொல்லுகின்றன. பிரெஞ்சுக்காரர்கள் கொடுப்பதாகச் சொல்லும் ஸ்தல ஈட்டை ஜெர்மனி ஒப்புக்கொள்ள மறுக்கின்றது. ஆதியில் கொடுப்பதாகச் சொன்னபடி

ஈடு கொடுப்பதற்கு பிரான்ஸ் இஷ்டப்படவில்லையென்றும், அப்படி இஷ்டப்படாதபடியால் பேச்சுகள் நின்றுபோய் புதிதான ராஜீய நிலைமையுண்டாகுமென்றும் 'பிரான்க்பரிடர் ஸீடங்' என்ற பத்திரிகை சொல்லுகின்றது. அப்படிக்கின்றி இவ்விருவல்லரசுகளுக்கும் யுத்த நேரிடும் பக்ஷத்தில் யுத்தகளத்தில் பிரான்சிய அரசாங்கம் தனது 40,87000 போர்வீரர்களையும் நிறுத்துமானால், அவர்களுக்கு நாளொன்றுக்கு 12,20,000 பவுன் செலவாகுமென்றும்; ஜர்மனி அரசாங்கம் தனது 43,84,000 வீரர்களை நிறுத்தினால் அவர் பொருட்டு நாளொன்றுக்கு 14,40,000 பவுன் செலவாகுமென்றும், இதுதரையில் நடக்கும் யுத்தச்செலவென்றும் ஒருவாறு கணக்கிடப்பட்டிருக்கின்றது. கடற்சண்டையிலாயின் இத்தொகையிலும் பார்க்கப் பெருந்தொகையும் பல படைக்கப்பல்களும் சிறு வள்ளங்களின் தேசமும் உண்டாகுமென்பது இராச்சிய பரிபாலன தாந்திரிகர் கூற்றும்.

## விசித்திர விஷயங்கள்.

**ஓர் அதிசய இயந்திரம்:**—ஆஸ்திரியா அரசாங்கத்தார் தபால் ஆபீஸுக்கு ஒருநூதன இயந்திரம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அதற்குள் பணம் போட விரும்புபவர்கள், பணத்தைப் போட்டபின்பு உள்ளிருந்தே ஒரு ரசீது கிடைக்கிறதாம். அதை யெங்கும் மாற்றிக்கொள்ளலாம்.

**இங்கிலாந்தும் பொய்ப்பல்லும்:** பிரதிவருஷமும் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு 2-கோடி பொய்ப்பற்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனால் இங்கிலாந்தில் சுயபற்களையுடையோர் ஒருவராவதிருக்கமாட்டார்களென்றும், க்ரேட் ப்ரிட்டனில் அரைவாசிப் பேர் பொய்ப்பல்லுடையவர்களென்றும் காணப்படுகிறது. அமெரிக்கா ஐக்ய நாடுகளின் ஸ்திதி இதற்குக் குறைந்ததல்லவாம்.

**கடலைக் கடந்தான்:**—1875-ஹு காப்டன் ஒப் என்பவன், இங்கிலாந்தினின்று, பிரான்சுக்கு கடலில் நீந்தி 21-மணி 49-நிமிஷத்தில் சென்றனராம். சென்ற மாதக் கடைசியில் தாமஸ்-உல்லியம்-பர்ஜஸ் என்பவர் முந்திய தூரத்திலும் அதிகமான தூரத்தை 22-மணி 35-நிமிஷத்தில் நீந்தினராம். அவருக்கு இப்போதைய வயது 40-க்கு மேலாகிறது. இந்தத்தீரச் செயலுக்காக நமது சக்கரவர்த்தியார், புகழ்ந்து ஒரு தந்திகொடுத்தார். அவரும் வணக்கமாக கொண்டாடி ஒரு பதில் தந்தி கொடுத்தனராம்.

**டைபோனே:**—இது ஓர் வகைச்செடி. இதனிலையின் ஓரங்களில் ஓர்வகை உரோமங்கள் தேங்காய்திருகும் கருவிபோல அமைந்திருக்கும். ஈ முதலியன இவ்விலையில் வந்திருப்பின், அவ்விலைகள் மூடிவிடும். மூடவே அவைகள் அவ்விலையிலுள்ள வழுவழுத்த ஒருவகை நீரினால் அமிழ்த்தப்பட்டு, இலையின் மத்திய பாகத்துக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே ஜீரணமாக்கப்படும். இன்னுமிவ்விலையில் சிறு மாமிசத் துண்டைப்போட்டால், அவ்விலை மூடப்பட்டு முன்போல் முடியும். ஒரு காகிதத்துண்டைப் போட்டால் அவ்விலை மூடுவதில்லை. ஆதலாலிச் செடி மாமிச உணவினையுடைய தென்பதும் மாமிசத்திற்கும் மற்றைய பொருள்களுக்கும் உள்ள பேதமறியும் பரிச உணர்வுடையதென்பதும் நன்கு ஐயத்தக்கது.



**ராட்சஸப் பிறப்பு:**—சௌகாட்டில் 4-வயதுள்ள ஒரு ராக்ஷஸப் பையனிருக்கின்றான். அவன் பிறக்கும்போது பல்லுகளுடனே பிறந்தான். 30-40, வயதுடைய மனிதனைப்போலிருக்கின்றான். அவனுக்கு ஒரு கூடைச்சாதமும் ஒரு கூடை மீனும் குறைந்த ஆகாரமாகவிருக்கின்றன. அவனைக்காண யாவரும் அஞ்சுகின்றனர். மனிதர் சமூகத்தை அருவருப்பாகப் பார்க்கின்றான். பசி வருங்கால் சட்டிப் பானைகளை உடைத்துவிடுகின்றான். அவன் குரல் மிருகங்களின் தொனிபோன்றிருக்கின்றது.

**புறத்தோலினால் கூடாரம்:**—புறுவோ ஒரு சிறிய பட்சி. அந்தப் பட்சியின் தோலினால் கூடாரமென்றால் அதை ஒரு புதுமை என்று சொல்லாமல் மற்றென்ன சொல்வது? வட இந்தியாவில் ஒரு நூதனமான கூடாரம் செய்யப்படுகிறதாம். அது முழுவதுவும் புறுத்தோலினாலேயே செய்யப்பட்டு வருகிறதாம். அது நீளத்தில் 60-அடியும் அகலத்தில் 40-அடியும் இருக்குமென்றும், அதற்காக மொத்தச் செலவு நாற்பதினாயிரம் ருபாய்க்குக் குறையாதென்றும் கூறப்படுகிறது. புறுத்தோலினால் கூடாரம் அமைப்பதை இதுவரையில் கேட்டதேயில்லை.

**பிரான்சு தேசத்தில் கொலைக்குற்றம்:** பிரான்சு தேசத்தில் கொலைக்குற்றத்திற் காளாகிறவர்களை ஆயுள் பரியந்தம் சிறைச்சாலையிலடைப்பதேயன்றித் தூக்கிட்டுக் கொல்வதில்லை. பொதுவாகக் கைதிகள் யோக்கியமாக நடந்துக்கொண்டால் அவர்கள் ஜெயிலிலேயே விவாகஞ் செய்துக்கொண்டு வாழலாமென்னும் வழக்கமுண்டாம். அத்தேசத்திலுள்ள ஒரு ஜெயிலில் சில்காலத்திற்குமுன் ஒரு விவாகம் நடந்ததாம் அவ்விவாகத்தில் மணமகன் தன் மனைவியைக் கொன்று குற்றவாளியானவனும். மணமகள் தன்மாமியாரைக் கொன்று தெண்டனையடைந்தவளாம்,

**கல்லாய்ச் சமைந்த கடலாமை:**—வட அமெரிக்கா காலிபோர்னியா தேசத்தின் "லாஸ் ஆங்கிலிஸ்" நகரத்திற்கருகேயுள்ள மலைச்சாரலில் கல்லாகவமைந்துள்ள கடலாமை சில காலத்திற்கு முன்னர் வெட்டியெடுக்கப்பட்டது. இதன் குறுக்களவு 30-அங்குலமாம். இது 100168-பவுண்டு நிறையுள்ளதாம். இதை வெட்டியெடுத்தவிடத்தில் கடல் சம்பந்தமான கிளிஞ்சல்களிருந்தன. இதை வெட்டி யெடுத்த மலைச்சாரல் கடல் பரப்பிற்கு 3000-அடியுயரமுடையதாம். இது கடலுக்கு 50-மைல் தூரத்திருப்பதாம். இதுகாறுமாங்கு வெட்டியெடுத்த பொருள்களுள் இது மிகப் பழமையானதாம். இதைக் கண்டுபிடித்தவிடம் நான்கிலட்சம் வருடங்கட்குமுன்னர் ஒரு மயிலாழமுள்ள கடலாகவிருக்கவேண்டுமென்றூகித்துச் சில சாஸ்திர விற்பன்னர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். இதைக் கண்டுபிடித்தவர் டாக்டர் ஹெக்டர்-அலியாட் என்பவராம். உலக சிருஷ்டி 6000-வருஷத்திற்கு முற்படாதென்று கூறுபவரது சித்தாந்தமிதனால் மறுக்கப்படுவதாம்?

## பிழை திருத்தம்.

ஆகஸ்டு மாதத்திய பத்திரிகையின் 154-வதுபக்கத்தில் K. முத்துவையர் குட்டுலொட்டி பாலவனத்தம் என்றிருப்பதை முத்துதேவர் என்று திருத்திக்கொள்ளவும்.

## ஹாஸ்யத் துணுக்குகள்.

இஞ்சியென்பது எலிமிச்சம்பழத்தைப் போல் எட்டுச்சாணிகளம் இருக்குமானால், சர்க்கரை என்பது இஞ்சியைப்போல் புளிப்பாகவே இருக்குமல்லவா!

சந்தியாவந்தனம் பண்ணினாயா? என்று தகப்பன் பிள்ளையைக் கேட்க "பெருமாள் கோவில் குளத்தில் பண்ணினேன்" என்றான், "அதில் தண்ணீரில்லையே" என, "தண்ணீர் இருக்கிறது என்று அடுத்தவீட்டுக் குப்பனுக்கு யாரோ சொன்னானாமே" என்றான்.

ஒரு ஜமீன்தார் வயிற்று வலியினால் அபரிமிதமாய்ப் பாதைப்பட்டுக் கொண்டிருக்கையில், இரண்டு பெரிய டாக்டர்கள் வைத்தியம் செய்து கொண்டிருந்தும், கொஞ்சமாவது அநுகூலமாகாமல் படுக்கையில் படுத்த அன்று தொட்டுத் துர்பலமாய்க் கொண்டே வந்தார். அவ்வாறிருக்க அந்த டாக்டர்கள் வியாதியினது காரணத்தைக் குறித்து அபிப்பிராய பேதம் கொண்டு, வயிற்றுக்குள் ரண மிருக்கிறதென்று ஒருவரும்; இல்லையென்று மற்றொருவரும்; சொல்லிச் சண்டைபோடத் தொடங்கினார்கள்.—"ஆகட்டும்! அவர் இறந்த பிறகு அறுத்துப் பார்த்தபோதாவது உண்மை வெளிப்படாதா?" என்று அவர்களில் ஒருவர் கடைசியில் சமாதானமாய்ச் சொன்னார். அதைக் கேட்டபிறகு ரோகிக்குண்டான தைரியத்தைச் சொல்லவே வேண்டியதில்லை.

அமெரிக்கா தேசத்தில் அற்புதமான ஒரு தூரதிருஷ்டிக்கண்ணாடியைத் தயார் செய்தார்களாம். அதனால் பார்த்தால், ஆறுகாதம் தூரத்தில் வந்துகொண்டிருக்கும் போர்க் கப்பல் அறுபது கஜம் தூரத்தில் இருந்தாற் போலக் காணப்படுமாம்"—என்று இராமனையர் தான் ஏதோவொரு பத்திரிகையில் படித்த வர்த்தமானத்தைச் சொன்னார். "ஆம்! ஆம்! அதுமட்டுமில்லை, அந்தயந்திரத்துடன் 'போனகிராப்' என்னும் யந்திரத்தையும் சேர்த்துப் பார்த்தால், கப்பலில் இருப்பவர்கள் செப்பிக்கொள்ளும் வார்த்தைகள்கூடக் கேட்குமாம்" என்று சொல்லிச் சர்வக்ஞ சாஸ்திரியார் தன் ஞானாதிக்யத்தைக் காட்டிக்கொண்டார்.

சிதம்பரம் செட்டி சத்திரத்தில் இரண்டு சினேகிதர்கள் போஜனம் செய்துகொண்டிருக்கையில், அவர்களில் ஒருவன் தனது இலையில் பரிமாறியிருக்கும் பச்சைமிளகாய்ப் பச்சடியை நாவில் வைத்துக்கொள்ள அது இவ்வளவென்று சொல்ல முடியாத காரமாய் இருந்தபடியால் பொறுக்கமுடியாமல் கண்ணீர் சொறிய ஆரம்பித்தான். அதைக்கண்ட அவன் சிநேகிதன் "சாஸ்திரீ! என் அப்படி அழுகிறாய்?" என்று கேட்க, "ஒன்றுமில்லை ஐயா! போன வருஷத்தில் பீபிள்ஸ் பார்க்குத் தீயில் மாண்டுபோன என் மனைவி சேஷம்மாளை நினைத்துக்கொள்ள அழுகை வந்தது" என்று அவன் பதில் சொன்னான். கொஞ்சநேரத்திற்குப் பிறகு குப்பண்ணாகூட அப்பச்சடியை ருசிபார்த்துப் பொறுக்க முடியாமல் கண்ணீர் சொரிய ஆரம்பித்தான். அப்பொழுது சாஸ்திரி "நீ என் அழுகிறாய்" என்று கேட்க,—"என்னத்திற்கா? உன் மனைவி மாண்டுபோன பொழுது, நீ கூடப் போகவில்லையே என்று அழுதேன்" என்று குப்பண்ணா செப்பினான்.



நேட்டால் டர்பானிலிருக்கும் மிஸ்டர், P. S. சிதம்பரம்பிள்ளை அவர்களை நமது பத்திரிகைக்கு சந்தாதார்களைச்சேர்க்கவும் சந்தாத்தொகைகளை வசூலிக்கவும் ஏஜண்டாக ஏற்படுத்தியிருக்கிறோம்.

ஜோகன்ஸ்பார்க், கிம்பர்லி, கினிகாட், ரொடேஷியா, பினாங்கு, சிலாங்கூர், கோலாலம்பூர் முதலிய வெளிநாட்டிலிருக்கும் நமது சந்தா நேயர்கள் 1912-ம் வருஷத்திய சந்தாத்தொகையை விரைவில் அனுப்பிவித்து பத்திரிகையை ஆதரிக்கவேணுமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

(பத்திராதிபர்.)

## நூதன விடுகதை வினா.

**எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.**

(1) மண்டலத்திலோர் பொருட்பே ராறெழுத்தில்
வயங்குபின் மூன்றெழுத்த கற்றமகிழ்ச்சி யென்பார்
ரண்டுடன்பின் மூன்றெழுத்து மகற்றவெண்மை
ரஞ்சிதநான் கொடுமூன்றால் மதன் பெண்ரோங்
கண்டதொரு வைந்துநான்குடன் மூன்றுஞ்சொல்
கடையிரண்டாற் சிற்பமொன்று வைந்தொன்றாலே
சண்டனெனச்சொல்லு வரிப்பொருள் தெரிந்து
தாரணியில் விடைபகர்வீர் தமிழ் வல்லோரே.

(2) சிஷ்டர்கட்கு செய்கடமை யொன்றினமஞ்
சிறந்த பஞ்சாக்ஷரத்தில் ரண்டுமூன்றைப்போக்க
கஷ்டமிலா வூக்கமென்பரிரண்டு நான்கு
கனவைந்தாற் கடவுளென்பர் பின்மூன்றாலே
நஷ்டமில்லாச் சத்தென்பரொன்று மூன்றால்
நாட்டினிலாலோசனை யென்றோதுவார்கள்
அஷ்டதிசையும் புகழுங் கவிவல்லோரே
அன்புடனே யிதற்குவிடை சொல்லுவீரே-

V. மௌனகுருருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
லேட்முனிசிபல் கௌன்சிலர், பழனிஸ்தலம்.

---

## "கிருஷிகன்"

விவசாயத்தில் அனுபோகமும் பாண்டித்யமு முள்ளவர்களால் எழுதப்படும் ஓர் மாதாந்தரப் பத்திரிகை. எல்லாரும் எளிதில் வாங்கி வாசிக்கவேண்டுமென்னும் முக்கியமான எண்ணத்துடன் வருஷ சாந்தா தபால்கூலி உள்பட அணா 12, என்று குறைச்சலாய் வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா அங்கீகரிக்கப்படமாட்டாது. பிரதிவருஷமும் சித்திரைமாதம் முதல் ஆரம்பிக்கிறது. வருஷமத்தியில் சேர்ந்தால்கூட சித்திரைமாதம முதல்தான் கணக்கு வைக்கப்படும் சென்ற சஞ்சிகைகள் கூடியவரையில் சப்ளை செய்யப்படும் வேண்டியவர்கள் ரங்கராஜு பிரதர்ஸ் 5, மௌண்ட் ரோட் சென்னை என்று எழுதி, வி.பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்

இதைவிட வேறுஅத்தாக்ஷி என்ன;

"இராஜாம்பாள்" புஸ்தகம் பிரசுரமான மூன்று வருஷங்களுக்குள் மூன்று பதிப்புகள் அச்சடித்து பூராவாய் செலவாகி இப்போது நான்காம் பதிப்பு அச்சிலிருக்கிறது,

"இராஜாம்பாள்" "சந்திரகாந்தா" "மோஹனசுந்தரம்" என்னும் மூன்றுநாவல்களும் ஒன்றைவிட ஒன்று நான்முன் நான்முன் எனகைதட்டி ஆப்புரித்து சற்தோஷிக்கச் செய்யக்கூடிய சக்திவாய்ந்தவை எல்லாரும் எளிதில் வாசிக்குமாறு இனிய எளிதானநடையில் எழுதப்பட்டிருக்கின்றன. மேலும் மேற்கண்ட ஒவ்வொரு நாவலிலும் கண்டோர் மனதைக்கவரும் மூன்று சித்திரப்படங்கள் விழுவழுப்பான கடிதத்தில் அச்சடித்து சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நாவல்களைப்போல் வேறுநாவல்கள் இதுவரையில் பிரசுரிக்கப்படவில்லையென்று பத்திராசிரியர்களாலும் வாசித்த எல்லாராலும் புகழப்பட்டது. இவைகளைப் புகழ்ந்து ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் கிடைத்திருக்கிறது. இவ்வளவு அபூர்வமாகிய நாவல்கள் ஒவ்வொன்றின் விலை அணா 12, தபால்கூலி, வி. பி கமிஷன் பிரத்தியேகம் வேண்டியவர்கள் ரங்கராஜு பிரதர்ஸ் 5-மௌண்ட்ரோட் சென்னை என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

## ரோமசங்காரி சோப்.

தேகத்தின் எந்தப்பாகத்திலும் இந்த ஸோப்பை உபயோகித்தால் யாதொரு கெடுதியுமின்றி ரோமங்களைச் சங்காரஞ்செய்துவிடும். 6-மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய கட்டி 1-க்கு விலை 6-அணா டெஜன் ரூ 4. வி. பி சார்ஜ் 1-முதல் 3-க்கு 4-அணா.

## ரோமப்பிசின்.

இப்பிசின் நரைத்த மயிரை 2 நிமிஷத்திற்குள் பழயபடி கறுப்பாக்கிவிடும். கெடுதி செய்யக்கூடியது ஒன்றும் இதில் கிடையாது 1-புட்டி 3-மாதத்துக்கு போதுமானது. டைரக்ஷன் மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு, விலை 12-அணா; டெஜன் 1-க்கு ரூ 8. 1-முதல் 3-புட்டிக்கு வி.பி. சார்ஜ் 4-அணா.

## கார்பாலிக் டூத்பவுடர்.

இந்தபற்பொடி; வாயினுண்டாகும் துற்நாற்றத்தைபோக்கி பல்லைச்சேர்ந்த எல்லா வியாதிகளைப்போக்கி பற்களை கெட்டிப்படுத்தும். டின் 1-க்கு $1\frac{1}{2}$-அணா, டெஜன் 14-அணா 1-டெஜனுக்கு வி. பி. சார்ஜ் 4-அணா,

Apyly to Messrs—J. SUR & Co,
Patent Medecine Sellers & Genaral order Suppliers,
South Sinthee Road, P. O. (B) Gossipore, Calcutta.
**Agent. Lakshmivilasa Provident Intitution Ld. Kumbakonam.**

OFFICE OF THE ... OF BOOKS
REGISTERED
10 JAN 1912
MADRAS.

உ

# வைத்திய போதினி.

சித்திரப்படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

புக் 2. } **1911**-ஞு டிஸம்பர்மீ 1உ { நெ. **12.**

## நமது சந்தாநேயர்களுக்கோர் விண்ணப்பம்.

சென்ற ஜனவரி மாதம் முதற்கொண்டு நமது பத்திரிகையைப் பெற்றுவரும் சந்தா நேயர்களுக்கு 1912-ம் வருஷத்திற்குச் சேரவேண்டிய பத்திரிகை கிரயமாகிய ரூபா ஒன்றுக்கு அடுத்த ஜனவரி மாதப் பத்திரிகையை வி. பி. மூலமாய் அனுப்புவோமாதலால் வி. பி-யைத் திருப்பிவிடாமல் பெற்றுக்கொள்ளும்படியாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அப்படிக்கின்றி பத்திரிகை பெற இஷ்டமில்லாதவர்கள் தயவுசெய்து உடனே எழுதித் தெரிவித்து விடுதல் நலமாகும். (பத்திராதிபர்.)

சென்னை மகுடாபிஷேக தர்பார் கொண்டாட்டத்தில் வாசித்த

## ராஜ பக்தி போதனை.

**நாம்** இன்றைக்கு (12-12-11) ஒரு சுபசம்பவத்தைக் கொண்டாடும்படி இங்கே கூடியிருக்கின்றோம். இந்த விஷயம் நமது தேசத்தின் சரித்திர சம்பந்தமாக மிகவும் முக்கியமானது. ஹஸ்தினாபுரம் என்னும் டெல்லி நகரம் பூர்வகாலத்தில் இந்தியாவுக்கு ராஜதானியாக விளங்கியது. ஆயினும் இந்தியா முழுமைக்கும் சக்ரவர்த்தியாக அந்த டெல்லியில் ஸிம்ஹாஸநம் வஹித்தவர் ஒருவரும் இல்லை. நமது சக்ரவர்த்தியவர்கள் இன்று, இந்தத் தேசத்து அரசர்களும், ராஜப்பிரதிநிதிகளும், நியாயாதிபதிகளும், உத்யோகஸ்தர்களும், பிரபுக்களும் புடைசூழ வீற்றிருப்பார். அப்போது அவர்தாம் மகுடந்தரித்து ராஜ்யாதிகாரத்தை மேற்கொண்ட விஷயங்களை அவர்களுக்குத் தெரிவிப்பார்.

பூர்வகாலத்தில் பராக்ரமசாலிகளான பல அரசர்கள் தாம் உலகமுழுவதையும் ஒருகுடைக்கீழ் ஆள்பவர் என்பதற்கு அறிகுறியாக அசுவமேதயாகம் செய்தார்கள். ஆயினும், அவர்களில் ஒருவரும் இந்தியா முழுவதையும் ஆண்டதில்லை. இந்து அரசர்களுள் அசோகரும், முகம்மதிய அரசர்களுள் ஔரங்கஸேப்பும் மற்ற அரசர்களைவிட அதிக விஸ்தாரமான பிரதேசத்தை ஆண்டார்கள். அவர்களுடைய ராஜ்யங்கூட இந்த ராஜதானியின் தென்பாகம் வரையில் எட்டினதில்லை. அவர்களது

ஆளுகையோ நிலையற்று, சொற்ப காலத்திலேயே சீர்குலைந்து போயிற்று. நமது காருண்ய சக்ரவர்த்தியாகிய ஜார்ஜ் மன்னர் ஹிமாலயம் முதல் கன்னியாகுமரி வரையிலுமுள்ள இந்தியாதேசம் முழுவதையும் ஆளுவதன்றி, கிழக்கில் ஆஸாம், பர்மா என்னும் தேசங்களையும் மேற்கில் பலுசிஸ்தான் தேசத்தையும் தம் ஆட்சிக்குள் கொண்டிருக்கிறார். ஆசியாகண்டத்திலுள்ள இந்த இந்தியாமாத்திரமே இவர் ஆட்சிக்கு உட்பட்டதென்று நினைக்கிறீர்களோ, உலகமெங்கும் இவருடைய ஆட்சி செல்கின்றது—'ஆங்கில ராஜ்யத்தில் சூரியாஸ்தமனம் ஆவதில்லை' என்னும் விஷயம் நீங்கள் படித்திருக்கிறீர்களல்லவா—ஆங்கில அரசாட்சிக்கு உட்பட்டநாடுகள் ஐந்து கண்டங்களிலும் உண்டு. அவற்றுள் முக்கியமானவற்றைக் கூறுவோம். அவர் தம் பூர்வீக ராஜ்யமாகக்கொண்டு தலைமுறை தலைமுறையாக ஆள்வது ஐரோப்பாகண்டத்திலுள்ள பிரிடிஷ் தீவுகள் இவையன்றி கனடா, ஆஸ்திரேலியா, தென் ஆப்ரிகா ஆகிய மூன்று தேசங்களும் மற்றக் கண்டங்களில் உள்ள முக்கிய ஆங்கிலேய ராஜ்யங்களாம். இவற்றோடு அங்கங்கே அநேக பிரதேசங்களும் நமது சக்ரவர்த்தியார் ஆளுகைக்கு உட்பட்டிருக்கின்றன. இவருடைய ராஜ்ய விஸ்தீர்ணத்தைப் பார்க்கிறபோது சக்ரவர்த்தி என்னும் பட்டத்திற்கு நமது ஜார்ஜ் மன்னரே ஏற்றவர் என்பதில் சற்றும் சந்தேகமுண்டோ?

நமது இந்தியாவை அரசுபுரிந்த ஆங்கில அரசர்களுள் ஜார்ஜ் மன்னர் மூன்றாவதானவர். ஆயினும், இந்திய சக்ரவர்த்தி என்னும் பட்டத்துடன் தம் மனைவியாகிய மேரியரசியாருடன் முதல் முறையாக இந்தியாவுக்கு வந்தவர் ஜார்ஜ் மன்னரே.

இந்து அரசர்களுள் அசோகமகாராஜரும் முகம்மதிய அரசர்களுள் அக்பர் பாதுஷாவும் ராஜநீதி தவறாமல் குடிகளுக்கு நன்மையுண்டாகும்படி செங்கோல் செலுத்தினார்கள். அந்த அரசர் காலத்திலும் ஜனங்கள் நெடுங்காலம் உபத்திரவமும் பயமும் இன்றி இருந்தவர்கள் அல்லர். முற்காலத்தில் வேற்றரசர்கள் அடிக்கடி படையெடுத்து வந்தார்கள்; உள்நாட்டுக் கலகங்கள் பற்பல உண்டாயின; வரிகள் அமிதமாக இருந்தன; போக்குவரவுக்குரிய சாதனங்கள் நன்றாக இருந்ததில்லை. பஞ்சமும் கொள்ளைநோயும் அடிக்கடி நேர்ந்ததால் நாட்டில் உயிர்ச்சேதங்கள் உண்டாயின. இவற்றையெல்லாம் நிவிருத்திசெய்ய அந்த அரசர்கள் யாதொரு முயற்சியும் செய்ததாகத் தெரியவில்லை. நமது ஆங்கில அரசாட்சியில் நாட்டுக்கு நேரும் துன்பங்களை நீக்குவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். வைசூரி, விஷபேதி முதலிய கொள்ளை நோய்களைத் தடுக்கத் துரைத்தனத்தார் செய்யும் முயற்சி கொஞ்சமா. 1897-ம் வருஷம் நமது தேசத்தில் நேர்ந்த பஞ்சகாலத்தில் காருண்ய



கவர்ன்மெண்டார் தினந்தோறும் சுமார் 30,00,000 ஜனங்களுக்கு உணவளித்துப் போஷித்துவந்தார்கள். இதுவும் அன்றி, ரெயில், தபால், தந்தித்தபால், நல்லசாலைகள், பாதைகள் முதலியவற்றை ஏற்படுத்திப் போக்கு வரவுக்குரிய சாதனங்களில் யாதொரு குறைவுமில்லாமல் செய்திருக்கிறார்கள்; சுகாதாரத்திற்குரிய விதிகளையும் மார்க்கங்களையும் தேசமெங்கும் பரவச்செய்தார்கள். தர்மவைத்தியசாலைகளையும் ஔஷத சாலைகளையும் எங்கெங்கும் ஏற்படுத்தினார்கள். இந்த முகாந்தரங்களால் கொள்ளைநோய் முதலியவற்றால் உண்டாகும் அகால மரணங்கள் பெரும்பாலும் குறைந்தன. மேலே சொன்ன காரணத்தினாலும் ராஜகலகம், சண்டை முதலியவை முற்றும் ஒழிந்தமையாலும் நமது தேசத்தின் ஜனத்தொகை நாளுக்குநாள் விருத்தியடைவதாயிற்று. விவசாயமும் கைத்தொழிலும் மேன்மேலும் விருத்தியடைந்தன. வட இந்தியாவிலும் தென் இந்தியா எங்கும் நீர்பாசனத்திற்குரிய சீர்திருத்தங்கள் பல செய்திருக்கிறார்கள். பெரிய ஆறுகளில் அணைக்கட்டுகள் கட்டி தண்ணீரை வாய்க்கால்களின் வழியாக நிலங்களுக்குப் பாயும்படி செய்திருக்கிறார்கள். இதன் பொருட்டாக மொத்தம் 14,000 மைல் நீளமுள்ள கால்வாய்கள் வெட்டியிருக்கிறார்கள். ஒரு காலத்தில் கரம்பாக இருந்த சுமார் 10,000,000 ஏகரா விஸ்தீர்ணமுள்ள பூபாகங்கள் இப்போது அவ்வளவும் நல்ல பலனைத் தரத்தகுந்த செய்கால் நிலங்களாக மாறியிருக்கின்றன. இந்த நன்மை ஒன்றே ஆங்கில அரசாட்சியின் சிறப்பைத் தெரிவிக்குமல்லவா.

இது நிற்க, தபாலும் தந்தித்தபாலும் நமக்கு எவ்வளவு நன்மையை விளைவிக்கின்றன! சொற்ப செலவில் வெகுசுலபமாக அதிவிரைவில் சமாசாரங்களை விரும்புமிடங்களுக்குத் தெரிவிக்கலாம். காலணா செலவு செய்தால் இந்தியாவிலுள்ள எந்தப்பாகத்திற்கும் கடிதம் எழுதலாம் அல்லவா! ஆறணா செலவிட்டால் அரைநாளில் இந்தியாவின் ஒருகோடியிலிருந்து மறுகோடிக்குச் சமாச்சாரம் தெரிவிக்கலாமே. முற்காலத்தில் சாதாரணமாக இந்துக்களில் பிராமணரும் முகம்மதியரில் முல்லாக்களுமே படிப்பாளிகளாக இருந்தார்கள். இப்போது எல்லா ஜாதியாரும் கல்விகற்க அநுகூலம் ஏற்பட்டிருக்கின்றது. முன்காலத்தில் மத வித்யாசத்தால் மனிதருக்குப் பற்பல கஷ்டங்கள் நேர்ந்தன. ஆங்கில அரசாட்சியார் மதசம்பந்தமான விஷயங்களில் பிரவேசிப்பதில்லை என்று வாக்குதத்தம் செய்து, அதுபோலவே எல்லா மதங்களையும் பக்ஷபாதமின்றி ஒரேவிதமாகப் பாராட்டுகிறார்கள். முற்காலத்தில் எல்லா ஜாதியாரும் துரைத்தன உத்தியோகத்தைப் பெற்றதில்லை. இந்தக் காலத்தில் யோக்யதையுள்ளவர்கள் யாவரானாலும் துரைத்தன உத்தியோகத்

தை நிராக்ஷேபமாக அடையலாம். இக்காலத்தில் நம்மவர்கள் ஜாதி வேற்றுமையின்றி ப்ரொவின்ஷியில், வைஸ்ரிகள் கௌன்ஸில் முதலிய இடங்களிலும் லண்டன் நகரத்திலுள்ள இந்தியா கௌன்ஸிலிலுங் கூட உத்தியோகங்களை அடைந்திருக்கிறார்கள்.

நமது தேசத்திலுள்ள பற்பல ஜாதிகள், பாஷைகள் மதங்கள், ஆசாரங்கள், சம்பிரதாயங்கள் முதலியவைகளால் உண்டாகும் பேதங்களை யோசிக்குங்கால், பக்ஷபாதமின்றி காக்கவல்ல ஸர்வாதிகாரமுள்ள பொதுவான ஒரே துரைத்தனம் நமது தேசத்திற்கு அத்யாவசிகமென்பது யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்கதே. அந்த துரைத்தனம் யாவரையும் ஒரேவிதமாக நன்குமதித்து, அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்று, ராஜ்ய முழுவதும் விருத்தியடைவதற்குச் சாதகமான வழியில் அனைவர்க்கும ஸ்வயாதிகாரத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கவேண்டும். நமது தேசத்தின் பூர்வசரித்திரத்தையும் இக்காலத்திய நிலைமையையும் யோசித்தால், இத்தன்மையான ராஜாங்கமே இப்பொழுது நமக்கு ஏற்றதென்பது தெளிவாகும். இப்படிப்பட்ட ராஜாங்கம் முன் நாளில் ஏதும் இருந்ததில்லை. இக்காலத்திலும் ஆங்கில அரசாட்சியிலன்றி, வேறு அரசாட்சிகளில் இத்தன்மைகளைக் காண்பது அரிது.

மேலே கூறிய நன்மைகள் தவிர இன்னும் பல நன்மைகளை இந்த ஆங்கில ராஜ்யத்தினால் அடைந்து வருகிறோம். இனியும் பல நன்மைகளை அடைவோம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இந்த ராஜ்யத்தின் சிறப்பே நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியாக உருவுகொண்டு விளங்குகின்றது.

முன்காலத்தில் பெரும்பாலும் அரசர்கள் தமது நன்மைக்காகவே ராஜ்யங்களை ஆண்டுவந்தார்கள். இந்தக் காலத்திலோ அரசர் குடிகளின் நன்மைக்காகவே அரசாட்சி புரிகின்றார். தம் நன்மையைக் கருதாமல் பிரஜைகளுக்காகப் பெரிதும் உழைத்து, அவர்களுக்கு நன்மை புரிபவரே நல்வேந்தர்! இப்பெரிய காரியத்திற்கு நமது சக்ரவர்த்தியை அருகராகச் செய்யவேண்டுமென்று நிச்சயித்து இவரது பாட்டியாரும் தந்தையாரும் மிக்க அன்புடன் இவருக்கு ராஜ்ய தந்திரங்களை அப்பியசிக்கும்படி செய்தார்கள்

‘அடங்கக் கற்றவரே ஆளக்கற்றவர்’ என்பதற் கிணங்க, ஜார்ஜ் மன்னர் இளமைப் பருவத்தில் கப்பல் தொழிலில் பழகும்போதே தாம் மற்றவர்களுக்குக் கீழ்ப்படியும் தன்மை உணர்ந்தார். இவரைப் பலமுறை தேசயாத்திரை செய்வித்துப் பற்பல தேசங்களின் விவரங்களை தெரிந்துகொள்ளும்படி செய்தனர். இவரைப்போல் வேறு எந்த அரசரும் இவ்வளவு தெரிந்துகொண்டவர் அல்லர். நமது சக்ரவர்ததியவர்கள் தம்



ராஜ்யாதிகாரத்திற்கு உட்பட்ட பற்பல நாடுகளுக்கும் விஜயஞ்செய்து அவரவர்களுடைய தன்மைகளையும் ஆசாரங்களையும் நன்றாக அறிந்தவர். குடிகளோடு பழகி அவர்களுடைய சுகதுக்கங்களைத் தம்முடைய சுகதுக்கங்களாகக் கொள்வதே நல்ல அரசாட்சிக்கு லக்ஷணமென்பதை அவர் நன்கு உணர்ந்திருக்கிறார். உலகத்தில் நல்வாழ்க்கை என்பது இல்வாழ்க்கையே என்று உணர்த்த நமது சக்ரவர்த்தி தம் மனைவி மக்களுடன் மிக்க அன்புகொண்டு, மாசற்ற இல்வாழ்க்கையில் இன்பமடைந்து தம் குடிகளுக்கு நிதர்சனமாக விளங்குகிறார்.

நமது சக்கரவர்த்தி, தாம் இவ்வுலகில் தெய்வத்திற்கு பிரதிநிதியாக இருந்து, தாம் மேற்கொண்ட பெரிய கடமைகளைச் செய்வதில், தாம் கடவுளுக்கு உத்தரவாதி என்பதை உணர்ந்து ராஜ்ய கார்யங்களுக்கு தெய்வானுகூலமே பிரதானமென்று நம்பினவர். அதனால் அவர் தம்முடைய மதத்தில் பற்றுடையவராகி மற்றவர்களுக்கும் நிதர்சனமாக இருக்கும்படி பகவதாராதனைக்காக ஒவ்வொரு வாரத்திலும் ஆதிவாரத்தை அதற்கென நியமித்திருக்கிறார். ஆதிவாரந்தோறும் இவர் எந்த இடத்தில் இருந்தபோதிலும், தெய்வ வணக்கத்தை மறப்பதில்லை. மன்னர் கடவுளருளால் தம் ராஜ்யத்தை ஆண்டு கடவுளுக்குப் பிரதம சேவகராகவும் பிரதிநிதியாகவும் இருப்பதினால், எந்த மதத்துக்குரிய சாஸ்திரங்களிலும் அரசனை வணங்கி, கௌரவிக்க வேண்டுமென்று கட்டளையிட்டு இருக்கின்றது. நமது சக்கரவர்த்தி தம்முடைய நற்குண நற்செய்கைகளாலும், நம்மிடம் கொண்டிருக்கும் அன்பினாலும் நம்முடைய மரியாதைக்கும் அன்பிற்கும் வணக்கத்திற்கும் பாத்திரராயிருப்பதனால் நாம் நமது காருண்ய சக்கரவர்த்தியை விசேஷமாக வணங்கிக் கௌரவிக்க வேண்டுவது அவசியமல்லவா?

அவரிடத்தில் பக்தியும் கௌரவமுமுள்ள குடிகளாகிய நாம் நம்முடைய அன்பையும் மரியாதையையும் மனோவாக்குக் காயங்களால் அவருக்குச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர் தம்முடைய பிரதிநிதிகள் முதலிய உத்தியோகஸ்தர் மூலமாகத் தெரிவிக்கும் அபிப்பிராயங்களுக்கு இணங்கி நடக்கவேண்டும். சட்டதிட்டங்களை அன்போடு அனுசரிக்கவேண்டும். ஏழைகளும் கல்வி கற்று விருத்தியடைவதற்கும், சுதேச கைத்தொழில்கள் விருத்தியாவதற்கும், ஜனங்களுக்குள்ள துராசார துரப்பியாசங்கள் நீங்குவதற்கும் செய்யும் ஏற்பாடுகள் எங்கெங்கும் பரவிப் பயன்படும்படி நம்மாலியன்ற அளவு முயல்வதோடு நமது நாட்டின் நன்மையை நாடி மனமும் வாக்கும் மகிழ்வுடன் ஒத்து ‘மன்னன் வாழ்க’ என்று வாழ்த்தக் கடவோம்.

*Translated by*—C. R. NAMA SIVAYA.

## கக்குவாய் இருமல்.

நிதானம்:—கக்குவாய் இருமலென்னும் இவ்வியாதியானது பெரும்பாலும் சிறுவர்களுக்கும், வெகு அபூர்வமாய்ச் சில வாலிபர் அல்லது வயது முதிர்ந்தவருக்கும் உண்டாகும் ஒருவித தொத்துநோய். இது சாதாரணமாய் ஜீவிதகாலத்தில் ஒருவருக்கு ஒரு தடவை வந்தால் மறு தடவை வருவதில்லை. குழந்தைகளுக்குக் கக்குவாயிருமலைப்பார்க்கிலும் உபத்திரவம் செய்யத்தக்க கொடிய நோய் வேறொன்றுமில்லை, தொண்டை மூக்குகளினுள்ளிருக்கும் சிவந்த ஜவ்வுகளில் ஜனிக்கும் சில சூக்ஷ்ம கிருமிகளின் மூலமாய் இவ்வியாதி பரவுவதாய் இக்காலத்திய இங்கிலீஷ் வைத்தியர்களின் கோட்பாட்டுக் கிணங்கச் சீதளமான பூமியில் நடமாடுவதாலும், மிகக் குளிர்ந்த காற்றுத்தாக்குவதாலும்; ஈரமான ஆடைகளை அணிவதாலும், பழைய ஆகாரங்களையும் கெட்ட பதார்த்தங்களையும் உபயோகிப்பதாலும் நெஞ்சில் தோஷங்கள் சேர்ந்து கபத்தை அதிகப்படுத்தி இவ்வித ரோகத்தை யுண்டுபண்ணுவதாக ஆரியர்களுடையவும் அபிப்பிராயமாகும். இந்த இருமல் ஆதியில் சாதாரண இருமலாக ஆரம்பித்துப் பின்பு சிறிது நாட்களுக்கெல்லாம் இவ்விருமல் மூச்சைப் பல நிமிஷங்கள் இழுத்துக்கொண்டே போகும்படி அவ்வளவு கோரமாக விருத்தியாய்ச் சில குழந்தைகளுக்கு அத்தருணத்தில் மூர்ச்சையையும் உண்டுபண்ணும். மிகக் கெட்ட இருமலில் சில சமயம் நாளொன்றுக்கு இருமலென்பது நமது காதுக்குக் கேட்கப்படாமலே உண்டாய் இருபது தடவைக்கு மேல் குழந்தைகளின் மூச்சை யிழுத்துக்கொண்டே போய் மகா சங்கடத்தை யுண்டுபண்ணுவதுண்டு. இவ்விருமலால் பீடிக்கப்படும் குழந்தைகளுக்கு இருமல் உண்டாகும் சமயம் சிறிது நேரத்திற்கு முன்னமே தெரிய வருமானதால் அப்பொழுது தனது தாய் முதலியவர்களை இழுத்துக்கட்டிக்கொண்டு பயத்துடன் பதறி யழத்துவக்கும்; சற்றுப்புத்தி வந்த குழந்தைகள் தாமிருக்குமிடத்தில் ஏதேனும் ஆதாரமிருந்தால் அதை நன்றாகப் பிடித்துக்கொண்டு இருமல் வருவதற்குச்சில நேரம் முன்னமே வெகு ஜாக்கிரதையாய் உட்கார்ந்த விடத்தில் ஸ்திரமாய்த் தங்களை நிலைநிறுத்திக் கொள்வார்கள். இந்த இருமலுண்டாகும் தருவாயில் அடிக்கடி வாந்தியுமெடுப்பதுண்டு. சில குழந்தைகளுக்கு இருமலின் வேகத்தினால் காதினுள்ளிருக்கும் ஜவ்வு கிழிந்து போவதும் மூக்கிலிருந்து இரத்தம் பெருகுவதும கண்கள் பிதுங்கி விழுவதுபோல் பயங்கரமாயிருப்பது முண்டு. கக்குவாயிருமல் ஆரம்பத்தில் கொஞ்சம் சுரம் ஜலதோஷம் இவைகளு மிருக்கும். மார்பில் பளுவாயிருப்பது போல் தோற்றும். சுரம் நின்றவுடன் இருமல் அதிகப்படும். இருமல் நின்றவுடன் குழந்தை சாதாரணமாய் ஆடிக்கொண்டிருக்கும் ஆனால்



இருமல் விட்டுவிட்டு வந்துகொண்டிருக்கும். இந்த வியாதி வெகுநாள் தொந்தரவு செய்யும்; சிலருக்கு இரண்டு வாரத்திலும்; மற்றும் சிலருக்கு பன்னிரண்டு வாரங்களிலும் இது கிரமமாக் குணத்தை யடையும்.

சிகிச்சை:—கக்குவா இருமலுண்டான குழந்தைகளை மற்றக் குழந்தைகளுடன் சேர்க்கக்கூடாது. இருமலால் கஷ்டப்படும் குழந்தைகளுக்கு எப்பொழுதும் கம்பளிப் போர்வை அல்லது ஆடைகளை உடுத்தியிருக்கவேண்டும். இருமல் ஆரம்பித்தவுடன் குழந்தையின் முதுகை ஒரு கையாலும், முன் நெற்றியை மற்றொரு கையாலும், கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளவேண்டும். முதுகையும் நன்றாய்த் தடவிக்கொடுக்கவேண்டும். போஸ்தக்காய்ப் போட்டுக் காய்ச்சிய ஜலத்தினால் முதுகிலும் மார்பிலும் நன்றாய்ச் சுடச்சுட ஒத்தடம் கொடுப்பது நலம். குளிர்ந்த காற்று வீசும் வெளிகளில் குழந்தைகளை விட்டிருக்கக் கூடாது, அப்போதைக்கப்போது ஆமணக் கெண்ணெய் கொடுத்து குடல்களைச் சுத்தமாக வைக்கவேண்டியது. நடுமுதுகிலும் மார்பிலும் கற்பூரத்தைலத்தையும் அடிக்கடி பூசிவரலாம். பால் கஞ்சி இனங்கள் முதலிய சீக்கிரம் ஜீரண்மாகக்கூடிய புஷ்டிகாமான உணவுகளை வேண்டிய வரையில் கொடுத்துவரலாம். அஜீர்ணம் செய்யக்கூடிய பதார்த்தங்களை கொஞ்சமும் கொடுக்கலாகாது. இருமும்போது வாந்தியானவுடனே ஆகாரம் கொடுத்தால் மற்றொரு தரம் இருமல் வருவதற்குள் ஜீரணமாய்விடும் நாம் சொல்லுவதை அறிந்து கொள்ளக்கூடிய புத்தியுள்ள குழந்தைக்கு உப்பு கரைத்த நீரை ஓர் அவுன்ஸ் சுத்தக்கண்ணாடி அல்லது பீங்கான் பாத்திரத்தில் வைத்து ஒரு நாளைக்கு மூன்று நான்கு தடவை மூக்கினால் உறிஞ்சச் செய்வது நலமாகும். சுத்தமான காற்று மெதுவாக உலாவக்கூடிய அறையில் உஷ்ணகுணமுள்ள (கம்பளியிற் செய்த) படுக்கையில் குழந்தைகளைத் தலையணையாய் விட்டு மேலேயும் சுறசுறப்பில்லாத கம்பளப்போர்வையைப் போர்த்து வைக்கவேண்டும் சுரத்துடன் கூடிய கக்கிருமலில் முதலில் ஆமணக் கெண்ணெய் கொடுத்து வயிற்றைச் சுத்தமாக்கிப் பின்பு குறிஞ்சா (Ipecacuanha) மூலிகையின் வேர் இலைகளை உலர்த்திப் பொடி செய்து 5-லிருந்து 10 குன்றுமணி எடை எடுத்து விளாம்பிசின் கொஞ்சம் சேர்த்து மாத்திரை உருட்டித்தினம் மூன்றுநான்கு தடவைக் கொடுக்கக் கக்கிருமல் குணமாவதுண்டு. குறிஞ்சாவைக் கொடுத்துவர வாந்தியும் சற்று அதிகம் உண்டாய்க்கபத்தை நன்றாய் வெளிப்படுத்தி அடிக்கடி இருமல் வருவதைத் தடுக்கும். இதில் அதிகம் கபம் வெளிப்படாமலிருந்தாலும், இருமலும் நெஞ்சு வலியும் அதிகமிருந்தாலும் சுத்தமான நவாசாரத்தில் 10-குன்றுமணி எடை நாட்டு அதிமதுரக் கஷாயத்தில் (இந்த கஷாயம்

பொடித்த அதிமதுரத்தூளால் காப்பியைப்போல் போட்டுக்கொள்ள வேண்டும்) சேர்த்து அத்துடன் கறுவாப்பட்டைத்தூள் ஒன்றிலிருந்து 5-குன்றுமணி வரையில் குழந்தையின் வயதுக்குத் தக்கவாறு சேர்த்து ஒரு நாளைக்கு 6-தடவை (இரண்டு மணிக்கு ஒருதடவையாய்) கொடுக்கலாம். சுரமில்லாமலிருக்கிற பழகிய இருமலுக்கு இரண்டு மூன்றுவயது குழந்தைகளுக்கு ஒன்று அல்லது இரண்டு குன்றுமணி எடை பெருங்காயத்தைச் சுத்த நீரில் கரைத்து நான்கு தேக்கரண்டியளவு இரண்டு மணிக்கு ஒருதரம் கொடுப்பதும் நலம். கடுகை ஜலம் விட்டு அரைத்துக் கட்டியாகவெடுத்து முதுகின் நடுவிலும் மார்பில் தோல்பட்டைகளுக்குச் சமீபங்களிலும் பத்து பதினைந்து நிமிஷம் போல்டீசுமாதிரி கட்டி எடுத்துவிடுவதால் இருமலினால் நேரிடும்வருத்தம் நீங்கும். கடுகு போல்டீசு போட்டால் சற்றுநேரத்திற்கெல்லாம் உடனே எடுத்துவிட வேண்டும் இல்லையேல் கொப்புளித்துப்போய்த் தோல் வெந்துவிடும். பவழபஸ்மம், வராடபஸ்மம் இவைகளை மூன்று குன்றுமணி எடை சேர்த்துமிளகு கஷாயத்துடன் கொடுக்கலாம். கக்கிருமல் விட்டபிறகு பலங்குன்றி ஜீர்ணசக்தியில்லாத இளைத்த குழைந்தகளுக்குச் சுவாஸாசயங்கள் (Lungs) பலப்படவும், பசி எடுத்து ஜீர்ணசக்தியுண்டாகி உடம்பில் வலுவுண்டாவதற்கும் சாகபாதி க்ருதம், திராக்ஷாரிஷ்டம் என்கிற மருந்துகளைச்சில நாட்கள் உபயோகித்து வருவதால் அக்குழந்தைகள் சுகப்படும்.

**பண்டித, எம். துரைசாமி அய்யங்கார்.**

---

## A LESSON ON MALARIA.

## மலேரியா என்னும் விஷஜ்வரத்தைப்பற்றியவொருபாடம்

மலேரியா அல்லது விஷஜ்வரமென்பது அபாயகரமான ஒரு வியாதி; இதனால் பிரதிவருஷமும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு— முக்கியமாய் யௌவன பருவத்திலுள்ள ஜனங்களுக்கு—தேகதுர்ப்பல்மோ அல்லது மரணமோ சம்பவிக்கிறது. கொசுக்கடி மூலமாய் மனிதனின் இரத்தத்தில் புகுந்து அந்த இரத்தத்தையே உணவாகக் கொண்டிருக்கிற கிருமிகளால் இந்தவியாதி உண்டாகிறது. இரத்தத்திலே சிவப்பணுக்கள், வெள்ளையணுக்கள் என்னும் இருவகை அணுக்கள் இருக்கின்றன. விஷஜ்வரக் கிருமிகள் சிவப்பணுக்களைப் பீடித்து அவைகளில் பலவற்றை அழித்துவிடுகின்றன; இக்காரணத்தினால் தான் விஷஜ்வரத்தினால் வருந்தும் ஒருவன் தேகம் வெளுத்து மெலிந்து போகிறான். மேலும் ஷெ கிருமிகளால் மண்ணீரலில் நாட்பட்ட வீக்க



மும் நோயும் ஏற்பட்டு இதனால் காலக்கிரமத்தில் ஜ்வரக்கட்டி உண்டாகிறது. விஷஜ்வரக் கிருமிகளில் மூன்று வகைகள் உண்டு; அவற்றுள் ஒரு வகையானது வெகுவேகமாய் விருத்தியடைகிறபடியால் பிரதி இருபத்துநாலு மணிநேரத்துக்கொருதடவை அவைகளிலிருந்து நூதன கிருமிகள் உற்பத்தியாகின்றன; மற்றொரு வகையான கிருமிகள் பிரதி நாற்பத்தெட்டு மணிநேரத்துக் கொருதடவை விருத்தியடைகின்றன; மூன்றாவது வகையில் நூதன கிருமிகள் உற்பத்தியாவதற்கு எழுபத்திரண்டு மணிநேரம் பிடிக்கிறது. இப்படி விருத்தியடைவதெல்லாம் மனிதனின் இரத்தத்தில் நேரிடுகிறபடியால் அந்த இரத்தத்தில் நூதன கிருமிகள் முட்டையிலிருந்து வெளிப்படும் தக்ஷணமே ஒருவனுக்கு ஜ்வரம் காணுகிறது. ஆகையால் அவனுக்குக்காணும் ஜ்வரம் இன்ன விதமென்பது கொசுக்கடியினால் அவனுடைய தேகத்துக்குள் என்ன விதமான கிருமி செலுத்தப்பட்டிருக்கிறதோ அதை அனுசரித்ததாகும். முதல்வகையான கிருமியாயிருந்தால், அவனுக்குப் பிரதிதினமும் ஜ்வரம் வரும். இரண்டாம் வகையான கிருமியாயிருந்தால், ஒன்றுவிட்டு ஒரு நாள் ஜ்வரம் வரும் (இது சர்வ சாதாரணமானது); மூன்றாம் வகையானதாயிருந்தால் மூன்றுநாளைக் கொருதரம் ஜ்வரம் வரும்; இவ்வெல்லா விஷயங்களிலும் நோய்க்குச் சிகிச்சை செய்யாமல் விட்டிருந்தால்தான் மேற்கண்டபடி ஜ்வரம் வரும்.

இம்மூன்றுவகைக் கிருமிகளில் ஒவ்வொருவகையைச்சேர்ந்த கிருமிகளாலும் ஒவ்வொரு விதமான ஜ்வரம் உண்டாகிறதென்பதல்லாமல் இந்தகிருமிகளில் ஒருவகையைச் சேர்ந்தவைகள் மற்றொருவகையைச் சேர்ந்தவைகளிலிருந்து தோற்றத்தில் வேறுபட்டிருக்கிறபடியால் அணுதரிசனி என்னும் பூதக்கண்ணாடியைக்கொண்டு இரத்தத்தைப் பரீக்ஷித்துப் பார்க்கும்பட்சத்தில் கிருமியின் தோற்றத்தைக்கொண்டு நோயாளிக்கு இன்னவிதமான விஷஜ்வரம் கண்டிருக்கிறதென்று சாமார்த்தியமுள்ளவொருவன் உடனே சொல்லக்கூடும்.

விஷஜ்வரங்கண்ட ஒருவனுடைய இரத்தத்தில் இந்த கிருமிகள் வெகு அதிகமாயிருக்கக்கூடும்; ஒவ்வொரு இரத்தத்துளியிலும் அவை நூற்றுக் கணக்காய் இருக்கின்றன. பெண் கொசுக்கள் இரத்தத்தை உண்டு ஜீவிப்பவையாகையால் அவைகள் தங்களுக்கு உணவு கிடைப்பதற்காக மனிதரை நருக்கென கடிப்பதுமல்லாமல் அவைகளை ஓட்டாமலிருந்தால் ஒவ்வொரு தடவையிலும் பல இரத்தத்துளிகளை உறிஞ்சுவிடுகின்றன. எவனுடைய இரத்தத்தை கொசுக்கள் உட்கொள்ளுகின்றனவோ அந்த மனிதனுடைய இரத்ததில் விஷஜ்வரக் கிருமிகள் இருக்கும் பட்சத்தில் அந்தக்கிருமிகளில் அநேகம் அந்தக் கொசுக்களின்

இரைப்பையில் புகுந்துவிடும். அந்தக் கொசுவானது அநோபிலிஸ் (Anopheles) என்னும் ஜாதியைச்சேர்ந்த ஒரு குறிப்பிட்டவகையான தாயிருந்தால் அதன் இரைப்பையிலே அடி கிருமிகளில் சில விருத்தியாகி இரைப்பையின் சுவரின் மூலமாய்த் துளைத்துக்கொண்டு அவ்வவயவத்தின் சவ்வுகளுக்குள்சென்று கடைசியாக அதன் உமிழ்நீர்க் கோளங்களில் பிரவேசிக்கும் அந்தக்கொசு மனிதனைக் கடிக்கும்போது தன உமிழ்நீர்க் கோளங்களில் அடங்கியிருப்பவைகளில் சிலவற்றை அவனுடைய தோலுக்குள் செலுத்துகிறது; அதனால், நம்மைக் கொசு கடிக்கும்போது நம்மெல்லோருக்கும் எவ்வளவோ பழக்கமாயிருக்கிற தினவு உண்டாகிறது; இந்த உமிழ்நீர்க்கோளத்திலுள்ள பதார்த்தத்திலே தான் விஷஜ்வரக் கிருமிகள் இருக்கின்றன; ஆகவே, இவ்விதமாக ஒரு மனிதனிடத்திலிருந்து இன்னொரு மனிதனுக்கு அடி கிருமிகள் மாற்றப்படுகின்றன. இந்தக் கிருமிகள் மனிதனுடைய இரத்தத்தில் வெகுவேகமாய் விருத்தியடைகின்றன. இவைபோதுமான அளவுக்கு விருத்தியடைந்தபிறகு, அந்தமனிதனுக்கு ஜ்வரம் கண்டு, அதற்கப்புறம் அது பிரதி 24-அல்லது 48-அல்லது 72-மணிநேரங்களுக்கொருதடவை வந்துகொண்டேயிருக்கும்.

விஷஜ்வர வியாதிஸ்தனைக் கொசுகடித்தவுடனே அவனிடத்திலுள்ள கிருமியையும் ஜ்வரத்தையும் இன்னொருவனிடத்தில் மாற்ற முடியாது. கொசு விஷஜ்வர ரத்தத்தை உட்கொண்டபிறகு, கிருமிகள் அதன் உமிழ்நீர்க் கோளங்களில் புகுவதற்குமுன் பல நாட்கள் (சுமார் ஒரு வாரம்) கழியவேண்டும். மேலும் தொத்துவியாதி சம்பந்தமுள்ள கொசு தேகரோக்கியமுள்ள ஒருவனுக்குள் கிருமிகளைச் செலுத்தினவுடனே ஜ்வரம்காணாது அந்தகொசு சில கிருமிகளைமாத்திரமே செலுத்துகிறது; அவைகள் ஜ்வரமுண்டாகும்படி செய்யக்கூடியவைகளாயிருப்பதற்குமுன் அநேக லக்ஷக்கணக்காய் விருத்தியாகவேண்டும். சாதாரணமாக கொசுக்கடியுண்டானபிறகு முதல்தடவை ஜ்வரம் காணும்படி செய்வதற்குப் போதுமானபடி கிருமிகள் வளர்வதற்கு 14 நாளுக்குக் குறையாமலும் 24 நாளுக்கு மேற்படாமலும் பிடிக்கிறது.

எல்லா கொசுக்களுமே விஷஜ்வரத்தைப் பரவச்செய்யும் சக்தியுடையவைகளல்ல. பலவர்ணமுள்ள இறக்கைகளையுடைய கொசுக்களில் அனோபிலஸ் என்னும் ஜாதியைச் சேர்ந்தவைகளுக்கே அவைகளிலும் பெண் கொசுக்களுக்கு மாத்திரமே இந்த சாமர்த்தியம் உண்டாயிருக்கிறது.

கொசுக்களில் மேற்சொன்னவகைபோக மற்றதும் மிகசாதாரணமு



மான வகைக்கு குலிஸைன்ஸ் என்று பெயர். அவை விஷஜ்வரத்தைப் பரவச்செய்வதில்லை; ஆனால், போகப்போக யானைக்கால்வில் கொண்டு வந்துவிடக்கூடிய ஒருவித கடும் ஜ்வரத்தை உண்டாக்குகிற பிலேரியா என்னும் கிருமிகளை ஒரு மனிதனிடத்திலிருந்து இன்னொரு மனிதனுக்குப் பரவச்செய்கின்றன. ஆகவே கிராமங்களிலும் பட்டணங்களிலும் அவைகளைச் சுற்றிலும் உள்ள கொசுக்களையெல்லாம் அடியோடு அழிக்கவேண்டும்; ஜனங்கள் பரஸ்பரம் ஒத்துழைத்தால் இந்தக்காரியம் நிறைவேறும்.

வயதுவந்த அனோபிலன் கொசுக்கள் சுவரின்மேல் தங்கும்போது, தம் சரீரங்களை மூலைவாட்டாக வைத்துக்கொண்டிருக்கும்; அதாவது, தலையும், துதிக்கையும் (கொசுக்கள் கடிக்கும்வாயின் பாகமும்) சரீரமும் சமரேகையாயிருந்து, கொசுவானது சுவரில் சாய்வாக ஒட்டிக்கொண்டிருக்கும் ஒருசிறு முள்ளைப்போல் காணப்படும்; இந்த அடையாளத்தைக் கொண்டு, இந்த ஜாதிக் கொசுக்களைத் தெரிந்துகொள்ளலாம். குலிஸைன் கொசுக்கள் சுவரின்மேல் தங்குகையில் அவைகளின் சரீரம் சுவர் மட்டத்துக்குச் சரியாயிருப்பதுடன் கூன்முதுகுள்ளவைபோல் காணப்படும். அனோபிலன் கொசுக்கள் இளங்கபில நிறமுள்ளவைகளாகவோ கருங்கபில நிறமுள்ளவைகளாகவோ இருக்கும்; குலிஸைன் கொசுக்கள் சாம்பல் நிறமாகவோ கபில நிறமாகவோ கரு நிறமாகவோ இருப்பவைகளாய் வெண்ணிறப் பட்டைகள் அல்லது கீற்றுகள் உடையவைகளாயிருக்கும். அனோபிலன் கொசுக்களின் இறக்கைகளில் புள்ளிகளிருக்கும்; குலிஸைன் கொசுக்களின் இறக்கைகள் சாதாவாயிருக்கும்.

எல்லாக் கொசுக்களும் ஜலத்தில் உற்பத்தியாகின்றன. ஜலத்திலேயே அவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. புழுதசையிலுள்ள (larvæ) அல்லது நெளிந்து புரண்டோடும் தசையிலுள்ள (wrigglers) கொசுக்கள் 24-மணி நேரமுதல் 48-மணி நேரத்துக்குள் ளாக முட்டைகளிலிருந்து ஜலத்தில் வெளிப்படுகின்றன. அப்போது உணவு கிடைப்பதற்காக நீர்மட்டத்துக்குக்கீழ் இருக்கவேண்டும். சுவாஸம் விடுவதற்காகக் அவைகள் இடையிடையே நீர்மட்டத்துக்குமேல் வரவேண்டிருக்கிறது; இல்லாவிட்டால் அவைகள் மூழ்கிப்போய்விடும். அவைகள் தேகத்தின் வால்நுனியிலுள்ள ஒரு குழாய் மூலமாய் சுவாஸம் விடுகின்றன. நெளிந்து புரண்டோடும் தசையிலுள்ள கொசுக்கள் நனைந்த புல்லிலாவது ஈரமான தரையிலாவது வளரமுடியாது. அவை குறைந்தது அரை அங்குலம் ஆழமுள்ள தண்ணீரில் ஜீவிக்கின்றன; அதனால் அவைகள் பூர்த்தியாய் வளர்ந்து தலைகீழாய் மிதக்கும்போது, நீரின் அடிப்பாகத்தைத் தொடாமலிருக்கின்றன.

புழுதசையிலிருக்கும் அனோபிலேன் ஜாதியைச்சேர்ந்த கொசுக்களை அவைகள் நீர்மட்டத்துக்கு அடியிலேயே தட்டையாய்ப் படுத்திருப்பதையும் துள்ளித்துள்ளி பின்பக்கமாய் அசைவதையுங்கொண்டு சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். குலிஸைன் ஜாதியைச்சேர்ந்த கொசுக்கள்நீரில் தலைகீழாய்த் தொங்குகின்றன; அவைகளுக்கு நீண்ட சுவாஸக்குழாய் இருக்கிறது; அவை நெளிந்து புரண்டு முன்னுக்கு அசைந்துசெல்லும்.

மேற்கண்ட புழுதசையிலாவது அல்லது நெளிந்து புரண்டோடும் தசையிலாவது அவைகளின் பூர்ணமான பரிமாணத்துக்குச் சரியாய் வளர்வதற்கு ஆறு முதல் பத்துநாள் வரையில் செல்லும்; சிலசமயத்தில் அதைவிடக் குறைந்த காலம் செல்லும். அவைகளின் பூர்ணமான பரிமாணத்துக்குச் சரியாய் அவை வளர்ந்துவிட்டால் அவை திடீரென்று தங்கள் தோல்களிலிருந்து வெளிப்பட்டுத் தண்ணீரில் அங்குமிங்கும் துள்ளிக்கொண்டு முற்றும் புதிய பூச்சிகளாய்க் காணப்படுகின்றன. இந்தப்பூச்சிகளுக்கு ப்யூபே (Pupæ) அல்லது நிம்புகள் (Nymphs) என்று பெயர். இந்த தசையானது இரண்டுநாள் முதல் நாலுநாள் வரையில் இருக்கிறது. பிறகு அவைகள் தண்ணீரின் மேற்பாகத்தில் மிதந்துகொண்டிருக்க, அவற்றிலிருந்து கொசுவானது இறக்கைகளுடன் கூடிய வயதுவந்த பூச்சியாக வெளிப்படுகின்றது; இந்தக்கொசு முழுவளர்ச்சியுடையதாய் ஒருவேளை உணவு கிடைத்தவுடனே தன் இனத்து ஜந்துக்களை உற்பத்திசெய்வதற்கு ஸித்தமாயிருக்கும். மூன்று நான்கு தினத்தில் அது நீரில் தன் முதல் வரிசை முட்டைகளையிட்டு இன்னும் அதிகமான முட்டையிடுவதற்காக அதிக இரத்தம் உறிஞ்சும் பொருட்டு இராக்காலத்தில் புறப்பட்டுப்போகும். (இன்னும்வரும்).

V. RAGAVA CHARLU,
*Tamil Translator to Government.*

## சுகாதாரவிதிகள்.

(சென்ற மாத சஞ்சிகையின் 190-வது பக்கத் தொடர்ச்சி.)

2. உணவு பானாதிகளில் மிதமுள்ளவர்களாயிருக்கவேண்டும். போதையுண்டுபண்ணும் பானங்களை உபயோகித்தல் தேகத்திற்கு மிகவுங்கெடுதி யுண்டாக்குவன என்பதைப்பற்றி நாம் அவ்வளவாக எடுத்துச்சொல்ல வேண்டுவதில்லை. நல்ல குடும்பத்தில் அவை விரும்பத்தகாத பானங்கள் என்று கருதப்படவேண்டும். மிதம் என்பது இவற்றை ஒழிப்பது மட்டுமல்ல அதிகமான உணவை உட்கொள்வதையும் ஒழிக்கவேண்டும். பரிசுத்தமானதும் சாதாரணமானதும் உடம்பைப்போஷிக்கக்கூடியது



மான உணவே தினந்தோறும் உபயோகிப்பதாயிருக்கவேண்டும். மாம்ஷபதார்த்தங்கள் பலத்தைக்கொடுக்கின்றன என்னும் விபரீத உணர்ச்சியை ஒழித்துவிடவேண்டும், பலமுண்டாக்குவதற்கு மாமிஷபதார்த்தங்கள் காரணமாக எண்ணக்கூடாது ஏனென்றால் அவை எவ்வளவுக்கெவ்வளவு விலையுயர்ந்தவையாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கு அவை உடலைப்போஷிக்கும் தன்மையிற்குறைந்தும் மாமிஷங்கள் அழுகுவதனாலுண்டாகும் கெட்ட வஸ்துக்குள் நிறைந்தும் இருக்கின்றன. கடுகு, மிளகு, மிளகாய் முதலியவை அதிகமாய்ச்சேர்ந்த காரபதார்த்தங்கள் சீரணக்கருவிகளில் உறுத்தலுண்டாக்கி அதிகதாகத்தைக் கொடுப்பதினாலே அவையும் பெரும்பான்மையும் நீக்கப்படுதல்வேண்டும். வாயிலிருக்கும்போதே உணவைச் செவ்வையாகமென்று உட்கொள்ளவேண்டும் அவசரமாகச் சாப்பிடக்கூடாது. சீக்கிரம் சாப்பிட்டேன் என்று சிலர்கொள்ளும் பெருமை வீண்பெருமை, அளவுக்குமிஞ்சிச் சாப்பிடக்கூடாது. வெயிற்காலத்தில்நாம் சாப்பிடும் உணவை ஜீரணிப்பதிலும் அவற்றிலுள்ள போஷணா வஸ்துக்களை உட்கொண்டு மீந்ததை வெளிப்படுத்துவதிலும் நமது ஜீரணக்கருவிகள்படும் அவஸ்தையே நாம அக்காலத்திற் கொள்ளும் ஒருவிதமான களைப்பான உணர்ச்சிக்குக் காரணமாகும். வெயிற்காலத்தில் தேகத்தைச் சுககரமாகவும் வேலைக்குத் தகுதியுள்ளதாகவும் வைத்திருக்கவேண்டுமானால் மிகவும் சொற்பமாகவும் மிதமாகவும் உணவை உட்கொள்ளவேண்டும்.

3. தேகத்தை மிதமிஞ்சி வெயில் காற்று மழை முதலியவற்றிலடிபடவைக்கக்கூடாது, இதனால்காற்றுவெயில் முதலியவை உடம்பில் படக்கூடாதென்று அர்த்தமல்ல, வெளியில்போய் நல்லகாற்றில் நின்றுவேலை செய்யுந்தொழிலாளி உண்மையாகவே மிகவும் இன்பத்தை யனுபவிப்பவனே, சரியானபடி உடுப்புகள் மட்டும் தரித்திருப்பானேயானால் அவன் பருவங்களின் மாறுதல்களினால் யாதொரு கெடுதியுமடையமாட்டான். வெயில் முதலியவற்றில் உடம்பை அடிபடவைத்தல் என்று நாம்சொல்வதெல்லாம்கூடி உடம்பு சீதோஷ்ணநிலைமைகளினால் பாதிக்கப்படக்கூடிய ஸ்திதியிலிருக்கும்போது சரியாகக்காக்கப்படவேண்டும். என்பதே உதாரணமாக உடம்பில் வேர்வை மிகுதியாகும் காலத்தில் குளிர்ந்த காற்று மேலேபடும்படி சும்மா இருத்தல் அபாயத்துக் கேதுவுண்டாகும். அதுபோலவே அக்காலங்களில் பாதங்களை ஈரமாகவைத்திருத்தலானது ஜலதோஷ முதலிய பல வியாதிகளுக்கிடமாகும், இப்பேர்ப்பட்ட விஷயங்களில் சிறிது அசிரத்தையாயிருந்தால் அது நீண்ட வருத்தத்தைக்கொடுக்கும். நோவிற் காதாரமாகும் சில சமயங்களில் மரணத்தையும் விளைவிக்கும்.

4. எப்போதும் வேலையுள்ளவர்களாக யிருக்கவேண்டும். அதாவது உண்ணுதலும் உடுக்காமலும் உலகவாழ்க்கையைப் பிறவழிகளிலும் தனக்கும் பிறர்க்கும் சுகமுள்ளதாக ஆக்கலும் நாள்முழுதும் வேலை செய்துகொண்டிருக்கவேண்டும் என்பதும் இதன் பொருளல்ல. தன்மரியாதையைக் காப்பாற்றுதலும் தன்னைத் தானடங்கியாளுதலும் தன்னாலான நன்மையைச் செய்தலும் எந்த விஷயத்திலும் தன்னாற்கூடுமான முயற்சிசெய்தலும் உலகவாழ்க்கையில் இன்பந்தரத்தக்க அழகிய பொருள்களுடன் பழகிவருதலும் முக்கியமாக எப்போதும் மனிதனாகப் பிறந்தவனுக்கு உள்ள கௌரவத்தையும் யோக்கியதையையும் மறந்துபோகாமற் காப்பாற்றுதலும் ஆகிய இவையும் இன்னம் இவைபோல்வன பிறவும் நோக்கமாக உடைமையே நாம்மேலே எப்போதும் வேலையுள்ளவர்களா யிருக்கவேண்டும் என்பதனாற் குறிப்பிட்டபொருள். கையினால் உழைத்து ஜீவிப்பதுயாதொரு விதத்திலும் இழிவானதல்ல. அதைச்சரியானபடி செய்தால் அது மனத்தையும் உடம்பையும் நல்வழிப்படுத்தி உயர்த்துகின்ற தொழிலாகும். (இன்னும் வரும்.)

பூ. ப. செல்லக்குமார கவுண்டர்,
கணக்கன் பட்டி.

## பொட்டுக்கட்டிவிட்டதற்காகக்
### கடுங்காவல் தண்டனையடைந்த ஓர் கோவில் தாசி.

சென்னையில் வசித்துவரும் ராஜம் என்னும் பெயருடைய ஒருகோவில் தாசி 1905-ம் வருஷம் தன்சகோதரன் புத்திரியை ஸ்வீகாரமாய் எடுத்து வளர்த்து வந்தாள். அந்தப்பெண்ணுக்கு வயது பத்துஎன்று ஸ்வீகாரபத்திரத்தில் கண்டு இருவரும் பத்திரத்தை ரிஜிஸ்டர்செய்துகொண்டார்கள். 1910-ம் வருஷத்தில் சென்னையிலுள்ள அருணாசலேஸ்வரர் கோவிலுக்குப் பொட்டு கட்டிவிட எண்ணி மேற்படி ஆலயத்தின் டிரஸ்டிகளிடம் ராஜம் என்பவள் ஒருமெடிகல் சர்ட்டிபிகேட்டைத் தாக்கல்செய்தாள். அந்த சர்ட்டிபிகேட்டில் மேற்படி பெண்ணுக்குப் பதினேழு வயது என்று கண்டிருந்தது. ஆனால் 1905-ம் வருஷத்தில் மேற்படி பெண்ணுக்கு வயது பத்து என்று ஸ்வீகாரப்பத்திரத்தில் கண்டிருந்தபடியால் 1910-ம் வருஷத்தில் அவளுக்குப் பதினேழு வயது எவ்விதம் ஆகுமென்று டிரஸ்டிகள் சந்தேகித்து, ராஜம் தாக்கல்செய்த மெடிகல் சர்ட்டிபிக்கேட்டை அங்கீகரியாமல் சென்னையிலுள்ள சிறுவர் சம்ரட்சணை சங்கத்தின் கௌரவகாரியதரிசியான, டாக்டர் விஜயராகவலுடன் கலந்துயோசித்தார்கள்.



மிஸ்டர் விஜயராகவலு இப்போது அப்பெண்ணுக்குப் பொட்டு கட்டுவதை ஒப்புக்கொள்ள முடியாதென்றும், இன்னும் ஒரு வருஷங்கழித்துக் கட்டலாமென்றும் நயமாக மேற்படி தாசிக்குக்கூறி, அவள் காட்டிய மெடிகல் சர்ட்டிபிகேட்டையும் அவளிடமே கொடுத்து அவளை அனுப்பிவிட்டார். ராஜம் அத்துடன் பேசாதிருக்கக் கூடாதா? மறுபடியும் ஒரு வைத்தியரிடம் சென்று மேற்படி பெண்ணுக்குப் பதினாறு வயது என்று ஒரு மெடிகல் சர்ட்டிபிக்கேட்வாங்கி 1910-வருஷம் ஆகஸ்டுமீல் மேற்படி பெண்ணைக் காஞ்சிபுரத்திலுள்ள ஒரு சிறு கோவிலுக்குப் பொட்டுகட்டிக்கொடுத்துவிட்டாள். இந்தச்செய்தியை அறிந்த சிறுவர் சம்ரட்சணை சங்கத்தார் உண்மையைக்கண்டு பிடிக்க விரும்பி முனிஸிபல் ரிகார்டுகளைத் தேடிப்பார்த்தார்கள். அவ்விதம் பார்த்ததில் மேற்படி பெண் 1895-ம் வருஷம் அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி பிறந்ததாகத் தெரியவந்தது. பெண்ணுக்கு மைனர் நீங்குவதற்கு முன்பு ராஜம் அப்பெண்ணைக் காஞ்சிபுரத்தில் பொட்டுக் கட்டிவிட்டது குற்றமென்று மேற்படி சங்கத்தார் கண்டு விஷயத்தை அதிகாரிகளுக்கு அறிவிக்கலானார்கள். இந்தியன் பினல்கோர்டு 372, 373-வதுசெக்ஷன்படி ராஜத்தைப்பிராசிகியூட்செய்து முதலில்செங்கற்பட்டு ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட்டால் கேஸ் விசாரிக்கப்பட்டது. அவர் அவளை விடுதலைசெய்துவிட்டார். மேற்படி சங்கத்தார் பழையபடியும் கேஸை ஹைகோர்ட்டுக்குக் கொண்டுபோனார்கள். மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன் கேஸை விசாரித்து சென்றமாதம் 2-ஆம் தேதி தீர்ப்புச்சொன்னார். ஜட்ஜ்மெண்டு மிக நீண்ட தொன்றாக இருந்தது. ராஜத்துக்கு ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. பொருளுக்கு ஆசைப்பட்டு தாசிகள் சிறுபெண்களை மைனர் நீங்குவதற்கு முன்பே கோவில்களில் பொட்டுக்கட்டிவிடுகிற வழக்கம் தென்ஜில்லாக்களில் அதிகமாக இருந்துவருகிறது. இப்படிப்பட்ட தாசிகளுக்கு இந்தக்கேஸ் ஒருநற்போதனையாக இருக்கிறது. சிறுவர் சம்ரட்சணையின் பொருட்டு மேற்படி சங்கத்தார் எடுத்துவரும் ஊக்கமும் கவலையும்பாராட்டத்தக்கது.

## விஷத்துக்கு மெய்யான மந்திரம்.

நமது ஹைதராபாத், கனம். நிஜாம் அவர்களுடைய பெயரைச் சொன்ன மாத்திரத்தில் விஷம் தீரும்படியாக அவர்கள் ஒருவகை சித்தியடைந்திருந்தார்கள். அந்த விபரங்கண்டு மந்திரமாகச்சொல்லவேண்டிய அவர்கள் பெயருடன் பல விளம்பரங்கள் வெளிப்படுத்தியிருந்தோம். அவற்றின் உதவியைக்கொண்டு அநேகர் ஆச்சரியப்படும்படி பல இடங்களில் விஷங்களைத்தீர்த்துக் கடிதங்கள் எழுதினார்கள். எந்தவகை மந்திரத்தால் தீராத கொடிய விஷங்களும் தீர்ந்திருக்கின்றன. இத்தகைய மந்திரம் உலகத்தில் பரவிவரும்போது இடுமென நிஜாமவர்கள் கால

மாய்விட்டார்கள். அதனால், இனி என் செய்வதென்று நாம் யோசித்திருந்தோம். அப்படியிருந்த கவலை தீரும்படி இப்போது அவர்கள் பேருக்குப்பதிலாக அவர்களின் குமாரரவர்களின் பெயரைச்சொன்னால் முன்போலவே விஷம் நீங்குமென்று பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. ஆதலால், இனி அந்தப்பெயரைச்சொல்லி எல்லோரும் விஷத்தைப்போக்கிக்கொள்ளலாம். விஷத்தை இறக்கவேண்டிய காலத்தில் அவர்கள் பெயரைச்சொல்லி மந்திரம் உச்சரிக்கும் விபரமாவது.

**"ஏ விஷமே! உனக்கு மீர் உஸ்மான் அலிகான் அவர்களுடைய சத்தியம் ஏற்பட்டிருக்கிறது. இறங்கிப்போ, நான் இதைப்பற்றி ஒரு மாதத்துக்குள் அவர்களுக்குத் தெரிவிப்பேன்."**

இந்த மந்திரத்தை விஷந்தீண்டினவனுக்குக் கேட்கும்படி உரததுச் சொல்லிவிடவேண்டியது உடனே விஷம் நீங்கிவிடும். அதன்மேல் மேற்கண்ட மந்திரத்தில் குறித்தப்படி இவ்வாறு விஷம் நீங்கிய விபரத்தைப்பற்றி ஒரு மாதத்துக்குள் நிஜாம் அவர்களுக்கு, "தங்கள்பெயரால் இன்ன பெயருடையவருக்கு விஷம் தீர்ந்தது" என்று கடிதமெழுதிவிடவேண்டும். அவ்வாறு எழுதும் கடிதத்தின்மேல் கவரின் ஒரு மூலையில் பாம்பு விஷம் என்று அவர்களுக்கு அடையாளம் தெரியும்படி எழுதி வைக்கவேண்டும். கடிதமெழுதுவதாகக் குறிப்பிட்ட நாளைக்குள் எழுதாவிட்டால் மறுபடியும் விஷம் வந்துவிடும். ஆதலால் தவறாமல் கடிதமெழுதவேண்டும். மந்திரம் சொல்லும்போது கடிதம் எழுதுவதற்குச்சொல்லும் நாளை இஷ்டம்போல் மூன்று வருஷத்துக்கு அதிகப்படாமல் ஏற்படுத்திக்கொள்ளலாம். இந்த மந்திரத்தை விஷம் தீண்டினவன் தனக்குத்தானேயும் சொல்லிக்கொள்ளலாம். பிரக்ஞை தப்பினவனுக்கும் ஆடுமாடு முதலியவற்றிற்கும் காதில் சொன்னால் போதும், விஷம் தீர்ந்ததைப்பற்றி நிஜாம் அவர்களுக்கு எழுதும்கடிதத்தின் மேற்கவரில் "ஹைதராபாத்து, டக்கான்" என்று விலாசமெழுதினால் அவர்களுக்குக் கிடைத்துவிடும். அது கிடைத்தவுடன் அவ்விஷயத்தை ஒப்புக்கொண்டதாக அவர்கள் பதில் எழுதுவார்கள்.

"இஸ்லாம்நேசன்.

## புத்தகவரவு.

**ஸ்ரீ காசியாத்திரா மான்மிய கங்காயாத்ரா தீபிகை:**—இப்புத்தகத்தில் தீர்த்தம் க்ஷேத்திரம் மூர்த்தி முதலிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற மகாக்ஷேத்திரமாகிய காசிக்ஷேத்திர மான்மியமும், சகல ஜீவாத்மாக்களின் பந்தபாசங்களைப் பற்றற அறுத்து பார்வதிபங்கன் பாதஞ்சேர்க்கும் ஒப்புயர்வற்ற கங்காநதியின் பிரதாபமும் புண்ணியபூமியாகிய இப்பரதகண்டத்திலுள்ள ஒவ்வொரு க்ஷேத்திரங்களுடனும், அந்தந்த க்ஷேத்திர வரலாறுகளுடனும் மிகஇனிய செந்தமிழ் நடையில்வரையப்பட்டிருப்பதானது மிகவும் நன்றாய் இருக்கிறது. இவ்வாறு தமிழ்மக்களுக்குப்பெரிதும் பயன்படுமாறு இவ்வரிய நூலை இயற்றிவாருகிய திருவையார் ஸ்ரீமான்பாரி சிவராமசாஸ்திரியாரவர்களுக்கு நன்றிசெலுத்தத் தமிழுலகம் கடமைப்பட்டிருக்கிறது. தமிழறிந்த ஒவ்வொருவர் கையிலும் இப்புத்தகத்தின் பிரதியொன்று இருப்பது இன்றியமையாதனவாகும இதன் விலை 1—8—0 இப்புத்தகத்தை நமக்கு நேரில் உபகரித்த ஆசிரியரவர்களுக்கு நமது மனப்பூர்வமான நன்றியறிதலைச் செலுத்துகிறோம்.



## வர்த்தமானங்கள்.

**சூரியன் குஞ்சு:**—சிட்டினி என்னும் நகரில் ஒருமின்சார விளக்கு அமைக்கப்பட்டிருக்கின்றது. அது எட்டுகோடி இருபது லட்சம் மெழுகுவர்த்தியினொளியுடையதாம்.

**தபாற்தோகை:**—உலகம் முழுவதும் வருடம் ஒன்றிற்குச்சராசரி 1200-கோடி காயிதங்களெழுதப்படுகின்றன. நாளொன்றுக்கு எழுதப்படுவது 3-கோடியே 30-லெட்சமாம்.

**செடிவளர்க்கும்மின்சாரம்:**—சுவிஸர்லாண்டு தேசத்திய சாஸ்திரியொருவரால் ஓர் நூதனமான இயந்திரங்கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது அதன்மூலமாய் விதைகள் விரைவில் முளைத்து ஏராளமான பயனைத்தருகின்றனவாம். கெட்டுப்போன விதைகளும் மின்சாரத்தின் உதவியால் முளைத்து விடுகின்றனவாம். இதன்சோதனை லண்டனில் நடைபெறுகிறது.

**கந்தகச்சுரங்கம் வெடித்ததால் நேர்ந்த விபத்து:**—சிசிலித்தீவில் ட்ரேயொனல்லா என்னும் பிறதேசத்திலிருக்கும் கெந்தகச்சுரங்கம் சிலதினங்களின்முன் திடும்பிரவேசமாய் வெடித்துப்போனது. இதனால் அங்குவேலை செய்துகொண்டிருந்த 42-பேர் உடனேயுயிர்துறந்தனர். இவர்களைத் தப்பிவிக்கும்பொருட்டு வெளியிலிருந்து சென்ற இருவரும் யாதும் சாத்தியப்படாது மாண்டனராம்.

**இங்கிலாந்தும் பொய்ப்பல்லும்:**—பிரதி வருஷமும் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு 2-கோடி பொய்ப்பற்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனால் இங்கிலாந்தில் சுயபற்களையுடையோர் ஒருவராவதிருக்கமாட்டார்களென்றும் க்ரேட் ப்ரிட்டனில் அரைவாசிப்பேர் பொய்ப்பல்லுடையவர்களென்றும் காணப்படுகிறது. அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் ஸ்திதி இதற்குக் குறைந்ததல்லவாம்.

**குழந்தையை நாய்காத்தது:**—லண்டன் பட்டினத்திலுள்ள ஓர் வீதியில் ஓர்குழந்தை விளையாடிக்கொண்டிருந்தது. அச்சமயத்தில் மிகவும் தீவிரமாக இக்குழந்தைக்குச் சமீபத்திலோர் குதிரைவண்டி வந்துவிட்டது. ஆங்குநின்ற ஓர்நாய்திடீரெனப்பாய்ந்து. குழந்தையை அப்புறம் இழுத்துக் காப்பாற்றியது. இரண்டு விநாடிகளதிகமாயிருந்தால்குழந்தை யிறந்தே போயிருக்கும். இதைக்கண்ட ஓர்சீமாட்டி அந்நாய்க்கு வெள்ளியினால் ஓர் கழுத்தாபரணம் போட்டனள். ஆ! ஆ! நாயின் அறிவே அறிவு!

**இந்திய ஸென்ஸஸ்:**—உத்தியோக முறைப்படி முடிவான கணக்கு. 1911-வருஷத்திய ஸென்ஸஸ்படிக்கு இந்தியாவிலுள்ள ஜனத்தொகையின் மொத்தம் 315,132,537, சென்ற ஸென்ஸஸை விட ஜனத்தொகை நூற்றுக்கு 6.71 அதிகமாயிருக்கிறது. பம்பாய் ராஜதானி 19672642, மதராஸ் 41405404, ஐதராபாத்து 13374676, மைசூர் 5806198, கொச்சி 918110, திருவனந்தபுரம் 3428975, இந்தியா மொத்த ஜனத்தொகை 315132537-ல் ஆண்கள் 161326,110-ம், பெண்கள் 153,806,427-ம் ஆவார்கள்.

**கங்கையில் வாராவதி:**—கங்காநதியின் கீழ்பாகத்தில் வாராவதி கட்டுவது தற்போது இரண்டாந்தரமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இது 5857-அடி நீளமுடையதாம். இதன்மேல் இரட்டைலயனுள்ள இருப்புப்பாதை போடப்படும். இதனை ஜலப்பெருக்கு உண்டாகாதபடி அதனிருபுறத்தும் 4000-அடி நீளமுள்ள அணைகள் கட்டப்பட்டு வருகின்றன. இதில் 20000-ஜனங்கள் வேலைசெய்கின்றார்களாம்.

**பூமிக்குள் ரெயில்:**—லண்டன் நகரில் பூமிக்குள்ரெயிலோடுகிறது. பாதாளத்திலிருந்து பிரயாணிகள் மேலே வரவேண்டுமானால் மனிதனை இழுத்துக்கொண்டுவரும் ஒருவித யந்திர சகாயத்தைக்கொண்டு மேலேற வேண்டும். இப்படி ஏறுவதில் அதிக நேரமாகிறதென்று யோசித்து இப்போது நூதனயந்திரமொன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. படிப்படியாயுள்ள ஏணி ஒன்று அந்த இடத்தில் சுற்றிக்கொண்டேயிருக்கும். பூமியை யடையவிரும்புவோன் அந்த ஏணியின் படியில் காலை வைப்பானேயானால் உடனே நிலத்தையடையலாம்.

**ஊரூராய்த் திரியும் வைத்தியர்கள்:**—கண், பல் இவைகளின் வியாதியை சொஸ்தம் செய்துவிடுவதாகச் சொல்லிக்கொண்டு இதர தேசங்களிலிருந்துவரும் அன்னியர்களிடம் வைத்தியம் செய்துகொள்வதில் வெகு ஜாக்கிரதையோடு இருக்கவேண்டுமென்பதைத் தங்கள் ஊர் ஜனங்களுக்கு கிராம முனிஸிப்புகள் எச்சரிக்கவேணும், யாருக்கு வைத்தியம் செய்வதாகச் சொல்லப்படுகிறதோ அவர்களுக்கு இவர்களால் பெரிய அபாயங்கூட உண்டாகிவிடுகிறதென்று தஞ்சாவூர் கலெக்டர் டிஸ்டிரிக்டு கெஜட்டில் ஒரு விளம்பரம் செய்திருக்கிறார்.

**ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவர் காலஞ்சென்றார்:**—ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரைப்பற்றிக் கேள்வியுறாத தமிழர் இராரென்பது திண்ணம். மதுரையில் தமிழ்ச்சங்கத்தை ஸ்தாபித்து அதற்குப் பிரஸிடெண்டாயிருந்து வந்த இவர் ஏழைகளுக்கும் தமிழ் வித்வான்களுக்கும் பேருதவி செய்திருக்கிறார். இவருக்கு வயது 42-தான். இவ்வளவு இளவயதிலேயே இவர் சென்ற சனியன்று மரித்துப்போனது தமிழுலகத்திற்கு மிகுதியும் விசனத்தைத்தரத்தக்கதே. இவருக்குப் பிறகு மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் கதி என்னவாகுமோ என்று அஞ்சும்படியாகவுமிருக்கிறது.

**டில்லிதர்பாரும் திருவாவடுதுறை மஹா சன்னிதானமவர்களும்.**

திருவாவடுதுறை பண்டார சன்னிதி சக்கரவர்த்தி தம்பதிகளுக்குக் குதூகலத்துடன் நல்வரவு கூறுவதாக தந்திகொடுத்தார். பண்டார ஸன்னிதிக்கு சக்ரவர்த்தியின் பதில் தந்தி. சக்ரவர்த்தியின் அந்தரங்கக் காரியதரிசி பண்டாரசந்நிதிக்கு அவர் அனுப்பிய ராஜவிஸ்வாஸத் தந்திக்காக சக்ரவர்த்திவந்தன மளித்ததாய் தெரிவித்தார். டிஸம்பர்மீ 2உ பகல் 2-மணிக்கு மாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்தி சக்கரவர்த்தினி அவர்கள் இந்தியாவில் வந்திறங்கும்தினத்தில் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாகனம் தங்கிய மகாசன்னிதானம் அவர்கள் 101-வெடிகள் போடுவித்தார்கள். 11உ இரவு திருவிடமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமியின் ஆலயத்தில் லக்ஷதீபம்போட்டு சிறப்பிவித்தார்கள். 12உ திருவிடமருதூரிலுள்ள திருவாவடுதுறை மடத்தில் சங்கீதகச்சேரி கதைமுதலியவைகள் நடத்தப்பட்டன. மாலை 1-மணிமுதல் 3-மணிவரையில் மடத்தில் சகல ஏழை ஜனங்களுக்கும் அன்னம் வஸ்திரம் கொடுக்கப்பட்டன.



## பிரசிநோத்தர ரத்நமாலை என்னும் ஓர்வேதாந்த சாஸ்திரம்.

இது யாவருக்கும் புலப்படும் படியாக செந்தமிழ் நடையில் வினவிடை ரூபமாய் விரிவான 1000-பிரசிநோத்திரங்கள் வரை நல்ல வெண்மையான கிளேஸ் பேபரில் தெளிவான அக்ஷரங்களால் பாரம் 8.பேஜுப சைஸில் ஏறக்குறைய 150-பக்கங்கள் வரை அச்சிடப்பட்டுள்ளது. இதில், அகண்ட பரிபூரண ஸச்சிதானந்த ஸ்வரூபத்தின் மூன்று லக்ஷணங்களும், உள், வெளி, என்ற இருவகைப் பிரபஞ்ச விஷயங்களும், அதாவது இந்த உலகத்தைப்போல் நம் சரீரத்தினுள்ளிருக்கும் உலக விசித்திரங்களும், கர்மம், பக்தி, ஞானமாகிய மூன்று யோக விஷயங்களும்; பிர்மம், சக்தி, திருமூர்த்தி என்பவைகளின் வரலாறுகளும், ஈசுவர நிரணயத்தைப்பற்றிய ஒவ்வொரு மதஸ்தரின் அபிப்பிராயமும், கங்கா நதியின் உற்பத்தியும், மகாமேருவின் சிறப்பும், சூரியனுடைய லோக யாத்திரையின் சூக்ஷமமும் இன்னும் இதுபோல் பல சிறந்த விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. தேவையுள்ளவர்கள் இதனடியில் கையொப்பமிட்டவருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம். வி. பி. மூலம் இதன் விலை அணா **10.**

**டி. சுப்பிரமணிய ஐயர், ஷாப் வியாபாரம்.**

**இந்துசாஸ்திராபிமானி, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி ஜில்லா.**

## அசாத்தியரோகங்களுக்கு பிரதிக்ஷ அவுஷதம்.

**கஸ்தூரி திராவகம்:**—இந்தத்திராகவத்தில் ஒருநேரத்துக்குமூன்று சொட்டு வீதம் ஒரு ஒயின்கிளாஸ் தண்ணீரில்விட்டு காலை, மாலை இரவு படுக்கும்நேரம் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட நீர்அழிவினால் தாங்கமுடியாத வருத்தத்தை மூன்றுநாளையில் சுகமாக்கும். 40 நாள் மருந்து சாப்பிட்டால் வியாதிநன்றாய்ச் சொஸ்தமாகும் தருணவயசுள்ளவர்களுக்கு உண்டான பக்கவாய்வு துர்நடத்தையால் ஆண்மைப்பலமற்ற சையோகம் செய்ய இயலாதவர்களுக்கு உள்ளுக்குச்சாப்பிட மேற்படி திராகவமும் ஆணுடம்பில்பூச தாஜ்ஜிபங்கதைலமும் எடுத்து உபயோகிக்க வேண்டியது. இன்னும் மேற்படி திராவகமானது இருமல், மூலச்சூடு, காசரோகம், அதிகநாள்ச்சென்ற வாதரோகம், தலைச்சுற்று, மூளை பலவீனம் ஞாபகசக்திக்குறைவு, கண்புகைச்சல், பார்வைக்குறைவு, நாட்சென்ற பிரமேகம், இவைகளுக்குக் கைகண்ட ஔஷதம். இந்த மருந்திலே கஸ்தூரி, தங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், சாம்பிராணிப்பதங்கம், வேறு மூலிவகைகளும், சேர்த்து திராவகம் வடித்துவைத்திருக்கின்றேன். இந்த மருந்துகளெல்லாம் சேர்க்கப்பட்டிருப்பதனால்தான் இது சீக்கிரம் சுகமடைவிக்குமெனக் கூறுகின்றேன் இந்த மருந்தைக்கொடுத்து அனேக பிரயாணிகளைச் சுகப்படுத்தி விலைஉயர்ந்த வெகுமதிகளும் பெற்றிருக்கின்றேன். இப்போது எல்லாருடைய பிரயோசனத்திற்காக சொற்பசெலவெடுக்க வெளியே பிரசித்தம் பண்ணிவருகின்றேன். பித்தபாண்டு, மகோதரம், காச்சல்கட்டி, வயிற்றிலிருக்கும் தூர்நீர்,

களுக்கு கைகண்ட ஔஷதம். விலை அரை அவுன்சுக்கு ரூபா 10. இதற்குக்குறைந்து அனுப்பப்படமாட்டாது. தபாற்செலவுபிரத்தியேகம்

**துஜ்ஜிபங்கதைலம்**—சிலர் தம் இளம்பிராயத்தில் புத்தியீனமாய் இந்திரியத்தை தம்கையால் பழுதாக்கிக்கொள்வதால் சிலகாலைக்குப்பின் நரம்புகள் பழுதுபட்டு ஆணுடம்பு பலனற்றுச் சுருண்டு சிறிதாய்ப்போய் இந்திரியம் குறைந்தும், துர் ஸ்திரீ சையோகத்தால் அநேக உஷ்ண மான மருந்துகள் சாப்பிட்டு பெலனற்றுப்போகின்றார்கள். இவ்விரு வகையுள்ளவர்கள் மனக் கவலையுடன் வியாதியை ஒருவருக்கும் சொல் லாமல் வெட்கப்பட்டு இருப்பார்கள். அவர்கள் இத்தைலத்தை ஆண் உடம்பில் பூசி உள்ளுக்குக் கஸ்தூரி திராவகமும் சாப்பிட்டால் ஆண் உடம்பு சரியான நிலைமைக்கு வந்து பலப்பட்டு இந்திரியம் விர்த்தியாகி 41-தினத்துக்குள் வியாதி சுகப்படும். 21-நாள் தைலம் பூசி மேற்படி திராவகம் சாப்பிடுவரேல் வியாதியின் சுகந்தெரியும். ஒரு அவுன்ஸ் தைலத்தின் விலை ரூ 2—8—0. தபாற்செலவு பிரத்தியேகம்.

**வீரிய ஸ்தம்பனக் குளிகை**—ஆச்சரியம்! மிக்க ஆச்சரியம்!! ரோகமற்றவர்களுக்கு ஒரே குளிகையில் தெரியும். இந்தக் குளிகை (இந்திராசனம்) ஒரு நாளில் ஆயிரம் ஸ்திரீகளைச் சம்போகிக்கிறதற்காக உண்டாக்கப்பட்டது. இதைச் சிலர் சாஸ்திரத்திற் சொல்லியபிரகாரம் செய்யாமல் சொற்ப கிரயத்திற்கு விற்பனை செய்கிறார்கள். அதைச் சனங்கள் பெற்று அதிலே சொல்லிய காரியங்கள் முழுதும் விசுவாசப்பட்டு ஏமாந்துபோகிறார்கள். ஆனால் சாஸ்திரப்படி அதிக பொருள் செலவழித்து செய்கிறவர்களிடம் பெறப் பின்னடைகிறார்கள். இது உலகவியல்பே, இதில் முக்கியமாயறியவேண்டிய காரியம் யாதெனில், இதின் முழுக்கிரயமும் கொடுத்து எடுத்து ஒரு குளிகையாற் சுகமறிய லாம். காரியமும் விளங்கும். இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. 12-குளிகைக்குக் குறைய அனுப்பப்படமாட்டாது. பரீட்சித்தவர்களே இதன் சுகத்தை அனுபவிப்பார்கள். 12-குளிகையின் விலை ரூ 2, தபாற் செலவு அணா 4,

சாப்பிடும் விதம் சையோகஞ் செய்ய அரை மணித் தியாலத்திற்கு முன் ஒருமாத்திரையைச்சாப்பிட்டவுடன் காச்சியபசும்பாலில் கற்கண்டு போட்டுக் குடித்தால் இந்திரியம் இளகாது. இளக வேண்டுமானால் எலுமிச்சம்பழம் சாப்பிடவும்.

கெங்காதார் தைலம்—அண்டவாய்வுக்குக் கைகண்ட உண்மையான மருந்து இதன் விலை 1 அவுன்சு ரூ 5.

மகாநாராயண தைலம்—வாய்வுகள், கபாலபீனிசம் முதலானதுக்கு கைகண்டது. 1 அவுன்சுக்கு 1 ரூபா. (மேற்கண்ட மருந்துகளுக்கு தபாற் செலவு பிரத்தியேகம்.)

**மிருத்துசீவன் அல்லது கஸ்தூரிமாத்திரை**—எட்டுவிதமான சுரத் திற்கும், அசுத்தசலத்தினால், கொசு முதலான விஷ செந்துக்களினா லுண்டாகும் மலேரியா ஆகிய விஷக்காச்சல்களுக்கும், 18-விதமான சன்னிக்கும் இதில் ஒரு மாத்திரையை இஞ்சிச் சாற்றில் உரைத்துச் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட சன்னியும் ஒரு அல்லது இருவேளை மருந்திற் சுகப்படும் ஏழுவேளை சாப்பிட்டால் சன்னி, காச்சல், சுரம், முதலியன சுத்தமாய்ச் சுகமாகும். 12 குளிகையின் விலை ரூ 2.



**காமனீமது பஞ்சனி மாத்திரை**:—இது தங்கம், அபரக் பஸ்பம், கஸ்தூரி, குங்குமப்பூ, லிங்கசெந்தூரம், முதலிய விலையுயர்ந்த மருந்து கள் சேர்த்து செய்யப்பட்டுத் தயாராயிருக்கிறது. இதன் சொற்ப குணத்தை மட்டும் காட்டுகிறேன். நீரிழிவு, காசம், இருமல், சுழை, தீராத வாதரோகம், பிரமேகம், மூலச்சூடு புதிதாய்க்காணும் அண்ட வாதம், வெள்ளை முதலிய வியாதிகள் தீர்ந்து தாதுபுஷ்டி உண்டாகும். மூன்று நாளில் நல்ல குணம்தெரியும். 44-நாளில் வியாதி பூரண சுத்த மாகும். காலை மாலை 14-நாள் சாப்பிடக்கூடிய 28 மாத்திரைகளின் விலை ரூபா 5. 44-நாள் சாப்பிடக்கூடிய 88-மாத்திரைகள் எடுத்தால் ரூபா 13-க்குக் கொடுக்கப்படும். தபாற் செலவு பிரத்தியேகம்.

**சந்திரிகா பிரதம மாத்திரை**:—இந்த மாத்திரை காசம், பவுத்திரம், அண்ட வாயு, பக்கவாயு, பித்தபாண்டு, வெள்ளை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, பீனசக்கபாலம், துர்ஸ்திரீகமனத்தாலுண்டான நோய்கள், வெண்குட் டம், நீரழிவு, போகத்தாலுண்டான நோய்களை எல்லாந் தீர்க்கும். இம் மாத்திரையை 21 நாள் சாப்பிட்டால் பூரண சுகமுண்டாகும். மருந் தெடுக்கும்போது வியாதிக்கேற்ற அனுமானம் தெரிவிப்போம். 44 குளிகையின் விலை ரூபா மூன்றரை.

**புத்தகங்கள்**—பின்னாற் காட்டப்பட்டிருக்கும் அருமையான புத்த கங்கள் மானுடர் எவரும் இகபர நன்மைகளைக் கருதி அவைகளைக் கைப் பற்றிக்கொள்ளக் கடமைப்பட்டிருப்பதால் இவ்விரு விஷயங்களுக்கும் குருவைப்போல் போதிக்கக்கூடிய மெத்த அருமையான புத்தகங்களான தால் ஒவ்வொருவரும் இவைகளைக்கட்டாயம் வாங்கிவாசிக்கவேண்டியது.

இவைகள் செந்தமிழ் அலங்கார நடையில் எவரும் வாசித்தறியக் கூடிய வெள்ளைமொழிகளாலியற்றப்பட்டு வாசிப்போருக்கின்பத்தையும் மனோஉற்சாகத்தையும் கொடுக்கக்கூடியவைகள், சொற்ப பிரதிகள் தான் இருக்கின்றன.

காலகாரணஞ் செய்யவேண்டாம்.

கோகசாஸ்திரம் மாபிள் கட்டு ஒரு பிரதி ரூபா 3 கலிக்கோ ரூபா 4,

கைத்தொழில் போதினி—மாபிள் கட்டு ரூ. 1. கலிக்கோகட்டு ரூ. 2.

பூலோகௌஷகோபகாரி வாணவேடிக்கைகள் அடங்கிய பத்தாம் சங்கியை ஒன்றுக்கு அணா 10.

அநேக இங்கிலீஷ் சாமான்களடங்கிய ஒன்பதாம் சங்கியை ஒன்று க்கு அணா 12.

சோகன்லால் சரித்திரம் ஒன்றுக்கு அணா 8.

இன்சுபெக்டர் சீபுசாய்பு சரித்திரம் அணா 12.

மேற்படி சரித்திரமும் சோகன்லால் சரித்திரமும் ஒரே கட்டிடம் ஒன்றுக்கு ரூபா 1—4—0.

ருஷிய ஜப்பானிய யுத்தம் இருபகுதிகள் ஒரு ரூபா.

இரசமணி செய்யும் புஸ்தகம் (8-பக்கம்) ரூ 1—4—0.

மேற்காட்டிய புத்தகங்கள் வேண்டுவோர்க்கு தாமதமின்றி சாக்கிர தையோடு அனுப்பப்படும். தபாலில் வேண்டுவோர்க்கு தபாற்செலவு பிரத்தியேகம். மற்ற விபரங்களுக்கு காட்லாக்கை எடுப்பித்துப் பார்க்க வும் இனமாக அனுப்பலாம். ஒருமுறை இப்பொருட்களை வாங்கி தின மும் மகிழ்வடையுங்கள்.

எமது விலாசம்,

**மகாராஜ், கெங்கா பிரஸாத் பண்டிதர்.**
மருதானை முதலாம் டிவிஷன் No. 74, கொழும்பு.

## ஆயுள்வேத அவுஷதம்.

போதிகைமா முனிவர் அருளிச்செய்த மஹாசஞ்சீவி.

### அமிர்தநந்திலேகியம்.

1. தீரும் வியாதி:—வண்டுகடி, செய்யான்கடி, காட்டுத் தவளைகடி, பச்சோந்திகடியும், சூலை, குஷ்டட்டம், கறப்பான், அண்டப்புத்து, அரையாப்பு, விப்புருதி, கண்டமாலை, கபால குஷ்ட்டம், கிரந்தி, கிரிச்சினம், கைவெள்ளை, சருமேகம், செம்மேகம், மேல் கால் கைப்பிடிப்பு, வாதப்பிடிப்பு, வங்குசொரி, செஞ்சொரி, வீக்கம், எலிகடி, ஈழை, இழைப்பு, இருமல், காச்சல், தலைவலி, ஜன்னி, காசம், பாண்டு, சோகை, மகோதிரம், பெருவயரு, விஷக்கடி, வாதம், சிலேற்பணம், உளமாந்தை, சூலைநோய், வாய்வு, வயற்றுநோய், பல்லறணை, பல்சூலை, சிலந்தி, பருவு, பிளவை, தொடைவாழை, முளங்கால் வாதம், கறப்பான் புண், கால்புத்து, ஆண்சிலந்தி, பெண்சிலந்தி, அளுகண், வெடி சிறங்கு, ஊனுருக்கி, கன்ன வீக்கம், யோனிப்புத்து, லிங்கப் புத்து, நரம்புசிலந்தி, எலும்புத்தின்னி, சண்டிப்புண், ஆணிச் சொரி, கழலை, மார்புஆணி, படர்தாமரை, சுவலிப்புகள், மதமுதப்பு; தடிப்பு, புழுநெளிதல், முதலியகொடிய வியாதிகளும் தீரும்.

☞ கடுமையான பத்தியம் கிடையாது. உப்பு புளியும் உபயோகிக்கலாம். 20-நாள் இரண்டு வேளையும் சாப்பிடக்கூடிய அமிர்தநந்தி லேகியம் டப்பி 1-க்கு வி. பி. உள்பட ரூபாய் 2.

### வாசாதிலேகியம்

2 க்ஷயம், வரகூஷி, உஷ்ட்ணசுரம், உளமாந்தை, மருந்தீடு, பீனசம், ஈழை, இருமல், மேல்விஷம், கசநோய், அருசிறல், தொண்டைக்கம்மல், தாதுநஷ்ட்டம், அசதி, எலும்புருக்கி, குத்திருமல், ரெக்தக்ஷயம், பித்தச்சூடு, பிரமேகசுரம், பித்தக்ஷயம், இவைகள் தீரும். வியாதியுடைய ஸ்திரி புருஷாள் இருவரும் உபயோகிக்கலாம். பத்தியம் கிடையாது.

1-சேர் டப்பி1-க்கு வி. பி. உள்பட ரூபாய் 2.

### கூழ்பாண்டலேகியம்.

3. வேளைஒன்றுக்கு கொட்டைப்பாக்கு பிரமாணம் காலை மாலை இரண்டு வேளையும் சாப்பிடவேண்டியது. தேகவறகூஷி, எலும்புருக்கி, சொரிசிறங்கு, நீர்க்கடுப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு வெள்ளை வெட்டையை நிவர்த்திசெய்து கால் கை கண் எரிச்சலை குளிரச்செய்து தேகபுஷ்டியைத்தரும். ஸ்திரீ புருஷாள் சிறுவர்களும் உபயோகிக்கலாம். பத்தியம் கிடையாது.

1-சேர் டப்பி வி. பி. உள்பட ரூபா 1—8—0

கு. அண்ணுஸாமி வைத்தியர்,
கருந்தட்டாங்குடி போஸ்ட், தஞ்சாவூர்.





## "கிருஷிகன்."

விவசாயத்தில் அனுபோகமும் பாண்டித்யமு முள்ளவர்களால் எழுதப்படும். ஓர் மாதாந்தரப் பத்திரிகை. எல்லாரும் எளிதில்வாங்கி வாசிக்கவேண்டுமென்னும் முக்கியமானஎண்ணத்துடன் வருஷ சாந்தா தபால்கூலி உள்பட அணு 12, என்று குறைச்சலாய் வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா அங்கிகரிக்கப்படமாட்டாது. பிரதிவருஷமும் சித்திரைமாதம் முதல் ஆரம்பிக்கிறது. வருஷமத்தியில் சேர்ந்தால்கூட சித்திரைமாதம் முதல்தான் கணக்கு வைக்கப்படும். வேண்டியவர்கள் ரங்கராஜு பிரதர்ஸ் 5, மௌண்ட் ரோட் சென்னை என்று எழுதி, வி. பி. மூலமாய்ப்பெற்றுக்கொள்ளலாம்.

### இதைவிட வேறுஅத்தாக்ஷி என்ன;

"இராஜாம்பாள்" புஸ்தகம் பிரசுரமான மூன்று வருஷங்களுக்குள் மூன்று பதிப்புகள் அச்சடித்து பூராவாய் செலவாகி இப்போது நான்காம் பதிப்பு அச்சிலிருக்கிறது.

"இராஜாம்பாள்" "சந்திரகாந்தா" "மோஹனசுந்தரம்" என்னும் மூன்றுநாவல்களும் ஒன்றைவிட ஒன்று நான்முன் நான்முன் என்னைகதட்டி ஆரம்பித்து சந்தோஷிக்கச் செய்யக் கூடிய சக்திவாய்ந்தவை எல்லாரும் எளிதில் வாசிக்கும்படி இனிய எளிதானநடையில் எழுதப்பட்டிருக்கின்றன. மேலும் மேற்கண்ட ஒவ்வொரு நாவலிலும் கண்டோர் மனதைக்கவரும் மூன்றுசித்திரப்படங்கள் வழவழப்பான கடிதத்தில் அச்சடித்து சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நாவல்களைப்போல் வேறுநாவல்கள் இதுவரையில் பிரசுரிக்கப்படவில்லையென்று பத்திராசிரியர்களாலும் வாசித்த எல்லோராலும் புகழப்பட்டது. இவைகளைப் புகழ்ந்து ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் கிடைத்திருக்கிறது. இவ்வளவு அபூர்வமாகிய நாவல்கள் ஒவ்வொன்றின் விலை அணு12, தபால்கூலி, வி. பி. கமிஷன் பிரத்தியேகம் வேண்டியவர்கள் ரங்கராஜு பிரதர்ஸ் 5-மௌண்ட்ரோட் சென்னை என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

---

| | | | | |
|---|---|---|---|---|
| குளிர் ஜுரத்திற்கு மாத்திரை அல்லது திராவகம் | ரூ | 1 | 0 | 0 |
| பலஹீனத்திற்கு மாத்திரைகள் ... | " | 1 | 8 | 0 |
| கடியை ஒரேநாளில் சொஸ்தப்படுத்த எங்கும் விற்கப்படுகிறது ... | " | 0 | 4 | 0 |
| பற்பொடி ... | " | 0 | 4 | 0 |

**Dr. H. L. Batliwalla. J. P. Warli Loboratory,**
*Dadar Bombay.*

## ரோமசங்காரி சோப்.

தேகத்தின் எந்தப்பாகத்திலும் இந்த ஸோப்பை உபயோகித்தால் யாதொரு கெடுதியுமின்றி ரோமங்களைச் சங்காரஞ் செய்துவிடும். 6-மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய கட்டி 1-க்கு விலை 6-அணு டெஜன் ரூ 4. வி.பி. சார்ஜ் 1-முதல் 3-க்கு 4-அணு.

## ரோமப்பிசின்.

இப்பிசின் நரைத்த மயிரை 2 நிமிஷத்திற்குள் பழயபடி கறுப்பாக்கிவிடும். கெடுதி செய்யக்கூடியது ஒன்றும் இதில் கிடையாது 1-புட்டி 3-மாதத்துக்கு போதுமானது. டைரக்ஷன் மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு விலை 12-அணு டெஜன் 1-க்கு ரூ 8. 1-முதல் 3-புட்டிக்கு வி பி. சார்ஜ் 4-அணு

## கார்பாலிக் டூத்பவுடர்.

இந்தபற்பொடி; வாயிலுண்டாகும் துற்நாற்றத்தைபோக்கி பல்லைச்சேர்ந்த எல்லா வியாதிகளைப்போக்கி பற்களை கெட்டிப்படுத்தும். டின் 1-க்கு 1½-அணு, டெஜன் 14-அணு 1-டெஜனுக்கு வி. பி. சார்ஜ் 4-அணு,

எட்வர்டு பவுடர்—அல்லது கடிகளுக்கு கைகண்ட மருந்து 24-மணி நேரத்துக்குள் சுவஸ்தம் செய்யக்கூடியது. புட்டி 1 க்கு அணு 4. டஜன ரூ 2—8—0. வி. பி சார்ஜ் 1-முதல் 6 புட்டிகளுக்கு அணு 6.

Apyly to Messrs—J. SUR & Co,
Patent Mcdecine Sellers & General order Suppliers,
South Sinthee Road, P. O. (B) Gossipore, Calcutta.
**Agent. Lakshmivilasa Provident Intitution Ld. Kumbakonam.**

---

## யாழ்ப்பாணம் அச்சுவேலி யந்திரசாலை.

இதினின்று "சன்மார்க்க போதினி" என்னும் புதினப்பத்திரிகை ஒன்றுவிட்டொரு சனிக்கிழமைகளில் வெளிவரும் வைத்திய விஷயங்களுமுண்டு, வருடவிலை தபாற்செலவுட்பட ரூபா 2.

| | | | |
|---|---|---|---|
| பால வைத்தியம் இங்கிலீஷ் தமிழ் முறை | | அணு | 8 |
| பிரசவ வைத்தியம் | ... | ... | 8 |
| நயன விதி (செய்யுள்) தமிழ் முறை | | ... | 5 |
| தருமபுத்திர நாடகம் | ... | ... | 8 |
| இராம நாடகம் ... | ... | ... | 8 |

இவைகளை விரும்பினோர் கீழ்க்காட்டிய விலாஸத்துக்கு எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்க.

ச. தம்பிமுத்துப்பிள்ளை,
புத்தூர் போஸ்டு,
அச்சுவேலி, யாழ்பாணம்.


REGISTERED 14 FEB 1912 ... MADRAS

உ

# வைத்திய போதினி.

சித்திரப்படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

வா. 3. } 1912-ளு ஜனவரிமீ 1உ } நெ. 1.

## நமது பிரியசந்தா நேயர்களே!

சிந்து வளைந்த இந்துநாட்டில் வந்துமுளைத்த இந்து மதத்தாரில் வழங்கும் பல பாஷைகளிலும் இனிமையென்று பொருள்படும் நமது தமிழ் பாஷையே மிகவும் மேன்மையுடையது. அது இத்தென்னிந்தியாவிலுள்ள எல்லாநாட்டிலும் வீட்டிலும் வழங்குவதானநம்தாய் பாஷையாம். நம்மைப்பெற்றதும் தமிழ்; வளர்த்ததும்தமிழ், நம்மைத்தாலாட்டித் தூங்கவைத்ததும் தமிழ், நம் குழந்தைப் பருவத்தில் பேச ஆரம்பித்ததும் உச்சரித்ததும் தமிழ், நம் தாய் தந்தையர்கள் நமக்கு பாலோடு புகட்டினதும தமிழ், தந்தை தாய் குருமுதலிய அறிவு நிரம்பிய பெரியோர்கள் நமக்கு ஆதியில் உபதேசித்ததும் தமிழ், பூர்வகாலம் தொடங்கி நம் முன்னோர்கள் எல்லோரும் பேசினபாஷையும் எழுதிவைத்த பாஷையும் தமிழே. இப்போதும் நம்பெற்றோர்களும் சுற்றத்தார்களும் இஷ்டர்களும் மற்றோர்களும் தம் தம் உள்ளக்கருத்துக்களை ஒருவருக்கொருவர் தெரிவித்துக்கொள்வதில் கையாடுவதும் தமிழேயாம் எனில், அதன்பெருமையும் சிறப்பும் இவ்வளவு எவ்வளவு என்று சொல்லமுடியுமோ? அதன் இனிய அருமை பெருமையை எடுத்துச்சொல்லில் அவையேட்டிலும் அடங்காது, எழுதவும்முடியாது, எம்மாலும்ஆகாது மற்றஎவராலும்இயலாது.

இத்தமிழ்மாது நம் பூர்வீக அரசர்களான சேர, சோழ, பாண்டியர்களால் ஆதரிக்கப்பட்டு மஹா அநாதிவித்வான்களை ஒருங்கு சேர்ந்து அவர்களுக்கு குடையும் கொடியும், தனமும், கனமும், காணியும், பூமியும், கணக்கில்லாமல் பரிசளித்து, அவர்களைப் பாராட்டி சீராட்டி வித்வபட்டம்கட்டி உம்பளங்கள் சம்பளங்கள்கொடுத்து பரிபாலித்து வித்யாபி விருத்திசெய்ததனால் அவர்களும் அவர்கள் வித்வத்வமும் பெருகி வளர்ச்சியும் சிறப்பும் அடைந்தன.

காலகெதியால் நந்தமிழ்நாட்டு அரசர் திவயசோபை மழுங்கி ஒளியிழக்க தமிழ்மாதும் அட்டம்ச்சனிவாய் பட்டு கிருஷ்ணபக்ஷ சந்திரனுக்கொப்பானாள்.

இந்தசமயத்தில் தெய்வத்தன்மையாயும் நமது பாக்கியவசமாயும் நம் காருண்ய ஆங்கிலேயர் இந்நாட்டுக்கு வரவே மலினமடைந்திருந்த நந்தமிழ்மாதுக்கு நம்பிரிட்டிஷ் அரசாக்ஷியார் தாதியரும் தோழியருமாகி அக்கம் பக்கம் பவனிவர அச்சியந்திரசாலை ஒருபுறமும் வித்தியாசாலை மறுபுறமுமாய் நின்று உடன்செல்ல அவளும் ஒய்யாரமாய் ஸர்வாபரண அலங்கிருதமாய் அன்ன நடைநடந்து இனியமொழிகூறி மறுபடியும் பழையபடியே யாரையும் வசிகரணப்படுத்தத் தொடங்கினாள்.

இதுநிற்க நம்தேசத்தில் கல்வி ஞானம் மதசித்தாந்தம் பொதுஜனவிஷயம் லௌகிக வைதீக தந்திரங்கள் முதலிய பல அற்புதவிஷயங்கள் அடங்கிய அநேகம் தமிழ் பத்திரிகைகள் அப்போதைக்கப்போது பிறந்து வளர்ந்து கிடந்து தவழ்ந்து பின்பு இருந்தஇடமே தெரியாமல் மறைந்தன. மக்களுக்கு பெற்றோர்போல் புத்திபுகட்டி தீமையை அகற்றி காலத்திற்கு ஏற்ற சுகத்தைக்கொடுத்து வந்த இத்தகைய பத்திரிகைகள் சொற்பகாலத்திலேயே மறைந்துபோக நேரிட்டகாரணம் என்னவென்று யோசிக்கையில் காரணம் பலவற்றுள் முக்கியமாய்ப் பத்திராதிபர்கள் ஜனோபகாரத்தை முன்னிட்டு பொருள் வருவாயை கவனியாது உழைத்தும் அவர்களுக்கு போதுமானபடி சமயத்தில் உதவும் கல்வியான்கள் செல்வமான்கள் இல்லாமையாலும் கையொப்பநேயர்கள் செலுத்தவேண்டிய சந்தாக்களை கிரமமாய்ச்செலுத்தாமையாலும் என்றுஐந்துமூன்றும் அறியாத அதிபாலியர்கள்முதல் அறிவில் சிறந்து அனுபவத்தில் முதிர்ந்த அன்பர்கள் சகலருக்கும் தெரிந்தவிஷயமே!

ஆங்கிலேயர்களோ நம்தேசத்திலும் ஆங்கிலேயர்நாட்டிலும் ஆயிரக்கணக்காகப் பிரசுரஞ்செய்யும் நாளினித தினப்பத்திரிகைகளும் மாதசஞ்சிகைகளும் புத்தகங்களும் எவ்வளவு விலையாயினும் ஆயிரம்பதினாயிரம் கணக்காய் விலைபடுகிறதனால் அல்லவோ அவை அநேக காலம் நிலைபெற்று வளர்கின்றன. இதனால் அவர்கள் கல்வி, சீர்திருத்தம், வர்த்தகம், ஒற்றுமை, முதலியவை நாளுக்குநாள் சுக்கிலபக்ஷ சந்திரனைப்போல் உயரவும் நம்கல்வி, சீர்திருத்தம், வர்த்தகம், ஒற்றுமை, முதலியவை க்ஷீணமடையவும் நேர்ந்தன.

இந்தகுறைவு பாட்டை ஒருவாறு நீக்க இப்பால் சிலதமிழ் பத்திரிகா சஞ்சிகைகள் பிரசுரஞ்செய்யப்பட்டு வரினும் அவை இப்போது விருத்தியாயிருக்கும் ஜனஸங்கியையும் வித்தியாபி



விருத்தியையும் சீர் தேற்றத்தையும் நோக்கில் நம் தமிழ்நாட்டுக்குப்போதுமானவையல்ல என்றும், அவைகள் பெரும்பாலும் தனவான்களுக்கு மாத்திரம் உபயோகப்படுவதேயொழிய முக்கியமாய் வறியோருக்கும் சிறுவர் சிறுமியோருக்கும் உபயோகப்படுவதில்லை என்பது நாம்சொல்லாமலே விளங்கும். இத்தகைய குறைவு பாடுகள் ஒருவாறு நீங்கி நம் பரதகண்டவாசிகள் பலிஷ்டர்களாய் பூரணஆயுள்பெற்று புவியில் வாழவேண்டுமென்னும் எண்ணத்துடனும் கற்றோர்க்கன்றி மற்றோர்க்கும் பொருள் படுமாறு "வைத்திய போதினி" எனப்பேர்புனைந்த இப்பத்திரிகையை நடத்தமுன் வந்தோம். இங்ஙனமாக ஜனோபகாரமான தொழிலைச்செய்வதே நலமெனவுணர்ந்து பத்திரிகை நடத்தமுன்வந்த எம்மை கடந்த இரண்டு வருஷகாலமாக கைசோரவிடாது ஆதரித்து வந்த கனதனவான்களுக்கும் நமது பத்திரிகாபி விருத்திபைக்கருதியவரும் வரையாதளிக்கும் வள்ளலுமாகிய திருவாவடுதுறை ஆதீனம ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகபண்டாரசன்னதியவர்களுக்கும், நமது பத்திரிகைக்கு மாற்றுப்பத்திரிகைகள் அனுப்பிவரும் சகோதரப் பத்திராதிபர்களுக்கும்நமதுமனப்பூர்வமான வந்தனமளிக்கின்றோம். சென்ற1911-ம் வருஷம் டிசம்பர் மாதத்தோடு நமதுபத்திரிகைக்கு இரண்டு வயது நிரம்பி, நாளது ஜனவரிமாதம் மூன்றாவது வயது பிறந்திருக்கிறதென்பதை நமது பத்திரிகாநேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். இதுவரையில் நம் பத்திரிகாநேயர்கள் இப்பத்திரிகையை ஆதரித்து வந்ததுபோலவே இனியும் ஆதரித்து தங்கள் தங்களால் கூடிய அளவு சந்தாநேயர்களையும் சேர்த்தனுப்பி உதவிபுரியவேணுமாய், வேண்டிக்கொள்கிறோம். இதுபோலவே- எல்லாம் மங்களகரமாய் முடியுமாறு ஸ்ரீமங்களாம்பிகா ஸமேத ஸ்ரீ ஆதிகும்பேஸ்வர மூர்த்தி அனுக்கிரகிப்பாராக. சுபம் சுபம்.

## புது வருட வாழ்த்து.

நோட்டு.

இராகம்—பியாகு—ஏகதாளம்.

பல்லவி.

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே.

சரணங்கள்.

ஆயிரத்துத்தொ ளாயிரமுடன்
அடர்ந்தொருபணி ரண்டுமே
நேயமுறவே புதுவருடமாய்
நேர்ந்துமகிமை கொண்டுமே (வாழ்க)

தண்டமிழினி
சங்கதிபல
மண்டலமதி
வைத்தியபோதினி
ளுண்டுசெய்துநற்
றாங்கியே
னெண்டிசைசெலும்
யோங்கியே (வாழ்க)

பத்திரிகை ந
பாண்டித்திய சி
சத்தியமுறை
சந்திரசேகர்
டத்திடுவித்யா
ரேட்டரும்
வைத்தியஞ்செயுஞ்
டாக்டரும் (வாழ்க)

பெருமையுடைய
பிரபலசந்தா
தருமமாகவே
தந்திடுநற் ச
நிருபநண்பரும்
நேயரும்
பொருள்முதலிய
காயரும் (வாழ்க)

சீர்த்தியுடனே
தேசவைத்திய
நேர்த்தியுடனே
நேசர் கரத்தில்
பூர்த்திசெய்த சு
ரத்னமும்
பார்த்துமகிழும்
மெத்தவும். (வாழ்க)

இங்ஙனம்,

பூ. ப. செல்லக்குமார கவுண்டர், கணக்கன்பட்டி.

## மலேரியாஎன்னும்விஷஜுரத்தைப்பற்றியஓர்பாடம்.

(சென்ற மாத சஞ்சிகையின் 221வது பக்கத் தொடர்ச்சி)

வீடுகளில் எவ்விதமாகவாவது சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறதண்ணீரிலும், குட்டைகளிலும், தொட்டிகளிலும், சாக்கடைகளிலும், குளங்களிலும், கிணறுகளிலும், வாய்க்கால்களிலும், சகலவிதமான தண்ணீர்க்கால்வாய்களிலும், கொசுக்கள் உற்பத்தியாகக்கூடும். குறைந்தபக்ஷம் அரைஅங்குலம் ஆழம் தண்ணீர்த்தேக்கமிருந்தாலொழிய அவைகள் தூறுகள், க்ரோடன்கள், புஷ்பத்தொட்டிகள் முதலியவைகளில் உற்பத்தியாகமுடியாது.

தண்ணீர்ப்பாத்திரங்களை மூடிவைப்பதனால் வீடுகளிலாவது வீடுகளின் சமீபத்திலாவதுள்ள தண்ணீரில் கொசுக்களைச் சேரவொட்டாமல் தடுப்பதும், வீடுகளின் சமீபத்தில் தண்ணீர் சேரவொட்டாமல் தடுப்பதும் மிகவும் முக்கியமானவையாகும். தண்ணீர் தங்கக்கூடிய உடைந்துபோன பழஞ்சட்டிகள், கெரோஸின் எண்ணெய் டப்பிகள், உடைந்துபோன புட்டிகள் முதலியவை போன்ற அநாவசியமான எந்த சாமான்களையும் வீடுகளிலிருந்து ஒழித்துவிடவேண்டும். வீடுகளின் சமீபத்தில் தண்ணீர் தேங்கியிருக்கும் குட்டைகள் எந்தப்பள்ளங்களில் ஏற்படுகின்றனவோ அவைகளைத்தூர்த்து அக்குட்டைகளை எல்லாம் எடுத்துவிடவேண்டும்; குட்டைகளைத்தூர்த்து விடமுடியாத இடங்களிலே,


FEB 1919

தண்ணீரின் மேல்பாகத்தில் சிறிது (மேல்பாகத்தின் ஒரு சதுரகஜத்துக்கு தேத்தண்ணீர்க் கிண்ணியில் அரை அளவுள்ள) கெரோஸின் எண்ணெயை வாரத்துக்குஇருமுறை ஊற்றவேண்டும். இதனால் புழுதசையிலுள்ள கொசுக்களெல்லாம் செத்துப்போம். வீடுகளிலுள்ள கொசுக்களில் சில ஏற்கனவே விஷஜுரத்தின் தொத்துவியாதி சம்பந்தத்தைப் பெற்றிருக்கக்கூடுமாகையால், அக்கொசுக்களெல்லாவற்றையும் முயன்று கொல்வதே விவேகமான காரியமாகும்.

தெரிந்திருக்கிறவரையில் விஷஜுரம் பரவுவதற்குக் கொசுவே சாதனமாயிருக்கிறது விஷஜுரம் விசேஷமாயிருக்கிற இடங்களிலிருந்து வரும் தண்ணீரைக் குடிப்பதனால் விஷஜுரம் உண்டாகாதென்பது அடிக்கடி நடத்தப்பட்ட பரீக்ஷைகளால் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் கொசுக்களில்லாதிருக்கும் பக்ஷத்தில் விஷஜுரமிராது; ஒரு நபர் தன்னை எப்போதும் கொசுக்கடிக்காமல் பாதுகாத்துக்கொள்ளக்கூடுமானால், அவனுக்கு விஷஜுரம் ஒருக்காலும் வராது. இக்காரணத்துக்காகவே விஷஜுரப் பிரதேசங்களிலே பிரயாணம்செய்யும் உத்தியோகஸ்தர்கள் கொசுவலைகளை உபயோகித்துத் தங்களுக்குக் கொசுக்கடி உண்டாகாமலிருக்கப் பிரயத்தனப்படுகிறார்கள்; ஆனால்அவர்கள் எப்போதுமேகொசுவலைக்குள் இருக்கமுடியாதாகையால்சிற்சிலசமயங்களில் அவர்களைக் கொசுக்கடிக்கவே கடித்து சிற்சில சமயங்களில் அவர்களுக்கு விஷஜுரம் காணவே காணுகிறது.

இதைமாற்றிச் சொல்லும்பட்சத்தில், மனிதர்களே இல்லாமலிருந்தால், கொசுக்களுக்கு விஷஜுரத்தின் தொத்துவியாதி சம்பந்தமே உண்டாகாது; ஆகவே ஜனசஞ்சாரமற்ற நெடுந்தூரத்துக்காட்டு பிரதேசங்களில் அனோபிலீஸ் ஜாதிக்கொசுக்கள் நிரம்பியிருந்த போதிலும், அவைகளில் ஒன்றுக்காவது தொத்துவியாதி சம்பந்தம் உண்டாகமுடியாதாகையால், எப்போதோ ஒருகால் அங்கேபோகுமொருவனை அவைகடித்தாலும் அவனுக்கு விஷஜுரம் உண்டாகாது. விஷஜுரம் வராமல் தப்பித்துக்கொள்வதற்கான வழிகளுள் ஒன்றைத்தெரிந்துகொள்ள இதன் மூலமாய் நமக்குநேராக ஒருஉபாயம் கிடைக்கிறது. விஷஜுரத்துக்குப் பேர்போன பிரதேசத்தில் பிரயாணஞ்செய்கையில், சாத்தியப்பட்டால் கிராமத்திலாவது மனிதர் குடியிருக்குமிடத்திலாவது அவைகளின் சமீபத்திலாவது இராக்காலத்தில் முகாம்போடாமலாகிலும் தங்காமலாகிலும் இருக்கவேண்டும்; அவ்விடத்துக்கப்பால் அரை மைல் தூரத்தில் இருப்பது க்ஷேமமாகும். முகாமில் ஒருவருடன் கூடவரும் பரிவாரத்தில் ஒருவனுடைய ரத்தத்தில் விஷஜுரக்கிருமிகள் ஏற்கனவே நிறைந்தி

ருக்கக்கூடும். ஆனால் ஒரே இடத்தில் ஒரு வாரத்துக்காவது அதற்கதிகமான காலத்துக்காவது தங்காமலிருக்கும் பட்சத்தில் அப்படிப்பட்ட சேவகனால் கூடக்கெடுதி உண்டாகாது; ஏனென்றால் அவனிடத்திலிருந்து தொத்துவியாதி சம்பந்தத்தைப் பெறுகிற கொசுக்கள் அவனைக் கடித்தபிறகு குறைந்தது ஏழு நாளாகிறவரையில் இன்னொருவனுக்கு அதைத் தொத்தவைக்க முடியாது; ஆகவே முகாம் அவ்வூரைவிட்டுக் கிளம்பும்போது அவை பின் தங்கிப்போய் விடுகிறபடியால் அவை ஒருவருக்கும் தொத்துவியாதி சம்பந்தத்தைப் பரவச்செய்கிறதில்லை. மனிதர் வசிக்கும் இடங்களுக்குச் சுற்றுபுறங்களிலுள்ள தொத்துவியாதி சம்பந்தமுடைய பழைய கொசுக்களே அபாயகரமானவை.

இப்போது தெரிந்திருக்கும் வரையில் விஷஜுரக்கிருமிகளை அழிக்கக்கூடிய மருந்து ஒன்றே. அது க்வினைன் என்று சொல்லப்படும் மருந்து. பிரதிதினமும் ஒருதடவை க்வினைனை உட்கொள்ளும் பட்சத்தில், கொசுக்களால சரீரத்துக்குள் செலுத்தப்படும் இளங்கிருமிகள் அப்படி செலுத்தப்படும்போதே நசித்துப்போகிறபடியால் விஷஜுரம் விருத்தியாவது முற்றிலும் தடைப்பட்டுப்போம். விஷஜுரம் வாஸ்தவமாய்க்காணும்போது க்வினைனை அதிக அளவாக உட்கொண்டுவந்தால் அது குணமாகும்; ஆனால் அப்போது இரத்தத்திலிருக்கும் கிருமிகளையெல்லாம் அடியோடு அழித்துவிடுவதற்கு மூன்று மாதகாலம் தினந்தோறும் க்வினைன் ஒருதடவை உட்கொள்ளவேண்டியதவசியமாகும். பெரியவர்கள் (எப்ஸம் ஸால்ட் என்னும்) மக்னீஷியம் ஸல்பேட் 1 ட்ராமுடன் க்வினைன் ஸல்பேட் சுமார் 10 க்ரெயின் சேர்த்து சாப்பிடவேண்டும்.

விஷஜுர பிரதேசத்திலுள்ள கிட்டத்தட்ட எல்லாக்குழந்தைகளின இரத்தத்திலும் விஷஜுரக்கிருமிகள் இருக்கின்றன. இந்தக் கிருமிகளின் காரணமாக ஷை குழந்தைகளில் பலருக்கும் ஜுரக்கட்டி உண்டாயிருக்கும். விஷஜுரம் கண்டிருக்கிற எல்லாக் குழந்தைகளுக்கும் ஜுரக்கட்டி உண்டாயிருக்கும், சகலர்களுக்கும் மூன்றுமாதகாலம் தினந்தோறும் க்வினைன்கொடுத்துவரவேண்டும். அப்படிச்செய்யும் பட்சத்தில் அவர்களுக்கு விஷஜுரம் பூர்த்தியாய் குணமாய்விடும்; ஆனால், அவர்களை மறுபடியும் கொசுக்கடிக்காமலும், மறுபடியும் தொத்துவியாதி சம்பந்தம் அவர்களுக்கு உண்டாகாமலும் அவர்களைக் காப்பதற்காக அவர்கள் வசிக்கும் இடத்தைச் சுற்றிலும் உள்ள எல்லாக் கொசுக்களையும் அழித்துவிடுவதற்கான ஏற்பாடுசெய்யவேண்டும்.

அடியிற் கண்ட விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்:—



(1) விஷஜுரமானது தொத்துவியாதி சம்பந்தமுள்ள ஒருவனிடத்திலிருந்து தேகாரோக்கியத்துடனிருக்கு மொருவனுக்கு கொசுவினால் பரவுகிறதேயொழிய, தெரிந்த வரையிலும் வேறெந்த மூலமாகவும் பரவுகிறதில்லை. (2) ஆகையால் கொசுக்களில்லாத பட்சத்திலும் அல்லது உங்களுக்கு கொசுக்கடி உண்டாகாமல் பாதுசாத்துக்கொள்ளக்கூடிய பட்சத்திலும், உங்களுக்குவிஷஜுரம் ஒருபோதும்வராது. (3) கொசுக்கள் தண்ணீரிலேயே உற்பத்தியாகிறபடியால், தண்ணீர் இல்லாத இடத்தில், கொசுக்களும் இரா விஷஜுரமும் இராது. (4) ஒரு ஜில்லாவிலுள்ள கொசுக்களெல்லாவற்றையும் அழிப்பதவசியமில்லை; மனிதர் வசிக்கும் இடத்திலும் அதைச் சுற்றிலுமுள்ள கொசுக்களே அபாயகரமானவை. வசிக்குமிடங்களைச் சுற்றிலும் கால் மைல் தூரம் வரையிலுள்ள பிரதேசத்தில் கொசுக்கள் உற்பத்தியாவதற்கேற்ற இடங்கள் இல்லாதிருக்கும் பட்சத்தில், கொசுக்கள் மிகவும் கொஞ்சமாயிருக்கும் அல்லது இருக்கவேயிரா; விஷஜுரமும் இராது.

(A true translation.)

V. RAGHAVA CHARLU,

*Tamil Translator to Government.*

## சுகாதாரவிதிகள்.

(சென்ற மாத சஞ்சிகையின் 223-வது பக்கத் தொடர்ச்சி.)

அப்படியல்லாமல் ஏதோ வயற்றுப்பிழைப்புக்காகவும் பயனற்றவேலையாகவும் கருதிச்செய்தோமானால் அது செய்கிறவனை தாழ்த்துகின்றது. தொழில் செய்வதில் மேலே சொல்லியபடி மனிதனை இழிந்தவனாகச்செய்யும் தன்மையுமிருப்பதினால் அந்த தன்மை நாம் செய்யுந்தொழிலினாகாதபடி காக்கவேண்டும். வேலைசெய்வதில் மனிதனுடைய இச்சையின்படி ஓட்டப்பெற்ற வாயில்லாத ஆடுமாடு முதலிய கால் நடைகளைப்போலத் தொழில் செய்யாமல் போர்முனையில் நிற்கும்யுத்த வீரனைப்போல சௌரியத்துடன் யாதொரு தொழிலையும் செய்யவேண்டுமென்று ஒரு கவி வருணித்திருக்கிறார் அதை நாம் கவனிக்கவேண்டும். மேற்கூறியதெல்லாம் மனிதனுடைய மனோதர்மத்தைப் பொருத்த விஷயங்கள் ஆனால் மனிதனுடைய தேகதர்மமானது மனோதர்மத்தையே பெரும்பாலும் சார்ந்திருக்கிறது. ஆகையினாலே நாம் நம்தேகம் சுகமாகவும் திடமாகவும் இருக்கவேண்டுமானால் நம் மனோதர்மங்களைச் சீர்படுத்திக்கொள்ளவேண்டியதவசியம். ஒருவன் தன் மரியாதையை இழந்துவிட்டதாக வைத்துக்கொள்வோம் அவன் அன்றுமுதல் தன் தேகத்தைப்பற்றிக் கவனிக்கப்படமாட்டானென்பது நிட்சயம். இறங்கியமுகமும் குனிந்த

நடையும் பணிந்தமொழிகளுமாக நமது தொழிலாளிகள் கூணைப்படுவதை நாம் தினமும் காண்கிறோம். அவர்கள் தங்களுக்கும் ஒரு கௌரவமும் தன் மரியாதையும் உள்ளதென்பதை மறந்து சுயாதீன மற்றவர்களாய் நினைப்பதே அவர்களை இத்தன்மையாக்கி இழிந்தவர்களாக என்னும்படிசெய்கின்றது அல்லாமலும் தொழிலாளிகளுக்கு அவரவர் வேலைக்குத்தக்கபடி கைகளோ கால்களோ உடம்பின் ஒவ்வோர் பாகங்கள்மட்டும் அதிகமாக வலுப்படவும் மற்றவை அப்படிக்கல்லாமல் பலவீனமாய் இருக்கவும் காரணமுண்டு. அதனால்அவர்கள் தங்கள்தேகத்தில் உள்ள எல்லாவற்றையும் சமமாகவே வலுவடையும்படியாக தினந்தோறும் சிறிதுதேகப் பயிற்சியும் செய்துவருதல்வேண்டும். அப்படிச்செய்தால்தான் அவர்கள் கம்பீரமான நிமிர்ந்தநடையும் உற்சாகமுள்ளவர்களாகவுமாவார்கள்.

5. இரவை மனைவிமக்களுடன் வீட்டிற்களிக்கவேண்டும். இவ்விஷயமானது நாம் மேலே கூறிய சுகாதாரவிஷயங்களுக்கு அன்னியமான விஷயமென்று நேயர்கள் நினைக்கலாம். அப்படியல்ல அந்தவிதிகளுக்கு அடுத்தவிஷயம் மாலைக்காலங்களில் தங்கள் இல்லங்களைவிட்டு வெளியே சஞ்சரிப்பதனால் தமது சுகத்தை இழந்து வருந்துபவர்களின் தொகை இன்னதென்று நம் நேயர்களறிந்திருக்கமாட்டார்கள். ஒரு வீட்டினிடமாக மருந்தைப்போலத் துன்பத்தைப்போக்கிச் சுகத்தைக்கொடுக்கின்ற தன்மைகள் பலவுள்ளன. இதுகாரணம்பற்றியே இல்லத்திற்கு வீடென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். வெளியே சென்று உலகவிவகாரங்களில் அலைந்துதிரிவதனால் உண்டாகிய அலுப்பும் கவலையும் களைப்பும் ஆகிய இவற்றையெல்லாம் திரும்பி வந்தவுடனே விட்டுவிடச் செய்கின்றதனாலே அதற்கு வீடென்று பெயர் (வீடுயென்னும் பகுதியடியாகப்பிறந்த முதனிலைத்தொழிற் பெயரே வீடுயென்பது மோக்ஷம் என்ற பொருளில் வரும் வீடென்பதற்கும் இதுவே பொருள் பிறப்பாகிய வேலையைவிட்டு அடையும் ஆனந்தமே வீடு என்பது) அல்லாமலும் ஒருவனுக்குள்ள முக்கிய குணநிசயங்களிற் பல இல்வாழ்க்கையிலே தான் வளர்ச்சியடைந்து உறுதிப்படுகின்றன. தினசரிதொழில் செய்வோனுக்கு அவசியமான ஓய்வும் இல்லத்தினிடத்திலே தான் பெறப்படுகின்றது.

மேலே கூறியவை தொழிலாளிகளுக்கு மட்டுந்தான் என்பதாகப் பலர்எண்ணி இவற்றை அலட்சியம் செய்வார்கள் ஆனால் அப்படிச் செய்யக்கூடாது ஏனெனில் தினந்தோறும் வேலை செய்து அதனாலுண்டாகும் தேகப்பயிற்சியினால் தேகத்தைச் சுகமாய் வைத்திருக்கும் தொழிலாளிக்கே மேலே கூறியவை



அவசியமாயிருந்தபோதிலும் உட்கார்ந்த இடம் விட்டுபெயராத மற்றைப் பாக்கியவான்கள் மேலே கூறிய ஐந்து விதிகளைக் கவனிக்கவேண்டுவதவசியம். அவற்றோடு தினமும் தந்தேகத்துக்கு வேண்டிய அளவு வேர்வையுண்டாகத்தக்கதாக சுத்தமான காற்றுள்ள இடத்தில் தேகப்பயிற்சியும் செய்துவருதல்வேண்டும்.

பூ. ப. செல்லக்குமார கவுண்டர்,
கணக்கன்பட்டி.

## மேனாட்டுக் கோடீசுவரர்களும் அவர்கள் கோடைகளும்.

### மெஸர்ஸ் கார்னேகியும் ராக்பெல்லரும்.

சற்றுக்குறைய 5-கோடி பவுன், அதாவது 490-லக்ஷம் பவுன் சென்ற ஒருவருஷத்தில்மட்டும் அமெரிக்கா கோடீசுவரர்களால் தருமத்தின் பொருட்டுச் செலவழிக்கப்பட்டிருக்கிறதென்றும். சென்ற 10-வருடங்களாக அமெரிக்காவில் தர்மத்தின் பொருட்டுச் செலவழிக்கப்பட்ட தொகை 24½-கோடி பவுன் என்றும், நியூயார்க் "ஹெரால்ட்" பத்திரிகை கூறுகிறது. இப்படிச் செலவழிக்கக்கூடிய குபேரர்களுள் எஃகு வியாபாரியாகிய, மிஸ்டர் கார்னெகி தலைமையாய் நிற்கிறார். உலக ஜன க்ஷேமத்தைப் பெருக்கும்பொருட்டு இவ்வருஷத்தில் மட்டும் மிஸ்டர் கார்னெகி 80-லக்ஷம் பவுன் உதவியிருக்கிறார். இவருக்கு இப்போது வயது 78. "பணக்காரனாயிறப்பது இராஜதண்டனைக்குரிய குற்ற" மென்பது இவர் கொள்கை. இக்கொள்கையை யனுசரித்து இவர் பலவழிகளில் நாளது வரையில் செய்திருக்கும் நன்கொடைகளெல்லாம்சேர்த்தால் 44,160,000பவுன் ஆகிறது. இத்தொகையில் 10,500,000 பவுன் லைப்ரரிகள் ஸ்தாபிப்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மிஸ்டர் கார்னேகியே யன்றி, மிஸ்டர் ராக்பெல்லர் இவ்வருஷம் 7-லக்ஷம் பவுன் தர்மத்திற்குதவியிருக்கிறார். ஆயினுமிவர் தர்மத்திற்குதவியவர்களின் ஜாப்தாவில் எழாவதாகவே யிருக்கின்றனரென்றால், மற்றவர்களின் கொடைகளைப் பற்றிச்சொல்லவேண்டியதில்லை. மிஸ்டர் ராக்பெல்லர் நாளதுவரை தருமத்துக்குதவிய தொகைகளின் மொத்தம் 34,942,000-பவுன்; ஆகவே, மிஸ்டர் ராக்பெல்லர் மிஸ்டர் கார்னெகி இருவர்மட்டும் மானுடரின் குறைகளையகற்றிச் சுகிர்தம் செய்வதற்காகக் கொடுத்திருக்கும் தொகை சற்றுக்குறைய 8 கோடி பவுன் ஆகிறது.

**மற்ற கோடீசுவரர்கள்:**—இவ்விருவரிலும் சற்றுத்தாழ்ந்தோர்களாயினும் கோடீசுரர்களாக, மெஸர்ஸ் மார்கன், பாண்டர்பிக்ட், ஆஸ்டர் முதலிய அநேகரிருக்கிறார்கள். இவர்கள் பெருங்கொடையாளிகளாக விருந்தும் தத்தம் வாசஸ்தலமாகிய பிரதேசத்திற்கு வெளிப்புறத்தில அதிகமாய்ப் பெற்றவர்களல்லவென்றால் அமெரிக்காவின் செல்வவள

த்தை என்னென்று சொல்வது! இவ்வருஷக் கொடையாளிகளில் இரண்டாவதாக விருப்பது ஆஸ்ட்ரியாவிலிருந்து அமெரிக்காவில் குடி புகுந்திருக்கும், டாக்டர் சாமுவெல் பெலர் என்பவர். இவர் 20-லட்சம் பவுன் அளித்திருக்கிறார். மூன்றாவதாக, மிஸ்டர் J. A. பேட்டன் 13-லட்சம் பவுன் க்ஷயரோக ஆஸ்பத்திரியின் பொருட்டு உதவியிருக்கிறார். அப்புறம் மிஸ்டர் P. P. பிரிகாம் ஒரு லைப்ரெரி ஸ்தாபிக்க 10-லக்ஷம் பவுன் கொடுத்திருக்கிறார்.

**ஐசுவரியவதிகள்:**—காலிபோர்னியா ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனியின் பிரஸிடெண்டாயிருப்பவரின் சகோதரியாகிய மிஸ்ஸிஸ் மேரி ட்ராட்டர், வயதான ஸ்திரீகளைப் பராமரிக்க கிரகம் ஒன்று ஸ்தாபிப்பதற்காக 10-லக்ஷம் பவுன் அளித்திருக்கிறார். மேலும் லக்ஷக்கணக்காக தருமத்திற்கு ஐசுவரியவதிகள் வாரிக்கொடுத்து உதவியிருக்கிறார்கள். அவர்களிற் சிலரைச் சொல்வோம்:—மிஸ்ஸிஸ் ரஸல்ஸேஜ் 3-லக்ஷம் பவுன், மிஸ்ஸிஸ் ஹாரிமன் ஒருலக்ஷம் பவுன்; மிஸ்ஸிஸ் டெய்லர், மிஸ்ஸிஸ் மோகர், மிஸ்ஸிஸ் கூக் இவர்கள் தலைக்கு 2-லக்ஷம் பவுன்; இவர்களிவ்விதக்கொடையாளிகளாயிருந்தும் பத்திரிகைகளில் தங்கள் பேர்கள் விளங்கப்பெற்றவர்களல்லர். மிஸ்ஸிஸ் ரீட் ஸான்பிரான்ஸிஸ்கோ ஆஸ்பத்திரிக்காக லட்சத்து இருபதினாயிரம் பவுன், மிஸ் எம்மா வில்லீஸ் ஆபர் ஸ்திரீகளுக்கான சர்வகலாசாலையொன்றுக்கு 150-ஆயிரம் பவுன் கொடுத்தார்கள். கடைசியிற் சொன்னவள் இருபது வயதுக்கன்னிகை; மோட்டார் வண்டி விபத்தொன்றில் இவள் உயிரிழந்தாள். இறப்பதற்குமுன் மேற்கண்டபடி கொடையைத்தன் உவில்லில் (Will) எழுதியிருந்தாள்.

**பணம்படைத்த பொது ஸ்தாபனங்கள்:**—அமெரிக்கன் யூனிவர்ஸிடிகளுள் அதிகப்பணம் பெற்றது கொலம்பியா யூனிவர்ஸிடியாம். 1911-ல் இதற்கு 5-லட்சம் பவுன் நன்கொடை கிடைத்திருக்கிறது. ஹார்வார்ட் யூனிவர்ஸிடிக்கு 3½-லட்சம். பிரின்ஸ்டன் யூனிவர்ஸிடிக்கு 340-ஆயிரம், மற்ற 52-வித்தியாசாலைகளுக்கு மொத்தத்தில் 4-கோடி பவுன் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவர்களுள் பிராடெஸ்டெண்ட் கிளையார் மதப்பிரசாரகம் பண்ணுவதிலுபயோகமாகும்படி 18-சங்கங்களுக்குச் சென்ற வருஷத்தில் ஒருகோடி பவுன் கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்ச் பள்ளிக்கூடங்களுக்கு உதவியாக ரோமன் காத்தலிக் கிளையார் நன்கொடையளித்த தொகை 26-லக்ஷம் பவுன்.

---

**நாய்களால் பிளேக்நோய் பரவுதலைத் தடுக்கலாம்:**—மைசூர் நிருபர் ஒருவர் இவ்விஷயமாய்த் தம்முடைய அனுபவத்தை "டெயிலி கிரானிகல்" என்ற பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார்:—



"பிளேக் அம்மை குத்திக்கொள்வதானது சிலகாலம் பிளேக்நோய் பீடிக்காமல் ஒருவரைப்பாதுகாக்கும். கவர்ன்மெண்டார் ஒருவீட்டில் திடீரென எலிகள் மாண்டுபோனால் அவ்வீட்டைக் காலிசெய்ய உத்தரவு செய்து கூரையைப் பிரித்துவிடுகிறார்கள். இப்படிச்செய்வதால் பிளேக் ஈக்கள் சூரியஉஷ்ணத்தில் இறந்துபோகுமென்பது அவர்களின் கருத்து. பிளேக் வியாதி பீடித்த எலிகள் காலிசெய்யப்பட்ட வீட்டில் உணவு அகப்படாமல் அயல்வீட்டுக்குச்சென்று அதைத் தொத்துள்ள இடமாக்கி விடுகின்றன. பிளேக்ஈக்களைக்கொல்ல நாம்உபயோகிக்கும் விஷங்கள் மிக்கப்பயனுடையவையாயில்லை; ஈக்கள் இறக்கசிலமாதங்கள் ஆகின்றன.

"என்னுடைய பங்களாவிலும வேறுவீடுகளிலும் 6-முறை எலிகள் இறந்துவீழ்ந்தன. நான் இறந்த எலிகள்மேல் மண்ணெண்ணெயை நிறைய ஊற்றி அவைகளைக்குறடுகொண்டு எடுத்துச்சென்று எரித்துவிட்டேன். 3, 4-நாய்களை அந்த வீடுகளுக்குள் துரத்திச் சாயங்காலம் வரை அடைத்துவந்தேன். பிறகுநாய்களின்மேல் பிளேக்ஈக்கள் ஒட்டிக்கொள்ளுகிறதால், இவைகளுக்குச் சதும்ப விளக்கெண்ணெய் பூசி கார்பாலிக் சோப்புகொண்டு கழுவி விட்டேன். நாய்களுக்கு பிளேக்வியாதியுண்டாகவில்லை. ஈக்களின் சுவாஸக் குழாய் விளக்கெண்ணெயால் அடைபடுவதால் அவைகள் இறந்துபோகின்றன. மேலும் நான் அந்த வீடுகளில் எலிக்காக உணவுகளைப் பல இடங்களில் போட்டு கூண்டுகளை வைத்து அவைகளைப் பிடித்துக்கொன்று வந்தேன். நாய் பூனையை விட அதிக எலிகளைப் பிடிக்கிறது. இப்படி எல்லாரும் செய்து பார்க்கலாம். எப்படியாவது பிளேக் வியாதியைத் தடுக்கவேண்டும்.

## எடீஸன் சொல்லும் வருங்காலப்பலன்கள்.

பல நூதன யந்திரங்களைச் செய்து முடித்தவரான எடீஸன் என்னும் பண்டிதர், வருங்காலப்பலனிவ்வாறாகுமென்று குறிப்பிடுகிறார்.

1. சீலை, சட்டைத்தறி, நூல், கடதாசி, பசை ஆகிய இவைகளை யந்திரத்தின் ஒரு மூலையில்போட்டால் அவைகள் எல்லாம் வேண்டுமான உடுப்புகளாகிக் கடதாசிப் பெட்டிகளில் அடக்கஞ்செய்யப்பட்டு மற்றொரு மூலையில்வரும்.

2. நாற்காலி, மேசை முதலியவைகளைச்செய்ய மரத்தை உபயோகிக்காமல் உருக்கை உபயோகிப்பார்கள். உருக்குச்சாமான் மரச்சாமானைவிட ஐந்துமடங்கு விலைகுறைவு. மேலும் கொஞ்சம் உருக்கே போதுமாகையால் உருக்கால் செய்யப்பட்ட நாற்காலி மேசைகள் வெகு லகுவாயிருக்கும் கனமிருக்காது. எந்த மரத்தின் நிறத்தையும் உருக்குக்குப் பூசலாம்.

3. புஸ்தகங்கள் அச்சடிக்க காகிதத்தை உபயோகிக்காமல் நிக்கல் (வெள்ளைப்பித்தளை) லோகத்தைத் தகடுதகடாக அடித்து அதையே உபயோகிப்பார்கள். நமது தேசத்தில் வழங்கும் 1-அணு நாணயம் நிக்கல் லோகத்தாலானது. இருபதினாயிரத்தில் ஒருபங்குள்ள இன்சுக்கனமுள்ள நிக்கல்தகடு சாதாரண காகிதத்தைப்பார்க்கிலும் விலை சரசமானது மடிக்க மடிக்கக் கிழியாமல் விறைத்துநிற்கக்கூடியது. நன்றாய் வளையும். அது அச்சுமையை உறிஞ்சிக்கொள்ளும். நாற்பதினாயிரம் பக்கங்கள்கொண்ட நிக்கல் புஸ்தகம் இரண்டு இன்சு மாத்திரமே யிருக்கும். அதன் நிறையும் ஒரு ராத்தல்தான். அந்தப்புஸ்தகத்தின் விலையும் மூன்றேமுக்கால் ரூபாய்தான்.

4. இப்போதிருக்கும் விவசாயச் சாமரன்களுக்குப் பதிலாக இனிமேல் எல்லாம் மின்சாரத்தாலேயே நடக்கும், வருங்காலக் குடியானவர்கள் குடித்தனம் தெரிந்தவர்களாக மாத்திரமிருக்காமல் தாவர சாஸ்திரிகளாகவும் ரசவாதசாஸ்திரிகளாகவும் ராச்சிய தர்ம நிபுணர்களாகவுமிருப்பார்கள். அவர்கள் தங்கள் வீட்டுமாடியில் உட்கார்ந்தபடியே மின்சாரத்தால் தோட்டவேலைகளையெல்லாம் செய்து முடித்துக்கொள்வார்கள். ஒரு தெறியை அமுக்கினால் இப்போது ஆபீஸ் எல்லாம் விளக்குகள் பிரகாசிக்கவோ, ஆளைக்கூப்பிடவோ, விசிறிவீசவோ நடப்பதுபோல் மேலே சொன்னவைகளும் சர்வசாதாரணமாய்விடும்.

5. இரும்பு செம்பு முதலிய சாதாரண தாழ்ந்த லோகங்களையும் மேலான விலையுயர்ந்த பொன்னாக்கிவிடுவார்கள், இது இற்றைவரைக்கும் அறிவீனக்கனவு என்றெண்ணியிருந்தது. அப்படி மாற்றுவதானால் அது வெகு அதிசயமே. இப்போது எடிஸன் பண்டிதர் அது நடப்பது திண்ணமென்கிறார். இப்படியேயிருந்து தங்கம் செய்யவும் ஒருவழி கண்டுபிடித்து விடுவார்கள். அப்போது தங்கத்தை எத்தேசத்தாரும் நாணயமாகவோ அல்லது பண்டமாற்றாகவோ வழங்கார்களாம். ஏனெனில் தங்கத்தை எவனும் எளிதில் செய்யக்கூடியவனாய் விடுவான்.

மேலே சொன்னவைகளெல்லாம் நடப்படிக்கு வந்துசேர வெகு காலமாகாதென்பதே எடிஸன் பண்டிதரின் கொள்கை.

## மாறுவேஷமாய், லார்ட் கார்மைகேல் சுற்றுப்பிரயாணம் செய்வது.

நமது காருண்ணியமுள்ள கவர்னர் சாதாரண ஜனங்களிடத்திலும் சரசமாய்ப் பழகி அவர்களை நேரில் கண்டு குறைகளைத்தாமே மெய்காப்பாளரில்லாமலே அவர்களிருப்பிடத்திற் சென்று விசாரித்து வருவதாக வதந்தி உலாவிவருகிறது. கவர்னரும் லேடி கார்மைகேலும் திருவல்லிக்கேணி கடற்கரை பக்கம் அடிக்கடி வருவதாய்க் கூறப்படுகிறது. சில



தினங்களுக்குமுன் பெல்ஸ் ரோட் வழியாய், காலை 7-மணிக்கு நமது கவர்னர் தனியேவந்து அங்கேபாதையில் நெசவுத் தறிகளைப் பார்வையிட்டு அவர்களைக் கேள்விகள் கேட்டு 16-ரூபாய்க்குப் பட்டுவஸ்திரங்கள் வாங்கிக்கொண்டு கவர்ன்மெண்ட் ஹவுஸுக்கு வரும்படி சொல்லிவிட்டுப் போனதாக அங்கிருக்கும் நெசவுக்காரர்கள் சொல்லுகிறார்கள்.

இராயபுரம் ஆஸ்பத்திரியைத் தாமே நேரிற் பார்க்கச்சென்று அங்கே இருந்த சர்ஜனைக்கேட்க, அவர்தமக்குச் சாவகாசமில்லையென்று கூறினதாயும், பின்புதாம்இன்னார் என்பதை அறிவித்து அதைச்சுற்றிப் பார்த்ததாயும் அஸிஸ்டண்ட் இஞ்ஜினியர் B. S. மிஸ்டர் இராமசாமி அய்யர் கூறுகிறார். அப்படியே P. W. D. தொழிற் சாலையைப்பார்க்கப் போனபோது அங்கே இவர் கவர்னரென்று தெரிந்துக்கொண்டு விட்டார்களாம்.

சமீபத்தில் டில்லிமுடிசூட்டு வைபவத்திற்குப்பிறகுகவர்னர் சைதாப்பேட்டைக்குச் சென்றிருந்த பொழுது இராஜா இராணி படத்தை நன்றாய் அலங்கரித்து வீட்டை சிங்காரமாய் பூச்செடிகளால் சித்திரிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து அந்த (Design) சித்திரம் யாருடையதென்று விசாரித்து அவரைக் கூட்டிக்கொண்டு வரும்படிக் கலெக்டரிடம் சொன்னாராம். கலெக்டர்சொந்தக்காரரான திருவல்லிக்கேணி கோ ஆபரேடிவ் சொஸைடி கண்ட்ராக்டரைக் கூட்டிக்கொண்டு வந்தாராம். கவர்னர் அவரிடம் அரைமணிநேரம் வார்த்தையாடி, கைகுலுக்கி அவர் வேலையை மெச்சினதாக அவர் சொன்னார். கவர்னர் தனியாய் அரக்கோணம் வழியில் 20-மைல் சென்றிருந்ததாயும் அங்கே வாய்க்காலில் ஜலம் வரவில்லையென்று குடிகள் முறையிட்டதை நோட் செய்துகொண்டதாயும் ஒரு மெயில் ஸார்ட்டர் கூறுகிறார். எதுஎங்ஙனமாயினும் இவரிடகுணாதிசயங்களையும் நடத்தையையும் நன்றாயறிந்தே ஜனங்கள் இம்மாதிரி சொல்லுகிறார்கள். உண்மையும் இருக்கிறதென்று நேரில்கண்ட பலர் கூறுகிறார்கள். இவ்வளவு உதாரகுணமுள்ள கவர்னரைப்பிரிய நேர்ந்திப்பது சென்னை மாகாணத்தவர்களின் துரதிருஷ்டமே.

K. V. சுப்பிரமணிய அய்யர் B. A.

## வர்த்தமானங்கள்.

**கோழியை இருமுட்டைகளிடச் செய்வது:**—ஒருபெட்டைக்கோழிக்கு குவைனாமாத்திரையைக் கொடுத்து வருவதால் தினமொன்றிற்கு இரண்டு முட்டைகளிட்டு வருமாம்.

**புத்தகசாலை:**—அமெரிக்காக் கண்டத்துள்ள ஆண்ட்ரூ கார்னகியென்னும் பிரபுதமது நாட்டிலும் பிரிட்டனிலும் 2200-புத்தகசாலைகள் ஸ்தாபித்திருக்கின்றனர்.

**பிளேக்கு:**—வைசூரிபரவிய காலத்திலே வேப்பிலையை உபயோகிப்பதுபோலப் பிளேக் பரவுங்காலத்தில் குப்பைமேனி பூனைவணங்கி என்னும் இத்தழையினை உபயோகிப்பது நலமென்று அனுபவத்திற் காணப்பட்டது.

**ஜனத்தொகை:**—இப்பொழுது உலகத்தில் 180-கோடி ஜனங்கள் வசிக்கின்றார்களென்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. இதனால் உலகத்துள்ள ஜனங்களுள் இந்துதேசத்துள்ள ஜனங்களின்தொகை ஆறிலொருப்பங்காகும். இந்து தேசத்துள்ள ஜனங்களின் தொகை31-கோடியாம்.

**காதுநோய்:**—அமெரிக்காவில் ஒரு டாக்டர் பிரசங்கஞ் செய்தபோது சொந்த இனத்தில் விவாகஞ் செய்துகொள்பவர்களின் பிள்ளைகளில் மூவருக்கொருவர் காது நோய்க்குள்ளாகின்றனர். அதனால் சொந்தவினத்தில் கலியாணஞ்செய்து கொள்ளுவது கூடாதென்று கூறினார்.

**கறையான் தொலைக்கு மருந்து:**—நன்றாய்க் கொதிக்கும் வெந்நீரிலே சீனாக்காரத்தைக்கரைத்துப் பொந்திலூற்றிவிடக் கறையான் நாசமாகுமாம். பொட்டுப்பூச்சி வலைநெய்யுமிடங்களில் இதையூற்றிவிட்டாலும் அது பயந்து ஓடிவிடுமாம்.

**உப்புமலை;**—சான்டாமின்கோ என்றவிடத்தில் ஒருவிசேஷமான உப்புமலையிருக்கிறது. அதன்நீளம் 4-மைல், அதிலே 9-கோடி டன் நிறையுள்ள உப்பு எடுக்கலாமென உத்தேசிக்கப்படுகிறது, இந்தப்பாறையில் ஒரு அடிக்கனமுள்ளகட்டியை எடுத்தாலும், அது கண்ணாடியைப்போல் ஊடறுத்துப்பார்க்கக்கூடியதாய்ச் சுத்தமாயிருக்கிறதாம்.

**அழுத கண்ணீர் 2 கர்லனளவு:**—போர்ட்லாண்டு என்ற இடத்தில் ஒரு நாடகம் நடந்ததாம், அதைப் பார்க்கும்போது ஜனங்களெல்லாம் கண்ணீர் பெருக அழுதார்களாம். மொத்தத்தில் சொரிந்த கண்ணீர் 2048-தேயிலைக் கரண்டியளவிருக்கின்றதென்று அதாவது 2-காலனென்று கணக்கெடுத்திருக்கிறார்கள். கதை எவ்வளவுஉருக்கமாயிருந்ததோ? கண்ணீர்களை அளந்து கணக்கெடுத்தவர்களாரோ!

**பார்த்திங் பத்திரிகை:**—ருஷியாவைச் சேர்ந்த மாஸ்கோப் பட்டணத்தில், ஒரு தினசரிப் பத்திரிகை ஆரம்பித்திருக்கிறார்கள். அதன் பெயர் "பார்த்திங் கெஜட்" அதற்குச் சந்தா ஒரு பார்த்திங் அதாவது நமது கணக்குப்படி 4-பைசா. இதுவே உலகத்திலுள்ள தினசரிப்பத்திரிகைகளில் மிகக் குறைந்த சந்தாவுடையதாம். அதன் சந்தாதார் லக்ஷக்கணக்காய் அதிகரிக்கின்றனராம்.

**மருந்தின்றி நோய்தீர்த்தல்:**—மருந்தாவது சத்திரவைத்தியமாவதில்லாமல் றேடியமென்னும் லோகத்தைக்கொண்டு நோய்தீர்க்கும் முறையை இங்கிலாந்துவைத்தியர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தமுறைப்படி சிகிச்சைசெய்வதற்கு லண்டன்பட்டினத்திலே ஓர் வைத்தியசாலை ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது. அதிலே 75000-பவுன் விலைபெற்ற றேடியமிருக்கின்றதாம்.

**நூறாண்டுள்ளவர்களின் தொகை:**—ஜர்மனியிலெடுத்திருக்குங் கணிதப்பிரகாரம் ஐரோப்பாக் கண்டத்தில் அடியிற் குறிக்கப்பட்டவாறு 6760-பேர் நூறுவயதுடையவர்களாயிருக்கின்றனர். டென்மார்க் 2-பெல்ஜியம் 5. ஸ்வீடின் 10. நார்வே23. ஜர்மனி 76. ருஷியா 89. கிரேட்பிரிட்டின் 92. ஆஸ்டிய கங்கேரி 113. இத்தாலி 197. பிரான்சு 213. ஸ்பெயின் 410. செர்வியா 573. ரோமேனியா 1074. பல்கேரியா3883.

162396.